

# சுத்தானந்த கீர்த்தனாஞ்ஜலி

(1015 பாடல்கள்)

சுத்தானந்த மலர்—5.

# சுத்தானந்த கீர்த்தனஞ்ஜலி

1015 பாமலர்கள்




சுத்தானந்த நூலகம்

யோக சமாஜம்,

சென்னை-20.

# Shuddhananda Kirtananjali

BY

**Kaviyogi Maharshi**

SHUDDHANANDA BHARATI

*May, 1963.*

(*All Rights Reserved by the Author*)

**PRICE Rs. 5-00**

## SHUDDHANANDA LIBRARY

YOGA SAMAJ,

*MADRAS-20.*

★

SHUDDHANANDA PRESS: MADRAS-20

# பதிப்புரை

கவியோகி சுத்தானந்த பாரதியார் பாடிய இசைப் பாடல்கள் 5000 உண்டு; அவர் தமது பாடல்களைச் சேர்த்து வைக்காமல் அப்படியப்படியே கண்ட இடங்களில் போட்டு விட்டு உலகைச் சுற்றிக் கொண்டிருந்ததால் ஏராளமான பாடல்கள் எங்கெங்கோ மறைந்தன. "எப்படிப் பாடினேன்" என்ற அகவலில் அவர் தமது பாட்டு பட்டபாட்டைச் சொல்லுகிறார். சென்னை யோக சமாஜத்தில் அமைதியாக ஒருமை கூடி, அவர் சுவையான கனிகளைச்சேர்த்து மனித சமுதாயத் திற்குத் தரும் ஆயுட்பணியைப் புரிந்து வருகிறார். சமயோகமே (Spritual Socialism) அவரது கொள்கை. அதற்குப் பொருந்திய கவிதைகளையே அவர் இப்போது வெளியிடுகிறார். இப்போது அவர் பார்வையில் வெளிவரும் நூல்களே அத்தாட்சி பெற்றவை.

சுத்தானந்த கீர்த்தனாஞ்ஜலியில் 1015 பாடல்களை வெளியிடுகிறோம். இவை தக்க புலவர்கள் பரிசோதித்து கவியோகி ஒப்பியவை. சுத்தானந்தர் சமுஸ்கிரதம், இந்தி, தெலுங்கு மொழிகளில் பாடிய சில பாடல்களும் கிடைத்தன. அவற்றையும் விவித பாரதி என்ற பகுதியாக வெளியிட்டுள்ளோம். சுத்தானந்தரின் மேளார்ணவமும் இந்நூலில் அடங்கியுள்ளது. சுத்தானந்தரின் கீர்த்தனாஞ்ஜலிப் பாடல்களை அரங்கு, மேடை, திரை, வானொலிகளில் பாடிப் பரப்பி வரும் இசைமணிகளுக்கெல்லாம் எமது நன்றி.

சுத்தானந்த கீர்த்தனாஞ்ஜலி வெளியிட ரூபா. ஆயிரம் நல்லளிப்புச் செய்த சென்னை சங்கீத நாடக சங்கத்திற்கு நன்றி நன்றி.

We acknowledge with grateful thanks the grant of One Thousand Rupees given by the Madras Sangita Nataka Sangham towards the printing and publication of this SHUDDHANANDA KIRTANANJALI.

Yoga Samaj
Madras-20
11—5—63

SHUDDHANANDA LIBRARY

# எப்படிப் பாடினேன் !

வீட்டில் இனிய பாட்டின் முழக்கம்
இப்புறம் வேதம்; அப்புறங் கீதம்
எதிரே கோவிலில் இசையின் அலைகள்
சிவகங்கை யெங்கும் திருவிழாக் கோலம்
பாடகர் பண்டிதர் பாவலர் நாவலர்
பாகவதர்கள் பஜனை மடங்கள்
மல்கிய சூழலில் வளர்ந்ததென் வாக்கே.
கேட்டுக் கேட்டுப் பாட்டுக் கற்றுப்
பாமாலை சூட்டிப் பரமனைத் தொழுதேன்
பாடுபா டென்றார் பாவலர் சிலரே
பாடாதே யெனப் பழித்தார் சிலரே
பன்னிரண் டாண்டுகள் பாடிய பாடலைத்
தீயிட் டெரித்தான் சிறுமனத் தொருவன்.
உயிரை யுருக்கி, யுரமிட் டுவளர்
பயிரைச் சுற்றித் துயரப் புயலே!
கண்ணீரில் ஊறிய கவிதைக ளெல்லாம்
கீர்த்தனஞ் ஜலியாய்க் கிளர்ந்து பரவின
நடனஞ்ஜலியாய் நர்த்தனஞ் செய்தன
பாரத சக்தியாய்ப் பரவின வுலகில்
விரவிளக்கு வ. வே. சு. ஐயரே
ஈர நெஞ்சுடன் என்னைப் போற்றினார்.
''உலக மகாகவி யுள்ளத் துடிப்பை
யோக மகாகவி யுணர்ச்சியிற் கண்டேன்''
என்றார், அந்த இணையறு தோழர்
அருவியில் வீழ்ந்த அதிர்ச்சியில் யானும்
மலையரு வியிலே கலைச்சுமை யெல்லாம்
எறிந்து மனதைத் துறந்து திரிந்தேன்.
காந்தி மகான்எனைக் கிராம சேவைக்கே
ஊக்கினார் யானும் ஊர்ஊராகப்
பாட்டும் பணியுமாய் நாட்டைச் சுற்றினேன்
எழுதி யெழுதி யெவரெவ ரிடமோ



கொடுத்த தெல்லாம் கொள்ளை போயினவே!
அரசியல் வாழ்வும் அரசமா கிடவே
பன்மத வுண்மையைப் பயின்று பயின்று
முடிவிலே ரமண முனிவர் அருளால்
அருணக் குகையில் அருந்தவமுடித்தே
அரவிந்த யோகியின் அடிநிழல் பற்றி
இருபத் தைந்தாண் டிருந்தவாறிருந்தே
மௌனத் தவத்தால் மாண்புற மீண்டும்
கலைப்பணி தாங்கியெக் காலமும் விளங்க
நிலைபெறு நூல்களை நிலவிடச் செய்தேன்
பாரத சக்தி பூரண மாக
வெளிவந்த பிறகு வெளியுலகத்தைச்
சுற்றிப் பார்த்துச் சுழன்று வருமுன்
கரையான் உண்டது கணக்கறு நூல்களை
சமயோகத்தின் சமாஜம் கண்டு
அமைதியாய் அமர்ந்தே ஆண்டவன் ஆணை
உய்த்த படியே உயர்தவம் புரிந்து
இருந்ததை அச்சகம் இலகுற நாட்டிப்
பயனுள நூல்களை நயனுறத் தொகுத்து
வியனுறு முலகில் வெளியிடத் துணிந்தேன்
முதிர்ந்த வயதில் அதிர்ந்த வாழ்வில்
பேறு முனையிற் பெற்றதைக் கொண்டு
தனித் தவத் தாழ்ந்து, மனிதர் வாழ்வு
சமயோ கந்தரு சாதன மாகவே
பாட்டும் உரையும் பதமுறத் தொகுத்தேன்.
ஆண்டவன் அளித்த ஆயுட்பணியை
ஈண்டு முடிக்கவே இரவும் பகலும்
வரிவரி யாகப் பரிவுட னுய்ந்து,
வாடா மலர்களை மாலை தொடுத்து
மறுமலர் சோலையில் மங்கலமாகத்
திகழுங் கலாலயத் தேவிக் களித்தேன்.
பூத்தவை பலவே பழுத்தவை சிலவே
பழுத்த வற்றுளும் விதைத்தவை மிகச்சில.
விதைத்த வற்றுளும் விளைந்தவை சிலவே

மின்சாரமுண்டு; மிளிர்விசை யில்லை
புலவன் உள்ளான் புரவல ரில்லை;
புலமையுண்டு போற்றுவா ரில்லை;
கம்பனுண்டு செம்பொன்னில்லை;
என்று நான் உள்ளே ஏங்கியபோது,
நன்று நாம் உள்ளோம் என்றினிதுதவிய
அன்பர் சிலரென் அணுக்கத் துணையாய்
உதவினர் ஆங்கே. உலகப் பாட்டும்
சிங்கநாதமும் ஆத்மநாதமும்
கீர்த்தனாஞ்ஜலியும் நடனாஞ்ஜலியும்
கவிக் கனவுகளும் மந்திர மாலையும்
இன்ப மாலையும் இயக்க மாலையும்
பாட்டாளி பாட்டும் பைந்தமிழ்க் குயிலும்
குஞ்சுப் பாப்பா கொஞ்சும் பாட்டும்
வேத வேதாந்த ஜோதிர் விலாசமும்
அரிய பெரியார் அமர காவியமும்
பாரத சக்தி மகாகாவியமும்
மல்கிய பாமணி மாலைகளெல்லாம்
எவனருள் உள்ளே இசையூற்றானதோ
அவனருளுக்கே அர்ப்பணம் ஆமே!
ஆயிரத்துப்பதினைந்திசைபாடல்
மேவிய கீர்த்தனாஞ்ஜலி யென் னுள்ளக்
கிளர்ச்சி யிசையாய் வளர்ச்சி பெற்றதுவே

## பாட்டு

யாழைக் காணீர்; யாழிசை மீட்டும்
ஜங்காரநாதம் எங்கிருந் தெழுந்ததோ
அங்கே கவியின் அமரவூற்றாமே
குழலைக்காணீர் குயிலும் உயிர்ப்பின்
உள்ளமே கவியின் ஊற்றுக் கண்ணாம்
பீலி முனையிலே கோலச் சித்திரம்
வரையும் உணர்வே வளர்கவிக் குயிராம்.
பாடிய பாடகன் ஓடி மறைந்தும்



பாட்டா லவனை நாட்டார் அறிவார்
அதுவே கவியின் அழியா வுயிராம்.
கண்ணுக்குள்ளே கண்ணொன்றுண்டு
பண்ணுக் குள்ளே பண்ணொன் றுண்டு
சிந்தனைக் குள்ளே சிற்பி யொன்றுண்டு
சிந்தனைச் சிற்பியே சீரிய கவிஞன்
அவனுள்ளீந்த அழகுக் கலையை
உலகிற் கீவதென் உயிர்க் கடனாமே
ஆர்வத் தீயால் அன்புள்ளுருகி,
அருவி போல வருவது பாட்டாம்!
குரலும் சுருதியும் கூடிக் குழைந்து,
கமகமுந் தாளமுங் கனிவுறப் பொருந்தி,
பாட்டின் கருத்து பளிச்செனை விளங்கக்
கேட்டா ருள்ளங் கிளர்ச்சி கொள்ள,
உணர்ச்சி ததும்ப, உள்ளங் குழைய,
நவரஸ பாவனை நயமுற நாட்டி,
பரவையும், வசந்தப் பறவையும் போலக்
கலையி னுள்ளம் கடவுளைக் காட்ட,
வீடு திருந்த, நாடு சிறக்கவே,
இயல்பா யிசைத்தல் இசையென லாமே!
இன்பப் பொருளே இசையின் பயனாம்!

சுத்தானந்த பாரதி



# பொருள் அடக்கம்

-0-


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | சிதம்பர கீதம் | 1 |
| 2. | தேவ கானம் | 45 |
| 3. | முருகோபாசனை | 85 |
| 4. | சக்தி பரவசம் | 96 |
| 5. | ஹரி பஜனை | 129 |
| 6. | சமயோக சாதன கீதம் | 163 |
| 7. | சுத்த சன்மார்க்க கீர்த்தனங்கள் | 202 |
| 8. | ஐக்கிய கீதம் | 230 |
| 9. | அன்பு மாலை | 259 |
| 10. | மௌனார்ணவம் | 306 |
| 11. | விவித பாரதி | 334 |
| 12. | இன்பத் திருப்புகழ் | 356 |
| 13 | வழி காட்டிய நல்லார் | 392 |
| 14. | இராகமாலிகை | 418 |


★

## APPRECIATIONS

**Sangita Sastra Ratnakara Prof. P. Sambamoorthy** B.A.,B.L.
Yogi Shuddhananda Bharatiar is a poet, composer, linguist, writer, play-wright, philospher and Yogi. He is a unique personality.

His compositions are in both Telugu and Tamil.

He is the most prolific composer of our times. He has versatile gifts. His published compositions are just a fractional part of his entire output in the sphere of musical creation.The published part may be compared to the portion of the ice-berg visible above the water surface and the unpublished, to the huge part of the ice-berg living below the water level. His compositions are as varied as they are interesting. They embrace compositions belonging to the realms of Art music, Sacred music and Dance music and a few are in the line of folk melodies. The language adopted by him is easy and flowing. The fact that some of his compositions have been learnt by top-ranking performers and recorded on the gramaphone and also sung in the concert platforms, is a proof of their fine musical worth. Some songs of his are for congregational singing.

Bearatiar's compositions illustrating the 72 mela ragas are of special value. His compositions in rare ragas are worth their study by music scholars.

His songs in praise of the Goddess of learning and Ganesa: (*Sakala Kala Vaniye*) in Kedara raga-Adi tala) and (*Arulpurivai* in Hamsadhvani raga-Adi tala) are sung universally. These have become standard prayer songs in many Institutions. Some of his songs like (i) *Tukkiya tiruvadi* (Sankarabharanam), (ii) *Ananda natanam adinal* (Kamboji) and *Jhankara sruti seyguvai* (Purvakalyani) have become classics. They contain appropriate themes for developing Niraval and Kalpana svaras, His songs on the Nayaka-nayaki theme are dignified compositions. ★

The Yogin's, compositions from the age of eight onwards have been now revised and re-arranged by him under various heads. It seems as it were he was responding emotionally to every contact and experience. Distinctly edifying are the effusions as they spring from a mind fundumentally spiritual and steeped in Divine mysticism. He is firmly rooted in the truths of the religions of the world and a practical Yogi. He believes in retrieving mankind from all sins and sorrows through the practice of Yoga, stainless life and God-consciousness. The songs are all devotional and whether they sing the praises of Siva, or Sakti, or Krishna or Muruga, they appertain to the one God who manifests Himself in the many forms. The pieces show flights of poetic fancy, warmth of spiritual fervour, structural artistry, and elegance and ease of expression and wonderful simplicity of style. Their adaptability for music is guaranteed by the rhythmic periods and metrical moulds into which they smoothly run.

Y. M. S. (*Hindu*)

## புஷ்பாஞ்ஜலி

ஆஜன்ம பகவத் பக்த: ஆபால்ய ப்ரஹ்ம சர்யவான் !
சுத்தானந்த யதிர் ஜீயாத் ஆகௌமார மஹாமதி ; ||

சுத்த த்விஜகுலே ஜாதே: சுத்தாத் ம:ஸமயோகவான்
சுத்தசக்திப்ரகா சாத்மா ஜீயாத் ஆசந்த்ர தாரகம் ||

மஹா யோக் யரவிந் தாதி ஸம்க ஸம் ஜாத யோக தீ:
ஜீயாத் பரார்த்த ஜீவோஸௌ யாவத் ஸ்தாஸ்யதி மேதினீ

ஸரல புத்த ஸுபோதி பதஸ்புரத்ரஸஸுபாவ ஸமக்ர குணம்க்ருதி
விமலதோஷ ஸுதீஸ்வரகீர்த்திதம் மஹதஹோ ஜகதாமுப காரகம்

யம் யோகினம் த்வந்த்வ வியுக்த மாஹு:
யேனேஸ்வர ஸ்ஷ்டிஷு ஸாம்யபுத்தி:
ப்ரதர்ஸ்யதே அஸௌஸ்வஸுகான்னபேக்ஷ:
ஜீயான் சிரம் பாரத பாக்யரத்னம் ||

—ஆயன்குடி மஹாவித்வான்



## சுத்தானந்தர் இசைச் செல்வம்

(இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்)

கவியோகி சுத்தானந்த பாரதியார் பாடல்களைப் பாடுவதில் எனக்குத் தனி உற்சாகமுண்டு. தமிழில் இசையில்லை என்று சிலர் சொன்ன காலத்தில் "இல்லையென்பான் யாரடா?" என்ற அவரது மோகனக் கீர்த்தனத்தை நான் பாடினேன்; தமிழர் ஆனந்த நடனமாடினர். சுத்தானந்தர் தமிழுக்கும் தமிழிசைக்கும் செய்த தொண்டு அமரத் தன்மை பெற்றது. சுவாமிகள் ஆயிரக்கணக்கான கீர்த்தனங்களைப் பாடியுள்ளார். இன்னும் பாடுகிருர். எட்டு வயதில் "எப்படிப் பாடினரோ" என்ற கீர்த்தனம் பாடிய சுத்தானத்தர், ஐயாயிரம் கீர்த்தனங்கள் எப்படிப் பாடினரோ என்று வியக்கிரேும். சுவாமிகள் ஆங்கிலம், பிரெஞ்சு, தெலுங்கு, இந்தி. மொழிகளிலும் பாடிக் கேட்டிருக்கிறேன், சுத்தானந்தர் நமது காலத்தில் நம்முன் அருள்பெற்ற மகானுக விளங்குகிருர். அவர் பாடிய கீர்த்தனுஞ்ஜலிப் பாடல்கள் நாடெங்கும் பரவிப் பொலிகின்றன. எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகங்களுக்கும் பொருள் பொதிந்த கீர்த்தனங்களை அமைத்து இசைக்கலைக்கு அவர் அற்புதமான தொண்டு செய்துள்ளார் இந்தக் கீர்த்தனங்களுக்கு யாழிசைப் புலவர் கோமதி சங்கரனுர் ஸ்வரமும் விளக்கமும் எழுதி அச்சிட வைத்துள்ளார். அண்ணுமலை சர்வகலாசாலை இசைப் புலவர் குழுவில் யோகியார் என்னுடன் ஒத்துழைத்து அரிய தொண்டு செய்கிருர். சுவாமிகள் நாட்டியக் கலைக்கும் நாடகக் கலைக்கும் அரிய சேவை செய்துள்ளர். சுமார் இருபது இசை நாடகங்களும் (ஆபரா) ஐம்பது அரிய நாடக நூல்களும் எழுதியுள்ளார்.

சுத்தானந்தர் வாக்கில் இசை நயமும், தெள்ளிய நடையும், ஒள்ளிய அருளும், ஆழப் பொருளும், யோகப் பொலிவும், அருளாவேசமும், தெய்வ வுணர்வும் இன்பநடம் புரிகின்றன. சுத்தானந்தர் முதிய வாலிபர். இன்னும் அவர் இளம் பொலிவுடன், புன்னகை தவழ நகைச்சுவை ததும்பப் பேசுகிருர், நம்முடன் குழந்தை போலப் பழகுகிருர். வண்டு போல்

உழைக்கிருர். தமிழர் அவரை அறிந்து நல்ல முறையிற் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சுத்தானந்தர் நீடூழி வாழ்க!

## நான் அறிந்த சுத்தானந்தர்

(V. S. கோமதி சங்கர ஐயர் வீணை விரிவுரையாளர்)

கவியோகி சுத்தானந்த பாரதியாரை நான் நீண்ட காலமாக அறிவேன். அவர்களுடைய அற்புதமான கீர்த்தனங்களை அச்சிற்கு வருமுன்பே நான் பாடி வீணையில் வாசித்து வந்திருக்கிறேன். அவர்களுடைய கீர்த்தனுஞ்ஜலி, நடனுஞ்ஜலி, மாணிக்கப் பாட்டு சாதன கீதம், அனைத்திற்கும் சுரப்படுத்தி எனது மாணவர்க்கும், மாணவிகளுக்கும் பயிற்றுவதே எனது தருமமாகக் கொண்டிருக்கிறேன். சுத்தானந்தர் பூர்வ ஜன்ம சுகிர்தத்தால் சங்கீதத்திலும், கவிதையிலும், யோகத்திலும் அற்புதமான ஞானத்தைப் பெற்ருர். அவர் கீர்த்தனங்கள் அத்தனையும் அருள்வாக்கு. அவர் சங்கீத சாஸ்திரத்திற்கும், சாகித்திய லக்ஷணத்திற்கும், செய்யுள் அமைதிக்கும் மிகப் பொருத்தமாகப் பாடி இருக்கிருர். அவர் 72 மேள கர்த்தா இராகங்களிலும் கீர்த்தனைகள் செய்திருக்கிருர். அனைத்திற்கும் இராக லக்ஷணங்கள் எழுதி, தக்க ஸ்வரங்கள் அமைத்து உலகிற்கு ஓர் சிறந்த சங்கீத பொக்கிஷத்தை ஆக்கும் பெருமை எனக்குக் கிடைத்தது. இவர் நூல்களை வெளியிடுவது தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல, நமது பாரத தேசத்திற்கே பெரும் புகழைத் தரும். கவியோகி மஹரிஷி சுத்தானந்த பாரதியாரின் பெருமை அளவற்றது. அவர் எல்லையற்ற கல்வியும், பல மொழி அறிவும் அபாரமான கவிதா சக்தியும், பராசக்தியின் வரப்பிரஸாதமும் பெற்றவர்கள் என்பதை நான் நேரே கண்டிருக்கிறேன். அவர்களுடைய வாக்கு அப்படியே பலிக்கின்றது. அவருடைய பாரத சக்தி மகா காவியம் இந்த நூற்றுண்டிற்கே மிகப் பெரிய நூல். அது இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ்ச் சுரங்கம். அதில் ஒவ்வொரு வரியும் இசை நயம்பெற்றது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியுடன் அதில் இசை



இலக்கணமும் பொருந்தி இருக்கிறது. அந்த மகா காவியம் முழுதும் இராக தாளத்துடன் பாடி நான் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட கலா யோகியின் காலத்தில் வாழ்ந்து அவருடன் நெருங்கிப் பழகி அவருக்குச் சங்கீத சேவை செய்வதே எனக்கு ஜீவன் முக்தியாகும். யோகி சுத்தானந்த பாரதியாரைத் தமிழர் இன்னும் நன்ருக அறியவில்லை. ஆனல் சுத்தானந்தர் பட்டம் பதவிபெறப் பாடவில்லை. அவர் தமது கலை முழுதும் சுத்தசக்தி பரமாத்மனுக்கே நிவேதனமாக்கியுள்ளார். பரமாத்மனருளால் அவரது கலா யோகம் உலகிற்கு மேன்மேலும் பயனுகி மனித வாழ்வை திவ்ய ஜீவனமாக்குக.

சுவாமிகள் வயது முதிர்ந்தும் இருபது வயது வாலிபராக இன்னும் சுறுசுறுப்பாக உத்ஸாகமாக, கலாதேவிக்குச் சேவை செய்கிருர்.

சுத்தானந்த வாணி நீடூழி வாழ்க!

## ஞான வீரர் சுத்தானந்தர்

(சாது முருகதாஸ்)

தவயோகி சுத்தானந்த பாரதியார் என்ருல் தமிழ் நாட்டுக் கலை அரசியின் செல்வப் பிள்ளை என்பது நன்ருக விளங்கும். அப்பா! எத்தனை புத்தகங்கள்! எவ்வளவு சிறந்த தத்துவங்கள் கொண்டவை! மலையினின்று வற்ருது பாய்ந்து வரும் அருவி போலப் பொங்கிவரும் கவிகளைச் சொல்லவா! எல்லாவற்றையும் தன்பால் கொண்ட பாரத சக்தி மகாகாவியத்தைக் கண்டு வியப்பதா?

தமிழ் நாட்டுச் செல்வர்களில் பாரதியார் போல் கருத்தமைந்த எளிய நடையைக் கண்டு வெற்றபெற்றவர் ஸ்ரீ சுத்தானந்தர் ஒருவரே. கலைவாணி தன் கருத்துக்குக் கருவியாக ஸ்ரீ சுத்தானந்தரைக் கொண்டு தமிழ் பரப்பி. வளர்த்துத் தேன் வண்டுகள் போல் ரசிகர்களை அதில் ஆழ்த்தி வருகிருள்.

## சுத்தானந்தச் சுடரே

தோடி] [ஆதி

ப: சுத்தானந்தச் சுடரே—கவியோகி
சுத்தானந்தச் சுடரே—மஹரிஷி
சுத்தானந்த சுடரே—ஓம் சுத்த
சக்தித் திருமந்திர
சித்தா—ஜீவன்—முக்தா (சுத்)

அ: சித்தாந்த வேதாந்த சிகர ஜோதியான
தேவா வுலகமுய்ய வாவா வரகுருவே— (சுத்)

ச: எட்டு வயதுமுதல் இறைவன் அருளாலே
இதயமலரப் பெற்றே இன்பத் தமிழருவி
தட்டுத் தடையில்லாமல் கொட்டுங் கவிக்கொண்டலே
தவம்பெற்ற தவமெனப் புவிமுழுதும் புகழும் (சுத்)
பன்மொழி பயின்றனை, பலமதங் கண்டனை
பாரத சக்தியினைப் பாருக்குத் தந்தனை
உன்னத ஒழுக்கத்தில் ஒருகுல மாகவே
உலகெலாம் வாழ்ந்திட யோக சமாஜம் கண்ட(சுத்)
காற்றின் சுதந்தரமும் கடலின் சமத்துவமும்
கதிரின் அமைதியுடன் காரின் கருணை பொங்கி
ஊற்றின் அன்புடனே ஆற்றின் வாழ்வுங் கொண்ட
ஒருவா யோகசமாஜ குருவே வருக ஜய (சுத்)

—வேங்கடராம பாகவதர்





## மான யோகி

கேதாரம்] [திரிபுடை

ப: மானவாழ்க்கை வாழும் யோகியே—
சமான—ரசமான—சரஸமான வாழ்க்கை
சமரஸமான—ஏகரஸமான வாழ்க்கை வாழும்
சம யோகியே— (மா)

அ: வான வெளியென மோன வெளியினில்
ஞானவொளியென ஊனில் விளங்கியே (மா)

ச: கன்னித்தமிழிசை மின்னிப்பொலியவே
கனிந்த முத்தமிழ் அணிந்து தந்தனை
அன்னையின் பணி தன்னுயிரெனவே
ஆற்றிடும் சுத்தானந்த தியாகியே (மா)
என்பும் உருகிடும் அன்பும் அருளுடன்
துன்பம் விலகிடும் இன்பப் பொருளுடன்
மன்பதை மகிழவே நின்பணியாற்றினை
அம்பல வாணன் அருட்கலையூற்று நீ (மா)

—வி. சூரியநாராயண நடராஜன்



ஓம்

# சுத்தானந்த கீர்த்தனாஞ்ஜலி

★ ★ ★

## 1. சிதம்பர கீதம்

### 1. பரம்பொருளே

ஆனந்த பைரவி ] [ ஆதி தாளம்

ப: பரம்பொருளே — வணக்கம் — கீர்த்தனாஞ்ஜலி நின்
பக்திச் சுவையே மணக்கும் — ஓம் (ப)

அ: நரம்பெல்லாம் உன்புகழ் வரம்பில்லா திசைக்கும்
நாம ஜபமே இந்த நாவினில் இனிக்கும் (ப)

ச: கண்மலர் உன்னையே கண்டு கண்டு களிக்கும்
கருத்தெல்லாம் தனிப்பெருங் கருணையிலே குளிக்கும்
பண்மலர் மணமாலை யாகப் பரிமளிக்கும்
பரம சுத்தானந்த பைரவி செழிக்கும். (ப)

### 2. எப்படி யுன்மனம்

கானடா ] [ ஆதி

ப: எப்படி யுன்மனம் அப்படி நடத்தாய்
இதயப் பரஞ் சுடரே — ஓம் சரண் (எ)

அ: அப்பனும் நீயே அன்னையும் நீயே—உன்
அன்பு தினம் வளர அருள் புரிவாயே (எ)

ச: பாராலயத்திலே பலபெயர் வடிவுடன்
பயிலும் பசுபதியே
காராகக் கடலாகக் காற்றாகக் கதிராகக்
காக்கும் குண நிதியே
நீராயுருகிய நெஞ்சத் தடத்திலே
நிலவி யாவியுடன் குலவு சுத்தானந்த
நேயனே—ஆபத்—சகாயனே—ஓம் சிவனே (எ)

## 3. வாழ்க ! வாழ்க ! வாழ்கவே !

நாட்டை] [ஆதி

ப : வாழ்க ! வாழ்க ! வாழ்கவே
மங்கல மாகவே மாநில மெல்லாம் (வா)

அ : சூழ்க நிரந்தரம் சுத்த சுதந்தரம்
சத்திய சமரஸ யோகபோகமுடன் (வா)

ச : ஆழியும் வானும் அமுதம் பொழிய
அழகுந் திருவும் பொலிய
ஏழிசை முழங்க இன்பங்கள் குலுங்க
எண்டிசை பண்டிகை துலங்க
இறைவன் அருளாற்—குறைவில்லாதே
நிறைமனமுடனே—கரையறு காலம் (வா)

## 4. அற்புத மாயாவி

அடாணா] [ஆதி

ப : அற்புத மாயாவி—உனக்கே
அடைக்கலம் என்னாவி—! (அ)

அ : புற்புத வாழ்வைநின் பொற்கரமீந்தேன்
பொங்கிசைக் குழலெனப் பொழிக நின்புகழே. (அ)

ச : பழகிய பண்புடன் அழகிய இயற்கையில்
பசுமுகங் காட்டுகிறாய்
பார்வையைக் கொஞ்சிடும் பரிதி யுலகிலே
பலகலை யூட்டுகிறாய்
இழையணுக் கூட்டினில் எத்தனை சக்திகள்
இலகிட நீட்டுகிறாய்
எங்குமிருப்பாய் இங்கு மிருப்பாய்
இகபர சுகங்களை இனிது சுரப்பாய். (அ)



## 5. கருணை செய்வாய்

ஹம்ஸத்வனி] [ஆதி

ப: கருணை செய்வாய்—கஜவதனா,
கான ரஸம் பொங்கும் ஞான வரந் தந்தே (க)

அ: அருளோங்கும் சுத்த சக்தி சிவகாமி,
அம்பிகை சுதனே நம்பினேன் உனையே ! (க)

ச: தீங்கனி பாகு தேன்சேரமுதம்
திருமுன் படைத்துச் சரணம் புகுந்தேன்,
ஓங்கார விநாயக விக்ன ராஜா...
உயர்வான வெற்றி யருளும் கணேசா ! (க)

## 6. ஓங்காரமான

தோடி] [ஆதி

ப : ஓங்காரமான பொருளே—உலகமெல்லாம்
உலாவி விளையாடும் அருளே—பரப்ரம்மமே (ஓ)

அ : நீங்கா துயிர்க்குயிராய் நிறைந்த ஜீவசாட்சியே,
நீலவான் சுடர்போலே நிலவுந் திருக்காட்சியே (ஓ)

ச : அள்ள அள்ளக் குறையா அமுதக் கடல் விரிவே,
அன்பருள் உணர்வாகும் ஆனந்த அறிவே ;
உள்ளபடி யிருந்தே, ஒருகோடித் தொழில் செய்யும்
ஒப்புயர் வில்லாத அற்புதமே சரண். (ஓ)

## 7. சகல கலா வாணியே

கேதாரம்] [ஆதி

ப : சகலகலா வாணியே—சரணம் தாயே
சங்கீத வீணா பாணியே (ச)

அ : இகமும் பரமும் நல்ல சுகமருளும் கல்வியை
எங்களுக் கருளுவாய்—மங்களச் செல்வியே (ச)

ச : அறம்பொருள் இன்பமும் ஆற்றலும் ஆயுளும்
ஆத்தும ஞானமும் பூத்துப் புகழ் சிறந்தே
திறம்பெற்ற தீரராய், திருவுடை வீரராய்
தேச நலம் புரியும் திவ்ய வரந்தருவாய் (ச)

முதுபெரும் புலவரும் முனிவரும் போற்றிய
முப்பெரும் அறிவுடன் இப்போது விளங்கிடும்
புதுப்புதுக் கலைகளும் பொருள்களும் அறிந்திங்கே
பூரணராக வாழும் புண்ணியம் அருளுவாய். (ச)

## 8. அருள் புரிவாய்

ஹம்ஸத்வனி] [ஆதி

ப: அருள் புரிவாய் கருணைக் கடலே,
ஆருயிர் அனைத்தும் அமரவாழ்வு பெறவே (அ)

அ: பரிபூர்ண ஸதா னந்த வாரியே,
பக்த ரக்ஷகனே பரமாத்மனே (அ)

ச: அருணோ தயம்போல் ஆத்ம சாந்தியும்,
அறிவுண்மை யின்பும் திருவுந் தருவாய்;
தருமப்பயிர் வாழுந் தருணமா மழையே,
தங்குல கெங்கிலும் மங்களம் பொங்கவே ! (அ)

## 9. ஐங்கார ச்ருதி

பூர்வ கல்யாணி] [ஆதி

ப: ஐங்கார ச்ருதி செய்குவாய்—ஜீவ வீணையில்
சங்கீதா மிர்தம் பெய்குவாய்—ஜகதீஸ்வரனே (ஐ)

அ: சங்கர சாம்ப சதாசிவ ஓம்ஹர
சம்புவெனச்சொல்லியென் ஜன்மங்கடைத்தேறவே (ஐ)

ச: பலபல வெனுங் காலை பாடும் புள்ளோசை போலும்,
பாற்கடல் உளம் விம்மி ஆர்க்கும் கர்ஜனை போலும்,
மலர்களைக் கொஞ்சிவரும் மந்த மாருதம் போலும்,
மதுவுண்டவண்டினம் வளர்க்கும் ரீங்காரம் போலும் (ஐ)
தடதட வெனப்பொழி சப்த மேகங்கள் போலும்
மடமட வெனவரும் மலையரு வியைப் போலும்,
கடகட வெனச் செல்லும் ககன லோகங்கள் போலும்,
நடமிடும் சிலம்புடன் நர்த்தனம் செய்ய நானும் (ஐ)



## 10. நடராஜா சரணம்

தோடி] [ஆதி

ப: நடராஜா சரணம்—எனது குரு
நாதா உன் சரணம் (ந)

அ: சுடரோங் கியபரஞ் ஜோதிப் பொருளே—சக்தி
சுந்தரி யுடன் உன்னைச்
சந்ததம் சிந்தித்தேன் (ந)

ச: சித்த சுத்தியுடனே சிற்சபை யிலே கூடி,
தியானத்திலே லயித்த ஞானத்துடனே பாடி,
பக்திப் பரவசத்தில் 'தத்திமி' என்றாடி,
பரமா னந்தம்பெறும் வரமே நாடினேன்
பரிந்தருள் புரிந்தெனுள்
நிரந்தரம் இருந்தருள் (ந)

## 11. அருவியைப் போலும்

அசாவேரி] [சாபு

ப: அருவியைப் போலும் காலைக் குருவியைப் போலுமுன்
அருளை நான் பாடுகின்றேன் (அ)

அ: தெருவில் இருந்து ஜய பேரி முழங்கவில்லை;
திசையெல்லாம் புகழ்பெறும் நசையுமெனக்கில்லை (அ)

ச: காற்றிலும், கதிரிலும், கடலிலும் உன்கலைக்
காட்சிகள் காட்டு கின்றாய்;
ஊற்றியென் உள்ளத்தில் உன்னிசை யமுதினை
உயிரின்பம் ஊட்டுகின்றாய்;
போற்றினும் உலகென்னைத் தூற்றினும், உன்புகழ்
போற்றா திருக்க வியலேன்;
ஆற்றுவ தெல்லாமுன் ஆராதனை யன்றி,
ஆடம்பரமும் அறியேன். (அ)
அன்பு மலர்களெல்லாம் உன்பாதம் வைத்திட்டேன்;
அரனே—எனது குரு
பரனே—உனது சரண் (அ)

## 12. ஆசை கொண்டேன்

கேதார கௌளம்] [சாய்ப்பு

ப : ஆசை கொண்டேன் வண்டே—உன்னுடனே நான்
ஈசன் புகழ் பாடவே (ஆ)

அ : வாச மலரடித் தேன் வாரி வாரி யுண்டு,
வலம் வந்து, வலம் வந்து,
நலம் பெறவே தினம் (ஆ)

ச : வானச் சுடர் மணியே, ஞானக் கண் மணியே,
வசந்த மலரழகே, வன்னக் குயிலிசையே,
மோன மலையருவி கானம் செய்யும் வேதமே,
முத்தொழில் புரிந்திடும் சித்தனே யென்றோத (ஆ)

## 13. எப்படிப் பாடினரோ !

கர்நாடக தேவகாந்தாரி] [ஆதி

ப : எப்படிப் பாடினரோ—திருவடியார்
அப்படிப் பாட நான்
ஆசைகொண்டேன் சிவனே ! (எ)

அ : அப்பரும் சுந்தரரும் ஆளுடைப் பிள்ளையும்
அருள்மணி வாசகரும்
பொருளுணர்ந் துன்னையே (எ)

ச : குருமணி சங்கரரும், அருமைத் தாயுமானுரும்
அருணகிரி நாதரும், அருட்சோதி வள்ளலும்,
கருணைக் கடல் பெருகிக் காதலி னுலுருகி,
கனிதமிழ்ச் சொல்லினல்
இனிதுனை அனுதினம் (எ)

## 14. மங்கள நாமம்

தன்யாசி] [தேசாதி

ப: மங்கள நாம சங்கீர்த்தனம் செய்குவோம்
மானிடரே வாரீர் (ம)

அ : சங்கர சாம்ப சதாசிவ நாரண
சம்பு ஜனார்த்தன ஜயஹரி ஹரியென்றே (ம)



ச : ஓம் கணபதி குக ஓம் சரவணபவ
ஓம் சக்தி வாணி கல்யாணி மஹாலக்ஷ்மி,
ஓம் சுத்த சத்குரு ஓம்சச்சி தானந்த
ஓம்பரி பூரண பரம பிதாவென்றே (ம)

## 15. கயிலாச சிவ

பூர்ணஷட்ஜமம்] [தேசாதி

ப : கயிலாச சிவ கௌரி சங்கரா,
கங்காதரா, கருணாகரா—ஓம் (ப)

அ : உயிர்களை யெல்லாம் உடலாகக் கொண்டே
உலகா லயத்தில் பலவா யுலாவும் (க)

ச : நாவிலுன் பெயரை நவில்வதென் மகிழ்வாம்
ஆவியி லுனை நான் ஆசையாய்க் கலந்தே
பூவிலுன் புகழே புகல்வதென் புகழாம் !
பாவன மாதலென் பரமானந்தமாம் ! (க)

## 16. ஹர ஹர சிவ ஹரி ஹரி

சுபோஷிணி] [ரூபகம்

ப : ஹரஹர சிவ ஹரிஹரியென
அரிய நாமம் ஜெபிப்போம் (ஹர)

அ : பரகுருவர சுர நாரண
பசுபதி சுத்த பரிபூரண (ஹர)

ச : அகர உகர மகரமான அக்ஷரஸ்ருதி கூட,
மகர யாழும் குழலும் குரலும்
மத்தளத்துடன் பாட...
இகபரசுகம் அருளும் சச்சித்
தின்ப மயனை அன்பு செய்தே (ஹர)

## 17. தூக்கிய திருவடி

சங்கராபரணம்] [ஆதி

ப : தூக்கிய திருவடி துணையென நம்பினேன்,
துரிய நட ராஜனே ! (தூ)

அ : ஆக்கி யளித்துலகை நீக்கி மறைத்தருளி
ஐந்தொழில் புரிந்திடும் அம்பல வாணனே ! (தூ)
ச : எத்தனை யோபிறவி எடுத்தெடுத் தேயிளைத்தேன் ;
இருவினைப் பயன்களை எய்தி யெய்திக் களைத்தேன் ;
சித்தம் இனியுன்மேல் வைத்திருக்க நினைத்தேன் ;
திக்குவேறில்லை ஐயா, தீனரைக்காக்கும் கையா (தூ)
பாச மறுத்துச் சிவ நேசங் கொடுத்துனது
தாசனைச் சிதம்பர வாசனைய் வாழச்செய் (தூ)

## 18. இதய வெளி

காம்போதி] [ஆதி

ப : இதய வெளியினிலே, பொதுநடம் புரிகுவாய்
ஏகாம்பரனே—சிவனே—என் (இ)
அ : பதசாரி தோறும்உன் அதிர்சிலம் பொலி கேட்டுப்
பரமா னந்தம் பெறுவேன் ; சிற்ச பேசா—என் (இ)
ச : எனதென் றகங்கரிக்கும் மனது பணிந்து வர,
இருவினைக் கட்டுகள் இற்றுச் சுயேச்சை பெற
அனவர தமும் உன்னை நினைந்து கசிந்துருகி,
அத்தா வுன் மலரடிப் பித்தனைய் வாழ்ந்திட (இ)
“ ஹரஹரஹர ” என்றென் ஆர்வங்கள் கோஷிக்க,
அன்பு மகர வீணை “ தும்தும் ” என வாசிக்க,
சிரசிலுன் பேரின்பம் சிலிர்த்து நடமாட,
செந்தமிழ் வாணியுன்—மந்திரப் பொருள் பாட (இ)

## 19. மோன நிசியினிலே

நீலாம்பரி] [ஆதி

ப : மோன நிசியினிலே கானம் செய்வது நீயோ ? (மோ)
அ : நானறத் தானென் றெழும்
ஞானப் பரம் பொருளே (மோ)
ச : ஆணவப் பேய்மனம் அடங்கி யுறங்கும் வேளை.
அஞ்ஞான பந்தமின்றி அமைதி சிறந்த வேளை,
வீணையும் குழலும்போல், வேதமந் திரமும்போல்,
விரும்பியென் உள்ளத்தில்
கரும்பின் அருவியைப்போல் (மோ)



## 20. பரிபூரணானந்தமே

பியாகு] [ரூபகம்

ப : பரிபூர ணானந்தமே—ஓம்
பரப்ரஹ்மமே நம (ப)
அ : விரிவான பார் எங்கும் விளங்கும் அருட்சுடரே,
பிரியாதென் உள்ளத்தில், அரியாசனம் வகிக்கும் (ப)
ச : சாதி சமயநிறப் பேதங் கடந்தொளிரும்
ஆதியந்த மில்லாத ஆத்ம ஸ்வரூபமே (ப)
நாமரூ பாதீத மானநிர்க் குணமே
ஓம்தத்ஸத் என வேதம் ஓதிடும் சகுணமே (ப)

## 21. சாந்தமாக உன்

மாஞ்சை] [சாய்ப்பு

ப : சாந்த மாகவுன் சந்நிதி யிலிருந்தே
தியானம் செய்வதே பர மானந்தம்—அப்பா (சா)
அ : காந்தம்போல் என்மனங் கவர்ந்தவுன் ஜோதியைக்
கருத்தில் இருத்தியெந்தக் கவலையும் இல்லாமல் (சா)
ச : யானென் றகங்கரிக்கும் ஆணவங் கிளம்பாமல்,
ஆசா பாசத்தால் மனம் ஊசலிட் டலையாமல்,
மோனத்தி லேபூத்த ஞானத் தாமரைபோலே
முற்றுமுன் சேவடிப் பற்றுடனே நிதம் (சா)

## 22. அப்பாவுன் பொன்னடி

செஞ்சுருட்டி] [ஆதி

ப : அப்பாவுன் பொன்னடி துறப்பேனோ—நிதம்
அன்பு மலர் சொரிய மறப்பேனோ—தில்லை (அப்)
அ : அப்பாலுக் கப்பாலாம் அறிவுநிலை வந்தாலும்,
அத்வைத சொருபத்தில் ஆருயிர் கலந்தாலும் (அப்)
ச : நீயின்றி எனக்கொரு நிலையுண்டோ ?—நல்ல
நீரின்றி மீனுக்கு வாழ்வுண்டோ ?
தாயின்றிச் சேய்க்கொரு கதியுண்டோ ?—உன்
தயவின்றி யெனக்கொரு மதியுண்டோ—தில்லை (அப்)

காட்டுகின்ருய் ; உன்னைக் காண்கின்றேன்—எங்கும்
கருணையுடன் அன்பரைக் காக்கின்ருய்—ஐயா
ஆட்டுகின்ருய் அதனுல் ஆடுகின்றேன்—உலகில்
அருளுகின்ருய் ; அருளைப் பாடுகின்றேன்—தில்லை (அப்)

## 23. இல்லை யென்பான் யாரடா ?

மோகனம்] [சாய்ப்பு

ப: இல்லையென்பான் யாரடா ?—என் அப்பனைத்
தில்லையிலே பாரடா ! (இல்லை)

அ: கல்லும் கசிந்துருகக் கனிந்த முறுவலுடன்
காட்சி யளிக்கும் அந்தக்
கருணைச் சுடரொளியை (இல்லை)

ச: சோக மோகமற்ற சுதந்தர வீரர்கள்,
சுத்த சிவத்தில்மனம் வைத்த ஞானதீரர்கள்,
தாகந் தணிந்தஉப சாந்த பாராயணர்,
சந்ததம் இதயத்தில் வந்திக்கும் கடவுளை (இல்லை)
கல்லைக் கனியாக்க வல்ல புலவனைக்
கலைவடி வாகியென் கண்ணுன கண்ணனை,
எல்லா வுலகினுக்கும் இறைவனை, அன்பரின்
இதயத்தில் நடமாடும் சிதம்பர நாதனை (இல்லை)

## 24. சிதம்பரம் என

பங்காளா] [ஆதி

ப: சிதம்பர மென நினைவாய் மனமே,
சிதம்பரமென நினைவாய் ! (சிதம்)

அ: மதங்கொண் டலையும் மனதும் தெளியும்
இதய மலரில் அமுதம் பொழியும் (சிதம்)

ச: பவகாம நாசன், சிவகாமி நேசன்,
பரிசுத்த பக்தர் தரிசிக்கும் ஈசன்,
தவமோங்கும் தில்லைக் கனக சபேசன்,
நவரச கலா நடராஜன் வாழும். (சிதம்)



## 25. பக்தி மின்சாரம்

நாட்டை] [ஆதி

ப: பக்தி மின்சாரம் அருள்வாய்—பரமாத்மனே
பக்தி மின்சாரம் அருள்வாய் (ப)

அ: சக்தியை ஆதாரச் சக்கரத்தில் ஏற்றி,
ஸஹஸ்ரார சித்தியால் சச்சிதானந்தம் பெறும் (ப)

ச: சித்த சுத்தியுடனே தியானத்திற் கூட்டித்
தீயெழும் ஆத்மவி வேகத்தை நாட்டி
எத்திசை யிலும் உன்னை எழில்பெறக் காட்டி,
எப்போதும் என்னுள்ளுள் இன்பத்தை ஊட்டி (ப)
முக்குண வினையிருள் முற்றிலும் விலகிட,
மூல குண்டலிக் கனல் மூண்டென்னுள் இலகிட,
பக்குவக் கனிபோலென் பாமலர் பழுத்திட,
பாரெல்லாஞ் சின்மயம் பார்த்துளஞ் சிலிர்த்திட (ப)

## 26. ஞானப்பால்

ஸாரமதி] [ஆதி

ப; ஞானப்பால் அருள்வாய், சிவனே—யெந்த
நாளும் உன் இன்பத்தில் ஆழ்ந்து திளைக்கவே (ஞான)

அ: தேனும் பாலும் அமுதும், தீங்கனி ரசமும்போல்
தியானத்தில் உன்னைக் கூடும்
மோன முனிவர் உண்ணும் (ஞான)

ச: இம்மை மறுமைப்பயன் எல்லாமும் நீயென்றே
இதயத்தில் உன் அன்பை
எப்போதும் வளர்க்கின்றேன்
அம்மை யப்பா வென்றே அழுதுன்னைக் கூவிய
ஆளுடைப் பிள்ளைக்கு நீ அன்புடன் புகட்டிய (ஞான)

## 27. நம்பித்தான் இருக்கின்றேன்

மாளவி] [ஆதி

ப: நம்பித்தான் இருக்கின்றேன்—என்னப்பனே
ஞான நடராஜனே—உன்னருளையே (நம்பி)

அ; அம்பலத் தாடும் அரசே—உன் பெருமையை
அல்லும் பகலும் அன்பாய்ச்
சொல்லிச் சொல்லி யுருகி (நம்பி)

ச: ஆணவ மாயவினை அருகி, மனக் கல் உருகி,
மாணிக்க வாசகர் போல்—உன்
மங்களச் சோதியில்
மறைந்து கரைந்து போக (நம்பி)

## 28. எட்டி நிற்பதும்

நாதநாமக்கிரியை] [சாப்பு

ப: எட்டி நிற்பதும் ஏனையா—நடராஜா
ஏழையின் பிழை யாதையா... (எட்டி)

அ: கட்டிக் கரும்பினும், கனிரசப் பாகினும்,
கருத்திற் கினியமுக் கண்ணா...அந்தி வண்ணா (எட்டி)

ச: தொட்டுக் கலந்துங்கை விட்டு வெறுப்பாயோ?
துணையென நம்பிய தொண்டரை மறுப்பாயோ?
சட்டப்படி மணந்த சக்தி சிவகாமியும்
சக்களத்தி யென்றே சண்டைக்கு வரவில்லை (எட்டி)
அன்றென்னை அழைத்துநீ ஆசையுடன் பேசி,
அள்ளிக் கலந்தேகளி துள்ளிக் குதித்தாயே;
இன்றென் முகம்பாராமல் இருப்பதும் நீதியோ...
இரக்கமே வடிவாகும் அருட்பெருஞ் ஜோதியே (எட்டி)

## 29. துஞ்சும் போதும்

மோகனம்] [ஆதி

ப: துஞ்சும் போதும்—நெஞ்சம் உனக்கே
துடிக்கும் துடியுடையாய்—ஓம் ஜோதி சிவனே (து)

அ: அஞ்சும் அஞ்சும் அஞ்சும் அஞ்சும்
அந்தக் கரணமுடன் எந்தை எந்தை யென்றே (து)

ச: கலத்திலும் நிலத்திலும் ககன வெளியிலும்
கண்காணா நாடெல்லாம் விண்காணச் சென்றும்
நலத்திலும் நலிவிலும் வலுத்துயிர் நொந்தாலும்
நானென்று நீயிங்கே நடமாடும் காட்சியை



மறப்பேனோ—அன்பைத் துறப்பேனோ—இனிப்
பிறப்பேனோ—அருள் சுரப் போனே! (து)

## 30. கொண்டி சொன்னதார்?

சக்ரவாகம்] [சாய்ப்பு

ப: கொண்டி சொன்ன தாரையா—உனக் கென்மேல்
கோபம் வந்த தேனையா? (கொண்)

அ: தொண்டர்வணங்குந்தில்லைத்துரையே நின் கருணையை
துதித்துத் துதித்துக் கண்ணீர்
துளும்புமிப் பித்தன்மேல் (கொண்)

ச: யாருக்கும் அடங்காத அகங்காரச் சிறுக்கியோ?
அடுத்துக் கெடுத்திடும் அபிமானப் பிலுக்கியோ?
ஊரைக் கலக்கு கின்ற ஊதாரிக் காமியோ?
ஒன்றைப் பத்தாக்கிடும் சண்டைப் பொருமியோ?
(கொண்)

## 31. காடு மலை யெல்லாம்

தோடி] [ஆதி

ப: காடு மலையெல்லாம் தேடியுன்னை யடைந்தேன்
கனகசபை துரையே, தீரென் குறையைக் (காடு)

அ: வீடுகளை வளைத்தும், ஏடுகளைத் துளைத்தும்,
வித்தகரைப் பணிந்தும், சித்த மடங்காமல் (காடு)

ச: முலைவளர் மாதரை முன்னேகண் டஞ்சினேன்,
மூக்கைப் பிடித்துக் கொண்டோர்
முழையிலே துஞ்சினேன்
அலையும் மனத்தை யின்னும் நிலைநிறுத்த வியலேன்;
அரனேயுன் னருளின்றி,
திறனே தெனக் கினிமேல்? (காடு)

## 32. கண்ணெடுத்தாகிலும்

சிம்மேந்திரமத்திமம்] [ஆதி

ப: கண்ணெடுத் தாகிலும் காணீரோ—என்
காவிய மாலையைப் பூணீரோ? (கண்)

அ: பண்ணும் பனுவலும் பரதமும் விரதமும்
பக்தியும் கொண்டிங்கே
நித்தியம் தொழும் என்னைக் (கண்)

ச: பட்டம் பதவிபெறப் பாடவில்லை—தங்கப்
பதக்கங்களை யென்றும் நாடவில்லை—ஐயா
எட்டெட்டுத் திக்கிலும் ஓடவில்லை—உம்மை
இதய மோனத்தி லன்றித் தேடவில்லை ஐயா (கண்)
பேருக்கும் புகழுக்கும் பேராசைப் படவில்லை;
பெரியபேர் வாலையும் பிடித்துக் கும்பிடவில்லை;
ஆருயிர்க் குயிராக அறிந்துமை நேசித்தேன்;
ஆர்வ மலர்களை அள்ளியள்ளிப் பூசித்தேன்! (கண்)

## 33. பெண்ணுசை மறந்து

தர்பார்] [சாபு

ப: பெண்ணுசை மறந்து நான்—உன்னுசை யுடன் வாழப்
பிரியங்கொண்டேன், பரனே...சுபகரனே (பெண்)

அ: அண்ணு மலையில் மேவும், அருட்பெருஞ் ஜோதியே,
அன்பருக் குபசாந்தம் அளிக்குந் தயாநிதியே (பெண்)

ச: சேலைப் பகட்டினிலும், செம்பொன் மினுக்கினிலும்,
சித்தம்விட் டலையாமல், பத்திவை ராக்யமுடன்,
மாலை மல்லிகை போலுன் மணமாலை யாகியே,
மாசற்று வாழச்செய் தேசுற்ற யோகியே! (பெண்)

## 34. அலையாமற் பாருமையா

பைரவி] [சாபு

ப: அலையாமற் பாருமையா—என்பேய்மனம்
குலையாமல் வாருமையா—அம்பலவாணு (அலை)

அ: சிலைபோலே நிலைபெற்ற தியான சமாதியில்
சிவபோக முண்டிடுந் தவஞ்செய்ய வேண்டினேன் (அலை)

ச: பொய்கண்டு விலக்கிய மெய்கண்ட யோகியின்
போதத்தை யனுதினம் சாதனஞ் செய்திட...
கைகண்ட ஞானத்தைக் காலத்தில் உதவிய
கடவுளே, யுன்னிடந் திடபக்தி கொண்டிட (அலை)



## 35. எப்போது வருவாயோ

நாட்டைக்குறிஞ்சி] [ஆதி

ப: எப்போது வருவாயோ...எதிர்பார்த்துப் பார்த்து மனம்
ஏங்குகின்றேன்—கவலை—ஓங்குகின்றேன்—சாமி (எ)

அ: ஒப்புயர் வில்லாத உத்தமச் சிதம்பரம்
ஒளிரும் நடராஜனே, எளியேன் குடிலைநாடி... (எ)

ச: காற்றசைந் தாலும்உன் காலடிச் சத்தம் என்பேன்.
கதிரவனை நெற்றிக் கண்ணனே வா என்பேன்...
கூற்றை யுதைத்த வுன்னைக் கூடிவாழ நினைத்தேன்
குறிப்பறிந் தென்னை நீயே
கூப்பிடக் காத்திருந்தேன் (எ)
தூதனுப்பி யழைக்கத் துணைவர் எவரும் இல்லேன்,
துரையேயென் காதலைத்
துணிந்து வெளியிற் சொல்லேன்!
சோதித்த சோதனை போதும்என் நாதனே...
தூயரைக் காத்திடத் தூக்கிய பாதனே! (எ)

## 36. இதய வீணை

பௌளி] [திரிபுடை

ப: இதய வீணை உதய கீதம்
இசைப்பதைக் கேளாய்...
உதய கீத வுணர்விலோங்கும்
உண்மையைத் தேராய்—மனமே
உள்முகம் பாராய் (இத)

அ: சுதந்தரமாய் நிரந்தரமாய்
சுத்தசக்தி ஜோதியாங்கே
சுகநடஞ்செய் சூட்சுமத்தை
அகமகமென்றறிய நாளும் (இத)

ச: பூதமுமில்லை மாத்திரையில்லை
பொறிபுலனில்லை கரணமுமில்லை
நாதமுமில்லை விந்துவுமில்லை
நான் நீ அவனெனும் பேதமுமில்லை

சாதியு மில்லை சமயமுமில்லை
சாத்திரமில்லை கோத்திரமில்லை
வேதமுமில்லை போதமுமில்லை
வேகமுமில்லை தாகமுமில்லை (இத)

இருவினையில்லை முக்குணமில்லை
இகபரமில்லை சுகதுக்கமில்லை
அருவுருவில்லை குருசிஷ்யனில்லை
அதுநான் அதுநீ அதுவே யுலகம்
புதுமுது பொதுவது புனிதான்மாவென (இத)

## 37. கண்ணாரக் கண்டு

மத்தியமாவதி] [ரூபகம்

ப: கண்ணாரக் கண்டு களித்தேன்—என்
கனக ராஜனைக் (கண்)

அ: விண்ணோங்கிய வெள்ளி மலையினில்
விளங்கு கின்ற வேதப் பொருளைக் (கண்)

ச: பரம சாந்த மௌன நிலையில்,
பார்வையையுள் ளடக்கி முற்றும்...
துரிய ஜோதி வடிவமாகத்
துலங்கு கின்ற சுத்த சிவனைக் (கண்)
பதமலர் தொழும் பற்றைத் தவிரப்
பற்று முற்றும் விட்ட பின்பே...
இதய மலரில் உதய ரவிபோல்...
எழுந்த ஞானக் கொழுந்தை மகிழ்ந்தென் (கண்)

## 38. பூரணனே

உசேனி] [ரூபகம்

ப: பூரணனே உன்னிடமிப் பூங்குழலை ஈந்தேன்—பரி (பூ)

அ: நாரணனே, என்னுயிரின் நாயகனே, இவ்வுலகின்
காரணனே, கனிமதுர கானரஸம் பொழிவாய் (பூ)

ச: உயிரான ஓடையிலுன் ஓங்காரம் ஒலிக்க,
உள்ளார்வம் உன்பெயரை ஓயாதார்கலிக்க,



அயராமல், உன் அருளால் அங்கமெல்லாம் சிலிர்க்க,
அசையாமல் உன்கரத்தில் அன்புடனே யிருக்க,
ஆனந்த பக்திமலர் அனுதினமும் பூத்துனக்கே,
அள்ளி அள்ளி யருச்சித்தென் உள்ளமெலாம் குளிர (பூ)

## 39. என்னுயிர்க் குயிராகி

கானடா] [ஆதி

ப: என்னுயிர்க் குயிராகி மன்னுயிர் அனைத்துமாய்
இருக்கும் பரா பரனே—ஓம்ஹரனே (என்)

அ: உன்மயம் ஆகும் இவ் வுடலையும் உயிரையும்
உளத்தையும் மனத்தையும் அனைத்தையும் ஏலாய் (என்)

ச: வாக்கினில் இருக்கின்ருய்; வாய்மையே பேசுவேன்;
மனத்தினில் இருக்கின்ருய்; மலரடியே நேசிப்பேன்!
நோக்கினில் இருக்கின்ருய்; நோக்குவேன் உன்னையே;
நூருயி ரம்விதமாய் நுவலுவேன் உன்புகழே! (என்)

## 40. காரணம் கேட்டுவாடீ

ஷண்முகப்ரியா] [சாபு

ப: காரணம் கேட்டுவாடீ—சகியே யென்
காதலன் சிதம்பர நாதன் இன்னும் வராத (கார)

அ: பூரண தயவுள்ள பொன்னம்பலத் துரையென்
பொறுமையைச் சோதிக்க மறைமுகமானதன் (கார)

ச: கல்லாலும் வில்லாலும் கட்டி யடித்தேனே?
கண்ணப்பன் செய்ததைக் கனவிலுஞ் செய்தேனே?
செல்லா மனைக்குத் தூது சென்றுவா என்றேனே?
செய்யாத காரியஞ் செய்யமுன் னின்றேனே? (கார)

## 41. அலங்காரம் போதுமடீ

சௌராஷ்ட்ரம்] [ஆதி

ப: அலங்காரம் போதுமடீ, சகியே—இது
அவர் வரும் நேரமடீ! (அ)

அ: கலங்காத காதலைக் கண்டு களிப்பவர்
கனதனச் சுமைகளைக் கண்டு சிரிப்பாரடி (அ)

ச: கள்ளத் தளுக்கெல்லாம் கருணைக்குப் பகையாகும்;
கட்டித் தங்கநகைகள் கலவிக்குத் தடையாகும்;
உள்ளபடி யிருந்தால், அள்ளி யணைவாரடி!
ஒய்யாரப் பிலுக்கின்றி மெய்யார வணங்குவோம் (அ)

## 42. கருணாகரனே

விஜயஸ்ரீ] [ஆதி

ப: கருணா கரனே வரனே சரணம்—
கதி வேறில்லை (க)

அ: அருணா சலனே, சிவனே, அபயம், அபயம்;
அஞ்சல் அளித்தெமை ஆதரி யப்பனே (க)

ச: கோர ராக்ஷஸர்கள் குண்டுபீ ரங்கிகளால்
கொன்றிவ் வுலகமெல்லாம் வென்று நடுக்குகின்றார்
பாரத தேசத்தைக் காத்திடுவாய்—எம்மைப்
பரிவுடன் கடைக்கண்ணால் பார்த்திடுவாய்-அப்பா (க)

## 43. நீயே எனது ஜீவன்

லலிதா] [ரூபகம்

ப: நீயே எனது ஜீவன்; நினது பக்தி எனது முக்தி (நீயே)

அ: தாயேயென் கருணைமிக்க
தந்தையே உன் அன்பு மிக்க
சேயே யான் உனது சித்தம்
செய்வதேயென் உய்வதாமே (நீயே)

ச: சகல கலையும் வேதாகம சாஸ்திரமும் கற்றோர் போற்றும்
ஜகஜீவ பரஞானமும் ஸகுண நிர் குணபாவமும்,
இகபரகதி யெல்லாம் உனது
சுகுணகான சுகமொன்றே;
அகமகமென அனவரதமும்
அன்பருள்ளே ஆடு கின்ற (நீயே)



## 44. நீ யின்றி நானில்லை

பந்துவராளி] [ஆதி

ப: நீயின்றி நானில்லை, நினைப்பில்லை, செயலில்லை,
நிலையொன்றும் இல்லை, இறைவா! (நீ)

அ: வாயில் உன் வாய்மையை, மனத்தில் உன் தூய்மையை
வாழ்வில் உன் அன்பினை வளர்த்திட நீயருள்வாய் (நீ)

ச: யாக்கை உனது சக்தி ஆலயம் எனக் காப்பேன்;
அணுவணு விலும் உன்றன் அருளாடலைப் பார்ப்பேன்...
வாக்கை நின் காவிய மாலையாய்க் கோப்பேன்
மங்கல மனமண வரையி லெதிர்பார்ப்பேன் (நீ)

## 45. சுதந்தரம் தாரும்

மாயாமாளவ கௌளம்] [ஆதி

ப: சுதந்தரம் தாரும் ஐயே—ஆத்ம
சுதந்தரம் தாரும் ஐயே! (சு)

அ: இதந்தரும் அறம் பொருள் இன்பம்வீ டாகிய
இனிய நாற் செல்வமும் எங்களுக் கெய்தவே (சு)

ச: உண்மையை உண்மையென் றுலகின்முன் உரைக்க,
ஒளிபெறும் உன்னருள் உள்ளத்திற் சிறக்க,
திண்மையாய் எதிர்த்துநான் தீமையைச் சிதைக்க,
தேசமெல் லாமுனது திருப்புகழ் விளக்கவே (சு)

## 46. வரமருள்வாய்

ஜயந்த ஸ்ரீ] [தேசாதி

ப: வரமருள்வாய் பரமேசனே (வர)

அ: சரணம் புயத்தேன் சந்ததமும் உண்டுன்
சங்கீதஸா தனம் செய்திடவே (வர)

ச: துச்சமான நினைவு தூரச்சென் றொழிய,
துயர்செய்யும் வறுமை தூருடன் அழிய,
அச்சமின்றி யெங்கும் அன்புவெள்ளம் பொழிய
அறிவுங் கலையுந் திருவும் பொலிய (வர)

## 47. சித்தவுறுதி

சாமா] [ஆதி

ப: சித்த வுறுதி யின்றி பக்தி நிலைக்குமோ
ஸ்ரீமஹா தேவ குருவே ! (சித்)

அ: பித்துப் பிடித்தலையும் பேய்மனக் குரங்கினைச்
சத்தமில் லாதடக்கிச் சாதனம் செய்திடும் (சித்)

ச: ஜபதப தியானத்தால் ஸம்யமம் சித்திக்க,
சஞ்சல மில்லாத ஸமாதியி லேயிருக்க,
சுபமங்கள ஜோதி சொரூபத்தி லே லயிக்க
சுத்த துரிய சிவ போக சுகம் புசிக்க (சித்)

## 48. யாரும் இல்லையோ

கீர்வாணி] [ரூபகம்

ப: யாரும் இல்லையோ—நண்பர் (யா)

அ: பேருயர்ந்த பித்தன் மேல் யான்
பெரிய பித்தன் என்று சொல்ல (யா)

ச: எந்த நாளும் அன்பருக்குச்
சொந்த மான தொண்டர் நேசன்,
சுந்தரர்க்குத் தூது சென்ற
சுந்த ரேசன் இளகப் பேச (யா)

## 49. இன்றும் வரவில்லையே

பரசு] [ஆதி

ப: இன்றும் வரவில்லையே—உலகினில்
இன்னலுக் கெல்லை யில்லையே—ஜகதீசன் (இ)

அ: அன்றுமுப் புரங்களை அழித்த நெற்றிக் கண்ணன்,
அருள்புரிவான் என்றே ஆசையாய் நம்பினேன் (இ)

ச: பாரில் அரக்கர் செய்யும் போர்மேகம் படர்ந்ததே
பஞ்சமா பாதகர் வஞ்சவலை அடர்ந்ததே;
கார் மேகம் போலச் செந் நீர்மேகம் பொழியுதே
காப்பாற்றுந் தருமமோ கதிகெட்டிங் கலையுதே (இ)



காமக் குரோதலோபக் கடுமோகப் பேய்க்குலம்
கட்டின்றி வாழ்வினை வெட்டி வெட்டிச் சாய்க்குதே;
பூமியைக் காத்திடும் சாமி யெங்கே என்றே
புண்ணியர் பரிதாபக் கண்ணீர் விடுகின்ருர் (இ)

## 50. வைத்தபடியே

நடபைரவி] [திரிபுடை

ப: வைத்தபடியே இருப்பாய்—பரமசிவன்
மலரடி தன்னை நினைப்பாய்—மனமே நீ (வை)

அ: அத்தன் என் ஆண்டவன் அம்பலத் திருக்கூத்தன்
அட்ட மூர்த்தியின் அருள் இட்டப்படிக்கே உன்னை „

ச: உள்ளத்தில் அடங்காமல் ஊரெல்லாம் திரிந்தென்ன?
ஊருக்குப் பகட்டாகப் பேருக்கு வாழ்ந்தென்ன?
தெள்ளிய சித்தமும், சீரிய பக்தியும்,
தியான மோன ஜபமும், கான பூஜையும் செய்தே „

## 51. மோகன வலை

பேஹாக்] [ஆதி

ப: மோகன வலை வீசினன்—சிவபெருமான்
மோகன வலை வீசினன்! (மோ)

அ: தேகபுத்தி தவிர்க்கத் தாகம் எழுப்பி—வெகு
வேகமாய் வந்துபரி-பாகங் கொடுக்க வொரு (மோ)

ச: சுற்றுல கின்சுகத்தைத் தூசிபோல் ஒதுக்கிடச்
சூழ்வினைப் பாசத்தைத் துண்டுதுண் டாக்கிட
முற்றும் அவன்சுகத்தில் மூழ்கித் திளைத்திடவே
முக்கண்ணன் என்னுயிரைப் பக்குவமாய்ப்பிடித்தே „

## 52. எல்லாம் சிவன் செயல்

கல்யாணி] [சாபு

ப: எல்லாம் சிவன் செயல் என்றே கவலையின்றி
இருப்பாய்நீ மட நெஞ்சமே (எல்)

அ: பல்வேறு குணப்போர்கள் தொல்லைசெய் உலகிலே,
நல்லது வந்தாலும் பொல்லது வந்தாலும் (எல்)

ச : ஊரெல்லாம் பழித்திடப் பேரெல்லாம் கெட்டாலும்,
உறவினர் யாவரும் உன்னைக்கை விட்டாலும்,
பாரெல்லாம் இச்சையாற் படைத்தவன் இருக்கிருன்;
பக்தரைக் கைவிடான்; சத்தியம் செய்கிறேன் (எல்)

பஞ்சமா பாதகர் வஞ்சனை செய்தாலும்,
பதங்கெட்ட தீயவர் நிதமுன்னை வைதாலும்,
அஞ்சல் அஞ்சல் என்றே அச்சத்தைப் போக்கிடும்
அப்பன் இருக்கின்ருன் ;
அடியாரைக் காக்கின்ருன் (எல்)

## 53. எனக்கருள் புரிந்திட

புன்னுகவராளி] [ஆதி

ப : எனக்கருள் புரிந்திட வேண்டும்—இன்னும்
எத்தனை சொல்லுவேன் ஆண்டவனே ஐயா (எ)

அ : நினக்கே நிவேதனம் வாழ்வே—அப்பா
நின்னடியார்க்கு வரலாமோ தாழ்வே (எ)

ச : சுந்தரரைத் தடுத் தாண்டாய்—திருத்
தொண்டர்க்குத் தோன்ருத் துணையென நின்ருய்
வந்தருள் சிவ நடராஜா—உன்
வான்கருணை யின்றி நானினி வாழேன்.

சிந்தையுஞ் செய்கையும் நீயே—இன்னுஞ்
சிறியேனைச் சோதிப்ப தென்னேயெந் தாயே
பந்த விலங்கறுத் தருளாய்—உன்
பற்றின்றி மற்றிலேன் பசுபதி சரணம் (எ)

## 54. மறவேன்

ஷண்முகப்ரியா] [ஆதி

ப : மறவேன் ஒரு பொழுதும்—தில்லை,
மன்றுள் ஆடிய மாணிக்கமே யுன்னை (மற)

அ : அறிவாய் என்னுள்ளே நிறைவாய் அருட்சோதி
விரிவாய் விளங்கிடும் இறைவா! இறைவா!—உன்னை „



ச : கதிர்மதி பூட்டிய காலரதம்—என்னைக்
கண்கட்டி எம்மாயக் காட்டினில் விட்டாலும்,
விதியையும் வென்றிடும் மதிதரும் அப்பனே,
வித்தகனே உனது பக்தி பரவசத்தை (மற)

## 55. எண்ணி எண்ணி

சங்கராபரணம்] [ஆதி

ப : எண்ணி எண்ணி நிதம்
கண்ணீர் விடும் என்மேல்
இரக்கமில்லையோ பரனே—சிதம்பரனே (எ)

அ : உண்ணவில்லை ஐயா உறக்கமும் வரவில்லை ;
உள்ளந் துடிதுடிக்கக் கள்ளா நின் காதலை (எ)

ச : ஊரார் பகைக்கவும், உற்ருர் நகைக்கவும்,
ஓங்கார வீணையும் தாங்காது மெலியவும்,
போராடும் மனதுடன் காரோடும் இரவிலே
வாராரோ துரை என்றே வழிபார்த்துன் அன்பையே.

## 56. ஆத்ம தரிசனம்

செஞ்சுருட்டி] [ஆதி

ப : ஆத்ம தரிசனம் செய்வோமே—பர
மானந்த ஜீவனம் எய்வோமே—வாரீர் (ஆ)

அ : பூத்த காலையின் முகப் புன்னகை போலவே,
புனிதமாகப் பொலியும்
பொன்னுளத் தாலே—பர (ஆ)

ச : இருவிகா ரத்தை வென்ற ஒருமனத் திறத்திஞல்,
எமனுக்கும் அஞ்சாத சமசித் தத்திஞல்,
அருண ஜோதியைப்போலே அன்பரின் உள்ளத்தில்
அதுவாய் எழுந்தொளிரும்
பொதுநடப் பொருளான (ஆ)

## 57. அன்பிருந்தாலே போதும்

கேதாரகௌளம்] [ஆதி

ப: அன்பிருந் தாலே போதும் ஆண்டவனே—இந்த
அகில வுயிர்களையும் பூண்டவனே—சிவனேஉன் (அன்)

அ: மின்பொலி வென்னச் செல்லும் புன்புவி மோகமின்றி,
என்பொருள் எனவொன்றும் இல்லையெனச் செய்தே
உன்பரம் என்றே வாழும் இன்பச் சுயேச்சை தரும் (அன்)

ச: மனமலர் கொண்டேயனு தினமுன்னை யர்ச்சித்து,
மாசற்ற பணிவினால் மலரடி வந்தித்து,
அனைத்துமுன் சித்தமென்றே அறிந்து பிற மறந்தே,
ஆத்ம ஸமர்ப்பணத்தால் அள்ளி யுன்னை யணையும் (அன்)

## 58. ஓம் சிவம்

தேவகாந்தாரி] [ஆதி

ப: ஓம் சிவம் சிவம் என்ற நாம ஜபத்தினை
ஒருமையுடன் செய் மனமே (ஓம்)

அ: காமனை வெல்லும் காலனைக் கொல்லும்
கவலையைக் கெல்லும், கனிமதுரச் சொல்லாம் (ஓம்)

ச: குருபர மந்திரம் திருமிகத் தந்திடும்
குகைக் கனல் எழுப்பிடும் பகைக்குலம் அழித்திடும்
இருவினை அருகிடப் பெருகிடும் சுதந்தரம்;
இதயத் துடிப்புடனே இருந்து நிரந்தரம் (ஓம்)

## 59. சிவகாமிகள்

ஆனந்தபைரவி] [ஆதி

ப: காமிகள் ஆவோம் வாரீரே—பரமசிவ
காமிகள் ஆவோம் வாரீரே (காமி)

அ: நாமென்னும் ஆணவ மாயத்தை நலித்தே, (காமி)

ச: ஆடலாய் உலகமெல்லாம் அருளினால் ஆக்கினான்;
அன்பரை மேன்மேலும் இன்பத்தில் ஊக்கினான்
வேடனாய் விளையாடி, வில்லடி யும்பொறுத்தான்;
வேதகானத்தைக் கேட்டு வேண்டும் வரமளித்தான்!(கா)



மாதவக் கௌரிதன் பாதியாகக் கூடினான்;
மார்க்கண்டே யனைக்காக்க மறலியைச் சாடினான்;
பாதம்வைத் தென்னுள்ளம் பரவசக் கூத்தாடினான்;
பார்த்தனுக்குப் பாசு பதமளிக்க ஓடினான்! (காமி)

## 60. அபயக் கரத்தை

பேஹாக்] [ரூபகம்

ப: அபயக் கரத்தைப் பார்த்த போதே
அச்சம் ஒழிந்தேன்—சிவனே உன் (அபய)

அ: உபய பாதம் பற்றும் அன்பர்
உய்யக் கருணை பெய்யும் துய்யா (அபய)

ச: குஞ்சிதபத நிழலினில் இடம் கொடுத்தே,
கோபப் பாசம் வீசும் கூற்றைத் தடுத்தே...
'அஞ்சல், அஞ்சல்' என்றே செஞ்சிலம் படிகள்
ஆர்க்க நடமாடும் ஆனந்தமே உன் (அபய)

## 61. உனக்குச் சமானமாய்

மணிரங்கு] [சாய்ப்பு

ப: உனக்குச் சமானமாய் ஒருவரைச் சொல்லவோ
ஒப்புயர் வில்லா அப்பனே—பரம்பொருளே (உனக்)

அ: 'எனக்குச் சமானமா?' என்றுமார் தட்டிய
எண்ணாயி ரங்கோடிப் பேர்
மண்ணாகக் கண்டு விட்டோம் (உனக்)

ச: நீயின்றி உலகுண்டோ, நீரின்றி மீனுண்டோ?
நீலவான் சுடரின்றி நீளுயிர்க் குலமுண்டோ?
தாயுந் தந்தையுமாகத் தயவுடன் எப்போதுந்
தாங்கியெங் களைவிட்டு நீங்காத கடவுளே (உனக்)

## 62. பரமேசனை

உதயரவிசந்திரிகை] [ஆதி

ப: பரமேசனைப் பார்வதி பாகனைப்
பார்க்கப் பார்க்கப் பார்க்கப் பரமானந்தமே (பரமே)

அ: வரநாதனை, கிரிராஜனை,
வாகீசாதி முனிவர் வாழ்த்தும் பாதனைப் (பரமே)

ச: சித்த சாந்தியுடன் பக்தி செய்யுந் தொண்டர்
சிந்தனைக் கமுதாய் வந்து வந்தினிக்கும்...
சுத்தமுக்த சுகானந்த வாரியை
சுரர் போற்றுகின்ற கருணா நிதியைப் (பரமே)

## 63. ஆனந்தமே

ஜுஜாவளி] [ஆதி

ப: ஆனந்தமே-பர-மானந்தமே—சிற்
றம்பலக் கூத்தனை அன்பு செய்தால் (ஆனந்)

அ: ஞானத்திலே-பர-மோனத்திலே—நி
தானத்திலே-வளர்-தியானத்திலே கலந்தால் (ஆனந்)

ச: பக்தியிலே-நெஞ்ச-மத்தியிலே-சித்த
சுத்தியிலே-ஆத்ம-சக்தியிலே-உணர்
தத்துவனை-ஜோதி-சத்துவனைக்-கூடி
நித்திய மானஜீவன்—முக்தி கிடைத்துவிட்டால்(ஆனந்)

பாசமற்றே-மனப்-பூசலற்றே-வெளி
வேஷமற்றே-து-வேஷமற்றே-வேறு
பேசலற்றே-அருள்-நேசமுற்றே-சிவ
தாசனாய்ச்-சிதம்பர-நேசனாய் வாழ்ந்திடின்(ஆனந்)

## 64. அஞ்சலாமோ நெஞ்சே

முகாரி] [சாய்ப்பு

ப: அஞ்சலாமோ நெஞ்சே—என்றும்
அன்பரைக் காத்திடும்
ஆண்டவன் இருக்கையில், (அஞ்ச)

அ: சஞ்சலம் இல்லாமல் இருப்பாயே—வீண்
சங்கடத்தை வேரோ டறுப்பாயே—சிவ
சங்கரன் அருள் செய்ய எங்குமே இருக்கின்றான் (அஞ்ச)



ச: மானிடம் ஆத்மாவின் சட்டை—அது
மாறி யழியும் லொட லொட்டை—சதா
நானெனும் அகம்பாவ மூட்டை—இதன்
நாட்கள் உதிரும் பழ மட்டை—என்றும்
இறவாமல்-மீண்டும்-பிறவாமல்—உள்ள
ஈசனே-உன்னுயிர் வாசன்-சுயம்ப்ரகாசன் (அஞ்ச)
அரக்கர் படையொலி கேட்டாலும்—அவர்
ஆகாச குண்டுகள் போட்டாலும்—சற்றும்
இரக்கமில் லாத வஞ்சர் சுட்டாலும்—பொல்லா
எமனே எதிர் வந்து விட்டாலும்—மனமே
பதறாதே-சித்தம்-சிதறாதே—இந்தப்
பாரைப் படைத்தாளும் பரமன் இருக்கின்றான் (அஞ்ச)

## 65. கண்ணாலே

சக்ரவாகம்] [ஆதி

ப: கண்ணாலே உன்னை நான்
காணவேண்டும் ஐயனே (கண்)

அ: மண்ணார் புவிப் பொருள்களெல்லாம்
மறந்து பற்றைத் துறந்து ஞானக்— (கண்)

ச: அரை குறையான கலையைக் கடந்தே
அருளறிவைப் பெற்றுப் பாசத்
திரை விலகித் தேஜோன்மய
திவ்ய தீப ரூப மாகக் (கண்)

## 66. மங்கள விளக்கு

புன்னாகவராளி] [சாய்ப்பு

ப: மங்கள விளக்கெடுப்போம்—உ
மாபதி போற்றி யென்றே (ம)

அ: பொங்கிட நலங்களெல்லாம்—தெய்வப்
புலமைகள் விளங்கிடவே (ம)

ச: அறிவொளி துலங்கிடவே—எங்கும்
அன்பொளி நிறைந்திடவே
பொறிபுலன் கரண மெல்லாம்—சிவப்
பொலிவுறத் தெளிந்திடவே (ம)

## 67 மனத்திரை

செஞ்சுருட்டி] [ஆதி

ப: மனத்திரை விலகாதோ?—உன்னுடன் உயிர்
மருவிக் கலவாதோ?—பரம் பொருளே (மன)

அ: கனத்த பொய் யிருளிடர்க் கட்டுக ளெல்லாம்விட்டுன்
கதிர்மணிச் சோதியைக் கண்ணுரக் காணவே (மன)

ச: காலை யொளியினிலே கலக்கும்வின் மீன்போலே
கடலினில் உப்பைப்போல் கரும்பினில் ரசம்போலே,
மாலையில் மணிகள்போல்—சோலைமலர் மணம்போல்
மன்னுந் திருவருளில் என்வாழ்வு லயித்திட (மன)

## 68. வருவாளே வனக் குயிலே

பேஹாக்] [ஆதி

ப: வருவாளே வனக் குயிலே—நடராஜன்
வருவாளே மனக் குயிலே! (வரு)

அ: திருவோங்குந் தில்லையிற் சின்மய நடஞ் செய்யும்
தேவாதி தேவன், என்னுள் சேவடி வைத்தாட (வரு)

ச: பங்கப்பட்டுப் பட்டுன் பாதத்தை நாடினேன்;
பாரினில் உனையன்றி ஓர் துணை வேறிலேன்;
'எங்கேநீ இருக்கின்ருய்?' என்றேநான் கதறவும்,
'இங்கேநான் இருக்கின்றேன்' என்றே மறைந்தவன் (வரு)

அருணோதயம் போலே அழகன், குழகன்—என்
ஆருயிர்க் குயிரான சூரியன்; பூரணன்;
கருணை முகங் காட்டிக் 'கவலைப் படாதே' யென்று
கண்ணீர் துடைக்குமென் கண்ணனை முக்கண்ணன் (வரு)

## 69. அந்த நாள் இனி வருமோ

ஆரபி] [ஆதி

ப: அந்த நாள் இனி வருமோ—சொல்லடீ,
அம்பலப் பசுங் கிளியே? (அந்த)



அ: எந்தெந்த வேளையும் இதயத்திற் பதம் வைத்தே.
'இருக்கிறேன், இருக்கிறேன்'
என்றவன் கூத்தாடும் (அந்த)

ச: தஞ்சம் புகுந்தவரைத் தாங்குவ தென்பாரம்,
தளராமல் உன் அன்பு வளருவதே தீரம்!
அஞ்சல் அஞ்சல் என்றே அபயமளித்தென் ஐயன்,
ஆனந்த ஜோதியில் தானுக்கிக் கொண்டாளும் (அந்த)

## 70. உனையே காதலித்தேன்

பரசு] [ஆதி

ப: உனையே காதலித்தேன்—பரம்பொருளே!
உருகியுருகிக் கண்ணீர்
பெருகிப் பெருகி நிதம் (உனை)

அ: தனையே நினைத்தோரைத் தானுக்கிக் கொண்டிடும்
தற்பரனே, தில்லைச் சிற்பரனே—அடியேன் (உனை)

ச: எத்தனையோ செல்வம் எய்தி யெய்தி யிழந்தேன்,
இருப்பதெல் லாமுனது
திருப்பத நிழ லொன்றே;
பித்துப் பிடித்துன் பெயர் பிதற்றுவ தைத்தவிரப்
பிழைக்க வழியறியேன்;
அழைத்தென்னை யாட்கொள்வாய். (உனை)

## 71. பிரிந்தினி வாழ்வேனே

ஆனந்தபைரவி] [ஆதி

ப: பிரிந்தினி வாழ்வேனே?—இனிப்பிறவிப்
பெருங்கடல் ஆழ்வேனே?—உயிர்க்கிறைவா (பிரி)

அ: கரந்துநிறைந்தென்னுள்ளே கார்மேக மின்னலைப்போல்
கண்டுங் காணுமலும் பண்டுமுத லிருந்தாய் (பிரி)

ச: என்னை நீ கைவிட்டால் பின்னெரு வாழ்வுண்டோ?
இவ்வுடல் சுமப்பதே எனக்கொரு தாழ்வன்ரே?
அன்னைபோல் அருளுடன் அன்பரைக் காத்திடும்,
ஆண்டவனே தில்லைத் தாண்டவனே உன்னைப் (பிரி)

## 72. பாரமெல்லாம்

சாவேரி] [சாய்ப்பு

ப: பாரமெல்லாம் வைத்தேன்—உன் பாதத்தில் (பா)
அ: ஆருயிர்க் குயிராகும் அப்பா நீ அகிலத்தை
அணுவெனத் தாங்கிடும் ஆற்றலைப் பார்த்து நான் (பா)
ச: இருவினை மூட்டையை இனிச் சுமக்கமாட்டேன்
கருவினை தவிர்க்க வுன் கருணையை விடமாட்டேன் (பா)
சந்தையும் கலைந்தது சரக்கெல்லாம் விற்றது
வந்த வரவையுந் தந்துவிட்டேன் ஐயா (பா)
கூப்பிடுந் துணைக்கினிக் கூட வருவாரில்லை
சாப்பிட்ட சத்திரம் காப்பாற்றும் வீடாமோ (பா)
போக்கு வரவு செய்யும் பொய்மனச் சுமையினைத்
தூக்க வலியில்லை ; தோன்றாத்துணை நீயே (பா)

## 73. யார் செய்த சூது ?

பந்துவராளி] [ஆதி

ப: யார்செய்த சூதையனே ?—நீ
என்முகம் பாராமல் உம்மென் றிருப்பதுவும் (யார்)
அ: பாரெல்லாம் புரந்திடும் பரமானந்த துரையே,
பரிவாகவே சற்றே உரையுன் மனக்குறையை (யார்)
ச: காமிராக்ஷஸி செய்த கைவேலைச் சூதோ
கட்டுக்கடங்கா நாத்தி கட்டிவிட்ட வாதோ ?
மாமியாய் அமுல்செய்யும் மமதையின் தீதோ ?
மச்சர மாகிய மைத்துனர் தூதோ ? (யார்)
குண்டுணி ராமன்சொல் கொண்டி யிதுவோ ?
குட்டிக் கலகஞ்செய் குப்பனின் சதியோ ?
அண்டை வீட்டுக்காரியின் ஆசைக்கண் வலையோ ?
அன்னிய மாயத்தில் அகப்பட்ட நிலையோ ? (யார்)

## 74. காண்பதெந்நாளோ

சுருட்டி] [ரூபகம்

ப: காண்பதெந்நாளோ—
கருணையான கடவுளன்பைப்
பூண்ப தெந்நாளோ—சோதி
புலர்வ தெந்நாளோ ? (கா)



அ: ஆண் பெண்ணுடை லானவுலகில்
ஆசாபாச நாச வலையில்
வீண் மயக்கில் விழுந்து விழுந்து
விழலுக் கிறைத் திடாது வாழ்வைக் (கா)
ச: அவலை எண்ணி உமியை யிடிக்கும்
அவல மனதினை
அங்குமிங்கும் அலைந்திடாமல்
அன்பிலே யிருத்தி
சவலைக் குழந்தை போலுன் மடியில்
தவழ்ந்து வந்துன் சுத்தசக்தி
அமிழ்தமுண்டு மாறிப்பிறந்து
அனவரதமுன் நினைவதாகிக் (கா)

## 75. காத்திருக்கின்றேன்

ஸ்ரீ]

[சாய்ப்பு

ப: காத்திருக் கின்றேன் சிவனே—உன்
காதல் பெருகியே கடுந்தவத்தால் உருகியே (கா)
அ: பார்த்துப் பார்த்துக் கண்ணும் பூத் தனுதினமும்,
பரமா உனைச் சேரும் வரமே வேண்டிநான் (கா)
ச: தக்கனின் செருக்கொழித்தாய்—நானும் வேள்வித்
தணல்குளித் தவதரித்தேன் ;
அக்கணங் கைலையிலே—நீயும்
ஆழ்ந்தனை அருந்தவத்தில்,
மிக்க வுள்ளன்புடனே உன் கருணையை
மேவிடப் பூசை செய்தேன்—நம்
பக்கம்வந் தம்பு விட்ட—மதன்செயல்
பாழ்படச் சுட்டெரித்தாய் ;
மனம் பிரியாமலே இனம் பிரிந்த மான்போல்.
அனவரதமும் என் ஆசை துடிதுடிக்கக் (கா)

## 76. எப்போது விடுதலையோ?

முகாரி] [திரிபுடை

ப: எப்போது விடுதலையோ?—வெள்ளி
இமயத்தில் விளங்கிடும் உமைமருவும் சிவனே (எப்)

அ: முப்புரங்களைச் சிறு முறுவலால் எரித்தோனே,
முயலகன் செருக்கினை முற்றிலும் அழித்தோனே (எப்)

ச: நாமரஸ மின்றித் தாமஸ மாயையில்
நாட்களைச் சூதாடி நலியவோ நான் பிறந்தேன்?
காமனையெரி நெற்றிக் கண்ணைத் திறந்தென்னைக்
கட்டிய தளைகளைச் சுட்டெரிப்பாய்—பரனே (எப்)

## 77. இரவும் பகலும்

எதுகுல காம்போதி] [அட

ப: இரவும் பகலும் முன் சரணாலயப்பணியில்
இருந்திடும் வரந் தருவாய் (இர)

அ: தருண மழைபோலென் தாகம் தணிக்கவந்த
தாஸர் தயாநிதியே, சாந்த குணபதியே (இர)

ச: தஞ்சம் புகுந்தவர் நெஞ்சக் கவலை தீர்க்கும்
சமய சஞ்சீவி யாவாய்;
பஞ்சகோசாதீத பரம துரியநிலை
பார்க்கத் துணை புரிவாய்;
அஞ்சும் அடங்கி யென்னுள் அறிவா யிருந்திடும்
ஆனந்தந் தந்தருள் ஞான சிகாமணியே! (இர)

## 78. உபதேசம் செய் அப்பனே

மணிரங்கு] [சாய்ப்பு

ப: உபதேசம் செய் அப்பனே—இந்த
உள்ளம் ஒடுங்கி யுன்னில் உள்ளபடி யிருக்க (உப)

அ: ஜபதப தியான சமாதி லயமடைந்தே
ஸஹஜ நிஷ்டை கூடியுன் சந்நிதியில் இருக்க (உப)

ச: ஜகமெல்லாம் அலைந்துமென் சஞ்சலந் தீரவில்லை;
சாத்திரக் கடலுமென் தாகந் தணிக்கவில்லை;



சுகமாக இனியுன்முன் சும்மா இருந்திடவே
சூட்சுமஞ் சொல்லிப் பரஞ் ஜோதி வழிகாட்டி (உப)
அன்புக் கடலே, உன்னை யன்றி யொருவரில்லேன்;
துன்பக் கடல் கடக்கத் துணை நீ, புணை நீயே
தென்பா லப்பனே, மோனச் சின்முத்திரை காட்டி
என்பால் இரக்கங் கொண்டே இப்படி இருவென்றோர்()

## 79. பரமனைச் சிந்தை செய்வோம்

யமுனா கல்யாணி] [ஆதி

ப: பரமனைச் சிந்தை செய்வோம்—ஒருமையுடன்
பரமனைச் சிந்தை செய்வோம். (ப)

அ: அரன் என்றும் அரி என்றும்
அயனென்றும் முத்தொழில்
ஆக்கி விளையாடும் அருட்பெருஞ் ஜோதியாம் (ப)

ச: வானத்தின் விரிவிலே வளரும் சூரியன் போலே
வையத்திலே வெள்ளி மலையின் மாண்பைப் போலே
மோனத்திலே—சுத்த—ஞானத்திலே—ஜீவன்
முக்தியிலே வளர்—சக்தி மஹேசனை (ப)

## 80. மனமுருகி

கேதாரகௌளை] [ஆதி

ப: மனமுருகி யழைத்தால் வருவானே—நல்ல
வரங்களைத் தருவானே! (மன)

அ: கனகசபையினிலே கால்வீசி நடமாடும்
கருணாகர மூர்த்தியைச் சரணாகதி யடைந்தே (மன)

ச: கட்டுங் கவலைகளும் கிட்ட வருவதுண்டோ?
காலனு மினிவந்து, வாலையாட் டுவதுண்டோ?
எட்டிக் கனியினையும் கட்டிமாம் பழமாக்கும்,
இந்திர ஜாலனை மந்திரப் பெயர்செல்வி
அந்தியுஞ் சந்தியும் சிந்தைசெய் தன்புடன் (மன)

## 81. வருந்தருணம் இதுவே

பிலஹரி] [ஆதி

ப: வருந்தருணம் இதுவே—அருட் பெருமான் (வ)
அ: தருண மழை போன்ற
தனிப் பெருங் கருணையாய் (வ)
ச: சுத்தசன் மார்க்கத்தில் இத்தல மெல்லாம் வாழ (வ)
போர்வெறிக் கொடுமைகள் பூண்டுடன் ஒழிந்திட (வ)
இருட்சாதி சமயங்கள் இன்றுடன் சென்றிட (வ)
அகங்கார மாயங்கள் அழிந்தருள் பொழிந்திட (வ)
அசுரபயம் விலகி அமரானந்தம் பொலிய (வ)

## 82. தில்லைக்கு வழி காட்டுவீர்

சங்கராபரணம்] [ஆதி

ப: தில்லைக்கு வழிகாட்டுவீர்—தெரிந்தபேர்கள்
தேசமெல்லாஞ் சுற்றி வேசற்றயர்ந்தேன் ஐயா (தி)
அ: எல்லையில்லா வுலகில் சொல்ல முடியாத
தொல்லைகள் பொறுத்துநான் சுதந்தரத்தை நாடினேன் (தி)
ச: ஞானக்குருடன் ஐயே-எனக்கொரு-நாதியில்லை அனாதி!
ஏனெனக் கேட்பான் ஒருவன்—அவனன்பே—
எனக்கொரு துணையிகத்தில்
தீனனுக் கிரங்கிடுவீர்—என்னை நல்ல-திக்கிலே நடத்திடுவீர்!
வானமுதம் போலுள்ளே—வந்துவந் தினித்திடும்—
ஆனந்த நடஞ்செய்யும் அருட்பெருமான் வாழும் (தி)

## 83. எங்கும் நிறைந்த

பைரவி] [ஆதி

ப: எங்கும் நிறைந்த பொருளே—பரமாத்மனே
எல்லார்க்கும் இன்பம் அருளே (எ)
அ: பொங்கும் உயிர்க்குயிராய்த்—தங்கும் சச்சிதானந்த
போதஸ் வரூபனே—வேத ஹ்ருதயனே (எ)



ச: ஞாலமெல்லா முன் சக்தி நாடகசாலை
நானுவினையெல்லாமுன் ஞானுமிர்தலீலை;
காலத்திலே ஊர் கோலம்வரும் உனது
காட்சியைக் கலை செய்யக் கருணை புரிவாயே (எ)

## 84. முன்னிலும் முன்னவன்

(தேவாரப்பண்—கொல்லி)

முன்னிலும் முன்னவன்; பின்னிலும் பின்னவன்;
என்னவன்; உன்னவன்; எங்குமே ஒன்றவன்;
உன்மனைக் கப்புறம் உள்ளபொன் அம்பலம்
தன்மனை கொண்டவன், தத்துவா தீதனே!

பன்னிலை யுலகினைப் பார்ப்பறப் பார்ப்பவன்;
உன்னலொன் றற்றவன் உன்னுதற் கானவன்;
தன்னிலை நின்றருட் சக்தியாம் ஆணையால்,
முன்னிலை யுலகிலே முத்தொழில் புரிபவன்!

பண்களாற் பாடுவோம், பணிகளாற் போற்றுவோம்;
எண்ணுவோம் ஈசனை; எண்ணறக் கூடுவோம்;
புண்களார் பிறவியைப் போக்கிடும் கடவுளைக்
கண்களாற் காணுவோம்; காதலாற் கூடுவோம்!

## 85. தில்லை நடராஜனே

பைரவி] [சாபு

ப: தில்லை நடராஜனே—சிவகாமி நேசனே
உன்னன்பல்லால்
இல்லை யெனக்கோர் யோசனை (தில்லை)
அ: அல்லும் பகலுமுன் ஆனந்த நடனத்தை
அகில மெல்லாங் காணும்...
அறிவெனக் கருளுவாய் (தில்லை)
ச: குஞ்சித பதநிழல் இருப்பேனே—அதைக்
கொஞ்சிக் கொஞ்சித் தமிழ் சுரப்பேனே!
அஞ்சலிக் கரத்தினல் ஆசிபெற்றுன் சக்தி
ஆடலில் அனுதினங்—கூடி மகிழ்வேனே! (தில்லை)

## 86. அபய கீதம்

தோடி] [ஆதி

ப: அபயம் அளித்தென்னை ஆண்டருள் ஆண்டவா (அப)
அம்மையப்பா சரணம்

அ: ஜபதப தியான சமாதியி லேலயித்த (அப)
ஜீவன் முழுதும்அருட் காவிய மாகிட

ச: வஞ்சக் கொடியவரின் நஞ்சப் பொருமையாலென்
மதி கலங்கா வுறுதி தருவாய்.
வெஞ்சினப் பகைவரின் வேக எரிமலையிந்
நெஞ்சைச் சுடாதநிலை அருளாய்
அஞ்சவரும் அரக்கர் மிஞ்சும் வசைகளாலென்
அமைதி கெடாமனந் தருவாய்,
தஞ்சம் அடைந்தேனுன்னைத் தாயிடம் சேயென
தாங்கிக் கவலை, துயர் (அப)
நீங்கத் துணை புரிவாய்

## 87. ஜீவாதாரம்

காமாஸ்] [ஆதி

ப: ஜீவா தாரம் ஆவாய்—ஞான (ஜீ)
தீப ஜோதி யீவாய்—தேவா

அ: காவாய் சாவா மருந்தே (ஜீ)
கருணை ரசமாம் விருந்தே—ஓம்

ச: தேனும் பாலும் கனியும்
தேவர் அமுதும் போலே
கானம் பொழிவாய் அருளே—என் (ஜீ)
காலம் அமரக் கவியாகிடவே

## 88. ஜீவப் படகை ஓட்டும்

ஆனந்தபைரவி] [ஆதி

ப: ஜீவப்படகை ஓட்டும் தேவ தேவனை நம்பி (ஜீவ)
சித்தங் கலங்கா திருப்போம்—மனமே!



அ: நாவாயிரம் எழுந்து, கூவிப் புரண்டலைந்து,
தாவும் வினைக்கடலில் மேவுங் கருணை கொண்டே (ஜீ)

ச: துக்கக் கடும்புயல்கள் எக்கிப் பொருதிடினும்,
திக்குத் திசையறிந்து, சுக்கானைத் திருப்பியே,
பக்குவ மாகத்தள்ளிப் பரிந்தருள் துறை சேர்க்கும்
பரம்பொருள் இருக்கையில், பயமில்லை, துயரில்லை! „

## 89. பண்ணுடன் பணியுடன்

தன்யாசி] [ஆதி

ப: பண்ணுடன், பணியுடன், பாவனு ரஸமுடன்
பரமனை யன்பு செய்வோம்—மனமே! (பண்)

அ: கண்ணுடன் கதிரெனக் கலந்துயிர்க் குயிராகும்,
கடவுளை இதயத்தில் நடமிடும் ஜோதியைப் (பண்)

ச: கான ரசாமிருதம் களிப்புடன் உண்டுநம்
கவலையை மாற்றிடுவோம்!
ஈனவிஷயங்களில் நானென் றகங்கரித்தே
ஏகிடாமல், ஆத்ம தாகமுடன் மனமே (பண்)

## 90. மருந்தொன்று

காம்போதி] [ஆதி

ப: மருந்தொன்று தாரும் ஐயா—என்
மனப்பேய் இணங்கி நல்ல நினைப்போ டுனைத்துதிக்க „

அ: வருந்தும் உயிர்க்கு ஞான
விருந்தா யிருந்துதவும் (ம)

ச: நாவுக்கினிய திவ்ய நாமந்தரு மருந்து,
நாட்டத்திற் பரஞ்ஜோதி காட்டுந் தனிமருந்து,
சாவா அமரநிலை மேவ வரு மருந்து,
சக்திக் கனல் வளர்க்கும் சச்சிதா னந்தமான (ம)
சின்மய விளையாட்டாய்ச் செகக்தைக் காட்டுமருந்து
சிந்தித்த வுடன்அட்ட சித்தி தருமருந்து,
என்மய வுயிர்களில் தன்மயங் காட்டிடும்,
ஏசு சுக போக மாகுந் திருவருளின் (ம)

## 91. நெற்றிக் கண்

மோகனம்] [ஆதி

ப: நெற்றிக் கண்ணைத் திறந்தேன்—அடடா காமா
நீறுபட்டுரு வழிந்தாய் (நெற்றி)

அ: சற்றும் பயமில்லாமல் தவத்தணலைச் சுடச்
சரந் தொடுத்தாய்-நெஞ்சின்-உரமென்னடாஹ,ஹா „

ச: விண்ணவர் அனுப்பிட வேகமாய் வந்தாய்;
விளக்கினைச் சாடிய விட்டில்போல் வெந்தாய்,
பண்ணிய தவத்திற்குப் பங்கத்தை நினைத்தாய்,
பாபவினை சுமந்தாய் போ போ அனங்கனே! (நெற்றி)

## 92. ஏனிப் பராமுகமோ?

நாதநாமக்கிரியை] [ஆதி

ப: ஏனிப் பராமுகமோ?—ஏழையிடத்தில்
என்னஉனக்குக் கோபமோ?—கருணைக்கடலே (ஏ)

அ: நான்செய்த பிழையென்ன?—நவின்றிடுவீர் சற்றே „

ச: பந்த விலங்குகளில் பட்டுக்கொள்ளாமலே
ஐந்தொழில் புரிந்திடும் இந்திர ஜாலனே (ஏ)
நேற்று வரையிலென்னைப் போற்றுவதாகச் சொல்லிக்
காற்றில் விடுத்துக் கம்பி-நீட்டவழி பார்க்கிறீர் (ஏ)
பிடித்துப் பிடித்தும் பாதம் வடித்து வடித்துக் கண்ணீர்
படித்துப் படித்தென் அன்பைக்-கொடுத்த பயனிதுவோ.

## 93. ஓம் சுத்த சாந்த யோகியே

ஸ்ரீ] [ரூபகம்

ப: ஓம் சுத்த சாந்த யோகியே—நமச்சிவாய (ஓம்)

அ: ஹேமகூட சிம்மா ஸனத்தில்
இருந்து தன்னை ஆளும் இறைவா (ஓம்)

ச: வீராசனம் வகித்தே—கற்-பூராக்கினி போலே
பூராலய மடைந்தாய்—உன்னைக்
கோரி வில்வம் வாரிப் பூசித்தேன் (ஓம்)



ஆதாரங்கள் மலர—சக்தி—அமுதமுண்டு வளர
போதானந்த சொரூபமாகப்—
பொங்கிப் பொலியும் சங்கரா ஹர (ஓம்)
அறிவாகிய ஒளியே—அருட் பரமானந்தத் தெளிவே
நிறைவா யுன்னைக் கலந்தெக் காலும்
பிரியா வரம் தருவாய் போற்றி (ஓம்)

## 94. பரிபூரணானந்த

யதுகுல காம்போதி] [ஜம்பை

ப: பரிபூர ணானந்த சுகவாரி தன்னை நான்
பருகும் ஒரு வரம் அருளுவாய் (பரி)

அ: பரிவான குருவாகிப் பசுபாச வினைதீரப்
பரிசித்துப் பதியறிவைத் தரிசிக்கும் பலனீந்து (பரி)

ச: தேகாத்ம பந்தமற மோகாதி தொந்தமற,
சாகாத கலைகண்டு, நோகாத நிலைவிண்டு,
யோகத்திலே, பரம போகத்திலே, சக்தி
வேகத்திலே ஹ்ருதய தாகந் தணிந்திடவே (பரி)

## 95. படித்த மூளை

சாரங்கா] [ரூபகம்

ப: படித்த மூளைச் சுமையா லுன்னைப்
பார்க்க லாகுமோ—பரமா (ப)

அ: வடித்த கண்ணும் குவித்த கையும்
மலர்ந்த உளமும் அருளு மின்றிப் (ப)

ச: குப்பைமேடு மேலுயர்ந்து கோபுர மாமோ?
குற்றமுள்ள நெஞ்சில் அன்பு குடியிருக்குமோ?
அப்பர்போல் கண் ணப்பர் போல
அடைக்கலம் புகுந்து, நீயே
ஒப்பிநல்கும் தொண்டு செய்து
நிற்பதன்றிக் கற்பிதமாம் (ப)

## 96. கண்ணுள்ளே

உசேனி] [ஆதி

ப: கண்ணுள்ளே கண்ணான கண்மணியைக் காணக்
காதல் பெருகு தம்மா—என் (கண்)

அ: பெண்ணுள்ளே பெண்ணாகி, ஆணுள்ளே ஆணாகிப்
பிரியத்தை ஊட்டியே உரிமைகொண் டாடிடும் (கண்)

ச: உள்ளத்தைத் தொட்டாலே,
"உள்ளேன்" என் றுரைக்கிறான்;
உலகினை நினைத்தாலே ஓடி மறைகிறான்;
கள்ளனை என்னுள்ளே துள்ளி விளையாடும்,
கண்ணனைக் காணாத கண்ணென்ன கண்ணாமே? (கண்)

## 97. பொன்னான திருமுகத்தை

கௌரிமனோகரி] [ஜம்பை

ப: பொன்னான திருமுகத்தைப் புவியெங்கும் பார்த்துனது
போதமாய் நிற்க வருளாய்—இறைவா (பொ)

அ: உன்னையா லெண்ணி, உன்னை மொழிபேசி
உன்னை வழிநின்றே மன்னா என் வாழ்வுய்யப் (பொ)

ச: கண்ணுளே பார்ப்பவனும் கருத்துளே நினைப்பவனும்
கரணத்தில் அறிபவனும் நீ;
பண்ணுளே ஓசை நீ. விண்ணுளே சக்திநீ
பரிசுத்த மேபரா பரமே சிதம்பரமே (பொ)

## 98. ஓர் கணம்

ஆரபி] [ரூபகம்

ப: ஓர் கணம் உன்னைப் பிரிந்து வாழேனே
ஒப்பில்லாத உயிர்த் தோழனே (ஓர்)

அ: ஆர் உனக்கிணை யாவார் உலகில்
அற்புத மாகிய சிற்பரா தீதனே (ஓர்)

ச: பிறப்பிறப்பில் லாத நித்தியா—உலகில் யாரும்
பேசிட உணராத சத்தியா!



பரப்பிரம்ம மான சுத்தனே—ஓம் ஓம் ஓம்
பரம துரிய சிகர ஜோதியே
பண்ணுக் கொலியென—கண்ணுக் கொளியென
எண்ணுக் குணர்வான—விண்ணவ னே நான் (ஓர்)

## 99. இதயக் கடலில்

பூபாளம்] [ரூபகம்

ப: இதயக் கடலில் உதய மானதே—அருள்
இரவி போலப் பரம ஜோதி (இதய)

அ: புதிய வாழ்வின் பூங்குழலுடன்
பொன் மயமான சின்மயமாக (இதய)

ச: குண்டலி யோகக் கொடியி லேறிக்
கொழுந்துறு சக்தி எழுந்து வீறி,
வெண்டாமரை அன்னத் துடனே
விளை யாடிடக் களை யாடிட (இதய)

## 100. சந்தேகம் ஏன்?

மத்தியமாவதி] [சாய்ப்பு

ப: சந்தேகம் ஏன் மனமே—நடராஜன்
வந்தருள்வான் தினமே (சந்)

அ: சிந்தையை அவனுக்கே
சிற்சபை யாக்குவாய்
தினகர ஜோதியாய்
மனதில்வந் தூக்குவான் (சந்)

ச: அந்தர ஓங்காரம் முழங்க—அவன்
அம்பொற் சிலம்படி தழங்க,
சிந்தையில் தேன்மாரி வழங்க—செய்த
தீவினைத் துன்பங்கள் அழுங்க,
திருத்தொண்ட ருக்கொரு திருத்தொண்டனாகவே
கருத்தொன்றி ஆளுவன்
நிருத்தமிடும் பெருமான் (சந்)

## 101. ஆனந்தக் கண்ணீர்

நாட்டைக்குறிஞ்சி] [ரூபகம்

ப: ஆனந்தக் கண்ணீர் வாராதோ—என்
அத்தா அன்பர் பித்தா, உன்னைச்
சித்தம் குளிரச் சிந்தை செய்தால் (ஆனந்)

அ: ஞானக் கனலில் உருகிப் பொழியும்
கான ரசத்தைப் பருகித் துதித்தால் (ஆனந்)

ச: தேனளாவும் சோலைக் குயில்கள்
சிவ மங்களம் பாட,
'தீம் தக' வெனத் திசை குலுங்கத்
தில்லை மயில்கள் ஆட,
வானி லாவை மருவித் தவழும்
மழலைத் தென்றல் போலே
மோன மான தியான சுகத்தில்
நானு நீயும் கூடிக் குழைந்தால் (ஆனந்)

## 102. சம்மதி

சௌராஷ்டிரம்] [சாய்ப்பு

ப: சம்மதி உனக்கே தந்தேன்—என்னை நீ
தழுவிக் கொள்வாய் வேந்தே—என் மனச் (சம்)

அ: எம்மத வாதியும் என்னை மயக்காமல்,
இன்பச் சுதந்தரப் பண்புடன் என் மனச் (சம்)

ச: ஆணவச் செருக்கின்கை அகப்பட்டு விழிக்காமல்,
ஆசைப் பிசாசுகள் அடியேனை வளைக்காமல்,
காணாத் தந்திரமாயக் கள்ளர் பறிக்காமல்,
கடவுளே உன்னை நான் கலந்து மகிழ்ந்திடச் (சம்)

## 103. எண்ணி எண்ணியன்பு

நாட்டை] [ஆதி

ப: எண்ணியெண்ணி யன்பு,பண்ணியுன் 'னருள்பெற்றேன்
எம்பெருமானே சிவனே—உனையெப்போதும் (எண்)



அ: கண்ணிலேன் மற்றோர் களைகணிலேன் ஐயா
புண்ணியா உன்சரண் பூம்புகலூர் அரசே (எண்)

ச: தொழுவாரின் உள்ளமே தூய கோயிலாய்க்கொண்டாய்
தொண்டரின் இடர்க்குலம் துண்டுபடக் கண்டாய்;
புழுவாய்ப் பிறக்கினும் யான் வழுவாமல் உன்னடியே
போற்றியுன் னருட்பணி ஆற்றுமின்பம் அருளாய்! (எண்)

## 104. போதும் போதும்

கேதாரம்] [ரூபகம்

ப: போதும் போதும், போதும் என்மனமே—எப்
போதும் சிவனை ஓதி யுணர்ந்தால் (போ)

அ: வாதும் வம்பும் வழக்கும் சழக்கும்
வளரும் புவியின் வாழ்க்கை யெல்லாம் (போ)

ச: தஞ்ச மளித்திடும்
குஞ்சித பாதத்தை
பஞ்சாக்ஷ ரத்தாலே
நெஞ்சி லுபாசித்தால் (போ)

## 105. மங்களமாய் வாழ்க!

சுருட்டி] [ஜம்பை

ப: மங்களமாய் வாழ்க—உலகெல்லாம்
வான்கருணை சூழ்க! (மங்கள)

அ: பொங்குக எங்கெங்கும் பொன்னும் பசுமையும்
போகமும் த்யாகமும் யோகமும் ஓங்கியே (மங்கள)

ச: கோர நிருதரின் குண்டுப் புகைகளும்,
போரும் பொறாமையும் பொய்களும் பொன்றவே;
வீரமும் அத்யாத்ம தீரமும் சாந்தமும்
பாரத சக்தி பரவிப் பொலிகவே! (மங்கள)
சாதி மத நிறச் சண்டை வளர்த்திடும்
பேத புத்தியின் பிழைகள் ஒழிகவே;
ஆதிப் பொருளின் அருட்பெருஞ் ஜோதியில்
ஆருயிர் யாவையும் ஓர்குல மாகவே (மங்கள)

## 106. நலமோங்கி வாழ்க!

[ஆதி

கமாஸ்]

ப: நலமோங்கி வாழ்க, வாழ்கவே—இவ்வுலகெலாம்
ஞானவொளி சூழ்கவே (நல)

அ: கலையுந் திருவுஞ் சக்திக்
கனலும் பெருகியே (நல)

ச: சண்டை சச்சரவின்றி, சாதிச் செருக்கின்றி,
சமரசக் கூட்டமாய் அமைதியுடனே ஒன்றி,
வண்டுகள் போலே—நல்ல
தொண்டுகள் புரிந்தன்பு
கொண்டு—பரமானந்தம்
கண்டு—திருவருளால் (நல)

சிதம்பர கீதம் முற்றிற்று

ஓம் சிவம்



# 2. தேவ கானம்

## 107. ஜீவ முரளியிலே

காபி] [ஆதி

ப: ஜீவ முரளியிலே தேவகானம் பொழிவாய்
தேஜோன்மயா னந்தனே—அனந்தனே (ஜீவ)

அ: பாவனா ரஸமுடன் பக்தி பரவசமும்,
பாடப் பாடத் தெவிட்டாப்
பண்ணமு தும்பெருக (ஜீவ)

ச: மன்னுயிர் வாழ்வெல்லாம் இன்னிசைப் பொழிலாகி,
மங்கலக் கனிவளம் பொங்கிக் குலுங்கிடவே,
உன்னத ஞானத்தில் 'ஓம் சுத்த சக்தி' யென்றே
ஊறித் ததும்பி வரும் பேரின்ப வெள்ளம்போல் (ஜீவ)

## 108. மானஸ சிவ பூஜை

கேதாரம்] [ரூபகம்

ப: மானஸசிவ பூஜை செய்குவோம்—சச்சி
தானந்தம் பெற (மான)

அ: ஊனாலய உள்ளத் துள்ள
ஞானா னந்தப் பொருளுக்கே—சதா (மான)

ச: புனித த்யானப் புனலி லாட்டிப்
போத சைதன்யம் சூட்டி,
தினமும் அன்பு மலர் சொரிந்து,
சித்தத்தை நிவே தித்து,

கனலும் ஆர்வத் தூபங் காட்டிக்
கருணை யுருவைப் போற்றி,
மனித வாழ்க்கை முற்றிலும் சுப
மங்கள ஹாரதி யாகவே (மான)

## 109. சூட்சுமஞ் சொல் ஐயனே !

நாதநாமக்கிரியை] [ஆதி

ப: சூட்சுமஞ் சொல்லையனே,
சுத்த சிவனே ! (சூட்)

அ: சாட்சியா யிருந்து நீ
காட்சி யுலகை யாளும் (சூட்)

ச: சுககன மோனியாய்ச் சும்மா இருந்தே நீ
அகந்தொறும் அகந்தொறும் அகமக மென்றாடும் „
துரிய மலை முடிமேல் தூங்கி யிருந்தபடி,
பரவியிவ் வுல கெல்லாம் பலவிளை யாடல் செய்யும் „

## 110. தீன தயாபரனே

கேதாரம்] [ஆதி

ப: தீன தயாபரனே—என் குறை தீர்த்த
திவ்ய க்ருபா கரனே ! (தீன)

அ: மான மில்லாது வாழ்ந்த
ஈனன் எனக்கும் சிவ
ஞானம் பழுத்த தேவ
கான சுகத்தைத் தந்த (தீன)

ச: புல்லேன் உன் புகழினைச்
சொல்லேன் பதி யறிவைக்
கல்லேன் கற்றவர் வழி
நில்லேன் பொல்லேன் எனக்கும்
நல்ல துணையாய் ஒரு
சொல்லைக் கொடுத்து மடத்
தொல்லை யெல்லாந் தவிர்த்த
தில்லைச் சபா பதியே (தீன)

## 111. ஏதுக்குக் கவலை ?

உசேனி] [சாய்ப்பு

ப: ஏதுக்குக் கவலை கொண்டாய்—பேதை மனமே
ஏனோ இப்படித் துவண்டாய் ?



அ: சாது ரக்ஷகனை ஜகதீசன் இருக்கையில்,
சஞ்சலங் கொண்டு நீ நெஞ்சழி வதுமேனோ ? (ஏது)

ச: பருவ காலம் போலே இருவினைப் பயன்களும்
பக்குவ மாகப்பல துக்கசுகங்க ளாகும் ;
வருவதெல்லாம் நன்மை பெறுவதற்கே ; வினை
அறுவதற்கே ; முக்தி யுறுவதற்கே-அறிவாய் (ஏது)

## 112. நில்லாதே போ பகையே

கானடா] [தேசாதி

ப: நில்லாதே போ பகையே—நின்றால் வரும்
நீலகண்டன் உதையே ! (நில்)

அ: செல்லா தினியுன் சேட்டை
சீறினால் வரும் சாட்டை (நில்)

ச: காட்டி விஷயசுகம் ஊட்டி மயக்குகளை,
மாட்டி பந்த வினையைப் பூட்டி மடச் சிறையில்,
நீட்டி யமபாசத்தை வாட்டிக் கெடுத்தாயென்னை (நில்)

கூடி முகமனுரை ஆடிப் பிறகுமெல்ல
ஊடி நல் லறிவினைச் சாடிப் பணம்பறிக்க
மோடிசெய் தென்னைச்சூறை ஆடும் காமப் பிசாசே—நீ „

ஏகன் அநேகன்வி வேகங் கொடுத்தான்—சிவ
யோகம் புரிந்து சுத்த போகம் புசிக்கப்—பரி
பாகம் அடைந்திடவே தாகங் கொண்டேன்-இனி (நில்)

## 113. அன்புச் சிகாமணியே

தோடி] [ஆதி

ப: அன்புச் சிகாமணியே—என்
அப்பாவுன் கருணையை
எப்போதுந் துதி செய்வேன் (அன்பு)

அ: செம்பொற் சபையில் வளர்
இன்பப் பரஞ்சுடரே (அன்பு)

ச: நாவார வுனைப்போற்றித் தேவாரம் பாடிய
நாயன்மார்க் கருள்செய்த நாதா, குஞ்சித பாதா,
ஜீவ ஜகத் ரக்ஷகன் ஆவாய் ; அடியே னுள்ளம்
பாவா லுன்னைப்பூசிக்க வாவா, தேவாதி தேவா ! („)

## 114. பாதமே துணை

காபி] [ரூபகம்

ப: பாதமே துணை—சிவ
பாதமே துணை (பாத)

அ: ஆதி சக்தியின்—பரஞ்
ஜோதி நாதனின் (பாத)

ச: காமம் வெகுளி கலக்க மான
கவலை நீங்கிக் கட்டு விலகி,
நாம ரசத்தைப் பருகிப் பருகி,
நமச்சிவாய ஓம் ஹர வென...
நயந்து நயந்து நவின்று நவின்று,
பயந்தெளிய நல் லபய மளிக்கும் (பாத)

## 115. உன் பாத காணிக்கையே

கல்யாணி] [சாய்ப்பு

ப: உன்பாத, காணிக்கையே—என்
உடலினில் இடங்கொண்ட நடன சிகாமணியே (உன்)

அ: அன்பு மிகுந்த வள்ளல் அரசரும் செல்வரும்
அள்ளி அள்ளிக் கொடுக்கும்
வெள்ளி மலர்க ளெல்லாம் (உன்)

ச: நிட்டையில் இருந்துன்னை நினைந்து நினைந்துருகி,
நிதமுன் பெருமையைப் பதம்பாடி மகிழ்கின்றேன் ;
கட்டிக் கரும்புதின்னக் கைக்கூலி வேண்டுமோ ?
கருணை ரசத்திற் பூத்த கான மலர்க ளெல்லாம் (உன்)



## 116. எல்லார்க்கும் பொதுவான

காம்போதி] [திரிபுடை

ப: எல்லார்க்கும் பொதுவான நிர்க்குண ப்ரம்மத்தை
இதயத்தில் வழிபடுவோம்—ஓம் (எல்)

அ: எல்லையில் லாவுலகம் எங்கும் உயிர்க்குயிராம்
இன்ப மயச்சுடரை அன்பு மலர் சொரிந்தே (எல்)

ச: சாதி மதங்கடந்த ஸர்வாத்ம ஸமரஸம்,
சத்திய நித்திய சச்சிதா னந்தமயம்,
பேத ரகிதமான ஜோதிப் பரம்பொருளைப்
பிரியாத தியானத்தின் உருவாகப் பாவித்தே (எல்)

## 117. ஓம் சச்சிதானந்தமே

பிலகரி] [ஆதி

ப: ஓம் சச்சி தானந்தமே—பரப்ரம்மமே
ஓம் சச்சிதா னந்தமே... (ஓம்)

அ: தாமஸ ராஜஸ சத்வ குணங்கடந்த
தற்பரமே, தில்லைச் சிற்பரமே, சிவமே (ஓம்)

ச: சாந்த சுககன சித் தாந்த சுத்தாத்வைத
சதஸத் விலாஸ மாகிச் சகல நிஷ்கள மாகி,
காந்தம் போல் உயிரினைக் கவர்ந்து கலந் திருந்தே
கண்ணைத் திறந்து தன்னைக் காட்டுங் கதிர்மணியே.

## 118. ஓங்கார சத்யஜோதி

பியாகு] [ஏகம்

ப: ஓங் கார சத்ய ஜோதி
சுத்த ப்ரஹ்மமே நம (ஓம்)

அ: ஓம் தத்ஸத் ஓமென் ருதி
வேத உண்மை ஓதும் பொருளே (ஓம்)

ச: வானும் புவியும் கானும் மலையும்
வாழுயிர்கள் யாவிலும்,
தானே தானாய்த் தழைக்கும் சச்சி
தானந்தமய ஞானப் பொருளே (ஓம்)

## 119. பக்தி பரவசத்தால்

மயூரத்வனி] [ஆதி

ப: பக்தி பரவசத்தால் பாவன மாவோம்
பரமானந்தமே பெறுவோம் (பக்தி)

அ: சுத்த முக்த நித்ய சத்ய ஸமரஸன்மேல் (பக்தி)

ச: ஹரி ஹர மஹா தேவ அல்லா பரம பிதா
முருகா ஸத் குருவென்றே உருகி மனங்குவிந்த („)
நாமரூ பங்கடந்த ஞானப் பரஞ்ஜோதியை
"ஓம்தத்ஸத் ஓம்" என்ற
உண்மை மந்திரம் ஓதி (பக்தி)

## 120. சித்தம் இரங்கி

கல்யாணி] [ஆதி

ப: சித்தம் இரங்கியுன் பக்திப்ர ஸாதம் அருள்
தில்லை நட ராஜனே! (சித்த)

அ: மத்தலை தயிர் போலென் மனம் அலை கின்றதே,
மாய வலைகளை மருவத் துடிக்கின்றதே! (சித்த)

ச: ஐம்புலக் கணைகளைத் தடுத்தே—ஆசை
ஆணவத் திற் குதை கொடுத்தே,
நம்பும் அடி யாரை அடுத்தே—எந்
நாளும் உன் அன்பினை மடுத்தே,
நெஞ்சக் கமலத்திலுன் செஞ்சிலம் படிவைத்தே,
நிருத்தமிட் டுன்புகழைப் பொருத்தமா யிசைத்தே,
அஞ்சல் எனுங்கரத்தைக் கொஞ்சிச் சிரங்குவித்தே
அத்தா நான் காணவுன் அம்பலக் கூத்தினைச் (சி)

## 121. சிவ சிவ என நினை

ரீதிகௌளை] [ரூபகம்

ப: சிவ சிவ என நினை மனமே
ஜீவன் முக்தி யனுபவமாம் (சிவ)

அ: பவஹர பசுபதி கிரீச
பரம யோகி ஓம் மஹேச (சிவ)



ச: கிலிகொண்டு பகை வீடும்—உன்
கேடுகளெல்லாம் வாடும்
புலியினும் கொடுங் காமம்—உன்னுட்
புகலின்றி வெந்து போமே (சிவ)
அகவிருளிடர் வாடும்—உன்னை
அருட்சுடரொளி நாடும்
இகபர சுகம் கூடும்—பொல்லா
எமபயஞ் சொல்லா தோடும்
சங்கர சசி தர ஜடாதர
கங்காதர கௌரி மனோகர (சிவ)

## 122. புன்னகைப்பது நீயோ

வசந்தா] [ஆதி

ப: புன்னகைப்பது நீயோ?—அந்தப்
பொருளெனக் கோதாயோ? (புன்ன)

அ: தன்மய ஒருமையைப் பன்மையாய் விளக்கிய
தந்திரக் கோலங்கொள் இந்திர ஜாலனே (புன்ன)

ச: சூரிய சந்திரரில்—வானச்—சுடர்மணிப் பந்திகளில்,
நாரியர்நாணத்திலே-ஆசைநல்குகண்கோணத்திலே
ஆரிய மின்னலிலே—பூவின் அழகான பின்னலிலே...
வட்ட வுலகெங்கும்
எட்டியெட்டிப் பார்த்து,
வாயைத் திறக்காது
மாயஞ்செய் ஈசனே! (புன்ன)

## 123. ஒருவா, என் இறைவா!

நடபைரவி] [ரூபகம்

ப: ஒருவா, என் இறைவா,
ஒப்புயர் வில்லாத பரமா! (ஒரு)

அ: திருவார் சிதம்பரத்தில்—வாழும்
தேஜோன்மயமான பொருளே!
அருவாய் அருவுருவாய்—ஸத்
குருவாய் வரும் கருணைக் கடலே! (ஒரு)

ச: சுத்தானந்த மலைமேல் ஒளிர்
தூண்டா மணிவிளக்கே...
அத்துவாவைக் கடந்த துரியா
தீத மான ஆதி சிவனே (ஒரு)

## 124. பசுபதியைத் துதி

ஸரஸ்வதிமனோஹரி] [தேசாதி

ப: பசுபதியைத் துதி செய்குவோம்,
பசுபாசம் நீங்கிப் பரமபா வனமாம்! (பசு)
அ: அசையா தமர்ந்தே அருளாடல் புரியும்
அஷ்ட மூர்த்தியினை இஷ்ட சித்தி பெறப் (பசு)
ச: தாச மார்க்கமான சரியை புரிந்து,
சத் புத் திரன் போல் அப்பனை வணங்கி,
நேசமார்க்க யோக நிலை கூடிநின்றே
நின்மல ஞானமாம் சன்மார்க்கம் பயின்றே (பசு)

## 125. சிரஞ்சீவியா யிருப்போம்

நாட்டைக்குறிஞ்சி] [ஆதி

ப: சிரஞ்சீவியா யிருப்போம்—சீறுங் கூற்றையுஞ்
சிவமந்தி ரத்தால் ஜெயிப்போம்—மனமே (சிர)
அ: அறம்பொருள் இன்பமும், அத்யாத்ம சித்தியும்,
அமரா னந்த சக்தியும் அடைந்து ஜீவன் முக்தராய்ச் (சிர)
ச: கதிரவன் சுடரினைக் கடும்புயல் அணைக்குமோ?
கரையில்லாக் கடலினைக் கட்டுகள் பிணைக்குமோ?
பதியுடன் பொருந்திய பரமசுத் தான்மாவை,
பாசநாச வினைகள் பற்றி வருத்திடுமோ? (சிர)

## 126. எல்லாம் சிவமயம்

அ—[illegible]] [ரூபகம்

ப: எல்லாம் சிவமயம், எல்லாம் சிவமயம்,
எல்லாம் சிவமயமே...
எல்லாம் சக்திமயம், எல்லாம் சக்திமயம்,
எல்லாம் சக்திமயமே... (எல்)



அ: கல்லெல்லாம் புல்லெல்லாம் காடு மலையெல்லாம்
உள்ளும் புறமுமிங் குள்ளதும் இல்லதும் (எல்)
ச: விண்ணின் சுடரெல்லாம், மண்ணின் மலரெல்லாம்,
கண்ணுறுங் காட்சி யெல்லாம்,
எண்ணி யெண்ணியித யத்தில் 'இது' வென்
றுணர்ந்திடும் இன்பமெல்லாம்,
புண்ணிய ஞானப் புலவர் அறிந்த
பொருளும் அருளு மெல்லாம்,
வண்ண வுருவும் அருவும் குருவுமாய்
வாசாம கோசர மாக விளங்கிடும்! (எல்)

## 127. ஈசனே சக்தி விலாச

ஹரிகாம்போதி] [தேசாதி

ப: ஈசனே சக்திவி லாச மஹேசனே (ஈச)
அ: தாசரின் நேசனே தானவர் நாசனே (ஈச)
ச: அன்னையே, அப்பனே, அன்பருக் கன்பனே,
உன்னையே நம்பினேன், என்னுயிர் நாதனே (ஈச)
சூதுபொ றாமைகள் வாதுசெய் யாமலுன்
பாதுகாப் பீந்தருள் சாதுஸம் ரக்ஷகா (ஈச)
பொய்யகங் காரத்தைக் கொய்தடி வேருடன்
மெய்யுணர் வோங்கிய தெய்வஜீ வனமருள் (ஈச)

## 128. நஞ்சையுண்ட கண்டனே

பலஹம்ஸ] [ஆதி

ப: நஞ்சை யுண்ட கண்டனே—உனைத்
தஞ்ச மென்று நம்பினேன் (நஞ்சை)
அ: அஞ்சு தேவர் வாழவே
நெஞ்சிரங்கி நீலவேலை (நஞ்சை)
ச: என்மனக் கடலிலே எழும் விஷச் சரக்கெலாம்,
கன்மவாச னையெலாம், கருணையால் விழுங்கியே,
உன்நினை வமுதமாக ஊறிநிற்க நீயருள்,
ஓம்நமச்சி வாயஓம், ஓம்நமச்சி வாயஓம்! (நஞ்சை)

## 129. சச்சிதானந்த ஸ்வரூபனே

ஸ்ரீ] [ரூபகம்

ப: சச்சிதானந் தஸ்வ ரூபனே—சதாசிவனே (சச்சி)

அ: இச்சா ஞான க்ரியா சக்தி ஈஸ்வரி சமேதனாக
முச்சகமும் படைத்துக் காத்து
முடித்துத் தோற்றும் மூலப்பொருளே (சச்சி)

ச: சுத்த மனத்திற் சொலித்திடும் பரஞ் ஜோதி வெள்ளமே,
பக்திகொண்ட உள்ளந் தன்னிற் பாடும் வள்ளலே...
சக்தி யனலைத் தூண்டி ஆறு—சக்கரங்களைத் தாண்டி,
முக்தி நிலையாம் ஸஹஸ்ரா ரத்தில்
நித்திய சுத்த சுதந்தர
சத்திய சித்தி யளித்தருள் (சச்சி)

## 130. நிர்விஷயனாய்

ஸஹானா] [சாய்ப்பு

ப: நிர்விஷ யனாய்ச் சற்றே நிர்விகல்ப சமாதி
நிலைத்தே நான் சுகிப்பதென்றோ—பரமாத்மனே (நிர்)

அ: சர்வாந்தர் யாமியே சத்குரு சாமியே
சஹஜநிஷ்டைக்கென் உள்ளம்
விகசிக்கச் செய்தருள் (நிர்)

ச: காமக் குரோதலோப மோகாந்த காரமாம்
காட்டைநீ தாண்டு வித்தாய்;
நாம ஜபதப தியான மோனத்தாற் சிவ
ஞானத்தைத் தூண்டு வித்தாய்...
தாமதி யாமலென் தாகந் தணித் தென்றுந்
தன்மயா னந்தத்தில்
உன்மய னாகியே— (நிர்

## 131. காலனை உதைத்தவனே

தோடி] [ஆதி

ப: காலனை உதைத் தவனே—காமனை நெற்றிக்
கண்ணினால் எரித்தவனே—அரனே (கால)



அ: மூல குண்டலி சக்தி பாலை ஸஹஸ்ரா ரத்தில்
முக்கனல் எழுந்திட
முயங்கும் சக்தி சிவனே (கால)

ச: கனவிலும் நனவிலும் எனைப்பிடித்து வருத்தும்
கவலையை உதைத் தெறிவாய்;
மனமாயை யாகிய மதியிலியைத் தவக்
கனலினால் எரித்திடுவாய்;
புனித முனிவர்க்கன்று புகன்ற சிவஞான
போதத்தை எனக் கருள்வாய்...
இனிதுசிற் சக்தியால் கனிந்து கனிந்துன்னுடன்
இரண்டறக் கலந்திடும்
வரந்தனை வேண்டினேன் (கால)

## 132. தாகந் தணித்தருள்

மத்யமாவதி] [தேசாதி

ப: தாகந் தணித் தருள்வாய்—எனது மனத்
தாகந் தணித் தருள்வாய் (தாக)

அ: சோக மோகங்களில் அநேக காலம் சுற்றிச்
சோர்ந்தேன் உனது பாதம்
சார்ந்தேன்; எனைக் கண்பார்த்தே (தாக)

ச: ஆத்ம ஞான தீரர்கள் சாத்வீக சேதனம்
பூத்துப் பருகுகின்ற பூரணா னந்தத் தேனால் (தாக)

## 133. காவாய் ஜகதீசனே!

முகாரி] [சாய்ப்பு

ப: காவாய் ஜெகதீசனே—எனைக் கண் பார்த்து,
காவாய் கயிலாசனே! (காவாய்)

அ: நாவாலே யினித்துயர் நவில முடியாது
தேவாதி தேவா—உன்—சித்தம் இரங்கியுடன் (காவாய்)

ச: இருளினில் ஏங்குகின்றேன்—வழிகாணாமல்
இன்னும்பின் வாங்குகின்றேன்;
அருளினைக் கூவுகின்றேன்—உன்பாதத்தில்
அங்கண்ணீர் தூவுகின்றேன்,

கவலைக் கடலை விட்டுக்
கரையேற்றி, மனமான
சவலைக் குழந்தைக்குன்
சன்மார்க்கங் காட்டியே (காவாய்)

## 134. அமரானந்த வாரியே

நாட்டை] [ஆதி

ப: அமரா னந்த வாரியே—சுத்த போகத்தில்
அமர்ந்த அர்த்த நாரியே (அமரா)

அ: எமபயந் தீர்க்குங்கா மாரியே—என் நா முழங்கும்
என்றும் நமச்சிவாய பேரியே—ஓம் (அமரா)

ச: அஞ்சல் என் றருளும்பூங் கரனே-தோன்ருத் துணையாய்
அடியாரைக் காக்கும்சங் கரனே!
பஞ்சகோ சா தீதனே—ஆணும் பெண்ணுமாய்
பாரினில் ஆடும் பூத நாதனே! (அமரா)
பொங்குந் தனுகரண புவன் போகத்தைத் தந்தே
வெங்குல மலவினை மங்க உபாயஞ் செய்தே,
எங்களை மேலேற்றி இனிய திருவருளால்
மங்கல வாழ்வுதருங் கங்காதரனே சரண் (அமரா)

## 135. அந்தரங்க மெல்லாம்

வாசஸ்பதி] [ஆதி

ப: அந்தரங்க மெல்லாம் அறியாயோ?—இன்னும்
வந்தெனக் குறுதுணை புரியாயோ?—சிவனே என் (அந்த)

அ: தந்திமி தோமெனத் தண்டை சலசலக்கத்
தாண்டவம் ஆடிடும் ஆண்டவனே நீ யென் (அந்த)

ச: ஓயாத கவலையை ஓட்டி—அருள்
ஒளியினை யென்கண்முன் காட்டி,
வாயாடும் வாசலைப் பூட்டி—மௌன
மந்திரத் தியானத்திற் கூட்டி...
தூயநல் லறிவினைத் தூண்டியென் னுள்ளத்தில்
துள்ளிவி ழாதினித் துயர்மனங் கள்ளத்தில்,
தாயான கருணைக்கை சேயெனை நடத்திடச்
சத்திய சுத்த சன்மார்க்க நிலைபெறும் (அந்த)



## 136. கனவிலாகிலும் வந்து

நீலாம்பரி] [திரிபுடை

ப: கனவி லாகிலும் வந்தென் கலிதீர்க்க லாகாதோ?
கனகசபை அப்பனே! (கனவி)

அ: மனதுசஞ் சலப்பட்டு மருந்தொன்றும் அறியாமல்,
தினமிறைவா வுனையே
தெண்டனிட்டுக் கூவினேன் (கனவி)

ச: குஞ்சித பாதத்தைப் பிடித்தேன்—என்
குறைகளைச் சொல்லிக் கண்ணீர் வடித்தேன்;
தஞ்சமென் றுன்கை யென்னை விடுத்தேன்—சிவ
தாரக நாமமே படித்தேன்;
வஞ்ச முயலகனை வாட்டிய பாதனே,
வாத வூரார்க் கொளி காட்டிய வேதனே,
நஞ்சை நயந்தமரர் நலிவுதீர் நாதனே,
நானு னென வுள்ளே நடமிடும் போதனே! (கனவி)

## 137. பரிபக்குவம் தருவாய்

ஸ்ரீ] [தேசாதி

ப: பரிபக்குவம் தருவாய் பரனே!
பாராமல் உலகைப் பார்த்திருக்கும் சாந்த (பரி)

அ: அரிதான இந்த நரஜீவ னத்தை
அமர ஜீவனமாய் ஆக்கி யின்புறவே (பரி)

ச: சித்த யோகவரர் தத்வமஸி யென்னும்
திருமந் திரத்தின் பொருளை யுணர்ந்தே
சுத்தஜோதி ஜீவன் முக்த னுகி யென்றும்
சுதந்தர மான பதந்தனில் வாழப் (பரி)

## 138. அத்தா அருளில்லையோ?

ஸஹானு] [திரிபுடை

ப: அத்தா அருளில்லையோ?—என்னைத்தடுத்
தாள மனம் இல்லையோ? (அத்தா

அ: பித்தா என்றவர்மீதும் பிரியம் வைத்த கருணைச்
சித்தா—பரமபரி சுத்தா—அனாதி முத்தா (அத்தா)

ச: சொல்ல முடிந்ததெல்லாம்
சொல்லிச் சொல்லி யலுத்தேன்;
தொல்லைசெய் கிறேனென்று
சோதிக்க நினைத்தாயோ?
வில்லாலும் கல்லாலும் வீசி யடித்தவரை
வேண்டி, முன்னே தோன்றி,
ஆண்ட தயாநிதியே! (அத்தா)

## 139. ஏனோ தாமதித்தாய்?

சித்தரஞ்சனி] [ஆதி

ப: ஏனோ தாமதித்தாய்?—ஈசனே
எனது முறைகளை அனுதினங் கேட்டுமே (ஏனோ)

அ: ஞானோ தயகுரு வரகமுன்வந்தே—பர
மோன சாதனஞ் சொல்லி முத்திநெறி காட்ட („)

ச: மனமோ சஞ்சலச்சேய்—ஆசையதனை
மயக்கிடும் வஞ்சகப்பேய்;
சினமே என்பெருநோய்—ஆணவம் அதைத்
தினமும் வளர்த்திடுந் தாய்;
இந்தவா ளரக்கர்கள்
வெந்துநீ றாகக்கனல்
சிந்து நெற்றிக்கண் காட்டி
வந்தென்னை யாட்கொள்ள (ஏனோ)

## 140. கல்லோ உனது நெஞ்சம்?

ஸஹானா] [தேசாதி

ப: கல்லோ உனது நெஞ்சம் ஐயா?—என்னைக்
கடைக்கண் பாராயோ கொஞ்சம்? (கல்லோ)

அ: அல்லும் பகலும் ‘நம சிவாய’, அபயம் என்றே
சொல்லிச் சொல்லிக் கெஞ்சும்
சுத்தன்மே லேனோ வஞ்சம்? (கல்லோ)



ச: அப்பனே என்றடி பற்றும் அடியார்க்குன்
அன்பை மறைப்ப தாமோ?
தப்பிதம் பலகோடி செய்த மகனையும்
தந்தை வெறுக்கப் போமோ?
இப்பரு வுடலிலே என்னுயிர்க் குயிராகி
இதயக் குகையில் இருப்பாய்;
அறிவனே, நான்வைக்கும்
முறைகளைக் கேட்டெனது
குறைகளைத் தீராயோ?
இறைவனே, இறைவனே! (கல்லோ)

## 141. என்னைக் கை விடுவாயோ?

சிம்மேந்திர மத்திமம்] [ஆதி

ப: என்னைக்கை விடுவாயோ—விட்டாலும்
உன்னடி விடமாட்டேன்! (என்னை)

அ: மின்னுடல் வாழ்விலே என்னென்ன நேர்ந்தாலும்
உன்னருட் செயலென்றே இன்னலைச் சகித்தேன் ()

ச: துட்ட மனக்குரங்கை எட்டிப் பிடித்திழுத்தே,
துள்ளல் அடக்கி நாளும்
மெள்ள மெள்ளப் பழக்கி,
நட்ட திருவடியில் கட்டி யொழித்துவிட்டு,
நமச்சிவாயஓம் என்றே
நம்பி யிருக்கும் அன்பன் (என்னை)

## 142. மன்னித்து மறந்திடுவாய்

மத்யமாவதி] [ஆதி

ப: மன்னித்து மறந்திடுவாய்—என்பிழைகளை
மாறப் புரிந்திடுவாய்—சிவனே (மன்)

அ: அன்னையே, அப்பனே, உன்னைச் சரண்புகுந்தேன்;
அடித்தது போதும் இனி எடுத்தெனை ஆளுவாய் ()

ச: நானொரு முரட்டுப் பிள்ளை—என்னால் உனக்கு
நாளும் பெரிய சள்ளை;

மானமில் லாத மடையன்—உன் வார்த்தையை
மதிக்காது கெட்ட நடையன்;
ஈனனேனும் உனது ஞான வரமளித்தால்
எனது குறைகளெல்லாம்
இரவிமுன் பனியாமே (மன்)

## 143. அருணோதயம் வருமோ?

ஆரபி] [ஆதி

ப: அருணோதயம் வருமோ? என் வாழ்க்கையும்
ஆனந்த நிலை பெறுமோ?—சிவகுருவே (அரு)

அ: இருளகந்தை மாயையில் ஏங்கி ஏங்கித் தவித்துன்
அருளுதயத்தைத் தினம் ஆர்வமுடன் கூவினேன் ()

ச: ஆதாரத் தாமரைகள் அலர்ந்து சிவங் கமழ,
ஆயிர விதழ்ப்பூவில் அமரத்தேன் பருகிட,
மேதினி யெங்குமுன் ஜோதிமுகங் காண
வேதப் பொருளின்அனு பூதி நலம்பெறவே (அரு)

## 144. காலடித் துகள் பெரு

முகாரி] [சாபு

ப: காலடித் துகள்பெருக் கசடன் எனக்குமுன்
கடைக்கண் இரங்கிடுமோ? (காலடி)

அ: மாலடி யாலளந்த மண்ணிலும் விண்ணிலும்
மமதை பிடித்தலையும்
மடையன் எனைப்போ லுண்டோ? (காலடி)

ச: நானே கடவுளென்று நாக்கினை உருட்டுவேன்;
நாமாதி சாதனம் ஏமாற்றும் புரட்டென்பேன்;
காமாதிக் கள்ளரைக் கைகட்டித் தாங்குவேன்;
கம்பளி என்றெண்ணிக் கரடியை வாங்குவேன்-உன்()

## 145. காத்திருக்கின்றேன்

சாமா] [ஆதி

ப: காத்திருக்கின்றேன்—என் ஐயா
கடை வாசலில்—ஏழை (காத்தி)



அ: நாத்திக உலகென்னை நகைக்க
நண்பரும் பகைக்க—பொறுமையாய்க் (காத்தி)

ச: அகங்காரச் சேவகர் அரற்ற
அடிமையென் றெனைச் செல்வர் மிரட்ட,
சகமாயை வலைவீசி மருட்ட—சுற்றும்
சாதிப் பொருமைகள் வெருட்ட—
குண்டுணி நாய்பின்னே குலைக்க—கடுங்
கோபப் புயலும் வந் தலைக்க,
பெண்டுகள் எனைப்பரி கசிக்க—இந்தப்
பேய்க்கூத்தெல்லாம் மிகச் சகித்தே—ஐயா
பெரிய மனது செய்து
பிரிய முட னொருநாள்
'வருக' வென் றழைத்திடும்
ஒருமொழி கேட்கவே (காத்தி)

## 146. என் முகம் பார் ஐயனே

காபி] [ஆதி

ப: என்முகம் பாரையனே—உனையன்றி
என்துணை யாரையனே? (என்)

அ: பொன்முகத் துரைகளின் வன்முகங் கண்டுவாடி...
உன்முகங் கண்டிட ஓடி வந்தேன் தேடி (என்)

ச: பொய்ப்புல வழியிலே போந்துபோந் தேமாந்தேன்...
பூத வுலகின் குண பேதங்களால் அயர்ந்தேன்...
மெய்ப்பொரு ளின்பமே துய்த்திட விரும்பிநான்
மேவினேன் உன்னடிச் சேவக னாகவே (என்)

## 147. கடைத்தேற வேண்டும்

செஞ்சுருட்டி] [ரூபகம்

ப: கடைத் தேற வேண்டும் ஐயனே—உன்
கருணை யாலே (கடைத்)

அ: மடத்தனமாகத் திரியும் மனத்தை
மடக்கிப் புலனை ஒடுக்கி நானும் (கடைத்)

ச: வெறி பிடித்த வேங்கை போலே
விம்மும் அகந்தையைக் கம்மென் றடக்கி,
குறிகுணமற்ற அறிவை உள்ளே
கூடிக் கவலைப் பேயைச் சாடி,
கோதி லாத ஜோதி யான
ஆதி யேயுன் போதமுண்டு (கடைத்)

## 148. எப்படி யானறிவேன்?

அசாவேரி] [சாய்ப்பு

ப: எப்படி யானறிவேன்—உன் மாயத்தை
என்னென் றியம் பிடுவேன்? (எப்படி)

அ: செப்படி வித்தைபோலே செகமெல்லாம் தோற்றி நீ
செய்வதெல்லாம் செய்தும் செய்யாத ரகசியம் („)

ச: சிறிதினும் சிறிதாகிப் பெரிதினும் பெரிதாகித்
திரிபில்லா வியல்பாகித் துரிய பரம்பொருளாய்,
அறிவினுக் கறிவாகி, ஆருயிர்க் குயிராகி,
ஆதாரா தீதனும் அருட்பெருஞ் சோதியே (எப்படி)

## 149. எண் சாண் உடம்பு

ஹனுமதோடி] [ரூபகம்

ப: எண்சாண் உடம்பென்னும் குடும்பம்—அதில்
எத்தனை ஆயிரம் இடும்பை—சிவனே! (எண்)

அ: பெண்சாதியாம் மானஸி—அவள்
பெரிய படு ராக்ஷஸி—ஐயா! (எண்)

ச: ஐம்புலக் கதவை உடைத்தே—என்
அறிவினைக் கொள்ளை யடித்தே,
வம்பு செய்யும் சேய்கள்—என்
வாயைப் பிடுங்கும் பேய்கள்—ஐயே! (எண்)

ஆத்திரச் சுற்றத்தார் நாத்திக வாதிகள்
ஆளைச் சுருட்டிடும் ஆஷாட பூதிகள்...
காத்தருள், கலி தீர்த்தருள்—என்
கலக்கந் தீரக் கருணை பூத்தருள்! (எண்)



## 150. கவலை நீங்க

சாயாதரங்கிணி] [ஆதி

ப: கவலை நீங்க ஒரு கருணை யில்லையோ?—என் (கவலை)

அ: பவவினை களிலே பட்டுப்பட்டு நாளும்
பரித விக்குமுயிர் பரிபாக மெய்திக் (கவலை)

ச: சத்தும் அசத்துமாம் சகலான்மா மாற
சத்குரு வாகவே தயைசெய்து வந்து,
முக்தியின்பந் தரும் பத்தி யின்பந் தந்து
மும்மலத்தைப் போக்கி
மூடனேனும் ஆளாய்க் (கவலை)

## 151. எப்படிக் கூடுவேன்?

கண்டா] [திரிபுடை

ப: எப்படிக் கூடுவேன்? எங்கே தேடுவேன்?
இறைவா, இறைவா, இறைவா—உன்னை! (எப்)

அ: இப்படி நாளுமே செப்படி வித்தை காட்டிக்
கற்பனை யுலகிலே கண்கட்டி யாட்டினால் (எப்)

ச: காலையிரவி நெற்றிக் கண்ணெனவே காண்பேன்;
கடியரவையும் கொற்றைச் சடையனென்றே பூண்பேன்;
மாலையிலே அந்தி வண்ணன்வந் தான் என்பேன்;

மணியிர வென் சாமி
அணிபுலித் தோலென்பேன்;
மனக்கவிக் கனவிலே
மருவிய உருவன்றி,
உனக்கினுந் தயவில்லை
தனிப்பெருங் கருணையே! (எப்)

## 152. கண்ணாரக் காண்பது

கமாஸ்] [ஆதி

ப: கண்ணரக் காண்பதெப்போ?
கனக சபையி லாடும்—எனது துரைராஜனைக் (கண்)

அ: எண்ணி எண்ணி யிங்கே
ஏங்கி யேங்கித் தவித்தே
ஏகாங்கி யாகிச்—சிவ
மோகங் கொண்டவென் னுள்ளம் (கண்)

ச: போதசத் குருவாகப் பொருந்திப் பெருந்துறையில்,
வாதவூ ரடிகளை வாழ்வித்த ஜோதியைக் (கண்)
திருவாச கந்தரும் பொருளிதென் றருளொளி
மருவி மறைந்த மணி வாசகர் போலவே நான் (கண்)

## 153. ஆசையைத் தீர்ப்பாய்

ஜயநாராயணி] [ஆதி

ப: ஆசையைத் தீர்ப்பாய் பரமா—என்பே
ராசையைத் தீர்ப்பாய்! (ஆசை)

அ: மாசிலாப் பூரண மாதவ சித்தியால்,
தேசத்திலே தெய்வ தீரரை ஆக்கிடும் (ஆசை)

ச: உனதுவிண் குடைநிழல்
உயிர்க்கும் ஜீவர்களெல்லாம்,
உள்ளான்ம நேயராய்
உள்ளத்திற் கலந்துன்னை
எனதுன தென்ப தின்றி
எல்லாமுன் உடைமையாய்
இன்பச்சிற் சபையினில்
அன்புடன் வாழ்ந்திடும் (ஆசை)

## 154. ஹரஹர சம்போ

ரவிசந்திரிகா] [ஆதி

ப: ஹரஹர சம்போ சிவகுரு நாதா,
ஆட்கொள்ள லாகாதா?
ஆட்கொள்ள லாகாதா?

அ: இரவுடன் பகலும் முறையிடும் மகனின்
இருவினை மாறவே
அருள் புரி யாயோ? (ஹர)



ச: அஞ்ஞானம் போக ஆணவஞ் சாக
அகந்தனி லிருந்தே
உகந்ததைப் புரிந்தே
விஞ்ஞான கலனாய் விளங்கிட நானும்
வேதசைவம் ஓதுகின்ற
சாதனங்கை கூடவே (ஹர)

## 155. தஞ்சம் தஞ்சம் உன்னடி

கேதாரம்] [ரூபகம்

ப: தஞ்சம் தஞ்சம் தஞ்சம் உன்னடி
சத்குரு நாதனே (தஞ்)

அ: அஞ்சல் அஞ்சல் என்றோர்
செஞ்சொலால் என்னுளம்
பஞ்சகோ சாதீத ப்ரம்மத்தைக் காட்டினை (தஞ்)

ச: அத்தனே சுத்தனே அத்யாத்ம போதனே
ஆனந்த நாயகனே,
நித்திய முத்தனே தத்துவா தீதனே
நின்மலச் சின்மயனே,
தத்வமஸி யென்னும் அத்வைதா னுபவ
சித்தனே சக்தனே
சிற்றம்ப லத்தனே (தஞ்)

## 156. அல்லும் பகலும்

நாதநாமக்ரியை] [திரிபுடை

ப; அல்லும் பகலு முன் செல்வத் திருவடியில்
அமுதுண் டிருக்க வருளாய்—பரம்பொருளே (அல்)

அ: சொல்லுக் கடங்காத ஜோதிப்ரம் மானந்த
சொரூப சாக்ஷாத்காரம் அருளும் குருநாதனே ()

ச: காணக்காண உன்னைக் கவலைமலை கரைந்து
கதிர்முன் பனி யாகுதே,
தீனர் மயக்கந் தீர்க்கும் ஞான சஞ்சீவியே,
ஜீவன் முக்தியை வேண்டி
தியானமலர் தூவியே (அல்)

## 157. கைவிடாதே

சங்கராபரணம்] [ஆதி

ப: கைவிடாதே துரையே—உன்னையன்றி
கதியெனக் கார் இறையே? (கை)
அ: பொய்யனாகிலும் உன்பேர் புகன்று புகன்று நிதம்
மெய்சிலிர்த்துப் பணிந்தேன் ஐயாஉன் அடிமைநான் ()
ச: முற்றிலும் உலகினைச் சுற்றிச் சுற்றி யலுத்தேன்;
மோக தாக சோக போகசுகமும் பார்த்தேன்.
பற்றுவ தினியுன்றன் பற்றன்றி மற்றில்லேன்
பார்வதி ரமணா என் ஆர்வத்தைக் கூறினேன் (கை)

## 158. சிற்றம்பலத்துரை

கரகரப்பிரியா] [ஆதி

சிற்றம்பலத் துரையைக் கண்டேன்—என்
சிந்தை குளிர முன்னே நின்றேன்
முற்றும் எனைமயக்கிப் பற்றிக்கொண்டதவன்
மோஹம்—சுத்—தோஹம்!

நெற்றி விழிநெருப்பைக் காட்டி—என்
நீசக் கவலைகளை ஓட்டி,
கற்றதெல் லாம்மறக்கக் கற்றுக்கொடுத்தான்—சிவ
காமம்—திரு—நாமம்

தனித்த கயிலையிலே யிருப்பான்—அவன்
தமிழின் அமுதமுண்டு குதிப்பான்—
எனக்கும் தனதுசொந்தக் குலத்தில் இடங்கொடுத்த
ஈசன்—அன்பர்—நேசன்

அனைத்தும் அறிந்ததவ யோகி—வினை
யாடிக் களிக்கும் சுத்த போகி
இனித்த சிவக்கனலாய் இதய குகையிலெங்கும்
இருப்பான்—அருள்—சுரப்பான்!



## 159. மயங்காதே

ஆனந்தபைரவி] [ஆதி

ப: மயங்காதே மனமே—தோற்றத்தில் (மயங்)
அ: தயங்கித் தயங்கிப்பல சாகஸங் காட்டியே
தாவியுன்னைப் பிடிக்கும் சஞ்சல மாயத்தில் (மயங்)
ச: பாடியும், ஆடியும், ஊடியும், கூடியும்
பந்தனை செய்து சுகந்தனைப் பறித்தபின்,
மோடிசெய் தோடிடும் மூர்க்க விலங்கை நம்பி
முத்திகொடுக்கும் சிவ பக்தியை மறந்துநீ (மயங்)

## 160. எழுந்திரு நிஜ மனிதா

பரசு] [ஆதி

ப: எழுந்திரு நிஜ மனிதா—உள்ளத்தினின்றே (எழு)
அ: அழுந்திருள் அகன்றது; செழுந்திரு நகையுடன்
அருணன் எழுந்து ஞானக் கிரணம் பரப்பும்வேளை (எழு)
ச: காமமோகினியினை நாமஜபத்தால் ஓட்டி,
கலங்கும் புத்தியை உண்மை துலங்கும் அறிவால் தேற்றி,
தாமத மாயை கெட, ஓம் சுத்த சக்தி யென்னும்
தாரகம் கொண்டாத்ம தீர வீர சூரனாய் (எழு)

## 161. சுத்த பரமாத்மன்

அடாணா] [ரூபகம்

ப: சுத்த பரமாத்மன்,
சோதி சொரூபன் அபேதன் குணாதீதன் (சுத்)
அ: சக்தி சதாசிவன் சத்குரு நாரணன்
அத்தன் அம்மை யப்பன்
அல்லா யகோவா ஓம் (சுத்)
ச: நெஞ்சக் கோயிலிலே—வளர்
நித்தியா னந்த னவன்
அஞ்சு மடங்கி யறிவான யோகிகள்
ஆவியின் ஆவியாய் மேவி யுணர்வாகும் (சுத்)

## 162. வாது செய்வதேன்?

தேனுக] [ஆதி

ப: வாது செய்வதேன், வம்பு மனமே—தர்க்க (வா)

அ: மேதினியிங்கே மெய்யோ பொய்யோ என்றே (வா)

ச: உடலுள்ள மட்டும் உலகுண் டுனக்கும்
உடல் வந்த பயன் உணர்ந்து துணிந்துன்,
கடமை காத்துப் பலனைக் கடவுளுக்கே தந்து
கவலை யற்ற ஜன்ம கர்ம முக்தி யின்றி (வா)

## 163. யோகியை

நாதநாமக்ரியை] [ஆதி

ப: யோகியைக் கண்டேன்—பரிபூரண (யோ)

அ: தேகியவன் சுத்த போகியவன்—சிவ
தாகியவன்—தன—தாகிய சுதந்தர (யோ)

ச: ஓங்கிய வானம்போல், ஒளிமணிச் சுடரைப்போல்
ஓடும் அருவிபோல் பாடும் குழலைப்போல்
தாங்கும் மலையைப்போல் தூங்கும் சஹஜநிஷ்டை
நீங்காச் சுட ரெனவே நிலவும் பரிபூரண (யோ)

## 164. பொன்னொளிர் மேனி

பிலகரி] [ஆதி

ப: பொன்னொளிர் மேனி—கொண்டான்—பரி
பூரண ஞானி யவன் புருஷோத்தமன் (பொ)

அ: சின்மயத் தீச்சுடர் என்ன மகாசக்தி
திவ்விய குண்டலி செங்கதிர் வீசிடும் (பொ)

ச: உள்ளும் புறமும் உயிரும் கரணமும்
ஓங்கார ஜோதியை நீங்காது, பேரின்ப
வெள்ளம்போல் வாழ்பவன் வேதவடிவான
வித்தகன் சுத்த சமத்துவ சித்தனும் (பொ)



## 165. சகஜ நிஷ்டையிலே

ஸ்ரீரஞ்சனி] [தேசாதி

ப: சகஜநிஷ்டையிலே சுகமா யிருப்பாய்
சகவிகார மின்றி சாட்சி ஜீவனே (சகஜ)

அ: அகமாயை யின்றி ஆராய்ந்து பார்த்தே
அகம்ப்ரம்மம் என்னும் அனுபவா னந்தமாம் (சகஜ)

ச: இருவிகாரப் புயல் எற்றி மோதிடினும்,
இமயமலை போல இதய சாந்தியிலே,
ஒருவிகார மின்றி உறுதியா யிருப்பாய்;
ஒன்றுங் குறையில்லை, நின்றபடி நின்ருல் (சகஜ)

## 166. போ போ ஜகன்மாயையே

பியாகடை] [ரூபகம்

ப: போபோபோ ஜகன் மாயையே—கிட்டவராதே
பொய்மனத்தின் சாயையே (போபோ)

அ: 'தோதோ' வென் ருல் மீதேறித்
தோளை யொடிப்பாய் நீ
தோழன்போல் வந்தென்னை
வாழவொட் டாதடிப்பாய் (போபோ)

ச: தின்னக் கொடுப்பதுபோல் அன்னத்தி லேபிடித்
தெருமண்ணைப் போட்டிடுவாய்;
அன்னைபோல் வந்துபின் அரக்கியாய் என்னைப்பேர்
ஆபத்தில் மாட்டிடுவாய்;
சிங்காரச் சேட்டைகள் காட்டி நடிப்பாய்;
சிக்கிய மூடரின் உயிரைக் குடிப்பாய்;
தங்கக் கரத்தினுல் தட்டிக் கொடுப்பாய்;
தடிகொண்டு பின்னவர் தலையை யுடைப்பாய் (போபோ)

## 167. அரட்டொன்று போட்டு

தன்யாசி] [ஆதி

ப: அரட்டொன்று போட்டிந்த முரட்டு மனப்பேயனை
அடக்கிடுவாய் அப்பனே (அர)

அ: வறட்டு வனுந்தரத்தை வளநக ரென்றிவன்
புரட்டுக் கவியெழுதிப் பொய்க்கதை புனைகின்ருன் (அர)

ச: கட்டிக் கரும்பிதென்றே எட்டியைத் தருகின்ருன்;
கற்ருழையைக்கட்டி முத்தமிடச் சொல்கிருன்;
மட்டித் தடியருடன் மனைக்குள்ளே வருகிருன்;
மலடிக்குச் சீமந்த மலர்களை முடிக்கிருன்! (அர)
பெண்ணெனப் பொன்னெனப் பிரியத்தைக் காட்டுவான்!
பிடிபட்ட மாந்தரைப் பேயென வாட்டுவான்;
கண்ணிலே பொடிதூவிக் கந்தர்வ லோகங்கள்
காணெனப் புலிநரிக் காட்டிலே ஓட்டுவான் (அர)

## 168. விட்ட வழி

தோடி] [ஆதி

ப: விட்டவழி செல்கிறேன்—உன்னிச்சை (வி)

அ: சுட்டுப் பொசுக்குகின்ற துன்ப வனுந்தரத்தில்
துணையின்றி, மனமூன்றி இணையற்ற தோழனே (வி)

ச: சோறின்றி உன்பெயர் சொல்லிப் பசியாறி,
சோமனின்றிக் குழந்தை யாமென மாறியே
ஆறில்லா ஊருக்கிங் காகாசமே கதிபோல்
ஐயா நின் அன்பையே மெய்யாக நம்பி நீ (வி)

## 169. சதா மௌனி

மத்யமாவதி] [ஆதி

ப: சதா மௌனி யாயி ருந்தால்
சலன மேன் மனமே?—நீ (சதா)

அ: நிதானமாய் நினைத்து நினைத்து
நினைப்பி லாத நினைக் கலந்து (சதா)

ச: அகங்காரங் கிளம்பி டாமல், அமைதியைக் கைவிடாமல்,
ஆசைப்புலன்கள், அறியும் அறிவை நாசஞ் செய்தி டாமல்,
சகவிவகார வம்பை யெல்லாஞ் சக்கை யென்றுபக்கமொதுக்கி
சத்திய நித்திய வத்துவைப்
புத்தியில் வைத்து ரமித்து நீ (சதா)



## 170. பரிபூரணம் அருள்வாய்

முகாரி] [தேசாதி

ப: பரிபூரணம் அருள்வாய் பரனே!
பாரிலே யோக தீரனுக வாழப் (பரி)

அ: அரிதாகிய நரஜீவனையே
அமரஜீவ னுக்கி ஆனந்தம் பெறவே (பரி)

ச: பரமாத்ம சேதனமற்ற ஜீவன்
பதராகும்; அது பயிராகுமோ?
சிரமான ஞான சித்த சுத்தனுகித்
தேகமும் தேகியும்
சிவபோக மெய்தும். (பரி)

## 171. சுகம் எது சொல்?

சங்கராபரணம்] [ஆதி

ப: சுகம்எது சொல் மனமே? நித்திய மான
சுகம் எது சொல் மனமே? (சுகம்)

அ: 'சகஞ்சுகம்' என்கிற சஞ்சல மாயையோ?
'அகம், அகம்' என்றுள்ளே
ஆடிடும் வாய்மையோ? (சுகம்)

ச: அலைபோல் எழுந்துவிழும் அரசியல் ஆட்சியோ?
அஹம்ப்ரம்ம சேதனம் அடைந்த சுயாட்சியோ?
நிலையில்லாப் பரத்தையின் விலையின்பம், இன்பமோ?
நின்னைப் பிரியாச் சிவ நேசமே யின்பமோ? (சுகம்)
கனதனச் சுமைகளால் மனதமைதி தருமோ?
கழுதைக்குப் பொதியேந்திக் கால்வலி தீருமோ?
எனதுன தெனப்போர்செய் குணதொந்த விகாரமோ?
என்றும் அமரநிலை நின்ற சாக்ஷாத் காரமோ? (சுகம்)

## 172. பந்தம் விட்டாலே

ஆனந்தபைரவி] [ஆதி

ப: பந்தம்விட்டாலே சுகமே—அதிலே சிக்கி
பாழாகாதே அகமே... (பந்தம்)

அ: எந்தெந்த உறவினர் சொந்தங்கொண் டாடினாலும்
தந்திர மாயவர் தன்னலம் சாதிப்பார் (பந்தம்)

ச: சாதி முறைகளைத் தங்கத்தால் அளப்பார்கள்;
சலியாது கொடுத்தாலும் ஒழியாது கேட்பார்கள்,
வேதசாஸ்திர மெல்லாம் வீதிக்குச் சொல்லுவார்;
வீட்டிலே சன்மார்க்க
விதிகளைக் கொல்லுவார் (பந்தம்)

வெள்ளி நடமாடினால் வெண்ணகை காட்டுவார்;
வெறுங்கையைக் கண்டதும் விரைந்து கம்பிநீட்டுவார்;
கள்ளக் கும்பிடு போட்டுக் காரியம் சாதிப்பார்;
கண்டால் காமாட்சிநாயக்கன்
கதையை ஆமோதிப்பார் (பந்தம்)

## 173. மறந்தாயோ உலகே

சக்ரவாகம்] [சாய்ப்பு

ப: மறந்தாயோ உலகே—பரம்பொருளை (மற)

அ: பிறந்து பிறந்து சாகும் பிணவுட லுருக்களை
விழுந்து விழுந்து போற்றி வீணுக்கே ஆளாகி (மற)

ச: எனதியான் என்கின்ற இருமாப்புக் கோட்டையில்,
இந்த உலகைக் காக்க இறங்கிவந் தோம் என்றே,
தனகன வானகித் தனக்கொரு மதஞ்செய்து,
சாகோ மென்றே மண்ணும் ஜகஜாலங் களை நம்பி (மற)

## 174. அப்பா உன்னை நம்பினேன்

நாட்டக்குறிஞ்சி] [ஆதி

ப: அப்பா உன்னை நம்பினேன்—எனையாண்டருள்
அப்பா உன்னை நம்பினேன் சரணம் சரணம்—ஐ
யப்பா உனை நம்பினேன்

அ: தப்பேது செய்தாலும் சாமீ என்னை மன்னித்துன்
தயவினுக் காளாக்கித் தாங்கி யருள் மலை
யப்பா உன்னை நம்பினேன்—சபரிமலை
யப்பா உனை நம்பினேன்



ச: நோய்நொடியாலும் மனப் பேய்தருந் துயராலும்
நுடங்கி நின் கருணையில் இடம்பெறத் தவிக்கின்றேன்
தாயன்பு காட்டி யிந்தச் சேயனை ரட்சிப்பாய்
சாமியே சரணம் சபரிமலை வாழும்— (அப்பா)

## 175. சிரிப்புத்தான்

ஷண்முகப்ரியா] [ஆதி

ப: சிரிப்புத்தான் வருகுதையே—உலகைக் கண்டால்,
சிரிப்புத்தான் வருகுதையே (சி)

அ: எரிப்பினை வைத்துள்ளே இனிப்பாகப் பேசியே
எத்துக்கடையாய் வாழும்
பித்தர் கூட்டத்தைக் கண்டால் (சி)

ச: பல்லையிளித்துக்காட்டும் பகட்டிற்குக் கொட்டுவார்;
பசியெனும் ஏழையைப் பரிவின்றித் திட்டுவார்;
செல்வங் கொள்ளையடித்துச் சிறையிலே பூட்டுவார்,
திருடர் மிரட்டினாலே திறவுகோலை நீட்டுவார்! (சி)

பரம்பொருளறிவினைப் பயின்றிடக் கூசுவார்,
பல்லுக்கும் செருப்புக்கும் பணங்களை வீசுவார்
வரந்தர வேண்டியே நிரந்தரம் அழுவார்கள்,
வாய்மையாய் முயல் என்றால்
வள்ளென விழுவார்கள் (சி)

நாமே சகலமென்று நாடகம் ஆடுவார்,
நாலுதாசரும்பின்னே நாமாவளி பாடுவார்!
ஏமாளிகளை யேய்க்கும் கோமாளிக் கூத்துக்கள்
எத்தனை எத்தனை பித்துலகத்தில் அந்தோ! (சி)

## 176. எத்தனை கோணலடி

பிலகரி] [ஆதி

ப: எத்தனை கோணலடி—ஏழை மனமே (எத்)

அ: பித்துக்கொண்டு குடித்த பெரியபேய்க் குரங்குபோல்
கத்திக் குதிக்கின்றாய் கண்தலை தெரியாமல் (எத்)

ச: பூப்போல் அணைத்துக் கொண்டால்,
தீப்போலச் சுடுகின்ருய்;
பொய்யினைக் கண்டித்தால், பொறுமை யிழக்கின்ருய்;
தாய்ப் பாலுக்கு விரோதம், தப்பாமல் புரிகின்ருய்;
தங்கமே வா என்ருல் தளுக்காக மறைகின்ருய் (எத்)

## 177. ஒன்றே பரம்பொருள்

நாதநாமக்கிரியை] [ஆதி

ப: ஒன்றே பரம் பொருளாம்—பல
உலக விளையாடல் அதனருளாம்-உண்மை (ஒன்றே)

அ: நின்ருெரு நிலையிலே நீளுயிர்க் குயிராக
நீக்கமறக் கலந்து போக்கு வரவு மற்ற (ஒன்றே)

ச: அரனென்றும்—நாரணனென்றும்—குரு
பரனென்றும்—பிரமனென்றும்,
அல்லா யஹோவா வென்றும், அம்மை அப்பனென்றும்
எல்லாரும் தொழுதேத்த வல்ல சுயம்பிரகாசம்! („)

## 178. ஊருக்குப் பாரமாய்

துஜாவந்தி] [ஆதி

ப: ஊருக்குப் பாரமாய் வாழேனே—நான்
உழைத்துண்டுன் பணிசெய்யத் தாழேனே! (ஊரு)

அ: பாருயிர்த் தொகுதியாய்ப் பரவி விளையாடும்
பரமா, பொதுநல வரமே அருளுவாய்! (ஊரு)

ச: ஊனுடல் பூண்டுயிர் உள்ளநாள் வரையிலும்,
ஒவ்வொரு மூச்சையும் செவ்விய செயலாக்கி,
மோனக் கலப்பை கொண்டு, ஞான வுழவு செய்தே,
முத்திப் பயிர் விளைக்கும் சக்தி யெனக்கருள்வாய்!

உலகெல்லாம் நலம்பெற
ஊட்டி, வறுமை யோட்டிப்
பலனையுன் மலரடி
பக்தியாய் வைத்திடுவேன் (ஊரு)



## 179. ஐயா யாருெரு வீரஸந்யாசி

எதுகுல காம்போதி] [சாய்ப்பு

ப: ஐயா யாருெரு வீரஸந்யாசி—யென்
அருட்பசி தீராயோ?—முகம் பாராயோ? (ஐயா)

அ: துய்யா பொன்னம்பலம் வாழ்-துரையே உன் வாசலில்
துட்டுக்குக் கப்பறை தட்டி வரவில்லை (ஐயா)

ச: அன்னக் காவடி யில்லை; ஆண்டி மடமில்லை;
அழகான மடத்தாய்க்கும் ஆசைப் படுவதில்லை;
மன்னுயிர்க் குலமெல்லாம் உன்னருட் குலமாக்க
வல்லமை வேண்டினேன்
தில்லையின் வள்ளலே! (ஐயா)

காசுபணங்களை வீசியெறிந்து வந்தேன்;
காமமெல் லாம் சிவ காமமொன்றே எந்தாய்!
மாசற்ற நின்பொது மன்றினில் ஒன்றியே,
மன்பதை வாழ்ந்திடும்
அன்பதை நல்குவாய்! (ஐயா)

## 180. ஓரிடம் தாராயோ?

வீரவசந்தம்] [ஆதி

ப: ஓரிடம் தாராயோ?—பரமா (ஓரிடம்)

அ: போரிடுங் கோள்பொய் பொருமைத் தொல்லையின்றி
புண்ணியர் போற்றிடும்
பொன்னுன தில்லை மன்றில் (ஓரிடம்)

ச: தன்னலப் புலிகளும், தந்திர நரிகளும்,
பொன்னடி யார்களும் பொழுதை வீணுக்காமல்,
உன்னடி யாருடன் உனக்கே நான் ஆளாகி,
உன்புகழே பாடி அன்புசெய் தின்புறவே (ஓரிடம்)

## 181. ஞாலமெல்லாம் உனது

தேவகாந்தாரி] [திரிபுடை

ப: ஞாலமெல் லாமுனது நாமரூபவிகார
நாடக மாகக் கண்டேனே—இறைவா (ஞால)

அ: காலத் திரைகள் கட்டிக்—கர்ம குண தொந்தக்
கதைகளை நவரஸஞ் சிதைவற நடித்திடும் (ஞால)

ச: அன்புளக் காதலால் இன்பமயக் காட்சிகள்
ஆயிரம் காட்டுகின்ருய்
பின்பு கவலைகளால் துன்பக் கண்ணீரையே
பெருக்கியேன் வாட்டுகின்ருய்?
நண்பர் பகைவரென்றே, புண்படும் போர்வினை
நாளுநீ மூட்டுகின்ருய்;
கண்பார்த் திருக்கையிலே திண்ணெனச் சாவெனும்
பறைகொட்டித் திரையிட்டுத்
தரைவிட்டு மறைக்கின்ருய் (ஞால)

## 182. தியாகம் கீதா சாரமே

பிலஹரி] [சாய்ப்பு

ப: தியாகம் கீதா சாரமே—கர்மபல
தியாகம் கீதா சாரமே (தியாகம்)

அ: சோகமோக பந்த தொந்தங்களை விடுத்து,
வேகங்களை யடக்கி யோகயுக்தனுய் வாழும் (தியாகம்)

ச: இதய பரமாத்மனை எப்போதுமே யெண்ணி
இயற்றுந் தொழிலை யவன்
இனிய பூஜையாய்ப் பண்ணி
உதயகல்யாணி போலே உள்ளுப சாந்தமாய்
உத்தம பக்தஜீவன்
முக்தனுய் வாழ்ந்திடும் (தியாகம்)

## 183. சுகவழிதனை யறி மனமே

காபி] [ஆதி

ப: சுகவழி தனையறி மனமே—அதைத்
தொடர்ந்துநில் அனு தினமே (சுக)

அ: தகவழி யாதுசுதர்மத்தைப் பேணுய்,
சமரஸ சன்மார்க்க சாதனம் பூணுய் (சுக)



ச: கல்வியைத் தினந்தினங் கருத்துடன் வளர்த்திடு;
கற்றவழி நடந்து சொற்றவ ருதிரு;
செல்வக்கைத் தொழில்களைச் சேமமாய்ப் பயின்றிடு;
தேச நலத்திற்கோர் சேவையை முயன்றிடு! (சுக)

உடலினை ஒடுக்காதே; உலகினை வெறுக்காதே;
உற்றவ ருக்கியன்ற உதவியை மறுக்காதே;
கடவுளை மறக்காதே; கடமையைத் துறக்காதே;
காற்றையுங் கதிரையும் போற்ரும லிருக்காதே (சுக)

புண்ணியச் செயல்களைப் பண்ணப்பின் வாங்காதே;
புல்லரின் கொடுமையைப் போக்காது தூங்காதே
திண்ணிய தீரனுய்த் தியாகபுத் தியுடனே
செய்வன செய்திடின் செயமுனைத் தாங்குமே (சுக)

புலன்களை யடக்கிநீ பொதுவழி நின்றிடு;
பூரண யோகியாய்ப் புவியினை வென்றிடு;
பலன்களிற் பற்றின்றிப் பணிகளைப் புரிந்திடு;
பார்வையுள் ளாக்கியே பரமனை நினைத்திடு. (சுக)

## 184. சித்தாந்தம் இதுவே

பைரவி] [திரிபுடை

ப: சித்தாந்தம் இதுவே—உலகமெல்லாம்
சிவமய மென்பதுவே (சித்)

அ: அத்தன் என் ஆண்டவன்—ஆனந்த நடராஜன்
அடியார்கள் அன்பினுல் அனுபவித் தோதிய (சித்)

ச: கரும்பிலும் கனியிலும் நிரம்பிய ரசம்போலே,
கண்களுக் கொளி காட்டும் விண்மணிச் சுடர்போலே,
அரும்பினுள் மணம் போலே, விரும்பும் உயிர்க்குயிராய்
அங்கங்கே அதுதுவாய்த் தங்கி யருள்புரியும்,
மங்கள ஜோதியிற் பொங்கிய ஞானமாம் (சித்)

## 185. கருணுகரனுன குருநாதன்

பூபாளம்] [சாய்ப்பு

ப: கருணுகர னுன குருநாதன் வருகின்ருன்;
கண்விழித் தெழுந்திரு மனமே! (கருணு)

அ: அருணோதயம்போலே கிரண ஜோதியழகன்,
அன்பருக் கினிதாகும் அருளுதயந்தரக் (கருணு)

ச: சித்தந் தெளிந்திடச் செகவிருள் அழிந்திட,
சீவ மலரிலே சிவமணந் தழைத்திட,
சுத்தானந்த ஞானச் சுகநிலை யளித்திட,
ஜோதி சுதந்தர போத முணர்ந்திடக் (கருணு)
சாதிமதநிறச் சண்டைகள் ஒழிந்திடச்
சமரஸ சாதனம் அமரநிலை தர,
ஆதி பரா சக்தி அருளுடை நாயகன்
ஆண்டவன்—ஐந்தொழில்—பூண்டவன்—ஆனந்தத்
தாண்டவன்—உலகுய்ய—வேண்டியே யித்தினம் (கருணு)

## 186. அன்பு வரந் தருவாய்

பேகடா] [ஆதி

ப: அன்புவரந் தருவாய்—என்னப்பனே
ஆனந்த சத் குருவே! (அன்பு)

அ: உன்பாதம் பற்றிநான்
உலகிற்கு நலஞ்செய்யும் (அன்பு)

ச: அன்னிய மின்றிநான் உன்னுடன் ஒன்ருகி
மன்னுயிர்க் கின்னுயிர் மன்னநீ யென்றுணர் (அன்பு)
எல்லாம் சிவனருள், எல்லாம் சிவன் செயல்,
எல்லாம் சிவமயம் என்று தொண்டுசெய்யும் (அன்பு)

## 187. சஞ்சலந் தீர்த்திடுவாய்

தனுஸரி] [ஆதி

ப: சஞ்சலந் தீர்த்திடுவாய்—சிவனே
சஞ்சலந் தீர்த்திடுவாய் (சஞ்)

அ: நெஞ்சிலே சுத்தாத்ம நெருப்பினை ஊக்கி,
வஞ்சகப் புலன்களின் மாயத்தை நீருக்கிச் (சஞ்)

ச: ஈனக் கவலை வழி மானங்கெட் டலைந்திடும்,
எதிர்வரும் பொருளின்மேற் கதுமெனப் பாய்ந்திடும்,
நானெனக் கிளம்பியே ஞானத்தை மறைத்திடும்
நச்சு மனதை உன திச்சையி லடக்கியே (சஞ்)



சத்திய வாக்குடன். சாதுக்கள் ஆதரவும்,
சமரச நிலைபெறும் சன்மார்க்க சாதனமும்
சுத்த பரம யோக சித்தியும், அத்யாத்ம
சுதந்தர வாழ்க்கையும் இதமுட னுதவியே (சஞ்)

## 188. வைராக்கியம் தருவாய்

சுருட்டி] [ஆதி

ப: வைராக்கியம் தருவாய்—சித்த
வைராக்கியம் தருவாய் (வைரா)

அ: தைரிய மாகமன வைரியை வென்ருளும் (வைரா)

ச: சாட்சி நிலையினிலும், காட்சி நிலையினிலும்,
சகவிளை யாடலின் சூட்சி நிலையினிலும்,
ஆட்சிசெய் தனைத்தையும் ஐந்தொழில் நடத்திடும்
அப்பனே நீயெனுட் செப்பிய படி செய்ய (வைரா)
நானெனும் ஆணவம் நாணி வணங்கிட,
நாளு விகாரமதி தானுனக் கிணங்கிட,
ஏனென்றும் எதுவென்றும் எங்கென்றும் இல்லாமல்,
இருந்தபடி யிருந்து, பொருந்தியுன்னுடன் வாழும் ()
வஞ்சக் கவலை விட்டுத் தஞ்சம் புகுந்து மனம்
வாக்கிலுஞ் செயலிலும் வைத்துன்னை நேசித்து,
நெஞ்சக் கிளியெப்போதும் அஞ்செழுத் தோதியே,
நிம்மதி யாகிய நித்தியா னந்தம் பெற (வைரா)

## 189. உன்னைத் தெளிந்திடுவாய்

நவரோஜ்] [ஆதி

ப: உன்னைத் தெளிந்திடுவாய்—உளமே (உன்னை)

அ: உன்னைச் சிவசத்தென்றே உள்ளபடி அறிந்தால்,
இன்னலில்லை என்றும் இன்பமின்ப மின்பமே! ()

ச: சிந்தை யலையாமல் தியானத்தில் கூட்டுவாய்;
தினந்தினம் மனத்திற்குச் சிவபக்தி ஊட்டுவாய்;
வந்ததும் போனதும் வருந்தி நினையாதே;
வாகா யிருந்தபடி
ஸோஹம் பாவனை செய்தால் (உன்னை)

## 190. அலையாதே பேய் நெஞ்சமே

பியாகடை] [ஆதி

ப: அலையாதே பேய் நெஞ்சமே—ஆடிமேகம்போல்
கலையாதே மட நெஞ்சமே! (அலை)

அ: உலகெல்லாந் திரிந்தாலும் உண்மை விளங்காது,
கலையெல்லாங் கற்றாலும் கருத்துத் தெளியாது! ()

ச: பலபல வகையாகப் பரந்த பாரக மெல்லாம்
பஞ்ச பூதவிகாரம்; பார்த்ததை மயங்காதே;
மலைபோலே உன்னுள்ளே நிலைபெறத் தயங்காதே!
மாயமயக்குகளில் பாய்ந்து முயங்கிட நீ (அலை)

## 191. நிலையம் ஒன்று

சுரடி] [ஆதி

ப: நிலையமொன் றெனக் கருள்வாய்—யோக
நிஷ்டையி லூன்றியே நின்னருட் பணி செய்ய (நிலை)

அ: மலைநதி வளஞ்செயு மலர்கனிச் சோலையில்
மான்பசு புள்ளினம் வாழ்பசுங் கோயிலில் (நிலை)

ச: பலசாதி மதங்களின் கலகமில் லாமலே
பரிசுத்த சன்மார்க்க பக்தருடனே கூடி,
கலைகளுந் தொழில்களும் பலன்பெற வளர்த்தொரு
கவலையு மின்றிநான் கடவு ளறத்தைக் காக்க (நிலை)

வறுமை மடமை யச்சம் வஞ்சம் பொறாமை யின்றி,
வாய்மையுந் தூய்மையும், தாய்மன நேயமும்,
நிறைதவ ஒழுக்கமும், இறையருட் சோதியும்,
நிலவிடும் பூரண நின்மலர்க் காகிய (நிலை)

பூவுயிர்த் தொகுதியே புனிதமெய்க் கடவுளாய்
புண்ணியத் தொண்டுகள் பூசனையாகவே,
தேவஜீவனம் பெற்ற திவ்விய தீரர்கள்,
செகத்தினில் சத்திய யுகத்தினை வளர்த்திடும் (நிலை)



## 192. தியானத்தில்

காமாஸ்] [ஆதி

ப: தியானத்தில் வருகின்ற சின்மயமே—சித்தம்
தெளிந்ததும் என்மயமே—பரமாத்மனே (தி)

அ: நானு விகார மின்றி மோன சமாதியிலே
நான் நான் என்றுள்ளே நடமாடும் தன்மயமே (தி)

ச: கன்மவா சனையான ஜன்மவாசனைகளை
கதிர் கண்டபனி யாக்கிக் கட்டறுக்கும் வரனே,
வன்ன மணிச் சுடர் வானுகி வளியாகி,
மழையாகி வாழ்வாகி மன்னுயிர்க் குயிராகி (தி)

## 193. சமரஸக் கடலே

கானடா] [ரூபகம்

ப: சமரஸக் கடலே—வேத
சாரந் தன்னை ஆர்கலிக்கும் (சம)

அ: அமர திவ்ய ஜீவனத்தின்
அமிர்த கலசம் தவழ்ந்து பொங்கும் (சம)

ச: எந்த மதமும் எந்த ஜனமும்
எனதுன தெனும் வாத மின்றி
வந்து முகந்து சிந்தை மகிழ
வாரிப் பருக ஊறிப் பெருகும் (சம)

## 194. நம்பியிரு

கரகரப்ப்ரியா] [ஆதி

ப: நம்பியிரு மனமே—ஆத்ம
நாதனை ஆனந்த போதனையே தினம் (நம்)

அ: அன்பிருந் தால் அரு ளாகி அறிவாகி,
அந்தர மேகம்போல் வந்து வழங்குவான் (நம்)

ச: அகந்தையை விட்டுவிடு—நெஞ்சில்
ஆழ்ந்ததைத் தொட்டுவிடு;
இகந்தனில் பரந்தன்னை உகந்திடக் காட்டியே
சுகந்தரும் சுடரினைச் சகந்தனில் நிரந்தரம் (நம்)

## 195. ஆர்வமாய்

சிம்மேந்திரமத்திமம்] [ஆதி

ப: ஆர்வமாய்க் கூவிடுவாய்—என்
அன்பு மயமான ஆனந்தக் குயிலே நீ (ஆர்)

அ: கார்மழை வெள்ளம்போல் கருணை இறங்கி வரும்
கவலைத் துயரொழியும் கவிரசம் பொழியும் (ஆர்)

ச: தன்பத மாகிய தாமரை மலரும்;
தாமச அகங்காரம் தானே உலரும்;
துன்பநள் ளிரவுபோய், இன்ப வசந்த மாகும்
சுத்தோஹம், சுத்தோஹம், சுத்தோஹம் என்றே நீ (ஆர்)

## 196. தேவ ஜீவனம்

பந்துவராளி] [ரூபகம்

ப: தேவ ஜீவனம்-அருள்-தேவ தேவனே-சிவனே (தே)

அ: சாவை வெல்லும் ஸஹஜாத்தும
சக்தியால்—ஜீவன்—முக்தி வளரும் (தே)

ச: இருவிகார மனதைத் தாண்டி
இதயாம்பர வெளியில்,
நிருவிகாரத் துரிய நிலையில்
நின்றுன் அருளில் ஒன்றி வாழும் (தே)
வானும் புவியும் கூடிக் குழையும்
வாழ்வில் இன்பம் இலக,
ஞானதேகம் எய்தி ப்ரணவ
நாத ஜோதி சித்தி பொலியவே (தே)

## 197. எழுக எழுக

பிலகரி] [ரூபகம்

ப: எழுக எழுக எழுக ஞாயிறே—திசை
எங்கும் பொங்கும் தங்கக் கனல்போல் (எ)

அ: பழுதிலாத முனிவர் உள்ளம்
பழுத்தஞானக் கொழுந்தைப்போல (எ)



ச: இருளைத் துரத்தும் இரவி வாழ்கவே—என்
இதய வெளியில் உதய மாகி
அருளைப் பொழியும் அழகு வாழ்கவே—பர
மானந்தத்தின் அமுதக் குடம்போல் (எ)

## 198. வாழ்க சுயம்ப்ரகாசம்

மாண்டு] [ஏகம்

ப: வாழ்க சுயம்ப்ரகாச சுத்த சக்தி ஓம்
சூழ்க உலகமெல்லாம் ஜோதி யானந்தம் (வா)

அ: ஏழுலகும் ஜீவன் முக்தி யின்ப மோங்கவே
இதயமான இறைவனன்பிங் குதயமாகவே
பாழும் தீய ஊழ்வினைகள் பட்டொழிகவே
பரம சச்சி தானந் தத்தின் பால்பொழிகவே (வா)

ச: கட்டடிமைக் கவலையெம்மை விட்டு விலகவே
கண்ணுலகில் விண்ணரசு காணப் பொலிகவே
எட்டுத் திக்கும் தேவகானம் எதிரொலிக்கவே
எண்ண மெல்லாம் புண்ணியப் பயன் பழுக்கவே (வா)

## 199. ஜீவன் முக்தி

காம்போதி] [ஆதி

ப: ஜீவன் முக்தி யிதே—மனமே
ஜீவன் முக்தி யிதே (ஜீவ)

அ: ஜீவஜக பரமாம், பாவனு தீதமாம்,
சின்மய வஸ்துவே நின்மய மாயிரு (ஜீவ)

ச: ஊனி லுயிர்த்திடும் ஞான சொரூபமாம்;
உலகெல்லாம் பலவென நிலவிடும் ஒன்றதாம்;
ஆனந் தாம்ருதம் ஆனசுத் தாத்மாவாம்;
அழிவறு மதனிலே அறிவா யிருப்பதே!... (ஜீவ)
முன்னிலைப் பொருள்களின் மோகமெல்லாம் போக
மும்மல பந்தமின்றி நின்மல மாகியே,
தன்னிலை தானகத் தாக்கற் றிருந்தென்றும்
சஞ்சல மில்லாத ஸஹஜ நிலைபெற்றால்... (ஜீவ)

தாக சோகங்களைத் தவிர்த்த நிலையிலே,
சச்சிதா னந்தபர சாந்த மலையிலே,
ஏகத்திலே சுத்த போகத்திலே—பூர்ண
யோகத்திலே ஹம்ஸ ஸோஹத்திலே வளர் (ஜீவ)

## 200. பரமானந்தம் பெருகி

ஸிந்து நாமக்ரியை] [தேசாதி

ப: பரமானந்தம் பெருகிப் பல்லாண்டு
பாராலயத்தில் சீரோங்கி வாழ்க! (பரமா)

அ: பரிபூர்ண யோக போக வைபவத்தால்
பக்தகோடி யெல்லாம் சுத்தசித்தி பெற்றே (பரமா)

ச: தருமார்த்த காமந் தாங்கும் இல் லறமும்,
தவசக்தி தரும் சஹஜ முக்தியும்,
கருமவாழ் வனைத்தும், பிரம யக்ஞமாகக்
காணுந் தெய்வநிலை
பூணும் ஆணும் பெண்ணும் (பரமா)



# 3. முருகோபாசனை

## 201. வா, கலாப மயில்மேல்

ஸிம்மேந்திரமத்திமம்] [ஆதி

ப: வா, கலாப மயில்மேல்—வடி வேலவா
வந்தென் கலைதரும் விருந்தை அருந்திடவே (வா)

அ: நா வார உனை நான்—ஆறுமுகனே
நல்ல தமிழிசையால்
சொல்லிச் சொல்லிக் கொண்டாட (வா)

ச: தீயர் உறவை விட்டுத் தூய தொண்டரை நட்டு
தாயினும் அன்பாம் உன் சேய்போல் இருந்துமனப்
பேயை அடக்கிச் சிவ நேயந்தனி லெப்போதும்
தோயும்பே ரின்பந் தரத் துள்ளி வள்ளியுடனே (வா)

## 202. உருகிடுவாய்

காபி] [ஆதி

ப: உருகிடுவாய் மனமே—வேல்
முருகா முருகா முருகா என்றே தினம் (உரு)

அ: வருவாய் எனது ஞான குருவாய்; ஓங்காரஜபம்
தருவாய் திருமாலின் மருகா ஷண்முகா என்றே (உரு)

ச: சூரபத்மா சுரன் அகங் காரத்தை அழித்தவன்;
தொண்டரை வருத்திடும் துயர்களை ஒழித்தவன்;
காருண்ய விரதனும் கலியுக வரதனும்
கந்தனை ஸ்ரீ வள்ளி காந்தனையே நினைந்தே (உரு)

## 203. சங்கீதாஞ்ஜலி செய்குவோம்

கல்யாணி] [திரிபுடை

ப: சங்கீதாஞ்ஜலி செய்குவோம்—சிவ
ஷண்முகனுக்கு சுத்த ஹ்ருதய குகனுக்கே-நாம் (சங்)

அ: தம்பூரா குழல் வீணை தாள மேளங் களுடன்
சரிகம பதநியெனும் ஸப்தஸ்வர வேதத்தால் (சங்)

ச: செந்தில் ஆண்டவன், வீர தேவசே னாதிபன்,
செங்கதிர் வேலவன், தீரன் ஞான ப்ரதீபன்,
கந்தன், வள்ளி தெய்வானை காந்தன், கருணை வேந்தன்,
காங்கேயன், அடியாரைத் தாங்கும் குமரனுக்கே ,,

## 204. ஆரோ வந்தென்னை

அடாணா] [ஆதி

ப: ஆரோ வந் தென்னை ஆசை காட்டி மறைந்தான்,
அவனையே தேடித்தேடி அலைகுதென் சித்தமே (ஆரோ)

அ: பேருமறியேன்; அவன் ஊரும் யான் அறியேன்;
பெற்றவர் யாரெனக் கற்றவரும் அறியார்! (ஆரோ)

ச: கண்ட திசைகளெல்லாம் கண்ணாலே பேசிக்
காணாமல் ஒளிந்தஎன் கள்ளன்முகந் தோன்றுதே!
விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர்;
விந்தை முறுவல் செய்தோர்
மந்திரப் பொடிதூவி (ஆரோ)

## 205. இவனாரோ சகியே?

சங்கராபரணம்] [ஆதி

ப: இவனாரோ சகியே?—என்னெதிரிலே
இரவிபோல் வந்த சகியே! (இவ)

அ: சிவனார் தரும் இள—மகனாரோ?—ஷண்
முகனாரோ?—ஹ்ருதய குகனாரோ? (இவ)

ச: நங்கை, யெனது மான பங்கம் செய்தானடீ;
நாணத் துடனே ஒரு
கோணற் பார்வை பார்த்ததும்,
கொங்கை துடிதுடிக்கச் செங்கையா லணைத்துள்ளங்
கொள்ளை கொண்டு போன
கள்ளன் என் காதலன்! (இவ)



## 206. மறவாமல் இரு மனமே

சூலினி] [திரிபுடை

ப: மறவாமல் இரு மனமே—சுப்ரஹ்மண்யனை
மறவாமல் இரு மனமே! (மற)

அ: மறலியை உதைத்தவன் மகனை, ஷண்முகனை நீ (மற)

ச: அறிவான நெஞ்சிலே அன்பான மலரினால்
அருளான வரத்தையே ஆசித்துப் பூசிப்பாய்!
இறவாமல் என்றைக்கும் பிறவாமல் இருக்கலாம்;
இல்லற வாழ்விலும்பே
ரின்பத்தைப் பெருக்கலாம் (மற)

## 207. அடைக்கலம் புகு மனமே

முகாரி] [ஆதி

ப: அடைக்கலம் புகுமனமே!
அரன்மகனைத்—திருப்
பரங்கிரி வேலனை (அடை)

அ: கடைக்குண மாகிய காமக் குரோத லோபக்
கசடுகள் நீங்கிட நிசஞான மோங்கிட (அடை)

ச: ஆறுதலைத்தரும் ஆறுமுக வேலவன்;
அரக்கர் காலன்—உண்மை அன்பர்க் கனுகூலன்;
வீறுதரும் முருகன், விரும்புங் கலி வரதன்;
வேதஓங் காரப் பொருள்
ஓதுங் குருபரனை (அடை)

## 208. சிந்தையில் நினைத்ததும்

ஹிந்துஸ்தான் தோடி] [ஆதி

ப: சிந்தையில் நினைத்ததும் வந்துமுன் நிற்பான்
செந்தில் வடி வேலன் சிவத்தனால் முருகன் (சிந்)

அ: பந்த விலங்குகள் சிந்திச் சிதறிட
பகைக்குல ராக்ஷஸர் திகைப்புடன் பதறிட
தந்திமித் தோமெனத் தாண்டவம் ஆடிடும்
தங்க மயிலின்மேலே செங்கதிர் போலே (சிந்)

தொகையறு : எப்போதும் உண்மை யன்பர்
இதயத்தில் இருப்பான்
எண்ணிக் கைதொழுவார்
ஏக்கம் தவிர்ப்பான்
இளந்திரு வீரன் இணையிலாப் பரசூரன்..(சிந்)

ச : தஞ்சமென் றடைந்தவர் சஞ்சலந் தீருமே
சமயசஞ் சீவியாய்த் துணை வந்து சேருமே
அஞ்சல் அஞ்சல் என்றே அபயக் கரங்காட்டி
அருள்செய்யும் குருபரன் ஆறு முகனையே (சிந்)

## 209. ஓம் சிவ ஷண்முக ஓம்

பைரவி] [ஆதி

ப : ஓம்சிவ ஷண்முக—ஓம் என்றே அனுதினம்
நாமஜபம் செய் மனமே! (ஓம்சிவ)

அ : சாமி மலையில் வாழும் சத்குரு பரமாத்மன்
சேம மளிப்பான்—என்றும்
நேம நிஷ்டையுடனே (ஓம்சிவ)

ச : நாலு வேதப்பொருளும், நாலு கவித்திறனும்,
நாலு புருஷார்த்தமும் நல்கி யன்பரைக் காப்பான்;
பால சுப்ரஹ் மண்யன் கோல வடிவை யெண்ணி,
பக்தி பரவசத்தால்
சித்த சுத்தியுடனே (ஓம்சிவ)

## 210. முருகன் என்றதுமே

இராகமாலிகை] [திஸ்ர ஏகம்

முருகன் என்றதுமே—எனக்கோர்
மோகம் பிறக்குதம்மா!
அருகில் வாரானோ?—என்றபே
ராசை துடிக்குதம்மா!

உள்ளம் உருகுதம்மா—என்
ஊனும் உருகுதம்மா!—அவனை
அள்ளிக் கலந்திடவே—என்
ஆர்வம் பெருகுதம்மா!



புள்ளி மயில் மேலும்—அவனைப்
புல்லிச் சுகம் பெருகும்
வள்ளி மயில் மேலும்—எனக்கோர்
வன்மம் வளருதம்மா!

வேலை நினைத்துக்கொண்டால்—அவன் விழி
வேலை நினைத்துக் கொண்டே
மாலைப் பொழுதினிலே—எனக்கொரு
மயக்கம் காணுதம்மா!

சூரனைச் சுட்டவனும்—திரி
சூலிக் கனல் மகனும்—ஜய
வீர சிகாமணியாம்—அவனென்
வேதனை தீரானோ?—சகியே
வேகமாய் வாரானோ?

## 211. முருகனை நினை மனமே

ஆகிரி] [திரிபுடை

ப : முருகனை நினை...மனமே—சதா காலமும்
முருகனை நினை மனமே! (முரு)

அ : உருகி உருகி உள்ளம்
பெருகிக் கண்ணீர் அருவி (முரு)

ச : இரவும் பகலும்போலே வரவும் போக்குமாகிய
இருவிகா ரவுலகில் நிருவிகா ரமாகவே,
'சரவண பவசிவ ஷண்முகா ஓம்' என்றே
சரண்புகுந்து ஜபித்தால் மரணபயமும் தீரும் (முரு)

## 212. பழநியப்பன் துணையே

மோகனம்] [திரிபுடை

ப : பழநியப்பன் துணையே—நம்பின பேர்க்குப்
பாரினில் யாவர் இணையே (பழநி)

அ : குழகன் கதிர்வடிவேற் குமரன் அமரர் போற்றும்
அழகன், சிவப்புதல்வன், ஆறுமுகன். குகன் (பழநி)

ச: அஞ்சவரும் பகையைப் பஞ்சுபட உதைப்பான் ;
வஞ்சநிருதர் வீழச் செஞ்சுடர் வேலெடுப்பான் ;
தஞ்சமென் றவர் தூய நெஞ்சினி லேயிருப்பான் ;
துஞ்சாக் குண்டலி சக்தி கொஞ்சிக் குலாவுகின்ற (பழ)

## 213. இன்னும் வரவில்லையே

பிலகரி] [ஆதி

ப: இன்னும்வர வில்லையே—என்
இதயத்தைக் கொள்ளைகொண்ட கதிர்வடிவேலவன்

அ: என்னென்னமோபேசிக் கன்னி மனங்கரைத்தான்,
எண்ணுயிரங் கனவு மண்ணானதே—சகியே ! (இ)

ச: கவலைப் பட்டுப்பட்டுக் கண்ணீரிலே துளைந்து,
கந்தன் மயில் மேலேறி வந்தவழியைப் பார்த்தேன் ;
அவலை நினைந்துரலை அழுத்தி யிடித்த கதை
ஆனதென் மானமும் போனதே—ஷண்முகன் (இ)

## 214. குன்று தோறும்

தோடி] [ஆதி

ப: குன்று தோறும் குகைக்கனலே—மனம்
குளிரப்பொழிகின்ற அருட்புனலே (கு)

அ: மன்றுதோறும் மாணிக்கஜோதியின்
மங்கலதீபமே
செங்கதிர் வேலனே (கு)

ச: உவமைக் கடங்காத உரையினுக்கெட்டாத
ஊனக்கண்ணறியாத ஞானக் கண்ணொளியே
கவலைதுடைத்தருளும் கண்கண்டதெய்வமே
காந்தா சுத்தானந்தா—ஓம்
கார்த்திகேயா காங்கேயா
கலாபமயில் வேல்முருகா
முருகா முருகா முருகா ! (கு)



## 215. காலனை உதைத்தவன்

தன்யாசி] [ஆதி

ப: காலனை உதைத்தவன் பாலனைக் கூவியென்
கவலையைத் தீர் குயிலே (கா)

அ: ஞாலமெல்லாம் புகழ் ஞானபண்டித துரை
நம்பின பேர்களை நட்டாற்றில் விடமாட்டான் (கா)

ச: இன்பத்தைத் தந்தவன் இன்னலைத் தீரானோ ?
இதயத்தைத் தொட்டவன் என்முகம் பாரானோ ?
அன்பை யளித்தவரை அள்ளி யணையானோ
ஆசை யறிந்துகொண்டும் பேசாமல் இருப்பானோ (கா)

## 216. நம்பின பேர்களை

கரகரப்ரியா] [ஆதி

ப: நம்பினபேர்களைக் கைவிடமாட்டானம்மா
ஞானபண்டித துரையே (நம்பின)

அ: அம்பலக் கூத்தாடியின் செங்கனற் செல்வனென்றும்
அன்புவைத் தவரிடம் ஆசைவைப்பா னம்மா ! (நம்)

ச: காதலும் பொய்யில்லை ;கனவுகளும் பொய்யில்லை ;
கைப்பிடித்தவன் சொல்லைக் கடைப்பிடிப்பான் மெய்யே!
சோதனைசெய்து கொஞ்சம் சுண்டிப்பார்த் துள்ளத்தைச்
சுகந்தருவான் ஆறு முகன்குகன் வேல்முருகன் (நம்)

## 217. ஓடி வாடா முருகா !

கேதாரம்] [ஆதி

ப: ஓடி வாடா முருகா—என்
உள்ளஞ் சிலிர்க்கநடமாடி வாடா—கண்ணே (ஓடி)

அ: தேடித்தேடித் திகைத்தேன்—நல்ல
செம்பொன் அணிகுலுங்கக்-கிண்கிணிச்சிலம்பொலிக்க (ஓடி)

ச: பொன்னுடல் புழுதியாச்சே—கண்ணே
புதுப்புன லாட்டி அணி சூட்டி மகிழ்வேன் ! (ஓடி)

இன்னமுதம் பிசைந்தே—கண்ணே
இனிய கதைகள் சொல்லி ஊட்டி மகிழ்வேன் (ஓடி)
பஞ்ச வர்ணக் கிளியே—உன்
பச்சை மழலை கேட்டென் உச்சி குளிர்ந்திடவே (ஓடி)
கொஞ்சுந் திருநகையால்—என்
குலமெல்லாம் தெய்வவொளி குலுங்கி விளங்கிடவே
கன்னங் கனிந்திடவே—உன்னைக்
கட்டிமுத்த மிட்டபின்பு தொட்டி விடுவேன் (ஓடி)

## 218. அன்பு வலையினிலே

தன்யாசி] [ஆதி

ப: அன்புவலையினிலே—அகப்பட்டேன்
ஆறுமுகவேலவா—முருகா, முருகா, முருகா உன் (அ)

அ: துன்பந் துடைத்தருளும் துரையே—உன்பெயரினைச்
சொல்லும்வா யெல்லாம்சர்க் கரையே—என் அப்பனே (அ)

ச: முத்து முகத்திற் காணும் முல்லைச் சிரிப்பினிலே,
மோகங்கொண்டே னையனே!
சக்திவேற் கரத்தால்நீ தாவியென்னை யணையத்
தாகங் கொண்டேன் மெய்யனே!
பக்திசெய் யடியவர் பாசவினையைச்சுடும்
சுத்தசிவக் கனலே!
பித்துப் பிடித்தெப்போதும் பிதற்றுகின் றேன்; ஐயாஉன்
பெரியகருணைபெற உரியவனென நம்பி (அ)

## 219. வீரவடிவேல் முருகன்

தோடி] [ஆதி

ப: வீரவடிவேல் முருகன்—நம்மைக் காப்பான்
விசனத்தை விடு மனமே! (வீர)

அ: தாருகர் செருக்கினைத் தகர்த்த பரமசிவன்
தந்த கனல் மைந்தன், கந்தன் ஷண்முகன்குகன் (வீர)

ச: கோபப் பகைக்குலத்தைக் குத்தியெறிவான்—அவன்
கொடுமையைக் குமைத்திடச் சக்தி தருவான்!



சாபப் பிசாசுகளைச் சாடிமிதிப்பான்—என்றும்
சத்தி யரைத்தயை வைத்து மதிப்பான்—ஜய (வீர)
ஆங்காரச் செருக்கின்றி நீங்காது வணங்குவோம்;
அச்சந் தவிர்த்திடும் அருளுக் கிணங்குவோம்;
ஓங்கார ரகசியம் ஓதும் வேதப் புலவன்;
உள்ளன்பர் நெஞ்சிற்குடி கொள்ளும் கருணைவள்ளல்,,

## 220. வெற்றிமேல் வெற்றி!

மாண்டு] [ஜம்பை

ப: வெற்றி மேல் வெற்றியடா—கந்த
வேல் சக்தி வேல் சக்தி வேல் சக்தி என்றதும் (வெ)

அ: சுற்றி வரும் அரக்கர்—கடும்
சூருவளி முன்னே தூசியடா இனி! (வெ)

ச: வேரின்றிப் பூக்களுண்டோ?—கந்த
வேளின்றித் தோளுக்கு வீரப் புகழுண்டோ?
கோரியதை யடைவோம்—நெடுங்
குன்றைக் குமைத்த குகனை நினைத்ததும் (வெ)

## 221. கொக்கறு கோவே

மோகனம்] [ஆதி

ப: கொக்கறுகோவே சிக்கறு குருவே
குமரா அமராதிபனே (கொ)

அ: பக்குவமாகப் பழவினை நீங்கிப்
பதிபசு பாசப் பண்பை விளக்கிக் (கொ)

ச: தென்றல் மருவுந் தேன்மலர் போலே
தேனுண்டிசைக்கும் வண்டுகள் போலே
மன்றல் கொண்ட மணமனம் போலே
மாசறு சுத்தானந்தம் வளர
பேசறுமின்பம் பெருகிட நாளும் (கொ)

## 222. குன்று நவ நிதியே

தர்பார்] [ஆதி

ப: குன்று நவநிதியே—மன்றாடுஞ் சோதியே
குமாரா அமரர் குறை தீர்க்கும் பெருமானே (கு)

அ: நன்றாக வுலகிலே நின்றோங்கி வாழவே
நல்லார்க் கருள்புரிவாய்
எல்லார்க்கும் இறைவனே (கு)

ச: பண்கண்டருணகிரி பாடிய முருகனே
பதியன்பர் துதிசெய்யும் திருமால் மருகனே
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதமே
கந்தா என் சிந்தையில் வந்தாள் குருபரனே (கு)

## 223. பயமில்லை

திலங்கு] [ஆதி

ப: பயமில்லை—ஜயமுண்டு—பயமில்லையே
பழனிக் குமரகுரு சுடர்வடி வேலுண்டு

அ: செயலுண்டு பலமுண்டு பகை யென்செயும்?
சிவஷண் முகனருள் வழிகாட்டுமே (பய)

ச: ஆலகாலம் அமுதென வுண்டான்
அருளிய தவக்கனலே
கோலாகல வேலா பார்வதி
பாலா பக்தர்க்கனுகூலா சரண்—என (பய)

## 224. வீர வரந்தருவாய்

பீம்ப்ளாஸ்] [ஆதி

ப: வீர வரந்தருவாய்—வடி
வேல் முருகா-வரும்-காலனும் அஞ்சிட (வீர)

அ: போராடு மாமாயப் புல்லரக்கர் ஒடுங்க
சீரோடுலக மாந்தர் சேர்ந்தினி வாழ்ந்திட (வீர)

ச: திண்ணுடலும் திண்மனமும்
திண்புயங்களும்



திண்மையான செயலும் பயனும்
தியாக தீரமும்
உண்மையான நன்மையான
உலக சேவையும்
ஓங்கக் கலிநீங்க—ஜயந்
தாங்களம் பாங்கர் இருந்தே (வீர)

## 225. வந்து வந்து

குந்தலவராளி] [ஆதி

ப: வந்து வந்து செல்லுகின்ற வாழ்வுமின்னலே—
உந்தி யுந்தித் தள்ளுகின்ற பந்து போலுமே (வ)

அ: அந்தர மலர்ச் செண்டாடும் ஆத்ம நாதனின்
ஆனந்தத்திலே சுழலும் அன்பனுக்கூட்டம்! (வ)

ச: இன்ப துன்பச் சுழலிலாடும்
இந்த வாழ்வினை
உன்பரமென் றீந்தேன்—ஏலாய்
ஓம் சிவ முருகா—சரண்
ஓம் பரங் குகனே! (வ)

## 226. தா நினது கருணை

தோடி] [ஆதி

ப: தா நினது கருணை-எனதுகுரு
சாமி நாதசிவ சண்முகனே குகனே (தா)

அ: வா கனக மயில்மேல்—மனமகிழ
வந்தென் கவலையிருள் சிந்தக் கந்தப்பா (தா)

ச: நானெனு ம்ஆணவ நாடகம் அடங்கிட,
நச்சுப் பகையொடுங்க நரகக் கவலை தீரத்
தேனு றெனுமுனது திருப்புக ழூற்றினிலே
சித்தங் குளித்து ஜீவன் சுத்தானந்தம் பெறவே (தா)

# 4. சக்தி பரவசம்

## 227. எல்லாம் நீயே அம்மா

பூர்வகல்யாணி] [சாய்ப்பு

ப: எல்லாம் நீயே அம்மா—பராசக்தி
எங்கும் நீயே அம்மா (எல்லாம்)

அ: சொல்லாலுன் மகிமையைச்
சொல்லவுங் கூடுமோ ? (எல்லாம்)

ச: கரையில்லாக் கருணை நீயே ;—கார்மேகமும்,
காற்றும், கதிரும் நீயே !
வரையில்லாக் கடலும் நீயே ;—உயர்
மலைவளர் நதியும் நீயே !
தரையெல்லாம் பயிரும் நீயே ;—உயிர்களைத்
தாங்கும் இயற்கை நீயே !
பரிவான மாதா நீ, பரமாத்ம ஜோதி நீ,
அறிவான ஆன்மா நீ,—
அரனாரின் பாதி நீ ! (எல்லாம்)

## 228. எனக்கென்ன மனக்கவலை

தன்யாசி] [ஆதி

ப: எனக்கென்ன மனக் கவலை ?—எந்தாய்க் கன்றோ
தினந்தின மென் கவலை (என)

அ: மனத்திலும் செயலிலும் வாக்கிலும் நோக்கிலும்
அனைத்துமாய் நின்றென்னை ஆண்டவ ளிருக்கையில் (என)

ச: அல்லலை ஓட்டுவாள், வல்லமை நாட்டுவாள் ;
அம்புலி காட்டியும் அமுதினை ஊட்டுவாள் ;
தொல்புவி யெனக்கொரு தொட்டிலாய் ஆட்டுவாள் ;
சுத்தமுக்த ஸமத்வச் சுடரெனுள் ஏற்றுவாள் (என)
கண்மலர்க் கருணையால் புண்களைத் துடைப்பாள் ;
கைம்மலர் ஆசியால் உய்கதி கொடுப்பாள்
தண்ணருட் புன்னகையால் சக்திக் கனல் பெருக்கித்
தாங்கிடும் ஜகன்மோக னாங்கி துணையிருக்க (என)



## 229. குடியிருப்பாய் மனமே

கல்யாணி] [தேசாதி

ப: குடியிருப்பாய் மனமே—அன்னையருளில்
குடியிருப்பாய் மனமே—தினமே (குடி)

அ: அடியார்க் கமைதிதரும் கடிமலர்ச் சோலையில்,
அன்புத் திருமனையில் இன்பம் பெருகி வரக் (குடி)

ச: கனதன மயக்கத்தில் கருத்தைவிட் டலையாமல்,
கனவிலும் காமாதிக் கள்ளரால் உலையாமல்,
மனமொழி மெய்யினால் புனித பூசனை செய்தே
இனிவினை யுடலினில் என்றைக்கும் பிறவாமல் (குடி)

## 230. ஜோதிஞான

செஞ்சுருட்டி] [திஸ்ர ஏகம்

(காவடிச்சிந்து)

ஜோதி ஞானச் சுகோதயப் பொன்முகந்
தோற்றுவாய்—துயர்—மாற்றுவாய் !
ஆதி சக்தி அமுத பயோதரி
அம்பிகே—உன்னை—நம்பினேம் !

தீதை வெல்லுந் திறமைதந் தெம்மனந்
தேற்றுவாய்—கடைத்—தேற்றுவாய் !
காத கப்பகைக் காட்டை யெரித்திடுங்
காளியே—வீர—நீலியே !

பார் முழுதும் பசும்பொன் வளங்களைப்
பாலிப்பாய்—அருள்—ஆலிப்பாய் !
சீரெலாந்தருஞ் செல்வி மகாலக்ஷ்மி
தேவியே—எங்கள்—ஆவியே !

பூரணக்கவி பொங்கத் திருவுளம்
பூத்தருள்—எம்மைக்—காத்தருள் !
வாரி வாரிக் கலைவரந் தந்திடும்
வாணியே—வீணா—பாணியே !

## 231. பித்துப் பிடித்ததடீ

அடாணா] [ரூபகம்

ப: பித்துப் பிடித்ததடீ—அம்மாஉன்
பேரின்ப வாரியில் யானின்ப நீராடப் (பித்)

அ: புத்தலர் போன்றொளிர் முத்து நகையிலே
சித்தம் இழந்தென்னை முற்றும் மறந்தன்புப் (பித்)

ச: வீரவிடுதலை தந்தாய்—உன்
வேல்விழியால் அகங் கொன்றாய்;
சூரியன் போலொளிர் காந்தி—என்னுள்
தூண்டினை ஆத்தும சாந்தி;
பாரெல்லாங் கோயிலாய்க் காட்டி—உன்
பக்திப் பணியினை நாட்டி,
தீரனாய் வாழெனச் சொன்னாய்—இன்பத்
தீயையுந் தந்தனை அன்னாய்...
என்னுள்ளே நீயென்றும்
உன்னுள்ளே நானென்றும்
என்பணி உன்பணி
என்றதி லேமிகப் (பித்)

## 232. நீ யின்றியார்

இராகமாலிகை] [ரூபகம்

மத்தியமாவதி

ப: நீயின்றி யார் என் துணை?
நிகி லாண்ட சக்தி! (நீ)

அ: தாயிழந்த சேயைப் போலே தவித்திடும் எனக் கிரங்கி,
வாயினால் இனிது சொல்லி மனக்கவலை தீர்த்தருள (நீ)

கல்யாணி

கல்யாணீ, கருணாம்பிகே, காத்யாயினி, மகாதேவி,
எல்லாமும் வல்ல தாயே, ஏழைபங் காளி, காளீ! (நீ)

கானடா

கானடர்ந்த காரிருளில் கடும்புலி பிடுங்குகின்ற
மானென இம்மாயக் கூட்டில் மயங்கித் தியங்கு மதலை வாழ(நீ



தோடி

பயந்தோடிப் பரிவு தேடிப்
பாதமலரைப் பற்றிக் கொண்டேன்!
நயந்தோரிடர் நலியக் காண்பாய்,
நாராயணி அபயம் அபயம்! (நீ)

ஆரபி

ஆரபி மானமும் வேண்டேன்,
அம்மாவுன தன்பே போதும்!
பாரபி மானமுங் கைத்ததுன்
பதத்திலேயபி மானம் வைத்தேன்! (நீ)

எதுகுலகாம்போதி

எதுகுலங் கோத் திரமென் றில்லை;
ஏக போக வெள்ள மாகப்
பொதுநிலையிலெப் போதும் அருளும்
புவனேச்வரி நவசௌந்தரி (நீ)

மோகனம்

மோகனாங்கி, முத்து கௌரி,
மூல வன்னி பாலாம்பிகே,
யோகபோகஸௌ பாக்ய லக்ஷ்மி,
ஓம் பராசக்தி, ஓம் பராசக்தி (நீ)
தஜ்ஜம் தகஜம் தளாங்கு தரிகிட
திமிகிட தக்கத்தா...
தத்தரிகிட தகஜணு தகஜணு
தளாங்கு தரிகிட தா,
தாகிட தகதீம் தின்ன
தோம் தோம் தோம் தோம் (நீ)

## 233. வருவாய் பரதேவதையே

கேதாரம்] [ஆதி

ப: வருவாய் பரதேவதையே—
வருவாய் கருணை நிறைவாய் (வரு)

அ: வருவாய் அருளே உருவாய்—இலகுந்
திருவே அறிவே சிவசங் கரியே! (வரு)

ச: சக்திச் சுடரே வருவாய்—ஜீவன்—
முக்திக் கொளியே வருவாய்
பக்தர்க் கமுதே பரிவே யுருவாய்—
பரிபூ ரணியே ஜயநா ரணியே (வரு)

சேயாய் மடிமீ தினிலே—புவித்
தாயே எனையேற் றருளாய்
நீயே இகமும் பரமும் சுகமும்—
நிலையும் கலையும் தவமும் வரமும் (வரு)

உயிர்யா ழினைநீ மீட்டாய்—சக்தி
உனதன் புருகும் பாட்டாய்—
ஜயகாளி மஹேஸ்வரி லக்ஷ் மிவாணி—
ஜகதீச் வரியே சரணம் சரணம் (வரு)

## 234. பாரிலுன் துணை

அமீர்கல்யாணி] [ஆதி

பாரிலுன் துணையல்லால் யாருமில்லை அனாதி—
பரிவுகொண் டருளம்மா—நீ
நேரிலென் முகத்தினைப் பாராவிடினும் பின்—
நின்றெனை யாளம்மா (பாரி)

மெய்வருந்தி வருந்தி, விருப்பு வெறுப்புக் காட்டில்—
வீணுக்குழைத்தேனம்மா;
கைம் மெலிந்தேன் என்னைக் காப்பாற்று வாயென்றுன்-
காலைப் பிடித்தேனம்மா (பாரி)

எட்டிரண்டும் அறியேன், ஏழைய னேனுமுன்—
இரக்கத்திற் காளம்மே
கட்டங்கள் எத்தனை கடலென மோதினும்உன்—
கருணையை நம்பியுள்ளேன் (பாரி)

நல்லது வந்தாலும், பொல்லது வந்தாலும்—
நடுநிலையில் இருந்தே,
அல்லும் பகலும் திரு வருளினை நோக்கியே—
அலறுகின் றேனம்மா (பாரி)



## 235. ஓங்குக செஞ்சுடரே

செஞ்சுருட்டி] [ஆதி

ஓங்குக செஞ்சுடரே—எங்கள்
உள்ளொளி வானுயர் வெள்ளொளி காட்டிட
வீங்குக விண்சுடரே—நெஞ்சில்
வீரம் பெருகிடக் கூரம்பு போற்சிகை
தாங்குக நீள்சுடரே—நிதம்
தந்தெமக் கிந்திர போகமும் யோகமும்
ஓங்குக தெய்வச் சுடர்—சக்தி
ஓம்சக்தி ஓம்சுத்த ஓம் சக்தி ஓமென (ஓங்குக)
நெற்றிக்கு மேலுயர்ந்தே—அங்கே
நீள்நிலை மாடத்தில் காலெடுத் தாடுவாய்
கொற்ற நெடுஞ்சுடரே—கருங்
கூற்றையுஞ் சாடிடும் ஆற்றலளித்தருள்,
வெற்றி மணிச்சுடரே—எங்கள்
வீரத்தைத் தூண்டியிப் பாரெலாம் போற்றிட
உற்ற தவக்கனலே—சக்தி
ஓம்சக்தி ஓம்சுத்த ஓம் சக்தி ஓமென (ஓங்குக)

## 236. கலை வரம்

பூர்வகல்யாணி] [சாய்ப்பு

ப: கலை வரந் தருவாய்—ஓம் சக்தி
கமல ஜோதியே, தாயே விமல சரஸ்வதியே (கலை)

அ: சலசலவெனப் பொங்கும் சங்கீதத்தி லென்ஜீவன்
தங்கப் படகுபோலத் தவழ்ந்து மகிழ்ந்து செல்லக் ()

ச: மேருதண்ட வீணை வேத ஓங்காரம் பாட,
விதவிதப் பதம் வைத்தே ஹ்ருதய பிரமன்ஆட,
பேரின்ப ரசங்களை வாரிவாரிப் பருகி,
பிறவாமல், இறவாமல், மறவாமல், அன்புசெய்யும் ()

## 237. ஆருமில்லேன்

சுரடி] [ஆதி

ப: ஆருமில்லேன் நான் அனாதி—அம்மா உன்பேர்
அன்பல்லால் இல்லை கதி—பராசக்தி (யாரு)

அ: ஊரிலேன் பேரிலேன், உறவிலேன், செயலிலேன்,
பாரின்பம் வேண்டாத பரதேசி யாயினேன் (யாரு)

ச: எங்கெங்குன் இச்சைநான் அங்கங்கே செல்கின்றேன்
ஏவிய பணிகளை இயற்றி நிவேதிக் கின்றேன்
உன்பெருங் கருணையே நம்பி உயிர்க்கின்றேன்
உலகெல்லாம் திரிந்தாலும் உன்னுள்ளே வசிக்கின்றேன்

## 238. ஒரு துணை

குந்தலவராளி] [ஆதி

ப: ஒருதுணை நமக்குண்டு—ஓம் சுத்தசக்தி
ஓம்சுத்தசக்தி—ஜயஸத்ய ஜோதி (ஒரு)

அ: அருவுருகுரு சிவன் அரிஅரன் அல்லா
பரம பிதாவெனப் பணியும் பரம்பொருளாம் (ஒரு)

ச: இருமன விகாரமாம் எல்லையைக் கடந்தே
இதயக் குகையில் அன்பர் இதுவெனத் தெளிந்தது
பெருவுலகம் அதன் திருவிளையாட்டது
பேர்வடிவாகிய போர்வையை நீக்கிடின்
ஆருயிரான சுத்தானந்த நிறைவது (ஒரு)

## 239. சுத்த ஜோதி மாலை

சிந்து பைரவி] [திஸ்ர ஏகம்

இன்பவாரி தன்னிலே எழுந்தஜோதி என்னவே,
அன்புமிக்க சுத்தசக்தி அன்னைவாழ்க வாழ்கவே! (இ)

குமுதமான செங்கணாள், குளிர்ந்தபார்வை கொஞ்சிடும்,
அமுதமான புன்னகை அழகுசொட்டும் இந்திரை (இ)

தங்கமான மேனியாள், சமதைகொண்ட நெஞ்சினள்,
பொங்குமங்க லம்புரிந்து போற்றிடும் திருமகள்! (இ)

அரக்கரின் கொழுப்பினை அடக்கிடும் பயங்கரி;
மறக்கருணை கொண்டசக்தி வல்லமை தருவளே! (இ)

சுற்றிடும் பகைத்திரள், சுருண்டுவீழப் போரிலே
வெற்றிநல்கும் பத்ரகாளி, வீரை, நீலி, சூலியே! (இ)



ஜீவயாழிற் பேரின்பம் செழிக்கமெய் சிலிர்க்கவே,
காவியங்கள் மீட்டுகின்ற கமலவாணி போற்றியே! (இ)

வேந்தரும் வணங்கிடும் விமலத்தாய் மகேஸ்வரி,
சாந்தமோங்க வாழ்விலே தனிக்கருணை நாட்டவே! (இ)

## 240. ஓங்கார விளக்கு வணக்கம்

பியாகு] [திஸ்ர ஏகம்

ஓங்கார மண்டபத்தில் - ஒளிரும்
யோக மணிவிளக்கே,
தூங்காத நல்லொளியே - இதயத்திற்
சுடர்நகை புரிவாய்.

உச்சிக் கமலத்திலே - துலங்கும்
உண்மைச் சுடரொளியே,
அச்சத் துயர்ஒழிய - உலகில்
அபயக் கதிர்பரப்பாய்!

இமய வெண்பனிமேல் - சிவனுடன்
இலகுந் தீச்சுடரே,
அமர கங்கையைப்போல் - உன்சக்தி
ஆடித் தவழாதோ?

நித்திய மோனத்திலே - அமைதியாய்
நீந்தும் தவச்சுடரே,
சத்திய வாழ்வுபெற - உனது
தங்கத் தணல் பரப்பாய்!

பூத வுடலினிலும் - தெய்வப்
புன்னகை பொங்கிடவே,
வேதப் பொருளருவி - எனவே
விம்மிப் புரண் டலைவாய்!

மானிட வாழ்க்கை யெல்லாம் - மெஞ்ஞான
மாறுதல் பெற்றிடவே
ஆனந்த கானமுடன் - உலகில்
ஆடிக் களித்திடுவாய்!

மனமயக்க மின்றி - சாதி
மதமயக்க மின்றி
வனமலர்களைப் போல் - உயிர்கள்
வாழ வகையருளாய் !

## 241. உனது கருணை

கேதார கௌளம்] [ஆதி

ப: உனது கருணையின்றி உலகிலோர் துணையில்லை
ஓம் சுத்தசக்தி மயமே (உ)

அ: எனதுனதென்கின்ற ஈனச் செருக்கின்றி
சினவெறிப் பகையின்றி
மனது நிம்மதிபெற (உ)

ச: சாதிப்பிரிவினையும் சமயப் பிரிவினையும்
சலிக்கும் அரசியலின் சண்டைப்பிரிவினையும்
ஓதியும் உணராத பேதவினைகளும்
ஓயாது வாயாடி ஊரைக் கலக்காமல்
ஒடுங்கி அலைமனம் அடங்கி யாணவம்
மடங்கி அருளினில் இடம்பெற்று திடம்பெற்றே
ஆதி நீதிவழி பேதமற நடந்தே
ஜோதி சுத்தானந்த வீதியிலுலவிட (உ)

## 242. கரையேற்றிடு

சாரங்கா] [ஆதி

ப: கரையேற்றிடு தாயே—என்னையாளும்
கருணைக்கடல் நீயே— (கரை)

அ: வரையில்லாத வானவடிவே
வருவாய் குருவாய் பரதேவதையே
வாணீ லக்ஷ்மீ காளிமஹேச்வரி
வாசாமகோசரி ஐம் ஸ்ரீம் க்லீம் க்ரீம் ஹ்ரீம் (கரை)

ச: சோகமோக மில்லா ஏகாக்ரசித்தமும்
தொந்தபந்த மில்லா சுதந்தர வுள்ளமும்
யோகபோக சௌபாக்யமும் உதவியே
உன்னிச்சை நிறைவேற
என்னையாட் கொண்டே (கரை)



நெஞ்சம் அரியணையாய்
நேயம் திருமுடியாய்
பஞ்ச கோசத்தையும்
பரம சாம் ராஜ்ய மாக்கி
அஞ்சாத துஞ்சாத கெஞ்சாத சுதந்தர
ஆனந்த சமயோகம்
அனைவர்க்கும் பொதுவாகி
கரையேற்றிடுதாயே

## 243. உனது பதம்

கேதாரகௌளம்] [ஆதி

ப: உனது பதம்பிடித்தே உலவுகின்றேன் இந்த
உலகினில் அருளன்னையே (உ)

அ: மனது கலங்கும் போதுன் மங்கலப் புன்னகை
எனது துயர் விலக்கி இலகு வரந்தருவாய் (உ)

ச: எத்தனை மாற்றங்கள் எத்தனை ஏமாற்றங்கள்—
எத்தனை ஏற்றங்கள் எத்தனை இறக்கங்கள்
எத்தனை இன்னல்கள் இந்தவுலகினிலே
அத்தனைக்கும் மருந்துன் அன்புதரும் இன்பமே
தூயநல் வீரர் துணையே—அம்மா
துணையென நம்பினேன் உனையே—நின்
சேயெனக் கொண்டாள் எனையே—ஓம்
ஸ்ரீம் ஹ்ரீம் பரதேவதையே (உ)

## 244. ஒன்றும் கவலையில்லை

கரகரப்ரியை] [ஆதி

கண்ணிகள்

ஒன்றும் கவலையில்லை என்றும்பே ரின்ப முண்டு
ஓம்சுத்த சக்தியென்று சொல் சொல் சொல்—மனமே!
கன்றை விரும்பும் தாய்போல் வந்து நம்மை ரக்ஷிப்பாள்
கருணாம்பிகை யருளிற் செல் செல் செல்—மனமே (ஒ)
தீனர் கற்பகமான செல்வத் திருமகளின்
செங்கதிர் முகமெங்கும் காண் காண் காண்—மனமே!

மோனவெளியில் வளர் ஞான மஹேஸ்வரியின்
முத்தித் திருவடியைப் பூண் பூண் பூண்—மனமே (ஓ)
இருவினை யுலகத்தின் இடர்களெல் லாம்விலக
என்றும் ஜய காளியை எண், எண், எண்—மனமே!
அருணோ தயம்போற் சாந்தம் பெருகிட வாழ்வினிலே
அகிலாண் டேச்வரி பக்தி பண், பண், பண்—மனமே ()

## 245. தரிசனம் செய்திடுவோம்

பிலகரி] [ஆதி

ப: தரிசனம் செய்திடுவோம்—ஜகன்மாதாவை
சக்திஓம் சக்திஓம் என்று வணங்கி நின்றே (தரி)

அ: பரம சுகானந்தம் பாலிக்கும் அன்னையை
பவ்ய ஜனங்களெல்லாம் திவ்ய ஜீவனம் பெற (தரி)

ச: அருண நகை முகமும், கருணை பொழி யகமும்,
அஞ்சலென் றருள்செய்யும் செஞ்சுடர்க் கரங்களும்,
மரண பயம் ஒழிக்கும் கிரண விழிக்கனலும்,
மங்கள சாந்தமும் பொங்கும் மகேச்வரியை (தரி)
அருவிகளுடன் சோலைக் குருவிக ளுடன் பாடி,
ஆனந்தக் கூத்தாடி, அன்புடன் கொண்டாடி,
இருவகை மனத்தினை ஒருமையுள் அடக்கியே
இதய மலரிலும் இன்னுயிர் உலகிலும் (தரி)

## 246. அன்புள்ள கற்பகமே

கர்நாடக தேவகாந்தாரி] [ஆதி

ப: அன்புள்ள கற்பகமே—ஓம்சரண்
அன்னை பராசக்தி, புன்னகை வெள்ளமே (அன்பு)

அ: துன்பத்தைத் துடைத்திடும் இன்பச் சுடரொளியே,
சுதந்தர மாகிய பதந்தரும் துர்க்கையே (அன்பு)

ச: பரம துரிய ஞானம் பரவும் மஹேஸ்வரியே!
பகைவரை நொருக்கிடப் பலந்தரும் காளியே!
அரிய வரங்களெல்லாம் அருளுந் திருமகளே
அருங்கலை வளமெல்லாந் தருங்கலை வாணியே! (அன்பு)



## 247. வீரவுறுதி தருவாய்

கானடா] [ஆதி

ப: வீரவுறுதி தருவாய்—பராசக்தி
வெற்றிமிகத் தருவாய் (வீர)

அ: பாரெல்லாம் உன்னருட் பண்கள் பொழியவே
போர் செய்யும் மனமாயப் பொய்கள் ஒழியவே (வீர)

ச: கோர நிருதர் செய்யும் கொடுமைகள் அழியவே,
பூரண சுதந்தரம் புன்னகை புரியவே (வீர)

எனதியான் என்கின்ற இறுமாப்பு நலியவே,
மனைதொறும் பொதுநல வினைநலம் பொலியவே (வீர)

தாயின்றிச் சேயில்லை; தரையின்றிப் பயிரில்லை;
நீயின்றி யாமில்லை; நின்னைப் பிரியாத (வீர)

தேசமும் நீயே: எந் தெய்வமும் நீயே;
பாசமும் நீயே; எங்கள் பந்தனை சிந்திட (வீர)

தீரராய் உன்னருள் செழித்து ஞானம் பழுத்தே
பூரண சித்தராய்ப் பாரினில் வாழ்ந்திடவே (வீர)

## 248. ஆனந்த நடனம்

காம்போதி] [ஆதி

ப: ஆனந்த நடன மாடினாள்—சச்சி
தானந்த நடன மாடினாள்—பராசக்தி (ஆனந்த)

அ: வானும் புவியும் வணங்கி மகிழ்ந்திட
ஞான வெளியினில் வீணை 'ஓம், ஓ'மென (ஆனந்த)

ச: பஞ்ச பூதங்கள் முழங்க—குணங்கள்
பாய்ந்து தாளம் வழங்க...
அஞ்சு தொழிலுந் துலங்கக்—காலம்
அதிரப் புவிகள் குலுங்க...
தஞ்சந் தஞ்சமென்றுள் ளன்பர் முறையிடத்
தந்தாம், தந்தாம்.
தாகிட தகதீம் என்ன... (ஆனந்த)

கலியரக்கர்கள் வீழ—மீண்டும்
க்ருதயுகத் தேவர் வாழ...
பொலியு நலங்கள் சூழ—மங்களப்
புதிய வாழ்க்கை பொங்க
சலிப்பில் லாமல் சதாசிவ னுடன்
ததிகிணதோம், தகிணதோம்,
தளாங்கு தரிகிட தோமென (ஆனந்த)

## 249. சக்தியை வணங்கிடுவோம்!

புன்னாகவராளி] [ஆதி

ப: சக்தியை வணங்கிடுவோம்—ஜய
சக்தியை வணங்கிடுவோம் (சக்தி)

அ: சுத்த சுதந்தர ஜோதி பராம்பிகை (சக்தி)

ச: நின்மலர் நெஞ்சினிலே—வீர
நெருப்பெனப் பளிச்சிடுவாள்—அவள்
பொன்னடி சூடிடுவோம்—அன்னை
புகழினைப் பாடிடுவோம்! (சக்தி)
தோள்வலி மிகத்தருவாள்—அன்பர்
துயர்கெடத் துணைவருவாள்
தாள்பணிந் தேத்திடுவோம்—தெய்வத்
தாய்நம்மைக் காத்திடுவாள்! (சக்தி)

## 250. சாரதா தேவியே

அம்ருதவாஹினி] [ஆதி

ப: சாரதா தேவியே—தீரரின் ஆவியே,
சரணம் குருதேவி—தாயே (சார)

அ: பூரண வேதமே—புனிதமெய்ப் போதமே,
புண்ணியப் புலவரெல்லாம்
போற்று கின்ற ஜோதியே (சார)

ச: புன்னகை பொங்கிடும் பொலிமுகம் காட்டுவாய்;
பூந்தளிர்க் கையினால் தீந்தமிழ் ஊட்டுவாய்;
அன்னையே, பரிசுத்த சின்மய ரூபியே,
அன்புமலர் கொண்டுனது
பொன்பதம் வணங்கினேன்... (சார)



## 251. பாதம் பணிந்தேனே

கமாஸ்] [ரூபகம்

ப: பாதம் பணிந்தேனே, பாரததேவியே—தாயே (பாத)

அ: ஆதி யந்தமிலா...நாதப்ரம்மமே,
துணை செய்திருள் வினைதீர்த்தருள்
சுதந்தர வடிவே—தாயே... (பாத)

ச: ஆத்ம சக்தர் ஜீவன் முக்தர் அருட்பணி புரிய,
அமர வாழ்வு பெருகியுலகில் ஆனந்தம் பரவ,
சத்வ ரூபியே, தாயே—சக்தி தேவியே,
சரணம்—இது தருணம்—திருக்
கருணை செய்குவாய்—அம்மா... (பாத)

## 252. கோயில் உலகெல்லாம்

அடாணா] [ஆதி

ப: கோயி லுலகெல்லாம்—எங்கள்
கோமள வல்லி குவலய ராணிக்கே (கோ)

அ: நேய மிகுந்திடுந் தூயவர் அங்கத்தில்,
நித்திய முக்தரின்
சத்திய சங்கத்தில் (கோ)

ச எங்கும் உடல்கொண் டுலாவும் உயிரிலே,
இயற்கைப் பயிரினிலே
தங்கும் மலையினில், தவம்வளர் குகையினில்,
தவழும் நதியினிலே...
திங்களிற் பொங்குந் திரைகடல் வெள்ளத்தில்,
செங்கதிர் உள்ளத்திலே...
மங்கல மாக விளங்கிடும் அன்னை
மஹாசக்தி கௌரி
மனோன்மணி அம்மையின் (கோ)

## 253. ஜெயஜெய சுத்த சக்தி

செஞ்சுருட்டி] [ரூபகம்

ப: ஜெயஜெய சுத்த சக்தி ஓம் என்றே
தியானம் செய்வோம் ஞானம் பெருக (ஜெய)

அ: பயம் பிணி துயர் பட்டென் றொழியும்
பர மானந்த அமுதம் பொழியும் (ஜெய)
ச: தன்னலத்தினைத் துறப்போம்—புவித்
தாய்நலஞ்செய்ய உயிர்ப்போம்;
இன்னல் வரினும் புன்னகையுடன்
எடுத்த வினையை முடித்து மகிழ்வோம்... (ஜெய)
வேற்றுமைகளை ஒழிப்போம்—ஆத்ம
வீரராகத் தழைப்போம்;
மாற்றுயர்ந்த விஞ் ஞானச் சுடரில்,
மனதை வாட்டி புனித ராவோம்... (ஜெய)

## 254. வந்தேமாதரம்

ப: வந்தேமாதரம்—வந்தேமாதரம்
என்று வணங்கிடுவோம்—ஒன்றாய்
நின்று வணங்கிடுவோம் (வந்தே)
அ: தந்துடல்பொருள் ஆவி—தாரக மாகிய
சக்தி பவானியை—பக்த ஜனங்க ளெல்லாம் („)
ச: அழகெனும் கோயிலில் அறிவொளி துலக்கியே
அன்பு மலர் தூவி, ஆர்வங்களைக் கூவி,
குழல்வீணை மத்தளம் குரலுடன் முழங்கவே
குயிலெனப் புகழ்பாடி மயிலெனக் கூத்தாடி (வந்தே)
வாய்மையும் வீரமும், வளமையும் இளமையும்,
வளர்தவ யோகமும், அளவறு போகமும்,
தாய்மன நேயமும், சேய்மனத் தூய்மையும்,
சாதிபேத மின்றிச் சகலரும் அடைந்திட (வந்தே)

## 255. பரிபூர்ண சுதந்திரம்

பைரவி] [ஆதி

ப: பரிபூர்ண சுதந்தர வரம்வேண்டும் அன்னையே (பரி)
அ: விரிவான விண்ணிலே விளங்கும் ஆகாயம் போலே
பிரியாத ஸ்வரூபத்தில் அறிவாகி நின்றிடப் (பரி)
ச: ஒருநொடி யின்பமும் ஓயாத துன்பமும்,
பெருகும் இருவினையின் பேதமை யில்லாத (பரி)



கட்டடி மைத்துயரை வெட்டி யெறிந்து, மனப்
பற்றைத் துறந்து, சுக முற்ற ஞானதீரனும் (பரி)
மோகாந்த காரத்தில் மூழ்கி யழியாமல்,
ஏகாந்த மோனத்தில் இருந்த படியிருக்கப் (பரி)
சுத்தசச் சிதானந்தத் துரிய வள நாட்டில்
சித்த ருடனே ஜீவன் முக்தனாய் வாழ்ந்திடும் (பரி)

## 256. எந்தாய் வாழ்கவே

ஹம்ஸத்வனி] ஆதி]

ப: எந்தாய் வாழ்கவே,—சக்தி
எந்தாய் வாழ்கவே (எ)
அ: சந்ததம் அன்பரின் சிந்தையில் விளங்கிடும் (எ)
ச: தேனினும் பாலினும் வானமு தத்தினும்
கானரசம் பொழி ஞான கலாநிதி... (எ)
கூற்றையும் சாடிடும் ஆற்றலும் ஆயுளும்
ஏற்றமுந் தருகுவாள் போற்றி மஹாகாளி... (எ)
மண்ணக வாழ்வினில் விண்ணமு தம்பொழி
தண்ணருள் செய்தமுக் கண்ணன் பராசக்தி

## 257. வாழ்வுநலம் பெருக வேண்டும்

ஆரபி] [ஆதி

ப: வாழ்வு நலம்பெருக வேண்டும்-ஞான
வாணீ நின்னரு ளாலே
அ: தாழ்வு தவிர்ந்துயர வேண்டும்-எங்குஞ்
சக்திச் சுடர்பொலிய வேண்டும்
ச: அறிவு நிறைவுபெற வேண்டும்-உயிர்
ஆற்றல் ஊற்றெடுக்க வேண்டும்
பிறவி பெருமைபெற வேண்டும்-எங்கள்
பேச்செல்லாம் செயல்பெற வேண்டும்,
உடலில் உழைப்புமிக வேண்டும்-எங்கள்
உள்ளம் ஒண்மைபெற வேண்டும்

கடலிற் கலக்குநதி போலே-மனங்
கடவு ளிடம்கலக்க வேண்டும்.
பஞ்சம் பிணிமடமை யின்றி-இந்தப்
பாரில் வளம்பெருக வேண்டும்
அஞ்சா வுரிமையுடன் மாந்தர்—உள்
அன்பால் ஒருமையுற வேண்டும்.
உச்ச மலையருவி போலே-நாம்
ஊருக் குதவிவர வேண்டும்
பச்சைப் பசும்பயிரைப் போலே-நம்
பார்வை மனங்குளிர வேண்டும்.
கல்வி சிறந்தொளிர வேண்டும்-யோகக்
கலைகள் சித்திபெற வேண்டும்
செல்வத் தொழில்செழிக்க வேண்டும்-குலச்
சேமம் செழித்துவர வேண்டும்
அல்லல் ஒழிந்துலக மெல்லாம்—சுத்
தானந்தம் பொங்கிவர வேண்டும்
நல்ல புகழ்மணக்க வேண்டும்—
நாளும் உனைவணங்கி வருவோம். (வாழ்)

## 258. காமாக்ஷீ

கல்யாணி] [ரூபகம்

ப: காமாக்ஷீ என்னைப் பெற்ற
கருணைத் தாயமுதே—ஓம் சக்தி
அ: நாமாக்ஷரம் சொல்லச் சொல்ல
நாத கங்கை நாவில் ஊறுதே (கா)
ச: உலக மாய வலையிற் சிக்கி
உருக்குலைந்து நலிந்திடாமல்
இலகு மாத்ம ஜயம் பெறவுள்ளே
இருந்துன் பிள்ளை திருந்த நடத்தாய்
என் புகழுன் புகழன்றோ
என் மகிழ் வுன் மகிழ்வன்றோ
என் ஜெயமுன் ஜயமன்றோ
என்னன்புத் தெய்வமே (கா)



## 259. ஜயஜயஜய ஹே!

அமீர்கல்யாணி] [ரூபகம்

ப: ஜயஜயஜய ஜயஜயஜய ஜயஜயஜயஹே (ஜய)
அ: துயரினியில்லை பயமினியில்லை
சுதந்தரசக்தி இதந்தருகின்றாள்... (ஜய)
ச: மங்களத்திரு மதிமுகத்தினில் வளநகை குலுங்க,
அங்கையில் அறச் செங்கோ லேந்தி
ஆத்ம சக்தி யரசி வந்தாள்... (ஜய)
ஞான மகுடந் தேவர் சூட்ட, ஞால மெல்லாம் போற்ற
சேனை வீரர் முரசொலித்திடத்
திருக்கொலுவிருந் தாள் பராசக்தி... (ஜய)
எட்டுத் திசையும் வெற்றி முழக்கம் எதிரொலி பரவ,
கட்டுகள் விடு பட்டுப் பேரின்பக்
கதிர்பரவினள் புதுயுக சக்தி... (ஜய)

## 260. சிவசக்தி ஜயகாளி

ஆபேரி] [ஆதி

ப: சிவசக்தி, ஜயகாளி, ஜயலக்ஷ்மீ வாணி
ஜகதீஸ்வரீ ஓம் சரணம்—ஸ்ரீவர தாம்பிகே (சிவ)
அ: நவராத்ரி கொலுசேவை செயுமன்பர் எல்லாம்
தவமுந் திருவுந் தனமும் மிகவோங்கித்
தழைத்திட அருள்வாய் (சிவ)
ச; உலகினில் உயிரஞ்சக் கலகஞ்செய் துண்ணும்,
கொலைபாவி அசுரரின் கொடுமையைத் தீராயோ?
அலைமோதும் துயரைவே றாரிடம் முறையிடுவோம்?
அபயம், அபயம், அபயம் ரணசண்டீ—
அருணோதய சுந்தரி (சிவ)

## 261. தாயே சரணம்

இந்துஸ்தான் பைரவி] [திஸ்ர ஏகம்

தாயே சரணம் ஜய சக்தி—யோகத்
தணலை யருளும் மஹா காளி,

நீயே தாரக மென்றறிந்து—நிதம்
நினைந்து நினைந்துருகிப் பணிந்தேன்... (தாயே)

மேகக் காரிருளைப் பிளந்தே—விண்ணில்
மின்னிக் கடகடெனச் சிரிப்பாய் ;
மோகக் காரிருளைப் பிளக்க—உன்
மூலக் கனலொளியை வீசாய்... (தாயே)

வட்டக் குளிர்மதியைப் போலே—என்
வாழ்விற் கமுதநில வளிப்பாய்,
பட்டப் பகலொளியைப் போலே—நான்
பார்க்கப் பரிவுடனே வருவாய்... (தாயே)

வானத் தமுதரசம் வழங்கி—நர
வாழ்வை அமரகவி யாக்காய்,
ஞானத் திருவருளைப் பெய்வாய்—இந்த
ஞாலம் புதுமைபெறச் செய்வாய்... (தாயே)

எங்கும் உன் மின்சார ஓட்டம்—அதில்
இந்த உலகின்விளை யாட்டம்
பொங்கும் குண்டலியின் ஊட்டம்—சிவ
போகஞ் செழிக்கவழி காட்டாய் (தாயே)

செல்வத் திருமகளே வணக்கம்—கவி
செய்யும் கலைமகளே வணக்கம்
வெல்லும் மஹேஸ்வரியே வணக்கம்-வேத
வேதாந்த நாயகியே வணக்கம்! (தாயே)

எடுத்தகாரியத்தில் வெற்றி—நிதம்
ஈந்தென் எண்ணங்களை முடிப்பாய்
தடுத்துத்துயர்செய் யிடர்வீழ—நல்ல
தாளாண்மை தந்தென்னை யாளாய். (தாயே)

சொல்லுக்கரிய சுத்தசக்தி—பரஞ்
சோதிக் கதிர்மணியே சரணம்
நெல்லுக் கிறைத்தநீர் போலென்—வாழ்வு
நிலவித் தழைக்க வரந் தருவாய் (தர்யே)



## 262. மாதங்கி சரணம்

நாட்டை] [ஆதி

ப: மாதங்கி...சரணம்—சங்
கீதாங்கி...சரணம்—ஜய (மா)

அ: நாதஸ்வ ரூபிணி—சக்தி
நாரணி—சகலகலா பரி—பூரணி (மா)

ச: தேனும் பாலும் அமுதும் கனி ரசமும்போல்
திவ்ய சாரீரந் தருவாய்!
கான சுகத்தினல் மானிட வாழ்க்கையின்
கவலையை மாற்றிட வருவாய்!
திருவே, கலையின் உருவே, வித்யா
குருவே, கற்பக தருபோ லுதவும்... (மா)

## 263. கமலவாணி

ஜகன்மோகினி] [ரூபகம்

ப: கமல வாணி அருள வேண்டும்
கலைமலர்களைக் கற்பகம்போல் (கம)

அ: விமலை யேயென் வெள்ளையுளத்தில்
வீற்றிருந்துநல் ஆற்றல் ஈந்தே (கம)

ச: அருளிற் பூத்த மலர்க ளெல்லாம்
ஆருயிர் உலகம் தெய்வத்
திருவுறவே வழங்குகின்றேன்,
திவ்ய நாமம் முழங்கு கின்றேன் (கம)

## 264. தாயே சிவகாமி

நாதநாமக்கிரியை] [சாய்ப்பு

ப: தாயே சிவகாமி, நீயொரு வார்த்தை சொல்லத்
தயவுசெய் தருணமிதே! (தாயே)

அ: சேயேன் படுந்துயரை நீயேயெடுத் துரைத்தால்,
தில்லையப்பன் அருள்
இல்லை யென்ருகுமோ ? (தாயே

ச: எல்லை யில்லாவுலகில் தொல்லைகள் ஒருகோடி!
எப்படி யிதையெல்லாந் தப்புவ தென்றறியேன்!
பொல்லா மனப்பகைவர் கொல்லுகின்றார் அம்மா,
பொன்னம்பலத் துரை என்னிலே கண்டிரங்கத் (தாயே)

## 265. தடதடவென ருத்ரசண்டி

மாண்டு] [ஏகம்

ப: தட தடவென ருத்ரசண்டி
தாண்டவம் புரிந்தாள்—ஊழித்
தாண்டவம் புரிந்தாள்! (தட)

அ: கடகடவெனக் கார்புயலிடி
கலந்து சுற்ற மின்னல் வெட்டத் (தட)

ச: சடசடவெனத் தகதகவெனச் சுடர்கள் வீழவே,
படபடவென ஊழிநெருப்பின் பாட்டு வீறவே,
மடமடவெனப் பழையகொடுமை மடிந்து போகவே,
இடியிடியென இரத்தச் சிரிப்பால்
இருள் நடுங்க இகலொடுங்கவே (தட)

## 266. எத்தனை இன்பங்கள்

வராளி] [ஜம்பை

ப: எத்தனை இன்பங்கள் வைத்தனை—தாயே
இந்த இயற்கை யுலகினிலே (எத்)

அ: அத்தனை யின்பம் புசித்திடின்—வாழ்க்கை
ஆனந்தக் காவியம் ஆகுமே! (எத்)

ச: முத்தைப் பரப்பிடும் வானத்தில்—வளர்
மோகனச் சந்திரன் மோனத்தில்,
நர்த்தனம் ஆடிடும் மின்னலில்—அம்மா
ஞான மணித்திரள் மின்னுதே! (எத்)
பொன்மயக் காலை முகத்திலே—கதிர்
பூத்துச் சொலிப்பதைக் கண்டதும்,
என்னுளத்தில் அருள் ஊறுதே—அதில்
இன்ப மணவெறி யேறுதே!—அம்மா (எத்)



## 267. சிவசக்தி தாயே

ஷண்முகப்ரியா] [ஆதி

ப: சிவசக்தி தாயே—ஜயம் அருள்வாயே (சி)

அ: தவசக்தி மிகத்தந்து மனமுவந்தே (சி)

ச: சமதம உபரதி திதீக்ஷையும்
தியான தாரண சமாதி சாதனமும்
நமனையும் வெல்லும் ஞானமுந் தந்தருள்
நாதபிந்துகலா தீத ஜோதி ஓம் (சி)

## 268. சகல பாக்யமும்

லதாங்கி] [ருபகம்

ப: சகல பாக்யமுந் தருவாய்
சௌந்தர்ய லக்ஷ்மி (சக)

அ: இகபரசுகா னந்த மான (சக)

ச: கர்ம சித்தி, ஞான சித்தி,
காய சித்தியும்
தர்மார்த்த காம மோக்ஷ
சதுர்விதபுரு ஷார்த்த மான (சக)

## 269. பரதேவீ

கோகிலத்வனி] [ஆதி

ப: பரதேவீ—ஜயபாரதி வாணீ
பவானி சிவாம்பிகே ஹே (பர)

அ: வரதாம்பா—ஞான
வாரிதியே சரணம் பரிபூரணி (பர)

ச: சுத்த சுதந்தர ஜோதிப்ரம் மானந்த
சித்தி யளித்திடும் சக்தி மஹேச்வரி—ஓம் (பர)

## 270. சத்தியம் வெல்லும்

செஞ்சுருட்டி] [ஆதி

சத்தியம் வெல்லும், தருமம் தழைத்திடும்,
தைரியமா யிருப்போம்:

சுத்த சுதந்தர ஜோதி பராசக்தி
தொண்டரைக் காத்திடுவாள் !
உள்ளத்தில் கீதையும், வள்ளுவர் வேதமும்
ஊன்றிப் பணி புரிவோம் ;
கள்ளப் பகைவர் கனலை யணைக்கக்
கருணைக் கடலுடையோம் !
கொள்ளையடித்துக் கொழுத்த பகாசுரர்
கொட்டத்தை வெட்டெனவே
பிள்ளை விளையாட்டாய்க் கிள்ளி யெறியப்
பெரிய பலந் தருவாள் !
எட்டுத் திசையும் அதிர ஜெயபேரி
கொட்டி யெழுந்திடுவோம் ;
வெட்டுமின் போலநம் வீரத்தி னுக்கவள்
வேக மளித்திடுவாள் !

## 271. உதய சுந்தரி

சுரடி] [ஏகதிச்ரம்

உதய சுந்தரி ஒத்த முகமும்
உருகு வெள்ளியை ஒத்த உடலும்,
சுதந்தரச் சுடர் சொக்கு நகையும்,
சோம சூரியர் தோன்றும் விழியும்,
புதிய தாமரைப் பாதமும், பூங்கை
பொங்குமங்கல வீணையுங் கொண்டென்
இதயத் தாமரை வீற்றிருந் தாளாய்
இறைவி யேசரணம் இசை வாணீ !
வீடுதோறும் விளக்கொளி யாவாய்
வீதி தோறும் வியன்கலை யாவாய்
ஏடு தோறும் எழுத்துருக் கொள்வாய்
இதயந்தோறும் எழிலின்ப மாவாய்
பாடு நாவினிற் பண்ணொலி யாவாய்
பார்வைக் கெல்லாம் பரிதிநீ யாவாய்
நாடு வாழ்ந்திட நல்லறி வீவாய்
ஞான வாணி பராசக்தி தாயே !



## 272. வரம்

இராகமாலிகை] [ரூபகம்

வரமெனக் கருள்வாய்—பராசக்தி
வரமெனக்கருள்வாய்—தாயே
சரண மாமலர்க் கோயிலில் என்மனம்
இரவும் பகலும் இருந்து மகிழ்ந்திட... (வர)
அறிவொளி தருவாய்—பராசக்தி
அமரவாழ் வளிப்பாய் ;
ஆயுள் முழுதும்உன் அன்புக் கலையினில்,
தோயும் சுகமே சுகமெனக் காகுமே (வர)
உடலுறுதியுடன்—பராசக்தி
திட மனமருள்வாய்—தாயே
என்றுமுன் எண்ணத்தில் ஊறிக் கவலையை
வென்றுன் அருள்வழி நின்று செழித்திட (வர)
வைரிகளை வெல்ல—பராசக்தி
தைரியம் அருள்வாய்—அம்மா
பாரில் அதர்மப் பதர்களைப் போக்கியே
சீரிய தெய்வ குலத்தினை ஆக்கிட... (வர)

## 273. ஜகதம்பா

ரதிபதிப்ரியா] [ஆதி

ப: ஜகதம்பா சரணம்—ஜய
ஜனனி பராசக்தி சாம்பவி தாயே (ஜக)
அ: இகபர சுக கன தாயகி சரணம்
ஈச்வரி ஜயஜய காளி மஹா மாயா (ஜக)
ச: கிண்கிணிச் சதங்கையும் கங்கணக் கரங்களும்,
கிளர்நகை முகமலரும்
பங்கய விழிமலர் பரிவருள் கருணையும்
பண்பொழி வீணையுடன்,
இங்கே யிதயந் தங்கி விளங்குவாய்
சங்கரி நாரணி வாணி மஹா சக்தி (ஜக)

## 274. எழுந்தருள்

கரகரப்ரியா] [ஆதி

ப: எழுந்தருள் திருமகளே—எனக்கிரங்கி (எழுந்)

அ: கொழுந் தொளிர் குண்டலி சக்தி பவானி
குறுநகைச் செல்வியே கோமள வல்லியே (எழுந்)

ச: தாழ்வும் சிறுமையும் தரித்திரமும் விலக
தனகன பாக்கியம் தழைத்து நிலவவே,
வாழ்வெல்லாம் ஆனந்த வரகவி யாகவே
மங்கல ஸமயோகம் எங்கும் விளங்கவே (எழுந்)

## 275. ஆசீர்வாதம் தருவாய்

ஆரபி] [ஆதி

ப: ஆசீர்வாதம் தருவாய்—ஜகதீஸ்வரி
அன்புப் புன்னகை புரிவாய் (ஆசீர்)

அ: தேசு லாவுந் திருச் செந்தா மரைக் கையால்
தீரக் கனல் பெருகிப் பூரணம் பொலிந்திட (ஆசீர்)

ச: சித்த சலனங்களை ஒழிப்பாய்—எம் உள்ளத்தில்
திவ்யப்ர காசமாய்ச் செழிப்பாய்;
சுத்த சுதந்தரம் கொடுப்பாய்—எம் மனத்தினைத்
துண்டுசெய் மாயத்தைத் தடுப்பாய்...
சத்திய ஜோதி—ஜீவன்—முக்தி—சச்சிதானந்த
சித்தி விளங்க—யோக—சக்தி மிகப் பொழிந்துன் ()

## 276. பயப்படாதிரு மனமே

பரசு] [திரிபுடை

ப: பயப்படா திரு மனமே—நல்ல
பக்தரைக் காக்கும்பரா சக்தி துணையுண் டென்றும் ()

அ: அயலவர் வாழ்ந்தால்வெம் புயலெனச் சீறிடும்
ஆத்திரப் பொறாமையின் நாத்திகக் கொடுமையால் ()

ச: நயவஞ்ச கம்பின்னே நகைத்துப் புறம்பேசினும்,
நமன்பாச மேயெதிர்த்து நலிவுற வீசினும்,



சுயநல வகங்காரம் துயர்பல செய்தாலும்,
துஷ்டப் பகைவர் உன்மேல் சுடுசரம் பெய்தாலும்,
பதறாதே—சித்தஞ் சிதறாதே—அன்பை
உதறாதே—விம்மிக் கதறாதே
தயைவடி வான தேவி அபயந்தந் துணைக் காப்பாள் ()

## 277. பல்லாண்டு

காம்போதி] [சாய்ப்பு

ப: பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
வாழ்கநீ பாரதத்தாய்! (பல்)

அ: எல்லா வளங்களும், எல்லா வரங்களும்
ஈந்துல குய்ந்திடவே! (பல்)

ச: உன்மணி மார்பமு துண்ட குழந்தைகள்,
உன்னிசைக்கே உயிர்ப்போம்!
உன்னுத்தம சக்தியால் இன்னலெல் லாந்தீர
உலகைவென் றிசை பெறுவோம்! (பல்)
பற்றலர் நடுங்கிடப் பந்தங்கள் சிந்திடப்
பரம சுதந்தரராய்,
ஒற்றுமை கொண்டிங்கே ஓர்குல மக்களாய்
ஓங்கக் கருணை செய்தாய்! ஓம் சக்தி! (பல்)

## 278. சக்திக் கனல்

சுபபந்துவராளி] [திரிபுடை

ப: சக்திக் கனல் வளர்ப்போம்—சுத்த
சக்திக் கனல் வளர்ப்போம் (சக்தி)

அ: பக்திக் கனலால் பரிசுத்த மாகியே
முக்தி யளித்திடும் மூலகுண்டலியான (சக்தி)

ச: துச்ச நினைவுகளைப் போக்குமே,
தூய சுதந்தரத்தைக் காக்குமே
நச்சுந் தினவுகளை நீக்குமே,
நல்லசெயலில் வெற்றியாக்குமே!
அச்சப் பெரும் பிழையைத் தாக்குமே,
'அமரன்யான்' எனும்உணர் வூக்குமே;

கொச்சை யரக்கர்களை வீழ்த்துமே,
கொண்டாடும் அன்பர்களை வாழ்த்துமே!
கூற்றை யுதைத்தவனைப்
போற்றிப் பரமானந்த
ஊற்றை மிகப் பெருக்கி
ஆற்றல் அருளுந் தெய்வ (சக்தி)

## 279. அன்னை, அன்னை அமுதம்

இந்துஸ்தான் தோடி] [தேசாதி

ப: அன்னை அன்னை அமுதம் (அன்னை)
அ: என்னைப் பேரின்பப்பசி
தின்னு தம்மா—சும்மா (அன்னை)
ச: ஆறு கமலந் தாண்டி, ஏறி ஸஹஸ்ராரத்தில்,
வீறுங் குண்டலிக் கனல்
சேரும் மதிமண்டலம்,
ஊறும் அமரானந்தத் தேறல் அருந்தி, யுடல்
மாறி சுத்தானந்தப்
பேறு பெறவேண்டினேன்! (அன்னை)

## 280. சுத்த சக்தி

தேவ மனோஹரி] [தேசாதி

ப: சுத்தசக்தி ஜய சுத்த சக்தி ஓம் (சுத்த)
அ: அத்துவித மான தத்துவப் பொருளின்
அனுபவந் தரும் ஆதிமந்திரமே (சுத்த)
ச: அற்புத உலகை அசல சாட்சியாய்
ஆக்கி ஊக்கி நீக்கும் அருளாணை முதல்வன்,
சிற்சுகோ தயனும் சிவகௌரி நாதன்,
தியான சாதனத்திற் கானமந்திரமே (சுத்த)

## 281. அம்மா பரதேவி

தேவகாந்தாரி] [திரிபுடை

ப: அம்மா பர தேவி—உன்
அன்பே எனக் காவி! (அம்மா)



அ: இம்மானிட வேஷத்தை ஏந்திய சாந்தமே (அம்மா)
ச: புன்னகை வாய் திறப்பாய்—என்னுள்உன்
போதவெள்ளம் சுரப்பாய்;
இன்னலிடர்களைத் தவிர்ப்பாய்—அம்மா
இன்ப வரங்களெல்லாங் கொடுப்பாய்;
தன்னல வகந்தையை அழிப்பாய்—மனச்
சஞ்சலப் பேயினை ஒழிப்பாய்;
உன்குல மக்களாய் உலகெல்லாம் வாழ்ந்திடும்
ஒற்றுமை நாட்டிட நற்றவ சக்தியருள் (அம்மா)

## 282. ஆனந்த கீதம்

சிந்துபைரவி] [ஆதி

ப: ஆனந்த மாகிய கீதம்—சச்சி
தானந்த ஓமெனு நாதம்
அ: தானந்தமில்லாத வேதம்—பர
சாந்த மயமான போதம்— (ஆ)
ச: தானேதா னைவினோதம்—தூய
சமரஸமான அபேதம்
நானிலம் வானர சாட்சி—யாக
நல்கிடும் தெய்வப்ர சாதம்
தித்தித்துள்ளூறும்
தீச்சுடர் வீறு—சுத்த
சக்தி ஓம் என்கிற
தாரக அமுதம்

## 283. தாயே

ஸ்ரீரஞ்சினி] [ஆதி

ப: தாயே...தயை புரிவாய்—என்குறைகளை
நீயே நன்கறிவாய்–
தஞ்சமளித்திடத் தயை புரிவாய்–அம்மா (தா)
அ: பேயாமுலகிலே சேயேன் படுதுயர்
பேசிமுடியாதே–பிடித்தேனுன் பாதமே (தா)

ச: மண்ணாசையுலகிலே மமதை நரகிலே
மனமாயக் காட்டிலே தனமாயக் கூட்டிலே
புண்ணாகி நோகிறேன் கண்ணாரக் காணம்மா
புகலடைந்தேன் உன்னை நிகர்துணை வேறுண்டோ (தா)

## 284. கண்டார் மனம்

மணிரங்கு] [ஆதி

ப: கண்டார் மனங்குளிரும் கன்யாகுமரியே
கருணைத் தடங்கடலே-
அ: விண்டார் பேரின்ப மெய்த விளங்கும் பரதேவியே
வீரர்குல தெய்வமே வெற்றிதரும் துர்க்கையே (க)
ச: காலமெல்லாம் உள்ளம் கசிந்து கசிந்துருகும்
கன்னித் தமிழ் பாடிக் கைகூப்பி வணங்கினேன்
நீலக் கடலோரம் நிட்டைகூடி யிலகும்
நீண்ட தவக் கோலமே
காலக் கதைகள் சொலும் வேலை முழக்கமுடன்
ஞால நாடகத்தை நடத்தும் சுத்த சக்தியே (கண்)

## 285. நல்ல வரம்

இராகமாலிகை] [திஸ்ர ஏகம்

நல்லவரந் தருவாய்—வருவாய்
நாவினிலே அமுதாய்
அல்லலறுத்திடுவாய்—தாயே
அபயமளித்திடுவாய்
பிணிதுயர் வறுமை—மடமைப்
பீடைகளை யொழித்தே
அணியழகுடனே—வாழும்
ஆரோக்கிய மீந்திடுவாய்
அலை சின வெறிகள்—அடங்கி
ஆணவப் பேய் வணங்கி
மலை யெனவுறுதி-கொண்ட
மன நலந்தருவாய்



பாட்டுப் பறவைகள் போல்—ஓம் எனப்
பாடும் அருவியைப் போல்
தோட்டக் கனிமரம்போல்—சுதந்தரத்
தொண்டின்ப மீந்திடுவாய்
செல்வத் தொழில் வளர—ஞானஞ்
செழித்து மேலுயர
கல்வி வளம் பெருக—தெய்வக்
கலை வரந்தருவாய்
வள்ளுவர் கம்பரைப் போல்—வரம்பெற்ற
வாக்கினிமை தருவாய்
பிள்ளையென என்னை நீ—சுத்த சக்தி
பேணி வளர்த்திடுவாய்

## 286. சக்தி விசாலாட்சி

காபி] [ஆதி

ப: சக்தி விசாலாட்சி சமேத விசுவநாத
சாமியே ஓம் சரணம்—சிவகங்கேசனே (ச)
அ: பக்தியு ஞானமுங் கர்மயோகமுந்தந்து
பாராலய வாழ்வு சீரோங்கவே யருள்வாய் (ச)
ச: ஒருவா, உயிர்க் குலத்தின் இறைவா உளந்தோறும்
ஓங்கார நடம் புரிவாய்
திருவோங்க வுருவோங்க
அறிவோங்கச் செறிவோங்க
ஜெயமோங்க சிவஜீவ
சித்தோங்கவேயருளும் சுத்தானந்த ஜோதியே (ச)

## 287. பூரண யோக மஹேஸ்வரி

பைரவி] [ஆதி

ப: பூரண யோக மஹேஸ்வரி தாயே,
புவனேஸ்வரி கதி நீயே—அம்மா (பூரண)
அ: நாரணி, ஜீவோத் தாரணியே—சிவ
நாயகியே, மோக்ஷ தாயகியே—சக்தி (பூரண)

ச: வீரரின் வீரமும், வித்தகர் ஞானமும்,
வேதத்தின் சாரமும்—நீயே!
தாரக நாமமும், தர்மார்த்த காமமும்,
ஸஜ்ஜனர் க்ஷேமமும் நீயே—சக்தி (பூரண)
அரனரு ளாகவே ஐந்தொழில் புரிந்திடும்
ஆதி பராசக்தி நீயே!
வரதாயகி சுத்த கௌரி மனோன்மணி
வாசாம கோசரி நீயே—சக்தி (பூரண)

## 288. அம்மா உன்னையே

பந்துவராளி] [சாய்ப்பு

ப: அம்மா உன்னையே நம்பினேன்—பராசக்தி (அம்மா)
அ: இம்மகி தலத்தினில் இல்லை வேறோர் துணை (அம்மா)
ச: கவலைக் கடல்கடக்கக் கப்பலும் நீயே
கட்டற்ற கரைசேர்த்துக் காப்பவளும் நீயே;
சவலைக் குழந்தையெனைத் தாங்குவ துன்பாரம்;
சரண்புகுந் திருப்பதே சத்திய வேத சாரம்! (அம்மா)

## 289. பக்தரக்ஷணி தாயே

பியாகு] [தேசாதி

ப: பக்த ரக்ஷணி தாயே,
சக்தி பவானி ஓம் சக்தி பவானி! (பக்த)
அ: சக்தி பவானி—துக்க நிவாரணி (பக்த)
ச: தீரர் வணங்கிடும் வீரமஹா காளி
சூரக்கனல் பெருகச் சுதந்தரம்—வீர
சுதந்தரம்—ஆத்ம
சுதந்தரம் தருவாய்! (பக்த)

## 290. நாராயணி சரணம்

வராளி] [ரூபகம்

ப: நாரயணி சரணம்—தாயே
ஞானவாணி சரணம்—ஜய (நாரா)



அ: ஆராதனை செய்யு மன்பர்க்குன்
அறிவுங் கலையும் திருவுந் தருவாய் (நாரா)
ச: மடமை யிருளைப் போக்கி—எங்கள்
வாழ்வை மங்கல வீணையாக்கி,
கடமையான பணிகள் புரியக்
கல்வி செல்வம் நல்கி யருளாய் (நாரா)
ஆற்றல் மிகவும் வளர—உள்ளே
ஆத்மசக்தி ஜோதி ஒளிர,
வீற்றிருந்துள்ள மலரில் எம்மை
வீர—தீர—சூர—ராக்குவாய்! (நாரா)

## 291. பிரியமாய்

நாட்டை] [ஆதி

ப: பிரியமாய் என்மனந் திருநடம் புரிகுவாய்
ப்ரணவகலா ஜோதியே—ஓம் சக்தி (பிரி)
அ: அரிகதிர் போலநீ புரிநகையாலே என்
அங்கங் குளிர—சொக்கத் தங்க அருவிபோலே (பிரி)
ச: பண்ணுறு யாழ்குழல் தண்ணுமையுடன், அருள்
பழுத்தநல் லிசை வளர,
கிண்கிணிச் சலங்கைகள் கிளர்ந்தொளி—துலங்கிட
கிரணங்கள் வீசிடுங் கரணங்கள் குலுங்கிட (பிரி)

## 292. கலக்கந் தவிர்த்து

சிந்துபைரவி] [ஆதி

கலக்கம் தவிர்த்து வெற்றி ஈவாய்—ஓம்
காளீ சரணம் ஜய சண்டீ,
அலக்கண் அழிக்கும் அருள் அம்மே—உன்
அன்பர்க் கபஜயமும் உண்டோ?
வீரக்கனல் பெருக வேண்டும்—தோள்
விம்மிப் புடைத்துயர வேண்டும்
பாரைச் சுமந்து புரந் தோங்கும்—சக்தி
பாலித்தருள் ஜய பவானீ (கல)

கொற்ற சிவாஜியைப் போலே—குரு
கோவிந்த சிங்கனைப் போலே
மற்றொரு விஜயனைப் போலே—ரண
மல்லர் படை திரள வேண்டும் (கல)
மலையைத் தகர்த்தெறியும் புயமும்—எதிர்
மாற்றார் நடுநடுங்கும் உரமும்—வீரக்
கலையில் மிகப்பழகும் கையும்—உன்
கருணைத் திருநகையுந் தாராய் (கல)
இந்திர வச்சிரத்தைப் போலே—உடல்
இறுகித் திறமையுடன் விளங்க,
கந்தன்போல் அரக்கரை அழிக்க—வெற்றிக்
கனலைத் தருவாய் ஜய காளீ... (கல)

### 293. ஓம் பராசக்தி

வகுளாபரணம்] [ஆதி

ப: ஓம்பராசக்தி சண்டி பவானீ,
உள்ளத் தோங்கி ஒளிருங் கனலே (ஓம்)
அ: தீமை தீர்ந்திட நன்மை பெருக
தேசம் வாழத் திருவருள் செய்வாய் (ஓம்)
ச: அன்றலர்ந்த அருமரை போலே
அழகு சொட்டும் அமுத நகையால்
இன்றென் வாழ்க்கை யிலங்கிடச் செய்வாய்
இந்தியாவினுக் கின்பங்கள் ஈவாய் (ஓம்)

### 294. பாரத சக்தி

ஹம்ஸத்வனி] [திஸ்ர ஏகம்

ப: பாரத சக்தி சத்திய ஜோதி
பாரினை மாற்றும் பரிசவேதி (பா)
அ: பூரண சாந்தம் பொங்கிடும் அழகே
புண்ணிய ஜீவகா ருண்ணிய வாழ்வே (பா)
ச: தேன்பொழி சோலைத் தீங்கனி யமுதம்
ஜெயஜெய வென்னும் திரைகடல் முரசம்
ஊன்வளர் உயிரில் வான்சுவை பொழியும்
உன்னருளாலே உலகிரு ளொழியும்
சுந்தர மங்கள சாந்தம்—எங்கும்
துலங்கிடும் சுதந்தர வீரம்— (பா)

## 5. ஹரி பஜனை

### 295. அமுதம்

கானடா] [ஆதி

ப: அமுதம் உண்ணுவோம்—ஸ்ரீ
ஹரி பஜனையில் ஊறிப் பெருகும் (அமு)
அ: தமகுணம்போக மனதை விலக்கி
சாத்வீகமாம் பசுவின் பாலும்
அமைதி தெளிந்த அறிவுத் தேனும்
அன்பில் விளைந்த அருளும் கூட்டி (அமு)
ச: அகம்பாவத் துரும்பை அகற்றி
அடிக்கரும்பின் சாறை ஊற்றி
சுகந்தரும் கனி ரஸமுங் கூட்டி
சுத்த நாம ஸங்கீர்த்தனமாம் (அமு)

### 296. சாந்தமாய்

பீம்ப்ளாஸ்] [ஆதி

ப: சாந்தமாய் ஓம்ஹரி ஓம் ஹரி ஓம்என
சாதனம் செய்மனமே—ஜப—சாதனம் செய்மனமே ()
அ: காந்தம்போல் உள்ளத்தைக் கவர்ந்து கலந்திடும்
கண்ணனைத் தண்முகில் வண்ணனை எண்ணியே ()
ச: பேரத்திலும்—ஆர—வாரத்திலும்—ஒரு
காரியம் இல்லை நெஞ்சே
ஆரத் தெளிந்தநல் லன்பருடன் வேத
சாரமதான—ஓம்—காரச்ருதியுடனே (சா)

### 297. குழலோசை

கமாஸ்] [ஆதி

ப: குழலோசை கேட்குதம்மா...
கோபால கிருஷ்ணன் (குழ)

அ: மழலையும் கிள்ளையும் மந்த மாருதமும்போல்
மாயவன் கோகுல மாதவன் ஊதிடும் (குழ)

ச: ஞால வுயிர்க ளெல்லாம் நாதக் கனவினிலே
நட்ட சித்திரம் போலே அட்டதிக்கும் இருக்க
காலவேகமும் ராச லீலையைப் பார்த்து நிற்க
காதலர் எல்லாம் ஜீவ நாதஸ்வரத்திற் சொக்கக் ()

## 298. கண்டவர்

கமாஸ்] [ஆதி

ப: கண்டவர் மறவாரே—கண்ணா உன்னைக்
கலந்தவர் பிரியாரே (கண்)

அ: மொண்டென் உயிரை உண்ட மோகனக் காந்தனே ()

ச: நீலமதிபோல் முகமும்—அதிலே முத்து
நிலவொளிர் கனி நகையும்
வேலைப் போலே விழியும்—அதில் விளங்கும்
வீரக் கருணை யாழியும்
சோலைமலர் போல் வனப்பும்—அதன்மிசை
சொக்கும் தெய்வக் கனலும்
ஞாலத்தை வசஞ்செய்யும் கோலத்தைக் கொண்டருள்
பாலித்தென் மனையினுள் கால்வைத்தகாட்சியைக் „

## 299. வழிகாட்டி நடத்தினன்

கௌளிபந்து] [தேசாதி

ப: வழிகாட்டி நடத்தினன்
வரதராஜப் பெருமான் (வழி)

அ: பழிபாவ மானபடு குழியில் விழுந்த வென்னைப்
பரிவுடன் கரையேற்றிப்
பரம பக்தியிற்கூட்டி (வழி)

ச: பொருளறி யாது மண்ணைப் பொருளென மதித்தேன்,
பொய்யகங் காரத்தில் போதத்தை மிதித்தேன்;
அருளொளி காட்டியென் இருள்வினையை ஓட்டி
அஞ்சலிக் கைநீட்டி அன்பமுதத்தை ஊட்டி (வழி)



## 300. தேடு மனமே

செஞ்சுருட்டி] [ஆதி

ப: தேடுமனமே—அன்பை நாடு மனமே,
திருமாலின் கருணையைத் தேடு மனமே! (தேடு)

அ: பாடு மனமே களித் தாடு மனமே
பக்த வத்ஸலன் அருள் கூடுமனமே! (தேடு)

ச: கூவு குயிலே—நெஞ்ச—மேவு குயிலே
கோவிந்த ராஜனையே கூவு குயிலே
ஆவியில் ஆனந்தந் தாவிவருமே—பூங்
காவினில் விளையாடும் கோபாலக்ருஷ்ணனையே ()

## 301. கோவிந்தராஜப் பெருமான்

பிலஹரி] [ஆதி

ப: கோவிந்த ராஜப் பெருமான்—அருள்புரிவான்
கொண்டகாரியம் வெற்றி கண்டு மனமகிழக் (கோ)

அ: தேவர்கள் சேவிக்கும் தில்லை நடராஜன்...
சிற்சபைக் கூத்தினை உற்சாக மாகப் பார்க்கும் (கோ)

ச: கோடி அரக்கர் படை—கூடி யெதிர்த்த போதும்,
கோதண்டத் தாலவர் குலத்தைவேர் அறுத்தவன்...
வாடிய தருமத்தை வானென வளர்ப்பவன்,
வாழையடி வாழையாய் வந்துநம்மைக் காப்பவன்! ()
கொஞ்சும் குழலோசையால் நெஞ்சை யள்ளிக் கலந்து,
கோபியரின் ஆத்ம தாபத்தைத் தீர்த்த கண்ணன்...
வெஞ்சம ரிடை சோர்ந்த விஜயன் உறுதிபெற
வேத வேதாந்தஞானக் கீதையுரைத்த வீரன் (கோ)

## 302. அவனே வைஷ்ணவனும்

சங்கராபரணம்] [ஆதி

ப: அவனே வைஷ்ணவனும்—
ஆருயிர் அனைத்திலும் ஹரிதரிசனம் செய்யும் (அவ)

அ: சிவனே யெனினும் மா தவனே யெனினும்
ஜீவ ஜகதீசனைச் சிந்தனை செய்திடும் (அவ)

ச: ஞானமவன் முகம்; பக்தியவன் அகம்
ஞாலத் திருத்தொண்டே ஆலய சேவை;
மோனமவன் மனம்; தானமவன் கரம்;
முக்குணந் தாண்டிய பக்குவ சீலனும் (அவ)
காமஜயமே கல்வி; நாமஜபமே சொல்லும்
கண்ணன் அருளொன்றே எண்ணரிய செல்வம்;
சோமசூரியர் போல நேமமாய் வாழ்வதே
சுதந்தர முத்தியாய்த் துலங்கும் பரமயோகி (அவ)

## 303 ஆத்ம ஸமானமே

மயூரத்வனி] [ஆதி

ப: ஆத்ம ஸமா னமே—அகில உலகமெல்லாம் (ஆ)

அ: பூத்த மலர்குலுங்கும் புன்னகை போலவே (ஆ)

ச: ஹரி ஹர மஹாதேவ அல்லா பரமபிதா
அன்னை சக்தியெனவே உன்னை வணங்குவோர்
பெரியவ ராயினும் சிறியவ ராயினும்
பிரிவினை யுணர்வில்லா அறிவினை யுடையவர் (ஆ)

## 304. காதலாகினேன்

சுரடி] [ரூபகம்

ப: காத லாகினேன்—உன்னைக்
காணக் காணக் காண நாளும் (காத)

அ: மாதவா ஹரே...க்ருஷ்ணா
ஜய மனோஹரா (காத)

ச: வேணு கானம் கேட்ட போதே
வேக தாக மாகினேன்...
நாணம் அச்சம் விட்டுன் அடியை
நாடி னேன் ஜகன் மோகனா—மிகக் (காத)
சதுர்மறையின் சார மான
ஸர்வ ஜீவ நாதனே...
மதுர பாவ னையில் உன்னை
மார்புடன் அணைந்து கொஞ்சக் (காத)



## 305. அபராதங்கள்

அமீர்கல்யாணி] [ரூபகம்

ப: அபராதங்கள் பொறுப்பாய்—கண்ணா
அபயம் அபயம்—அபயம் அபயம் (அப)

அ; உபய பாதம் பற்றிக் கண்ணீர்
ஊற்றி ஊற்றி உள்ளம் உடைந்தேன் (அப)

ச: சன்மார்க்கத்தை விடுத்தேன்—மனச்
சாந்தத்தைப்பறி கொடுத்தேன்...
துன்மார்க்கத்தைத் தூவென் றுதறத்
தூய பக்தர் நேயம் அருளாய் (அப)
ஈனச் செயல்கள் புரிந்தேன்—உன்
இணையடியினை மறந்தேன்;
ஞான குருவாய் வருவாய்—என்றே
நம்பி நம்பி நம்பி யிருந்தேன் (அப)

## 306. வாராதோ கருணை

பிலகரி] [ஆதி

ப: வாரா தோ கருணை—கண்ணா இந்த
மலையருவியைப் போலே சலசல என ஓடி (வா)

அ: நாரா யணாஓம் என்றே தாரக நாமத்தை
நம்பி ஜபித்திடும் அன்பர் மன மகிழ (வா)

ச: அருண மலரைக் கொஞ்சும் ஆனந்தத் தென்றல்போல்,
ஆயர்புல் லாங்குழலில் பாயும் இசைநயம்போல்,
கிரணரவி நகைக்கும் கிழக்கொளி போலவே,
கிளர்ந்து தளிர்ந்தென் உள்ளம்
குளிர்ந்து நிறைந்திடவே (வா)

## 307. ஏழுமலை

யதுகுலகாம்போதி] [ஆதி

ப: ஏழுமலை-தாண்டிவந்தேன்-என்முகம் பாராய்
ஏங்கிமிக வுனையடைந்தேன் வேங்கடேசனே-

அ: பாழுலகின் மாயத்திலே பட்டது போதும்
பரிவுடனே எனக்கருளுன் பாதமெப்போதும்

ச: வருந்தி வருந்தி மனமடங்க மருந்துதேடினேன்
மலைமருந்தே கலைவிருந்தே நிலையெனக்கருள்
அருந்துணைவா உன்னையன்றி யாருமில்லையே
அலமேலு நாயகனே ஆண்டருளையா...

## 308. ஸ்ரீரங்கராஜா

இராகமாலிகை] கேதாரகௌளம், அடாணா, கானடா [சாய்ப்பு

ப: ஸ்ரீ ரங்கராஜா—ஸ்ரீரங்க ராஜா—உன்
சேவானந்தமேபர மானந்தமே—அப்பா (ஸ்ரீ)

அ: ஆரணப் பொருளெல்லாம் அடங்கிய உருவமாய்
ஆளவந் தார் கண்ட அரவணைச் செல்வனே (ஸ்ரீ)

ச: சக்தி வரலக்ஷ்மி ஜயமார்பி லேதுலங்க
ஜகன்மாதா உன்னடித் தாமரையில் விளங்க
பக்தி ஹ்ருதயமான பாற்கடல் மீதிலே
பரம குண்டலி மேலே துரியத் துயில் வளரும் (ஸ்ரீ)
உலகைத் துரும்பென உன்னைக் கரும்பெனவே
உருகி உருகியன்பு பெருகிப் பதமடைந்த
குலசேகரப்பெருமான் கொண்ட பக்திப்ரசாதம்
கொடுத்தென்னை ரக்ஷிக்கப் பிடித்தேனுன் பொன்னடி (ஸ்ரீ)
காமஜபம் ஒழிந்துன் நாம ஜபம் அருளாய்
கள்ள நீலன் மனதைக் கொள்ளைகொண்ட வள்ளலே,
ஓம்நமோ நாராயணா ஹரி ஓம் என்றே
ஓதும் அன்பருக்கனு பூதி தரும் அரசே (ஸ்ரீ)

## 309. உள்ளம் சிலிர்க்குதே

பூர்வகல்யாணி] [ரூபகம்

ப: உள்ளம் சிலிர்க்குதே—கண்ணா
உன்முகத்தைப் பார்க்கப் பார்க்க—என் (உள்)

அ: கள்ளங்கரவின்றி யுன்னைக்
காதலிக்கக் காதலிக்க—என் (உள்)

ச: பிரியமான பொருளே—என்னைப்
பிரியாத்திரு அருளே—ஓம்
கிரிதரகோ பால ஜோதி
கிருஷ்ணதாசி மீரா நாதா (உள்)



## 310. கண்ணா!

சிந்துபைரவி] [ஆதி

கண்ணா, கருணை முகில் வண்ணா—எம்மைக்
காக்கும் மனமோகன ரமணா
பண்ணார் குழலிசைத்து வருவாய்—உன்
பரம சுகநிதியைத் தருவாய் (கண்ணா)

வஞ்சப் பூதகியை வதைத்தாய்—மாய
வண்டிப் பேயை எட்டி உதைத்தாய்
நஞ்சப் படமெடுத்த பாம்பின்—மீது
நர்த்தனம் செய்நந்த பாலா (கண்ணா)

ஆயச் சிறுவருடன் கூடி—விளை
யாடிப் பாடிவரும் அழகா—உன்னைத்
தாயன்புடன் கட்டித் தழுவ—மனத்
தாகந் துடிக்குதடா குழகா (கண்ணா)

கொல்லக் கொடுமைசெய்த மாமா—மாயக்
குத்திக் குமைத்தபரந் தாமா
செல்வ ருக்மணி ஸத்ய பாமா—வுடன்
செங்கை கோத்துலவும் ச்யாமா (கண்ணா)

வீர விஜயனுக்குக் கீதை—சொல்லி
வெற்றி யளித்த பரஞ் ஜோதி
பாரத தேசத்தின் குருவே—நல்ல
பக்தர் நெஞ்சில் வளர் திருவே (கண்ணா)

## 311. பிருந்தாவனம்

ஹிந்தோளம்] [ஆதி

ப: பிருந்தாவனம் இதுவோ?—கண்ணன்
பிள்ளையாய் விளையாடி உள்ளத்தை அள்ளிய (பி)

அ: பொருந்தும் அன்பருக்கின்ப—
விருந்தாய்க் கவலை மாற்றும்
மருந்தாய் ராதாகோவிந்தன் இருந்தே குழலூதிய (பி)

ச: தானவர் செருக்கினைத் தகர்த்துப் பிரியமான
தாஸகோபியருடன் ராஸக் கிரீடை செய்து,
கானத்திலே கோபாலன் கன்றுகளை மேய்த்துக்
காதலர் சித்தத்தைக் காந்த மெனக்கவர்ந்த (பி)

## 312. இது தகுமோ

அடாணா] [ஆதி

ப: இது தகுமோ துரையே—உன்னை
எண்ணிடும் புண்ணியர் கண்ணீர் விடுவதும் (இது)

அ: துதிசெய்த் தொண்டர்கள் தூற்றிடும் துட்டரால்
மிதிபட்டுத் துயர்ப்பட்டுக் கதியற்று நிற்பதும் (இது)

ச: ஈனமில்லாத கிராதகர் கையினில்
மானிகள் தவிப்பதும் விதியோ?
இரண்டகஞ் செய்திங்கே சுரண்டிடுந் திருடரின்
இடுக்கியில் ஒடுக்கிடல் முறையோ?
இடர்களுக் கில்லையோர் கரையே?—ஐயா
எவரிடம் சொல்லுவோம் குறையை—ஓம் ஹரி (இது)

## 313. பால கோபாலனே

ஆனந்தபைரவி] [ஆதி

ப: பாலகோ பாலனே, பக்ஷம்வைத் தாளுவாய்
பரமா னந்த லீலனே! (பால)

அ: ஞாலத்தி லேயாத்ம ஞானபக்தி கர்மத்தால்
கோலத் திருவாழ் வெய்தக் குழலிசை பரவிய (பால)

ச: வஞ்சனை யரக்கியின் மாயவுயிர் குடித்தாய்;
வாரிச்சென்ற தானவன் பாரில் வீழ மடித்தாய்;
நெஞ்சில் வந்திடர்செய்யும் வெஞ்சினப் பேய்களை
நீறுசெய் துன் அன்பில்
மாறில்லா திருக்கச் செய் (பால)

## 314. ஸ்ரீராம் ஜயராம்

நாராயணகௌளை] [ஆதி

ப: ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம் (ஸ்ரீ)



அ: நாரா யணஓம் நமச்சி வாய, வெனும்
சாரமான நல்ல தாரக மந்திரம் (ஸ்ரீ)

ச: சஞ்சலத் தைக்கெடுத்துச் சாந்தத்தைக் கொடுப்பது;
அஞ்சலென்றே என்றும் அச்சம் ஒழிப்பது! (ஸ்ரீ)
காமாதி யரக்கரைக் கட்டுடன் அழிப்பது;
நேம நிஷ்டையுள்ள நெஞ்சிலே செழிப்பது! (ஸ்ரீ)
ஆரமு தினும் இன்பம் அன்பருக்காவது;
நாரத முனி சொன்ன ஞானத் திரு மந்திரம் (ஸ்ரீ)

## 315. நித்தியம்

கானடா] [ஆதி

ப: நித்தியம் பக்தி செய்வோம்—மனமே
நீலமேக ச்யாமள மூர்த்தியை நினைந்தே (நித்)

அ: சத்திய வாக்குடன் சாந்த ஹ்ருதயத்துடன்,
சாதுக்க ளுடன் கூடி மாதவா ஹரேயென்றே ()

ச: ஆசையாணவப்பேய்கள் வீசும் வலைப்படாமல்
நேசமுடனே ரவி தாஸப்ரபுவை நம்பி (நித்)

## 316. ஒருகணமாயினும்

தேவகாந்தாரி] [ஆதி

ப: ஒருகண மாயினும் மறவேனே—என்
உள்ளத்தைக் கொள்ளைகொண்ட
இறைவனே உன்னை (ஒ)

அ: குருவும் குலதெய்வமும் கொண்ட மணாளனும்,
கோவர்த்தன கிரிதர கோபால சாமி நீயே (ஒ)

ச: சிறியவயதில் என்னைப் பிரியமுடன் கைப்பற்றி
ஜீவநாத னை பாவனா தீதனே,
அறிவு வந்ததுமுதல் ஆசை நேசனாய் உன்னை
அன்புசெய் மீராவின் இன்ப மணாளனே (ஒ)

## 317. தியானம்

காபி] [ஆதி

நாராயண ஹரி நாராயண ஹரி
நாராயணஹரி ஓம்-சிவ

நாராயணசிவ நாராயணசிவ
நம: சிவாய ஓம்... (நா)
உள்ளந் தோறும் உள்ளாய் ஒருவா,
ஓம் பரம்பொருளே ஓம்-அன்பு
வெள்ளம் பொங்கும் கருணை வேந்தே,
வேத முதல்வா ஓம்... (நா)
வானாய் வளியாய் ஒளியாய் கடலாய்
மழையாய் நதியாகி
தேனார் பொழிலாய் ஊனார் உயிராய்த்
திகழும் அருளே ஓம்... (நா)
நீயே தந்தை, நீயே தாயார்
நீயே உலகச் சேய்;
நீயே இகமும், நீயே பரமும்,
நீயே யிவை எல்லாம்... (நா)
உனதே எல்லாம் என்னும் உண்மை
உணர்ந்தே எல்லோரும்,
மனமொன்றாக, இனமொன்றாக
வாழச் செய்வாயே!... (நா)

## 318. உன்னை மறந்து

ஹிந்துஸ்தான் தோடி] [ஆதி

ப: உன்னை மறந்து நான் உய்வேனோ—என்
உயிர்க்குயி ராகிய தெய்வமே—கண்ணா (உன்)
அ: என்னை மறந்தாலும் இகத்தை மறந்தாலும்
அன்னத்தை மறந்துநான் ஆருடல் மெலிந்தாலும்
ச: சுந்தர ச்யாமள இந்து வதனா,
ஜோதி ஸ்வரூபா நான் காதல்கொண்ட மதனா
மந்தஹாஸ ரமணா மனோஹரா
மாதவா, கிரிதர கோபால முரஹரி (உன்)

## 319. நம்பியனுதினம்

காம்போதி] [ஆதி

ப: நம்பியனுதினம் அன்புசெய்வோம் வாரீரே
நாராயணா ஓம் எனவே—ஜகத்தீரே (நம்)



அ: இன்பவழியிதுவே இகபர சுகமெல்லாம்
இனிது நமக்கருளும் தனிமுதற் கடவுளை (நம்)
ச: பித்துப்பிடித்து மாய வத்துவில் மயங்கியே
பேய்மனம் பேராசை நோய்பிடித் தலையாமல்,
நித்தியனை சுத்த நிரஞ்ஜனா னந்தனை
நினைத்து நினைத்துருகி அனைத்தும் அவனென்றே ()

## 320. கிரிதரநாதா சரணம்

நாகநந்தினி] [ஆதி

ப: கிரிதரநாதா சரணம்—எம்மைக்
கேடின்றிக் காப்பாயித் தருணம்—ஜய (கிரி)
அ: பரம சுகானந்தப் பொருளே—நல்ல
பக்தரைப் பாலித்திடும் திருவருளே (கிரி)
ச: நேருக்கு நேராக வருவாய்—என்
நெஞ்சினுக் காறுதல் தருவாய்
ஊருக்கும் பயமில்லை, உறவுக்கும் பயமில்லை
பாருக்கும் பயமில்லை, போருக்கும் பயமில்லை (கிரி)

## 321. ஏனோ?

வராளி] [சாய்ப்பு

ப: ஏனோ...தயவில்லை எம்பெருமானே
வானே–சுக வானே... (ஏனோ)
அ: கானாஞ்ஜலிசெய்துன் ஞானானந்தம் வேண்டினேன்;
கலிகாலத் திலென் ஜபம் பலியாதோ வழி யாதோ ()
ச: பாரால யத்திலே பூராய மாகவே
பத்தியாய் நம்புவோர் பித்தரின் கும்பலோ?
வாராயெனுந் தொண்டர்முன் தாராள மாகவந்தே,
வரந்தருங் காலமும் மலையேறி மறைந்ததோ? ()

## 322. தொல்லை தீர்க்க

கமாஸ்] [ரூபகம்

ப: தொல்லை தீர்க்க வல்ல தெய்வம்
இல்லையோ உலகில்— (தொல்லை)

அ : எல்லையில்லாக் கருணை யென்றோர்
எத்தரோ, சித்தரோ ஆனந்தப் பித்தரோ ()

ச : அப்பர் சம்பந்தர் அதிசய மெல்லாம்
அந்தக் கால நினைவோ,
அபயந்தந்துநீ ஆண்ட தெல்லாம்
அற்புதக்கவிக் கனவோ ?
தப்பாத நின்னருள் இப்பாவிக் காகவே
தன்மை யிழந்து போமோ-இந்த
வன்மை யென்பால் ஆமோ ?
சாமீ ராம காமி-எனது (தொல்லை)

## 323. என்ன நான் செய்குவேன்

ஸஹாநா] [ஆதி

ப : என்னநான் செய்குவேன்—எங்கே நான் செல்லுவேன்
ஏழைக்கு வழிகாட்டுவாய்—தீனரக்ஷகா (என்)

அ : கன்னங் கரிய காட்டில் கரடிபுலி மிரட்டக்
கண்ணில்லாச் சேய்போலே கலங்குகின்றேன் ஐயா (என்)

ச : சண்டைசெய்யும் உலகைக் கண்டுகண்டு வெறுத்தேன்
சம்சார பந்தத்தைச் சலித்துச் சலித்தலுத்தேன்
கொண்ட கணவனும் கொடுமைசெய் தோட்டினன்
கோமள கிரிதர ச்யாமா பரந்தாமா (என்)

## 324. கண்ணே என் கண்மணியே

நீலாம்பரி] [ஆதி

கண்ணே என் கண்மணியே—நந்தலாலா
கருணைக் கடலமுதே—நந்தலாலா
விண்ணே விளக்கொளியே—நந்தலாலா
வேதமுடி மணியே—நந்தலாலா

நெஞ்சான தொட்டிலிலே—நந்தலாலா
நித்திரை செய்திடுவாய்—நந்தலாலா
கஞ்ச மலர்முகத்தை—நந்தலாலா
காணப் பரிதவித்தேன்—நந்தலாலா



நின்னைப் பிரிவேனோ—நந்தலாலா
நீல மணிவிளக்கே—நந்தலாலா
பொன்னும் புவியின்பமும்—நந்தலாலா—உன்
புன்னகைக் கிணையாமோ—நந்தலாலா

## 325. கிரிதர கோபாலனே

ஹிந்துஸ்தான்பைரவி] [ரூபகம்

ப : கிரிதரகோ பாலனே என்
பிரியமான ஒருவன்—ஜய (கிரி)

அ : அரிய உறவும் பொருளும் சுகமும்
அவனே—என் இறைவன்—ஜய (கிரி)

ச : அன்னை தந்தை சுற்ற மென்னும்
அபிமானத்தை விடுத்தேன்
என்னை முற்றும் கண்ண னுக்கே
ஏக போக மாகக் கொடுத்தேன் (கிரி)

ஆர்வக் கண்ணீர் ஊற்றி ஊற்றி
அன்புப் பயிரை வளர்த்தேன் !
மீரா காந்தன் மீதென் ஆத்ம
விருப்ப மெல்லாம் வைத்தேன்—ஜய (கிரி)

## 326. கண்ணனே என் கணவன்

சிம்மேந்திர மத்திமம்] [ஆதி

ப : கண்ணனே என்கணவன்—வேறு
கருத்துமில்லை மனப் பொருத்தமும் இல்லையே (க)

அ : மண்ணுல கத்திலே புண்பட்ட தெல்லாம் போதும்
மாதவ னுக்கேஎன் காதலெல்லாம் எப்போதும் (க)

ச : அந்திப் பறவை போலே ஆட்டமெல்லாம் அடங்கி,
அந்தக்கரணம் அவன் சிந்தையிலே ஒடுங்கி,
பந்த வினைகளெல்லாம் சிந்தத் தவம்புரியும்
பரிசுத்த நிலைதந்த கிரிதர கோபாலன் (க)

## 327. பரவச நடம் புரிவோம்

மால்கோஸ்] [ஆதி

ப: பரவச நடம்புரிவோம்—தெய்வ
பக்தியுடனே சித்த சுத்தியுடனே பாடி (பர)

அ: முரளீ கானவி லோலா கோபாலா என்றே
மோகமுடனே ஆத்ம தாகமுடனே கூவி (பர)

ச: அறியாத மூடர்கள் பரிகாசஞ் செய்தாலென்ன?
ஆத்திரங் கொண்டவர் அடித்துவைதால் என்ன?
வெறிகொண்ட உலகத்தை வெறுத்துத் துறந்து சுகம்
விளைக்கின்ற சாந்தனை மீராகாந்தனை எண்ணிப் (பர)

## 328. பாஹி பாஹி

காபி] [ரூபகம்

ப: பாஹி பாஹி பதித பாவனா—இந்தப்
பாச உடலை வீசு கின்றேன் (பா)

அ: வேகநதியாய் விழுங்குவாய்—இந்த
வேதனைச்சுமை ஏதுக்கினிமேல்? (பா)

ச: நல்ல பாம்பை மல்லிகை மாலையாய்
நஞ்சை யமுதாய் நயந்து செய்தாய்;
அல்லற் பிறவித் தொல்லை தீர்ப்பாய்
ஹரிஹரிகிரி தரகோபாலா (பா)

## 329. பரமசுகானந்த

கல்யாணி] [ஆதி

ப: பரமசுகானந்த தரிசனம் கண்டேன்
பதிதபாவனா சரணம், சரணம், சரணம் (பர)

அ: மரணபயமும் இல்லை; மாற்றார் துயரும் இல்லை
மங்கள சுதந்தர மாதவ ஜோதியின் (பர)

ச: பொங்கும் புன்னகைவளர் பங்கய முகமும்
பூங்குழல் ஊதிடும் தீங்கனி வாயும்,
கங்குலைப் பிளந்துளக் கவலையைத் தீர்த்திடும்
கண்ணன் கரியமேக வண்ணன் கிரிதரனின் (பர)



## 330. தரிசனம் தர வேண்டும்

பேஹாக்] [ஆதி

ப: தரிசனம் தரவேண்டும் —என்
ஜன்மம் கடைத்தேற வேண்டும்—கண்ணா (தரி)

அ: பிரிந்தினி வாழேன் பரிந்தெனை ஆட்கொள்வாய் (தரி)

ச: நீரின்றி மலருண்டோ—கண்ணா
நீயின்றி நானுண்டோ?
ஆருயிர் வாழ்வினை ஐக்கியம் செய்துகொள்
ஆசைவே றில்லையுன் தாசி மீராவுக்கே (தரி)

## 331. அற்புதமாகிய

ரதிபதிப்ரியா] [தேசாதி

ப: அற்புத மாகிய விருந்தே—ஹரி
நாம சுதாரஸ மருந்தே—மனமே
ஆர்வமுடன் அதை அருந்தே— (அற்)

அ: கற்கண்டு பாலாடைக் கட்டி மிட்டாயினும்
கனிரசப் பாகினும் இனிதினி தினி திது (அற்)

ச: தின்னத் தின்ன ருசி தரும் தேவ கானசஞ் சீவி
அன்னம் பரமான் னத்தினும் அருந்திடின் மகிழும் ஆவி
ஆனந்த மாயிதைச் சேவி—
அருள்பெறுவாய் சிரஞ்ஜீவி (அற்)

## 332. உள்ளம் உருகி

நடபைரவி] [ரூபகம்

ப: உள்ளம் உருகிப் பஜனை செய்குவோம்—ஹரி
ஓம் தத்ஸத் ஓம் ஹரியென (உள்)

அ: துள்ளித் திரியும் கள்ள மனதின்
துடிப்பும் வஞ்ச நடிப்பு மின்றியே (உள்)

ச: வாடும் பயிர்கள் செழிக்க—வான்
மழையமுதம் பொழிவான்
பாடும் அன்பர் களிக்க—அருட்
பண்கள் கொண்டு தருவான்

ஊடும் பாவும் போல உயிரில்
கூடி வாழும் அழக னுடனே
உண்மை யாகக் குலவி—அமரத்
தன்மை வந்து நம்மை யடைய (உள்)

## 333. பாரமெல்லாம்

முகாரி] [ஆதி

ப: பாரமெல் லாம்பரந் தாமனிடமே வைத்து
பக்திசெய் சுத்த மனமே (பார)

அ: தாரணி யனைத்தையும் தாங்கும் புருஷோத்தமன்
தர்மரக்ஷகன்—சாமி—சர்வா ந்தர் யாமி—நேமி (பார)

ச: பக்தபராங்குசர் பாண்டவ வீரர்
பாகவத சுகர் ஏக நாதர் மீரா
சித்த ரஞ்ஜனனுக்கே பித்தாகிப் பேரின்ப
சித்தியடைந்தபடி இத்தினமும் பெறுவாய்— (பார)

## 334. நம்பி யிரு

பைரவி] [ஆதி

ப: நம்பி யிரு மனமே—எந்
நாளும் குறைவில்லை—ஆளும் கடவுளுண்டு (நம்பி)

அ: துன்பங்கள் வந்தாலும் சுற்றங்கள் கசந்தாலும்,
இன்பந் தரும் இதயேசனையே தினம் (நம்பி)

ச: நாசஞ்செய் அஞ்ஞான பாசத்தை விடு விடு
மோசஞ்செய்திடு மோகா வேசத்தைக் கெடு கெடு
நேசமெல்லாங் கோவிந்த ராசனிடமே நடு,
தாசஞ்செய ஸ்ரீநி வாசன் பதத்தைத் தேடு
தன்னல மற்றிரு—சன்னத முற்றிரு
உன்னத நிலைதரும்—பன்னக சயனனை (நம்பி)

## 335. அன்பார

உசேனி] [ஆதி

ப: அன்பார உன்னை நான் அலங்காரம் செய்தே என்
அகக்கண்ணுற் காணேனே—ஹரிமாதவா (அன்)



அ: பண்பான மனதிலுன் பரவடிவை நாட்டியே
பக்தி பரவசமாகிப் பாமாலை சூட்டியே (அன்)

ச: அந்தக் கரணங்களை அணிமணி யாக்கி
ஆயிர நாமத்தால் அருச்சனை சேவித்து
பந்த தொந்த மில்லாச் சிந்தையை நிவேதித்து
பாஹி ராதா ரமணு பாஹி சுகுணு என்றே (அன்)

## 336. ஆத்மா ராமா

சிந்துபைரவி] [தேசாதி

ப: ஆத்மா ராமா ஆனந்த ரமணு
அச்சுதா கேசவா ஹரிநா ராயணு (ஆத்)

அ: பூத்த மலர்போலே புன்னகை புரிவாய்
பூரண சக்தியை மழையெனப் பொழிவாய் (ஆத்)

ச: துஷ்ட ராக்ஷஸரைத் தூருடன் கொய்வாய்
துருவாதி முனிவரை நிருபராய்ச் செய்வாய்;
அஷ்டமா சித்திகள் அன்பருக் களிப்பாய்
அவனியைக் காத்திட அவதரிப் பாயே (ஆத்)

## 337. கலிகாலம்

நாட்டைக்குறிஞ்சி] [ஆதி

ப: கலிகாலம் என்றுநின் கருணையை மறைத்தாயோ
கண்ணு...கண்ணு...கண்ணு—மணிவண்ணு (கலி)

அ: வலிய இரணியனை வஞ்சகக் கம்ஸனை
மமதைத் தசமுகனை வதைத்த பராக்ரமனே (கலி)

ச: நாத்திகக் கிண்டலும் ஆத்திகச் சுரண்டலும்
நலங்கெடும் போரும் நரகக் கொடுந் துயரும்,
தீர்த்திந்த உலகினைக் காத்தலுன் கடனன்றோ ?
தினமணியே—பக்தர்—மனமணியே சரண் (கலி)

## 338. எங்கள் கவலை

சங்கராபரணம்] [ஆதி

ப: எங்கள் கவலை தீர்க்க
இரங்கி வருவாய்—இங்கே
சங்குசக்கர பாணியே—ஸ்ரீ முரஹரி (எங்)

அ: கங்குலைப் பிளந்திடும் கதிர்மணிச் சிங்கம்போல்
கட்டுகளைப் பிளந்து கலக்குந் துயர் களைந்தே (எங்)

ச: அலை யலை யாக மோதும் ஆசா பிசாசுகள்
ஆணவ வெறிகொண்ட அசுரக்கொடு மாயங்கள்,
புலியெனப் பாய்ந்திடும் போர்மதக் கோரங்கள்
போக்கி அதர்மங்களை—நீக்கி உலகமைதி
யாக்கிப் புதுயுகத்தை—ஊக்கி நடத்திடவே (எங்)

## 339. காதலாகி வந்தோம்

ஜோன்புரி] [ஆதி

ப: காதலாகி வந்தோம்-கண்ணா உன்
கட்டழகைக் கண்டோம் (காத)

அ: நாதக் குழலூதும் வேத ஓங்காரத்தில்
நானென்பதை மறந்து நீ என்பதை நினைந்து (காத)

ச: அன்புத் தேனாருேடும் அமரவூற்றின் அமுதே
அமைதி தரும் ஒளியே
இன்ப மயமான இதய குகைக்கனலே
ஏகாந்தமே அனேகாந்தமே
போகாந்தமே யோகாந்தமே (காத)

## 340. மோகன முரளி

பீம்ப்ளாஸ்] [தேசாதி

ப: மோகன முரளியால் தாகந் தணிந்திடவே
முந்துவந்தேன்—கண்ணா... (மோக)

அ: தேகப்ருந்தாவனத்தில் தேகியாய் விளங்குவாய்
ஜீவராதை வாழும் ஆவியே—ஓம் ஹரி (மோக)



ச: கண்டுன்னைக் கண்குளிரக் கொண்டு கைமலரை
வண்டுண்மதுவெனவே உண்டுன் அமுதரசம்
பண்டு வினையகல விண்டுன் இதயசுகம்
என்றும் ராதானந்தனாய் இன்புற்றிருந்திடவே (மோக)

## 341. கூடி வாழுவோம்

கீர்வாணி] [ஆதி

ப: கூடிவாழுவோம்-பஞ்சபூதக் கூட்டில் (கூ)

அ: ஊடும்பாவும் போலே ஓமும் பாட்டும் போல
உள்ளும்புறமும் ஒன்றி என்றுமே (கூ)

ச: பிரிவினை செய்யும் பொறி புலன் மனம்
பேசாதடங்க, கேசவனன்பில்
சரி நிகராக மருவிக் கலந்தே
சகஜானந்த சுகம்பெறவே (கூ)

## 342. எங்கே காண்பேனோ?

நடபைரவி] [ஆதி

ப: எங்கே காண்பேனோ இறைவா உனை நான் (எங்)

அ: இங்கென்றும் அங்கென்றும் ஏட்டு மதவாதத்தில்
எட்டி நீந்தியும் கிட்டவில்லை யப்பா (எங்)

ச: செல்வப் பொன் மாளிகைச் செருக்கினிலோ—வெய்ய
செருக்கள வீரரின் உருக்கினிலோ—பெருங்
கல்விக் கடல்களின் தருக்கினிலோ—இளங்
காதலரின் காமப் பெருக்கினிலோ
கல்லினிலோ பசும் புல்லினிலோ—உள்ளக்
கருவினிலோ கோயில் உருவினிலோ—ஐயா (எங்)

## 343. கண்டுகொண்டேன்

சௌராஷ்டிரம்] [ஆதி

ப: கண்டுகொண்டேன் சகியே—கடவுளைக் (க)

அ: அண்டத் திலும் உயிர்ப் பிண்டத்திலும்—அன்பர்
அகத்தினிலும் மாதர் முகத்தினிலும்—தேடிக் (க)

ச: கூழைக் குடித்தவன் ஏழைக் குடிலிலே
குழந்தையாய்த் தவழ்ந்தானடீ
குதுகல மாயவன் பொதுநலத் தொண்டரின்
கூட்டாளி யானானடீ
ஆழக்கடலிலே ஆணிமுத்தைப் போலே
அமைதியின் மோனத்திலே
வாழுநாயகன் ஆளுநாயகன்—எங்கும்
சூழும் நாயகன் சுத்தானந்த சகாயகன்—அவனைக் (க)

## 344. ஆசார விவகாரம்

பேகட] [அடதாள சாபு

ப: ஆசார விவகாரம் அவரவர் வீட்டிலே;
ஐக்கியம் வேண்டுமடா—நாட்டிலே (ஆ)
அ: நேசங்கொள் ஸ்ரீ ஹரி தாஸருக் குலகெல்லாம்
தேசமே; உயிரெல்லாம் தெய்வப்ரகாசமே (ஆ)
ச: நீட்டலும் மழித்தலும் நெற்றியைத் தீட்டலும்
கூட்டலும் கழித்தலும் காட்டிப் பயனென்ன?
வாட்டமின்றி மன நாட்ட மொன்றி கீதை
காட்டும் வழியிலே கூட்டுற வுடன் வாழ்வோம் (ஆ)

## 345. வெளிமயக்கு

ஆபோகி] [ஆதி

ப: வெளிமயக் கேதுக்கடா—மனிதா, புனிதா
விடுதலை பெற்றுள்ளே கெடுதலை நீத்தோர்க்கு (வெளி)
அ: ஒளிமய மாய் வான வெளியில் உலாவிடும்
உதய சூரியன் போலே இதய பரிசுத்தர்க்கு (வெளி)
ச: காசி யாத்திரை செய்தால் கர்மவினை போகுமோ?
கரடி வளர்த்தாலே கடுஞ்சினம் சாகுமோ?
தேசத்திலே ஹரி தாஸனாய்த் தொண்டுசெய்யும்
தீரருக்குத் தம்மை நிவேதித்த நேசர்க்கு (வெளி)



## 346. அந்தரங்கத்தில்

சாரங்கா] [ஆதி

ப: அந்தரங்கத்திலே வந்துவந் தினித்திடும்
ஆத்மா ராமனை நினைவாய்—மனமே (அந்த)
அ: விந்தை விந்தையான தந்திர வேடமேன்?
விருப்பு வெறுப்பில்லா விமல வெளியான (அந்த)
ச: பொன்செயும் வாதமும் புத்தக வாதமும்,
பொருளறி யாதவெறும் போலிப் பிடிவாதமும்,
அன்னத்திற்கே போடும் அரகரா நாதமும்,
அஞ்சுபூதஞ் சிரிக்கும் பஞ்சை விநோதமே...
அகந்தை மமதையின்றி உகந்துள் ளடக்கி நின்று
சகந்தருந் தளையின்றிச் சுகந்தருந் தவமொன்றி (அந்த)

## 347. கண்டாலே

சக்ரவாகம்] [சாபு

ப: கண்டாலே கலி தீருமே—கண்ணா உன்னைக்
கலந்தாலே சுக மாகுமே (கண்)
அ: உண்டாலே நல்லமுதம் உள்ளே பசி தீரும்
உருவுக்குள் அருவான ஒருவாஎன் னுயிருள்ளே (கண்)
ச: பெரிய வரங்களுக்குப் பீடிகை போடவில்லை—
பித்துல கோர் மெச்ச, சத்தம்போட வில்லை—
கருணாலயா, உனது சரணார விந்தத்தில்
காதலெல்லாம் வைத்தே காத்திருக் கின்றேன் ஐயா (கண்)

## 348. அன்பே ஆனந்தமாம்

பரசு] [ஆதி

ப: அன்பே ஆனந்தமாம்—சட கோபர்
அத்தைத்தின் ருங்கிருந்தே அறிவுடன் புரிந்தநல் (அ)
அ: உன்பரம் என்றுள்ளே தன்பரம் பொருள் கூடி
இன்பமிதுவே யென்று நம்பும் பராங்குசரின் (அ)

ச: தேனும் பாலும் சீனியும் தெளிந்த ரசமும் போலே,
தித்திக்கும் அமுதனை சித்தத்தி லேகலந்தே
யானும் முக்குணச்சகந் தானும் கதிர்விரிந்த
வானும் உயிரை ஆளும் கோனும் ஹரிதானெனும் (அ)

## 349. அன்பிலே ஆழ்வார்கள்

கேதாரகௌளை] [ஆதி

ப: அன்பிலே ஆழ்வார்கள் வாழ்க, வாழ்கவே
ஆசாரி யார்கள் வாழ்கவே—ஓம் ஜய ஹரி (அ)

அ: எம்பெரு மானுக்கே தம்முயிருடல்பொருள்
எல்லாம் நிவேதித்தே ஏகபக்தி செய்திடும் (அ)

ச: வீரத் திருமங்கை, விஷ்ணுசித்தர், பாணர்
விப்ரநா ராயணர் வேதத் திருமழிசை
சேரக் குலசேகரர் ஸ்ரீ ரங்க நாயகி,
சாரயோகி திவ்ய சடகோப ராதியர்
ஆளவந்தார், நம்பி, அழகிய மணவாளர்,
அரிய யதி ராஜர் ஆகம தேசிகர்
நாளெலாம் ஓம்நமோ நாராயண வென்றே
நம்பிப்ர பன்னராய் எம்பிரானைக் கலந்தே (அ)

## 350. ஆண்டாளை

காம்போதி] [ஆதி

ப: ஆண்டாளைப் போலுனை வேண்டிமையல்கொண்டேன்
அழகிய மண வாளனே—ஸ்ரீரங்க ராஜா (ஆ)

அ: நீண்ட கனவினிலும் நின்ற நனவினிலும்
நீலமணி வண்ணு நின் கோலமெனைத் தழுவ (ஆ)

ச: சோறும் பருகுகின்ற நீரும் சுற்றிலுங்காணும்
பாரும், என்னுயிர் நிலே வேரும், பரமாத்மா நீ
மாறும் பிறவிகடைத் தேறும் மருந்துநீயே
மாதவா, கோவிந்தா, யாதவர் சிங்கமே (ஆ)



## 351. சிங்கம்

சைந்தவி] [ஆதி

ப: சிங்கம் இருக்கிருன்—அஞ்சாதே—நர
சிங்கம் இருக்கிருன்—மனமே (சிங்க)

அ: தங்கத் தணல் போலே சத்திய ஜோதியாய்
தாசரை வருத்திடும் நீசரை யழித்திடச் (சிங்க)

ச: பாத்திர மாகிய பக்தப்ரஹ்லாதனை
பகைத்துத் தொகைத்துமிகப் பங்கப் படுத்திய
நாத்திகக் கனகனை ஆத்திரந் தீரவே
நகத்தால் பிளந்த விஷ்ணு நாராயணன் வீரச் (சிங்க)

## 352. அத்தாட்சி

தேவமனோகரி] [ஏகம்

ப: அத்தாட்சி யான் மனமே—நாராயணன்
அன்பரைக் காப்பான் தினமே (அத்)

அ: பித்தனேனையும் ஒரு பிள்ளையெனப் பேணி
புத்திபுகட்டி நல்ல புகலளித்தான் எம்மான் (அத்)

ச: ராமதாஸ் துளஸிதாஸ் நாம—ஞானதேவர்
ரவி—ஹரிதாஸர் மீரா புரந்தரரும்
நாமரசமருந்திக் காமஜயம் பொருந்தி,
நம்பிக் கடைத்தேறிய எம்பெருமான் காப்பான் (அத்)

## 353. இஷ்டப்படி

நாயகி] [ஆதி

ப: இஷ்டப்படிக் கிந்த ஏழையை நடத்துவாய்
எம்பெருமானே சரணம்— (இ)

அ: அஷ்டமூர்த்தியே ஹரி ஹரசிவ நாரணு
அல்லா பரம பிதா எல்லாம் வல்ல பொருளே! (இ)

ச: எட்டும் இரண்டும் ஐந்தும் இன்னதென் றறிகிலேன்;
ஏட்டைத் துளைக்கும் பூச்சி பாட்டைச் சுவைக்குமோ?
குட்டிக் குட்டி யேனும் மட்டித் தனத்தை நீக்கி
குறையறச் சிறையறக் கரைசேரென் துரையே உன் (இ)

## 354. பித்தனைப்போல

ஸகாணு] [ஆதி

ப: பித்தனைப் போல நான் சித்தங் கலங்கியே
பிதற்றி யலைகிறேன் நிதமுன் பேரையே (பித்)

அ: பத்தியு ஞானமும் பழுதில்லாக் கருமமும்
பரம பதநிலையும் ஹரிநாம ஜப மென்றே (பித்)

ச: தானமும், தருமமும், தவயோக மருமமும்,
சாதன சாத்யமும், சாதுசங்க சுகமும்,
வானமும் பூமியும் தானென நிறைந்த நீ
மனதுவைத் தாலே வரும் எனது முயற்சியின்றிப் (பித்)

## 355. தீன ரக்ஷகா !

கல்யாணி] [ஆதி

ப: தீன ரக்ஷகா தேசசம் ரக்ஷகா
தீங்கு நீங்கி நன்மை ஓங்கத் துணைசெய்வாய் (தீன)

அ: ஞான ஜோதியே அஞ் ஞானம் போக்குவாய்
நாயடிமைத் துயர் போயொழியச் செய்வாய் (தீன)

ச: சிந்தையில் உன்னை வந்தனம் புரிந்தே
தேசசேவை செய்ய ஆசை கொண்டுளோம்
பந்த மற்ற சுதந்தரம் அருள்வாய்
பாரதம் புரிந்த பார்த்தசா ரதியே (தீன)

## 356. இன்னும் சுதந்தரம்

இந்தோளம்] [ஆதி

ப: இன்னும் சுதந்தரம் காணேனே—ஜக
தீசா ஸ்ரீநி வாஸா சுயம்ப்ர காசா (இன்)

அ: வன்மனக் கொடுங்கோலில் வாழப் பிரியமின்றி
வாய்விட் டலறினேன் வருத்தமெல்லாந்தீர (இன்)

ச: பாசபந்த வினை நீங்காதோ—நின்
பரமகருணை என்னைத் தாங்காதோ— (இன்)



நாசப்படையும்பின் வாங்காதோ—ஐயா
நல்லருள் அரசுமுன் ஓங்காதோ—
நரகவேதனைதரும் அரசக் கொடுங்கோலின்றிப்
பரமசுக வெளியிலே பயமின்றி உலவிட (இன்)

## 357. நாத்திகர்

சிம்மேந்திரமத்திமம்] [ஆதி

ப: நாத்திகர் நகையாரோ ?—உன்னை
நம்பியிருக்கும் என்னை வம்புசெய் தால் இன்னும் (நாத்)

அ: சாத்திரத்தைக் கொளுத்திச் சமயங்களைப் பழித்தே
சாமியில்லை யென்னும் காமிக ளாகிய (நாத்)

ச: எல்லாமுன் செயலென்றே எண்ணினேன்—என்
இதயத்திலே பூசை பண்ணினேன் ;
தொல்லையெல்லாம் பொறுத்த புண்ணினேன்—ஆத்ம
சுதந்தரம் பெற உன்னை நண்ணினேன்—ஐயா
கதிநீ மதிநீ விதிநீ பதிநீயே
கண்ணுநீ காட்சிநீ கருத்துநீ எனும் என்னை (நாத்)

## 358. இதுவோ விதி

எதுகுலகாம்போதி] [ஆதி

ப: இதுவோ விதி யப்பனே—உன்னடியார்க்கும்
இந்த உலகில் எப்போதும்—பரம்பொருளே (இது)

அ: பொதுநல மேபுரிந்த புண்ணிய சீலர்கள்
புல்லர்செய் துன்பத்தால் அல்லற் படுவதும் (இது)

ச: நலஞ்செய்த கிறிஸ்துவும் சிலுவையில் மரித்ததேன் ?
நல்ல நபி நாயகம் கல்லெறி பட்டதேன் ?
புலவன் சங்கரன் விடம் புகுந்து மடிந்ததேன் ?
புண்ணிய மீராவும் கண்கசிந் துடைந்ததேன் ? (இது)
கண்ணனைத் துயர்செய்யக் கம்ஸன் முளைத்ததேன் ?
கார்மேக ராமனைப் போர்மேகம் வளைத்ததேன் ?
மண்ணுலகிற்கு நலம் பண்ணும் பயனிதுவோ ?
மாதவ சீலர்கள் வேதனைப் படுவதேன் ? (இது)

## 359. கண்ணா, கருணா

நாதநாமக்கிரியை] [ஆதி

ப: கண்ணா கருணா சாகரனே—ஒளி
காட்டாய் திவா கரனே (கண்)

அ: தண்ணார் கருமுகில் வண்ணா தாமரைக்
கண்ணால் பாரென்னை சாரதியே—அன்புக் (கண்)

ச: கரியழைக்கவே நீ வரவில்லையோ—உன்
கருடனுக் குடம்பு சரியில்லையோ?
முரஹரி கோவிந்தா! நர நா ராயணா
முக்குணப் போர்வெல்லப் பக்கநின் றருளாய் (கண்ணா)

## 360. ஜாலம் ஏனப்பா?

வசந்தா] [ரூபகம்

ப: ஜாலம் ஏனப்பா—சங்கட ஹரணா—மாயா (ஜாலம்)

அ: சீலர் துன்பத்தைத் தீர்க்க வேகமாய்க்
கோலம் கொண்டு வரும் காலம் இல்லையோ (ஜாலம்)

ச: பத்துருக் கொண்டுநீ சத்துருக்களைப்
படுத்ததும் வெறும் கவியோ?
பாஞ்சாலி மானம் காத்த தெல்லாம்
பழைய கட்டுக் கதையோ?
தூய மனதோர் பத்தியின் பலன்
தீயர் கையில் உதையோ?
தீன ரக்ஷகன் அலையோ?—நின்
திருவருளுக்கும் விலையோ?—நின்
சரத்திற் கென் இடர் மலையோ?—உனது
சக்கரஞ் சுழல விலையோ—இன்னும் (ஜாலம்)

## 361. சுதந்தர வரம்

சுரடி] [ஆதி

ப: சுதந்தர வரம் தருவாய்—நாங்கள் படுந்
துயர்களை நீக்க வருவாய்—ஜகத்ரக்ஷகா (சுதந்)



அ: கதந்தரும் காமாதிக் கள்ளப் பிசாசுகள்
கட்டடிமை யாக்கிக் கசக்கியுண் ணாமலே (சுதந்)

ச: ஆயுத மாயத்தால் அணுகுண்டுவேகத்தால்
அசுரப்பிசாசுகள் அறத்தினையழிக்காமல்
நீ யெங்கள் அரசனாய் நாங்களுன் அடியராய்
நிமிர்ந்து நடந்திட நெஞ்சங் குளிர்ந்திடவே (சுதந்)

## 362. சுந்தராங்கனை

கமாஸ்] [ஆதி

ப: சுந்த ராங்கனைச் சிந்தை செய்குவோம்
சுர நாதனை வர தாயகனை (சுந்த)

அ: மந்த ஹாஸனை மதுரவாஸனை
மதுரபாவனை முதிர நாடியே (சுந்த)

ச: கரிர க்ஷகனை கிரி தாரியை
காளிங்கநர்த் தன மூர்த்தியை
பரிவாகிய பரமாத்மனை
பார்த்தசா ரதியை ஆத்மதீர ராகச் (சுந்த)

## 363. ஹரிஸ்மரணை

ஸ்ரீரஞ்சனி] [ஆதி

ப: ஹரிஸ்மரணை யுடன் சேவை செய்வோம்
ஆருலகில் அரு ளாட்சி யோங்கவே (ஹரி)

அ: நர மானிடர் அமர வாழ்வுபெற
ஞானபக்தி கர்ம மான சாதனத்தால் (ஹரி)

ச: அகங்கார மம கார கோர மின்றி,
ஆத்மநேசமும் அர்ப்பணமும் கொண்டே
பக வானுக் கென்றும் பலனை அளித்தே
பணிவுடன் வீரத் துணிவுடன் கூடியே (ஹரி)

## 364. நாணம்

ஆனந்தபைரவி] [ஆதி

ப: நாணமென்னடீ—மனமே—கோபி
நாதனை நீயெப் போதுங்கலந்திருக்க (நாண)

அ: காணும் உலக மெல்லாம் வேணுகானத்திலே
காதல் மயமாக்கிய ராதா காந்தனைச் சேர (நாண)
ச: கண்ணன் அறியாத எண்ணமொன் றுள்ளதோ?
கண்ணின் கோணத்தில் எண்ணந்தோணுதே
விண்ணகச் சுடருக்கு விளம்பரம் வேண்டுமோ?
வேட்கை முகத்துக்கு விளக்கவுரை வேண்டுமோ (நாண)

## 365. நினைவிருக்கும்போதே

மாயாமாளவகௌளை] [ரூபகம்

ப: நினைவிருக்கும் போதே உன்னை
நினைக்க வேண்டும் ஸ்ரீஜயஹரி (நினை)

அ: சினத்தை வென்று மனத்தை வென்று
சித்த மடக்கி பக்தி யுடனே (நினை)

ச: பூத்து மணந்து வாடி யுதிரும் பூவைப் போலும் தேகம்
பொருந்தி யிருந்து வருந்திப் போகும்
புவிப் பொருள் தரும்போகம்;
சாத்திரங்களும் மறந்து போகும்
சார்ந்த உறவும் தீர்ந்து நோகும்
ஆத்மஞான பக்தி கூடி அன்பருடனே ஆடிப் பாடி (நினை)

## 366. பக்தியுடன்

சாமா] [ஆதி

ப: பக்தியுடன் அனு ரக்தியுடன் உன்னைப்
பாடி ஓங்காரத்திற் கூடுமின்பம் அருளாய் (பக்)
அ: சத்திய வாக்குடன் சன்மார்க்க நோக்குடன்
சாதுசங்கத்துடன் ஜயராமக்ருஷ்ண வென்றே (பக்)
ச: பண்ணறிந்தே தாள எண்ணறிந்தே—ஞானப்
பய னறிந்தே ஸ்ருதி லயமறிந்தே—அருள்
கண்ணறிந்தே உன்னைக் காணும் வகையறிந்தே,
கருணையைக் கூவிநான் அருணக்குயில் போலே (பக்)



## 367. வைராக்ய நிலை

மத்தியமாவதி] [சாபு

ப: வைராக்ய நிலை எளிதோ—ஞான (வை)

அ: தைரியமானசுத் தானந்தநிலை தரும்
ஸமதம திதீக்ஷாதி சாதனஜயம் பெற (வை)

ச: துறவுக் கோட்டையைப் பாச வுறவுகைப் பற்றுமோ?
தொடைநடுங்கிக்கோழை படையெடுக்கக் கிட்டுமோ?
பிறவிப் பிணியை மாற்றும் பெரிய துரிய நிலை
பெற்றுப்பற் றற்றுள்ளே பேரின்ப நிட்டையாம் (வை)

## 368. கலை யென்ன கலையே

காம்போதி] [ஆதி

ப: கலை யென்ன கலையே-கலைக்
கற்பனை தாண்டிய அற்புதங் காணாத
காசுக்கு விலைபேசிக்
கண்டத்தில் இசை பேசும் (கலை)

அ: நிலை யென்ன நிலையே-என்றும்
நிலையான நிலையத்தில்
அலையாது நில்லாத—பத
நீபரமா ஸபாபதி யென்னாத (கலை)

ச: கண்ணென்ன கண்ணே-மனக்
கண்ணினாற் கண்ணனைக்
கண்டு கலக்காத (கலை)
பண்ணென்ன பண்ணே-சுத்த
பரமாத்ம சக்தி
யருளைப் பரவாத
பண்ணென்ன பண்ணே-உள்ளே
எண்ணியுருகிப்பே ரின்பம் பருகாத
எண்ணென்ன எண்ணே. (கலை)

## 369. மேக கர்ஜனை

புன்னாகவராளி] [ஆதி

ப: மேக கர்ஜனையைப் போல—மனத்
தாகந் தீர வருவாய்—ஹரி ராம க்ருஷ்ண (மேக)

அ: சோகமீறி யிந்த மோகசமுத்ரத்தில்
ஏக பக்தியுடன் வேகமாய்க் கூவினேன் (மேக)

ச: பூரண மானவுன் காருண்ய மழையின்றிப்
போகம் செழித்திடுமோ—வி
வேகந் தழைத்திடுமோ—தவ
யோகம் பழுத்திடுமோ—என்
ஊகம் பலித்திடுமோ—
நாரணனே—ஜகத் காரணனே—ஜீவ
நாயகனே—சுகதாயகனே சரண் (மேக)

## 370. வனமாலீ

மால்கோஸ்] [ஆதி

ப: வனமாலீ ப்ருந்தா...வனமாலீ—வாவா (வன)

அ: அனவரதமும் உன்னை ஆசையோ டழைக்கிறேன் („)

ச: இரவும் பகலும் இந்த யமுனா தீரத்தில்
கரவின்றிப் பிரிவின்றிக் கைகோத்து நடஞ்செய்வோம்;
காளிங்க நர்த்தனனே—கம்ஸாதி மர்த்தனனே—ராதா
கேளீ விலாஸா--ஜகதீசா சர் வேசா (வன)

## 371. கண்டாயோ

சாவேரி] [திரிபுடை

ப: கண்டாயோ சகியே—என் அழகனைக்
கண்டாயோ சகியே (கண்)

அ: தண்டாமரைக் கண்ணால் உண்டென் மனதையிப்போ
திண்டாட விட்டெங்கோ கன்றோட்டித் திரிகிறான் (கண்)



ச: அன்பரைக் கைவிடேன் என்பதை மறந்தானோ?
அகடவிகடமெல்லாம் யாரிடம் பயின்றானோ?
இன்பமாக வந்தென் இதயத்தில் விளையாடி
ஏமாற்றிப் போன ஆத்ம
ராமன் பரந்தாமனைக் (கண்)

## 372. பயமேதினி

தோடி] [ஆதி

ப: பயமேதினி பகையேதினி—
பட்டாபி ராம பாண மிருக்கையில் (பய)

அ: துயர்செய் யசுர துஷ்டக் கும்பலை
துண்டுசெய்யுங்கோ தண்டபாணி துணை (பய)

ச: வெறிபிடித்த பொறாமைப் படையின்
வேதனை கெடவே வீரசக்தி ராமன்
அறிவாகியென் ஆற்றலாகி யென்றும்
ஆருயிர்க் கபயம் கோரி யீந்தபின்னே (பய)

## 373. அழகா!

தன்யாசி] [ரூபகம்

ப: அழகாநின் எழிலைச் சொல்லால்
எழுத லாகுமோ?—மண (வழ)

அ: பழகியத்யானத் திரையில் அன்பு
குழைத்த ஏழு குரலைக் கூட்டி (அழ)

ச: கலைக ளெல்லாம் வளருகின்ற
கனவுப் பீலியால்
உலைவிலாத நவரசங்கள்
உணர இன்பம் புணர ஓங்கும் (அழ)

## 374. ஏகாந்தத்தில்

செஞ்சுருட்டி] [ரூபகம்

ப: ஏகாந்தத்தில்—எம்பெருமான்
எழுந்தருளினான் (ஏ)

அ: மோகாந்த காரமொழிய
மூடக் கவலை வாடியழிய (ஏ)
ச: தேன் மலர் வளர் கான் பசுமையில்
திருப்பதியிலே தீஞ்சுனையருகே
வான்சுடரென மோன நிலையில்
வந்தேன் என்னச் செந்தேன்மொழியுடன் (ஏ)

## 375. கனிமதுர கீதம்

மோகனம்] [ஆதி

ப: கனிமதுர கீதம் பொழிவானே—அன்புக்
கண்ணனென் கரணமாம் பண்ணுறு குழலிலே (கனி)
அ: இனியவன் அமுதினைப் பருகி...பருகி...
என்பர மானந்தம் பெருக பெருகவே (கனி)
ச: நாத சுகத்திலே நான் சொக்க—சொக்க—ஜீவ
நாதனிடமென் னுயிர் சிக்க—சிக்கவே
பாதகக் கவலைகள் உட்க, உட்கவே
பரிசுத்த த்யானத்தில் ஹரிக்ருஷ்ண கோவிந்தன் (கனி)

## 376. என்ன கவலை

தேவகாந்தாரி] [ஆதி

ப: என்ன கவலை இனிமேல்—மனமே (என்)
அ: பன்னக சயனனை பத்மநாப ஹரியை
மின்னுடலுள்ளே உயிர் மன்னனென் றறிந்தபின் (என்)
ச: கற்பனை யாகிய அற்பக் கலைகடந்தே
கருதக் கருதச் சுகம் பெருகும் திருவருளின்
ஒப்புயர் வில்லாத சிற்பரா னந்தனை
ஒன்றிக் கலந்து சுகங் கண்டுகண் டுவந்தபின் (என்)

## 377. பக்த சிகாமணி

பேஹாக்] [ஆதி

ப: பக்தசிகாமணி யவனே—இந்தப்
பாரெல்லாம் பரமனைப் பார்ப்பவனே (பக்)
அ: உத்தம சீலன், சத்திய சந்தன்
ஊருக் குதவிடும் பேரனு கூலனும் (பக்)



ச: மாதரைத் தாயென மதித்திடுந் தூயன்,
மாசிலா நல்லுரை பேசிடும் வாயன்
சாதிமதங்கடந்த சத்தியவீரன்
சர்வாத்ம சேவைசெய் சமயோக தீரன் (பக்)

## 378. தீராத வினை

கானடா] [ஆதி

ப: தீராத வினைகளைத் தீர்த்திடுங் கடவுளே
தெண்டனிட்டேன் உனையே என்னப்பனே (தீ)
அ: ஆராத துயரெல்லாம் ஆரிடம் உரைப்பேன்.
அருட்பெருஞ் சோதியே தனிப்பெருங் கருணையே (தீ)
ச: எல்லையில்லா வுலகத் தொல்லைகள் பலகோடி
எல்லாமுன்பரம் என்றே எண்ணிச்சரண் புகுந்தேன்
அல்லும் பகலும் உன்னை அன்புசெய் வரமருள்
அதுவே சுத்தானந்தம் அப்புறம் ஏது பந்தம் (தீராத)

## 379. ஆடுகிறான்

காபி] [திரிபுடை

ப: ஆடுகிறான் என்னுள் பாடுகிறான்—கண்ணன்
ஆனந்த ராதையுடன் (ஆடு)
அ: ஓடுகிறான் மன வீடு நிறைந்தவன்
உச்சிக் கமலத்தில் சச்சிதா னந்தமாய் (ஆடு)
ச: காற்றென வந்தென்னைக் கட்டி யணைப்பான்
கதிரெனக் கண்ணுள்ளே புதுமைகள் காட்டுவான்
கூற்றென வந்துமிக் கூட்டைப் பிரித்திடுவான்;
கொஞ்சும் குழந்தையாக
நெஞ்சத் திருந்து நிதம் (ஆடு)

## 380. பாராலயத்தில்

மாண்டு] [ஜம்பை

ப: பாரால யத்தில் ஆடும் பரமனுக்கு மங்களம் (பா)
அ: ஆருயிரை மேனி கொண்ட அமர னுக்கு மங்களம் (பா)

ச: பூரணா னந்தனுக்கு போதஸ்வ ரூப னுக்கு
பொய்யிலாத மெய்ய னுக்குத்
துய்யனுக்கு மங்களம் (பூர)

ஹரிபஜனை

முற்றிற்று

ஹரி: ஓம் தத்ஸத்



# 6. சமயோக சாதன கீதம்

## 381. ஆண்டருள்

கல்யாணி] [ஆதி

ப: ஆண்டருள் பரம்பொருளே—உன்னை
அன்பினால் வணங்கினோம்
இன்பத் திருவருளே—எம்மை (ஆண்ட)

அ: வேண்டுநல் லடியார்க்கு வெற்றிமேல் வெற்றியீவாய்;
வேறுவேறு மதமாம் ஆறுண்ட கட லாவாய் (ஆண்ட)

ச: கனிரஸப் பாகுடன் கட்டிக் கரும்பும் போலே
கலந்துள்ளே தித்திக்குங் கருணை யமுதே போற்றி!
இனியவுன் ஆசியால் எல்லாரும் வாழ்கவே!
இகபர நலமெலாம் சகமெங்குஞ் சூழ்கவே— (ஆண்ட)

## 382. சாதனம் செய்ய

ஆனந்தபைரவி] [திரிபுடை

ப: சாதனம் செய்ய வாரீரே—சமயோக
சாதனம் செய்ய வாரீரே (சா)

அ: சாதி மதவிகாரச் சண்டைகளை விடுத்தே
சகலர்க்கும் பொதுவான
சன்மார்க்கத் தைப்பிடித்தே (சா)

ச: காட்டுக் குரங்குபோலே கனிவகை யுண்டென்ன?
கயத்தினிற் கொக்குப்போற் கண்மூடி யிருந்தென்ன?
நீட்டி மழித்தே வேடம் காட்டிப் பயனென்ன?
நிலையாகிச் சித்தத்தை அலையாது காத்திடும் (சா)

## 383. சாதனம் செய்!

தேவகாந்தாரி] [ஆதி

ப: சாதனம்—செய்—செய்—மனமே
சதாபக்தி...ஞான கர்ம (சாத)

அ: ஆதிப் பரம்பொருளை—ஆளுந் திருவருளை
அகநாயகனை சுகதாயகனை—நினைந்தே (சாத)

ச: சித்தத்திரைகளைத் தியானத்தி லடக்கி,
சீறுங் காமாதிப் பேயின் சேட்டைகளை ஒடுக்கி,
சுத்தஸமரஸ ஸன்மார்க்க ஜோதியில்,
சுதந்தரா னந்தமாம்
பதந்தரும் சம யோக (சாத)

## 384. மனிதராய்ப் பிறந்தவர்

மணிரங்கு] [சாய்ப்பு

ப: மனிதராய்ப் பிறந்தவர் ஆத்ம சுராஜ்யத்தின்
மன்னர்கள் ஆவீரே (மனி)

அ: புனித மதியாலே புலன்களை யடக்கியே
மனதினை வென்று நன் மந்திரி யாக்கியே (மனி)

ச: கனியாத மாமரம் கறக்காத பசுமாடு,
காரில் விதைக்காத ஏர்நிலம் என்னவாம்?
இனிதறம் பொருளின்பம் அனுபவித்தே வீட்டை
இயல்புடன் ஆளாத இகவாழ்வும் என்னவாம்(மனி)

## 385. ஆராய்ந்து பார்

சாரங்கா] [ரூபகம்

ப: ஆராய்ந்து பார் மனிதா—"நான் யார்" என்றே (ஆ)

அ: பூராய மாகவுட் பொருள் "அது" எது வென்றே (ஆ)

ச: கண்ணில் இருந்துள கைக் காண்பதெது வென்றே (ஆ)
நாவி லிருந்து சுவை நயப்பவன் யாரென்றே (ஆ)
உள்ளத்தி லேயொளிந்த உண்மை எது வென்றே (ஆ)
இதயத்தில் துடித்திடும் இன்பம் எதுவென்றே (ஆ)
அறிவும் அறிபொருளும் அறிவோனும் யாரென்றே (ஆ)
உயிர்க்குயி ராய்க்கலந்த உத்தமன் எவனென்றே (ஆ)



## 386. உண்டென நம்பிடுவாய்

ஹிந்தோளம்] [ஆதி

ப: உண்டென நம்பிடுவாய்—மனமே இந்த
உலகெலாம் பரவிய உயர்பரம் பொருளை நீ (உண்)

அ: தொண்டரைக் காத்திடுந் தோன்றாத் துணையதுவாய்
சொல்லைக் கடந்ததுவாய் எல்லார்க்குமே பொதுவாய் (உண்)

ச: சாந்த நிறைவாம் அது, தியானத்தில் வருவது,
சந்ததம் ஆனந்த சக்தியைத் தருவது;
காந்தத்தில் ஊசிபோற் கலந்தது ஜீவனில்
கண்ணுங் கதிரொளியுங் காட்டும் அறிவு மாகி (உண்)

## 387. அடக்கியாள

கரகரப்ரியா] [திரிபுடை

ப: அடக்கி யாள வேண்டும்—ஐந்து புலன்களையும்
அடக்கி யாள வேண்டும்—மனிதா நீ (அ)

அ: துடுக்குத் தனமாகத் துள்ளித்துள்ளிக் குதித்துத்
துக்க விஷயங்களில் சிக்கி யலையாமல் (அ)

ச: ஆசை யூறும் பொருளிற் பாசம் வைக்காமல்,
ஆணவப் பேயின் கை அகப்பட்டு விழிக்காமல்,
நேசமெல்லாம் சிவப்ர காசமாகப் பூத்து,
நிர்க்குண ஞானமாம் பொற்கனி பழுத்திட (அ)

## 388. வாழுவோம்

மத்யமாவதி] [ஆதி

ப: வாழுவோம் உலகீர்
வரம்பில்லாத சமயோகத்தில்
வறுமை மடமை யடிமை யின்றி (வா)

அ: பாழும் பொறாமைதரும் பகை சினந்துயரின்றி
பண்போங்கி நண்போங்கித்
திண்போங்கி அன்போங்கி (வா)

ச: மெஞ்ஞான யோகமும் விஞ்ஞானபோகமும்
வேதாந்த ஞானமும் சித்தாந்த மோனமும்
சுக்ஞான ஜீவனில் சுதந்தரச் சிவனுடன்
துலங்கி யிலங்கும் துரியாதீத
சுத்தயோக தத்துவ சித்தியில் (வா)

## 389. முன்னும் கவலை யில்லை

பைரவி] [ஆதி

ப: முன்னும் கவலையில்லை, பின்னுங் கவலையில்லை
இன்னும் கவலையேனோ—மாயை
பின்னுங் கவலையேனோ! (முன்)

அ: மண்ணும் பயனிலாது மறையும் உலகமாந்தர்
மதித்தாலும் துதித்தாலும் கொதித்தாலும் மிதித்தாலும்
கருதிப் பதையாதே—தெய்வக்கருணைக்கிணையேதே ()

ச: பிறக்குமுன் யாரோ? இறந்தபின் யாரோ
இருப்பதிங்காரோ இடர் செய்வதாரோ?
எண்ணிப்பார்—தியானம் பண்ணிப்பார்—உள்ளே
நண்ணிப்பார்—!
நானார்? நீயார்? அவனார்? அவளார்
அதுவார்—அவையார்
அனைத்தும் சுத்தானந்த சக்திவிலாசமே! (முன்)

## 390. உலகத் தெய்வ வழிபாடு

மாண்டு] [ஆதி

உலகம் இலகும் தெய்வம்—அதை
உழைப்பால் வழிபடுவோம்
அலகில் உயிரின் கூட்டம்—அதன்
ஆருடலென்றே நினைவோம். (உல)

ஆழிமுழக்கிடும் வாழி! ஆறுகள் அபிஷேகம்
ஏழிசை புட்களிசைக்கும்; இயற்கை அணிமணியாகும்
பசுவள மெல்லாம் பாவாடை
பண்மணிமாலை விண்மீன்கள்



அசை மணமலர்கள் அருச்சனையாம்
அகண்டதீபம் மதியிரவி
அன்புடன் அரும்பி அருளில் மலரும்
ஆனந்த கானம் ஆத்ம நிவேதனம் (உல)

## 391. அணு வெடி

சாவேரி] [ஆதி

ப: அணுவெடி வீழ்ந்தாலும் ஆகாயம் சாய்ந்தாலும்
அச்சமில்லை ஹரனே— (அணு)

அ: நினைவுட லுள்ளத்தே நீயின்றி நானில்லை
நினைவுநீ கனவுநீ நித்திய வத்துவே (அணு)

ச: பஞ்ச பூதமுன் சட்டையே—உயிர்க்கிளி
பறந்தால் வெறும் கட்டையே
நெஞ்சக் கனவும் நினைவும்—நீயின்றி
நிலையில்லாக் கானல் நீரே
கொஞ்சும் உலகுசித்தப் பஞ்சரமே—என்னைக்
கொல்லவும் வெல்லவும் வல்லதொன் றில்லையே ()

## 392. உன்னதமாகிய

மோகனம்] [ஆதி

ப: உன்னதமாகிய சன்னத வாக்கிது
ஓம் சமயோக ஒருமை (உன்)

அ: தன்னலச் செருக்கில்லை; பொதுநல வீறுடன்
மன்னுயிர் தன்னுயிர் என்ன மதித்திடும் (உன்)

ச: தாயெனுந் தயவுடன் சேயெனும் குழைவுடன்
சத்தியவாக்குடன் சாது சங்கத்துடன்
வாய் மனமுடலிலே தூயநல்லொளியுடன்
வாழ்ந்திட வகைதரு மந்திரத் திறனிது (உன்)

## 393. பந்த தொந்தம்

மாஞ்சி] [ஆதி)

ப: பந்த தொந்த மின்றி வந்தவினை முடித்தே
வாராத வகை செய்வோம் (ப)

அ: அந்தர் யாமியின் ஆணைப்படி நடந்தே
அமைதியாக நாளும் நமது கடமை காப்போம் (ப)
ச: ஆணவ மயக்கின்றி ஆசைத்தினவின்றி
அமராத்ம சுதியுடன் ஆருயிர் யாழிசைக்க
மாணிக்க வாசகமே மந்திர ஜபமாக
மாசிலாச்சீவனே சிவமயத் தவமாக (ப)

## 394. உயிருள்ள கடவுள்

ப: உயிருள்ள கடவுளையே—நல்ல
உழைப்பினுல் வழிபடுவோம்- (உ)
அ: துயர்களில் அகப்பட்டுத்
துடித்துக் கண்ணீர்வடிக்கும்
தொல்லை யெல்லாம் இனி இல்லை யென்ருகிட (உ)
ச: மனிதர் செய்தசிலைகள் வாய்திறந்து பேசுமோ
மரக்குதிரையேறின் மற்களந்தாவுமோ
கனியின் படம் பிழிந்தால் இனியரசம் வருமோ?
கல்லுக்குப் புகட்டிய சொல்லும் பயன்தருமோ?
கண்ணுக்கு மெய்யாகக் காணுலகாலயம்
விண்ணுக்குச் சமமாக விளங்கிட நாளுமே (உ)

## 395. உறுதி தாராயோ?

இராகமாலிகை] [ரூபகம்
(பிலகரி, சாவேரி, தன்யாஸி, தோடி, ஸ்ரீ, பைரவி, மோகனம், அடாணு)

உறுதி தாராயோ—பரமா
வுறுதி தாராயோ—அன்பின் உறுதி தாராயோ?

சரணங்கள்

துள்ளு மனத்தினை யுள்ளத் தடக்க
துஷ்டப் புலனுக்குச் சூடுகொடுக்க
கள்ளர்சூழ் காமாதி காட்டை யெரிக்கக்
காதலைப் பூரணன் சோதியி லுய்த்திட (உறுதி)



போதி யடியினில் புத்தர் பெருமான்
பொய்யறக் கண்டதோர் மெய்யறம் பற்றித்
தீதற நன்மை செழித்தரு ளோங்கச்
சித்தம் நிலைத்துத் தியானங்கை கூடிட (உறுதி)
தீனர் பிரானெனும் ஏசு கிறிஸ்து
செப்பிய செந்தண்மை மெய்ப்பட வாழ்வில்
ஞானப் பொறுமைச் சிலுவையைத் தாங்கி
ஞாலத்தில் வானுல காட்சியை நாட்டிட (உறுதி)
ஹீராக் குகையில் முகம்மது சல்லம்
இன்னுயிர் யாவையும் இன்புறப் பெற்ற
மாருத பக்திவை ராக்கியத் தீயென்
மனதி லெழுந்திட வாழ்வு பொலிந்திட (உறுதி)
பாற்கட லிற்பள்ளி கொண்டது போதும்,
பாரினைக் காத்திட வாரும் விரைந்தே;
நாற்றிசை யும்தர்ம நாதச்சங் கூதும்
நாரணரே, ஹரிநாரண ரே,யென (உறுதி)
என்முகம் பார்த்தருள்; சண்முக துரையே
ஏறும் அணுகுண்டுப் போரை யொழிக்கத்
தண்முகம் பார்த்தருள் சங்கடந் தீர
சக்திவேல் சக்திவேல் சக்திவே லென்றிட (உறுதி)
வானம் பனிமலர் வார்த்து வணங்கும்
மஹாசக்தி கௌரி மலைவளர் தாயை
ஞான மலர் தூவி நாமன்பு செய்தே
நாடெலாம் வாழவோர் நல்வரம் பெற்றிட (உறுதி)
விண்ணினைக் கொஞ்சிடும் வெள்ளி மலைமேல்
மேவும் சதாசிவ வேந்தனைக்கண்டென்
கண்ணுர நீர்மல்கிக் காதல் பெருகிக்
கனிந்து, பணிந்து, கலந்து களித்திட (உறுதி)

## 396. இன்ப வழி யிதுவே

பேஹாக்] [ஆதி
ப: இன்பவழி யிதுவே—எங்கள்
ஏசுநாதர் மொழி எல்லார்க்கும் பொதுவே (இன்)

அ: துன்பத்தைத் துடைத்திடும் மருந்தே—அது
சொல்லச் சொல்லமிகச்சுகந்தரும் விருந்தே (இன்)

ச: குருவியும் அருவியும் போல்வோம்—மலர்
குமுதமும் அமுதமும் போல்வோம்
கொஞ்சும் குழந்தை யாவோமே—அன்பு
கொண்டு குலாவிடு வோமே. (இன்)
பரம பிதாவினைப் பணிவோம்—அருட்
பணிகளைச் செய்திடத் துணிவோம்.
பாரினில் வானரசாட்சி விளங்கிட
பரிவு துலங்கிட உரிமை யிலங்கிட (இன்)

## 397. கொட்ட மடங்கி

சாவேரி] [ஆதி

ப: கொட்ட மடங்கிச் சும்மா இருப்பாயே—மனக்
குரங்கே உன் சேட்டையை விடுப்பாயே (கொட்)

அ: குட்டிக்கரணம் போட்டுக் குப்பையில் விழுகின்ருய்,
குடிகாரப் பேய்போலே கூக்குர லிடுகின்ருய் (கொட்)

ச: பொழுதைக் கொலைபண்ணும் புல்லரைக் கூடாதே,
பொய்யினை மெய்யென்றே புத்திகெட் டோடாதே;
கழுதைக் குபதேசித்த மொழியென நடக்காதே,
கரடியீ யோட்டிய கதையை நடிக்காதே;
வஞ்சப் புலன்வழியே வாசலுக் கோடாதே,
வம்பு வழக்குகளை வலியநீ தேடாதே;
குஞ்சித பாதத்தைக் கொஞ்சம்விட் டகன்ருயோ
கொடுப்பேன் உதை—வாலை வெடுக்கென் றறுப்பேனடா ()

## 398. சத்திய ஜோதியை

காபி] [ஆதி

ப: சத்திய ஜோதியை பக்தி செய்வோம் வாரீர்
ஸமரஸ ஸன்மார்க்க சபையினிற் சேரீர் (சத்)

அ: சித்த சலன மின்றித் தியானத்தில் ஊன்றி
சிந்தனைக் கமுதமாய் வந்துவந் தினிக்கும் (சத்)



ச: சாதிமதபேத சாத்திர கோத்திரச்
சண்டைகளை விடுத்துச் சாதனத் தாலே,
ஆதிப் பரம்பொருளின் அருளினை நாடியே...
ஆத்தும நேயத்தில் அனைவரும் கூடியே (சத்)

## 399. கும்பாபிஷேகம்

சிந்துபைரவி] [ஆதி

ப: கும்பாபிஷேகங் கொள்ளுங் கோமளமே—ஓம்
அம்பா மதுரை மீனுட்சீ—ஜயஜய (கு)

அ: நம்பும் உள்ளன்பருக் கின்ப நல்லமுதே
உன்பாத காணிக்கைஎம் உடலுயிர் வாழ்வே (கு)

ச: உலகமுன் கோவில்—உயிர்த்தொகைமேனி
உள்ளமுன் சந்நிதி உண்மையுன் பீடம்
பலகலையழகுன் பன்மணியணிகள்—உன்
பணிநலமே எங்கள் பண்புயர் பூஜை
பரதேவதையே பரிசுத்தானந்த
வரதேவதையே வாழிய நின்னருள் (கு)

## 400. இதயக் கதவைத்திற

குந்தலவராளி] [ஆதி

ப: இதயக் கதவைத் திறந்தருள்
ஈசனே, அன்பர் நேசனே—என் (இத)

அ: பத மலரிலே வாழ்வின் பாரத்தை வைக்கவே
சுதந்தர மாகவுன் சுகத்தினிற் சொக்கவே (இத)

ச: காரினை உலுப்பிடும் காற்றினைப் போலவே,
கமலத்தை மலர்த்திடும் கதிரொளி போலவே,
பூரண மாகவுன் பூங்கரத் தாலே,
புண்ணியனே, கா ருண்ணியனே—என் (இத)

## 401. எத்தனைக் கோணலடி

பிலகரி] [ஆதி

ப: எத்தனைக் கோணலடி—ஏழை மனமே (எத்)

அ: பித்துக் கொண்டு குடித்த பெரியபேய்க் குரங்குபோலே
கத்திக் குதிக்கின்ருய் கண்தலை தெரியாமல் (எத்)

ச: நீதியில்லை யென்றே நீலிக்கண்ணீர் வடிப்பாய்,
நில்லுசும்மா என்ருல் நெளித்துநீ நடிப்பாய்;
நாதனழைத்தபோது பூதஞ்சி செய்கின்ருய்;
நல்லது சொன்னலும் நாய்போலே விழுகின்ருய் (எத்)

## 402. கவலைப்படாதே மனமே

பைரவி] [ஆதி

ப: கவலைப்படாதே மனமே—என்னவந்தாலும்
கவலைப் படாதே மனமே (கவலை)

அ: கவலையென்பது மாயக் கசடன்றி வேறில்லை;
கண்விழித்தால் பகற் கனவன்றி நிசமில்லை (கவலை)

ச: புல்லிய சுகங்களைத் தேடுவார்—வாயாற்
புலியென்ருற் கிலிபிடித் தோடுவார்—தூய
நல்லசன் மார்க்கத்தைச் சாடுவார்—நிதம்
நாக்கை வளர்க்கத் தீமை தேடுவார்—எண்
சாணை தேகத்தை—வீணக்குவார் அவரே,
சஞ்சலப் பட்டுப்பட்டுச் சாவை யழைப்பாரே— (க)

கூற்றை யுதைத்த சிவன் காப்பானே—அன்பர்
குறைகளை யெல்லாம் அவன் தீர்ப்பானே—வேகக்
காற்றைப்போல் வந்து கதி சேர்ப்பானே—அவன்
கையில் இருப்பதிந்தப் பூப்பாரம்—இதை
அறிந்தவரே—ஞானம் தெரிந்தவராம்—உன்னுள்
அருட்பெருஞ் ஜோதியாம்—
ஆண்டவன் இருக்கையில் (க)

## 403. ஆராய்ந்து பாராய்

காம்போதி] [ரூபகம்

ப: ஆராய்ந்து பாராய் நீ அன்புமனமே நிதமும்
அறிவான ஜோதி அதுவே (ஆரா)



அ: பாரால யத்தினிலே பரிதியென விளையாடும்,
பரிவான பரஞ்சுடரைப்
பரிசுத்த உள்ளத்தால் (ஆரா)

ச: அருவாகிப் பரசத்தி உருவாகிக் குருவாகி,
ஆர்வமுட னேகூவும் அடியாரின் அருகாகி,
கருணைசெயுங் கடலாகி, உடலாகி, உயிராகிக்
கதியாகி, பரமசுக நிதியான பொருளை நீ (ஆரா)

## 404. அது நீ

சுருட்டி] [ஆதி

ப: அது நீ என்றறிவாய்—மனிதா (அது)

அ: எதுவே உயிர்க்குயிராய்ப்
பொதுநடம் புரிவதோ (அது)

ச: பேதமில் லாதது, பிறப்பிறப் பற்றது
பிரியாத உணர்வது பேரின்ப மானது
சாதிமத மில்லா போத ஸ்வரூபமாம்
சகஜதியா னத்தில் விகசிக்கும் தீபமாம் (அது)

## 405. குருநாதன்

மத்யமாவதி] [ஆதி

ப: குருநாதன் அவனே—அவனை நீ
கும்பிடு நன்மனமே (கு)

அ: இருவினைப் பகையின் இடர்களைக் களைந்தவன்
இருந்தபடி யிருக்கும் இரகசியம் அறிந்தவன் (கு)

ச: யாரையும் இகழாமல், யாரையும் புகழாமல்,
யாரையும் கெஞ்சாமல், யாரையும் கொஞ்சாமல்,
ஊருக் குபகாரியாய், யாருக்கும் பாரமின்றி
உண்மைப் பொதுவெளியில் உலவிடும் யோகியாம் ()

சண்டமா ருதத்திலும் சலியாத விளக்கவன்;
தமவிருள் போக்கிடும் தங்கக் கதிரோனவன்;
கொண்ட லிசைத்திடக் குதிக்கும் மயிலனையான்
கோஹம் ஸோஹம் என்றே கூவும் குயிலனையான் ()

## 406. நானெனும்

கீர்வாணி] [ஆதி

ப: நானெனும் பற்றில்லா மோனி—அவன்
நாணு விகாரமில்லா ஞானி (நா)

அ: ஊனுயிருடலினை வானுலகரங்கினை
ஓடும் படச்சுருளின் நாடகமெனக் கண்டே (நா)

ச: மோசம் போகாதுலகில் முற்றிலும் விழித்தவன்
மூடுமந் திரமில்லா முத்தன் பரிசுத்தன்;
ஆசையால் அலையாத ஆனந்தப் பொய்கையில்
அறிவன்னம் போலவே ஆடி அருள்கூடியே (நா)

## 407. பூரண ஞானி அவனே

தேவகாந்தாரி] [ஆதி

ப: பூரண ஞானி யவனே—உலகினில்
புருஷோத்தமன் அவனே (பூ)

அ: தீரன்—மனதை வென்ற சூரன்—எதற்கும்— அஞ்சா
வீரன்—எல்லார்க்கும் உபகாரன் நிர்விகாரன் (பூ)

ச: 'அது' வென்று வேதஞ்சொல் பொதுநடப் பொருளினை,
ஆருயிர்க் குயிரென்றே அறிபவன், அருளினால்;
எது வரினும் கவலை யில்லாமல் இருப்பவன்;
ஏகரசமாய்ச் சிவ போகரசம் புசிப்பவன்! (பூ)

ஸாத்வீக ராஜஸத் தாமஸ குணங்களின்
சண்டைசச் சரவெல்லாம் சாட்சியாய்க் காண்பவன்;
ஆத்ம ஸாக்ஷாத்காரத்தால் அனைத்துந்'தான்' என்பவன்
ஆழ்கடல் போலவே அமைதியாய் இருப்பவன் (பூ)

## 408. கதிதருங் கடவுளை

ஆபோகி] [ஆதி

ப: கதிகருங் கடவுளைத் துதித்திடுந் தொண்டர்க்குக்
கவலை யுண்டோ மனமே? (கதி)

அ: சுதியுடன் இசையெனச் சுடருடன் கதிரெனச்
சுத்த மனங்கலந்து தித்திக்கும் சுகமாகிக் (கதி)



ச: ஊருன்னை வைதாலும், யார்சதி செய்தாலும்,
உறுதியாய் இருந்துநீ உள்ளன்பு செய்குவாய்.
சூரிய ஜோதியைச் சூறை யணைக்குமோ?
சுதந்தர யோகியைத் தொல்லைகள் வளைக்குமோ? (கதி)

## 409. தெள்ளத் தெளிந்திடும்

அடாணா] [ஆதி

ப: தெள்ளத் தெளிந்திடும் அருளே—உன்
சித்தத்தில் குடிகொண்ட பொருளே (தெள்)

அ: கள்ளக் காமமயக்கம் கொள்ளை கொள்ளாதுன்னை
கண்விழித்திடின்—ஒரு—புண்ணிய ஜோதியாய் ()

ச: ஆணவ மாயத்தை அடியுடன் போக்கிய
அந்தக் கரணத்தையே,
ஊணென ஊட்டிடின் உண்மை யறிவாகி,
உள்ளத்திற் பேரின்ப வெள்ளம தாகியே (தெள்)

## 410. ஏன் பிறந்தாய் மனமே?

பைரவி] [ஆதி

ப: ஏன்பிறந்தாய் மனமே—இவ்வுடலிலே? (ஏன்)

அ: கானிருட் காட்டினிலே,
கண்ணிலாச் சேய்போ லென்னைக்
கவலைக்கே ஆளாக்கித் திவலை யறிவுமின்றி (ஏன்)

ச: நம்பன் பெயரைச் சொன்னால் நாத்திகம் பேசுவாய்;
நாசக வினைக்கேநீ காசினை வீசுவாய்;
துன்பப் படுகுழியில் துள்ளித் துள்ளி விழுவாய்;
சுத்தசன் மார்க்கஞ்சொன்னாலோ தூங்கி விழுவாய்
அன்புள்ள பெரியாரை அலட்சிய மாக வைவாய்;
ஆசைப் பிசாசுகளை ஆசோப சாரம் செய்வாய்
உன்பழிபாவத்தின் தின்மை யனுபவிப்பாய்;
உள்ளத்தைச் சொன்னாலோ
வெள்ளெனவே சினப்பாய் (ஏன்)

## 411. இதுவே துறவறமே

கரகரப்ரியா] [மிஸ்ர ஏகம்

ப: இதுவே துறவறமே—மனமே
 ஈசனா லயமான காசினி தன்னிலே (இது)

அ: இதய சாந்தி யுடனே இருவினைப் பற்றின்றிப்
 பொதுநலஞ் செய்—பரி
 பூரணன் பூஜையாய் (இது)

ச: காஷாய வேஷமும் கமண்டலப் பிச்சையும்,
 காடுமலை வாசமும் கவலையை நீக்குமோ?
 ஆஷாட பூதிக்கும் அன்புநிலை வருமோ?
 ஆண்டிமடம் புகுந்தால் அகம்பாவம் போகுமோ?
 அறிந்த அமைதியுடன் நிறைந்த சமதையுடன்
 அறந்தழைக்கப் பணிசெய் சிறந்த கருத்துடனே, ()

## 412. அருளே உலகம்

கரகரப்ரியை] [ஆதி

ப: அருளே உலகமென்போம்—அதன்
 அகண்ட விளக்கமே ஆருயிர் வாழ்க்கையாம் (அ)

அ: இருளினை நீக்கிடும் இரவிக் கதிர் போலே
 எங்கும் சின்மய மாகப் பொங்கும் பரம்பொருளின்(அரு)

ச: நூற்ற நூலின் கண்டே நெய்த புடவையாகும்;
 நுவலும் சிந்தனைகளே கவனஞ்செய் கவியாகும்
 காற்றின் அசைவே உயிர் காக்கும் உயிர்ப்புமாகும்,
 கடவுளின் ஆணையாய் இடமகல விரிந்த (அரு)

## 413. காவானோ

சாவேரி] [சாய்ப்பு

ப: கா வா னோ...தினமே—கடவுளுன்னை
 கைவிடு வானோ மனமே— (காவா)

அ: நாவாரப் போற்றியே தேவாரம் பாடிய
 நாயன்மார்க் கருள் செய்த நடராஜ துரை யுன்னைக்(கா)

ச: கண்ணப்பன் எச்சிலும் உண்ணமு தெனக் கொண்டான்
 கல்லும் படகாய் அப்பர் கரைசேரவே கண்டான்!
 மண்ணுயிர் செழித்திட விண்ணமு தஞ்சுரந்தான்,
 மாதா பிதாக்களினும் தாதாவெனச் சிறந்தான் (கா)



## 414. அறியாயோ

கன்னட கௌளை] [ஆதி

ப: அறியாயோ நெஞ்சமே—இறைவனை
 அடையா யோ தஞ்சமே—இன்னமும் (அறி)

அ: பொறிவழி யாக நீ புறஞ்சென்று திரிவாய்
 அறிவினுக் கறிவாகும் அந்தர்யாமியை நன்றே(அறி)

ச: நால் வகைத் தோற்றமும் ஏழுயிர் ஏற்றமும்.
 நானா வுயிர்களுந்தன் மேனியாய்ப் போர்த்தவன்
 பாலில் வெண்ணெய் போலப் பகுப்பறும் புண்ணியன்
 பரமபதியைப் பசு பதியைப் பரகதியை (அறி)

## 415. சுத்த தத்வமஸி

மந்தாரி] [ஆதி

ப: சுத்த தத்வமஸி ஓம்—ஓம் என
 துடிக்கும் கடிகாரம் (சு)

அ: வித்தக னொருவன் திருகிவிட்ட
 வியன்பெறு மந்திரக் கடிகாரம்—இது (சு)

ச: இகமும் பரமும் அகமும் புறமும்
 என்றும் இருக்கும் ஒன்றே
 சுகமாயதிலே அதுநானெனவே
 தோய்ந்த மனமே துரியம்—அது
 சுதந்த ராத்ம நிலையம் (சு)

## 416. ஓரறிவு

கேதாரகௌளை] [ஆதி

ப: ஓரறிவு முதல் ஆறறிவு வரையும்,
 உயிர்க்குயிர் ஆனவன் ஒருவன்—அறிவாய் மனமே (ஓ)

அ: பாரபக்ஷ மில்லாப் பரம கருணா கரன்
 பரிதிபோல் அருளின்பம் பாலிக்கும் பரமன்—அவன் (ஓ)

ச: முத்துக் குளிப்பவர்போல் சித்தத் திரைவிலக்கி,
 மூழ்கி மூழ்கி யுள்ளே ஆழத்திலேதேடு...
 பக்திஞான கர்ம சித்தியை நாடு...
 பார்வையுள் ளாக்கி யங்கே
 பார்ப்பானைக் கூடு—நெஞ்சே (ஓ)

## 417. கண்ணுள்ள போதே

நாட்டை] [ஆதி

ப: கண்ணுள்ள போதே நான்—காணேனே—என்
காதலைக் கொள்ளை கொண்ட
கள்ளா...உனை...உள்ளாரக் (கண்)

அ: எண்ணு மெண்ணங்க ளெல்லாம்
பண்ணும் பணிக ளெல்லாம்
இயம்பு மொழிகளெல்லாம் சுயம்புவுன் மயமாகிக் (கண்)

ச: உடலினில் உயிருள்ள போதே—உன்
உணர்வினை மற வாதே...
கடத்திலே காற்றுள்ளபோதே—அந்தக்
கரணங்கள் பிசகாதே...
திடபக்தி கொண்டுநான் மடமையிருளை வென்றே,
இடமகல் உலகிலும் என்னுள்ளும் யானாகக் (கண்)

## 418. பரமயோகி

ஸ்ரீ] [ரூபகம்

ப: பரமயோகி ஒருவனைப் பணிந்தேன்—சுத்த
பரிபூரண குருவாகிய (ப)

அ: நரநாரணன் வரதாயகன்
நானிருக்கப் பயமேனெனச் சொன்னவன் (ப)

ச: வந்தவினையை முடிக்க நல்ல
வழிகாட்டிய வள்ளல்
வாய்மனங் கடந்த தூய
மகிமை கொண்ட பெருமான்
சிந்தை சிவ மந்திரமாய்—ஜீவலிங்கந்தானாய்
செய்கையெல்லாம் பூஜையாகி உய்யவைத்ததெய்வமான (ப)

## 419. ஆட்டிவைப்பான்

நாதநாமக்கிரியை] [ஆதி

ப: ஆட்டிவைப்பான் யாரோ அறியேனே—இந்த
ஆருயிர் வாழ்க்கையை அங்குமிங்கும் அலைந்தே (ஆட்)



அ: பூட்டிவைத்த புலனைக் கூட்டிவைத்த மனதை
புறஞ்செல்லப் புறஞ்செல்லப்
புறஞ்செல்லுங் கறங்குபோல் (ஆட்)

ச: கண்ணுக்குக் கண்ணாகிக் காதுக்குக் காதாகி
கருத்துக்குக் கருத்தாகி
காதலுக் கின்பாகி
மண்ணுக்குள்ளே வேராகி மரத்தில் பூத்தமலராகி
விண்ணுக்குள்ளே ஒளியாகி வீட்டுக்குள்ளே உயிராகி
விருப்புவெறுப்பு மேடையிலே
வெற்றிதோல்வித் திரைபோட்டே (ஆட்டு)

## 420. தந்திரம்

மோகனம்] [ஆதி

ப: தந்திரம் தன்னைச் சொல்லையா—இந்தப் பிறவி
தந்தென்னைத் தொந்தத்தில்
பந்தித்த விந்தையின் (தந்)

அ: வந்ததும் போனதும் சிந்தை நினைந்திட
வாராவழியினைத்—தாராதெனையினும்
காராக்ரகத்தினில் ஓராதுய்த்திடும் (தந்)

ச: உன்னையன்றி வேறே உலகுமெனக்கில்லை
உடலுமெனக்கில்லை உறவுமெனக்கில்லை
அன்னையப்பா உன்னை ஒப்பவரும் இல்லை
அன்பு நீ நண்பு நீ பண்பு நீ திண்பு நீ
அறிவு நீ நிறைவு நீ ஆனந்த குருவு நீ ! (தந்)

## 421. என்னை எடுத்தாளையா !

சாரமதி] [ஆதி

ப: என்னை எடுத்தாளையா—ஐயா நான்
என்றும் உனக்காளையா (எ)

அ: அன்னையப்பா உனக்கென்ன பிழைசெய்தேன்
ஆருத்துயர்விழிநீர் அடிமலரிற் பெய்தேன் (எ)

ச: அடுத்துவந்தவரெல்லாம் அகப்பட்டதைச் சுருட்டி
ஆகாத கதைகட்டி அல்லலிழைத்தனர்
எடுத்த காரியங்களைக் கெடுத்தனர் எதிரிகள்
எப்போதும் கவலையில் ஏங்கியுனைக் கூவினேன் (எ)

## 422. இருக்கிறேன்

முகாரி] [ஆதி

ப: இருக்கிறேன் அபயம் கொடுக்கிறேன்
என்று சொல்லாயோ—ஓகோ
எல்லாம் வல்லாயே! (இ)

அ: அறுக்கும் புண்ணிலே அனலிட்ட பாவிபோல்
ஐயோ உலகென்னை அல்லற் படுத்தும் போது (இ)

ச: அரவும் புலியும் போலே ஆட்கள் வருகின்றார்
அமைதியைக் கெடுத்திங்கே அல்லல் விளைக்கின்றார்
இரவும் பகலும் உன்னை எழுதி எழுதிப் புகழ்
இதயநேசருக்கிந்தக் கதிவரலாகுமோ—
தேகமறந்தவர்க்கு மோகப்பழியேனோ
தீபத்தைச் சுற்றிலும் சாபப்புயலேனோ
தாகம் பருகும் போது தட்டி விடுவதேனோ
தயங்கித் தவிக்கின்றேன் தயாபரத் தந்தையே—(இ)

## 423. கண்ணனை

மோகனம்] [ஆதி

ப: கண்ணனை கல்வியைப்
பண்ணனை கலையுடன்
புண்ணியனே யருள்வாய்—என்னுள்ளிருந்தே (கண்)

அ: எண்ணமுயர்ந்திட இதயங்கனிந்திட
இன்னுயிர் வாழ்வெல்லாம்
உன் வேள்வி யாகிடவே (கண்)

ச: பொருளுடை மேற்கலை பூத பௌதிகக்கலை
பொருந்துந் தொழில் வளமை பொங்கிப் பொலிந்திடவே
அருளுடை யோகமும் போகமும் ஏகமாய்
ஆருயிர் வாழ்வுசுத் தானந்தமாகிடவே (கண்)



## 424. போர்புரி

காபி] [ஜம்பை

ப: போர்புரி போர்புரி வீரமனிதனே
பொய்யிருள் அச்சம் ஒழிந்திடவே (போர்)

அ: பாரை யழிக்கும் மனப்பகை பாழ்படப்
பரிசுத்த சக்தியால் பக்தி வைராக்கியத்தால்

ச: ஆத்திரங் கொண்ட சினத்தை அசூயையை
ஆயுளைத் தின்னும் அகந்தையினை
தீத்தனல் போல்வரும் நாத்திகச் சுரத்தை
தீரத்தினால்—ஞானத் திண்மையினால் வெல்லப் (போர்)

## 425. நீந்திக் கரைசேர

உசேனி] [ஆதி

ப: நீந்திக் கரைசேர வேண்டும்—ஐயா இந்த
நீள்கட லாகிய வாழ்வின் அலைகளை (நீ)

அ: சாந்த உறுதி கொண்டே சஞ்சல மில்லாமல்
சத்துவ ராஜஸ தாமஸ குணமெல்லாம் (நீ)

ச: ஆசைத் திமிங்கிலங்கள் பிடிக்காமல்—என்னை
அச்சப் பிசாசுகள் அடிக்காமல்—கர்ம
பாசச் சுழலிற் கண்ணீர் வடிக்காமல்—உன்
பரமக்ருபையாகிய படகினை விடுக்காமல் (நீ)

## 426. பஞ்சகோசாதீதனை

ஆனந்தபைரவி] [ஆதி

ப: பஞ்சகோசாதீதனை—நெஞ்சார நினைப்பதே
பக்தி சாதனம் அறிவாய்—மனமே (பஞ்)

அ: வஞ்சமின்றி மமதை கொஞ்சமும் இன்றியே
அஞ்சு புலன் வழியே அலையாது நிலைநின்றே (பஞ்)

ச: கலையுரை பலமதக் கற்பனைகளும் வேண்டாம்;
கட்டுக் கதை வலையிற் பட்டுமுழிக்க வேண்டாம்,
பலபல வுலகிற்கும் பரமன் ஒருவனையே
பாருள்ளே நேராகப் பூரண ஜோதி; ஓம் (பஞ்)

## 427. உள்ளது

கமலாமனோஹரி] [ஆதி

ப: உள்ளது பரம் பொருளே—இந்த
உண்மையறிந்து கொண்டால்,
பன்மதத்தொல்லை யில்லை (உள்ளது)
அ: தெள்ளத் தெளிந்திடும் தியான சமாதியில்,—
தேஜோன் மயமான திவ்யஸ்வ ரூபமாய் (உள்ளது)
ச: காரைக் கட்டிடமில்லை; கல்செம் புருவு மில்லை.
கட்டு காணிக்கை யென்னும் பட்டரு மங்கில்லை.
பாரெல்லாங் கோயிலாய்ப் பரந்து நிறைந்த பரா
பரனுக்கும் நமக்குந் தரகரொன் றில்லையே (உள்)

## 428. நீ யல்லால்

தோடி] [ஆதி

ப: நீயல்லால் எனக்கொரு நிலையில்லை—உன்
நேசமல்லால் ஒரு கலையில்லை—பரமா (நீயல்)
அ: பேய்மனம் அடங்கியுன் பெருங்கருணை தன்னைப்
பிரியாமல் இருந்திடும் வரந்தருவாய் அப்பா (நீயல்)
ச: ஊனுயிர் வாழ்வொரு பரதேசி—இந்த
உலகம் பிரம்மாண்டத்தில் ஒரு சிறு தூசி
யானென உயிர்ப்பதும் இறைவநின் ஆசி
எனக்குன் அருள் மந்திரம் உபதேசி—குருவே (நீ)

## 429. மணமலர்

பிலஹரி] [ஆதி

ப: மணமலர் போலே நீ வாழ்வாயே—மனமே
மங்கள நாயகன் தங்கத் திருவடிக்கே (மன)
அ: கணமிருந் தாலுமதன் குணமுள்ள புன்னகை
காட்டும் வண்டிற்குவிருந் தூட்டும்; அருணோதய ()
ச: பரம சாந்தமான மரக்கிளையிலே பூத்தே
பக்தி மகரந்தத்தைப் பருகிநிதம் பழுத்தே,
துரிய சிவானந்தஞ் சொட்டும் ரசஞ் செழித்தே,
தொண்டரெல் லாம்பருகக் கண்டுகண்டுகளித்தே ()



## 430. ஆனந்த சுதந்தரமே

கரகரப்ரியை] [தேசாதி

ப: ஆனந்த சுதந்தரமே—என்
ஆத்மநாதன் அருள் பூத்த திவ்ய ஜீவனம் (ஆ)
அ: ஞான முறுவல் வீசி மோனந்தனிலே பேசி,
நானென்பதனை அவன் தானென்றணைத்துக்கொண்டான்
ச: பொன்னில் மணியைப் போலே தன்னுள்ளளைப்பதித்து
பூரண சக்தியைப் பொழிந்தென்னு ளேவசித்து,
முன்னிலை யுலகெல்லாம் மோட்ச வீடாய் மதிக்க
முக்திக்கரும்பையென்னுள் வைத்துவளர்த்துவிட்டான்()

## 431. இதுவே சுக நிலை

அமீர்கல்யாணி] [ஆதி

ப: இதுவே சுகநிலை, சுயநிலை,—மனமே
இரண்டறக் கலந்த நிலை—என்றும் (இது)
அ: அது தான் ஆகிய இதயப்ரஹ்ம நிலை.
ஆனந்த நிலை இதுவே...மனமே (இது)
ச: என்றும் சலனமின்றி, இருந்தபடி யிருக்கும்,
ஏகாந்த போக நிலை;
வென்று பேதபுத்தியை வேறற்ற ஒன்ருகும்,
வேதாந்த நிலை அதுவே...
கொன்றகங் காரத்தைக் கொடுத்துக்கொடுத்துத்தன்னை
குலவும் துரிய நிலையே...
ஒன்றும் பாவசமாதி ஓம்தத்ஸத் என்னும் நிலை,
உண்மை அமர நிலையே மனமே (இது)

## 432. புண்ணிய

ஷண்முகப்ரியா] [ஆதி

ப: புண்ணிய வழியிதுவே—வீண்
பொழுது போக்காமல் வாழ்வைப்
பழுது செய்யாமல் காக்கும் (புண்)
அ: எண்ணத்தை உறுதியாய் இறைவனிடமே நாட்டி
இயல்பாய் இருந்தபடி இன்னுயிரை ஆட்டும் (புண்)

ச: கொலை புலை கட்காமம் கோபதாபங்கள் இன்றிக்
கொடுமையின்றிப் பிறரை அடிமைசெய்தலும் இன்றி,
உலகினுக் குதவியாய், உழைத்ததை ஈந்துண்டு,
உன்மனச் சாட்சிக்கே உண்மையாய் நடந்திட்டால் ()

## 433. நிந்திக்கலாமோ

ப: நிந்திக்க லாமோ மனமே—எங்கும்
நிறைவான பரமனின் உருவான உலகை நீ (நிந்தி)
அ: எந்தச் சாதிமதமும் எந்த நிறமும் இல்லா
ஏகரஸ சுத்தான்மா தேகியென் றறிந்தபின் (நிந்தி)
ச: நீர்பனி ஆவிபோல், மோர்நெய்யும் பாலும்போல்
நிலம்பயிர் ஜலமும்போல் பலவிதமாய்க் கலந்தே,
ஓர்பர மாத்மனே உயிர்க்குயி ரானதை,
உணர்ந்துணர்ந் துள்ளார ஒருமையுண்டானபின்பு ()

## 434. கண்ணாரக் காணும்

சங்கராபரணம்] [ஆதி

ப: கண்ணாரக் காணும்—இகமே—அறிவான
கடவுளின் அருளகமே—மனமே (கண்)
அ: எண்ணிலா வுயிரெல்லாம் ஏகசை தன்யக் கோவை
இரவிமதியதன் இருவிழிப் பார்வையாம் (கண்)
ச: பூவுயிர்க் கன்பில்லாப் பூஜையும் பலிக்குமோ ?
பூதசரீர மின்றி நாதாத்மா களிக்குமோ ?
பாவைக்கூத் தரசனும் பட்டம் வகிப்பானோ ?
பரிவும் பணியுமில்லாப் பரிபாகி சுகிப்பானோ ? (கண்)

## 435. உன்னுயிர்

தன்யாசி] [ஆதி

ப: உன்னுயிர் வேறில்லை மன்னுயிர் வேறில்லை
உணர்வாய் நீ மட நெஞ்சமே ! (உன்)
அ: என்னதி யானென்றே தன்னலம் பேணி நீ
எந்த உயிரினுக்கும் தொந்தர வாகாதே (உன்)



ச: கலகஞ்செய் மதங்களை விலகி நின்றே, பொது
நலஞ்செய்து, மாந்தரைக் குலமொன்றாய் நேசித்தே
மலையருவியைப்போலே உலகுக் குபகாரியாய்
வாழ்ந்துசெல் ; வாழ்க்கையின் ஆழ்ந்த பயனிதுவே ()

## 436. பாடுபட்டு

வராளி] [ஆதி

ப: பாடுபட்டுப் பிழைப்போம்—மனிதா
பலருக்கு நலம்வர உழைப்போம்! (பாடு)
அ: ஓடுபற்றித் திரியோம்—வேர்வை
ஊற்றிநம் உடலினை வளர்ப்போம்! (பாடு)
ச: கோடித் தொழில்கள் உண்டே—இங்கே
கூழுக்குப் பஞ்சமினி யுண்டோ ?
வாடிடும் வறுமையெல்லாம்—சோம்பலால்
வந்த பெருந்துய ராமே ! (பாடு)
வேஷத் துறவை விட்டே—கர்ம
வீரத் துறவிகளாய்த் தலைநிமிர்வோம்
காஷாயச் சாமிகளும்—இனிக்
கப்பறை ஏந்தாமல் கலப்பை பிடிப்போம் ! (பாடு)
உழைக்காத கைகளுக்கு—மனிதா
உண்ண உரிமையில்லை மண்ணுலகில்,
பழக்கிய கைகளினால்—இந்தப்
பார்விண் ணுகுங்கர்ம யோகஞ் செய்வோம். (பாடு)

## 437. வாழலாம்

சகானா] [ரூபகம்

ப: வாழலாம் மனமே— இளம்
வனப்புடனே நூறு வயது (வாழ)
அ: தாழ்விலாது நோயிலாது,
தங்கவுடலில் மங்களமாய் நீ (வாழ)
ச: காற்றுங் கதிரும் போற்றி யுழைத்துக்
காய் கனி தானியம் புசித்து

கூற்றினுக்கும் அஞ்சாச் சக்தி,
குண்டலிக் கனலிற் குளித்துக் களித்து (வாழ)
பிரம சரியக் கல்வி கற்றுப்
பிரியமான மனையை ஏற்று,
அறம்பொருளின்ப வீடளித்திடும்
ஆண்டவன் திரு அருளைக் கூடி (வாழ)

## 438. தேனைச் சேர்க்கும்

சுத்தசாவேரி] [ஜம்பை

ப: தேனைச்சேர்க்குந் தேனீபோலத் தியாகம் செய்வோமே!
அ: வான மேகம் போல உலகில் வளம் பொழி வோமே! ()
ச: பாடுபட்டுத் தேடித் தேடிப் பங்கு வைத்துண்போம்!
நாடு செழிக்க வீடு செழிக்க நன்மை தழைக்கவே! ()
விண்ணுலகை மண்ணுலகில் விளங்கக் காணுவோம்
பண்ணும் பணியைப் பரமன் பூஜை யாகப்பண்ணுவோம்
பலமதத்தின் சள்ளையின்றிப் பக்தி ஞானத்தால்—இந்த
உலகவாழ்வை இலகும் கர்ம யோகமாக்குவோம்—சுத்த
போக மாக்குவோம் (தே)

## 439. திவலை

சுருட்டி] [ரூபகம்

ப: திவலை யேனும் கவலை யில்லா
திவ்யஜீவனம்—செய்வோம் (திவ)
அ: சவலைக் குழந்தை போலவே பரா
சக்தியிடத்தில் வைத்து பாரம் (திவ)
ச: மானமாகத் தொழில் செய் துண்டு,
மாசி லாத மனது கொண்டு,
தான மாகத் தன்னைத் தந்து
தருமஞ் செய்யுங் கரும யோகம் (திவ)
ஒப்பில்லாத பரம்பொருளாம்
ஒருவனைச் சரண் புகுந்து கலந்தே,
அப்பர் வள்ளுவர் ஆழ்வார் போலே நாம்
ஆத்மானந்த சுதந்தரத்தில் (திவ)



## 440. மாறிப் பிறக்க

ஷண்முகப்ரியா] [ஆதி

ப: மாறிப் பிறக்க மருந்து கேள்மனமே—இந்த
மானிடந் தெய்வ ஞான ஒளியால் (மா)
அ: மீறிப்புலன்கள் வெளிச் செல்லாது
வீறுபெற்றுத் தேறி நின்றே (மா)
ச: இதய நடுவில் எழுந்து நடஞ்செய்
இறைவனருளை எண்ணி எண்ணி
அதன் மயம் யான் என வுணர்ந்தே
அமைதிகூடி அதுநான் என (மா)

## 441. இன்ப மயம்

பந்துவராளி] [ஆதி

ப: இன்பமய மான பூரணன்—அவன்
இந்த உலகினைச் செய்தனன் (இன்ப)
அ: துன்பம் இங்கே வந்த தேனடா—அதன்
தூருன் பேதைமனந் தானடா! (இன்ப)
ச: நிட்டை புரியும் கலையிலே—அதை
நீளிசை பாடி மகிழ்வுடன்
கட்டித் தழுவும் நதியிலே—நான்
காண்பதுங் கேட்பதும் இன்பமே (இன்ப)
காடு திருத்திடுங் கத்தியைப்—பிறர்
கழுத்தி லழுத்தினன் மானிடன்
கூடி நலஞ்செய்யும் ஊரிலே—வெடி
குண்டுகள் போட்டவன் மானிடன் (இன்ப)
சூரிய வட்டமும் இன்பமே—கடல்
சோபனம் பாடலும் இன்பமே!
கார்தன்னைப் பெய்து மறைந்திடும்—தியாகக்
காட்சியுங் காணரும் இன்பமே! (இன்ப)
சேயின் மழலையும் இன்பமே—வீர
தீரர் கலைகளும் இன்பமே!
தாயின் உள் ளன்பிலும் இன்பமே—யோக
சாதன வாழ்விலும் இன்பமே... (இன்ப)

## 442. காமமே நரகம்

பீம்ப்ளாஸ்] [ஆதி

ப: காமமே நரகமடா—உன் மதியினைக்
கலக்கிடும் விரகமடா—அட மனிதா (காம)

அ: கோமள முகங்காட்டிக் கொஞ்சிடும் வஞ்சம்
கொத்திடும் பாம்பதன் முத்தமும் நஞ்சாம் (காம)

ச: வெட்டுமின் நகையுடன் விழிவலை வீசும்;
வெள்ளைப் பணம் பிடுங்க உள்ளுருகப் பேசும்;
பட்டும் சரிகையும் பகட்டும் பகல் வேஷம்;
பரவசப் பஞ்சணைச் சுகம் எம பாசம்—படுமோசம் (காம)
தளுக்கி மினுக்குவதும் சஞ்சல மாயம்
தழுவி முயங்குவதும் அழுகணி நோயே;
வழுக்கி விழுந்ததும் வரும் கஷ்ட காலம்;
வருணச் சிங்காரமெல்லாம் மகேந்திர ஜாலம் (காம)
கல்லுங் கரைந்துருகக் கவர்ந்திடும் தோற்றம்
கண்ணியிற் சிக்கினல் கலகப்போ ராட்டம்;
அல்லிபோல் அணைந்துனைத் தொல்லையில் மாட்டும்
ஆயுளைப் பிழிந்தழி நோயினில் வாட்டும் (காம)
தொட்டுக்கொண் டாலுடன் தொடரும் கவலையே
தொத்துநோய் போலுமிப் பித்துறு வலையே;
பட்டுக்கொண்டால் அதன் பாரமோர் மலையே;
பகைத்துக்கொண் டால்வரும் படுமோசக் கொலையே()

## 443. இல்லற வாழ்வினிலும்

செஞ்சுருட்டி] [ஆதி

இல்லற வாழ்வினிலும்—பே
ரின்பம் பெருகும் உண்மை அன்பிருந்தால்;
நல்லகற் பரசியுடன்—கலை
நயந்தரும் ஆவேசப் பயனுடனே. (இல்ல)
கல்வியின் செழிப்புடனே—ஒரு
கைத்தொழில் புரிந்துண்ணும் களிப்புடனே,
பல்லுயிர்க் குயிரான—அருட்
பரமனை நினைந்திடும் மனமுடனே (இல்ல)



காருயிர் தென்றலைப்போல்—நெஞ்சக்
கவலையை நீக்கிடுங் கனிவுடனே,
நீருயிர் பூங்கொடி போல்—செழி
நிலமுயர் பயிரென நலமுடனே, (இல்ல)

ஆருயிர்க் கலப்புடனே—வளர்
அறம்பொருள் இன்பத்தின் சிறப்புடனே,
ஓருயிர்க் கடவுளுடன்—ஒன்றி
உள்ளத்தில் ஆனந்தம் ஊறிடவே (இல்ல)

வேகமும் வெள்ளமும்போல்—நாதம்
விளைந்திடும் வீணையும் தந்தியும்போல்,
தேகமுந் தேகியும்போல்,—புதுத்
தேன்மலர் அழகுடன் நறுமணம்போல், (இல்ல)

போகமும் யோகமுமாய்—நல்ல
பொருளுடன் பொருந்திய வரகவிபோல்
ஏகமாய் வாழ்ந்திடலாம்—சக்தி
ஏறிடும் ஆனந்த வீறுடனே (இல்ல)

## 444. புதிய யோகம்

ஆரபி] [ரூபகம்

ப: புதிய யோகம் பயில்வோம்—உலகில்
பூரணராய்ப் பொலிவோம் (புதிய)

அ: அதிவிசால மாகி—வாழ்க்கை
அமரத் தன்மை சேரப் (புதிய)

ச: அன்பில் ஒன்றுபட்டே—அருள்
அழகை நாளும் போற்றி,
இன்பமான பொருளைத்—தூய
இதயந் தன்னிற் கூடிப் (புதிய)

புரிந்திடுந் தொண்டுகளை—அவன்
பூசனை யாக்கிடுவோம்,
தெரிந்திடும் உலகினிலே—நர
தேவரை ஆக்கிடுவோம் (புதிய)

## 445. உண்டு பிழைக்க

மத்தியமாவதி] [ரூபகம்

ப: உண்டு பிழைக்க வேண்டும்—மனமே,
உயிர்க்கொலையின்றிப் பயிர்க் கனிகளை (உண்டு)

அ: வண்டு போல வேலை செய்து
வந்ததைக் கொஞ்சந்
தந்து பிறர்க்கும் (உண்டு)

ச: சுசிருசியான தூய உணவை
சுத்தாத்ம நிவேதன மாகப்
பசியறிந்து, பதமறிந்து
பஞ்சபூத நிறையறிந்தே (உண்டு)

## 446. தினமிருவேளை

சாமா] [ஆதி

ப: தினமிரு வேளையும் ஓம்சுத்த சக்தியென்றே
தியானம் செய்தாலே போதும் (தின)

அ: மனதின் சேட்டை யொடுங்கி
மற்ற நினைவடங்கி (தின)

ச: ஓம் எனும் பரம்பொருள் நாமரூப மற்றது,
ஒப்புயர் வில்லாத தற்பரஞ் சுடரது;
நாமெனும் பொருளது நானாவிகாரமில்லா
நல்ல படிகம் போன்ற துல்யஞானமென்றே (தின)
சாதுசங்கத்தாலும், சாத்விக உணவாலும்,
சன்மார்க்க நடையாலும், சத்குரு பணியாலும்,
பேதமில் மதியாலும், வாதமில் அறிவாலும்,
பெரிய பரம்பொருளைத் துரிய நிலையினிலே (தின)

## 447. கவலைப்படுவதேனோ

சாரங்கா] [சாய்ப்பு

ப: கவலைப்படுவதேனோ சவலைமனமே—
கருணாகரன் காப்பான் உனையே— (கவலை)



அ: அவலை நினைத்து வெறும் உமியை இடிக்காதே,
அருள்மொழி கேளாமல் அகராதி படிக்காதே (கவலை)

ச: நானிருக்கப்பயம் ஏனென நவின்றவன்,
நாடிய வரந்தரத் தேடிமுன் நின்றவன்,
ஞானப்பரமன் சந்நி தானமுன் உள்ளமே,
நன்ருய்த் தெளிந்தாலிதை
ஒன்ருய் இன்புற லாமே (கவலை)

## 448. ஆனந்தத்தேன்

மோகனம்] [ஆதி

ப: ஆனந்தத் தேனுண்ணுவோம் வாரீர்
அருள்மணம் பரவிடும்
*அரவிந்த மலரிலே (ஆன)

அ: மோனத்திலே துரிய வானத்திலே—ஓங்கார
கானத்திலே விஞ் ஞானத்திலே சுரக்கும் (ஆன)

ச: அல்லலைப் போக்கிடும் அமைதியுண் டாக்கிடும்
அச்சத்தை நீக்கிடும் அமரசஞ்சீவியது,
தொல்லுலகிலே புது யுகத்தினைத் துலக்கிடும்
சுத்த சுதந்தர சக்தியளிக்கும் பர (மானந்த)

## 449. இன்னமும்

சாரமதி] [ஆதி

ப: இன்னமும் அலையாமல் எனைத்தடுத் தாளுவாய்
இறைவா...குருபரனே (இ)

அ: அன்னவிசாரமில்லை சொன்னவிசாரமில்லை
ஆண்டாய் உன்னை நான் அடையும் விசாரமே (இ)

ச: போலிக் குருமாரைப் புகலடைந்தது போதும்
பொருளறி யாத ரச வாதமும் போதும்,
கூலிச் சித்தர்களின் கேலிக் கூத்தும் போதும்
கூவிக்கொள் என்னை நீயே ஆவிக் கிறைவனே (இ)

* ஸஹஸ்ராரம்

## 450. பரம சுத்த

சுப்ரதீபம்] [ஆதி

ப: பரமசுத்த மஹாதுரிய ஜோதி போற்றியே (ப)

அ: நர மனித நிலை கடந்து
நானதுவெனு மோன நிலையில் (ப)

ச: ஏழுநிறமும் ஏழுணர்வும் ஏழுலகமும்
ஏழுபடியும் கடந்த சாந்த இதயமன்றிலே
வாழும் சுத்தானந்த சக்தி
சூழுகின்ற சுகமயமான (ப)

## 451. ஜீவனுக்குள்

கௌளை] [ஆதி

ப: ஜீவனுக்குள் வளர் சின்மய தீபமே
திருவருளானந்தமே—ஓம் ஜக (ஜீ)

அ: பூவிலுன் மங்கலம் புன்னகை வீசுக
நாவிலுன் ஞானமே நர்த்தனமாடுக (ஜீ)

ச: கட்டில்லாக் காற்றைப்போல்
கரையில்லாக் கடலைப் போல்
தட்டில்லா வானைப்போல்
தருணமாமழையைப்போல்
வெட்டு மின் மேகம் போல்
வெள்ள மின் சாரம் போல்
எட்டுத் திசையும் எந்தவுயிரும்
இலங்க வாழ்வு துலங்கவே சிவ (ஜீ)

## 452. எக்காலமும்

சரஸ்வதி] [ரூபகம்

ப: எக்காலமும் நினைவாய் நீ
இயலான்மா எனவே (எ)

அ: துக்காலய மானவுலகில்
துடிக்கும் ஆசைத் தடிப்பை யடக்கி (எ)



ச: அரைநொடியில் உலகை யழிக்கும்
அணுகுண்டர் யுகத்தில்
ஆகாயத் தூசியாகப் போகும் வையகத்தில்
விரைவிலே காலத்தேர் கொண்டேகும்
வியன்பெரும் இகத்தில்
விபத்தையெல்லாம் கடந்து சாந்த
சுகத்தினை யனுபவிக்க மனமே (எ)

## 453. ஊனுங்கரைந்து

செஞ்சுருட்டி] [ஆதி

ப: ஊனுங்கரைந்து நானாகி நானுங்கரைந்து நீயாகும்
உண்மை சொல்லாய் சின்மயனே
தன்மயனே என்மயனே (ஊ)

அ: தேனும் பாலும் தீங்கனிரசமும்
தேவர் அமுதும் சேர்ந்ததுபோலே (ஊ)

ச: செப்படி வித்தையாம் முப்புடி யெல்லாம்
சீவசகபரச் சிந்தனை யெல்லாம்
அப்படி யிப்படி எப்படி என்பதெல்லாம்
இப்படி என்றுளே ஒப்புறக்காட்டி
உள்ளம் உணர்வாகி உணர்வே உயிராகி
உயிரும் நீயாகி நீயே நானாகி
ஒன்றே ஒன்றாகி நன்றே நின்றாடும்
பதம்பெற நிதமுமற் புதம்புரி இறைவனே (ஊ)

## 454. ஆசையிதுவே

சாவேரி] [ஆதி

ப: ஆசையிதுவே சொன்னேன்—என்னுள்ளே
ஆட்சிபுரியும் மன்னா—ஆதிசிவனே (ஆ)

அ: காசினியாலயப் பூசைமணியாயென்
கவிதை யொலித்திட
கருணைவிழித்தெழ (ஆ)

ச: தூய நரம்பெல்லாம் தும் தும் என ஒலிக்க
தோலும் மிருதங்கமாகி ஜும் கும் என முழங்க
நேயங்கலந்து சுதி சுரலயமென்னவே
நீ நானெனுநிலை தானேயியல்பாகும் (ஆ)

## 455. வரம் வேண்டினேன்

[ஆதி
சுரடி]

ப: வரம் வேண்டினேன்—குருநாதனே (வர)
வாயார உன்னை வாழ்த்தி வணங்கும்

அ: சுரநாதவீணை—குழல் மத்தளம் (வர)
குரலுடன் கூடிக் குழைந்து மகிழ்ந்தே

ச: தாய்முலை யுண்ணும் சேயினைப்போல
தண் கடலுண்ணுங் கொண்மூவைப்போல
பாய்மலை யாற்றின் பாட்டினைப்போல
பாலுந்தேனும் பாகும் பழ ரசமும் போல
காலமெல்லாம் உன்னின்பக் காவியத்தில் ஆவி மகிழ
ஆலடியின் அண்ணலேசுத் தானந்தச் சுதந்தரத்தின் ()

## 456. வாழ்க்கை

[ஆதி
ஸ்ரீரஞ்ஜினி]

ப: வாழ்க்கை பெரிய தொருதோட்டம்—அதில்
வன்னப் பறவைகளின் கூட்டம்

அ: வாழ்க்கை வினையருவி யோட்டம்—கவி
வாணர் மகிழ்ந்திடுங் கொண்டாட்டம்—இந்த( வா)

ச: மரமொன்று கிளைபல வாமே—தூய
மனமொன்று மதம் பலவாமே
தரையொன்று பயிர் பல—உயிரொன்று பலவுடல்
சத்தொன்று சித்தாடும் சுத்தசக்தி விலாஸம் (வா)

## 457. தேகந்தன்னில்

[ஆதி
எதுகுலகாம்போதி]

ப: தேகந்தன்னில் ஆத்மா போலே (தே)
ஜீவனிலே பர மாத்மா...



அ: ஏகரசமாய் யோகரசமாய்
போகரசமாய்ப் பொங்கும் (தே)

ச: தங்கந்தன்னைத் தட்டியுருச்செய்
தட்டான்போல் வினையாலே
நன்குருவாக்கி ஞானம் பொலிய
நல்கும் பரமனை நம்பு நல்லருளே நம்தெம்பு
நல்லவர் உறவும் நன்னூலறிவும்
நற்சிந்தனையும் செயலும்
வல்லவர் வாழ்வே மங்கலமாகும்
மகாதேவன ருளாலே (தே)

## 458. என் பாட்டு

பிலகரி] [ஆதி

ப: என் பாட்டுனது பின்பாட்டே...
முன்பாட்டனாரே...ஓம் (என்)

அ: அன்பாட்டாலே-அருளாட்டும் கட்
டழகா குழகா வழிநீ கதி நீ (என்)

ச: செஞ்சிலம் பொலிசெய் திருவடி நடமே
சித்தத் துடியானேன்
குஞ்சிதபாதம் நெஞ்சினில் ஆடக்
குறையேன் புரையேன்
இறையே நானுன் நிறைவே பரமா
குரலுன் குரலே குழைவுன் குழைவே
நிரலுன் நினைவே நிமலா சரணம் (என்)

## 459. ஏமாற்றம்

மத்திமாவதி] [ஆதி

ப: ஏமாற்றமென் சொல்லுவேன்—சிவனே
இந்தவுலக மாயத் தந்திர நரிகள் செய் (ஏ)

அ: நாம ஜபத்துடனே நம்பியிருப்போரை
நலங்கெட்ட புல்லர்கள்...
கலங்கிடத் தூற்றிடும் (ஏ)

ச: கண்டகண்ட பொய்கள் கட்டிவிடுகின்றார்
கருணையைக் கயவர்கள் கதமுறச்சுடுகின்றார்
உண்பதிலே உப்பு மண் போட்டுச் சிரிக்கின்றார்
உதட்டுற வுடன் வந்தே உள்ளத்தைப் பறிக்கின்றார்.
மடிநீற்று டப்பியைப் பொடி டப்பி என்கிறார்
மாதைத் தாயென்போரை வாதைமிகச் செய்கின்றார்
குடியைக் கெடுக்கவந்து மடியைப் பிடிக்கின்ற
கும்பலில் என்செய்வேன் அம்பலவாணனே (ஏ)

## 460. மனமடங்கி

கேதாரம்] [ரூபகம்

ப: மனமடங்கி மவுனமாக
மந்திரம் ஜபிப்போம்—ஓம் ராம் என (மன)

அ: சினமொடுங்கி சிந்தை செய்கை
சீவ-தெய்வதயவு சேர (மன)

ச: பத்து நிமிஷம் பரம புருஷன்
பாவன நாமம்
பாடியமைதி கூடித்யானம்
பண்ணிடுவோமே
சுத்தசக்தி ஜோதியாத்ம
சுகந்தரு மானந்தமாமே (மன)

## 461. அஷ்ட சித்தி

நாட்டைக்குறிஞ்சி] [ஆதி

ப: அஷ்ட சித்தி அடைவோம்—அனைவரும் (அ)

அ: வட்ட உலகிலேதன் வசமாதலே வசித்வம்,
மாறிலாத் தானேதான் ஆதலே ஈசத்வம் (அ)

ச: ஆணவந் தேய்தலே அணிமாவாம்—உள்ளே
அன்பைப் பெருக்கலே கரிமாவாம்—துள்ளும்
மான்மனம் அடக்கலே லகிமாவாம்—தூய
வாய்மை யுணர்வதே மஹிமாவாம்—என்றும் (அ)



அகமுகப் படுவதே பிராப்தி—சர்வாத்தும
அறிவே பிராகாம்யம்; அறிந்து பயிலுவோம்
இகபர சுகமெல்லாம் இதய குகாத்மனாய்,
இருந்தபடி இருந்தே அருந்தும் பரமானந்தம் (அ)

## 462. சுத்த ஸ்வரூபம்

பூர்வகல்யாணி] [ஆதி

ப: சுத்தஸ்வரூபம் அதுவே—எல்லார்க்கும்
சுதந்தர மான பொதுவே!—மனமே (சுத்)

அ: சக்தி சதாசிவ விஷ்ணுப்ரம்மாவென் றாலும்,
தந்தைஅல்லா யஹோவா அஹுரா னென்றாலும்()

ச: பெயர்வடி வாகிய பேதங் கடந்தது,
பேச்சிலு மூச்சிலும் பிடிபடா ஒன்றது,
உயர்மதி தியானத்தால் உள்ளாரக் காண்பது
ஓம்தத்ஸத் ஓம் என்ற மந்திரம் பூண்பது (சுத்)

## 463. உள்ளக் கதவை

ரீதிகௌளை] [ரூபகம்

ப: உள்ளக் கதவைத் திறந்தருள
உதய மாச்சுதே—என்—இதயத் தெய்வமே! (உ)

அ: கள்ள மடமை யிருளொழிந்தது,
கனக முகத்தைக் காட்டி, என்
மனக்கவலையை ஓட்டி (உ)

ச: உலக மெல்லாம் அருட்பெருஞ் சோதி
ஒளிர நான்கண்டு குளிர
கலக மில்லா ஆத்ம நேசங்
கலந்து சிறந்து வளர, (உள்ள)
பலபலமத வாத மெல்லாம் பகல்கண்ட பனி யாக
சலசலத்துன தருள் வாணியென்
சந்தக் கவியில் வந்து பாடவே (உள்ள)

## 464. சதானந்தத் தாண்டவம்

ஸ்ரீ] [ரூபகம்

ப: சதானந்தத் தாண்டவம் புரிவாய்—சச்சி
தானந்தநட ராஜ துரையே (சதா)

அ: பதாம் புயத்தை என்னுள் நாட்டி
பரமபக்தி பரவசத்தை
பகலுமிரவு மென்னுள் ஊட்டிச் (சதா)

ச: சரியை கிரியை யோக ஞான
சாதனந் தரும் நாத வடிவாய்,
துரிய முடியிற் பிரியாதுன்னைச்
சுத்த சக்தி சித்தி நாட்டி,
அத்து வைத முத்தி கூட்டி,
தோம், தோம், ததிங்கிண
தரிகிட தகஜிமி தோமென (சதா)

## 465. ஆனந்தமான

சிம்மேந்திரமத்திமம்] [ஆதி

ப: ஆனந்த மானசுத் தாத்மப் பொருளை
நானெனக் கலந்து நலம்பெறல் யோகம் (ஆன)

ச: பொறிபுலன் அடைப்பது புரிதவ யோகம்,
பொதுநலம் புரிவது வே கர்ம யோகம்,
அறிவது வாவது வே ஞான யோகம்
அன்பே யாவது வே பக்தி யோகம்; (ஆன)

உடலினை உறுதிசெய்; அதுஹடயோகம்,
ஓமொலி கேட்பது வே ஜபயோகம்,
இடமகல் சக்தியை இருவரும் வளர்த்தல்,
இல்லறத்தார் செயுந் தாந்திர யோகம்; (ஆன)

தியானத்திலே ஆத்ம ஞானத்தை யடைந்து,
தெய்வ சக்திபல மெய்தி யியல்பாய்,
வான்கதிர் காற்றென மழை நதி யெனவே,
வாழ்வதுவே சுத்த மாதவ யோகம்! (ஆன)



## 466. ஆனந்த வாழ்க்கை

நீலாம்பரி] [சாய்ப்பு

ஆனந்த வாழ்க்கையை நாடுவோம்—வாரீர்
அமர ஊற்றை உள்ளே தேடுவோம்
மானிடர் தேவராய் மாறுவோம்—சாகா
மருந்தை அனுபவித்துக் கூறுவோம் (ஆன)

துன்பத்தைத் தூவெனத் தள்ளுவோம்—ஆத்ம
சுதந்தர சாதனத்தைக் கொள்ளுவோம்,
அன்பே கடவுளென நாடுவோம்—நாம்
அகில ஸமரஸத்திற் கூடுவோம் (ஆன)

மூலக் கனலை உச்சிக் கேற்றுவோம்—அங்கே
முச்சுடர் நிலயத்தைக் காட்டுவோம்
பாலொத்த வெண்ணிலவில் ஆடுவோம்—அங்கே
பரநாத கீர்த்தனங்கள் பாடுவோம்—நாம்
பரவச சக்தியுடன் ஆடுவோம் (ஆன)

## 467. அன்புக்கே

பாகேஸ்ரீ] [ரூபகம்

ப: அன்புக்கே நான் அன்பு செய்துன்
அருளை நாடினேன்—ஓம் ஹரிஹரி (அன்)

அ: துன்பமெத்தனை தொல்லை செய்தும்
தூயனே ஆன்மநேயனே மாயனே (அன்)

ச: சஞ்சலமனந் தாவிடாது
ஜபமாலையில் அடங்க
நெஞ்சமிரவும் பகலுமுனையே
நினைந்துருகிக் கரைந்து கூடும் (அன்)

## 468. ஓர் சிறந்த தவராஜ

தோடி] [ஆதி

ஓர்சிறந்தவ ராஜசிங்கமென்
உள்ளத்தே நடன மாடு கின்றனன்!
ஓம்சுத்தோஹமெனப் பாடு கின்றனன்—பரமாத்மா

கார்சுரந்தமழை போலே ஆனந்தக்
சுண்சுரந்தகரு ணைப்ர வாகத்தால்,
கன்மமான மல மாசை நீக்கினன்—குருநாதன்
பார்சிறந்த சிவ போக மீந்தவன் !
பழுதிலாப்ரணவ தேக மீந்தவன் !
பண்சுமந்தமதி யூக மீந்தனன்—பரநாதன் !
சீர்சிறந்த திருத்தொண்டர் தொண்டுசெய்
தேவ தேவன் ; திருவாசகஞ் சொலும்,
சிற்சபேசன் எனை ஆண்டுகொண்டவன்—பரமாத்மா

## 469. தந்தேன்

வசந்தா] [திரிபுடை

தந்தேன் உனக் கென்னுட லாவியும்
தயவாயெனை யாளு மகேசனே
சிந்தைக்கமு தாகிய சிற்சுக—ரசத்தேனே !
எந்தாய் எனக் கின்றுணை யாகிய
தந்தாய், உனக் காயிரம் வந்தனம் !
சிந்தாகுலந் தீர்த்தனை ஆனந்தத்—தெள்ளூற்றே !

இந்தப்பிற விப்பய னெய்திட
இனிநான்பிற வாவண முய்திடத்
தந்தாய் சிவமங்கள சாதனம்—சகசோதி

தந்தத்தன தானன தானென
சகசத்தனி நிட்டையி லாடிட
வந்தாய் சரணம் சரணம் குரு—பரமாத்மா !

## 470. ஆனந்த கீதம்

சிந்துபைரவி, கரகரப்பிரியா, ஜோன்புரி, பீம்ப்ளாஸ்,] [திரிபுடை

ஆனந்தம் ஆனந்தம் என்போம்—ப்ர
மானந்த மேயுல கானதென்றறிவோம் (ஆன)
சச்சிதானந்த வைபோகம்—இந்தத்
தாரணி வாழ்வு பராசக்தி யோகம் ;
அச்சத்துயர் மனமோகம்—பல
வாகிய யாவும் பிரம்மத்தில் ஏகம் (ஆன)



உள்ளத்தில் அன்பினை நாட்டி—எல்லா
உயிர்களும் ஒன்றெனும் ஒற்றுமை காட்டி ;
வெள்ளத்தில் தோணியைப் போலே—கால
வேகத்திற் செல்வோம் விவேகத்தி னாலே (ஆன)
என்றும் உயிர்க் குயிராகிப்—புவி
எங்கும் விளையாடும் ஏக ரஸத்தை
ஒன்றியுணர்வதே யோகம்—அந்த
ஒற்றுமையாலே சமத்துவ மாகும் (ஆன)
எண்ணித் துணிவது யோகம்—அதை
ஈசனின் பூசையாய் இயற்றலும் யோகம்
உண்ணலும் உறங்கலும் யோகம்—இந்த
உடலுயிர் வாழ்க்கையுங் கடவுளின் யோகம் (ஆன)

சமயோக சாதன கீதம்

முற்றிற்று



# 7. சுத்த சன்மார்க்க கீர்த்தனங்கள்

## 471. தேனும் பாலும்

தோடி] [ரூபகம்

ப: தேனும் பாலும், அமுதும் பொழிகவே—பரமா உன்னைத்
திதிக்கத் திதிக்கத் துதிக்குமென் நாவிலே (தேனும்)

அ: ஞானனந்த கான ரசத்தை
ஞாலம் பருகி நன்மை பெருகத் (தேனும்)

ச: சித்த வீணை சிவசிவவெனத் தெளிந்த மந்திரம் செபிக்க,
தீம் திரிகிட தோம்என உள்ளம் தீஞ்சுவைகண்டு குதிக்க,
சுத்தசன்மார்க்க சத்திய கீர்த்தனம்,
சுரந் திகபர சுகந்தர—அருள் (தேனும்)

## 472. சன்மார்க்கம்

(சிந்துபைரவி, காபி, கரகரப்பிரியா, வாசஸ்பதி, மோகனம், சுரடி)

ப: சன்மார்க்கம் இது சகத்தீரே—நல்லோர்
சாதனம் செய்திட வகுத்தாரே (சன்)

அ: பன்மார்க்கத்தின் சாரம்—பக்தி பரோபகாரம்
துன்மார்க்க மில்லாத தூய சதாசாரம் (சன்)

ச: சத்திய தருமத்தைத் தயங்காது தாங்குவீர்;
சஞ்சலப் பேய்களைக் கொஞ்சாது நீங்குவீர்;
நித்தியப் பொருளையே நெஞ்சில் உபாசிப்பீர்;
நின்மலர் சங்கத்தை நிதநிதம் நேசிப்பீர்! (சன்)

துயர்தரும் ஆசையைத் துரிதமாய் நீக்குவீர்;
தொந்த பந்தவினையைத் துண்டுதுண் டாக்குவீர்;
இயல்பென்றுந் திரியாமல் இல்லறம் பேணுவீர்;
இயற்கையின் ஆடலை மயக்கறக் காணுவீர்! (சன்)

பேருக்கும் புகழுக்கும் பேராசை கொள்ளாதீர்;
பேத புத்தியினலே சாதிகொண் டெள்ளாதீர்;
ஊருக்கு நல்லதை உடன்செய மறவாதீர்;
உள்ளதை இல்லையென் றெருபோதுங் கரவாதீர்; (சன்)



ஈட்டிய பொருளினை ஈந்துண்டு வாழுவீர்;
இருளும் வறுமையும் ஏகிடச் சூழுவீர்;
நாட்டினி லேஞான வொளியினை வீசுவீர்;
நயமுள்ள உண்மையைப் பயமின்றிப் பேசுவீர்! (சன்)

மானத்தை உயிரினும் மாண்பெனக் காக்குவீர்;
மானிடத்தைத் தெய்வ மந்திர மாக்குவீர்;
தீன ரக்ஷகனைத் தியானத்தாற் கூடுவீர்,
தேவஜீவனம் பெறத் திருவரு ளாடுவீர்! (சன்)

## 473. விபரீதம்

[ஸ்ரீராகம், மணிரங்கு, மத்திமாவதி, ஆபேரி, முகாரி, பைரவி.]

ப: விபரீதம் இது வேண்டாம்—வாழ்வை
வீணுக்காதே—மனமே... (விப)

அ: அபசார நிந்தையும் அகம்பாவச் சிந்தையும்
ஆகாசக் கோட்டையில் அதிகார விந்தையும் (விப)

ச: பேசிப்பேசிப் பொழுதைப் பெருங்கொலை செய்வதேன்?
பேராசைப் பித்தத்தால் ஊராரை வைவதேன்?
ஆசையா ணவங்களால் மோசமாய் நடப்பதேன்?
அறிவைப்பொய்ப் புலன்வழி அலைந்திட விடுப்பதேன் (விப)

பணந்தேடி யுதவாமல் பதுக்கிநீ வைப்பதேன்?
பாப புண்ணியங்களைப் பாராது நடப்பதேன்?
குணந்தனைப் போற்ருது குற்றமே காண்பதேன்?
குப்பைத் தொட்டியில் வாழ்வைக் கொட்டிவீ ணுவதேன் ()

நீதியைக் கைவிட்டுச் சாதியை மதிப்பதேன்?
நெஞ்சி லுணர்ச்சியின்றி நீலிக்கண் ணுகுப்பதேன்?
போதகுரு மீதும் பொய்ப்பழி புனைவதேன்?
போலித்தோ லழகையே பொழுதெல்லாம் நினைவதேன்()

அடுத்தவர் வாழ்க்கையைக் கெடுத்திடப் பாய்வதேன்?
ஆகாச குண்டனுய் அறிவின்றி மாய்வதேன்?
எடுத்ததற்கெல்லாம் நாய்போல் எரிந்து விழுவதேன்?
ஏமாற்று மாயத்தை காமுற்றுத் தொழுவதேன்? ()

மோகக் குழியில் கண்ணை மூடிப்போய் விழுவதேன் ?
முத்தி நெறி சொன்னால் மூக்காலே அழுவதேன் ?
தாகம் பசி என்றால் தாழ்ப்பாள் இறுக்குவதேன் ?
தம்படிக் காசிற்கும் சண்டை முறுக்குவதேன் ? (விப)
போக சுகமெல்லாம் புளிப்புத்தட்டிப் போகும் ;
புதைத்த பணத்தைக் காலப் பூதங்கொண்டேபோகும்;
தேகம் விழு முன்னே மோகமடங்கி யுள்ளே
தேகியைக் காணாது தெருவில் அலைவதேன் ? (விப)

## 474. வாயைத் திறந்து

ஆனந்தபைரவி] [ரூபகம்

ப: வாயைத் திறந்து பேசலாகாதோ—பொது
மன்றில் உலகம் ஒன்றி வளர (வாயை)

அ: தாயுந் தந்தையுந் தாரக முமாய்
தரணி யாளும் தரும துரையே (வாயை)

ச: சாதி சமயச் சண்டை ஒழியும்
சாத்திரவா தங்கள் அழியும்,
சோதி யமுதம் வாழ்விற் பொழியும்
சுத்தசுதந்தரம் ஒளிரும்
பேதபுத்தி பிறகிட் டிரியும்
பெரியசம ரஸம் விரியும்
நீதியாம் அரு ளாட்சி நிலவும்
நித்திய மான சத்தியம் பொலியும் (வாயை)

## 475. சிந்தித் தன்பு

பைரவி] [ரூபகம்

ப: சிந்தித் தன்பு செய்து காணுவோம்—ஜக
ஜீவ னுள்ளே சிவம் பொலிவதைச் (சிந்தித்)

அ: பந்த மின்றித் தொந்த மின்றிப்
பரம சுத்த சமரஸமாய்,
மந்த மாருதம் வளரும் காலை
மலரிற் பூத்த மணத்தைப் போலே (சிந்தித்)



ச: அலையும் மனதை உள்ளி மூத்தே
ஆடா மணி விளக்கைப் போலே
கலைய றிந்து நிலை நிறுத்திக்
கண்ட தீரர் காட்டும் வழியே (சிந்தித்)

## 476. விளையாடலே உலகம்

கல்யாணி] [சாய்ப்பு

ப: விளையாட லே உலகம்—அதில் இரு
வினையாலே வரும் கலகம்—மனமே (விளை)

அ: உளையாத ஞானிகள் உணர்வார் இதன் சேட்டை
உள்ளியை உரித்திடின் உள்ளே லொட லொட்டை ()

ச: நானென்றோர் ஆணவம் நானாரூபமாய்க் காட்டும்
நல்லதும் பொல்லதும் அல்லல் செய்தே வாட்டும்,
தானென் றெழுந் துள்ளே சாட்சியாம் பசுபதி
சாட்டை கட்டி யாட்டும் சக்தி விலாசமாம் (விளை)

## 477. சிரிக்கத்தான் வேண்டும்

சுருட்டி] [ஆதி

ப: சிரிக்கத்தான் வேண்டு மம்மா—மனக் குரங்கின்
சேட்டையைப் பார்த்துச் சும்மா—

அ: எரிக்கும் காமக்குரோதம் தரிக்கும் நாடகக் காட்சி
அரிக்கும் வஞ்ச வலையை அறுத்தெறி வதே மாட்சி ()

ச: கேட்டுக் கேட்டுப் புளித்த கிழட்டுப் பழங்கதையே
கிளர்ச்சியெல்லாம் ஆங்கார வளர்ச்சி தரும் உதையே
ஆட்டுக் குட்டிக்கு நரி அரிய துணையாகுமோ ?
அபத்தக் களஞ்சியன்பேர் அரிச்சந்திரன் ஆகுமோ ?

## 478. ஆளவேண்டும் என்றால்

கேதாரகௌளை] [ஆதி

ப: ஆள வேண்டும் என்றால், அகங்காரத்தை அடக்கி
ஆளவேண்டும்...மனிதா—இனிதே (ஆள)

அ: கோளும் பொருமையும் குட்டிக் கலகம் செய்யும்,
தேளுக் கிடங்கொடுத்தால் தினந்தினங்
கொட்டும் கையை (ஆள)
ச: பாரைக் கொலே செய்து வீரனெனவே பேசும்,
படையெடுத்தே கொடியர் குடியைக் கெடுக்கும் பாசம்;
ஊரைக் கவர்வதுபோல் உயிரைக் கவரும் நாசம்;
உண்ட வீட்டுக்கிரண்டே உன்னும் படுமோசம் ()

## 479. சகஜமான நிலே

தன்யாசி] [ரூபகம்

ப: சகஜ மான நிலேயில் இருந்தால்
சலனம் ஏன் மனமே—என்றும் (சகஜ)
அ: அகமக மென்றே சுககனமாகும்
அதனேக் கூடி இதயக் குகையில் (சகஜ)
ச: அன்பாகிநல் அருளாகியுள்
அறிவாகிப் பே ரின்ப மரகியே,
தென்பா லப்பன் சின்முத் திரையால்...
சீவனில் மகா தேவனேக்கூடிச் (சகஜ)

## 480. மங்களகர

மாயாமாளவ கௌளம்] [ரூபகம்

ப: மங்கள கர மஹா தேவனே—புவி
மந்திரம் வளர் சுந்த ரேசனே (மங்கள)
அ: சங்கர சக லாத்ம நாதனே—சுத்த
சமரஸசன் மார்க்க போதனே (மங்கள)
ச: எட்டுக் குணமும் எட்டு வடிவும்,
எட்டுச் சித்தும் இயற்கை யாகி
எட்டுத் திக்கும் எட்டறத்தினே
இயற்றி எம்மைப் பயிற்றும் இறைவா! (மங்கள)

## 481. ஆதாரமான

சாவேரி] [ஐம்பை

ப: ஆதார மானபர மாத்மஜய நாயகனே
ஆர்வமுடன் கூவி யணேவோம்—மனமே (ஆ)



அ: வேதாக மச்சிகர ஜோதியினே மேதினியில்
விரிவான உயிரெங்கும் அறிவாக விளேயாடும் (ஆ)
ச: சண்டைமதம் அணுகாது ஸாமீப ஸாலோக
ஸாரூப ஸாயுஜ்ய உபசாந்த பதவிதரும்,
பிண்டத்தி லிருந்தபடி அண்டத்தில் இருக்கின்ற
பிரமத்தைத் துரியத்தைப் பிரிவரிய சிவசத்தை (ஆ)

## 482. நிம்மதியாக

அசாவேரி] [சாய்ப்பு

ப: நிம்மதி யாயிருந்தே நின்னேத் துதிக்கவருள்
நிகரில்லா மாணிக்கமே—எந்த நாளுமே (நிம்)
அ: எம்மத உண்மையும் சம்மத மாகிய
ஏகமே சுத்தான்ம போகமே உனேக் கூடி (நிம்)
ச: குண்டுணி நாய்பின்னே குலேக்காமல்—பிறர்
கோபப் பொருமைப்புயல் அலேக்காமல்,
அண்டப் புளுகரும், அவதாரப் புளுகரும்,
அடிமைசெய் தின்னுயிர் குடிக்காமல்—ஐயா (நிம்)

## 483. கள்ளரைப் பிடித்திடுவோம்

பிலகரி] [தேசாதி

ப: கள்ளரைப் பிடித்திடுவோம்—ஞானத்தடியால்
கண்டித்து விரட்டிடுவோம்—வாருங்கள் (க)
அ: மெள்ளப் புலன் வழியே உள்ளே புகுந்தறிவைக்
கொள்ளே கொண்டே நாளும்
சள்ளே செய்யும் பொல்லாத (க)
ச: காமக் குரோத லோப மோகக் கொலேகாரரைக்
கட்டிவை ராக்கியத்தால் வெட்டிப் புதையுங்கள்
தீமனத் திருடரைத் தியானத்தால் தீட்டுங்கள்.
சீறும் பாம்புக்குத் தடி காரன் மந்திர வாதி (க)

## 484. மாமாய உலகென்னே

நாதநாமக்கிரியை] [ஆதி

ப: மாமாய உலகென்னே ஏமாற்றி டாதபடி
மன்னு தடுத் தாளுவாய்—சிவனே (மா)

அ: காமாலைக் கண்களும் காம வலைகளும்
கதியென உன்னை நம்பும் மதியினைக் கலக்காமல் ()

ச: எட்டி பழுத்தாலும் இனிய கனியாகுமோ?
இயற்கைக் கோணலை நேரே யியற்றிட லாகுமோ
கட்டிக் கரும்பிற் புழுக் கண்டிடின் உணவாமோ?
கருத்தொன்று செயலொன்றாய் வருத்தி வருகின்ற ()

## 485. மையல் கொண்டு

காபி] [ரூபகம்

ப: மையல் கொண்டுன் மகிமை பிதற்றுந்
தைய லாகினேன்—பரனே (மை)

அ: கையிற் கிடைத்த கனியே—என்
கண்கருத்தினுக் கினியாய்—ஐய (மை)

ச: பெண்ணை மயக்கிப் பிரியங் காட்டிப்
பித்தும் ஏற்றினாய்,
கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட
கதையைப் போற்றினாய்,
பின்னு முன்னும் மின்னி மின்னிப்
பிறகு மறைவதேன்?
பேசாய் ஹ்ருதய வாசா நான்
பாசங் கொண்ட நேசா நேசா (மை)

## 486. சொல்லத் தரமா

ஹரிகாம்போதி] [ஆதி

ப: சொல்லத் தரமா—நின்
சொரூப சாக்ஷாத் கார சுகபோகம் (சொல்)

அ: வெல்லமென்றால் வெறும் வாய் இனிக்குமா? (சொல்)

ச: கல்வி கேள்விகளும் கற்ற நடிப்புகளும்,
கனதனசாம் ராஜ்யச் செருக்குகளும்,
எல்லைக் குள்ளே சில்பொழு திருந்துபோம்
எல்லையற்ற செல்வ மான
இன்பமே! என் அன்பி னாலும் (சொல்)



## 487. நானெனும்

கரகரப்ரியா] [ஆதி

ப: நானெனும் ஆணவம் போனதுமே நீயே
நடந்தெனுள் வந்தாயே, எந்தாயே (நா)

அ: மோன முனீந்திரர் தியான வெளியினிலே
ஞானவொளி பரவும் ஆனந்தத் தெய்வமே (நா)

ச: நாத குகையிலே தானெனும் போதமே
நடுநாடி முடிவிலே நடமிடும் பாதமே
ஜோதியிலே எழுந்த சுத்தாத்ம வேதமே
சொன்மனங் கடந்தனை சின்மயா தீதமே (நா)

## 488. மடங்கட்டி

ஹனுமத் தோடி] [ஆதி

ப: மடங்கட்டடா—வைராகியே
மடமையிருள் போன திடமனத்திலே (மடங்)

அ: சிடுமூஞ்சிச் செல்வர் கொடுபிச்சையேன்?
உடை திருவோட்டை; உழைத்துண்டு ஞான (ம)

ச: பணக்காரன் வீட்டில் ரசவாதமேன்?
பாட்டாளி வேர்வை பசுந் தங்கமாம்
குணக் குன்றின் மேலே நிர்க்குண சமாதி
கூடிப் பேரின்ப வீடு சேரவே (மடங்)

## 489. சன்மார்க்க சாதனமே

நாட்டைக்குறிஞ்சி] [ஆதி

ப: சன்மார்க்க ஸாதனமே—அனுதினமே
சதா பக்தி ஆராதனமே—மனமே
சன்மார்க்க ஸாதனமே—இந்த
ஜகத்தினில் இகபர—சுகத்தினை யடைந்திட
பகைத்திரள் ஒழிந்திடப்—பரனருள் பொழிந்திடவே()

அ: துன்மார்க்க வினைகளைத் தூருடன் போக்கியே
துதி ஜபதவத்தினால் மதிப்பொலி வாக்கியே
சுத்த சுதந்தர சத்திய ஸமரஸ
சக்தி வளரப்பர முத்தி நலமொளிர (சன்)

ச: நரசுகம் தேடியே—பரபரத் தோடியே
நகை துயர் இசைவசை மிகை செய்ய வாடியே
பரசுகத்தை மறந்தே இரவுபகல் அலைந்தே
காசுக்கும் உலகின்ச பாசுக்கும் பொன்மணித்
தூசுக்கும் தக்கபடி நாசுக்காய் நடித்தென்ன ?
பூசை மலரைக்கொண்டு வேசைக்கு முடிப்பதோ
நேசக் கலையை ஆசா பாசத்தில் அடைப்பதோ (ச)
முக்கர ணங்களும் பக்குவ மாகவே
மூல சக்திக்கனல் மேலுயர்ந் தேகவே
சிக்கறு சித்தத்திற் சிற்சுகம் சொக்கவே
சீவ தத்துவம் சிவ சத்துவ மாகவே (சன்)

## 490. இந்த அகம்பாவம்

கௌளிபந்து] [சாய்ப்பு

ப: இந்த அகம்பாவம் வேண்டாம்—மனமே
ஏதுக் கெனைச் சும்மா வாதுக் கிழுக்கின்ருய் (இந்த)
அ: தந்திர வலையிலே தளுக்காகப் பிடித்தென்னைச்
சந்தி சிரிக்க வைக்கும் சகசால மாயமே (இந்த)
ச: சேணியன் தறியிலே சேட்டைக் குரங்கு போலே
தேகத்தி லேபுகுந்து திமிசம் பண்ணும் பேயே...
ஆணவமே உன்னை ஆண்டவன் பாதத்தில்
அழுந்தக் கட்டி யொழித்தேன் விழுந்து கும்பிடுவாயே ()

## 491. பட்டதுபோதும்

பியாகடை] [ஆதி

ப: பட்டது போதும் அப்பா—என்முகம்
பாரருட் சோதி யப்பா— (பட்)
அ: கட்டி யணைத் தென்னைக் குட்டிக் குட்டிப் பிடுங்கிக்
கலகமே தொழிலாகும் உலகப் பிடாரியிடம் (பட்)
ச: குரங்கும் புலி நரியும், கூத்தாடும் இவள்—அகம்
கொள்ளைப் பொன் கொட்டினுல் குளிரும் இவள் முகம்
சிரங்குக்கை பார்த்திடப் பெருங்கண்ணுடி வேண்டுமோ?
செத்தாலும் போகுமோ சென்மவாசனை ஈண்டு (ப)



## 492. ஓட்டிய குரங்கினை

சாமா] [ஆதி

ப: ஓட்டிய குரங்கினை—உள்ளே யழைப்பாரோ,
ஓகோ மட நெஞ்சமே—
அ: வீட்டினிற் புகுந்ததன் சேட்டைகள் போதாவோ, (ஓட்)
வீதிச் சனியனைச் சாதம் போட் டழைப்பாரோ? (ஓ)
ச: முள்ளினை மலரென்று முத்தங் கொடுப்பாரோ ?
முட்டிக்கால் கழுதையைப் பட்டத்தில் வைப்பாரோ
கள்ளப் புருஷன் கன்னி காதானஞ் செய்வாஞே ?
கண்டாலே தெரியாதோ கருங்குரங்கின் கதை (ஓ)

## 493. மனச்சாட்சி

ஸ்ரீரஞ்சனி] [ஆதி

ப: மனச் சாட்சியின் வழிநீ நடந்தால்
வாய்மை யாக நீ வாழலாம் மனமே
அ. எனதி யானெனும் இறுமாப்பை விட்டு, (மன)
இறைவனுக் குன்னையே ஈந்து சாந்தமாக
ச: மாரி கோடை ஆடி, வசந்த காலங்கள் (மன)
வானி யற்கை வழி வந்துசெல் வதுபோல்,
காரிய உயிரும் கரும யோகம் செய்து,
கவலை யற்றநிஷ் காம்ய வாழ்வுடனே (மன)

## 494. ஆன்ம நேயம்

குந்தலவராளி] [ரூபகம்

ப: ஆன்ம நேயராக வாழுவோம்—உள்
அன்பு நாத னைப்பின் பற்றி
அ: தேனைச் சேர்க்கும் வண்டுபோலத் (ஆன்)
திருவுலகத் தொண்டு செய்தே
ச: அருவமான தலைவனுக்குப் (ஆன்)
பருவகாலப் பவனி போல
உருவு கொண்ட கருமவேள்வி
மறுவிலாது வழங்கி நாளும் (ஆன்)

## 495. அல்லி மலர்ந்தது

வசந்த] [ஆதி

ப: அல்லி மலர்ந்த தம்மா—என்னை
அந்திவந் தழைத்த தம்மா! (அல்லி)

அ: முல்லையுந் தென்றலும் மோகன வானிலே
முழுமதி நிலவிலே முத்தமிட் டாடுதம்மா (அல்லி)

ச: நட்சத்தி ரமணிந்த நாயக சக்தியின்
நாதவீணை வந்து காதினைக் கொஞ்சு தம்மா!
அட்சர ப்ரம்மத்தின் அதிசய உலகிலே
ஆடுவோம் ஆனந்தம் பாடுவோம் சகிகளா (அல்லி)

## 496. அந்தி வேளை

பந்துவராளி] [ரூபகம்

ப: அந்தி வேளை அழகு கொஞ்சுதே—என்
ஆத்மநாதன் காதல் மிஞ்சுதே—சகியே! (அ)

அ: சுந்தரமணி பூண்டசோம
சுந்த ரேசன் மந்த காசன்
வந்தெனைக்கைப் பற்றி வாச
வசந்தத்தோ டுலாவு கின்ற (அ)

ச: சள்ளையேசம் சாரக் கடலென்றேன்—உப
சாந்தனை காந்தன் என்னை
முள்ளை விட்டு மலரை முகரென்றான்—அந்த மலரினுள்ளே
கள்ளை யுண்ணும் வண்டு போலக்
கடவுளன்பைக் கருதிக் கருதி,
அள்ளிக் கலக்கும் வாழ்வே —பர
மானந்தம் அனந்தம் என்றான் (அ)

## 497. இயற்கையுள்ளே

பூர்வகல்யாணி] [ரூபகம்

ப: இயற்கை யுள்ளே இலகும் ஈசனே—என்
இதயத் துள்ளே வந்து பேசினான் (இயற்)



அ: தயக்க மின்றி மயக்க மின்றி
தரும வழியிற் கருமம் செய்யென (இயற்)

ச: அந்தி வேளை சந்தித் தென்னை
'அமைதி 'அமைதி அமைதி' யென்றே,
அருணோதய நகை புரிந்தே
கருணை கருணை கருணை என்பான்
அல்லும் பகலுமாய்ச் செல்லும் காலத் தேரில்
உள்ளபடி யிரு நல்லதுறும் என்றே (இயற்)

## 498. அருணோதய மானதே

பூபாளம்] [ஆதி

ப: அருணோதய மானதே—மனக்குயிலே
ஆர்வமுடன் கூவுவாய்—ஓம் என்றே (அ)

அ: இருளுங் கவலையும் இல்லை யினிமேலே
இதயந் திறந்தருள் உதயம் பொலிந்தது (அ)

ச: கருணை பிறந்தது கனவு பலித்தது
கனிமுகப் புன்னகை இனிமை யளித்தது
குருமணிவாசகந் திருவுடனெழுந்தது
குவலயம் விழித்தது நவயுகம் பிறந்தது (அ)

## 499. பொது நலம்

கல்யாணி] [ஆதி

ப: பொதுநலம் புரிந்திடும் புண்ணியர் வாழ்வினைப்
போற்றிடு நன் மனமே (பொது)

அ: முதுநல முடனே நற் புது நலமும் போற்றி
முன்னேற்ற வழியிலே முயன்று முயன்று நிதம் „

ச: ஊரைத் திருத்து முன்னே உன்னைத் திருத்திக்கொண்டு,
உள்ளுரை செயல்களில் ஒன்றுபட் டுண்மை கண்டு,
கார்கதிர் வான் கடல் காற்றரு விகளைப்போல்,
கடவுளின் இயற்கையைத் திடமுடன் பின்பற்றிப் „

## 500. ஆறுதல் அளிக்கும்

இந்தோளம்] [ரூபகம்

ப: ஆறுதல் அளிக்கும் நேசனே—சுத்
தாத்ம ஞன ஹ்ருதய வாசனே (ஆறு)

அ: வேறுவேறு சமய பேதம் விட்டுன் அருளைப் பற்றி நின்று
விருப்பி லாது, வெறுப்பி லாது,
செருக்கி லாது சேவை செய்யும் (ஆறு)

ச: குழலைப் போலக் கொஞ்சும் இசையும்
குழந்தை போலத் தெளிந்த மனமும்,
எழிலைப் பரப்பும் இரவி நிலையும்,
ஈந்த னந்த சாந்த மாக (ஆறு)

## 501. மனப் பொருத்தம்

மத்தியமாவதி] [சாய்ப்பு

ப: மனப்பொருத் தமே போதும்—சாதி
மதபேதம் வீண் வாதம்—என்காதலா (மன)

அ: தினகர கிரணம்போற் சேர்ந்துன்னைப் பிரியாமல்,
சித்தம் வைத்தென்னை யாளாய் தெய்வசி காமணியே ()

ச: பூமாலை, புகழ் மாலை, பொன்மாலை வேண்டிலேன் ;
பூந்தமிழ்ச் சோலையில்
தீந்தமிழ் மலர்களின்
பாமாலை சூட்டிஎன் பரமா என்றுன்னைப்
பத்திசெய் உள்ளத்தில் வைத்துச் சுகித்திடவே ()

## 502. கடவுளைக் காணுமினே

கானடா] [ஆதி

ப: கடவுளைக் காணுமினே—கண்ணுரவே
கருணையைப் பூணுமினே (க)

அ: திடங்கொண்ட மலையிலே. நடமிடு நதியிலே,
திரைகடல் வெள்ளத்தில், தெளிந்தநல் உள்ளத்தில்

ச: எழில் பெறும் இயற்கையில், தொழில்புரி யும் கையில்,
இளந்திருக் காதலர் உளமகிழ் அன்பினில்,
செழிவயல் விளைவிலே, பொழியும் வான் வளைவிலே,
செங்கதிர் மதியிலே சிரித்து விளையாடும் (க)



## 503. சித்த நிம்மதி

காம்போதி] [ஆதி

ப: சித்தநிம் மதியிலே தித்திக்கும் உணர்வான
திவ்யபரஞ் சோதியே (சித்த)

அ: பக்தி பரவசத்தால் சுத்த யோகிகள் காணும்
பசுபதி, ஜகபதி பரம தயாநிதியே (சித்த)

ச: முக்குணத் திரையின்றி, மும்மலக் கரையின்றி,
முப்புடித் தளையின்றி முத்தொழில் வினைவின்றி,
சிக்கிலா சகஜதி யானத்தி லே வளரும்
தேஜோன்மய மான தேவாதி தேவனே (சித்த)

## 504. நாஞகிய

கமாஸ்] [ஆதி

ப: நாஞகிய ஆனந்தமே
நரவினை மாற்றும் அமராமிர்தமே (நாஞ)

அ: தேஞகி யுள்ளே தித்திக்கும் உருவே
தியானமந் திரத்தின் மோனசத் குருவே (நாஞ)

ச: மனவிருள் மாற்றும் தினகரனே,
வா யுரை சொல்லா மாயாவியே
கனமான பாசக் களிம்பினை நீக்கிக்
கனகமாக்குஞ் சிதா காசமார் விளக்கே (நாஞ)

## 505. அடடா

அடாஞ] [ரூபகம்

ப: அடடா நர மனிதா—உன்
ஆணவ மாயத்தை விடடா ! (அ)

அ: சுடடா பொய்யைச் சுடடா
சுற்றிச் சுற்றிவளை பற்றுறு மாயத்தை விடடா (அ)

ச: கள்ளக் காமாதிகள் உள்ளேவராமலே தடுடா
கொள்ளைபோனபின்பு
கொல்லையைச் சாற்றிஎன் மூடா ?
எள்ளைமலையாக்கி ஏய்க்கும் கலையிற் புகாதேடா...
இன்பமிருக்கிற தன்பு நிலையிலே பாரடா (அ)

## 506. சித்தமலையாமல்

நீலாம்பரி] [ஆதி

ப: சித்தம் அலையாமல் தியான நித்திரை கொள்வாய்
சின்மயத் தொட்டிலிலே—ஜீவசிசுவே (சித்)

அ: சுத்தோஹத் தென்றலே சுகமாகத் தாலாட்டச்
சோகமோகதாகத்தின் வேகமெல்லாம் அடங்கி (சித்)

ச: புலன்களும் கரணமும் புத்தியி லேயடங்கிப்
புத்தி இதயம் அடங்கி,
சலனமில் லா இதயம் சாட்சி யிலேயடங்கித்
தானேதான் ஆகிடவே, (சித்)

## 507. பரம சச்சிதானந்த

நாட்டைக்குறிஞ்சி] [ரூபகம்

ப: பரம சச்சி தானந்த குருவே—ஓம் நம (பர)

அ: நரஜன்மத்தை அமரமாக்கி,
நானூர் என்னும் ஞானம் ஊக்கிய (பர)

ச: இருந்த பொருளை இருந்த படியே இருந்து காட்டினாய்;
இங்கும் அங்கும் அலைந்திடும் மன இருளை ஓட்டினாய்
வருந்தும் பிறவி திருந்தி இன்பம்
அருந்த யோக மருந்து தந்த (பர)

## 508. உள்ளந் துடிக்குதடா

மோகனம்] [ஆதி

ப: உள்ளந் துடிக்கு தடா—பரமா
ஊனும் உருகுதடா (உள்)

அ: கள்ளத் தனமாய் வந்தென் காதலைக் கொள்ளை கொண்டு
மெள்ள நழுவலாமோ? வள்ளல் உனக்கழகோ (உள்)

ச: காற்றுடன் கனலினைக் கலக்க விடுக்கிறாய்;
கத்து குயிலுக்கும் கற்றுக் கொடுக்கிறாய்;
போற்றிய சீவனை ஆற்றிலே விடுவாயோ
புருஷனென் றுலகிறைற் புகலப் படுவானே? (உள்)



## 509. ஆதியான

கேதாரம்] [திரிபுடை

ப: ஆதி யான வேத சாரமே—சச்சி
தானந் தமே (ஆதி)

அ: பேதமிலை தர்க்க வாதமிலை பர
நாத உருவுடன் சோதி மயமதே (ஆதி)

ச: வட்ட வுள்ளத்தின் நட்ட நடுவிலே
வெட்டு மின்ன லெனும்
தொட்டு ணர்ந்திடின் எட்டுத் திக்கிலும்
தட்டில்லா நட மிட்டிடும்—அது (ஆதி)

## 510. உள்ளங்கை நெல்லி

சங்கராபரணம்] [ஆதி

ப: உள்ளங்கை நெல்லிபோல் உலகினை அறிகுவாய்—
உன்னை நீ அறி மனமே (உள்)

அ: நள்ளிரா விற்கமைதி நாம் சொல்ல வேண்டுமோ?
நட்டுவன் பிள்ளைக்குக் கொட்டிக் காட்ட வேண்டுமோ?

ச: பக்குவமில்லாமல் பாரைத் திருத்தாதே;
பாதிக் கிணறு தாண்டும் படுமுட்டா ளாகாதே
திக்கறி யாமலே தேரை நீ ஓட்டாதே,
தெய்வ சக்தியில்லாது கைவலி காட்டாதே (உள்)

## 511. வருவது சொன்னேன்

செஞ்சுருட்டி] [ஆதி

ப: வருவது சொன்னேன் நான்: படுவது படுகநீ
வம்புசெய் மட மனமே (வரு)

அ: திருவுறும் பரசாந்தம் திரிபுலன் பெறுவதோ?
செக்கும் சிவலிங்கமும் மக்குநா யறிவதோ (வரு)

ச: உள்ளந் திருந்தாவிடில் உலகந் திருந்துமோ?
உடலுக்குச் சோறின்றி ஊருக்கு விருந்தாமோ?
கள்ளப் புருஷ னுக்குக் கன்னிகா தானமோ?
காணியை உழுகாது கண்டு குடிமானமோ? (வரு)

## 512. நம்பவேண்டும்

சகானா] [ஆதி சவுக்கம்

ப: நம்ப வேண்டும்—மனிதா—பரம்பொருளை (நம்)

அ: வம்பு வழக்கை விட்டு மாசற்ற மனந் தொட்டு,
தம்பம் அருளை யின்றித் தாஸனைக் கும்பிட்டு (நம்)

ச: நாத்திகப் படிப்பின்றிச் சாத்திர நடிப்பின்றி,
நாயன்மார் போலவே தூய வுள் ளன்புடன்
பாத்திர மாயருட் பணிசெய்து வந்திப்பாய்;
பரம கருணாநிதி வருமுன் அந்தரங்கத்தில் (நம்)

## 513. கலகமின்றி

கரகரப்ரியா] [ரூபகம்

ப: கலக மின்றி உலக மெல்லாம்
கலந்து வாழலாம்—மனிதா (கல)

அ: பலபலமத பேத மின்றி
பரமன் அருளிற் கரணம் ஒன்றி (கல)

ச: அண்டமெல்லாம் ஆத்ம நாதன்
ஆடும் ஆலயம்.
ஆருயிர்த் தொகுதி யீசன்
ஆனந்த வடிவாம்
கொண்டு கொடுத்துக் குலமொன் றாகிக்
கூடிக் குடித்தாற் கூழும் அமுதாம் (கல)

## 514. தயக்கமேன்

கரகரப்ரியா] [ரூபகம்

ப: தயக்கமேன் மனமே—சம
யோகபோக சாதனஞ் செய்யத் (த)

அ: மயக்கு மதியின் மமதை யின்றி
மனிதர் தெய்வப் புனிதராகத் (த)

ச: வம்படியிலே சம்பாதித்து
வயிறு வளர்க்கும் வாழ்விங்கில்லை
அம்புவியாம் ஆலயத்தில்
ஆன்மநேய ஒருமைகூடத் (தய)



## 515. கௌரி சிவமே

ஸ்ரீராகம்] [திரிபுடை

ப: கௌரி சிவமே சரணம்—சுத்த சக்திக்
கனலே நின் சரணம் (கௌரி)

அ: சௌரியமும், பலமும், தைரியமும், ஜயமும்
தன்மார்த்த வளமுடன் சன்மார்க்க மும் தருவாய் (கௌரி)

ச: தட்டுத் தடைகளைப் பட்டெனத் தகர்த்தென்னைத்
தாக்கும் பகைக்குலத்தைப் போக்கி அமைதி யாக்கி,
எட்டெட்டுத் திக்கினிலும் வெற்றி முழக்க முடன்
ஏகியுன் பணி செய்யும் யோகசித்தி யருளாய் (கௌரி)

## 516. பவரோக வைத்தியனே

தேவகாந்தாரி] [ஆதி சவுக்கம்

ப: பவரோக வைத்தியனே—ஓம்சரண்
பரம கருணா கரனே (பவ)

அ: நவயுக பாரத சிவமய சக்தியால்
ஞாலத்திலே ஞான லீலைசெய்பவனே (பவ)

ச: எந்தெந்த மதங்களும் வந்து பணிந்திடும்
ஏக சமரஸத்தை யோகமுடன் அளித்தாய்.
பந்தமில்லாத அருட் சந்தக் கவிதை பாடிப்
பரவிடும் பேரின்ப வரமெனக் கருளுவாய் (பவ)

## 517. புது வாழ்க்கை

வராளி] [ரூபகம்

ப: புதுவாழ்க்கை தரவேண்டும்
பூரண குருவே—நல்ல (புது)

அ: மதுமலர் வனவண் டெனவே
மகிழ்ச்சி கொண்ட தொண்ட ருடனே (புது)

ச: தாழ்வு தீரப் பாரதசக்தி தழைக்க வேண்டினேன்;
சண்டைப் பேய்கள் சாய சாந்தம் செழிக்க வேண்டினேன்;
வாழ்வுக் கலையே யோக மாக வளர வேண்டினேன்;
வானமுதம் மாநிலத்தில் வழிய வேண்டினேன் (புது)

## 518. பண்டிகை

மலயமாருதம்] [ஆதி

ப: பண்டிகை கொண்டாடுவோம்—அருட்
பரமனைப் பரவி நல்
வரங்களை வேண்டி நாம் (பண்டி)
அ: எண்டிசை யுலகிலும் குண்டுப் புகை யொழிந்தே,
எல்லாரும் அன்புடன் ஏக ரஸமாய் வாழப் (பண்டி)
ச: பாடு பட்டுப் பிழைப்போர் வாடுதல் அகன்றிட
பணமுடன் ஈகையும் குணமுறப் பொருந்திட
நாடு வறுமையின்றி நல்வளந் தழைத்திட
நாளும்பே ரின்பம் வந்து வாழ்வினிற் செழித்திடப்(பண்டி)

## 519. மாதம் மும்மாரி

ஹம்ஸாநந்தினி] [ஆதி சவுக்கம்

ப: மாதம் மும்மாரி பொழிகவே—உலகெல்லாம்
மாதம் மும்மாரி பொழிகவே—உலகெல்லாம்
மங்கலப் பயிர் செழிக்கவே—ஜகதீஸ்வரியே (மாத)
அ: தீதெல்லாம் தீர்கவே—உழைத்தெல்லாரும்
சேமமாக வாழ்கவே—அருட்பொதுவில் (மாத)
ச: வறுமையும் அடிமைசெய் மடமையும் சிறுமையும்
வஞ்சமும் கொஞ்சமும் இன்றியுன் மக்கள்
ஒருமையும் உண்மையும் உயர்மலை தவழ்கிற
அருவிபோல் அன்புங்கொண் டருள்அர சாண்டிட(மாத)

## 520. நினைவாய்

நாயகி] [ஆதி சாதாரணம்

ப: நினைவாய் மனிதா—இந்த
நிலவுயிர் யாவையும் நின்னுயிர் என்னவே (நினை)
அ: தனையறிந்த ஞானிக்குத் தானே உலகெல்லாம்
தண்மலர் பலவேனும் பண்ணும் பூசை ஒன்றாம்(நினை)
ச: கறுப்புப் பசுமடியிற் கறந்தபால் கறுப்பாமோ?
காட்சிகள் மாறிடின் கண்மணி மாறுமோ?
வெறுப்பு விருப்பில் லாது விரிவாக நோக்கினால்
வேறுவே றுடலுளே விசையொரு சக்தியே (நினை)



## 521. கலைவிழி

ஆகிரி] [ஆதிதாளம்

ப: கலைவிழியாலே கண்டேனே—கடவுளைக்
காலையும் மாலையும் கனிநகை புரிவதைக் (கலை)
அ: மலைநதி யசைவிலே அலைகடல் இசையிலே
மழைமுகில் கர்ஜிக்க விளையாடும் மின்னிலே (கலை)
ச: தேன் மலர் நகையிலே, தீங்கனிச் சுவையிலே
சேய்களைக் கொஞ்சிடுந் தாய்முகத் திருவிலே,
வான்சுட ரொளியிலே கான்பசு வனப்பிலே
வளம்பெறும் இயற்கையின் உளம்பெறும் ஒளியிலே(கலை)

## 522. பெண்மையே

கீர்வாணி] [ஆதி

ப: பெண்மையே சக்தியடா—அதைவணங்கும்
பெருமையே புத்தியடா—நரமனிதா (பெண்)
அ: கண்ணிரண் டென்னவே காதலுடன் கூடி,
காசினி வாழ்ந்திடக் கடவுள் இங்கே யளித்த (பெண்)
ச: ஆணின்றிப் பெண்ணில்லை பெண்ணின்றி ஆணில்லை,
அகில உலக மெல்லாம் ஆண்பெண் விளையாட்டே
பூணும் பொன்னும் போலே பூவும் மணமும்போலே
பொருந்தி இருபாலருந் திருந்திநாற் பயன்பெறப் (பெண்)

## 523. சீர்பெருக

மந்தாரி] [ஆதி

ப: சீர்பெருகச் செயம்பெருகத்
திரு மகளைப் பணிவோம்—மனமே (சீர்)
அ: ஊர்பெருகும் பேர் பெருகும்
உயிர் வாழ்க்கையில் ஒளிபெருகும் (சீர்)
ச: அழகினிலே கொலுவிருப்பாள்
அன்னைபராசக்தி புன்னகை யுடனே,
பழகும் வீட்டிலே பாக்கியங்க ளுண்டாம்
பத்ம லக்ஷ்மியை பக்திசெய் திடுவோம் (சீர்)

## 524. உன்னைப் போலவே

லதாங்கி] [ஆதி

ப: உன்னைப் போலவே பெண்ணைக்கண்டு வணங்கும்
உள்ள மீகுவாய் ஓம் சக்தியே (உன்)

அ: அன்னையே அமுதே அருளே அழகே,
அன்பு மயமான இன்பச் சங்கரியே (உன்)

ச: அகமாயை யென்னை அடிமை செய்யாமல்,
ஆசைப் பேய்களிடம் மோசம் போகாமலே,
சகஸ்ரார சித்தி தரும் சாதனத்தால்
சர்வம் சுத்தசக்தி ஜகமென் றறிந்தே (உன்)

## 525. தூண்டு சுடர்

வாசஸ்பதி] [திரிபுடை துரிதம்

ப: தூண்டு சுடரினைப் போலே—பரி
சுத்த சக்தியைக் காணாய்—உள்ளே (தூ)

அ: ஆண்டவன் அருள் சோதி—அதன்
அன்பு தரும் அனுபூதி—அந்தத் (தூ)

ச: சோர்வுந் துயரமும் போக்கும்—ஆத்ம
சுதந்தரத்தினை ஆக்கும், மிகப்
பாந்தமாய்—உப—சாந்தமாய் ஸர்
வாந்தர் யாமியின் காந்தமாய் ஒளிர் (தூ)

## 526. வீரசக்தி பவானி

தர்பார்] [தேசாதி

ப: வீர சக்தி பவானி—ஓம் காளி
வெற்றி யீந்தெமை யாளாய்—ஜய (வீர)

அ: காரி ருட்டிலும் கம்பி மின்னலைக்
காட்டி நல்வழி நாட்டும் அன்னையே (வீர)

ச: ஏற்ற மாகிய நாட்ட றத்தினை
நாட்ட மெய்த்துணை தருவாய்
கூற்றினையும் வெல்லும் ஆற்ற லருளுவாய்
குண்டலி ஜோதி மஹேஸ்வரியே (ஜய)



## 527. மனத்தாகத்தை

ஆபோகி] [ஆதி

ப: மனத் தாகத்தை மாற்றி யருள்வாய்
வானமுதத் தேனை யானருந்தத் தந்தே (மன)

அ: கனமான மாயக் கானலை விரும்பேன்;
காட்சியாக நினது கருணை வேண்டுகின்றேன் (மன)

ச: சத்திய ஞானமும் சாது சங்கமும்
சஞ்சலம் இல்லாத நெஞ்சகத் தெளிவும்
சுத்தசன் மார்க்கத்தின் சித்தியும் முத்தியும்
துரியவள நாட்டின் அரியவாழ்வும் ஈந்தென் (மன)

## 528. பாரத சக்தி

(ஹம்ஸத்வனி) திஸ்ர ஏகம்.) தகதகதகிடதகதகதகிட நோட்டு)

ப: பாரத சக்தி சத்திய ஜோதி
பரம கல்யாணி மஞ்சுள வாணி (பார)

அ: பாரினைக் காக்கும் பாவன சக்தி
பத்மினி காளி, பார்வதி தேவி (பார)

ச: தேன்மலர்போலே திருநகை முகமும்
வான்முகில் போலே வழங்கிடுங் கரமும்,
மோனமுத் திரையும் தியானநித் திரையும்,
ஞானநல் வளமும் ஆனசிற்சக்தி (பார)

## 529. நானுனைக் கண்டு

கௌள] [திரிபுடை

ப: நானுனைக் கண்டு களித்தேன்—ஜீவ
நாயகனே—சுக—தாயகனே— (நானு)

அ: வான்முகில் கண்ட மயிலினைப் போலே,
வசந்த மலர்கண்ட குயிலினம் போலே, (நானு)

ச: ஞாயிறைக் கண்ட தாமரை போலே,
ஞானியைக் கண்ட ஞானியைப் போலே—
தாய்வரக் கண்ட சேயினைப் போலே
தன்னையே கண்ட யோகியைப் போலே (நானு)

## 530. ஐந்து கோச

சரஸ்வதி] [ரூபகம்

ப: ஐந்து கோசக் கோட்டைக் குள்ளே
ஆளுகின்ற வேந்தா—சாந்த (ஐந்)
அ: எந்தனுக்குப் புலப்ப டாமல்
விந்தை செய்யும் கள்வா (ஐந்)
ச: மேகத் துள்ளே மின்னல் போலே
மிளிர்ந்து மிளிர்ந்து மறைவாய்...
தேகத்துள்ளே தேகியே நின்
மோகங்கொண்டேன் பேதை (ஐந்)

## 531. ஏழு மாமலை

இராமப்ரியை] [ஆதி

ப: ஏழுமாமலைகள் சூழ வுள்ளவே
ஏழை யெப்படி ஏறிச் செல்லுவேன்... (ஏழு)
அ: தூலப்ராண சூக்ஷ்ம விஞ்ஞான ஆனந்த
துரிய சித்து சத்தாம் பெரிய கோட்டைகளாய் (ஏழு)
ச: கண்ணைத் திறந்துன் கருணைத் துணைதந்து,
கடைத்தேறும் வழி காட்டி யாளுவாய்;
மண்ணுட லுடனே உன்னை நான் கலந்தே
மாசிலாத பரமா காசஜோதி யாக (ஏழு)

## 532. அடைந்தேன்

தேவமனோகரி] [ஏகம்

ப: அடைந்தேன் உன்னை அன்புடன் ஐயா
ஆதரித் தருளாயே—பரமா (அடை)
அ: கடைத்தே றிடவுன் கருணையல் லால்வழி
காணேன் என்கண் மணியே இனி நான் (அடை)
ச: வானின்றிப் பூமி வளர்வதும் உண்டோ ?
மண்ணின்றிப் பயிரோ ? பயிரின்றி உயிரோ ?
நானென உயிர்க்கும் நீயின்றி நானுர் ?
ஞானசிகா மணியே நடராசா (அடை)



## 533. என் பிழைகள்

பூஷாவளி] [ஆதி ஒன்றரை இடம்

ப: என்பிழைகளை மன்னிப் பாயப்பா
ஏழையேன் இனி வாழும் வகை காட்டி (என்)
அ: கன்ம ஜீவனுல் கஷ்டப்பட்டுப் பட்டுன்
காலைப் பற்றிக் கொண்டேன் ; கருணை காட்டுவாய்(என்)
ச: குட்சியே நினைவாய்க் கட்சிகட்டி நாளும்
கோடிப் பாவஞ் செய்து தேடித்தேடித் தோற்றேன்,
சிட்சித்தது போதும்; ரட்சிப்பா யினிமேல்,
சீர்பாத மன்றி ஓர்துணை யில்லேன் (என்)

## 534. ஆத்ம சக்தி

சாருகேசி] [ஆதி

ப: ஆத்ம சக்தி தருவாய்—என் னப்பனே
ஆத்ம சக்தி தருவாய்—உன்பணி செய்ய (ஆத்)
அ: பூத்த பூப்போலப் புறவுடலானது,
புண்ணியா உனது எண்ணஞ் செய்கைபெற (ஆத்)
ச: அற்ப தேகத்திற்குக் கற்பமூட்டியுமென் ?
அழுக்குப் பாண்டமென்றும் அமுதகலசமாமோ ?
சிற்பரா சக்தி திருவிளை யாடஎன்
சித்தத்தில் உன்னருள் வைத்துவளர்த்து நிதம் (ஆத்)

## 535. ஆன்ம நேயம்

மோகனம்] [ஆதி

ப: ஆன்ம நேய ஒருமை தருவாயே—பரமா
அருட்பெருஞ் ஜோதியாய் வருவாயே (ஆன்)
அ: ஞானசிற் சபையிலே ஞாலமெல்லாம் கூடி
நலம்பெற சத்திய சன்மார்க்க நிலை பெற (ஆன்)
ச பரந்த தனிக்கருணை சுரந்துசுரந்து மாந்தர்
பிறந்த பிணிகளற மறந்த பொருளைப்பெற
சிறந்த துரியநிலை உறைந்து மாறிப்பிறந்து
திறந்து சிற்சபையிலே உறைந்து மகிழ்ந்திடவே

சீவதத்துவம் சிவ சத்துவம் ஆகவே
ஜெனனமரணபயம் சிதைந்து போகவே
தேவராய்ப் பூவினில் யாவரும் வாழவே
திருவருள் ஆட்சியும் காட்சியும் சூழவே (ஆன்)

## 536. இந்து தர்மம்

கல்யாணி] [ரூபகம்

ப: இந்து தர்மம் எங்கள் தர்மமே
இகபர சுகமர்மமே—ஓம் (இந்து)

அ: சிந்தைக்கினிய திருவாசகம்
திருமந்திரம் திருக்குறள் கீதை
திருப்புகழ் சிவஞான போதம்
திருவாய் மொழி
யுருவாய் வளர்
உலக சமயம் (இந்து)

ச: சரியை கிரியை யோக ஞான
சாதனங்களைத் துலக்கி
சகலாத்தும வித்தியாசிவ
தத்துவங்களை விளக்கி
அரிய உயிரை இறை நிலைக்கே
உரியதாக மாற்றி
அன்பு மலர்ந்தே அருள் கனிந்தே
இன்பரசம் பொழியமுதச் சோலை (இந்து)

ஒன்றே கடவுள் ஒன்றே யுலகம்
ஒருகுலம் உயிர்த்தொகையே
உள்ளக்கோயில் உள்ளே விளங்கும்
உண்மை யறிவு நிறைவாய்
நன்றே யான்ம வொருமை கூடி
நின்றே மனதை வென்றே
நானதுவெனு ஞானனந்தத்
தேனையுண்டு திளைக்கும் தெய்வ (இந்து)



## 537. சத்தியத்திற்கு

கன்னட] [சாபு

ப: சத்தியத் திற்குச் சாதி மதமில்லை
சந்தேகம் ஏன் மனமே— (சத்)

அ: சுத்தான்ம உணர்ச்சியே நித்திய வேதம்
சொல்லால் எழுந்ததெல்லாம் அவரவர் பேதம் (சத்)

ச: கீதை உபநிடதம் கிறிஸ்து மொழி குறள்
கேடறும் உண்மையை நாடுறும் வழிகளே...
பாதை பலவேனும் பட்டணம் ஒன்றே
பரிசித்துப் பாருள்ளே பார்ப்பானை நன்றே (சத்)

## 538. மறவாதருள்

கருடத்வனி] [ஆதி ஒன்றரைக்களை இடம்

ப: மறவாதருள் திருநாமத்தை
மஹாதேவ நடராஜ சுத்தஓம் (மற)

அ: உறவாக உன்றன் உணர்வொன்று போதும்,
ஓதுநூல்க ளெல்லாம் ஒழிந்தாலுமே (மற)

ச: கற்றகல்வியெல்லாம் மட்டுக்குள் அடங்கும்
கலைபெரிது; காலமோ சிறிது,
சிற்றறி வன் யான் பெற்ற பயனெல்லாம்
சிவஞான மொன்றே அவனி வாழ்விலே (மற)

## 539. கூடி வாழுவோம்

கமலா மனோகரி] [ஆதி ஒன்றரை இடம்

ப: கூடி வாழுவோம் குவலயமெல்லாம்
குலதெய்வ மொன்றே குலவுயிரும் ஒன்றே (கூடி)

அ: நாடுநிற சாதி மத பேத மெல்லாம்
நானுவி கார மான மனமே (கூடி)

ச: கோயிலும் தூபியும் கொத்தன் வேலையே
குருக்களும் சிலையும் வருக்கக் கொள்கையே
நேயமூன்றி யுள்ளே தூயஒன்றைக் கண்டால்,
நிறைவான அன்பால் குறையின்றி யிங்கே (கூடி)

## 540. அன்பு நிலை

பரசு] [தேசாதி

ப: அன்பு நிலையைக் கண்டால்—நம்பு மனமே—நீ
ஆண்டவனைக் கண்டிடுவாய் இன்பமனமே (அ)

அ: துன்பமெல்லாந் தொலையும் தூய மனமே
தொந்த பந்தங்களெல்லாம் சிந்தி யொழியும் (அ)

ச: மந்திரத்தில் வணங்கினும் வேற்றுமை யில்லை—
மசூதியிலே வணங்கினும் வேற்றுமை யில்லை
எந்தத்திசை வணங்கினும் வேற்றுமை யில்லை
எல்லாமும் கடவுள் இருக்கு மிடமே (அ)
பிரிவினை பேசாதே பேதை மனமே,
பெயரில் மயங்காதே பிள்ளை மனமே,
அறிவினை வளர்த்திடின் ஆசை மனமே:
அகமும் புறமும் சுத் தான்மமயமே (அ)

## 541. வினைப் பிறவி

குறிஞ்சி] [ரூபகம்

ப: வினைப்பிறவிக் கணக்கைத் தீர்த்து
விடுதலை செய்வாய்—என்னப்பனே (வினை)

அ: இனிப்பிறவி யேது மின்றி
இகபரமெனும் வகையு மின்றி (வினை)

ச: கணக்குப் பார்த்து ஐந்தொகையும் கட்டினேனையா
கடனுடனெல்லாம் உடனுடனே கைமே லீந்தனன்
பணக் காம மண் பற்றுவழியில்லை;
பரிந்தினி யென்னை உரிமை கொண்டே (வினை)

## 542. பரம பிதா

சிந்துபைரவி] [ஆதி

ப: பரமபிதா பரி பூரணந் தருவான்
பக்தி பரவசராய் வாருங்கள் (பர)

அ: கருணை புரிந்து நம்மைக் காக்கும் கடவுளைக்
கருத்துடன் வணங்கிடச் சேருங்கள் (பர)



ச: சேயுளங் கொண்டவர் தூயவுள் ளத்தில்
செஞ்சுடர் போலொளிர் ஜோதி
தாயினும் அன்புடன் சாது ஜனங்களைத்
தாங்கு சுத்தானந்த ஜோதி—ஓம் (பர)

சுத்த சன்மார்க்க கீர்த்தனங்கள்

முற்றிற்று



# 8. ஐக்கிய கீதம்

## 543. ஐக்கிய ஜோதி

காபி] [ரூபகம்

ப: ஓம் ஜோதி! ஓம் ஜோதி! ஓம் ஜோதி ஓம்!
அ: நாம் ஜோதி நாம் ஜோதி நாம் ஜோதி ஓம்
ஞால ஜோதி ஞான ஜோதி வான ஜோதி ஓம்
ச: சுத்த ஜோதி சத்ய ஜோதி சாந்த ஜோதி ஓம்
ஸப்த வர்ண ஸப்தஸ்வர ஸர்வ ஜோதி ஓம்
அத்வைத ஜோதி ஓம்
ஆத்ம ஜோதி ஓம்
ஆனந்த ஜோதி ஓம்
ஐக்ய ஜோதி ஓம் ஓம்! (ஓம்)

## 544. எத்தனை ஆபத்து

அரிகாம்போதி] [ரூபகம்

ப: எத்தனை ஆபத்தினின்று
காத்தனை எந்தாய்—பரமா (எ)
அ: பத்தனை அன்புப் பித்தனைக் கொடும்
பகை பொருமைப் பாசவுலகில (எ)
ச: துடியரசியல் சூழ்ச்சிகள் பல
துரத்திய ஒற்றர் தொல்லைகள் பல
வெடிகுண்டு வெம்மைகள் பல
விலக யோக சித்தி யிலக (எ)

## 545. குண்டு வெடித்து

வராளி] [ரூபகம்

ப: குண்டு வெடித்துக் குருதியோடிக்
குலைந்த நாளிலே—என் (குண்டு)
அண்டையிருந்தே அபயமளித்தாய்
அம்மையப்பனே!



அ: அண்ட மெல்லாம் கிடுகிடுக்கும்
அணுக்களத்திலே
ஆத்ம சக்திக் கனலைத் தூண்டி
அமைதி யீந்தனை (குண்டு)
ச: கண்மூடித் திறக்குமுன்னே
காட்சி யுல கெல்லாம்
மண்மூடிப்போகும் போதோர்
மாயங் காட்டினை—உன்
மலர்க்கை நீட்டினை—ஐயா (குண்டு)

## 546. பயங்கர

சௌராஷ்டிரம்] [ரூபகம்

ப: பயங்கர வுலகம்—இது
பன்மயக் கலகம் (ப)
அ: மயங்கித் தயங்கும்போது—சுத்த
மந்திரத்தினை ஓது—மனமே (ப)
ச: வஞ்ச நரிகள் மமதைக் கரிகள்
வலிய கோபப் புலிகள்
கொஞ்சிமெல்லக் கொத்தும் பாம்புகள்
குடியிருந்து கொடுமை செய்யும் (ப)

## 547. ஆர் வகுத்தாரே?

சுரடி] [ரூபகம்

ப: ஆர்வகுத்தாரே—இங்கே
ஆயிரம் பகைச் சாதி மதத்தை (ஆர்)
அ: ஓருயர்ந்த வான வெளியில்
உலவும் அணுவாம் உலகத் தூசியில் (ஆர்)
ச: கடவுளென்று கண்டபேர்கள்
காணிக்கை பெறுவார்
கடபடவெனக் கபட நாடகக்
கதைகள் பேசுவார்

மட மடப்பகை மதமதப் பகை
மனிதருக்கு மனிதர் பகை
அகப்பகை புறப்பகை
அறப்பகை மறப்பகை (ஆர்)

## 548. ஒன்று கூடுமோ ?

காமாஸ்] [ரூபகம்

ப: ஒன்று கூடுமோ—உலகம்
உண்மை நாடுமோ— (ஒன்று)

அ: என்றும் வான வட்டம் போலே
ஏகரசமாய் இனிசரசமாய் (ஒன்று)

ச: பரிசுத் தாத்ம சேதனத்தில்
பரந்த ஒருமையில்
பிரிவிலாது பிரியமாக
பேதசாதி மதங்களின்றி (ஒன்று)

## 549. இதுவே

கரகரப்ரியா] [ரூபகம்

ப: இதுவே நம் மதமே—
இறைவன் சம்மதமே— (இது)

அ: அதுநீ எனும் வேதம்—
அன்பே அதன் போதம்—மனமே (இது)

ச: இதயந் தோறும் இலகும் ஒன்றை
இனிது கலந்து வாழ்வோம்
இன்னுயிர்ப் பணிகளாலே
ஈசனை வழிபடுவோம்

உதய ஞாயிறென விளங்கி
ஓம் அருவியைப்போல் வழங்கி
உள்ள மோங்கி உண்மை யோங்கி
உலகக் கோவில் இலக வாழ்வோம் (இது)



## 550. வேறென்றும்

பிலகரி] [ரூபகம்

ப: வேறென்றும் அறியேன்—கடவுளே
வினையொன்றும் குறியேன் (வே)

அ: நீயொன்று நான் உன்னில் ஒன்று
நிலவுலகுன் கோயில் என்று
தூய நினைவும் சொல்லும் செயலும்
தூய வாழ்வும் தொடர்ந்ததன்றி (வே)

ச: படிப்பறியேன் கேள்வியறியேன்
பண்டிதர்களைக் கண்டறியேன்
துடிக்கும் உள்ளம் துரிய சபை நீ
துள்ளியாடும் வள்ளலென்றபின் (வே)

## 551. ஐக்கியம்

அடாணு] [ஆதி

ப: ஐக்கிய மாவோமே—
ஆருயிர்க்குல மெல்லாம்
ஓரான்ம நேயத்தில் (ஐ)

அ: சௌக்கிய மாகவே அவரவர் புலமைக்குத்
தக்கபடி யுழைத்துச் சரிசமனுகவே (ஐ)

ச: சூரிய சந்திரர் தாரகை துலங்கிடும்
தூயவான் குடைநிழலில்
நேரிய சீரிய சமநல யோகத்தில்
நீர்நிலம் பயிரென நீடுவளம்பெருக (ஐ)

## 552. வடக்கும் தெற்கும்

மந்தாரி] [ரூபகம்

ப: வடக்கும் தெற்கும் கிழக்கு மேற்கும்
வட்ட வானில் ஒன்றடா (வ)

அ: தொடுத்த மாலை தன்னிலே நிறந்
துலங்கு மலர்கள் ஒன்றடா (வ)

ச: தோட்டக் கனிகள் சாற்றி லொன்று
தூய வானில் சுடர்கள் ஒன்று
காட்டும் ஒளியிற் கண்ணுமொன்று
கருதும் உள்ளக் கடவுளொன்றே (வ)

## 553. சமய சஞ்சீவி

மாயாமாளவகௌளை] [ஆதி

ப: சமய சஞ்சீவி யிதே—பல
சமயங்கள் சமரசமாக விளங்கும் (ச)

அ: அமைதியாய் மாந்தர்கள் அன்புடன் கூடி
அறிவுடன் முயன்றே செறிவுடன் வாழும் (ச)

ச: பொதுநலமாம் சமயோகம்—அதில்
பொருந்திய வாழ்வு வைபோகம்
புதுமையும் பழமையும் பொலிமிக நலனே
பூமிக்கெல்லாம் இதுவே அணிகலனே (ச)

## 554. உலகம் சுற்றி

திலங்கு] [ரூபகம்

ப: உலகம் சுற்றி ஒன்று நீ யெனும்
உண்மை கண்டனே—பரமா (உ)

அ: பலபல நாட்டிலும்—பல
பான்மையான பண் பாட்டிலும்
பாரினுக்குப் பரிதிபோலே
ஓரான்ம சம யோகத்தால் (உ)

ச: இந்தியாவின் உள்ளறிவும்
இங்கிலாந்தின் உலகறிவும்
இனிய நிப்பன் கலையறிவும்
இலகு ரஷ்ஷியத் தொழிலறிவும்
முந்து செல்லும் காலவேக முதலறிவும் நிதமறிந்து
மூல சக்தி பாலை யருளால்
முக்காலமும் தக்காருடன் (உல)



## 555. இரண்டும்

மால்கோஸ்] [ரூபகம்

ப: இரண்டுங் கூடின் இன்பம்—இன்றேல்
என்றுந் துன்பமே
இகமும் பரமும் அகமும் புறமும் (இ)

அ: வரண்ட துறவுமில்லை—மனம்
இருண்ட பற்றுமில்லை
வாழ்வு வசந்தச் சோலைபோல
வளர அன்பும் அறிவும் கிளர (இ)

ச: ஆணும் பெண்ணும் போலே—மணிப்
பூணும் பொன்னும் போலே
அணு விஞ்ஞான முடனே—சுத்
தாத்மஞான ஒளியும் வேண்டும் (இ)

## 556. ஆர் அறிவார்

சிந்துபைரவி] [ஆதி

ப: ஆர் அறிவார் அந்த ஆனந்தமே—என்னை
அள்ளிக் கலந்தனன் அன்பு மணாளன் (ஆ)

அ: ஊர் பெயர் சுற்றம் சாதிமத மயக்கம்
ஒன்றுமில்லை ஒரு யோகக் கனவிலே
மார்புறத் தழுவியென் மனதைக் கொள்ளைக் கொண்டான்
மாணிக்க வாசகக் காணிக்கை கொண்டவன் (ஆ)

ச: ஓவியந் தீட்டுமோ காவியம் காட்டுமோ?
உள்ளழகன் கருணை வள்ளல் என்னுண்டவன்
ஆவியிற் கலந்தனன் தேவாதி தேவனே
அவனன்றி நானில்லை அவனியுமில்லையே (ஆ)

## 557. கட்டியணைத்து

சிமேந்தினி] [ஆதி

ப: கட்டியணைத்துக் கொண்டான்—சகியே
கண்ணிலும் கருத்திலும் கலந்த என் கண்ணாளன் (க)

அ: எட்டி யெட்டிச் சென்ற இதய மணாளன்
என்னைக் கொடுத்ததுவுந் தன்னைக் கொடுத்துடனே ()

ச: என்புருகக் கூவினேன்—அவனையே
எண்ணியவனாகினேன்
அன்பான மார்பிலே ஆர்வந் துடிதுடிக்க
இன்பம் இதுவென்றே இல்லத்திலே புகுந்து (க)

## 558. தத்வமஸி தாண்டவம்

காபி] [ஜம்பை

தத்வமஸி என்று சொல்லித் தாண்டவம் செய்மனமே
சுத்தசச்சி தானந்த ஜோதிமயம் அதுவே
இந்தமதம் அந்தமதம் என்றலைவ தேனோ
பந்தமில்லாப் பரம் பொருளைப் பார்; அதுநீ உள்ளே

உன்னையறி; நீயதுவே; உலகமதன் கோவில்
அன்னைபிதா யாவுமதே அருளினிலே உணர்வாம்
உள்ளத்தில் உள்ளதுவே உலகுயிரின் விரிவாம்
வெள்ளத்தில் மின்சார வேகமதைப் போலும்

தளராத தியானம் வளர் தவயோகம் அதனால்
வளரான்ம நேயமுறும் வையமெலாம் ஒன்றும்
ஆகாய மீன்களைப் போல் ஆருயிரின் கூட்டம்
ஏகரச ஜோதியிலே இணைவதற்கே ஓட்டம்

எவ்வூரும் எம்மூரே எவ்வெவரும் யாமே
எவ்வுயிரும் எப்பெயரும் எவையுமொரு நிறைவே
தத்வமஸி என்று சொல்லித் தாண்டவம் செய் மனமே!

## 559. யோக சமாஜம்

ஆரபி] [ஆதி

ப: யோக சமாஜம்—உலக சமாஜம்
ஓம் சுத்த சக்தியின் ஒளிமணிக் கோயில்
அ: தேக வாழ்வை நல்ல திருவருட் கலையெனச்
செய்திடும் அமுதினை உய்திடப் பெய்திடும் (யோ)
ச: உலகமே கோயிலாய் உயிர்த்தொகை சாமியாய்
நலமதே பூசையாய் நாளெல்லாம் சேவையாய்
பலமத ஒருமையின் பண்பினை நாட்டியே
பாரத சக்தியின் வீறுபெற் றோங்கிடும் (யோ)



பக்தியும் தியானமும் ஞானமும் மோனமும்
பண்ணுடன் பணிகளும் எண்ணறு தொழில்களும்
நித்தியம் இயற்றியே நிம்மதியாய் வாழும்
நேயர், நலம் பெருகும் தூய தவநிலையம் (யோ)

கடவுளே தலைவன், காணிக்கை மனமே
கனிமனச் சாட்சியே இனியவுள் ளாசான்
கடமையே சாதனம், கருணை நிவேதனம்
காணுயிர் களித்தலே கைவல்ய சேதனம் (யோ)

பலகலை பலமொழி பலமதம் பலதவம்
பலநிலை நாடுறு பண்பறி நண்பன்
இலகு சுத்தானந்தன் இதயத்தி லெழுந்துல
கெங்கிலும் மங்கலம் பொங்கிடப் பொலிவது (யோ)

## 560. எல்லாரும் வாருங்கள்

காபி] [ஆதி

ப: எல்லாரும் வாருங்கள்
எல்லாரும் சேருங்கள்
ஈசனை அன்பு செய்வோம். (எ)
அ: எல்லாரும் பாடுங்கள் எல்லாரும் ஆடுங்கள்
இன்பச் சிகரத்தில் அன்புமயமாக (எ)
ச: சாதிமத நிறபேதமில்லை யிங்கே
சமயோக சாதகர் நாம்
ஆதிபகவன் ஒன்றே ஆருயிர்க்குல மொன்றே
ஆலய வுலகொன்றே அனைவரும் வாழ்கவென்றே (எ)

## 561. உலகக் கோவில்

பாகேஸ்ரீ] [ஆதி

ப: உலகக் கோவில் பெருமானே
உள்ளத் தானே ஓம் வணக்கம்—ஓம் (உ)
அ: நலமே புரியும் நடராஜா
ஞானக்கூத்தா ஓம் வணக்கம் (உ)

ச: அன்பில் விளையும் ஆரமுதே
அறிவாய் நிறையும் ஆண்டவனே
இன்பச் சுடரே எம்மானே
இதயச் சிவனே ஓம் வணக்கம் (உ)

## 562. எல்லா மதம்

காபி] [ஆதி

ப: எல்லா மதங்களிலும் எல்லா விதங்களிலும்
இலகும் பரம்பொருளே— (எ)
அ: நல்லாரகத்தினிலும் பொல்லாரகத்தினிலும்
நானெனும் தத்துவமான சுயஞ்ஜோதியே (எ)
ச: பெயர்வடி வாதிய பேதங்கடந்தனை
பெண் ஆண் அலியெனும் பிரிவினையற்றனை
அயர்வறப் பலகோடி அண்டங்களை யாளும்
அரசே நின்ஞான முரசென வாழுவேன் (எ)

## 563. வையமெல்லாம்

சுரடி] [ரூபகம்

ப: வையமெல்லாம் உய்யுந் துய்ய
வாழ்வு நல்குவாய்—பரமா (வைய)
அ: பொய் பொறாமைப் போட்டியின்றிப்
போர்களின்றிச் சீர்க ளோங்கி (வைய)
ச: எனதுனதெனும் இருமையின்றி
இதய மன்றில் இனிது கூடி
மனித ராகப் புனிதராக
மாசில்லாத சமயோகத்தில் (வைய)

## 564. அஞ்ச வருவதும்

காபி] [ஆதி

ப: அஞ்ச வருவதும் உண்டோ?
ஆன்மா நானெனும்
ஆனந்த சுதந்தரர்— (அஞ்ச)



அ: நஞ்சும் வாளும் நாளும் கோளும்
நரகும் என் செய்யும்?
நம்பன் எம்மான் அருளின் முன்னே
நமனும் என் செய்யும்? (அஞ்ச)
ச: கார்மேகத்தைக் காற்றும் அஞ்சுமோ
கதிரை இருட்டு விழுங்குமோ?
கடலை உப்பு கரைத்துண்டிடுமோ?
கனலைச் சூடன் எரிக்குமோ
ஆர்வங் கொண்ட அன்பரை யென்றும்
ஆசை யணுகுதலாமோ?
ஆகாயத்தில் அடிவைத்து நடக்கும்
ஆணவப் பித்தனுமுண்டோ?
அறிந்து தெளிந்த சமயோகத்தில்
அமர்ந்த வீர தீரருக்கும் (அஞ்ச)

## 565. ஆனந்தத் தோழர்

கரகரப்பிரியா] [ஆதி

ப: ஆனந்தத் தோழராய் வாழ்வோமே
அனைவருக்கும் அன்பு சூழ்வோமே (ஆ)
அ: தேனுக்குள்ளே வளரும் தித்திப்பைப் போலே
ஊனுக்குள்ளேவளரும் ஒருமையை உணர்ந்தே (ஆ)
ச: ஆட்களைச் சுற்றிய அமர்க்களச் சமயமும்
அசட்டுப் பிரிவினையும் குருட்டு மதவாதமும்
நாட்களைச் சூதாடும் நரக விநோதமும்
நாகரிகமான மோகவலையும்,
நச்சுக் கதிர் வெடியும்
நாசச் சுயநலமும்
நம்மை யணுகாத நிம்மதி யடைந்தே
அச்சமற்ற அமரவாழ்வின்
உச்ச முற்ற ஊற்றி லூறும்
சச்சிதானந்தத் தருவி
தடதட தாண்டவமாடித்
தடங்கடல் கலப்பதைப் போலே (ஆ)

## 566. ஆன்மப்பொது

தேஷ்] [ஆதி

ஆன்மப் பொதுவில் வாழ்வோம்—அதுவே
ஆருயிர்க் கெல்லாம் இனிதாம்.
தேன்மலரழகும் தீஞ்சுவை மணமும்
சேர்ந்து பொலிவது போலே (ஆன்)

உதயக் கதிரின் ஒளிபோல்—எங்கும்
உயிருக்குயிராம் ஒன்றே
இதயக் குகையில் இலகும் அதுவே
எல்லாருக்கும் பொதுவே! (ஆன்)

நானென்பதுவும் நீயென்பதுவும்
அவனென்பதுவும் ஆன்மா
தானென்பதுவும் தமரென்பதுவும்
சகமென்பதுவும் ஆன்மா (ஆன்)

ஆணில் ஆணும் பெண்ணிற் பெண்ணும்
அதுவே அறிவும் அழகும்
பூணிற்பொன்னும் மணியும் போலே
பொருந்திவாழும் பொலிவே (ஆன்)

## 567. மணமாலை

ஆனந்தபைரவி] [ஆதி

ப: மணமாலையைச் சூட்டினேன்—என்
மனங்கொண்ட காதலனைத்
தினங் கண்டு கண் குளிர (மண)

அ: குணமலை மீதே நிர்க்குணகன சாந்தமாய்க்
கூடிநான் பாடவே ஆடிய அருளுக்கே (மண)

ச: காதலைக் கடந்ததோர் கவர்ச்சியுடன் அவனைக்
கலந்து கலந்து கவிமலர்ந்து மலர்ந்துபர
நாதக் கனவினிலே ஆதிப் பரம்பொருளை
நானீ என்றறியாத மோன சுத்தானந்தத்
தேனைப்பருகி அதுவான சுகத்தினிலே (மண)



## 568. கண்ணயராமல்

பேஹாக்] [ஆதி

ப: கண்ணயராமலுன் கட்டழகை உள்ளே
காணக் கிடைத்திடுமோ— (கண்)

அ: விண்ணழகா—வாழும்—மண்ணழகா—என்
எண்ணழகா—என்றும்—இயலழகா—கண்ணா ”

ச: புண்ணியம் எண்ணாதுன் புன்னகைச் சொக்கிலே
என்னை மறந்துநீ எல்லாம் என்றிருந்திடும்
தன்மை யறிந்ததுவே தாரக மாகியே
பன்மை யுள் ஒருமையாம்
பண்பை யுணர்ந்து கொண்டேன்
பார்க்கப் பார்க்கத் தெவிட் டாத பரஞ்சுடரே
பக்தன் சுத்தானந்தனைப்
பாலிக்கும் கருணையே (கண்)

## 569. உன்னத யோகிகள்

சுருட்டி] [சாபு

ப: உன்னத யோகிகள் ஓதிடும் மந்த்ரம்
ஓம்சுத்த சக்திஓம் ஓம் எனும் மந்த்ரம் (உன்)

அ: தன்னிக ரற்றதோர் தாரக மந்த்ரம்
தர்மார்த்த காம மோக்ஷ தாயக மந்த்ரம் (உன்)

ச: பக்தி செய்யச் செய்யப் பலம்மிகு மந்த்ரம்
பரமதுரிய சுக வரமருள் மந்த்ரம்
முத்தி வழி திறக்கும் மூல மஹா மந்த்ரம்
முக்கனல் மூட்டிடும் பக்குவ மந்த்ரம் (உன்)

## 570. மலையுபதேசத்தின்

கேதார கௌளம்] [ஆதி

ப: மலையுபதேசத்தின் மாணிக்க ஜோதியே
வானர சான நிதியே—பரமபதியே (மலை)

அ: நிலைபெறும் ஆன்மிகக் கலைதருமின்பமே
நின்னை நினைத்தவர்க்கு நேருமோ துன்பமே (மலை)

ச: ஏழைக்கிரங்குகின்ற தோழா—பிறர்
இன்னலைத் தீர் அறிவாளா
கோழையச்சமில்லாத தீரா—வைராக்கியக்
கொழுந்தென விளங்கிய வீரா...
வாழையடி வாழையாய் மனுகுலம் அன்புடன்
வாழவே சிலுவையில் வாழ்வைப் பலியீந்தாய்(மலை)

## 571. உன்னை

பிலகரி] [தேசாதி

ப: உன்னைப் பிடித்துக் கொண்டேன்—இனி
உடலைப் பிரிந்தாலும் உயிரைப் பிரிவேனோ (உ)
அ: அன்னியமில்லாத தன்னந் தனிமையிலே
ஆகுமின்னலுடன் ஏகு மின்னல் போலே (உ)
ச: ஏகரசமான போகவுணர்விலே
எலெக்ட்ரானைக்கதுவிய புரோடனைப் போலே
சோகமோகமில்லாச் சுதந்தர வெளியிலே
சுத்த முக்த சமத்வ சத்திய ஜோதியே (உ)

## 572. எப்படி என்று

உசேனி] [ஆதி

ப: எப்படி என்றென்னைக் கேளாதீர்—ஐயா
இப்படி என்னநான் இயலேனே... (எ)
அ: அப்படி என்னையவன் அள்ளிக் கலந்தான்
அவனுக்கே ஆளாகி என்னை மறந்தேன் (எ)
ச: கண்ணுக்குக் கண்ணவன் காதுக்குக் காதவன்
கதிருக்குக் கதிரவன் காற்றுக்கு வானவன்
எண்ணுக்கு மன்னவன் பண்ணுக்குள் ஒலியவன்
இருமையில் ஒருமையில் என்னுளே நானானான் (எ)

## 573. சொல்லிச் சொல்லி

கரகரப்பிரியா] [ரூபகம்

ப: சொல்லிச் சொல்லி, சொல்லிறந்த
சுகத்தைக் கண்டேனே (சொ)



அ: அல்லும் பகலும் தில்லை வெளியில்
ஆத்மானந்தத்தேனே ஓம் எனச் (சொ)
ச: உண்ணும் போதும் உறங்கும் போதும்
உரைக்கும் போதுமே
பண்ணுடன் இசை பாடும் போதும்
பரமா மறவா வரமே தா எனச் (சொ)

## 574. விடுதலை

சிம்மேந்திரமத்திமம்] [ரூபகம்

ப: விடுதலை தரவேண்டும் ஐயனே—முன்
வினை தீர—உனைச்சேரவே (விடு)
அ: படுகளமான பாபவுலகப்
பந்ததொந்தஞ் சிந்தி ஆன்ம (விடு)
ச: தடிப்படங்கித் துடிப்படங்கி
நடிப்படங்கிப் பிடிப்படங்கி
படிப்படங்கி வெடிப்படங்கி
பரமஞானக் கொடிபிடிக்க (விடு)

## 575. ஆவலாக

வசந்தா] [ரூகபம்

ப: ஆவலாகக் கூவியழைத்தால்
அருகில் வாராயோ—எனக்கோர்
அன்பு கூறுயோ—பரமா (ஆ)
அ: காவலாகக் கரந்தென்னுள்ளே
கண்ணுறங்காக் கருணைக் கடலே (ஆ)
ச: ஆங்காரக் கொடுமை மிஞ்சி
அணுச்சமரால் அவனி அஞ்சி
ஏங்கும் பயிரும் உயிரும் வானை
எட்டிப் பார்க்கும் இயல்புபோலே...
இரக்கமுள்ள இறைவனே மனம்
இறங்கிவா வென்றுறங்காதுன்னை (ஆ)

## 576. சனி தசை

பந்துவராளி] [ரூபகம்

ப: சனிதசையும் வந்து சூழ்ந்ததே—ஐயா என்
தவவினை தன்ழைத்து வாழ்ந்ததே (ச)

அ: மனிதர் உறவு மாயமாக
மண்ணாசைகள் மறைந்துபோக (ச)

ச: சள்ளை செய்த பகைவராலே
தனிமையான இனிமை சேர
உள்ளரங்கில் உண்மை ஆட—நீ
ஒருவனே கதி என்று பாட (ச)

## 577. வட்ட வானம்

சக்ரவாகம்] [ரூபகம்

ப: வட்ட வானம் போலுலகம்
வாழலாகாதோ—பரமா
வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு
வழக்கிலாமல் வளைவொன்றுகி (வ)

அ: அட்ட திக்கும் வீசுங்காற்றும்
ஆயிரங்கோடி நட்சத்திரமும்
எட்டரிய வானிலடங்கும்
இயல்பையெண்ணி இனவெறியின்றி (வ)

ச: ஆத்மயோகக் கிழக்குடனே
அணுவிஞ்ஞான மேற்கு மொன்றிப்
பூத்த மலரு மணமும் போலப்
பொருந்தியின்ப யோகப் பொதுவில் (வ)

## 578. தன்னந்தனியாய்

ஆனந்தபைரவி] [ரூபகம்

ப: தன்னந்தனியாய் வந்த என்னைத்
தழுவிக் கொள்ளுவாய்—துரையே (த)

அ: உன்னையே கதியென நம்பியே
ஊரும் பேரும் உறவும் துறந்தே (த)



ச: இருளும் புயலும் இடிமழையும்
இனவகைகளும் பொறுத்தேன்
இருவிகார பந்ததொந்த
இடர்களை மறுத்தேன்
அருளே துணை யென்றுணர்ந்தே
அன்புப் படகில் ஆசையுடனே (த)

## 579. புதிய உலகும்

பௌளி] [ரூபகம்

ப: புதிய வுலகும் புதிய வாழ்வும்
பொலிக பொலிகவே! (பு)

அ: சதி செயு மனமாய மின்றி
சாதிசமய பேதமின்றி (பு)

ச: பிணிதுயர் மூப்பின்றி யென்றும்
பிறப் பிறப்பு மறப்பு மின்றி
அணியுடலுயிர் மனங்கடந்த
ஆத்ம வுணர்வில் பூத்துக் கனிந்தே
அமரானந்தம் பொழியப் பொழியப் (பு)

## 580. காரிருள்

அசாவேரி] [ஆதி

ப: காரிருள் கௌவியே கவலைப்படும் போது
காலையின் பொன்முகம் காட்டாய் (கா)

அ: ஆரிங்கு துணையென வருந்திடும் போது நீ
அன்புள்ள நண்பனாய் வருவாய்—பரமா (கா)

ச: வஞ்சநஞ்ச நரி புலிமயக் காட்டிலே
வழி நடத்தித் துணை தருவாய்
அஞ்சவரும் பகையிடர்கள் அகலவே
அருட்கனல் வீசுவாய் குருவே—ஓம் சரண்! (கா)

## 581. பரிந்து

பேஹாக்] [தேசாதி

ப: பரிந்து வந்துதவாயோ—பரமா
பார்த்தென்னை யிரங்காயோ (ப)

அ: எரிந்து கரிந்த வீட்டில் எத்தனை நாளிருப்பேன் (ப)

ச: எடுத்த காரியத்தைக் கெடுத்திடும் வஞ்சர்கள்
எத்தனை கொடுத்தாலும் இகழ்ந்திடுங் கஞ்சர்கள்
இடத்தைக் கொடுத்தாலோ மடத்தைப் பிடுங்குகின்ற
எத்தரை ஏனிங்கு வைத்தாய்—அப்பா
வடித்த கண்ணீருடன் பிடித்தேனுன் பாதமே
வாழேன் உனையல்லாது
தோழா என்னையாளப் (பரி)

## 582. திருத்தலாகாதோ

மந்தாரி] [ரூபகம்

ப: திருத்தலாகாதோ—ஐயா
தீய பிள்ளை என்னில் என்னைத் (தி)

அ: வருத்துகின்ற வினையகல
வழிகாட்டியென் வாழ்வு சிறக்கத் (தி)

ச: பொய் மயக்கங் கொண்ட புலனின்
போக்கை மாற்றியே
புன் கவலை சுமந்திடாது மனதைத் தேற்றியே
வெய்ய கள்ளர் கைப்படாது
துய்ய நல்லோர் எனைவிடாது
ஐயனே நின் கருணைக்குரிய
மெய்யனாகி உய்ய நானும் (தி)

## 583. எப்படி யுன் மனம்

பிலகரி] [ஆதி

ப: எப்படியுன் மனம் அப்படியாகுக!
இதயப் பெருமானே—ஓம் பரமா (எ)

அ: ஒப்புயர்வில்லாத ஒருவா—இறைவா
உன்னையல்லால் இங்கே
என்னை யறிவாரில்லை (எ)

ச: அற்புதங்கள் காட்டி அகடவிகடம் பேசி
ஆட்களை வசஞ்செய்யும் ஆற்றலும் இல்லேன்



ஆயுளெல்லாம் உன தன்பிசை யாக்கினேன்
அனாதையா னென்றறிவாய்—
நற்பதங்கொடுத்திடும் நாயகனே உன்னை
நம்பினேன் நம்பினேன்
எம்பிரானே சரண்... (எ)

## 584. ஒருமை கொண்ட

பூர்வீகல்யாணி] [ரூபகம்

ப: ஒருமை கொண்ட யோகப் பித்தன்யான் என்
உயிரும் உடலும் உலகும் நீயே— (ஒ)

அ: அருமையான அம்மையப்பன்
ஆதரிக்கும் ஆசான்—நேசன்
பெருமையான கல்வி செல்வம்
பெயர் புகழும் உயர்வு நீயென (ஒ)

ச: அது நான் எனும் வேதாந்தமும்
அன்புசிவமெனும் சித்தாந்தமும்
பொதுமறைகள் புகலுகின்ற
பொருளும் அருளும் புனித நீயெனும் (ஒ)

## 585. இந்த தருமமே

புன்னாகவராளி] [ஆதி

ப: இந்த தருமமே இந்து தருமமாம்
எங்கும் பரம்பொருள் என்னும் (இந்த)

அ: முந்து வேத வேதாந்த நூல்களும்
முறை வகுத்தோதிய
நிறைபொருள் ஒன்றெனும் (இந்த)

ச: அகநடம்புரியும் அது நான்
ஆருயிர் ஆத்ம சமூகம்
சகதாலயத்திலே சமயோகிகளால்
சகலருந் தொண்டு செய் சாதன வாழ்வாம் (இந்த)

## 586. அஞ்சாது முன் செல்

தோடி] [ஆதி

ப: அஞ்சாது முன் செல்வோமே—சுத்
தாத்மா நானவன் அவனது வென்றே— (அ)

அ: எஞ்சாதி உஞ்சாதி எனக்குனக் கென்றே
எக்காலும் இடர் செயும் அக்கப் போரின்றியே (அ)

ச: பழைய பஞ்சாங்கத்தின் பல்லியைப் பாராது
பாடுபட்டுப் பிழைப் போமே—
உழை பொது நலத்தினல் ஊர் நலம் பெறவே
உண்மையாய் நன்மையாய் திண்மையாய் வண்மையாய் ()

## 587. எம்மதம் சம்மதம்

செஞ்சுருட்டி] [தேசாதி

ப: எம்மதம்–சம்மதம்–
எல்லாருக்கும் பொதுமதம்
இதய சமயோகம்
எல்லாம் இதில் ஏகமே (எ)

அ: நன்மையும் திண்மையும்
உண்மையும் வண்மையும்
நாமனத் தூய்மையும் ஞாலத்திருப்பணியும் (எ)

ச: பக்தியில் இஸ்லாம் பணியினில் கிறிஸ்து
பரிவிலே புத்தன் அறிவிலே இந்து
சுத்த சுதந்தர சமத்துவ யோகி
சூழுயிர் நானென வாழும் விவேகி (எ)

## 588. தியானமொன்றே போதும்

தோடி] [ஆதி

ப: தியானம் ஒன்றே போதும்—நல்ல
தெள்ளறி வோங்கிட உள்ள பொருள் விளங்கிட (தியா)

அ: மோனக் கடலினி லே—முத்துக் குளிப்பதுபோல்,
மூழ்கிப் பரமசுக வாழ்வுபெற் றுயர்ந்திட (தியா)



ச: விந்தை விந்தை மதங்கள் தந்தம் பெருமை பேசி
விளைக்கும் சச்சரவிலே சளைத்தேன்; பொருளறிந்து
சிந்தை யடங்காத சந்தைக்கூச்சலை வேண்டேன்
சிதானந்த ஜோதியைச் சதாசாதனஞ் செய்யும் (தியா)

## 589. பேசாது பேசிடும்

ஆனந்தபைரவி] [ஆதி

ப: பேசாது பேசிடும் பேரின்ப முதித்தாலே
பேசு மறை விளங்குமே—மனமே (பேசா)

அ: ஆசான் அமர்ந்து காட்டும் அசலநிஷ்டையில் நின்றே
ஆழ்ந்த சமாதியிலே அதுநானெனத் தெளிந்தே (பேசா)

ச: வேதாந்த சித்தாந்த நாதாந்த போதாந்த
யோகாந்தப் பொருளெல்லாம் ஏகாந்தத் தெளிவொன்றே
மோகாந்த காரத்தில் தேகாத்ம புத்தியில்
ஊகம்விட் டலையாமல் வேகப் புலனடக்கிப் (பேசா)

## 590. பேதமதவாத

தன்யாசி] [ஆதி

ப: பேதமதவாதச் சூதினில் மயங்காமல்
பிழைத்தேன் உன்னருளால்—பரம்பொருளே (பேத)

அ: ஆதி சத்திய வேத நீதி தருமமே
அறிந்தேன்—அதன்படி—இருந்தேன்—இருந்தபடி ()

ச: விரல்கள் ஐந்தினையும் கரமொன்று தாங்குமே;
விரிந்த ஒன்றையுணர்ந்தால் விகாரங்கள் நீங்குமே
குரல்கள் பலவாயினும் கூட்டும் ஓங்காரம் ஒன்றே
கூடி உளங்குவிந்து நாடிப் பொருளறிந்து
தேடித் திகைத்திடாது வீடுகண் டென்னுள்ளே ()

## 591. வேற்றுமை

தேவகாந்தாரி] [ஆதி

ப: வேற்றுமை ஏன் மனமே—சாதிமத (வேற்)

அ: காற்றுக்கும் கதிருக்கும் ஆற்றுக்கும் கடலுக்கும்
கூற்றுக்கும் கும்பிக்கும் சாற்று மதங்க ளுண்டோ? ()

ச: உடலொன்று உயிரொன்று உள்ளொன்று உறவொன்று
கடலொன்று மழையொன்று ககன ஜோதியொன்றே ()

## 592. பள்ளிக்கூடம்

துஜாவந்தி] [ஆதி

ப: பள்ளிக்கூடம் வைத்து, பிள்ளையெனக்கு நிதம்
பாடஞ் சொல்கின்றானே—பரமகுரு (பள்ளி)

அ: வெள்ளக் கடல் சூழும் விந்தை யுலக மெல்லாம்
தெள்ளிய நூலாயென் சிந்தை எழுதுகோலாய் ()

ச: மலரினிலே உடல் வாழும்வகை காட்டி,
வானச் சுடராலென் மனவிருளை ஓட்டி
அலைகளி லேகுண நிலைகளை நீட்டியே
அனுபவத் தாலெனை அறிவுற வாட்டியே (பள்ளி)
கவனங் குறைந்தாலோ காதினைக் கிள்ளுவான்
கணக்குப் பிசகினாலோ கடைசியில் தள்ளுவான்
அவனை அறிந்துவிட்டால் ஆனந்தங் கொள்ளுவான்
ஆசான் வேலையும் விட்டு நேசனாய்த் துள்ளுவான்()

## 593. கவிதையைப் போலே

கேதாரகௌளை] [ஆதி

ப: கவிதையைப் போலே கனவினில் வந்தான்
கலைவரந் தந்தானே (கவி)

அ: அவனி யெல்லையைத் தாண்டி
அருள்வெளியைத் தீண்டிக் (கவி)

ச: வித்தக நவரசச் சித்திர மாகவே
புத்திளஞ் சொல்லில் அமைத்துத் தொடுத்தே,
பத்தி மணம் பரவச் சுத்த ஞானம் விரவப்
பணித்தென்னை அன்பினிற் பிணைத்த மனோகரன்(கவி)

## 594. சரணம் பரஞ்சுடரே

ஸ்ரீ] [சாப்பு

ப: சரணம் பரஞ் சுடரே—என்
சாமி உன்னருட் காமி நான் (சரண)



அ: அரனாய் என்ஞான வரனாய்—ஜீவா
தரனாய்வா கங்கா தரனே பரனே (சரண)

ச: கோரும் வரமில்லை யாரும் எனக்கில்லை
கொடுத்தேன்—என்னையே
விடுத்தேன்—கவலையைத்
தடுத்தாள்—என்னையுள்
எடுத்தாள்—ரக்ஷகா (சரண)

## 595. ஆறுதல் கூற

பரசு] [ரூபகம்

ப: ஆறுதல் கூற யாரையா—உன்
அடிமைக் கிந்த அகந்தை யுலகிலே (ஆறு)

அ: வேறு வேறு சமயச் சுழலில்
வேதனைப்பட்டேன்; சோதனைபோதும் (ஆறு)

ச: கருணையற்ற பலரை—நான்
கடவுள் என்று தொழுதேன்,
கவிதை பாடி யழுதேன்
காலடியினில் உழுதேன்—அவர்
கட்டளைகளை வழுவேன்—
அருளின்றிஎன் பொருளைக்கொண்டு
தெருவில் விட்டார்; தீன னுக்கே
தெய்வமே இனி உனக்கே—பணி
செய்வ துறுதி உறுதி உறுதியே (ஆறு)

## 596. மெய்யனே

நாதநாமக்ரியை] [சாப்பு

ப: மெய்யா என்னைக்கா ஐயா—அன்பருக்கு (மெய்)

அ: பையைபார்த் திளித்திடும் பொய்வேடக் காரர்முன்
கையேந்தி யேமாந்தேன்; ஐயோ பரிதாபம் (மெய்)

ச: சாந்தா—என்னருள் வேந்தா—சுத்தாத்துமக்
காந்தா—நிர்க்குணவே தாந்தா—உன்னைச்
சரண்புகுந்தேன்—இந்த—மரண உலகிலே
இரண மினியில்லை; தருணம், தருணம் (மெய்)

## 597. ஓகோ ஜகதீசனே

ஹரிகாம்போதி] [ஆதி

ப: ஓகோ ஜக தீசனே—ஓடி
ஒளிவதேனோ நேசனே (ஓகோ)

அ: ஏகா ஹே! ஜகன் மோகனா—மனத்
தாகம் தாகம்! சோகம் சோகம்... (ஓகோ)

ச: ஆர்வமாய்க் கூவினேன்—ஆவியின் ஆவியே
ஆபத்திற் குதவிடும் அமரசஞ் சீவியே
பாரில் அனாதிநான் பரிவுகொள்வாய் நீயே;
பாரமுன்மேல் வைத்தேன் எந்தாயே
பரமா பரமா
முறையோ முறையோ (ஓகோ)

## 598. சேவகம்

சுரடி] [ரூபகம்

ப: சேவகஞ்செய்யக் காத்தி ருக்கிறேன்
சித்தமாகவே—பரமா நின் (சே)

அ: பூவினில் வே றெவரடிமையும்
புரிந்திடாதுன் பூந் திருவடிச் (சே)

ச: சாக்குப் போக்குச் சொல்லிடாது
தாக்கடித்து மல்லி டாது
ஊக்க மாக உனது பணியைக்
காக்கக் காண் கருணைக் கடலே (சே)
காசு பணங்கள் கேட்க வில்லை;
கஞ்சிக்கும் ஒரு தொல்லையில்லை;
ஆசிபோதும் அன்பு போதும்;
ஐயனே நின் அருமை போதும் (சே)

## 599. அன்பே உன்னை

கானடா] [ரூபகம்

ப: அன்பே உன்னைக் காத லித்தேன்—என்
ஆசை யெல்லாம் பூசைமல ராக்கி (அன்பே)



அ: தண்பனிக் காலைத் தங்கக் கதிர்களால்
அங்கந் தழுவியே பொங்கும் சுகமருள் (அன்பே)
ச: புத்துலகக் கலை எத்தனை போதித்தாய்!
போகக் கனவுகள் எத்தனை சாதித்தாய்!
சித்திரக் காவியம் சிங்கார ஓவியம்
சித்தத்தில் நாடகம் எத்தனை சுத்தனே! (அன்பே)

## 600. உன்னைக் காட்டுவார்

கீர்வாணி] [ஆதி

ப: உன்னைக் காட்டுவார் உலகில் இல்லையோ
உள்ளந்தோறும் உள்ள வள்ளற் பெருமானே (உன்)

அ: பொன்னைக் காட்டுவார்க்கு மின்னுடல் காட்டுவார்
பெண்ணைக் காட்டுவார் கண்ணைக் காட்டுவார்கள் (உன்)

ச: கற்றபுத்தகக் கத்தை காட்டுவார்—
கற்பங் காட்டுவார் அற்புதங் காட்டுவார்—
சுற்று மனதைக் கட்டிவைத் தடங்கி
சுத்தயோக சமா திஸ்த ராகியுள்ளே (உன்)

## 601. புத்தி யிது

ஜோன்புரி] [தேசாதி

ப: புத்தியிது மனமே—எப்
போதும் பஜனைசெய் சாது சங்கத்திலே (புத்)

அ: இத்திலும் அத்திலும் பித்துக்கொண் டலையாது,
சித்தம் நிலைத்தே ஹரி பக்தி சாதனஞ் செய் (புத்)

ச: மெத்தப் படித்தாலும் விண்ணை யிடித்தாலும்,
செத்தாரை எழுப்பிடும் வித்தை நடித்தாலும்,
மெத்தைமேல் மெத்தை கட்டிச் சொத்தைக் குவித்தாலும்,
மேன்மை யில்லை; பர மான்ம நிலைபெறவே (புத்)

## 602. என்ன குறை

பைரவி] [ஆதி

ப: என்ன குறைசொல் மனமே—உனக்கினி
என்ன குறைசொல் மனமே (என)

அ: மின்னுட லுள்ளே உயிர் மன்னவனாக
உன்னை யறிந்து கொண்டாய்
உலக வாழ்க்கையில் பின்னே (ஏ)

ச: ஒப்பரிய பரம் பொருளில், அருளிலே
ஒன்றுபட்டாய்; என்றுந் தொன்றுதொட்டே
கற்பனை கடந்ததோர் அற்புத மாகிய
களிப்பில் கவலையின்றிக் குளிப்பாய்-நலஞ் செழிப்பாய்()

## 603. ஏழையின் உபசாரம்

ஸ்ரீரஞ்சனி] [ஆதி

ப: ஏழையின் உபசாரம் ஏலையா—என்
இதயத்தைக் கொள்ளைகொண்ட பாலையா—கண்ணா (ஏ)

அ: கூழையும் அமுதெனக் குடிப்பாய்—அன்பர்
கூரை வீட்டிலும் குடி யிருப்பாய்—கண்ணையா (ஏ)

ச; விதுரன் கூழையுண்ட சதுரா—என்
விருந்தை யுண்ணவாவா, மதுரா
புதுப்பொலிவு மிகுந்த கதிரா—உன்
புகலன்றி எனக்கொரு
பொன்னில்லை புகழில்லை (ஏ)

## 604. அறியாதார் வம்பு

கற்கடா] [ஆதி

ப: அறியாதார் வம்பினைப் பெரிதாக எண்ணியே
அல்லற் படாதே மனமே (அறி)

அ: பொறிபுலன் கண்டதே பொருளெனக் கண்டபேர்
அருளுணர் வில்லாதார் அன்பினை உணராதார் (அறி)

ச: கனகயா ழிசையொலி கழுதைக்குப் புரியுமோ ?
கதிரிடும் அழகின்பம் கபோதிக்குத் தெரியுமோ ?
வனமலர் மாலையை மர்க்கடம் புகழுமோ ?
வரகவி யுணராத வறட்டு மதியினால் (அறி)



## 605. வஞ்சமில்லாதுன்னை

முகாரி] [ஆதி

ப: வஞ்சமில் லா துன்னைத் தஞ்சமென் றடைந்தேன்
வாசாம கோசரனே— (வஞ்)

அ: அஞ்சவரும் பகைவர் நஞ்சு வைத்த போதும்,
அஞ்சல் என் றென்னைக் காத்தாய்
அடைக்கலம், அடைக்கலம் (வஞ்)

ச: ஆற்றாப் பொறாமைகள் தூற்றித் திரிந்த போதும்,
அர்ச்சனை மலர்களை துச்சமாய் மிதித்த போதும்,
சீற்றங்கொண்டே சதிக் கூட்டம் செகுத்த போதும்,
சித்தத்தி லிருந்து நீ சுத்தா எனைக் காத்தாய் (வஞ்)

## 606. மனிதரெல்லாம்

காமாஸ்] [ரூபகம்

ப: மனிதரெல்லாம் ஒரு குலமாய்
இனிது வாழலாம்—
மருவிலாத சமயோகத்தில் (ம)

அ: புனிதமான இதய வெளியில்
பொலியும் ஒன்றைப் பொருந்தியிருந்தே (ம)

ச: உண்மையாக உழைத்துப் பிழைத்து
உள்ளொருமை செழித்தே
வண்மை யோங்க வளமை யோங்க
வறுமை மடமை அடிமையின்றி (ம)

## 607. தன்னை யறிந்தால்

தன்யாசி] [ஆதி

ப: தன்னை யறிந்தால் தானே பேரின்பம்
தாரகம் இது—மனமே (த)

அ: தன்பசிக்குத் தானே அன்னம் புசிப்பதுபோல்
அன்புக் குருபரன் அளித்த சாதனத்தாலே (த)

ச: பற்றலர் புலன்களைப் பற்றவி டாதபடி
பகுத்தறி வால் அடங்கி,
கற்றபடி நடந்து கருத்துளே படிந்து,
கட்டற்ற பற்றற்ற மட்டற்ற சுட்டற்ற (த)

## 608. சொல்லோவியம்

காம்போதி] [ஆதி

ப: சொல்லோவி யத்தாலுன் சொரூபத்யானம் செய்ய
வல்ல கவிதை தருவாய்... (சொல்)

அ: கல்லோவி யத்தினிலும் கலை சொட்டும் பேரின்பக்
கருணையா னந்தமே கலையின் சுதந்தரமே (சொல்)

ச: பொய்யகங் காரத்தின், போட்டி வராமலே
பொழுது போக்கவே சும்மா எழுதித்தள் ளாமலே,
மெய்யான உள்ளத்தில் ஐயநின் அழகினை
விதவிதமாக நான் புதிய பொலிவுடனே (சொல்)

## 609. சும்மா இருக்கின்ற

பூர்வகல்யாணி] [திரிபுடை

ப: சும்மா இருக்கின்ற சூட்சுமம் அறிந்திடின்
சுறுசுறுப்பென்ன சொல்வேன்—உள்ளே (சும்மா)

அ: இம்மா நிலங்களெல்லாம் இனிது படைத் தளித்தும்
ஏதொன்றும் சலியாத ஆதிப் பரம்பொருள்போல் ()

ச: சிதா காச வெளியிற் சித்திரத் தீபம்போல்
சித்தம் அலையாது, சுத்தான்ம சேதனத்தில்,
நிதான சுககன தாதாகார நிஷ்டையில்
நிரதிச யானந்த பரமோன சாந்தத்தில் (சும்மா)

## 610. ஈந்தேன்

துவஜாவந்தி] [ஆதி

ப: ஈந்தேன் உன் கையினிலே—அன்புடனே
ஈந்தேன் உன் கையினிலே—என்னை (ஈ)

அ: சாந்தா எனையாளும் வேந்தா—மஹாசக்தி
காந்தா சரணம் சர் வாந்தர் யாமியே—என்னை (ஈ)

ச: நினைப்ப தெல்லாமுனது நினைவாக—நான்
நேசிப்ப தெல்லாமுன் துணையாக
புனைவ தெல்லாமுன் புகழாக—நான்
புரிவதெல்லாம் பூசனையாக,
தனியகந்தை யில்லாமல் அனைவரும்
இனிதுன் அருள் வழியே இன்புறும் பணிக் கென்னை (ஈ)



## 611. ஓம் பரமாத்மா

மோகனம்] [ஆதி

ப: ஓம் பரமாத்மா–எம்
உயிருக்குயிராம் ஒருவா— (ஓம்)

அ: நாம் என்பதும் நீயே—எந்தாயே
ஞாலமெலாமுன் சேயே— (ஓம்)

ச: உழைக்க வுடலும் நினைக்க மனமும்
உணர்த்த வுளமும் உரைக்க நாவும்
அழைக்கக் குரலும் அளித்த தயவே
அன்பாலுன்னைப் பூசிக்கின்றேன் (ஓம்)

## 612. வேண செல்வம்

சுரடி] [ரூபகம்

ப: வேணசெல்வம் எய்தி வாழ்கவே—இங்கே
வீரதீரசூரர் சூழ்கவே—

அ: ஆணும் பெண்ணும் காணும் உலகில்
அன்புகூடி இன்பமாக (வே)

ச: அறிவுந் தொழிலும் அமைந்த செல்வம்
ஆத்மஞானம் பூத்தசெல்வம்
நெறியில் வாழும் நேர்மைச் செல்வம்
நிலவும் புகழோ டுலவும் செல்வம்
செவிச் செல்வம் கவிச் செல்வட
தவச் செல்வம் சிவச் செல்வம் (வே)

## 613. இறப்பதில்லை

கன்னடகௌளை] [ஆதி

ப: இறப்ப தில்லை மனிதா—அறிந்தவர் (இ)

அ: பிறப்பறி யாதென்றும் இருக்கும் சுத்தான்மாவே
பிரிவறு நானெனத் தெரிவுறும் யோகிகள் (இ)

ச: பறவைக்கும் முட்டைக்கும் உறவினைப் போலே,
பார்வைக்குப் போர்வையிவ் வுடலே,

கறந்து காய்ச்சியுரக் குத்திக் கடைந்தெடுத்த
கலப்பறு வெண்ணெயைப் போலே,
கனியினில் விதையினைப் போலே
களிம்பறு கனகத்தைப் போலே—
கர்ம பந்தமற்ற காய தொந்த மற்ற
நிர்மல சுத்த சுதந்தர சித்தர்கள் (இ)

ஐக்கிய கீதம் முற்றிற்று



# 9. அன்பு மாலை

## 614. அன்பு மாலை

பந்துவராளி] [ரூபகம்

ப: அன்பு மாலை சூட்டுகின்றனன்—என்
ஆசை மலரால் பூசை செய்தே (அன்பு)
அ: செம்பொற் காலை சேர்த்துக் கோத்துத்
திரிகரண சுத்தி யோடு,
நம்பும் அடியார் கூட்டத் துடனே
நமச்சி வாய ஓம் ஹர வென்றே (அன்பு)
ச: அந்தரங்க விசுவாசமும் ஆத்மானந்த சுகவாசமும்
சிந்தை யினிக்கும் கான ரசமும்
செறிந்தென் உள்ளம் சிலிர்க்கச் சிலிர்க்க (அன்பு)

## 615. தேடிடு நன் மனமே

பரசு] [ஆதி

ப: தேடிடு...நன் மனமே—உன்
சித்தத்தி லேயுள்ள சத்திய வத்துவைத் (தேடிடு)
அ: ஓடி யலைந்து நீ வாடிக் குலையாதே
உள்ளத்திலே இன்ப வெள்ளம் ததும்பும் அதைத் ()
ச: சத்த மதங்களிலே—வெறும்
சாப்பாட்டுச் சந்தையின் கூப்பாட்டிலே யில்லை
சுத்த சுயஞ் ஜோதியை—ஏட்டுச்
சொல்லாலும் கட்டிடக் கல்லாலும் காண்பமோ?
சொக்கும் அன்புக் கொடியில்
மொக்கவிழ்ந் தூறுகின்ற
பக்குவத் தேனை நீ
மிக்கப் பருகிடவே (தேடிடு)

## 616. காதலைக் கொள்ளை கொண்ட

சாவேரி] [ஆதி சவுக்கம்

ப: காதலைக் கொள்ளை கொண்ட கள்வனை உலகிலே
காண்ப தெங்கே சகியே? (காத)

அ: நாத வெளியினிலே சோதி மயமாக
நடமாடி என் உள்ளம்
இடங்கொண்ட, திடங்கொண்ட (காத)

ச: கொஞ்சுங் குழந்தை போன்ற நெஞ்சத் தெளிவிலோ?
கொண்டல் வளரும் சோலை விண்ட மலரிலோ?
பஞ்சபூ தங்களிலோ? பரிதி மதிகளிலோ?
பாராது பார்க்கின்ற பரமார்த்த கதியிலோ (காத)

## 617. கண்டுபிடித்தேனம்மா!

சகானு] [ஆதி சவுக்கம்

ப: கண்டு பிடித் தேனம்மா—என் கண்ணனைக் (கண்டு)

அ: அண்டையி லேயிருந்து கொண்டே மயக்கி யென்னை
அலையவிட்டஅந்தர் யாமியை அருளினல் (கண்டு)

ச: கலையிலும் சிலையிலும் கட்டுக் கதையிலும்,
கனதன வாழ்விலும் மனதிலுந் தேடினேன்;
வலையினை வீசினல் வானமீன் சிக்குமோ?
வஞ்சமில் அன்புள்ள நெஞ்சிலே புகுந்துநான் ()

## 618. மின்னலாய் நடம் புரிந்தான்

காம்போதி] [ஆதி

ப: மின்னலாய் நடம் புரிந்தான்—சகியே—என்மன
மேகத்தைத் துருவியே
மோக மனேகரன் (மின்)

அ: தன்னிக ரில்லாத தங்கத் தணல் போலே
என்னுளே இலகிடும் இதயப் பரஞ்ஜோதி (மின்)

ச: தீம் தீம் தரிகிட தகதிமி தகதிமி
திமிகிட திமிகிட தகஜனு தரிகிட,
தோம் தோம் தாகிட தளாங்கு தரிகிட,
தொம்கிட தகர்தின தோம்
தின்னத்தோம் சிவோஹம் என (மின்)



## 619. தகுதியான

சாயாதரங்கிணி] [ஆதி

ப: தகுதியான மனப் பக்குவத்திலே
தானே வருவான் ஞான மனேகரன் (த)

அ: வகுப்புவாத சாதி மதபேதமேனே
வழக்காடும் வீடு செழிப்பாகுமோ? (த)

ச: ஊராளும் மன்னன் உறவு வேண்டினல்
உள்ள சட்ட திட்டம் மருவ வேண்டுமே
பாராளும் பரா பரன் ஸ்ரீகரன்...
பக்திஞானகர்ம சித்தசுத்த ருக்குத் (த)

## 620. அன்பே ஆருயிரே

சக்ரவாகம்] [சாய்ப்பு

ப: அன்பே ஆருயிரே—என்
அழகும ளளாநின் ஆனந்தம் என்சொல்வேன் (அ)

அ: உன்பரம் என்று நிதம் உளறிய பேதையை
உள்ளத்தில் வந்துநீ மெள்ளக் கலந்தனை ()

ச: கள்ளமில் லாக்காதல் வெள்ளம் அன்றி யொரு
காசு பணம் அறியேன்—ஒளி வீசி என்னுள்நிறைந்தாய்
வெள்ளம்போல் வந்தெனது வேட்கையைத் தீர்த்தனை
வேதா என்ப்ராண நாதா சரண் சரண் (அன்பே)

## 621. வாவென்று

பிலகரி] [ரூபகம்

ப: வாவென்றுடனே கூவிக் கொள்ளுவாய்
மனங்க டந்த தினக ரேசா (வா)

அ: 'காவாய்' என்று கங்கு லெல்லாம்
கண்ணீர் விட்டுக் கதறி நின்றேன் (வா)

ச: ஜபதப விரதங்கள் காத்தும்,
சாத்திரங்கள் கற்றும் கேட்டும்
சரியை கிரியை யோக ஞான
சாதனங்கள் செய்தும் என்னே?
அபயமளிக்கும் ஐயனே நின்
அன்பிலுயிர்க்கும் ஆன்மா என்னை (வா)

## 622. எல்லாரும் வாழட்டுமே

சுருட்டி] [ஆதி

ப: எல்லாரும் வாழட்டுமே—பேரின்ப மெய்தி (எல்லா)

அ: செல்வச் செருக்கின்றிப் புல்லர் பொறாமையின்றி
நல்ல மனசுடனே நாடோங்க நீடுழி (எல்லாரும்)

ச: சுயநலச் சூழ்ச்சியும் அயலவர் ஆட்சியும்
சோம்பலு மின்றித் தீய வீம்புச் சண்டையு மின்றி,
பயமின்றி யுண்மையை நயமுறப் பேசியே
பலன்களைக் கருதாது நலன்களை யேபுரிந்தே (எல்)

## 623. இன்பத்தை

கானடா] [ஆதி

ப: இன்பத்தைக் கண்டு கொண்டேன்—மனத்
துன்பத்தை மாற்றிக் கொண்டேன்... (இ)

அ: அன்பருக் கன்பனும் ஹரிஹர ரூபனும்
ஐயன் என்னுயிரினை உய்யக்கொண் டாண்டதும் (இ)

ச: அவலை நினைத்துக்கொண்டே உமியை மெல்லுகின்ற
சவலை உலகினிலே சங்கடப் படாமல்
கவலை துடைக்க வந்த கண்கண்ட தெய்வமே—உன்
கான பூஜையாலே சுத் தானந்த நிலைபெறும் (இ)

## 624. எல்லோரும் வாழ்க!

கல்யாணி] [ஆதி

ப: வையக மெல்லாம் ஐயநின் னருளினால்
வாழ்க ஒரு குலமாய்... (வைய)

அ: துய்ய மனச்சாட்சி
சொல்வழி செல் வீரத்
தொண்டராய் அன்புள்ள
தோழராய் நாளுமே... (வைய)

ச: சாதி மதநிற பேதமில் லாமலே
சரிநிக ரான ஆன்ம உரிமையி லோங்கியே
ஜோதி யருள் வெளியில் சூரியக் கதிர்கள்போல்
சுத்தானந்த சுதந்தர நித்திய சீலராய்... (வைய)



## 625. பொது வணக்கம்

கல்யாணி] [ஆதி

எல்லாம் வல்ல இறைவா!
எங்கும் உயிராய் நிறைவாய்
அல்லல் போக்கும், பரமா
அரி ஓம் சிவனே சரணம்.

வானாய் மலையாய் நதியாய்
வனமாய் மலராய்க் கனியாய்
தேனாய் அழகின் கலையாய்த்
திகழும் இன்பத் திருவே.

உடலும் உயிரும் மனமும்
உளமும் வளமுற் றிடவே
கடமை புரியும் கனலைக்
கருணைக்கடலே யருளாய்.

பலவாய் நிலவும் உலகில்
பரிவாய் ஒருமை புரிவாய்
நலமே பொலியும் பலமே
ஞானச்சுடரே யருளாய்

பக்திக் குருகும் பரிவே
பாருக் கொளியாம் அறிவே
சக்திக் குகனே யருளாய்—ஓம்
சாந்தக் கதிரே வணக்கம்.

## 626. இன்ப வாழ்வு தருவாய்

மோகனம்] [ஆதி

இன்ப வாழ்வு தருவாய்—என்
இதயமான குருவே
பொன் பரவுங்காலை—பாடும்
புள்ளினத்தைப் போலே—நல்ல
புதிய வாழ்வு தருவாய்

வானைப் போல ஞானம்—பொழி
மழையைப் போலத்தானம்
தேனைச் சேர்க்கும் வண்டு—போலே
சேர்த்துழைக்குந் திறமை—தருவாய்
தெய்வமான குருவே
உலகச் சிற்பியான—கதிரோன்
உரையிலாது சொல்லும்
இலகு நல்லமைதி—நல்கி
இவ்வுலகைக் காப்பாய்—குருவே
இன்னலின்றித் தீர்ப்பாய்
மலையைப் போல மாண்பும்—அதன்
மௌன வூற்றி னின்றே
அலையெழுந்து பாடி—ஓடும்
ஆறுபோல நாளும்—உன்
அருள் பெருக வருவாய்.

## 627. பரம்பொருள் வணக்கம்

கரகரப்பிரியா] [ஆதி

ஓங்காரமான பொருளே
உலகாய் விளங்கும் அருளே
நீங்காத இன்ப நிறைவே—எம்
நெஞ்சக் கோயிலின் இறைவா!
மோனத்திலே உணர்வாகும்—பர
முத்திக் கனலே சரணம்
ஆனந்தமான குருவே—ஆ
காசமான உருவே.
வேதங்கள் ஓதும் ஒன்றே—நினை
வேண்டினோம் வரந் தருவாய்
சாதி மதங்க ளின்றி—ஜீவ
சாட்சி யாகும் சுடரே!
கருணையாகுக உள்ளம்—நின்
காட்சியாகுக கண்ணே
அருண ஜோதி போலே—எங்கள்
அறிவில் உன்னொளி பொலிக.



சாந்தமான வாழ்வும்—நின்
சக்தி பெற்ற செயலும்
மாந்தர் அமரராகும்—சிவ
மங்களமும் தருவாய்.

## 628. சமரஸ ஜோதி

பேஹாக்] [ரூபகம்

ஓம்...சமரஸமான ஜோதியே—என்றும்
ஒற்றுமையாய் உலகம் வாழ
ஒளிர் குண நிதியே
தீமை நீங்கி நன்மை யோங்கவே—செல்வத்
திருவுங் கலையும் அறிவும் புகழுந்
திகழ மகிழவே.

அன்புச் சிகரமான ஞானமே—எங்கள்
அகமும் புறமும்பரவி யாளும்
அருளின் வானமே...
இன்ப மோங்குங் கருணை வெள்ளமே—நின்
இச்சை புரிக அச்சமின்றி
இணைந்தெம் உள்ளமே...

## 629. உன்னத வாழ்க்கை

செஞ்சுருட்டி] [ஆதி

உன்னத வாழ்க்கையருள்—பரமா
உள்ளப்பரம் பொருளே
சன்னத வாக்கருளாய்—ஆத்ம
சக்தி மிகத் தருவாய்

ஆறு கலந்தாலும்—கதிரால்
ஆவியாப் போனாலும்
மாறுபடாக் கடல் போல்—எங்கள்
மனமிருக்க வருள்.

பருவகாலத்திலே—இயற்கை
பணி நலம் பரவும்
திருவினைப் போலே—எமது
செய்கடனுங்க வருள்.

வான விரிவினைப் போல்—நல்ல
மன விசாலத்துடன்—வாழ
ஞானவிரி வருளாய்—இந்த
ஞானச் சுடர் மணியே.

## 630. கருணை யுள்ளம்

பூபாளம்] [ஜம்பை

கருணையுள்ளம் கனிந்தெம்மைக் காவாய்
கட்டில்லாப் பரமானந்தக் கடலே
அருண சாந்தமும் ஆத்ம ஒளியும்
அறிவும் செல்வத் திருவும் அருளாய்.

நேர்மையான நினைவும் செயலும்
நீண்டு யர்ந்து நிலவும் புகழும்
கூர்மையான மதியும் கொடுப்பாய்
கோவிலாக வுலகினைக் கொண்டாய்

புட்கள் பாடும் புதுமணக்காலை
போல மங்கலம் பூத்துக் கனிந்து
மக்க ளிங்கு மகிழ்ந்து பொலியும்
வளமை யீந்தருள் வண்மைக் கடலே!

உள்ளம் ஒன்றி உயிர்க்குலம் ஒன்றி
உலகம் ஒன்றி உயர் நலம் ஒன்றி
வெள்ளமாகப் பேரின்பம் பெருக
வீறுதந்தருள் வேதமுதல்வா!

நல்ல நல்ல முயற்சி களாலே
நல்ல நல்ல பயன்களை நாடி
அல்லல் போக்கி அறத்தை வளர்க்கும்
ஆத்ம சக்தி யருள் பரமாத்மா.



## 631. பொன் பரவுங் காலை

ஆரபி] [ஆதி

பொன் பரவுங் காலையிலே பூத்தசுடர் மணிபோலே
அன்பருளத் தொளி வளரும் அற்புதனைச் சிற்பரனை
இன்ப மயம் ஆனவனை எல்லார்க்கும் பொதுப் பொருளை
பண்பரவி அடிதொழுது பணிகளினுல் வழிபடுவோம்.

பேரெல்லாம் வடி வெல்லாம் பெம்மானின்பேர் வடிவாம்
பாரெல்லாம் திருக்கோயில் பத்தருளம் சந்நிதியாம்
ஊரெல்லாம் உயிர்க்குயிராய் உலவுகின்ற பரமாத்மா
சீரெல்லாம் தரும் இறைவன் சேவடிக்கே ஆளாவோம்.

நிறைவான கல்விவளம் நீங்காத செல்வ வளம்
முறையான நல்லொழுக்கம், முயற்சிதரும் முன்னேற்றம்
பொறை வாய்மை மனவுறுதி பூண்ட தவ யோகமெல்லாம்
இறைவனருள் அடியார்கள் எய்தியிசை யோங்குகவே.

பத்திவளர் உளத்தாலே பணிபுரியும் கரத்தாலே
புத்திவளர் அறிவாலே பூரணமாந் தவத்தாலே
ஒத்தமன வுறவாலே ஒருகுலமாம் வாழ்வாலே
சுத்த சக்தி ஆண்டவனைத் தொண்டரெலாம்
தொழுவோமே.

## 632. கருணைப் பெருமானே

தேவகாந்தாரி] [ஆதி

கருணைப் பெருமானே கனகச் சுடரானே
அருணேதயம் போலென் அறிவிற் பொலிவோனே
திருவார் குருநாதா சிவனே என உள்ளம்
உருகும் பெருவாழ்க்கை உடையார் பெரியாரே.

வற்றாக் கடலானை மலையிற் பெரியானைப்
பெற்றார் அன்பிற்கும் பேரன்புடையானைக்
கற்றார் கொண்டாடும் காட்சிக் கினியானைப்
பொற்றா மலர்ப்பாதம் போற்றிப் பணிவோமே.

ஞானப் பரஞ்சோதி ஞாலம் படைத்தாண்டும்
தானே தனியாகத் தாக்கற் றொளிர்வானை
வானைத் தருள்வானை மாந்தர்க் குயிரானை
ஊனைத் துறைவானை உள்ளொத்துணர்வோமே.

கண்டார் மனமுண்ணும் கல்விக் கடலானை
விண்டார் அமுதுண்ணும் மெய்யின் பறிவானை
பண்டார் மறை கோடி பாடும் பொருளானைத்
தொண்டார் துதி பாடித் தொழுவார் மகிழ் வாரே.

அறிவன் பருளாற்றல் அறத்தால் வரு மின்பம்
திறலார் வினைவெற்றி தேசத் திருத்தொண்டு
பிறவிப் பயனெல்லாம் பெறுவார் எல்லாரும்
இறைவன் மலர்ப்பாதம் ஏத்தும் அறவோரே,

## 633. தாகந் தணித்திடுவாய்

சுருட்டி] [ஆதிதாளம்

தாகந் தணித்திடுவாய்—மனத்
தாகந்தணித்திடுவாய்—எந்
தாய்தந்தையான தயாபரத்தேனே (தா)

தேகாதிக் கெட்டாத போகம்புசித்துசுத்த
யோகச் சுதை யளித்தென் உள்ளே அமுதூறத் (தா)

பற்றற்ற காற்றைப் போலே
சுற்றிக் கடமை செய்து
பாயும் அருவி போலப்
பாருக்குதவி நிதம்
கற்ற கலைகளுக்கும் எட்டாக் கனிபிழிந்து
கருணையால் நீயளிக்கக்
காதலால் நானருந்திக்
கண்ணுடி உள் நாடிப்
பண்பாடிக் கலந்திடும்
தாகந் தணித்திடுவாய்.



## 634. காணிக்கை

நாதநாமக்கிரியை] [ஆதி

காணிக்கை ஏலாய் பரமா—எம்
கருத்தினில் இனிக்கும் கற்பகக்கனியே (காணி)

ஆணிப் பொன்முத்தும் வைரமும் உன்றன்
அழகினுக் கழகென லாமோ?
அகமிக நெகிழ முகுக முகுக வெனவே
ஆர்வக் கண்ணீர் அருவி அதனைக் (காணி)

எண்ணும் எண்ணம் இயம்பும் சொற்கள்
இயங்கும் உணர்வுக ளெல்லாம்
பண்ணும் பணியும் பயனும் உனக்கே
பணிந்தீந்தோம் பரமா (காணி)

உலகிற் பட்டோம் பலபல துன்பம்
உடைந்த நெஞ்சுடனே
கலகல வென்றுன் கருணையுருகக்
கதறிக் கால்பிடித்தோம்—அம்மா (காணி)

போதும் போதும் பொய்கோள் அச்சம்
பொறுமைப் புண்களெல்லாம்
போதும் உலகம் போதும் கலகம்
பூரண சுதந்தரனே—எம்மைக்
காணிக்கை ஏற்றருளாய்.

## 635. உன்னத ஞானம்

மாண்டு] [ஆதி

உன்னத ஞான ஆற்றினி லாடி
உள்ளங் குளிர்ந்திடுவோம்
உள்ளம் அன்பு வெள்ளமாக
ஓமிசைத் திடுவோம்.

அன்னிய மாயச் சூதினை நம்பி
அடிமை யாகா மே
ஆண்மையும் ஆன்மக் கேண்மையுங் கூடி
அறிவாயிருந் திடுவோம்

தன்னந் தனியே யுலகக் காட்டிற்
சஞ்சலப் பேயினிடம்
தவித்து வாடித் தளர்ந்திடாது
சாது சங்கம் வகிப்போம்,
என்ன தெனக்கே யென்பதில்லாமல்
எல்லாம் வல்லானும்
இதயப் பெருமானுக்கேயாகி
இரண்டறக் கலந்திடுவோம்—நாம்
எல்லோரும் மகிழ்ந்திடுவோம்

## 636. காதலாகி

செஞ்சுருட்டி] [ஆதி

காத லாகி மனதுருகும்
கவியைக் கேளாயோ
கவிதைக் குள்ளே கண்ணீர் சொல்லும்
கதையறியாயோ—அன்
பதை யறியா யோ!
வேதனைகள் மோதும் போதென்
விசனம் தீராயோ
வீணை மீட்டிப் பாட்டின்பத்தின்
விருந்தை யூட்டாயோ—ஞான
மருந்தை யூட்டாயோ.

## 637. மேதினியின்

ஆரபி] [ஆதி

மேதினியின் சோதனையால்—நான்
மெலிந்தபோது நீ
வீறுநல்கும் வேதப்பாலை
விரும்பித் தாராயோ—இன்பம்
அரும்பப் பாராயோ
ஆதி யுண்மை போதித் தென்றன்
அறிவைத் தூண்டாயோ—என்
ஆர்வந் தீராயோ?
அவனி மதங்கட் கப்பா லூறும்
அமரத் தேனூற்றே.



## 638. கடவுளும் ஒன்றே

மோகனம்] [ஆதி

கடவுளும் ஒன்றே காசினி ஒன்றே
கருதிடும் உள்ளமும் ஒன்றே
உடலுயிர் ஒன்றே உண்மையும் ஒன்றே
ஓயாப் பிரிவுசெய் மதமேனோ?
கண்ணனும் ஒன்றே கீதையும் ஒன்றே
கண்ணறு வாதக் களமேனோ?
புண்ணியம் ஒன்றே புத்தரும் ஒன்றே
புதுப்புது வகுப்புகள் புகலேனோ!
கருத்தரும் ஒன்றே பைபிளும் ஒன்றே
காக்கும் சிலுவையும் ஒன்றே
பொருத்த மில்லாத போர் வெறியேனோ
பொய்ப்பிரி வினைகளும் ஏனோ?

## 639. புதுமையுமில்லை

சாவேரி] [ஆதி

புதுமையுமில்லை முதுமையுமில்லை
பூரணப் பொருள்து வென்றும்
பொது மயமாகும் அது புனிதான்மா
போக யோகப் பொலிவாம்
கண்ணிய தீர்க்க தரிசிகள் யாரும்
கைப்பட எழுதிய தில்லை
நுண்ணிய பொருளைப் பண்டிதர் நுவல
நூறு வேற்றுமை யாச்சே.
அன்பே வானும் அன்பே மழையாம்
அன்பே மானிட வாழ்வாம்
அன்பே அறமே அருளே அறிவே
ஆனந்தமென அறிவோமே.

## 640. மனிதர் கட்டும்

நவரோஜ்] [ஆதி

மனிதர் கட்டும் மனக்கோட்டை
மதக்கோட்டை தாண்டிப்
புனிதர் கண்ட ஒருமை தரும்
பொதுநெறியைப் பயில்வோம்

கீதை சொன்ன யோக நெறி
கிறிஸ்து சொன்ன பொறுமை
போதிமுனிவர் கருணை வழி
பொதுநெறி யுள்ளாமே.

நாயகத்தின் அருளுறுதி
நானகரின் பக்தி
நாயனரின் பணிநலங்கள்
நல்ல பொது நெறியாமே

## 641. மாறிப்போன

பிலகரி] [ஆதி

மாறிப்போன காலத்திலே
மதவெறி நோயின்றி
ஊறிப்போன உள்ளான்ம
யோக நிலையுறுவோம்

எனதுனதென் றிறுமாக்கும்
இகலை யினித் தாண்டி
இனி திதய நடன வழி
எல்லாரும் செல்வோம்.

வேதாந்த சித்தாந்த
வித்தகரின் வாக்கும்
நாதாந்த முடிவான
நமதான்ம நிலையே
சமயோகக் கலையே.



மனமொழி மெய்த் தூய்மையுடன்
வாசி நிலை யறிந்தே
தின மொருமை கூடியுள்ளே
தெய்வ நிலை பெறுவோம்—இந்த
வையக மின்புறுமே.

## 642. உலகம்

காபி] [ஆதி

உலகம் மண்ணே உடலும் மண்ணே
உயிரும் உணர்வும் மண்ணா?
அழகும் மண்ணே அணியும் மண்ணே
அழகின் புன்னகை மண்ணோ?
அமுதக் கிளிமொழி மண்ணா?

மனமும் பொய்யே கனவும் பொய்யே
வளருள் ளறிவும் பொய்யா?
மனிதான் மாவும் பொய்யா?
இனமும் உறவுந்தினமும் மாறும்
இதயத் துடி மாறிடுமா?
உதயக் கதிர் மாறிடுமா?

## 643. இந்த வாழ்வு

செஞ்சுருட்டி] [ஆதி

இந்த வாழ்வு சந்தையில்லை
இயற்கை மாநாடே
விந்தை விந்தைக் கனவுப் படலம்
விரையும் அதனூடே

தொட்டிலுக்கும் புதை குழிக்கும்
தொடர்ந்த ஒப்பந்தம்
அட்டிலுக்கும் கட்டிலுக்கும்
அலையுமே பந்தம்.

ஞாலத்தியல்பின் கோலமெல்லாம்
நானென்னுந் தோற்றம்
காலத்தியல்பின் கூத்து மனமே
கதை வளர்க்குங் கவிதை

வந்த வாழ்வை நொந் திடாமல்
வளமை யாக்குவோம்
சிந்தனையைப் பண்படுத்திச்
செழுமை யாக்குவோம்

படகு போலே பறவை போலே
பழமரம் போலே
கடமை காக்கும் கதிரைப் போலே
கலந்து வாழ்வோமே
கருணை சூழ்வோமே.

## 644. தியான பூஜை

காமாஸ்] [ஆதி

தியான பூஜை செய்வோம்—
தியான பூஜை செய்வோம்

சீவ நாதச் சங்கையூதிச்
சிவனை வழிபடு வோம்
தாவும் அருவிப் பாட்டுடனே
சாம கானஞ் செய்வோம்

உருகிக் கரையும் உள்விளக்கை
உயரத் தூண்டுவோம்
கருவி கரணந் தோயதெய்வக்
காதல் கூறுவோம்

வானுலகங் கோயிலென்பாம்
வாழுயிரே கடவுள்
கானியற்கை யழகு தெய்வக்
காட்சி யென்னுவோமே



மழையும் பனியும் மஞ்சனமாகும்
மலர்கள் அணியாமே
குழையும் மனமே சந்தனமாகும்
குணங்கள் மணங்களாம்
ஒவ்வோ ருயிர்ப்பும் அருச்சனையாகும்
உள்ளத்துடிப் பெல்லாம்
திவ்விய நடன மாகும் இதுவே
தியான பூஜையாமே.

## 645. அச்சுப் போட்ட புத்தகம்

தோடி] [ஆதி

அச்சுப் போட்ட புத்தகங்கள்
ஆயிரம் படித்தும் என்ன
மெச்சுங் காலைக் கதிரவன் முன்னே
மின்மினிகள் என்னே!
வானமான வட்ட நூலை
வாயை மூடிக் கற்றேன்
ஞானமான பாட்டருவி
நடன மாடக் கண்டேன்
பாடு பட்டு நாடு வாழப்
பயிர் விளைப்பான் வாழ்க!
நீடு பச்சைப் பொன் வளமை
நிலாவுங் காட்சி வாழ்க!

## 646. வண்டு மொய்த்த

வண்டு மொய்த்த தேன் மலரின்
வண்மையைக் காண்போம்
கண்டு கண்டே ஈந்துவந்து
கலந்து வாழக் கற்போம்
கனிகளுண்டு கூடிவாழுங்
காட்டுப் பறவைக் கூட்டம்
மனிதனுக்குப் பாடு கின்ற
மறையைக் கேட்டு மகிழ்வோம்

இதயக் குகையில் இலகித் துள்ளும்
இயற்கை தந்த இன்பம்
அதை யறிந்த உலக வாழ்க்கை
அமுத வெள்ள மாமே.

## 647. மானிடப் பிறவி

பேஹாக்] [ஆதி

ப: மானிடப் பிறவியை மங்கலமான
மலர் வனமாக்கிடுவோம்—வாரீர் (மா)

அ: ஏனிங்கு பிறந்தோம் என்பதையறிவோம்
இயலுறு பணியினைப் புரிவோம்— (மா)

ச: பாரின் வாழ்வொரு பரிட்சைக்கூடம்
பதமாய் நிதம் வாழ்வோம்
நேரந்தனிலே காரிய முடித்தே
நிம்மதியாய் முன் செல்வோம். (மா)

## 648. கல்வியால்

ஆரபி] [ஆதி

ப: கல்வியால் என்ன பயனே—ஜீவ
காருண்ய நாதனைக் கருதி யுருகாத (கல்)

அ: சொல்லிலும் செயலிலும் சொல்லறும் சுகத்திலும்
தோய்ந்து தோய்ந் தனுபவம் வாய்ந்து மகிழாத (கல்)

ச: ஆச்சுப்போச் சென்றெதுகை அடுக்கினாற் கவியாமோ?
அன்பிலா நேசமும் ஆபத்திற் குதவுமோ?
பேச்சுக்கு ராவணன் பின்புகும்ப கர்ணனாய்ப்
பிதற்றிப் பொழுதுபோக்கும் உதட்டுக் கலையான (கல்)

## 649. கணவனென்று

அடாணா] [ஆதி

ப: கணவனென் றென்னை நீர் கைப்பிடித் தாலே போதும்,
காதலைத் தருகிறேன் சாமி—நான்
கலக்க மில் லாத சிவ காமி (கண)



அ: அணிமணி வேண்டிலேன் அன்பிருந் தாலே போதும்,
அகத்துக் காரியாகியுன் சகத்துப் பணி புரிவேன் (கண)

ச: போலியலங்கார வேலையிலே சும்மா
பொழுதினைப் போக்கிட மாட்டேன்.
புக்ககத்தை யிகழ்ந்து பிறந்தகத் தைப்புகழ்ந்து
போருக்கு நாக்கினைத் தீட்டேன்.
வேளை தவறாமல் உபசாரம் செய்தன்பு
மாலைகளை நிதம் சூட்டுவேன்...
காலையுங் கதிரும்போல் வேலையுந் திரையும்போல்,
கலந்துநீ நிறைந்தெனுள் இருந்திடும் சுகம்பெறக் ()

## 650. இகபர சுகமெல்லாம்

கானடா] [ஆதி

ப: இகபர சுகமெல்லாம் எய்திச் சிரஞ்ஜீவியாய்
இருந்திடலாம் மனமே—புகழ்
சிறந்திடலாமே தினமே (இக)

அ: சகமாக விளையாடும் மகாசக்தி யருளினைச்
சஞ்சலம் இல்லாத நெஞ்சினிலே கண்டால் (இக)

ச: சாவதும் பிறப்பதும் சடவினை யுடலதே
சமநிலைப் பொருளினை எமனுந் தொடவல்லனோ?
ஜீவ நதி யெல்லாம் சிவமய வெள்ளமே
சிவசா யுஜ்யமும் தெரியுமுன் உள்ளமே (இக)

## 651. மோகன முகம்

பந்துவராளி] [ஆதி

ப: மோகன முகம் கண்டேன்—என் ஆண்டவன்
முல்லை முறுவல் விண்டேனே—சகியே (மோக)

அ: ஊகமாய் என் ஆசை தாகமாய் வேண்டிய
ஏக நாயகன் யோக போக நாயகன் எம்மான் (மோக)

ச: அருண கிரணம்போல் கருணையொளி வீசும்
அன்புத் திருமுகமே
அழகிளம் எழில் என்றும் அமுதம்போல் வழிந்திடும்
ஆனந்தத் தேன் முகமே.

இருவினை ஒப்புடன் மலபரி பாகமும்
ஈந்திடும் சாந்த முகம்...
ஈந்திட ஈந்திடக் காந்தம்போல் ஈர்த்தென்னை
இரண்டறக் கலந்திடும்
பரந்த அருள் சுரந்த (மோக)

## 652. தேடிவந்து

பூர்வகல்யாணி] [ஆதி

ப: தேடிவந் தென்னுடன் ஆடி மகிழ்கின்றான்
தேவாதி தேவனடீ—சகியே (தேடி)

அ: வாடிவருந்த முன்னே ஓடியொளிந்தே மிக
மோடிசெய்தான் மன மோகன ஜாலனே (தேடி)

ச: குக்கூ வெனவே குயில் பக்கத்தி லே கூவ
அக்கக்கா எனக்கிளி ஆசைகள் பேசிட
நெக்குநெக் குருகியென் நெஞ்சக் கவலை சொல்லப்
பக்குவம் பார்த்தேயென்
சொக்க லிங்கப் பெருமான் (தேடி)

## 653. ஆசையலைகள்

வேகடை] [ரூபகம்

ப: ஆசை யலைகள் வீசி யடித்தால்
அமைதி சேருமோ?—பரனே (ஆசை)

அ: பாச பந்த வினையி னாலே படரும் காமத் தினவினாலே,
மோசமான மயக்கி னாலே மோக மான முயக்கி னாலே ()

ச: பையவிழ்த்தாற் சிங்கம் என்றும்
கையி லெடுத்தால் வெங்க மென்றும்,
பகட்டு மினுக்கு வேஷ மெல்லாம்
பார்த்துப் பார்த்துப் புளித்த தம்மா!

துய்ய சீவ சாட்சி யான
மெய்ய வுன்னைப் பையக் கூடிச்
சுத்த போகந் துய்த்தி டாது
பித்துப் பிடித்த பேய்மனத்தில் (ஆசை)



## 654. சமநிலையில்

வசந்தா] [ரூபகம்

ப: சமநிலையில் இருந்து விட்டால்
சலனம் ஏன் மனமே—என்றும் (சம)

அ: அமைதி யான சாட்சி யாக
அறிவுக் குள்ளே அறிவ னாகி
இமைகள் போலே இரு வினையை
எண்ணி யின்ப துன்ப மின்றிச் (சம)

ச: இன்று போனால் நாளை உண்டு,
இரவு போனால் பகலும் உண்டு,
வெற்றி யுண்டு தோல்வி யில்லை
விசனப் பொய்யை வெட்டி யெறிந்து (சம)

பொன்றும் உடலில் என்றும் உள்ள
பொருளைப் பற்றி அருளைக் கூடி,
ஒன்று பட்டு மூன்று விட்டு
நான்கும் ஐந்தும் ஏழுந் தேறச் (சம)

## 655. நான் உனக்கு

தோடி] [ரூபகம்

ப: நான் உனக்குப் பாரம் ஆவேனோ—இந்த
ஞாலவுயிரைத் தாங்கும் அரசே (நான்)

அ: வானுக்குமின் அணுவும் பாரமோ?
மங்கை பாகா கங்கா தரா (நான்)

ச: மரத்தி னுக்கு மலர் கனியிலை
வளரும் பாரமோ?
மாதினுக்கு மதலை யின்பம்
தீது செய்யுமோ?

உரத்த வீர னுக்கு வாளும்
கரத்தை நைக்குமோ?
உலகில் ஐந்துவினையைத் தாங்கும்
ஒருவா என் குருநாதனே (நான்)

## 656. ஜீவ சேவை

பைரவி] [ரூபகம்

ப: ஜீவசேவை சிவபூஜையாய்ச்
செய்வதே தவம்—மனமே (ஜீவ)

அ: ஆவியுடலைக் கோவில் என்றே
பாவித் தன்பு மேவி நாளும் (ஜீவ)

ச: உண்டுடுத்து நாகரிகமாய்
உலக மாந்தர் ஒத்து வாழ
வண்டு போலத் தொழில்கள் செய்ய
வாய்மை ஞான ஒளி பரவவே,
எண்டிசையும் அழகும் கலையும்
கண்டு நெஞ்சங் களிக்கக் களிக்க,

துரிதம்:
ஏகத்திலே—சுத்த—போகத்திலே—ஆத்ம
தாகந்தணிந்துயர்—வாக நிலமெல்லாம் (ஜீவ)

## 657. ஏதுக்கிந்தப் பிறவி

மோகனம்] [ரூபகம

ப: ஏதுக்கிந்தப் பிறவி வந்ததோ-அருளாண்டவனே(ஏது)

அ: காதல் வலையில் துடிக்கவோ—சும்மா
கற்ற வாதம் படிக்கவோ ?
சாது என்றே நடிக்கவோ—சக
சாலக் கண்ணீர் வடிக்கவோ—ஐயா (ஏது)

ச: பொன்னுக்காக மண்ணுக் காகப்
போர் புரியவோ ?
புகழுக் காக மேடை யேறிப்
பொழிந்து தீரவோ ?
தன்னை யறிந்து, தலைவன் ஆணை
தன்னை அறிந்து, காலம் அறிந்து,
சகத்தை அறிந்து சிவத்தை அறிந்து
சுகத்தை அறிந்து திருத்தவோதான் ? (ஏது)



## 658. சித்தம் எப்படியோ?

ஹம்ஸத்வனி] [ரூபகம்

ப: சித்தம் எப்படி அப்படியே செய்குவாய் சிவனே-உன்(சி)

அ: கத்துக் குட்டிக் கதையில் லாமல்—நீ
வைத்த படி நான் வாழ வேண்டி நின் (சி)

ச: கண்ணைக் காக்கும் இமையைப் போலுன்
கருணை என்னைக் காக்குமே...
கசிந்துருகி யன்பு செய்தால்
கவிமலர் நிதம் பூக்குமே.
மண்ணைக் காக்கும் விண்ணே—நான்
மகிழப் பொங்கும் பண்ணே—என்
கண்ணு களே கண்ணே—நான்
எண்ணி யுருகும் புண்ணியனே (சி)

## 659. நல்ல வார்த்தையே

தன்யாசி] [ஆதி ஒன்றரைக்களை

ப: நல்ல வார்த்தையே சொல்லு மனமே (நல்ல)

அ: புல்லறி வுடனே பொய்கோள் பொறாமை
புறங்கூற லின்றி அறங் கூறிடும் (நல்ல)

ச: பஞ்சு மூட்டையிலே பட்ட தீயெனவே
பழி சுமத்தி மிகப் பகையினை மூட்டிடும்
நஞ்சு வார்த்தையின்றிக் கொஞ்சுங்குயில் போலே
நாராயணா ஹரி நாராயணா வென்றே (நல்ல)

## 660. அன்பு செய்திடும்

ஸ்ரீரஞ்சனி] [ஆதி

ப: அன்பு செய்திடும் இன்பம் அருள்வாய்
ஆனந்த சிவனே அக நாயகனே (அன்பு)

அ: வம்பு பேசிப் பேசி வாயை வீசி வீசி,
வந்த வாழ்வை வீணே சிந்தி நொந்தி டாமல் ()

ச: வரம்பி லாத துரிய சொரூப வானிலே,
வாய்க் கோட்டை கட்டி வசிக்க லாகுமோ?
அரும்பசியும் நாவால் அன்னம் என்றால் போமோ?
ஆராய்ந் தடங்கி அகமுக மாகி (அன்பு)

## 661. விதியென்று நீ

முகாரி] [ஆதி

ப: விதி யென்று நீ விசனப் படாதே
வீறு கொண்டுகடைத் தேறு மனமே (விதி)

அ: மதியூன்றிப் பரம பதி பாதம் ஊன்றின்
மன்றுள் ஆடும் சோதி நன்று காணுமே (விதி)

ச: ஏட்டு வாழைக்காய் இலைக் காகுமோ?
எட்டி பழுத்தால் கட்டி மாம் பழமோ?
பாட்டுக் கேற்றபடி பக்கவாத் தியம்போல்,
பண்ணும் பணியும் எண்ணும் புண்ணியமாம் (விதி)

## 662. கண்டு கண்டு

சங்கராபரணம்] [ஆதி

ப: கண்டு கண்டு நான் களிகூத் தாடினேன்
காமாரியை ப்ரேமா லயத்தில் (கண்)

அ: மொண்டு மொண்டு மூல சக்தி யமு துண்டு,
மும்மலந் தவிர்த்து நின்மல மாகவே (கண்)

ச: சென்று சென்று வரும் சீவப்பறவை
சிவமயமான நலம் பெறவே
என்று மழியாத இன்பத்தை நல்கிடும்
இதய சபாபதியை உதயசூரியன் போலே (கண்)

## 663. பாலூறும்

எதுகுலகாம்போதி] [சாபு

ப: பாலூறும் வாயாலே பாடிப் பணி செய்யும்
பரவச வரந்தருவாய்—பரம்பொருளே (பா)



அ: நாலாறும் ஈரெட்டும் வாலாய மாயறிந்தே
நாவுக்கரசு போலும் நம்மாழ்வார்போலுமே (பா)

ச: அன்பு நிரம்பிய அமுதநல் வாக்கிலுன்
அழகுக் கலைபொலிய அருளுணர் வோங்கிட
இன்பக் கனவினிலே இருவரும் ஒருவராய்
இணைந்த சுகந்தனில் எழுந்த கவிதையாம் (பா)

## 664. குருவருள்

சுருட்டி] [ஆதி

ப: குருவருளிருந்தாலே கருவிருள் கரையுமே
திருவருள்வந்து நிறையுமே—மனமே (குரு)

அ: உருவான விளக்கிலே அருவான மின்சாரம்
ஒளிர்வது கண்டு நீ தெளிவது நன்மையே (குரு)

ச: தாகமெடுத்த போதே ஆகாசம் பொழியுமோ?
தடங்கடல் உதவிடுமோ?
மோகாடவி தாண்டி முக்திகண் டுய்திட
முன்னின்று நடத்திடும் தன்னிகரற்ற தூய (குரு)

## 665. எத்தனை

எதுகுல காம்போதி] [சாபு

ப: எத்தனை கற்றாலும் எத்தனை கேட்டாலும்
இன்பம் உதித்திடுமோ—மனமே (எ)

அ: சுத்தனை ஜயபரா சக்தி பரமாத்மனைத்
துதித்தவன் அன்பரை மதித்து வணங்காமல் (எ)

ச: புத்தகப் பூச்சிக்குச் சித்தந் தெளியுமோ
புருஷனில் லாதவட்குப் புத்திரனுண்டாமோ
பத்தி பரவசத்தால் பாடியருள்கூடிப்
பாசமகன் றுன்மநேசம் பெறுமலே (எ)

## 666. செல்வ நிறைவு வேண்டும்

செஞ்சுருட்டி] [ஆதி

ப: செல்வ நிறைவு வேண்டும்—இந்தச்
செகத்தினில் இன்புற யாண்டும்—அருட்
செல்வ நிறைவு வேண்டும். (செல்)

அ: கல்விச் செல்வம் கலையின் செல்வம்
கவிதைச் செல்வம் வேண்டும்
கட்டுங் கவலையற்றினி தோங்கக்
கனிந்த ஞானச் செல்வம்—வேண்டும் (செல்)

ச: பத்திச் செல்வம் சுத்திச் செல்வம்
முத்திச் செல்வம் வேண்டும்—யோக
சித்திச் செல்வம் சக்திச் செல்வம்
தெய்வச் செல்வமே வேண்டும்—ஜீவன்
உய்யுஞ் செல்வமே வேண்டும். (செல்)

## 667. ஒற்றுமை வருமா

புன்னாகவராளி] [ரூபகம்

ப: ஒற்றுமை வருமா—இந்த
உலகங் கலகமின்றி வாழும் (ஒ)

அ: குற்ற மற்றுக் கற்று நின்று
குலமொன்றெனக் கூடிவாழும் (ஒ)

ச: நெற்றிதன்னை யலங்கரிப்பார்
நெருங்கி வந்தால் அகங்கரிப்பார்
வெற்றுரைகள் வீண்செயல்கள்
விருப்பு வெறுப்புப் புயல்கள்
நற்றவப் பெரியார் தம்மை
நகையாடுவர் பகையாடுவர்
சுற்றுலகின் சுருக்க வாழ்வில்
சுடு போர்க்களக் கொடுமையின்றி (ஒ)

## 668. சுத்த யோகிகள்

பாகேஸ்ரீ] [ஆதி

ப: சுத்த யோகிகளைத் தருவாய்—இந்தத்
தொல்லுல கின்புற வாழ்ந்திடவே—பரமா (சுத்த)

அ: சத்திய வீரர் தரும சீலர்
சாந்ததீரர் சர்வானுகூலராம் (சுத்த)



ச: இளகிய மனமுடையார்—சினமில்லார்
எல்லார்க்கும் நல்லது நினைப்பார்
பழகிய வாய்மையும் அழகிய தூய்மையும்
பண்புறு நண்புடன் அன்புறு தொண்டராம் (சுத்த)

## 669. காத்திட வேண்டும்

நாதநாமக்கிரியை] [ஆதி

ப: காத்திட வேண்டுமப்பா—கடவுளே
கருணைசெய் கருணைசெய்
மரணக் கதிர் சூழுதே (காத்)

அ: தீத்திரள் வீசியே சிதறும் அணுகுண்டுகள்
சித்திரவதை செய்து செகத்தை யழிக்காது (காத்)

ச: ஆணவக் கொதிப்புடன் ஆசையலைகள் பேச
அரசியற் புயலிலே ஆத்திரக் கனல் வீச
காணக்கண் பறித்திடும் காலாக்கினி விளையாட
கண்மூடித்திறக்குமுன் மண்மூடிமாளாது
கடுமனப் போரின்றிக்
கொடுந்துயர்க் கூற்றின்றிக் (காத்)

## 670. நம்பிக்கை

தோடி] [ஆதி

ப: நம்பிக்கை வைத்திடுவோம்—மனமே
ஞாலமாய் விளையாடும் காலகாலன்மேலே (ந)

அ: அம்பலந் தன்னிலும் அகண்ட வுலகினிலும்
அகமகமகமென்றே ஆடும் திருக்கூத்தன்மேல் (ந)

ச: வான்வளி ஒளிகடல் வையகந்தானாகி
வாழ்வினுக்குயிராகி வகைவகை யினங்களாய்
தான்என நான்எனத் தனிமுதலென வளர்
சாதியறியாப் பரஞ்சோதி அருள் நீதியில் (ந)

## 671. செய்ய வேண்டும்

தோடி] [ரூபகம்

ப: செய்ய வேண்டும் கடமை செய்குவோம்—ஜக
தீசன் ஆணை என உய்குவோம் (செய்)

அ: கையும் மெய்யுங் கருத்தும் சொல்லும்
கருத்தூன்றிக் கவனமாக— (செய்)

ச: இனிமையான கருணைகாட்டி
இன்னலச்சத் துயரை வீட்டி
தனிமையான தியானங்கூட்டிச்
சக்திவளரும் சாதனமெனச் (செய்)

## 672. இன்னலை நினையாதே

தன்யாசி] [ஆதி

ப: இன்னலை நினையாதே மனிதா
இடர்களை மதியாதே (இ)

அ: வன்மனப் பகைவர்கள் உன்னுயிர் வாட்டினும்
வஞ்சக நெஞ்சினர் நஞ்சினை ஊட்டினும் (இ)

ச: நன்மனச் சாட்சியை நண்பனுய் நம்பு
நானெனும் அகந்தை தானிடர் வம்பு
புன்னகைப் பொறுமையால் அன்னையினன்பினுல்
பூரணனுகிய நாரணன் சேவை செய்வாய் (இ)

## 673. இன்னமும் மனம்

கேதாரகௌளம்] [ஆதி

ப: இன்னமும் மனம் இளக வில்லையோ?
என்னையா ளுடைய அன்னை யப்பனே (இன்ன)

அ: முன்னிசைத் துன்னை மூலாதி முனிவர்
முத்தி பெற்ற தெல்லாம் பித்தர் காதையோ ?(இன்ன)

ச: கற்ற வித்தை யுன்னைக் காணப் போகுமோ ?
கனவுச் சோறு பசிக் குணவு மாகுமோ?
பற்றில் லாத உன்னைப் பற்றிவாழவே
பசுபாசந் தீரப் பதிஞானந் தர (இன்ன)

## 674. அறிவாகிய

பூபாளம்] [ஆதி

ப: அறி வாகிய பரப்ரஹ்மமே
அமுதமாகிய ஆனந்தமே—ஓம் (அறி)



அ: பொறிபுலன் மனம் புத்தியைக் கடந்த
போத சை தன்யமே பேதா பேதமே (அறி)

ச: ஊனு ருயிரில் நானுர் என்ற
ஒரு கேள்விக் கென்றும் வரும் இன்பமே.
தானன்றி யில்லாச் சகச ரூபமே,
தியான மந்திரத்தின் மோன தீபமே (அறி)

## 675. மலய மாருதம்

மலயமாருதம்] [ஆதி

ப: மலய மாருதம் வரும் வேளையே—என்
மன்னன் வருவதாகச் சொன்ன வேளையே (மல)

அ: கலைக் கற்பனையைக் கடந்த சுத்தவனக்
கனிமலர் மணங் கலந்து வீசு கின்ற (மல)

ச: மானுபிமான மான தொந்த மின்றி,
மருளின்றி மன ஒருமையில் ஊறும்
தேனருவியின் கான வேத நாதம்
சேரப் பேரின்பத்தை வாரி வாரி வீசும் (மல)

## 676. ஒருவனுக்கே

கரகரப்ரியா] [ஆதி

ப: ஒருவனுக்கே உயிர் வாழ்கிறேன்—என்
உள்ளன்பை யெல்லாம் கொள்ளைகொண்ட நாதன்(ஒரு)

அ: அருவாய் உருவாய்க் குருவாய்ப் பிரியா
அறிவாகி யெங்கும் நிறையும் இறைவன் (ஒரு)

ச: பாரோரின் உரை நடை பாவனையை
பழுதைப் பேசி வீணுய்ப் பொழுதைப் போக்கிலேன்.
வேரான ஓங் கார சொரூபன்
விஞ்ஞான கலா வேந்தன் பரம சாந்தன் (ஒரு)

## 677. குற்றத்தையே

சௌராஷ்டிரம்] [ஜம்பை

ப: குற்றத்தையே பார்த்தாற் சுற்றமில்லை யென்று
கூறிவா நல்ல மனமே (குற்ற)

அ: சிற்றறிவி னால் எனது கற்றறிவி னால்—உலகப்
பற்றறிவினால், அந்த முற்றறிவன் நோகச் செய்(குற்ற)

ச: அழகில்லை, குணமில்லை அணியில்லை பணமில்லை
ஆயிரம் குறையுடைய சேயிழை யானேனும்,
பழகியநன் மணவாளன் பரிவுமிலை யெனிலிந்தப்
பாழுடலில் எனக்கென்ன வாழ்க்கை? பரிபூரணன்()

## 678. சுகமான நிலை

ஆனந்த பைரவி] [ஜம்பை

ப: சுகமான நிலை வேண்டின் அகம்பாவத் தைவிட்டுச்
சுத்தலும் என்று பணிவாய்—மனமே (சுக)

அ: சகலகுண கல்யாணன், சர்வாந்தர் யாமியவன்
சரணின்றிப் பரமவுப சாந்தநிலை கூடுமோ? (சுக)

ச: கரையற்ற தாகமுடன் கண்ணீரும் கம்பலையும்
காட்டுகின்ற காதலுடன் வாட்டு கின்ற ஆர்வமுடன்,
உரையற்று—வீண்வாதப்
பறையற்று—ஜகமாயப்
புரையற்றுப் பரபக்தி
நிறைவுற்ற வரையற்ற (சுக)

## 679. இன்பத்தை என்ன சொல்வேன்!

சுருட்டி] [ஜம்பை

ப: இன்பத்தை என்ன சொல்வேன்—சகியே
இன்பத்தை என்ன சொல்வேன்—நான் பெற்ற (இன்)

அ: அன்பைக் கொடுத்ததும் அழகிய மணவாளன்
அந்தக் கரணத்தில் வந்து கலந்ததன் (இன்)

ச: ஆண்டாளும் காரைக்கால் அம்மையும் மீராவும்,
அரியநம் ஆழ்வாரும் உரிமைகொண் டன்புசெய்
ஆண்டவன் ஆருயிர் பூண்டவன் வேண்டநான்
அகமாயை கெடுத்தென்னைச் சுகமய மாக்கிய (இன்)



## 680. அவனன்றி

மாயாமாளவகௌளை] [ஜம்பை

ப: அவ னன்றி ஓர் அணுவும்
அசையாதடி சகியே—
அமைதியே பரம சுகமே (அவ)

அ: நவமான விளையாட்டால் எவனிந்த உயிருலக
நாயகனாய்க் கதிமோட்ச தாயகனாய் விளங்குவான் ()

ச: வீரத்தை ஆரம்ப சூரத்தை வீணகங்
காரத்தைப் பேசாது வேதாக மங்களின்
சாரனும் சுத்தஓங் காரனும் அவன்மீது
பாரத்தை வைத்தெந்த நேரத்திலுந் துதிசெய் ()

## 681. அரசே உன்

தர்பார்] [ஜம்பை

ப: அரசே உன் அடிமையைக் கரைசேரத் துணை செய்செய்
அகிலாண்ட கோடி ஆளும் (அரசே)

அ: முரசின்றி, உரையின்றி முத்தொழிலும் புரிகின்ற
முதல்வா நின் புதல்வன் செய்
முறைகேட்டு நிறைவேற்றி (அரசே)

ச: கண்ணீரால் என் பிழைகள் கற்பகோடி காலம்
கழுவியுன் கழல் பற்றினேன்,
எண்ணுவதும் பண்ணுவதும் உண்ணுவதும் உன்னாலே
என்னப்ப என் இறைவ
உன்னைச் சரண் புகுந்தேன் (அரசே)

## 682. எப்போதும் பிரியாமல்

கல்யாணி] [ஜம்பை

ப: எப்போதும் பிரியாமல் இருப்பாயென் னுள்ளத்தில்
செப்பரிய சுக நாதனே (எப்)

அ: தப்பிதங்கள் செய்தாலும் தண்டித்துக் கண்டித்துத்
தயவாகக் கூடியுன் மயமாகச் சுயமாக (எப்)

ச: நீயின்றி நானில்லை, நீரின்றி வளமில்லை;
நிலமின்றிப் பயிரும் இல்லை
தாயின்றிச் சூலில்லை; சேயின்றிக் குலமில்லை;
தண்ணருளி லாதிந்த மண்ணுலக வாழ்வில்லை(எப்)

## 683. இது போதும்

மத்யமாவதி] [ஜம்பை

ப: இது போதும் அருளையனே—நாம்
இனமொத்து மனமொத்துத் தினமொத்தி ருந்தாலே (இ)

அ: சதுர்மறையின் சிரமான சகலகலை முடிவான
சாந்தா நீ என்னிதய வேந்தாகப் போந்தருளின் ()

ச: பொன்னிலே மணிபோலப் பூவிலே மணம் போல
உன்னுளே நாஞகி என்னுளே நீயாகி,
உயர்துரிய மலைமேலே
உணர்வரிய கலையாலே
ஒன்ருகி, நன்ருகி நின்றநிலை நின்ருலே (இது)

## 684. மன்னித்துக்கொள்

காபி] [ஜம்பை

ப: மன்னித்துக் கொள் ஐயனே—என்
மனவாக்குக் காயத்தின் வினையால்வரும் பிழையை ()

அ: உன்னடிமை யான் என்னும்
உரிமையால் எனைத் திருத்தி (மன்)

ச: புலமாய வேடரிடம் பொய்யகங் காரரிடம்
பலமாயக் கள்ளரிடம், பரிவற்ற கபடரிடம்
அலைமோதி வலைமோதி
அயர்ந்துனது திருவடியை
நிலையென்று பற்றினேன்
நீயின்றிக் கதியில்லை (மன்)

## 685. காப்பாற்ற நேரமிதே

பேகடை] [சாய்ப்பு

ப: காப்பாற்ற நேரம் இதே—என்பசிதீரக்
கருணைசெய் ஆரமுதே (காப்)



அ: பார்ப்பாஞ யிருந்துமிப் பாவியைத் தீண்டாயோ
பற்றிய வீடணைக்கப் பஞ்சாங்கம் வேண்டுமோ? ()

ச: துட்டஞயினும் உன்னைத் துறந்துநான் பிழைப்பேஞே?
தோற்கன்றைக் காட்டினும் பாற்பசு கறக்காதோ?
தொட்டுத் தொட்டுப் பார்த்தால் தோட்டியும் உறவாமே
தொன்றுதொட் டொன்ருக நின்றநீ கரவாமே (காப்)

## 686. அப்பா உன் புகழை

எதுகுலகாம்போதி] [சாய்ப்பு

ப: அப்பா உன் புகழை நான் எப்போதும் அன்புடன்
செப்பிடும் வரந்தருவாய்! (அப்)

அ: சப்பள சளவென்றே தர்க்கமிட் டலையாமல்,
சகமாயா சாலத்தால் சுகநிஷ்டை கலையாமல் (அப்)

ச: சமயவாத உலகிற் சமநிலை கூடுமோ?
சந்தைக் கூச்சலுக்குச் சரளியும் பாடுமோ?
தமரஜப் புயலின்றி அமைதியுள் ளடங்கிநான்
சாம்ப சதாசிவ ஓம் ஹரி ஹரவென்றே (அப்)

## 687. மோனமயமான

நீலாம்பரி] [சாய்ப்பு

ப: மோன மயமான தியான நித்திரையிலே
ஆனந்தம் அனுபவிப்பாய்— (மோன)

அ: வானத்தி லேலய மான வளியைப் போலே
வாய்மனம் அடங்கிய தூய துரியபர (மோன)

ச: அந்தியில் மலர்ந்திடும் அல்லி மலர்போலே
அன்னை மடியுறங்கும் அமுதக் குழந்தை போலே;
விந்தையாய் ஊர்ந்திடும் விண்ணின் பவனி போலே
வேதாந்தத் தொட்டிலில் நாதாந்தந் தாலாட்ட (மோன)

## 688. இதுவென்ன?

காமாஸ்] [சாய்ப்பு

ப: இதுவென்ன சமர்த்தடியோ?—தோழி
இதுவென்ன சமர்த்தடியோ? (இது)

அ: எதுபொருள் என்றென்னை ஏங்கவிட்டிப்புறம்
இடியென நகைக்கின்றான் என்னவன் உட்புறம் (இது)
ச: ஊமையுண்ட கனி உரையா தினிப்பதுபோல்,
உரையில்லா துள்ளூறும் கரையில்லாப் பேரின்பம்
ஆம் அது நீயென்றன் அகத்தினிற் பேசியே
ஆயிரஞ் சமயத்திற் போய்விளை யாடினான் (இது)

## 689. விடமாட்டேன்

நாட்டை] [சாய்ப்பு

ப: விடமாட்டேன் உன்னினைவை—என் அப்பனே
விடமாட்டேன் அருட் பிடியை... (விட)
அ: அடித்தாலும் கடுஞ்சொல்லால்
இடித்தாலும் உன்னையே
அடைக்கலம் புகுந்த நான்
அலுத்துக் கொள்ள மாட்டேன் (விட)
ச: கொண்டவனை விட்டுக் கண்டவனைப் பற்றும்
குலமகளும் பதரே
கோலைக் கொடுத்துப்பூ மாலையை வாங்கிய
குருடனும் பதரே
எண்டிசைக் கதிரவன் இலங்க விளக்கைத் தேடும்
இருவிழியும் பதரே
அன்னைபோல் அன்புடை அப்பா வுனை நினையா
அகமாயமும் பதரே...
இறந்தாலும்—உடலினிற் பிறந்தாலும்—உலகினைத்
துறந்தாலும் எங்குமே நிறைந்த பராபரமே (விட)

## 690. இன்பமொரு பக்கம்

ரீதிகௌளை] [சாய்ப்பு

ப: இன்பம் ஒருபக்கம் துன்பம் ஒருபக்கம்
இருவினை உலகினிலே—மனமே (இன்ப)
அ: அன்பர் ஒரு பக்கம் பகைவர் ஒருபக்கம்
அழகொரு பக்கம் அகோரம் ஒரு பக்கம் (இன்ப)



ச: சூரிய னுக்குப்பின் சூழும் இரவுண்டு
சுகபோகத் திற்குப் பின் துக்கசா கரமுண்டு,
பாருக்குச் சீருண்டு சீருக்குப் போருண்டு,
பத்தரைச் சோதிக்கும் சத்துருப் படையுண்டு (இன்ப)

## 691. அற்புதச் சிற்பி

சக்ரவாகம்] [சாய்ப்பு

ப: அற்புதச் சிற்பியடி—என் ஆண்டவன்
ஐந்தொழி லாளியடீ! (அ)
அ: சிற்பரஞ் சோதி அவன் சின்மய நாதனவன்
சிந்தைக் கனவினால் சிருட்டித் தொழில் செய்யும் (அ)
ச: உரையின்றிப் பன்மொழி உலவிடக் கவி செய்வான்,
உளியின்றித் துளியிலே உயிர் உருப் பல செய்வான்,
கரையின்றி இடமெல்லாம் கனவுகளை நெய்வான்,
கண்ணுக்குங்கருத்துக்குங்கரந்துறை அருள் மெய்யான்()

## 692. சொல்லடி பசுங்கிளியே

இந்தோளம்] [சாய்ப்பு

ப: சொல்லடி பசுங் கிளியே—என்
சோகந் தணிக்கும் மன மோகனன் புகழையே (சொல்)
அ: எல்லையில் லாதவன் என்னுயி ரானவன்,
ஏகநாயகன் சுத்த போகநாயகன் புகழ் (சொல்)
ச: கண்ணுக்குள் இருந்தே நான் காணாது காட்டுவோன்
கரணத்தில் ஒளிந்தன்புக் கவியாக மீட்டுவோன்,
விண்ணிலும் மண்ணிலும் விளையாட்டுச் சேயவன்;
விபரந் தெரியு முன்னே கவர்ந்த சுபநாயகன் (சொல்)

## 693. இது உனக்குத் தகுமோ?

கேதாரம்] [சாய்ப்பு

ப: இது உனக்குத் தகுமோ—என் ஐயனே
இது வுனக்குத் தகுமோ? (இது)
அ: பொதுமறைப் பொருளெனப் போற்றிசெய்வாருன்னைப்
போர்செய்யும் மதங்களைப் பாரினிற் படைத்ததேன் ()

ச: விளையும் ஆனந்தத்தால் வியன்புவி யாக்கினை
விளையாட்டே வினையாக வேந்து நடாத்தினை;
களையான உலகிலே கவலையும் துயரமும்
கண்ணீரும் புண்ணீரும் காண்மனங் கலங்குதே ()

## 694. ஆத்ம விசாரம்

ஸ்ரீ] [ஆதிசவுக்கம்

ப: ஆத்மவி சாரம் இன்றி அமைதிதான் வருமோ?
அல்லற் படும் மனமே (ஆத்ம)

அ: நாத்திகப் படிப்பாலும், நான்எனும் தடிப்பாலும்,
ஆத்திரப் பேச்சாலும், அலங்கார வீச்சாலும் (ஆத்ம)

ச: தன்னலப் பேராசை முன்னலம் பெற்றிட
தரணி மகாநாடுகள் சர்ச்சை செய்தும் என்னே
உன்னத ஆத்தும நேய ஒருமை யின்றி
உலகினர் உள்ளத்திற் கலகங்கள் ஓயுமோ (ஆத்ம)

## 695. சுகமே

கல்யாணி] [சாய்ப்பு

ப: சுகமே பரம சுகம்—ஓம்
சுத்தோஹம் சுத்தோஹம் சுத்தோஹம் என்கிற (சுக)

அ: இகத்திற்கும் பரத்திற்கும்
மகத்திற்கும் கடத்திற்கும்
ஏகசி தாகாச யோகவை போகமாம் (சுக)

ச: சிக்கின்றி முக்குணச் சேட்டையிட ரின்றி
ஜீவ பரமாத்ம திவ்ய கல்யாண மொன்றி
பக்குவ மாகஞானப் படி யேற்றிக் கொடி யேற்றி
பரம சுத்தானந்தம்
பாலிக்கும் அத்யாத்ம (சுக)

## 696. நல்லோரைக் காப்பவனே

வாசஸ்பதி] [ஆதி

ப: நல்லோரைக் காப்பவனே—உன்னை
நாடிப் பதமலர்கள் வாடாமல் அர்ச்சித்தேன் (நல்)



அ: பொல்லோர் பொருமை என்னைக்
கல்லால் அடித்திடினும்
பொறுத்துக்கொண் டேயுனக்குப்
பூமாலை தொடுத்தனன் (நல்)

ச: புகழ்ந்தாலும் உலகென்னை இகழ்ந்தாலும் பொருட்டில்லை
பூசை மலரைக் கொண்டு வேசைக்கு முடிப்பனோ ?
மகிழ்ந்துநீ என்மண மாலையை ஏற்றாலே
வாழ்வு சிறந்ததென்று மங்களம் பாடிடுவேன்(நல்)

## 697. ஓயாத வினைச்சுழல்

ஸரஸ்வதி] [ரூபகம்

ப: ஓயாத வினைச் சுழலிலே—என்
உயிர்ப்படகு கலங்கு தையே (ஓயா)

அ: வாய்த் துடுப்பு துறைசேர்க்குமோ
மாம்பழம் என்றால் வாய் இனிக்குமோ (ஓயா)

ச: அனுபந்தமும் ப்ரதி பந்தமும்
அங்குமிங்கும் அலைமோதியே
இனுமினு மென்னை இழுத்தலைக் காமல்
இன்பத் துறைசேர் அன்பு மயனே (ஓயா)

## 698. அந்தரங்கத்திலே

ஸரஸ்வதி] [ஆதி

ப: அந்தரங் கத்திலே தந்திர மாகவே
ஆசை காட்டி வந்தானே—அழகப்பன் (அந்த)

அ: சந்தக் கவி மாலையைத் தந்ததே போதும் என்று
சல்லாபஞ் செய்தனன் எல்லாம் அறிந்தவன் (அந்த)

ச: வரதட்சிணையும் சீரின் வரிசைகளும் வேண்டான்,
மனமிருந் தாலே போதும், உனது பதியான் என்றான்;
பரம பதத்தி னின்றென் பக்திக் குடில் புகுந்தான்;
பாக்கியத் தால் எனது பர்த்தா வாக உகந்தான் (அந்த)

## 699. அறிவாகிய பயிர்

லதாங்கி] [ரூபகம்

ப: அறிவாகிய பயிர் விளைப்போமே—மனிதா
அகநிலத்தைப் பண்படுத்தி (அறி)

அ: அறமாகிய கலப்பையாலே
ஆழ உழுதே அன்பை நட்டே (அறி)

ச: உண்மையென்னும் உரத்தைப் போட்டே
ஊறும் ஆர்வ நீரை விட்டே,
கண்ணுறங்காக் காவல் காத்தே,
கனியையெல்லாங் கடவுட் கீந்தே (அறி)

## 700. வாராது காரும்

ஹம்ஸாநந்தினி] [ஆதி சாதாரணம்

ப: வாராது காருமையா—பகைப் புயல்கள் (வா)

அ: வேரோடெனைக் கெடுக்கப் போராடு மாயங்கள்
வீட்டைக் கொள்ளையடிக்கும் காட்டுத் திருடர்கள் (வா)

ச: காரியத்திற் கென்று காலைப் பிடித்து முன்னே,
காரியம் ஆனதும் கைவிட் டிகழ்ந்து பின்னே,
ஈரமில் லாத நய வஞ்சர், இறைவ நின்னை
இல்லையென்பார் மீண்டும் என்னைத் தொல்லைசெய்ய ()

## 701. கவனமாய்

சிம்மேந்திர மத்திமம்] [ஆதி சாதாரணம்

ப: கவனமாய் இரு மனமே—இனிக்
கண்மூடித் தனங்களில் கண்கெட் டலையாமல் (கவ)

அ: எவன் எனக்குச் சமானம் என்றகம் பேசாதே,
இங்கிதம் அறிந்துநீ எல்லா ரிடமும் என்றும் (கவ)

ச: அடங்கி நடப்பதுவே அட்ட லட்சண மாகும்.
அச்சாணி யில்லாத்தேர் முச்சாணும் போகுமோ?
கொடுக்கை நசுக்காத கொள்ளித்தேள் உறவாமோ?
கோப நெருப்புடனே கொஞ்சிக் குலாவலாமோ? ()



## 702. பஜனை செய்

ராமப்பிரியா] [ஆதி சாதாரணம்

ப: பஜனைசெய் அனு தினமும்—பர மாத்மனை
பஜனைசெய் அனு தினமும்—மனமேநீ (பஜ)

அ: சுஜன ரக்ஷகாபரி சுத்தபர மாக்ஷரா,
சுகுண குணாதீத சுந்தராங்கா என்றே (பஜ)

ச: அன்னை தந்தையினும் அன்பு மிகுந்தவா
ஆனந்த நாயகா அத்யாத்ம ராமா ஓம்
சின்மய ராதானந்தா ஸ்ரீஹரிக்ருஷ்ணா ஓம்
சிவ நாராயண தேவாதி தேவா என்றே (பஜ)

## 703. செயலே

கௌளை] [ஆதி சாதாரணம்

ப: செயலே சீவ குணம்—தினம்
சிந்தித்து நலம் புரிவாய்—மனமே (செய)

அ: பெயலே வான் மழையாம்—வெறும்
பேருக்கும் புகழுக்கும் பேசிப் பயனென்ன? (செய)

ச: வாய்ப்பந்தல் உயர்ந்தாலும் மழைக்குப் பாது காப்போ?
மனைவி கட்டு முன்பே மகளுக்கு வளைகாப்போ?
காய்க்கு முன்னே கனி, கடைக்கணக் காகுமோ?
காரிய மாகு முன்பே வீரியம் பேச லாமோ? (செய)

## 704. வஞ்சனை பண்ணாதே

சாரங்கா] [ஆதி சாதாரணம்

ப: வஞ்சனை பண்ணாதே—பிறரை
வருத்தி நீ உண்ணாதே—மனமே (வஞ்)

அ: அஞ்சு பூதமும் உள்ளே "அடடா திருடா" என்ன
அகட விகடஞ் செய்தே ஆளையே மாற்றாதே (வஞ்)

ச: கன்னத்தில் முத்திட்டுக் கைப்பொருள் பறிக்காதே;
காரியக் கள்ளனாய்க் காதலைப் பிரிக்காதே;
உன்னை விலைப்படுத்திப் பொன்னை வணங்காதே
உள்ளே யழுக்கு வைத்து வெள்ளை மினுக்காதே ()

## 705. வந்திருந்து

குந்தலவராளி] [திஸ்ர கதி

ப: வந்திருந்து செல்லும் வாழ்விலே—என்றும்
வாய்மை யாக வாழும் ஒன்றெது? (வந்)
அ: சிந்தை செய்து பார் அனுதினம்—ஒரு
ஜீவ சாட்சி யுள்ள துன்னுளே! (வந்)
ச: பந்த தொந்த பாசம் அற்றதாம்—அது
பாப புண்ய மற்ற ஞானமாம்
அந்த மாதி யற்ற மோனமாம்—சச்சி
தானந் தாத்மா நானென் றெண்ணுவாய் (வந்)

## 706. காத்திருப்பாய்

சுப பந்துவராளி] [ரூபகம்

ப: காத்திருப்பாய்—மனமே
காலை மலரும் கமலம் போலே (காத்)
அ: ஆத்ம நாதன் சந்நி தியிலே
அமைதியாக மமதை யின்றி நீ (காத்)
ச: சித்தச் சுழலை அடக்கி—உள்ளம்
தீப சிகைபோல் விளக்கி
அத்தைச் செய்வேன் இத்தைச் செய்வேன்
சித்தன் யான் எனும் பித்த மின்றிக் (காத்)

## 707. துடிக்குதையனே

நாயகி] [ஆதி

ப: துடிக்கு தையனே—என் உள்ளம்
தூண்டிற் பட்ட மீனைப் போலத் (துடிக்)
அ: பிடித்த பாசம் விடுத்துன் அருளை
அடுத்து வாழும் ஆசை கொண்டே (துடிக்)
ச: படபட வெனச் சிறக டித்துப்
பந்தச் சிறையைப் பட்டென் றுடைத்து,
விடுதலை யிசை விறிட் டுனது
வேத வனத்திற் காதல் கொண்டே (துடிக்)



## 708. பாடுவேனே

புலுசு மத்திமம்] [ஆதி

ப: பாடுவேனே—ஆடுவேனே
பரவசமாய் ஓடுவேனே (பாடு)
அ: நாடு நாடாய் வீடு வீடாய்
நாடி நாடித் தேடித் தேடி— (பாடு)
ச: ஊமைபோலே உள்ளிருந்தே
உலகமெல்லாம் அலைய வைத்தான்
ஆமை போலே ஐந்த டக்கி
அமர்ந்தது மென்னை யணைந்தான் (பாடு)

## 709 அன்புள்ள ராதா

புன்னாகவராளி] [ஆதி

ப: அன்புள்ள ராதா னந்தி—உன்மேல்
ஆசைகொண்டு வந்தேன்—கண்ணா (அன்)
அ: பொன்மணி யணியில்லை—இன்று
பூத்த கவிமலர் கோத்த மாலையுடன்— (அன்)
ச: மஞ்சளைப்பூசி மஞ்சனமாடி—அந்தி
வானிறப் பட்டணிந்தே
மங்களமாகக் குங்குவமிட்டு—வாச
மலரணிக் கூந்தல் முடித்தே
கொஞ்சிளங் கிளிகள் குயிலுடன் பேசும்
குளிர்ந்த காலையிலே
கோதையைப் போலே குழைமன முருகி
கோபாலா ஹரி கோவிந்தா என (அன்)

## 710. என்ன செய்வாயோ

சாவேரி] [ஆதி

ப: என்ன செய்வாயோ—கண்ணா என்னை
எங்கே உய்ப்பாயோ—எல்லாம் உன் செயலே (எ)
அ: தன்னந்தனியாக வந்தேன்—சரண் புகுந்தேன்
உன்னையல்லால் எனக்குயிரில்லை உலகில்லை (எ)

ச: தேனுக்குள் இனிமைபோல் தீங்கனி ரசத்தைப்போல்
வானுக்குள் வளியைப்போல்
மழையிலே மின்னல் போல்
ஊனுக்குள் உயிரைப் போல் உயிருக்குள் உணர்வு நீ
ஒருவா என் இறைவா உன்பரம் உன்செயல்! (எ)

## 711. எத்தனையோ

பைரவி] [சாய்ப்பு

ப: எத்தனை யோமுறை யிட்டழைத் தாலும் உன்
இதயம் குழையாதோ—சாமி (எத்த)

அ: நித்திரை யிலும் இந்தச் சித்தக் குயிலுன்னை
நினைத்துநெட் டுயிர்ப்பதை மனத்தவா காணுயோ? ()

ச: நினைவுகள் யாவையும் கனவுச் சிறகடித்து
நின்னிடம் வரத் தாவுமே!......
நிகிலாண்ட நாயகா நின்சரண் சரணென்றே
நெஞ்சக் கிளி கூவுமே!
உனையலங் கரித்திடும் வனமலர் மாலைகள்
உதிர்ந்து வாடிக் குவியுமே!
ஊர்வலஞ் செய்திடும் கார்காலத் தேரிலே
உற்றென் கவலை தீரச் சற்றருள் பரமனே (எத்த)

## 712. நாணம் ஏனடீ?

மோகனம்] [ஆதி

ப: நாணம் ஏனடீ—ஞான வல்லியே
நாளும் பழகி ஆளும் நாதனிடம் (நா)

அ: காணவேண்டு மென்றே காதல் கூறினாய்
கண்ணை மூடி ஏனோ விண்ணைப் பார்க்கிறாய்? (நா)

ச: பூமாலையுடன் பாமாலை சூட்டிப்
பொழுதெல்லாம் உருவை அழுது வேண்டுவாய்;
பேமாலமே! கோமானின் முன்னே
பேசா ததேன் கூசு மின்னலே (நா)



## 713. இடியிலும் புயலிலும்

அடாணா] [ஆதி

ப: இடியிலும் புயலிலும் இளைத்து வந்தேன் ஐயா
என்முகம் பாராயோ—ஐயா
இடர்களைத் தீராயோ? (இடி)

அ: அடிநிழலில் என்றும் குடிபுகுந்தே யினி
அலையாமல், உலையாமல்,
நிலையா யிருந்திடவே (இடி)

ச: ஆணவச் செல்வரின் அடிமையாய் வாழாதுன்
அன்பனாய் வாழ்ந்திட வருளாய்
ஆசைப் புயலென்னை வீசி யலைக்காதுள்
அமைதியில் வாழ்ந்திட வருளாய்.
கோணு மனம் நிமிரக் காணுமெய் வழியிலே
கொண்டெனை நடத்திட வாராய்.
கோவே—தண்ணருட் காவே
என்னுயிர்த் தேவே—இனியெங்கே
போவேன் உன் சேவகன் (இடி)

## 714. வந்த விந்தை

மணிரங்கு] [தேசாதி

ப: வந்த விந்தை கேளடீ—என்னுயிர் நாதன் (வந்த)

அ: சிந்தை யலைந்தலறித் தேடும்போ தொளிந்தவன்
செங்கண் அயர்ந்த நிசி என்கண்ணே என்றருகே ()

ச: இன்பதுன்பச் சுழலில் எற்றுண் டலறக்கண்டும்
ஏனென்று கேளாதவன்,
இளவேனிற் குயிலிடம் உளவெல்லாம் அறிந்தவன்
என்னுள்ளே யானவன்
அன்பிற்குப் பணிசெயும் ஆனந்தன்
அறியாத மோனத்திலே,
அள்ளிக் கலந்தென்னைத் துள்ளி விளையாடினன்
மெள்ளச்சொல்லுவ தென்ன கள்ளன் கதையை யவன்.

## 715. வேலை தந்தாலே

பூர்வ கல்யாணி] [சாய்ப்பு

ப: வேலைதந் தாலே போதும்; கூலி வேண்டாம் ஐயா
வேதவனத் துரையே—உன் சோலையில் (வேலை)

அ: காலைக் கவிமலரால் மாலை தொடுத்துச் சூட்டிக்
காதலா நின் முகம் கண்டு கண்டு களிக்கும் (வேலை)

ச: ஞானச் சுடர் வடிவை நாதவடி வெழுதி
நவரச நிறந்தீட்டி நாதா உன்முன் காட்டி,
மோன நிசியினிலே மோகங்கொண்டே பாடி—உன்
முத்து முறுவல் கண்டு பித்தேறிக் கூத்தாடும் (வேலை)

## 716. கண்டுன்னை

நீலாம்பரி] [ஆதி

ப: கண்டுன்னைக் கும்பிடவும் காணிக்கை வேண்டுமோ
கனக சபை யரசே— (கண்)

அ: பெண்டு பிள்ளைக்கு வரம் பெறநான் வரவில்லையே!
பிரியாமல் உன்பணி புரியும் எளிய தொண்டன் (கண்)

ச: பாடிப் பரவசமாய் ஆடி யுன்னைக்கொண் டாடும்
பத்தரின் பித்தனே! பரிந்து பொன்னும் மணியும்
கோடிகோடி யாகக் கொட்டிக் கொடுக்க வல்ல
கோமானே செல்வச் சீமானே—சிவனே (கண்)

## 717. பேரிகை கேட்டு

மத்யமாவதி] [சாய்ப்பு

ப: பேரிகை கேட்டு வந்தேன்—அரசே நீ
பெரிய தருமதுரை அரிய உதாரன் எனும் (பேரி)

அ: பாருயிர் யாவிற்கும் படியளக்கும் துரையென்
பஞ்சந் தவிர்ப்பானென்றே நெஞ்சில் உறுதிகொண்டு()

ச: பத்திப் பரதேசியாய்ச் சுற்றித் திரிந்துசிவப்
பித்துப் பிடித்துரக்கக் கத்தி கத்தி யலுத்தே,
சத்தம் அடங்கி மனம் சித்தத்தி லேயொடுங்கி
முத்தி பெறலாம் என்றே இத்தினம் உன் ஜெய ()



## 718. அன்பான உள்ளத்தில்

கம்பீரநாட்டை] [ஆதி

ப: அன்பான உள்ளத்தில் ஆனந்த சங்கீதம்
அள்ளிப் பருகிடுவோம்—உலகீரே (அன்)

அ: துன்பத்தைத் தணித்திடும் தூயசி தானந்தம்
தொந்தபந்த மில்லாத சுதந்தரா னந்தமே (அன்)

ச: பேரின்ப வீணையிற் பிறந்த நாதா னந்தம்
பிள்ளையின் மழலையிற் பேசும் ஜீவானந்தம்,
காரின்ப வானத்திற் காட்டும் கருணா னந்தம்
கலையைக் கடந்த யோக நிலைசேர் பரமானந்தம் (அன்)

## 719. பாராது பார்த்திருந்தால்

சௌராஷ்ட்ரம்] [ஆதி சவுக்கம்

ப: பாராது பார்த்திருந்தால்—நெஞ்சக் கிளியே
பரமன் வருவானடீ நெஞ்சக் கிளியே (பாரா)

அ: பேராயிரம் பேசினும் நெஞ்சக் கிளியே
பெருமான் ஒருவனடீ நெஞ்சக் கிளியே (பாரா)

ச: நாம ரூபத்தினிலும் நானா மதங்களிலும்
நாதன் ஒளிந்தி ருப்பான் நெஞ்சக் கிளியே
ஓம்தத்ஸத் ஓமென ஓது கிளியே—அவன்
ஒளியாய் வருவானடீ நெஞ்சக் கிளியே—ஞானங்
கொஞ்சுங் கிளியே! (பாரா)

## 720. சுத்த சக்தி ஓம்

வசந்தம்] [ரூபகம்

ப: சுத்தசக்தி ஓம் சுபம் என
ஜோதி கீர்த்த னாஞ்ஜலி—செய்வோம் (சுத்த)

அ: முத்தி வனத்தில் பூத்து மணக்கும்
பக்தி ஞான கர்ம மலரால் (சுத்த)

ச: கருணையன்பும் காதலின்பும்
கவலை யற்ற வாழ்வும்
இருவிகார மற்ற நட்பும்
இதய த்யான ஒளியும்

மருவிய மாந்தர் தேவராகி
மாசிலாத உலகில்
அருளரசு நிலவ சச்சி
தானந்தமயங் குலவிப் பொலிய (சுத்த)

## 721. குருவாயூரப்பனே

கல்யாணி] [ஆதி

ப: குருவாயூ ரப்பனே—கூவி யழைத்தால்
வருவாய்—அருள் நிறைவாய் (கு)
அ: திருவார் பசுவளத்தில் செம்பொன் ஆலயத்தில்
உருவான ஜோதியே உலகாளும் ஆதியே (கு)
ச: நாராயணா ஓம் என்றே பாராயணஞ் செய்யும்
நல்லன்பர் வணங்கிடச் செல்வங்களெல்லா மீவாய்
தீராத நோயெல்லாம் தீர்க்கும் தயாபரனே
தீனன் குறையறிந்து தீர்ப்பாய் அருள்விழி
பார்ப்பாய்—என்னை ஏற்பாய்—உயர்பதம்
சேர்ப்பாய்—ஓம் சரண் (கு)

## 722. எத்தனை ஆபத்து

அரிகாம்போதி] [ஆதி

ப: எத்தனை ஆபத்தினின் றெனையாண்டருள்
இன்பந்தனைக் கொடுத்தாய்—எந்தாயே (எ)
அ: பக்த வத்ஸலனே பரமதயாபரனே
பதித பாவனனே பார்த்தஸாரதியே (எ)
ச: துடியரசியலின் வெடிதரும் ஆபத்து
துரத்திவரும் ஒற்றர் தொடுத்திடும் ஆபத்து
கொடிய ராகுசனி கோள்பொய் பொறாமை கொண்டார்
கூற்றென ஆற்றிய நேற்று வரை ஆபத்து (எ)

## 723. நாளாக நாளாக

சௌராஷ்ட்ரம்] [சாபு

ப: நாளாக நாளாக நாளான மாயம் போய்
ஆளானேன் உனக் கையனே—பரம்பொருளே (நா)



அ: வாளினும் பொல்லாத கோளும் பொறாமையும்
வகுப்புக் கலகங்களும் வம்புசெய் உலகிலே (நா)
ச: சாய முகத்திற்குச் சரணாகதி யாவார்
சாதுக்களைக் கண்டால் காதவழி போவார்
வாயடி யால் மயக்கி வயிற்றில் அடிப்பார்கள்
வள்ளுவர் குறளுக்கும் வகைமாரி படிப்பார்கள்
தயவுக்கு நஞ்சிட்டுச் சத்தியத்தைச் சுட்டு
நயவஞ்சப் பாதகர் நாசஞ்செய் உலகிலே (நா)

## 724. உய்யும் வழி யிதுவே

ஜயந்தசேனா] [ஆதி

ப: உய்யும் வழி யிதுவே—உலக மெல்லாம்
ஒரேகுலம் ஆவதுவே—கலகமின்றி (உய்)
அ: பொய்யும் பொறாமையும் போட்டியும் இன்றியே
துய்ய சமரஸமும் செய்ய நடையும் ஒன்றியே (உய்)
ச: தன்னலச் செருக்கின்றி சாதி மதத்தால் வரும்
தர்க்க வாதங்க ளின்றி வர்க்கப் போராட்டமின்றி
மன்னுயிர் யாவையும் மலரில் இதழ்கள் போலே
மனமொன்றி இனமொன்றி வனமொன்று வளமென ()



# 10 மேளார்ணவம்

## எழுபத்திரண்டு மேள ராக கீர்த்தனைகள்

### 725. மாயாமாளவ கௌளம் ரூபகம்

ப: ஓம் கணபதி ஓம் பசுபதி
ஓம் சரஸ்வதியே—சரணம் (ஓம்)

அ: பூம்புவியுலும் புகழைப் பாடிப்
பூசனை செய்ய ஆசி தருவீர் (ஓம்)

ச: அகரவுகர மகர ஓமென அன்பறிவருள் கூடி
அமரகங்கையருவிபோல் சுத்தானந்தங் கொண்டாடி
சிகரஜோதி நாதமாக இகபரசுகபோதமாகச்
சிறந்து விளங்க மேளார்ணவம்
வரந்தந் தென்னை வாழவைப்பீர் (ஓம்)

முதல் சக்கரம்

### 726. கனகாங்கி ரூபகம்

ப: உள்ளம் உருகி, உருகி அன்பு
வெள்ளம் ஆகாதோ—பரமா (உள்)

அ: கள்ள மாயக் கனவுகள் இன்றி
கவலை யாகும் தினவுகள் இன்றி (உள்)

ச: விண் இரவியால் அருவி யாகும்
வெள்ளிப் பனியைப் போலே
வேக மான மின்சாரத்தின்
விளக்கு வரிசை போலே
கண்ணும் கருத்தும் கலந்த பொருளே
கனகாங்கித ஜோதி அருளே (உள்) 1

### 727. இரத்தினங்கி ஆதி

ப: நிம்மதி யான நெஞ்சினிலே நிதம்
நினையே னே நினையே—பரம்பொருளே (நிம்)



அ: வெம்மதி செய்யும் வேதனை யின்றி
வீண்மன மாயச் சோதனை யின்றியே (நிம்)

ச: பொன்மய அருணப் புன்னகை பூத்த
பூரண வான் போலே
பூங்குயில் கூவும் தீங்கனிச் சோலை
பொலி திரு வழகினைப் போலே
நன்மையின் உருவே சின்மய குருவே
நவரத்னங்கித நடன சபேசனே— (நிம்) 2

### 728. கான மூர்த்தி ஆதி $1\frac{1}{2}$

ப: நம்பி வாழ்கின்றேன்
நம்பனே உனையே (நம்)

அ: வம்பு செய்யும் மாயத் துன்ப வலையில்
மனஞ் சிக்கிடாது தினம் என்னைக் காவாய் (நம்)

ச: இல்லை என்ற சொல்லே இல்லா தருளும்
ஏகநாயகா சுத்த போக நாயகா
தில்லை ஜீவ னை புல்லாங் குழலில்
தேனிசை பொழிவாய் கான மூர்த்தியே (நம்) 3

### 729. வனஸ்பதி ஆதி சாதாரணம்

ப: காப்பாற்றத் தருணம் இதே—கடைக்
கண்பாராய் கருணை நிதே—பார்வதீபதே (காப்)

அ: பூப்பாரம் தாங்க வல்லவா—இந்தப்
புல்லனைத் தாங்கப் புகல்இல்லையோ (காப்)

ச: குணபதி ஜகபதி பசுபதி
குகபதி பகவதி சுகபதி
கணபதி கவி மலர் குலுங்கும்
வனஸ்பதி நீயே பரகதி (காப்) 4

### 730. மானவதி ஆதி சாதாரணம்

ப: மானவதியாய் இருப்பாய்—பரமசுக
ஞானபதியை நினைப்பாய்—மனமே (மான)

அ: மோனத்திலே வரும் முத்திக் கணவனேயே
முக்கரணங்களுடன் பக்குவ மாகக் கூடி (மான)

ச: காசு பணத்தினிலே ஆசை மிக வைத்தே
கண்வலை வீசிடும் காம வலையிற் சிக்கி
மோசம் போகாதே அந்த மோகம் ஆகாதே
மூல புருஷனிடம்-அதி சீலவதியாய்-அனு
கூலவதியாய்-இரு; சாலமதி யிதுவே (மான) 5

## 731. தான ரூபி — சாபு

ப: தான ரூபம் அதுவே-தன்னைத் தந்து
ததாகார மாவதுவே-ஆனந்தமான (தா)

அ: ஈனப்பே ராசையின்றி வான மழை போலே
இயற்கையின் ஈகைபோல் சுயநல மில்லாத (தா)

ச: ஆதித்த னுக்கே தன் ஆவியைத் தந்திடும்
அலைகடல் போலவே நிலைபெறும் அன்பிற்கே
சாதி மதநிற பேதமில்லாமலே
தந்தசு தந்தர பந்தமில் சிந்தையே (தா) 6

இரண்டாவது சக்கரம்

## 732. ஸேனாவதி — ஆதி 1½

ப: ஸேனாவதி ஓம் பகவதி
ஜெயசக்தி பவ பய பஞ்ஜனீ (ஸே)

அ: தானவர் நடுங்கும் தர்மாம்பிகே
தீன ரக்ஷணி எந் தேச ரக்ஷணியே (ஸே)

ச: சிஷ்டர் வாழவே துஷ்டர் வீழவே
தீரவீரசூரத் திறலோங்கவே
அஷ்ட லக்ஷ்மிகளும் வெற்றி கூறவே
ஆற்ற லீகுவாய் போற்றி ரண சண்டி (ஸே) 7

## 733. ஹனுமதோடி — ரூபகம்

ப: சாது சங்கம் போதும் ஐயனே-இந்தச்
சகத்தினில் அனுபவித்துச் சலித்தேன் (சாது)



அ: சூதும் வாதும் வேதனை செய்யும்
சூழ்ச்சி யின்றித் தூய நல்ல (சாது)

ச: சதிகாரக் கும்ப லின்றி அதிகார இடம்ப மின்றி
ஜபதபசுப கீத முடனே சதாத்யான பூஜை செய்து
அதிமனிதராய்ப் பதி யறிவுடன்
ஹனுமதோடி பாடி யாடும் (சாது) 8

## 734. காமதேனுகா — ஜம்பை

ப: காமதேனுகா—திவ்ய
நாமாம்ருத பான மருளும் (கா)

அ: சாம வேத சாரமான
தத்வ மஸிமந்த்ரத்தில் ஊறும்
சோம சூர்ய ரசத்தைத் தந்து
சோக மோக தாகம் போக்கும் (கா)

ச: புனித மான புல்லில் மேய்ந்து
பூங்குழலும் யாழுந் தோய்ந்து
மனிதர் தேவ ராக ஞான
மடி சுரக்கும் படி யருள்செய் (கா) 9

## 735. நாடகப்ரியா — ரூபகம்

ப: நாட கப்ரியா—இந்த
நவரஸ உலகாக நடிக்கும் (நா)

அ: ஆடலாக அன்பர் உய்ய
ஐந்தொழில்புரி துய்ய மெய்யா (நா)

ச: கவியோகிகள் கண்டு மகிழ
காலச்சுருள்கள் அவிழ அவிழ
செவியும் கண்ணும் கருத்தும் சிலிர்க்க
ஜென்ம வினைகள் தீரக் களிக்கும் (நா) 10

## 736. கோகிலப்ரியா — ஆதி

ப: கூவுகின்றேன் உனை நான்
கோகிலப்ரியா!

கொஞ்சிக் கொஞ்சிக் கொஞ்சித்
தஞ்சம் தஞ்சம் என்றே (கூவு)

அ: தேவா தேவாதி தேவா வாவா எனக்கிரங்கி
சாவையும் தடுத்திடும் சமயசஞ் ஜீவி யே (கூவு)

ச: முதிய முக்குண தொந்த
மூட்டை சுமந்துகொண்டே
மோகக் கானலில் இனிப்
போக முடியாதப்பா
புதிய வசந்தமுகப்
புன்னகை காட்டி ஞான
போதம் வளரத்தற்
போதந் தளர வேண்டிக் (கூவு) 11

## 737. ரூபாவதி — ஆதி

ப: நாத ரூபா வதியே—ஸரஸ்வதியே
நாவில்வந் தருள் புரிவாய் ஓம் சக்தி (நாத)

அ: வேத வேதாந்த சித்தாந்தசன் மார்க்கத்தின்
சாதனு னுபவத்தைக் கீதம்பாடிக் கொண்டாட „

ச: கல்விக் கடல் கடந்து காட்சித் துறை யடைந்து
கண்கண்ட கலைகளைப் பண்கண்டு பொழிந்திட
செல்வத்திற் செல்வமாம் ஜீவப்ரம்மானந்தந்
திளைக்கத் திருவருளில் குளிக்கச் சித்தம் களிக்க „12

### மூன்றுவது சக்கரம்

## 738. காயகப்ரியா — ரூபகம்

ப: நாயகா...நானுன் காயகப்ரியை—எந்த
நாளும் என்னை ஆளும் ப்ராண (நா)

அ: தாயும் தந்தையும் குரு தெய்வமும்
தனமும் கனமும் மனமும் ஆகிய (நா)

ச: அருமை யான காதல் வாழ்வின்
அன்பும் பண்பும் இன்ப நலமும்



பெருமை யான பெயரும் புகழும்
பேசி டாத பெரிய சுகமும் நீயே—ஆத்ம நேய ஞன „ 13

## 739. வகுளாபரணம் — ஆதி

ப: வரம் அருள்வாய் பரபக்தி செய்ய
வகுளா பரணர் வாழ்த்தும் தெய்வமே (வர)

அ: நர ஜீவனும் அமர ஜீவ ஞகி
நாத விந்துகலாதீத நிலை பெறவே (வர)

ச: சுத்த சச்சிதா னந்தச் சொக்கிலே
துரியா னுபவ ககனத்திலே
அத்தைத்தின் றங்கே அதுவாகி நிற்கும்
சித்தநிலைதா தேஜோன் மயனே (வர) 14

## 740. மாயாமாளவ கௌளம் — ஆதி

ப: மங்கள யாழிசை பொங்குகவே
மாயா மாளவ கௌளையுடன் சுப (மங்)

அ: தங்க நகை செய்யும் தளிரிளம் காலையில்
ஜயசிவ ஹரி குக சுத்த சக்தி யென (மங்)

ச: மனவிருள் விலகிட மாசுகள் பேர
மனித ஜன்மமிது இனிக்கடைத் தேற
புனிதமான உப சாந்தமே சார
புண்ணிய ச்ருதி ஸ்வர லய கதி சேரவே (மங்) 15

## 741. சக்ரவாகம் — திரிபுடை

ப: சாந்தமான மதி எழுந்தது
சக்ரவாகம் கூடிக் குழைந்தது (சாந்த)

அ: காந்தம் போலொரு சக்தி வீசிடக்
காதலன் முகம் கனிந்து பேசிட (சாந்த)

ச: நாவெல்லாம் திரு நாமம் ஆகிட
நன்மனம் அரு ளன்பு கூடிட
ஜீவனே சிவ மணம் கமழ்ந்திட
சிற்சு கானு பவம் பிறந்திட
வா வா வா வா! (சாந்த) 16

## 742. சூரிய காந்தம் ஆதி

ப: சூரிய காந்தத்திலே—உன் சுடர்முகம் காணுதம்மா (சூ)

அ: காரிருளை விழுங்கி—உன்
கனி நகை பொலியுதம்மா (சூ)

ச: உலகினைச் சுழற்றுகின்றாய்—பலபல
உடல்கொண்டு கழற்றுகின்றாய்
நலமுற வுயிர்களெல்லாம்—இன்ப
நாடகம் நடிப்பவளே. (சூ) 17

## 743. ஹடகாம்பரி திஸ்ர ஏகம்

ப: ஹடகாம்பரி பதம் பாடிட
நடமாடிடு மனமே (ஹட)

அ: இட பிங்களை முளை கூடியே
இசைவண்டமு துண்ணவே (ஹட)

ச: விளையாடிடும் உலகில் வரும்
விசனத்தினை மறந்தே
களையாடிடு பரமாத்மனைக்
கலந்தின்புறத் தினமே (ஹட) 18

நான்காம் சக்கரம்

## 744. ஜங்காரத்வனி ரூபகம்

ப: ஜங்காரத்வனி சுத்த
சக்தி ஓம் எனப் பக்தி செய்வோம் (ஜங்)

அ: தங்க யாழும் குழலும் முழவும்
ஜலத ரங்கமும் அலை வீசிட (ஜங்)

ச: சிவ ஹரி ஹர சரவணபவ
ஜெய குகவென இதயம் துடிக்க
நவரஸ மய நாதம் ஒலிக்க
ஞான ஜோதி எழுந்து ஜொலிக்க (ஜங்) 19



## 745. நடபைரவி ஆதி

ப: ஆனந்த சுதந்தரம் வேண்டும்—என்
அன்பு நடபைரவி அருவியாய்ப் பெருகவே (ஆ)

அ: வான வெளியினிலே கானப்பறவை போலே
ஞான வெளியினிலே நானும் பறந்துலாவ (ஆ)

ச: நோவும் துயர்பலவும் மேவும் படுகுழியில்
ஜீவனைத் தள்ளுவதோ—நர—
ஜன்மத்தை எள்ளுவதோ? (ஆ)
கூவும் குயிலழகைக் குரங்கின்கை கொடுப்பதோ?
கொஞ்சும் கிளியைப்புலிக் கூண்டில் அடைப்பதோ „ 20

## 746. கீரவாணி ஆதி

ப: கீதவாணியே கீர வாணியே
கிரணம் பரவும் வேத வாணியே (கீத)

அ: ஆதாரஓங் கார வீணையே
ஆனந்தக் கடலில் ஆடும் தோணியே (கீத)

ச: எண்ணும் எண்ண மெல்லாம்
பண்ணிசைக ளாகி
பண்ணிசைக ளெல்லாம்
கண்ணுலக மாகி
மண்ணுடல வாழ்வு விண்ணமுத ஊற்றாய்
மங்களம் பொலியப் பொங்கி விளையாடும் (கீத) 21

## 747. கரஹரப்ரியா ரூபகம்

ப: ஹர ஹரி யென கரஹரப்ரியா
ஆடிப் பாடுக நாடி யாழிலே (ஹர)

அ: நரஜீவனும் அமர ஜீவ
நதியாகி ஸத் கதி சேரவே (ஹர)

ச: சரசரவென பவவினைகளின்
சங்க டங்கள் தீர

சாந்த மான சமநிலையிலே
சஹஜ நிஷ்டை சேர
பரசிவசிதம் பர வெளியிலே
பரவசவுயிர்ப் பறவை யுலவ (ஹர) 22

## 748. கௌரீ மனோஹரி — ஆதி

ப: கௌரீ மனோஹரியே—எனது கலை
கவின்பெற அருள் புரியே (கௌ)

அ: தைரிய வாணி தா ; தகுந்த புலவர் சபை
தரமறித்து மகிழ வரகவிகள் புகழ (கௌ)

ச: இயலிசை நாடகம் இயல்புறத் துலங்கிட
எளிய நடையும் பொருள் ஏற்றமும் விளங்கிட
குயிலெனக் குரலுடன் நயமுறப் பாடிநான்
குவலய வாழ்விலே நவயுகங் கூடிட (கௌ) 23

## 749. வருணப்ரியா — ஜம்பை

ப: கருணை முகில் கர்ஜித்திட வருணப்ரியை வருகவே (கரு)

அ: அருணத்திரு வழகுப்பயிர் அருளால் விளைவேறவே ()

ச: வனமாமலர் மணமாடிட மலையாறுகள் ஆட
மனமாமயில் மகிழ்ந்தாடிட இனமா மயிலுடனே,
தனதானன தனதந்தன தகதக்குமி தகஜம்-என
எனதாருயிர் நடமாடிட இறைவன் புகழ் பாடி (கரு) 24

## ஐந்தாம் சக்கரம்

## 750. மார ரஞ்ஜனி — ஆதி

ப: மார ரஞ்ஜனீ மங்க ளாம்பிகே
மஹராஜி திவ்ய ஜகன்மோகினி (மார)

அ: ஆரமுதப் புன்னகை யழகே
ஆனந்த மான தேன ருவியே (மார)

ச: ஊறும் காத லாகி உபபோக மாகி
உயிராகியிந்த உலகெல்லாம் ஆகி
வீறு கொண்டு விளை யாடும் சக்தியே
விண்ணின்பம் இங்கே விளைவித் தருள்வாய் (மார) 25



## 751. சாருகேசி — ரூபகம்

ப: இன்னும் என்ன சோதனை—என்
இன்ப மன்னவா—சிவா-வா வா (இன்)

அ: கன்னி யுன்னை நம்பி யுள்ளேன்
காத லுக்குச் சாதி யுண்டோ (இன்)

ச: சாரு கேசி போல மேக
ராசி படரும் நிசியில்
தடதடவெனத் தந்தி பேசித்
தாவு மின்ன லிடியில்
போரும் புயலும் சீறும் உலகில்
புகலறியாது புலம்பு கின்றேன்
புண்ணியம் உண்டு கண்ணியம் உண்டு
புன்னகை முகங் காட்டி வருவாய் (இன்) 26

## 752. ஸரஸாங்கி — ஆதி

ப: தாய் சொல்லும் வார்த்தையைத் தட்டாது கேளடி
ஸரஸாங்கீ மனசே—தெய்வத் (தாய்)

அ: பேய்கொண்ட காமுகர் பேச்சினை எடுக்காதே
பேனெடுக்கும் குரங்கைத் தேனிடம் விடுக்காதே ()

ச: ஊரை மயக்கிட உடலை மினுக்காதே
உலையிலே போட்டிட வலையிலே பிடிக்காதே
மோரைக் குத்திய பாலின் முகம்போலத் திரியாதே
மோகமெல்லாம் சிவ தாகம தாக்குவாய் (தாய்) 27

## 753. ஹரிகாம்போதி — ஆதி

ப: ஹரிகாம் போதி பாடி ஆவலாய் அழைக்கிறேன்
பிரிய மணு ளனே—குணுளனே (ஹரி)

அ: சரிகம பதநீ எனும் ஸப்தஸ்வர வேதமும்
ஜதிஸ்வரங்களும் சேர தாளமேளங்களுடன் (ஹரி)

ச: சாத்விக மனதுடன் சன்மார்க்க நடையுடன்
சாது சங்கத்துடனே சதாகால நிஷ்டையுடன்
ஆத்ம ஸமர்ப்பணத்தால் அகந்தையச் சுகந்தோய
அகநா டகனே நின் சகநாடகங் கண்டே (ஹரி) 28

### 754. தீர சங்கராபரணம் ஜம்பை

ப: உலக மெல்லாம் கலக மின்றி
உள்ளம் ஒன்றி வாழ்கவே
உண்மையன்பு சூழ்கவே (உல)
அ: நலிவி லாத கல்வி செல்வப்
புலமை யோங்கப் புன்மை நீங்க (உல)
ச: ஈர நெஞ்சும் எளிய நடையும்
ஈகையுந் தியாகத் தொண்டும்
தீரசங்க ராபரணத் தேனிசை யினிமை போல
கருத்தும் கலையும் பொருத்த மான
கவிதை போலக் கவர்ச்சி கொண்டே (உல) 29

### 755. நாகாநந்தினி ஆதி

ப: நாகா நந்தினி ராகம் பாடியே
நாத பூஜை செய்தேன் ஆதி சிவனே (நா)
அ: தேகா லயத்தின் திவ்ய சந்நிதிவளர்
தியான வடிவான சின்மய மூர்த்தியே (நா)
ச: அஞ்சும் அடங்கித் தன் அறிவாக நின்றே
அந்தராத்ம சுகம் வந்துவந் தினிக்கவே
நெஞ்சினி லே முரளி கொஞ்ச வீணையுடன்
நிரதிச யானந்தப் பரநாதப் பண்முழங்க (நா) 30

## ஆருவது சக்கரம்

### 756. யாகப்பிரியா ரூபகம்

ப: தியாக போக யாகப்பிரியா அருள் யோக வரனே (தி)
அ: ஏக னே அனேகனே—என் இதய ஞான தீபனே—ஓம் ()
ச: சோக மோக தாக மின்றி
சுத்தோஹம் சுத்தோஹம் சுத்தோஹம் என்றே
சுருதி கூட்டி ஜீவயாழை அருவி போல மீட்டி
ஆகாயத்தில் அணுக்கள் போலே அரிய சக்தி காட்டி
அவனி வாழ்வில் அமுதம் ஊட்ட (தி) 31



### 757. ராகவர்த்தினி ஆதி

ப: எப்போதும் இன்பம் இன்பமே இனிய ராகவர்த்தினி
எனது மனதில் ஊற (எப்)
அ: முப்போதும் அம்மையப்பன் முதல்வன் ஆதி பகவன்
முன்னின் றென்னை நடத்தும்
இன்னன்பை நினைத்திடின் (எப்)
ச: தாமஸ ராஜஸத் தடைகள் உடைபடவே
சாத்விக வேகத்தால் சக்தி நடைபெறவே
காமமெல்லாம் சிவ காமமதாகவே
கண்ணுங் கருத்தும் அதில் கலந்த கலவியிலே () 32

### 758. காங்கேய பூஷணி மிஸ்ரசாபு

ப: காங்கேயா...குண பூஷணா—என்னைக்
கா! கந்தா கருணை வேந்தா (கா)
அ: ஆங்கார மமகார அரக்கரை அழி சிவக்கனலே (கா)
ச: ஈனப்பகைவர் சூழ்ச்சி என்னை
மானபங்கம் செய்திடாமல்
எடுத்த பணியை முடித்துக் கொடுப்பாய்
இகலைவெல்லும் குக ஷண்முக
ஞான பண்டித குருநாதா
நமஸ்காரம் ப்ரணவ போதா (கா) 33

### 759. வாகதீச்வரி ஜம்பை

ப: வாக தீச்வரீ வரகவி யோகிகள் கொண்டாடும் (வா)
அ: வேக மான ஊகமும் விவேகமும் கலை
மோகமும் அருள் (வா)
ச: வில்லும் கணையும் விறலுங் கொண்ட
வீரன் போல வெற்றி பெற்ற
சொல்லும் பொருளும் சுடரும் அறிவும்
நல்ல கனவும் நினைவும் அருளி
எல்லை யற்ற சக்தியாக
எனது வாக்கை ஊக்குகின்ற (வா) 34

760. சூலினி ஆதி

ப: தெய்வகுண மோங்கத் தீமையெல்லாம் நீங்கச்
செய்வாய் பவானி திரி சூலினீ (தெய்)
அ: வெய்ய ராக்ஷஸரை நொய்யவே புடைக்கும்
வீரர் போற்றும் சக்தி–உன்
பேரைச் சொன்னால் சித்தி (தெய்)
ச: தீத்தணலைப் போலப் பூத்த குண்டலினி
திவ்ய சக்தியுடன் சேறு பலமும்
ஆத்ம தீரமும் அருள் புரிவாய்
அமரேந்திரன்போல் அரசாள உலகை (தெய்) 35

761. சலநாடா ஆதி

ப: சஞ்சல நாடா நெஞ்சினிலே ஒரு
சக்தி பிறக்குதடா (ச)
அ: வஞ்சனை யில்லா மலர்கனி வனத்தைக்
கொஞ்சி விளையாடும் குளிர் மலையருவிபோல் (ச)
ச: சூரியன் போலொரு ஜோதியைக் கண்டதும்
சுதந்தரம் உதிக்குதடா
சூழ்ந்து விரிந்து பரந்திடும் வானிலோர்
சுடர் கவி பாடுதடா
காரிய சக்தி வலுக்குதடா—இளங்
காற்றை உயிர்த்திடவே
கடவுளை இயற்கையில் கண்டு தெளிந்து
கலந்திடுங் காதலினால் (ச) 36

ஏழாம் சக்கரம்

762. ஸாலகம் ஆதி

ப: உன்னை யல்லால் கதி யில்லையே—வாழும்
உபாயம் எனக்குநீ சொல்லையே-பரமா (உன்)
அ: தன்னல வஞ்சமும் சதிகார நெஞ்சமும்
இன்னல்செய் நஞ்சமும் மிஞ்சிய உலகிலே (உன்)



ச: வாயடி யாற் பிழைக்க வாசா லக மில்லை
வளம்பெறும் புகழ்பெற விளம்பரங்களும் இல்லை
சேயேன் உன் அருளையே தாயென நம்பினேன்
சித்தப் புயலில் சிக்கித் தத்தளிக்கும் சிறியேன்(உன்) 37

763 ஜலார்ணவம் ஆதி

ப: சித்த ஜலார்ணவத்தில் ஜீவப்படகு செல்லும்
சிவப்பெருந் துறை சேரவே (சி)
அ: பத்தித் துடுப்பினைப் பலமாக நாட்டியே
பரமன் அருளே கலங்கரை விளக்காக (சி)
ச: ஆங்காரக் கொடும்புயல் அடித்து நொருக்காமல்
ஆசைத் திமிங்கிலங்கள் அங்காந்து விழுங்காமல்
ஓங்கார அலையிலே தூங்காது சென்றுநல்
உதயவேளையிலே இதயத் தெளிவு காண (சி) 38

764. ஜாலவராளி ஆதி

ப: என்றும் பேரின்பம் உண்டு மனமே
இந்த உலகிலே வந்த நமக்கெல்லாம் (என்)
அ: தொன்று தொட்டசுத்த சுதந்தர ஜோதி
கண்டு சமரச வண்டுபோல வாழ்ந்தால் (என்)
ச: சள்ளைசெய் மனதை உள்ளடக்கியே
ஜால வராளி அலை சலசலக்கும்
வெள்ளத்தில் மிதக்கும் வேகப்படகு போல
விஞ்ஞானத்தில் உயிர் மேவி முன்சென்றால் (என்) 39

765. நவநீதம் ஆதி

ப: அல்லலெல்லாம் விலகி ஆத்ம சுதந்தரத்தில்
ஐயநான் வாழ வருள்—இறைவனே (அல்)
அ: பல்கிய வினைகளில் பற்றுவிட் டெப்போதும்
பாலில் நவநீதம் போல்
பதுமத்தில் அன்னம்போல் (அல்)

ச: அயலொன்றும் நினையாமல் அகமுகம் கலையாமல்
அதுவெனும் பொருளினை இதுவென் றறிந்துள்ளே
இயல்பா யிருந்தபடி இயல்பா யிருந்தென்றும்
என்னுயிர்த் துடிப்பெல்லாம்
உன்னுளத் துடிப்பாகி (அல்) 40

### 766. பாவனி ஆதி

ப: பதித பாவனி பரமேச் வரியை
துதிசெய் தினந்தினமும்—மனமே (பதி)

அ: துதிசெயத் துதிசெய மதிதரும்; பதிதரும்
சுதந்தர கதிதரும் சுத்த பராசக்தி (பதி)

ச: எண்ணிய காரியம் திண்ணமாய்க் கூடும்
எளிதினில் அறம்பொருள் இன்பமும் வீடும்
விண்ணர சாட்சியும் மண்ணிலம் சூடும்
வெற்றித் திருக்களெல்லாம்
சுற்றிலும் விளையாடும்—ஜீவனில் களையாடும் (பதி) 41

### 767. ரகுப்ரியா ஆதி

ப: பரம சுகந்தரும் ஜபதப ஸாதனமே
பண்ணிடு திண் மனமே—தினமே (பர)

அ: நிரந்தரம் வரந்தரும்
பரந்தரும் இகந்தரும் (பர)

ச: சித்த சுத்திதரும் ஜீவன் முக்தி தரும்
தீவினை போகும் திருவினை யாகும்
சுத்தசக்தி சிவஜோதி ரகுப்ரியா
சுந்தரி சுதந்தரி ஸ்ரீகரி ஓம் என (பர) 42

## எட்டாம் சக்கரம்

### 768. கவாம்போதி ஆதி

ப: சிவம் பெற அருள்புரிவாய் —ஜீவன்
நவம்பெற அருள் புரிவாய்—பரமாத்மனே (சி)



அ: தவம் பெறத் தொண்டரைத் தாங்கி நடத்திடும்
சத்திய சன்மார்க்க சமரஸக் கடவுளே (சி)

ச: பழைய தீவினையெல்லாம் பாழ்பட் டேகவே
பாசமும் பசுபதி நேசம தாகவே
குழைந்து குழைந்துருகிக் கொஞ்சும் கவாம்போதி
குயிலுனைக் கூவிடக் கயிலையின்மேவிய (சி) 43

### 769. பவப்ரியா ஆதி

ப: முக்குண மாயையில் சிக்கி யலையாது
முக்தி தருவாய் —அப்பனே—ஜீவன்
முக்தி தருவாய் பரனே (முக்)

அ: பக்குவ மாய் உலகைப்
பாராது பார்த்திருக்கும்
பரம உபசாந்த வரமே சுபகரமே (முக்)

ச: எனது யான் என்கிற இறுமாப்பு பொல்லாதே
எந்தப் பொருளும் இங்கே வந்தது நில்லாதே
மனது நிலைத்துனது மாருத தியானத்தில்
மங்கள பவப்ரியா சிவப்ரியை யாகவே (முக்) 44

### 770. சுப பந்து வராளி ஆதி

ப: சிந்தைக் கனவில் வந்த நாயகா
சிரஞ்ஜீவி யான சுக தாயகா (சிந்)

அ: அந்தரங்க மனத் தந்தியிலே சுப
பந்து வாரளி பாய்ந்து வரும் போது (சிந்)

ச: முத்து முத்தாக நட்சத்திரம் பூத்து
முல்லை முறுவலை அள்ளி வீசும் வேளை
எத்திசை யிலும் இயற்கை யழகின்
இன்பமான கலைப் பண்புபொங்கும் வேளை (சிந்) 45

### 771. ஷட்வித மார்க்கிணி ரூபகம்

ப: ஜாதி சமய பேதம் இல்லாத ஷட்வித மார்க்கிணி
சத்ய தர்ம ரக்ஷணி (ஜாதி)

அ: வேதாகமும் விவிலும் குரானும்
கீதையும் திருக் குறளும் ஓதும் (ஜாதி)

ச: கருணை யன்பு கரும வீரம்
கரண சுத்தம் காட்சி யறிவு
மரண பயமில்லாத சக்தி
வரமருள் சுபகரமருள் தாயே (ஜாதி) 46

## 772. ஸ்வர்ணாங்கி ஆதி

ப: என்ன குறையும் வைக்க வில்லையே
என்னம்மை ஸ்வர்ணாங்கி மஹாலக்ஷ்மியே (என்)

அ: அன்னவிசாரம் இன்றிச் சொன்ன விசாரம் இன்றி
ஆத்ம விசாரம் செய்யும்
ஆனந்தந் தந்தபின் (என்)

ச: சேய்போலவே மாதைத்
தாயாகவே கண்டேன்
ஜீவகோடிகளிலே சிவமயம் விண்டேன்
தூய வாழ்வுடன் புவித் தொண்டினைக்
கைக்கொண்டேன்
தூண்டு சுடர் போல் வாழ
வேண்டும் என்றெனை யாண்டாள் (என்) 47

## 773. திவ்யமணி ஆதி

ப: அவன்மேல் என்ன பிழையே—அசட்டு மனமே
அடங்காப் பிடாரி நீயே—தயாபரன் (அ)

அ: கவியோகி வணங்கிடும் காதலனே உனது
கணவனாகியும் சும்மா பிணங்கி யலைகின்றாய் (அ)

ச: உடல் கொடுத்தான் அதில் உயிராகத் துடித்தான்
உளங்கொடுத்தான் இந்த உலகையும் கொடுத்தான்
திடங் கொடுத்தான் அருள் இடங்கொடுத்தான் எம்மான்
தினமணி சுகமணி திவ்யமணி சுகுணி (அ) 48



### ஒன்பதாம் சக்கரம்

## 774. தவளாம்பரி ஆதி

ப: தருவாய் கலை வரமே—ஓம் ஸரஸ்வதி
தவளாம் பரி தாயே பவள வாய் மலர்ந்து (தரு)

அ: உருவாய் உலகினில் அருவாய் உளமிசை
குருவாய் அறிவினில் வருவாய் பூரணி
ஜய நாரணியே (தரு)

ச: வேத வியாசர் காளி தாசன் வால்மீகி கம்பன்
வீறு மிகுந்த வாக்கும் ஆறு போல நடையும்
காதலும் வீரமும் கருணையும் யோகமும்
கலந்த கவிதையாலே காலத்தை வென்றிடத் (தரு) 49

## 775. நாம நாராயணி ஆதி

ப: நாவே நலந்தரும் திரு நாம
நாராயணி சிவ ஓம் என நவில்வாய் (நா)

அ: சாவே யணுகாத ஜீவ சக்தி தரும்
சாயுஜ்ய பதவியும் உன்னைத் தேடி வரும் (நா)

ச: சுரங்கத் தங்கம் உருகிச் சொக்கத் தங்கம் ஆகி
சுடர்மணி முடியாகிச் சூழுலகை யாளும்
வரம் பெறுங் கலைகளும் பரம்பெறு நிலைகளும்
சிரம்பெறும் திவ்விய ஜீவனங் கனிந்திடும் (நா) 50

## 776. காம வர்த்தினி ரூபகம்

ப: சிவகாம வர்த்தினி பவகாம மர்த்தனி
சித்பர நர்த்தகியே—ஓம் பராசக்தி (சிவ)

அ: நவயுக லீலாவி லாஸினி துக்க நாசினி
மந்த ஹாஸினி சுஹாஸினி
பக்த ஹ்ருதய வாஸினி (சிவ)

ச: ஸ்ரீகரி சுபகரி திவ்யஸௌந்தரி சந்த்ர
சேகரி க்ருபாகரி பாரதி
ஏகாம்பர நாயகி சுகதாயகி
யோகாம்பிகே சகல போக தாயகி
தர்ம சகாயகி— (சிவ) 51

### 777. ராமப்ரியா சாய்ப்பு

ப: மணமாலை சூட்டு கின்றேன்—என் அன்பையுன்
மலரடி நாட்டு கின்றேன்—பரமாத்மனே (ம)

அ: கணமேனும் உறங்காத காதலிலே செழித்து
கண்ணீரிலே பூத்துப் பண்ணிசை வண்டூதும் (ம)

ச: அறியாப் பருவத்தில் ஆசையாய்க் கூடியென்
அறிவாகி நிறைவாகி ஆத்மசைதன்ய மாகி
பொறிபுலன் எட்டாத பொருளாகி அருளான
புருஷோத்தமா உனக்கே பூவை ராமப்ரியை (ம) 52

### 778. சுமனப்ரியா ரூபகம்

ப: காலத் தேரில் செல்லுவோம்
சுமனப்ரியா களிகூர்ந்திடக் (கால)

அ: ஞாலத்திரு வியற்கை அழகை
ஞான விழியால் கண்டு குளிர (கால)

ச: பிறந்து வளர்ந்து மாறி மறைந்து
பிறங்கும் ஜீவ நாட கத்தின்
அறம் பொருளின்பம் சிறந்த காட்சியின்
ஆடலாசி ரியனை நாடிக் (கால) 53

### 779. விச்வாம்பரி ஜம்பை

ப: எங்கெங்கும் உன்னருள் பொங்கி விளையாடும்
இன்பத்தைக் கண்டேனே—இனித்
துன்பத்தை அண்டேனே—பராசக்தி (எங்)

அ: தங்க நகைசெய் தளிரிளங் காலையில்
சாந்த முகம் கண்டேன்—ஒரு
காந்தக் கனலுண்டேன்—வே
தாந்தப் பொருள் விண்டேன்—தாயே (எங்)

ச: உள்ளும் புறமும் உயிரும் உடலும்
உலகமும் உன்மயமே—உன்
உருவமும் சின்மயமே—மலை



வெள்ளமும் வானும் கடலும் சுடருமுன்
வேத விளக்க மன்றோ—சங்
கீத நடன மன்றோ—நாத
ஜோதி விச்வாம்பரியே! (எங்) 54

## பத்தாவது சக்கரம்

### 780. சியாமளாங்கி ரூபகம்

ப: சியாம ளாங்கி கோம ளாங்கி
சிவ சங்கரி ஜய மாதங்கி—ஓம் சக்தி (சியா)

அ: தாமஸ ராஜஸ சாத்விக குண
பந்த தொந்தம் சிந்தி ஆத்ம
சுதந்தர வரம் தந்தருள் அம்பா (சியா)

ச: காட்சி யாக வந்து வந்து
கண்ணைக் கவரும் மண்ணின் ஆடலை
சாட்சி யாகக் கண்டு நல்ல
தொண்டுசெய்து சலன மற்ற
சமநிலையருள் இமய கௌரி (சியா) 55

### 781. ஷண்முகப்ரியா ஆதி

ப: விண்முகத்திலும் மண்முகத்திலும்—உன்
தண்முகம் காணவா—ஷண்முக ப்ரியா (விண்)

அ: உண்ணும் போதும் நான் உறங்கும் போதுமே
எண்ணும் போதும்—அன்பு
பண்ணும் பண்பினாலே (விண்)

ச: உள்ளம் உன்னைக் கூவும் வள்ளிக் குயிலன்றோ
ஊனுயிரும் உனது ஞான மயிலன்றோ
வெள்ளமாக மன வேட்கை விம்முதையா
அள்ளி யணைய வா!
அழகா, குழகா அமுதா முருகா (விண்) 56

## 782. சிம்மேந்திரமத்யமம் ரூபகம்

ப: சிம்மேந்த்ரன் போல் எழுந்து நில்லடா—மனத்
திண்மை கொண்ட உண்மை மனிதா (சிங்)
அ: வண்மை மிகுந்த தெய்வம் உண்டு
வாழ நினைத்தால் வழியும் உண்டு (சிங்)
ச: கண்ணன் கீதை காட்டும் பாதை
காந்தி போன்ற கருணை யேந்தி
விண்ணரசை விளக்க உலகில்
வெற்றி வேலன் வீறு பொலிய (சிங்) 57

## 783. ஹேமாவதி ஜம்பை

ப: உன்னதமான ஹேமாவதி
ஓங்கும் அறிவு தருவாய் (உன்)
அ: சன்னத வாக்கும் சத்திய வாழ்வும்
சலன மற்ற மனமும் பொலியும் (உன்)
ச: உண்ண உடுக்க இருக்க நாளும்
உழைத்துப் பிழைக்கும் ஊக்கம்
உள்ளன் புடனே வெள்ளம் போலே
உலகுக் குதவும் ஆக்கம்
கண்ணன் புத்தன் ஏசுகிறிஸ்து
காந்தி அப்பர் போலே
கருணை பொங்கிக் கவிதை போலக்
கிரணம் வீசும் கீர்த்தி யுடனே (உன்) 58

## 784. தர்மவதி ஆதி

ப: சன்மார்க்க சித்தி தருவாய்—தர்மவதியே
சதானந்த முக்தி பெறவே—எந்தாயே (சன்)
அ: தன்மார்த்த காம மோக்ஷ சதுர்வித புருஷார்த்தம்
தாங்கிய ஜயசக்தி ஓங்கிய நிலைபெற (சன்)
ச: அருணா லயத்திற்கு யாத்திரை சென்றிடும்
ஆகாய மீன் அணி போலே—



கருணைக் கடல் கலக்கக் காதலுடன் செல்லும்
கங்கை வெள்ளத்தினைப் போலே
கவியின் கனவினைப் போலே
புவியில் வளம்பெருகிப் பொதுநலங்கள் வளர (சன்) 59

## 785. நீதிமதி ரூபகம்

ப: ஆதி பகவன் அருளை நம்பி
அன்பு செய் மனமே—என்றும் (ஆதி)
அ: நீதிமதியிது ; சோதனை யெல்லாம்
நிலவும் கதிர்முன் விலகும் பனிபோல் (ஆதி)
ச: மனச்சாட்சியாய் வந்துன் னுள்ளே
வாய்மை பேசுந் தூய சக்தி
தனக்குவமை யில்லாத சுத்த
சமரஸசன் மார்க்க ஜோதி (ஆதி) 60

### பதினோராம் சக்கரம்

## 786. காந்தாமணி ஆதி

ப: தாந்தாம் தமதென மமதையில் லாமலே
சத்தியத் தொண்டு செய்வோம்—பொது
ஜனமன மகிழ்ந்திடவே (தா)
அ: காந்தா மணிசிந் தாமணி, சுகமணி
கண்மணி கதிர்மணி கதிதரும் குருமணிக்கே (தா)
ச: காமம் சூதுகொலை கட்கள வின்றியே
கடுஞ்சின வேகமும் மோகமும் இன்றியே
சேம மாகும் இஷ்ட காம மாகும் திவ்ய
நாம ஜபத்துடன் நல்லவர் கூடியே (தா) 61

## 787. ரிஷபப்ரியா ஆதி

ப: மலையெனத் தலை நிமிர்வாய்—ஜயவீரனே
மனச்சாட்சி மகிழவே
தனதாட்சி திகழவே (மலை)

அ: கலகப் பிசாசுகளைக் கண்டித்து நீக்கவே
நிலவுல கினைத் தெய்வக் கலைவனம் ஆக்கவே (மலை)

ச: சண்டை வெறியினாலே குண்டுபோட் டழிவுசெய்
தானவரை யழித்துத் தானே பிறர் எனவே
கண்டுயிர்க் கருணையை எண்டிசையிலும் நாட்டிக்
கயிலை ரிஷபப்ரியன்
மைந்தன் கந்தனைப்போலே (மலை) 62

## 788. லதாங்கி ஆதி

ப: சுபதினம் இதுவே...சுதந்தர லதாங்கி சிவன்
இதந்தரும் கவிதந்தே இன்ப ரசம் பொழிந்த (சுப)

அ: அபயம் அளித்தென் ஐயன் அடிமைதீர்த் தன்புடன்
அணைத்தென்னை ஆனந்தமே நாம் அதுவென்ற ,,

ச: சோதனைப் புயலிடி வாதனை தீரவே
சுதந்தர வசந்தமாய் வந்து தந்தமைதியை
நாதனே என்னுமுன் நானறத் தானாகி
நாதம் நான் எனது கீதக் குயில்நீ என்ற (சுப) 63

## 789. வாசஸ்பதி ஆதி

ப: சீர்திருத்தம் வேண்டும்—எங்கள்
தேசம் சுதந்தரக்கை லாசமாய் விளங்கிடச் (சீர்)

அ: போரின்றித் துயரின்றிப் போட்டி பொறாமையின்றி
வேறென்றும் கிளையென
ஊரொன்றி வளம்பெற (சீர்)

ச: நல்ல வாசஸ்பதி போல் கல்வி தொழில் அறிந்து,
நாட்டில் சமயோகக் கூட்டுறவு நிறைந்து,
எல்லாரும் எல்லாரும் இன்புற அன்புடன்
ஏகரமாய்ச் சிவ போகங் கொழித்திடவே (சீர்) 64

## 790. மேச கல்யாணி ஜம்பை

ப: நரஜன்மம் ஈடேற ஞான ஒளி காட்டியருள்
பர மேச கல்யாணி பவதாரணீ சரணம் (நர)



அ: கரவுற்ற காமாதி கள்ளர்பய மின்றியே
கலங்காத சித்தமுடன் பக்தி செய்து கடைத்தேறி ,,

ச: முக்குணமும் முப்புரியும் மும்மலமும் மாறியே
துக்கசுக தொந்தவினை பந்தமற நீறியே
இக்கட்டும் அக்கட்டும் எக்கட்டு மின்றியே
திக்கெட்டும் வான்சுற்றிச் சிக்கற்ற வளிபோலே ,, 65

## 791. சித்ராம்பரி ஆதி

ப: சித்ராம்பரி சிவராஜகௌரி
தியானா லயத்தின் ஞான ஸௌந்தரீ—தாயே (சி)

அ: சுத்தாத்வைத சித்தி யருள்வாய்
சூரியனைப் போலே பாரில் வாழவே (சி)

ச: தாகமோக சோக வேக மின்றியே
தானான சைதன் யத்தில் ஒன்றியே
மேகராசிக் கெல்லாம் மேலோங்கி நிற்கும்
ஆகாய சாட்சி யாக சாந்த மருள் (சி) 66

### பன்னிரண்டாம் சக்கரம்

## 792. சுசரித்ரம் ஆதி

ப: இதுவே எனது சுசரித்ரம்
இன்ப துன்ப மில்லா இயற்கைச் சித்திரம் (இது)

அ: எது வேதம் ஓதும் பொதுப்ரம்மமோ
அதுநான் அமரன் ஆனந்த சுத்தன் (இது)

ச: பிறந்ததும் இல்லை இறந்ததும் இல்லை
பெற்றிழந்து துன்பம் உற்றதும் இலையே
உறவென்றும் இல்லை பிறர் என்றும் இல்லை
உடலென் உடையாம் உலகென் குடிலாம் (இது) 67

## 793. ஜோதிஸ்வரூபிணி ரூபகம்

ப: ஜோதிஸ்வ ரூபிணி யம்பா
சுத்த ஹ்ருதய ரமணீ—ஜய (ஜோ)

அ: ஆதி சக்தி அகிலேச்வரி
ஆனந்த மய ஞானக் கொழுந்தே (ஜோ)
ச: வஞ்சமின்றி லஞ்சமின்றி
பஞ்ச மின்றிப் பாபமின்றி
அஞ்சுதலின்றி ஆறுதலாகி
அருளும் பொருளும் அறிவும் அறமும்
அன்பும் அமுதும் அளவளாவி
அவனி வாழ்வு நவம்பெற வருள் (ஜோ) 68

### 794. தாதுவர்த்தினி ரூபகம்

ப: ஏதுனக்கரி திந்த உலகில்
தாதுவர்த்தினீ—தாயே (ஏது)
அ: சாதுசங்க சங்கீர்த்தனம்
போதுமென்ற புத்தி யருள்வாய் (ஏது)
ச: பூதம் கரணம் தன்மாத்திரை
பொருந்தும் இயற்கைத் தத்துவமும்
நாதபிந்து கலேயுங் கடந்த
வேதாந்த சாம்ராஜ்யமும்
பேதமில்லா சுத்த முக்த
சமரஸ ஜீவனும் அருளி
வேதமான ஓங்காரமாய்
விளங்குவாய் என் உளங்குளிரவே (ஏது) 69

### 795. நாசிகா பூஷணி ஆதி

ப: உன்னேயே நினேக்கும் ஒரு வரம் அருள்
ஓம் சுத்த சக்தி உலகன்னேயே (உன்)
அ: என்னே மறந்து பொன்னே மறந்து
இகபரசுகம் எல்லாந் துறந்தே (உன்)
ச: நவரத்ன மொளிர் நாசிகா பூஷணீ
நானு உலகின் ஆகர்ஷிணீ
சிவரத்ன மான சித்ரூபிணீ
சித்த மெல்லாம் உன்னில்
வைத்து பக்தியுடன் (உன்) 70



### 796. கோசலம் ரூபகம்

ப: கோசலேசன் வீர ராமன்
ஆசி தருகவே—ரகுபதி (கோச)
அ: மோச வஞ்சப் பேய்கள் ஏக,
தேசம் அன்பர் வாசமாக (கோச)
ச: ஆசை வெறியும் வேசை மினுக்கும்
அகந்தைத் திமிரும் அணுகிடாமல்
நேசம் பக்திவிஸ் வாசம் தார்மா
வேச முடனே தேசம் வாழ (கோச) 71

### 797. ரசிகப்ரியா ரூபகம்

ப: ஆடிப் பாடி அருளே நாடி
அன்பு செய்குவோம்—வாரீர் (ஆ)
அ: கூடி உள்ளக் கூட்டுற வினுல்
குவலயம் பொது வலயமாக (ஆ)
ச: வாழ்வு மலரும் கனியும் குலுங்கும்
வசந்தக் கலேயாய் விளங்க மகிழ்வோம்
வளரும் இளமை யின்ப நலங்கள்
வளம் பெருகத் திகழ்வோம்
ஆழ்வினேபெற ஊழ்வினேயற
அமரானந்த யோகம் பயின்றே
அரிய ரசிகப் பிரிய ராகி
ஆவி தெய்வ காவிய மாக (ஆ) 72

### 798. உலக சமயம்

கரகரப்பிரியா] [ரூபகம்

ப: உலக சமயம் ஒன்றே—இதை
உள்ளத்தில் அறிநன்றே—மனமே (உல)
அ: பலபல பெயர் வடிவுதாங்கி
உலவிடும் பரமாத்மனேத் தேடும் (உல)
ச: இனிய நினேவும் இனிய வுரையும்
இனிய செயலும் இளகு மனமும்
கனி மரமெனக் கருணேயன்பும்
கலந்து நலஞ்செய் திலங்குகின்ற (உல)

## 799. வாரி வாரி வழங்கும்

தோடி] [ரூபகம்

ப: வாரி வாரி வழங்கும் வள்ளலே—
வரையாது நல் வரங்களெல்லாம் (வா)

அ: மாரி போல ஆழி போல
வசந்த மலரின் மணம் போல்
மனங் கனிந்த காதல் போல
வரகவியின் வாக்குப் போல (வா)

ச: என்று மெங்குமெதுவு முன்றன்
இரக்க வுதவி உரைக்கப்போமோ
நன்றி நன்றி என்பதன்றி
நரருக் கென்னும் அமர ஜோதியே (வா)

## 800. கருணை வள்ளலே

ஷண்முகப்ரியா] [ரூபகம்

ப: கருணை வள்ளலே—பரமா
கரையு துள்ளமே—நின் கனிந்த பரந்த மனதை
உணர்ந் துணர்ந் துருகினேன் (க)

அ: தருணமா மழையைப் போல
தயவு கொண்டு பயனளித்த (க)

ச: அடுத்துவந்தென் அயர்வு நீக்கி
அன்பு காட்டி அபயமளித்தே
தடுத்தாண்டருள் கொடுத்தாண்டாய்
தாய் தந்தையுங் குருவுமான (க)

## 801. நல்லதென்னினும்

மேச கல்யாணி] [ஆதி

ப: நல்ல தென்னினும் அல்ல தென்னினும்
எல்லாமுன் சித்தம் என்ப தறிந்தேன்

அ: சொல்லச் சொல்லளித்த தில்லையப்பனே
ஜோதியே சுடரே ஆதியே சரணம் (ந)



ச: நானென் றெழுந்த நரமனது
நாணிக்குனியக் காணுல கெல்லாம்
தானென்றெழுந்த வான் கருணையே
சமய சஞ்ஜீவியாய் அமையும் மாமருந்தே (ந)


## 802. நீடூழி வாழ்க

சக்ரவாகம்] [ரூபகம்

ப: நீடூழி வாழ்க வாழ்கவே—பரமா
நின் பரிவும் அறிவும் திருவும் உறவும் (நீ)

அ: ஆடும் ஐந்தொழிலாளியே—நின்
அன்பும் பண்பும் அருளும் பொருளும் (நீ)

ச: இருக்க இடமும் நினைக்க மனமும்
இயற்ற நலனும் இயம்ப வாக்கும்
உருக்க அழகின் இயற்கை வளமும்
உதவித் தனிப் பதவிதந்த
ஓம் சுத்த சக்தி ஜோதி குருவே (நீ)



# 11. விவித பாரதி

[சுத்தானந்தர் பன்மொழிகளில் இசைப் பாடல்களைச் செய்துள்ளார். தெலுங்கு, சமுஸ்கிரதம், இந்தி மொழிகளில் அவர் செய்த கீர்த்தனங்களில் சிலவற்றை இங்கே வெளியிடுகிறோம்.]

## 803. நமாமி ஓம்

கல்யாணி] [ரூபகம்

ப: நமாமி ஓம் விநாயகம்
ஸமஸ்த லோக சங்கரம் (ந)

அ: அனுத தீன ரக்ஷகம்
அனந்த ஸத் குணகரம்
கணேஸ்வரம் கஜேஸ்வரம்
ஸுரேஸ்வரம் மஹேஸ்வரம் (ந)

ச: யோகினும் ஹ்ருதந்தரே
வஸந்த பாஸ்கரம் விபும்
முதாகரம் க்ருபாகரம்—சுத்
தானந் தாத்ம ரஞ்ஜனம் (ந)

## 804. ஓம் ஸ்ரீம்

ஸ்ரீ] [ரூபகம்

ப: ஓம் ஸ்ரீம் ஐம் க்ரீம்—ஓம்
சுத்த சக்தி சித்ரூபிணி (ஓம்)

அ: காமாக்ஷீ த்ருபுர சுந்தரி
காத்யாயினி பாலாம்பிகே (ஓம்)

ச: அருணகிரண ப்ரகாசினி
அந்தராத்ம விகாசினி
சுபமங்கள வரதாயினி
சுத்தானந்த ப்ரமோதினி (ஓம்)



தஜ்ஜம் தகஜம் தளாங்கு தரிகிடதோம்
தத்தரிகிட திமிகிட தோம்
தகஜணு தகஜணு தளாங்கு தரிகிட
தகர்தின தகர்தின திமிகிட தக தோம் (ஓம்)

## 805. சாரதாம்பா சரணம்

சங்கராபரணம்] [ஆதி

ப: சாரதாம்பா சரணம்—ஓம் ஹ்ரீம்
சகல வித்யா விநோதினி
சாது சங்க ஸஹாயினீ (சா)

அ: நாராயணி ஞானவாணீ
நாதபிந்து ஸ்வரூபிணி
நானுவித கலா பூஷணி
நளின ஹ்ருதய நிவாஸினி (சா)

ச: பரிபூர்ண யோகேஸ்வரி
பக்த சங்க பரமேஸ்வரி
வரதாயகி ஜய பாரதி
வாகீஸ்வரி பாக்யலக்ஷ்மீ
மனஸ்வதி தனஸ்வதி
ஜயஸ்வதி ஸரஸ்வதி (சா)

## 806. பாஹி பாஹி

தோடி] [ரூபகம்

ப: பாஹி பாஹி புவஹாரீ—ஓம்
பரந்தாமா பதித பாவன (பா)

அ: தேஹி தேஹாத் யாஸ ரஹித
திவ்ய புவ்ய ஜீவாதாரா (பா)

ச: பானுகோடி ப்ரகாசாத்மனே
புதவதே கீதாம்ருத ரஸபதே
ஞானலய சபாபதே
ஸ்ரீபதே தயாநிதே தாஸரதே
சுத்தானந்த உபாஸன மூர்த்தே (பா)

## 807. ப்ரேமானந்தம்

ஸாவேரி] [ஆதி

ப: ப்ரேமானந்தமுதோ த்யானமுஜேயவே
ப்ரியதமமைன மனஸா–
பரப்ரஹ்ம ஸ்வரூபுனி (ப்)

அ: நாமரூபகுண ஜாதி பேதரஹித
நாதுனி ஆதிஸநாதுனி ஸாதுகா (ப்)

ச: ஹ்ருதய குஹரமுலோ அஹமஹமஹமனி
ந்ருத்யமுலாடு ஓம் ஸத்யஸநாதனுடு
ஸகலலோக ஸாம் ராஜ்ய மஹேசுடு
ஸர்வாந்தர்யாமி ஸச்சிதானந்த ஸ்வாமினி (ப்)

## 808. ஓம் ஜ்யோதி

பேஹாகு] [ரூபகமு

ப: ஓம் ஜ்யோதி ஓம் ஜ்யோதி
ஓம் ஜ்யோதி ஓம் (ஓம்)

அ: ஓம் ஜீவஜ்யோதி ஜகஜ்யோதி
பரஞ் ஜ்யோதி ஓம் (ஓம்)

ச: ஸத்யஜ்யோதி நித்யஜ்யோதி
சாந்த ஜ்யோதி ஓம்
சுத்த சக்தி ஆனந்தமய
ஸ்வயஞ்ஜ்யோதி ஓம் ஓம் (ஓம்)

## 809. எக்கட வெதுகேவுரா

பியாகட] [ஆதி

ப: எக்கட வெது கேவுரா—ஓ மனஸா
ஹ்ருதயாத்ம ஸூர்யுனி
யிங்கா திவ்வபெட்டி (எ)

அ: அக்கட இக்கட அல்லாட வத்துரா
அந்தர் நிஹிதமைன அத்வைதானந்துனி (எ)

ச: அகில லோகமுவானி அகண்ட குணலயமு
ஆத்ம ஸமூஹமே அதனி ஸ்வரூபமு
ஸகலாத்ம சைதன்ய ஸேவாவுபாஸன
ஸாதனமே சுத்தானந்தானு புவமே (எ



## 810. அவதாரம்

ஆரபி] [ஆதி

ப: அவதாரமெத்தினாடே—சச்சி
தானந்த ஜ்யோதி அனாதிஸனாதன புருஷுடு (அ)

அ: சிவமுகாஜீவுனி செலுவமெரயஜேஸி
திவ்ய ஜீவனமிய்ய தீனஜனாவனுடு (அ)

ச: அவலமைனஜாதி பேதமுனுமால்பி
ஆத்மஸமயோக ஐக்யமுனுஸ்தாபிஞ்சி
நவயுகஸாம்ராஜ்ய நாயகத்வம் வஹிஞ்சி
நர நாராயணப்ருந்தமுனுஸ்ருஷ்டிம்ப
ஏகதேவ ஜீவலோக ஏகஞான பக்திகர்ம
யோகபோக மோக்ஷகு நித்ய
சுத்த சக்தி பரமாத்முடு (அ)

## 811. பரம க்ருபாகர

கேதார கௌளம்] [ஆதி

ப: பரமக்ருபாகர குருமந்த்ர வாக்யமுனு
பலுகவே ஓமனஸா
ஓம் சுத்த சக்தி பரமாத்மா ஜயமனி (பர)

அ: நரஜன்ம மெத்தியக் ஞானாந்த காரமுலோ
நலியக கலிமல ஹரபவ தாரக (பர)

ச: தீபமு வெலுகக ரூபமு தெலியது
த்யான பஜனலேக ஞானமு கலுகது
ஜகபுலோக விடிசி ஜகடங்க ஜகடங்க
சுத்தானந்த சுக சைதன்ய
சித்தி ஜொஸங்குனு மஹாபக்துலகு (ப)

## 812. கனராதா

கேதாரம்] [ஆதி

ப: கனராதா மனஸா—ஈ
கனுலபண்டுகைன கருணா மூர்த்தினி (க)

அ: தினகர சோபித திவ்யமங்களாங்க
தீருனி விஶ்வாதாருனி உதாருனி (க)

ச: ராகதாள ரக்தி பக்தி ஞானமுதோ
ரம்யமைன திவ்ய ராஸக்ரீடலாடி
தேஹதேஹமுலோ தேஹி நேனேயனு
தேவுனிஈ மாஹாபாவுனி பாகுகா (க)

## 813. காமிதபல தாயகா

அடாணு] [ரூபகம்

ப: காமிதபல தாயகா—நன்னு
கருணதோடு ஜூடரா—தன்றி (காமி)

அ: பூமிலோனு நரஜன்மமு
பொந்திதினி நீ பூஜ கொரகே (காமி)

ச: முதமிதோ நாஹ்ருதய குஹலோ
முரளி நாத முனகு தகின
பதமுபெட்டி தகதிமியனி
பரதநாட்ய மாடுதேவா (காமி)

## 814. மோஹன

வராளி] [ஆதி

ப: மோஹன மாயாவீ—மன
மோஹன மாயாவீ—ஜய
முதமங்களதாயி— (மோ)

அ: தேஹாலயமுலோ கொலுவையுண்டு
தேஹீ—ஜகத்ரக்ஷகா—பாஹீ (மோ)

ச: ஆத்மானந்த ஸ்வரூபா—ஓம்
ஹரிஹர குஹபரப்ரம்மா—மம்மு
பாத்ரமுகா—நிமித்த மாத்ரமுகா
கொனவையா
பாலிஞ்சு கலியுகவரதா—ஹே
பரம தயா நிரதா—ஓம் (மோ)



## 815. ராரா ஆத்மா ராமா

ஆனந்த பைரவி] [ஆதி

ப: ராரா ஆத்மா ராமா—பரந்தாமா
நீலமேக ஶ்யாமா—அதிப்ரேமா—நனுபாலிம்ப (ராரா)

அ: ஆராதனனேலு—கோரா—நாப்ராண
தாரா—குபேரா கம்பீரா—பரசூரா— (ராரா)

ச: நா ரொம்மு நீ ரொம்மு நா சொம்மு நீ சொம்மு
நா இல்லு நீயில்லு ராஜில்லு சுண்டுரா
நேனு முரளி நீவு கானமு
நேனு வீண நீவு நாதமு
நேனு நீவு நீவு நேனு
நாலோக நீவு கலிசி நீலோக நேனுமெலிஸி
ஞான பக்தி பரவசமுதோ
நர்த்தனமுலு ஜேதாமுரா (ராரா)

## 816. ச்யாமஸுந்தராங்க

காமாஸ்] [ரூபகம்

ப: ச்யாம ஸுந்த ராங்கநீபை
ப்ரேம கொண்டிரா— (ச்யா

அ: நாமுரலுவினி முத்து
நவ்வுமுகமு ஜூபராதா (ச்யா)

ச: தினராத்ரிநா ஹ்ருதய குடிலோ
தியான மூர்த்தி நீ
கனிகரமைன காந்தி வெலுகி
சாந்தி பொந்த கருண ஜூடரா (ச்யா)

## 817. ஆனந்தம்

பேஹாகு] [ஆதி

ப: ஆனந்தம் ஆனரே—
ஆத்மானந்தம் ஆனரே! (ஆ)

அ: மானவ ஹ்ருதயமுலோ பலமெரயு
மர்மமைன ஒகவெலுகுனி ஜூசி (ஆ)

ச: ஜீவுனிலோக சிவுனி னெருங்கி
த்யான சுகம் புலோ னேகீபவிஞ்சி
பூாவஸமாதிலோனு பவளிஞ்சி
பரம சுத்தானந்த மனுபவிஞ்கி (ஆ)

## 818. நூவே நா ஜீவுடு

காம்போதி] [சாபு

ப: நூவே நா ஜீவுடு—ஓ
நூதன ஸுதனுடா (நூ)

அ: நாவேடு கனுவின
ராதா ராதா ரமணு (நூ)

ச: தேனலோ தீபுநூ தீபுலோ ரஸமுநூ
திவ்யவிபூதிலோ தேஜோவிலாஸமுநூ
ஞான பக்தி கர்மயோகபலமுநூ
நரஹ்ருதயகுஹலோ நாரா ணண்டுநூவே (நூ)

## 819. நீகே நிவேதனமு

மத்யமாவதி] [ஆதி

ப: நீகே நிவேதனமுரா—ஹேபரமாத்மா
நேனு நாதியனு மானவத்வ மந்தா (நீகே)

அ: தேஹாத்யாஸமைன மோஹமுனுவதிலி
ஸோஹம் சுத்தோஹமனே தாஹமீயரா—தன்றி „

ச: கன்னுலோஜுபுநூ கான ஓங்காரமுநூ
கரணமுலோபல கனதர யோகிநூ
நின்னுநேவிடவனு நன்னு நூவிடவகு
நிரதிசயானந்த புரிதா சுபசரிதா (நீகே)

## 820. மனசுலோன

சங்கராபரணம்] [ஆதி

ப: மனசுலோன முக்தி மர்மமுந்திரா
மஹாசுத்தசக்தி மயமைனதிவ்ய (மன)



அ: அனக அனகபாட வினிகிரம்யமே
அந்தர்முகத்யானமே ஞானகம்யமே (மன)

ச: சப்தாதி விஷய ஜன்மவாஸனலு
தாடியாத்மலோனு தேடபடியுண்டு
குப்தமைன குஹலோ நர்த்தனமுஜூடு
குணத்வந்தவிகா ரமுலேனிசாந்த (மன)

## 821. ராவே மாயம்மா

சாவேரி] [ஆதி

ப: ராவே மாயம்மா ராஜராஜேஸ்வரி
ராஜில்லு சுண்டவே—நா ஹ்ருதய கமலமுலோ(ரா)

அ: ஜீவா தாரமைன சின்மயானந்தினீ
சிதாகாச நர்த்தினி—மஹா குண்டலி வர்த்தினி (ரா)

ச: அகண்ட பரிபூர்ண சச்சிதானந்தமய
ஆதி பராசக்தி அகிலாண்ட நாயகி
ஸுகந்த மந்தஹாஸ ஸுமுக முகவிலாஸ
ஸுந்தரி ஸ்வதந்தரி, நிரந்தரி
சுத்தானந்த ஹ்ருதந்தரி (ரா)

## 822. புண்ய பூமி

மாண்டு] [ஆதி

ப: புண்ய பூமி லாவண்ய பூமி
பூர்ணயோக பூமி—ஜயபாரதம் மன (பு)

அ: கண்ய பூமி தன்ய பூமி கருணாலய பூமி (பு)

ச: ஸத்யமைன சாந்த நிலையம்
தர்ம க்ஷேத்ரமிதிகோ
நித்யமைன சுத்த சக்தி
நிண்டு ஞான பூமி—கனுல
பண்டுகைனபூமி—ஜய பாரதாத்ம பூமி (பு)

## 823. ஸ்வதந்த்ர பாரத

காபி] [ஆதி

ப: ஸ்வதந்த்ர பாரத ராஜ்ய லக்ஷ்மீ ஜயஜய
ஸ்வர்க ராஜ்ய ராணிகி—ஜய (ஸ்வ)

அ: நிரந்தரமுகா ப்ரகாசிஞ்சுசுக
நிர்மல வாணிகி மங்களம்—ஜய (ஸ்வ)

ச: ஸத்வகுணம்புலு நிண்டின பூமி
சாந்த ஞானம்பு பண்டின பூமி
சுத்த சக்தி சைதன்யுல பூமி
சுந்தரமங்கள ஜ்யோதிர் பூமி (ஸ்வ)

## 824. ஞான ஜ்யோதி

நாடகுறிஞ்சி] [ஆதி

ப: ஞானஜ்யோதி ஜூபி நனுப்ரோவவே
நாத விந்து கலாதீதநாரணீ—ஓம் (ஞா)

அ: மௌனசிகர மந்து முத்துகா வெலயு
மோக்ஷதுர்யாதீத பரமாக்ஷரீ ஓம் (ஞா)

ச: அந்தராத்ம நிஜசிந்தனம் புலோ
அதிசய நவரஸ கானமுதோ
ஸுந்தர நடனனந்த லீலலாடு
சுத்த சக்தி ஓம் ஸுரராஜகௌரீ
ஜனரஞ்ஜனி மனரஞ்ஜனி
புவபஞ்ஜனி ஜகஜ்ஜனனீ ஓம் (ஞா)

## 825. காபாடவே

ஸுரடி] [ஆதி

ப: காபாடவே—கருணு கடாக்ஷி
கலிதீர்ச்சி ஸத்ய யுகமுனெனர்ச்சி (கா)

அ: நீ பாதமே நெரநம்மிதி
நிண்டு முத்து கௌரி உண்டி நாமதிலோ (கா)



ச: பகராக்ஷஸ லனுசிக்ஷிஞ்சி
பரம புக்துலனு பாகுகா ரக்ஷிஞ்சி
இஹமுலோனு தர்மமுனு ஞதரிஞ்சி
எக்குவைன திக் விஜயமு காஞ்சி (கா)

## 826. இஹபர சுக

வசந்தா] [ரூபகமு

ப: இஹபரசுக தாயகி யம்ப
ஈஸ்வரீ சுபநாயகீ—ஓம் (இ)

அ: ஜகஜீவபர பரம்பர
தத்வஞான ஸித்தி யொஸகு (இ)

ச: ப்ரேமஹ்ருதய ஸிம்ஹாஸினி
ப்ரிய புக்த ஜனரக்ஷணி
ஸ்ரீகரீ ஸ்ருங்கார கௌரி
சிதாகாச ப்ரணமாக்ஷரி
ஸஹஸ்ரார அரவிந்தமு
விகஸிஞ்சு நவ ஜீவனு
னந்தமொஸகு சுத்த சக்தி
நாபாலி தெய்வமா (இ)

## 827. நீவே கதி

அஸாவேரி] [ஆதி

ப: நீவே கதி அனி நம்மிதி
நீரஜ நயனீ தாரீஜூபவே (நீ)

அ: தேவாதி தேவுலு வந்தனமு
ஜேயுஸாயுஜ்ய ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ ! (நீ)

ச: சரணரவிந்த பதரேணுக
சாலுநன்னு ப்ரோவ ஸர்வதேவதேவி
மரணபயமுனு மான்பி நித்யதிவ்ய
மங்கள மொஸகு மஹா சுத்த சக்தி (நீ)

## 828. நீ ஸேவ பாக்யமு

கல்யாணி] [ரூபகமு

ப: நீஸேவ பாக்யமிய்யவே—நனு
நிஜ தாஸுடனு ஜேயவே (நீ)

அ: ஈசாவாஸ்யமைன புவினி
ஏலுசக்தி மேலுமேலு (நீ)

ச: ஆசாபாச புத்தமைன
அடுஸுலோன படிபொர்லக
அஹங்கார ரஹிதமைன
அமல சித்த மொஸகி...
தேஜோன்மய சின்மயதீபமு வெலிகிஞ்சி
திவ்ய சுத்த ஜீவனம்பு
புவ்யபக்துலகு நலுக (நீ)
ஐங்கார ஶ்ருதி கூர்ச்சி
ஸப்தஸ்வரமு ஸஞ்சரிஞ்சி
ஸ்ரீங்கார வரவீணா
கான பூஜா நிய மமுதோ (நீ)

## 829. பரதேவி

ஸ்ரீராகமு] [ரூபகமு

ப: பரதேவி—ஸௌ பாக்யலக்ஷ்மீ மமுபாலிம்பு (பர)

அ: வர தாயகி ஜயநாயகி வாகீஸ்வரி த்ரிபுரஸுந்தரி (பர)

ச: அருண கிரண தேஜோன்மய
அனந்தகுண சின்மயி ஆத்ம சக்தி விலாஸினி
அந்த ராத்ம விகாஸினி
கருணாரஸ பரிபூரணிசரணுவேத வாணீ
கனிகரமுத கடாக்ஷிஞ்சு
கனக சுத்தானந்த வல்லி (பர)

## 830. ஹாரதி

ஆரபி] [ஆதி

ப: ஸத்ய ஸநாதன ஸாரதி—நீகு பக்த ப்ருந்தமுல ஹாரதி
ஞானவாரிதி கருணா நிதே—ஓம் (ஸ)



அ: மங்களசுப வரதாயீ—விஸ்வ மாயா நாயக மாயீ
தேஹாலயமுலோதேஹீ—ஜக
ஜீவ ரக்ஷகா பாஹி (ஸ)

ச: அபார கருணாஸாகரா—சுத்
தானந்தாத்ம மனோஹரா—ஓம் (ஸ)

## 831. குப்த சக்தி

[பூபாளம், பிலஹரி, மோஹனம், கல்யாணி, காபி, பேஹாக் முதலிய ராகங்களில் பாடுக] ஆதி தாளம்

குப்த மைன குஹலோ—ஒக குப்த மைன மெருபு
சத்து லேனி மாட—பர சாந்த மைன கீத...
கும்ப கம்பு காது—ஸ்வாஸ பந்தனம்பு காது—ஜல
ஸ்தம்ப னம்பு காது—தனலோ ஸ்தாப னம்பு மேலு
ஆத்ம வேணு கானம்—ஓங் கார சக்தி பானம்
ஸாத்வ சித்த வீணா—நாதம் சாந்தஞான போதம்
ஜிஹ்வ ரஸமுகாது—சிவ ஜீவ ரஸமி தம்மா...
பஹுதரமை வெலுகு—ஏக பரம வஸ்து வம்மா...

## 832. ஜெக விகாரமாய

ஜெக விகார மாய—ஜேத சிச்கி நொக்கு படக
சுக விலாச மிச்சி—காவு சுத்த சக்தி யம்மா
ரூப லாவண் யம்பு—அதி ருசிர மைன சோப...
ஜூபுகே நருண்டு—லோக ஜூட நாரணுண்டு
குட்டி வாடு கனடே—ஆ கோடி ஸூர்ய ஜோதி
கெட்டு வாடு கனுனே—ஒக கை கலிம்பு லோன...

## 833. மாடலேனி

மாட லேனி மாட—அதி மர்ம மைன ஆட
பாடலேனி நாதம்—ஹ்ருத் பத்மநாப கீதம்
முக்கு கொனலோ த்ருஷ்டி—மௌன முத்ர யந்து ஜூபு
சக்ர பேத சக்தி—சஹஸ் ரார யோக சித்தி...
பொத் தெரிகி கூயு—மஞ்சி புஞ்ச கோடி போலு
பக்து ஸெல்ல லேவ—மேலு பலுகு பாடு சக்தி...

## 834. அதுல சக்தி

அதுல சக்தி கனரே—அத் யாத்ம சக்தி கனரே...
சதுர சாட்சி கானு—கொன சாகு பாகு சக்தி...
சங்க ராத்ம சக்தி புத்த சக்தி கிறிஸ்து சக்தி
துங்க ஜோதி சக்தி—பிஸ்மில்லா சுபானு சக்தி இதிகோ
அஹூர மஜத சக்தி—பர மாத்ம சக்தி இதிகோ...
பஹூள மைன ஏக—சக்தி...ப்ராண ப்ரேம சக்தி...
ரம்ய மைன சக்தி—நித்ய ராஸ லீலா சக்தி—த்யான
கம்ய மைன சக்தி—ப்ரணவ கான யோக சக்தி.

## 835. சிந்த ஜேஸி

சிந்த ஜேஸி ஜேஸி—நிஸ் சிந்த ஜேரி யுண்டு...
அந்த ரங்க மௌனி—புவி அதினி ராஜ தானி...
லோக புத்தி விடிசி—மனஸா லோக ஜூசுசுண்டு
தேஹமாய விடுசு—அதி திவ்ய ஜோதி ஜூடு
எஞ்சு வானி எஞ்சு—லோக எருகுவானி னெருகு...
மஞ்கி சூசு வானி—சூடு மர்ம மந்த கலவு...

## 836. பலுகவே சிலக

[ஆனந்த பைரவி, கேதாரம், காம்போதி, தோடி, நாட்டக் குறிஞ்சி, பேஹாக், காபி முதலிய ராகங்களில் பாடுக] ஆதிதாளம்

பலுகவே பங்காரு சிலக—ஓம்
பரமாத்ம நாம மஹிம...
பலுமாரு பலுகவே சிலக—ஓம் சுத்த
பரமாத்ம சக்திகி ஜயமனி சிலக!... (பலுக)
இம்புகா பலுகவே சிலக—மா
ஹ்ருதய நிவாவாஸூநி சிலக...
அம்புஜ நாபுனி ஹரிவாஸூ தேவுனி
அந்த ராத்முனிசச்சி தானந்த குருவுனி... (பலுக)
கண்ட்லார ஜூடவே சிலக—ஈ
கருணா கடாக்ஷூணி சிலக...
நிண்டு முகமுலோ பண்டு வென்னல வெல
நிரதிச யானந்த புரித ப்ரபாவம்பு... (பலுக)



## 837. ஸூந்தர ரூபமு

ஸூந்தர ரூபமு ப்ரேம—வாரி
சுகுண ஹ்ருதயம்பு ப்ரேம
அந்தரங் காத்முடு பகிரங்க முகாமம்மு
ஞலிங்கனமு ஜேயு னதிசய ப்ரேமனு... (பலுக)
சஞ்சித ப்ராரப்த கர்ம—மந்த
ஜாரி தொலுகுனே சிலக
மஞ்சி சன்மார்க்கமு னுஞ்சி காபாடு
மஹாகுரு சைதன்ய ஸந்நிதி மஹிமலு... (பலுக)

## 838. ப்ரேமனு

ப்ரேமனு வித்தவே சிலக—அதி
பெரிகி சிகிரிஞ்சு சிலக
நாம பஜனனு பாரிஞ்சி பாரிஞ்சி
ஞானமு புஷ்பிஞ்சி மோனமு பண்டுனு... (பலுக)
மோன ஸமுத்ரமு லோன—மஞ்சி
முத்யால ரத்னல சிபிரம்...
ஆனந்த தரங்கமு லாடி ஜீவநாவ
அத்யாத்ம சாந்தமு னந்துனு ஜூடவே... (பலுக)
மதுவுலோ சீமலு தோமலு—போலு
மாயலோ முனுககா சிலக
சதுவுலோ சர்ச்சலோ சமயவாத லோலேது
சத்குரு சேவலோ சாயுஜ்ய முன்னதே... (பலுக)
அக்னி கன்னவென்ன போலு—சிலக
ஆடு தானி மோக பட்டி
மக்னமை மனுஜூலு துக்க படகுண்ட
மன்மத பாணமு லண்டக மால்புனு (பலுக)

## 839. அதிசய மகு

அதிசய மகுஜய சக்தி—சுத்
தானந்த மிச்சுனு சிலக
கதிலேனி வாரினி கருணதோ கடதேர
கதிஜூபி ரக்ஷிஞ்சி காபாடு குருசக்தி... (பலுக)

பலுமாட லெந்துகே சிலக—ஒக
பங்காரு ஜூபேமா பாக்யம்...
கலுகுனு இஹபர சஹஜவை போகம்பு
கங்கா ப்ரவாஹம்பு கருணு கடாக்ஷம்பு... (பலுக)

கொப்ப கொத்தியன ராது—மஞ்சி
குணமுதோ னுண்டவே சிலக...
இப்புவிஜீவுலந் தாஒக சின்மயம்
எக்கட வுண்டின னக்கட சிவமயம்... (பலுக)

மோஹமு தொலகிதே சிலக—சம
யோகமு சித்திஞ்சு சிலக
தாஹ சோஹ மைன தத்போத விவஹார
தேஹமுலோ சாக்ஷி தேஹினு ஜூடவே... (பலுக)

## 840. சாத்விக ஜீவனம்

சாத்விக ஜீவன மொகடே—லோக
சாந்த மொஸங்குனு சிலக...
ஆத்ம ஸந்தர்சன மார்க்கமு வெலுகுனு
அமரத்வ மொசகுனு விமரிச கானதி... (பலுக)

விடவக ம்ரொக்கவே சிலக—மஞ்சி
விவேகமு கலுகுனு சிலக
தடபட லாடக தமனிஞ்சி மனசுனு
சாதுக சேசி ப்ரமோதமு தோனுண்டு... (பலுக)

புத்துடு ஜெப்பின சாந்தம்—க்றிஸ்து
போதிஞ்சு த்யாக வைராக்யம்...
பக்த ரசூலு ஜராஸ்தரு க்ருஷ்ண
பகவந்த வாக்குலே பாவன மார்கமு... (பலுக)

குருதேவுனி ஸேவ யொகடே—சக்க
கொலுசிதே பலமிச்சு சிலக...
கரதலா கமலம்பு நரஜன்ம மீடேர
கனிகர கருணு கடாக்ஷம்பு ஜாலுனே... (பலுக)



## 841. நின்னு

நின்னு தெலுசுகோ-சிலக...நீ
நிஜமு...தெலுசுகோ, சிலக!...
கன்னுலோ கன்னு மனசுலோ மனசாக்ஷி
கனிகர சுத்தாத்ம ப்ரேம சைதன்யமே!... (பலுக)

எந்துண்டி வஸ்திவே சிலக—இக
னெந்துகு வஸ்திவே சிலக...
இந்துண்டி யந்துண்டி யெக்கட போதுவு
ஈஜன்ம சாபல்ய மேமிடி எஞ்சவே... (பலுக)

சங்கல்ப மானஸ வ்ருக்ஷ—மந்து
ஸம்ஸ்கார பலமுலு தினகு...
ஸங்கல்ப மேசுக துக்கம்; ஸம்ஸ்காரமே
ஜகமனி தெலுசுகோ சுகமு நீ யாத்மா... (பலுக)

மானவ லோகமு லோனு—வீனு
மாடலு பலிசிந்தி சிலக
மோன சிகரமந்து முதமுகா கூர்ச்சுண்டி
முத்து மஹாவாக்ய தத்வமு ரால்சவே...

## 842. தாரக வாக்யமு

தாரக வேதாந்த வாக்யம்—அதி
தத்வ மஸியனு வாக்யம்—
பூரண யோகவு தாரண வாக்யமு
பூலோக ஜீவோத் தாரண வாக்யமு... (பலுக)

ஜாதி மதமேல சிலக—பெக்கு
ஜகடமு லேலனே சிலக
நேதி யன்னமுதினி நேதி யனலேல
நிம்மதி கானுண்டி நீலோக ஜூடவே... (பலுக)

ஜகமந்தா ப்ரம்மமு சிலக—ஜீவ
சமூஹமே சிவமய மனுகோ...
இகபர சுகமந்தர மஹமஹ மனுவஸ்து
ஏக மனேகம் அவாங்மன கோசரம்... (பலுக)

கர்ம சரீரமுதிவ்வ—அந்தக்
கரண விஸ்வாஸமு நூனெ
மர்ம மெருகு மஹாத்யான மேவத்தி
மங்கள ஜோதிசுத் தாத்ம பராசக்தி... (பலுக)

ஆதி பரமாத்மசக்தி—அதி
அவதார மெந்திந்தி சிலக...
ஜோதி ப்ரும்மானந்த சுத்த பராசக்தி
சூக்ஷ்ம சைதன்ய சுகமே சுகமனி... (பலுக)

பலுகவே பங்காரு சிலக—சக்க
பலுகவே வேதாந்த சிலக!...
பலுகவே ஹ்ருதய பஞ்சரமுலோ ஓமனி
பலுகவே குலுகவே, பரமாத்ம சிலக!... (பலுக)

## 843. ஸார்வ பௌமிக் சாந்தி

பேஹாக்] [ரூபகம்

ஸார்வ பௌமிக்
சாந்திதேபகவன்—ஜய
ஸத்ய சுத்த ஸுந்தரமய
ஸுகுண ரஸநிதான்

ப்ரேமாம்ருத தாராப்ரஸாவோ—ஹே
ப்ரியதமமன மோஹனங்க
ரூப திகாவோ

பாபபுஞ்ஜதூர பகாவோ—ஸத்
புக்தி ரக்திபுக்தி ஆத்ம
சக்தி ஜகா வோ

அகில ஜீவ்மேம் சுபமங்கள
கிரணபைலாவோ—
அஞான சோக மோஹ ரஹித
ஜ்யோதி ஜலாவோ



## 844. ஆனந்த யோகி

சிந்து பைரவி] [ஆதி

ஆனந்த யோகி அகண்ட விவேகி
அலக நிரஞ்சன அகிலாத்மரஞ்சன (ஆ)
நவயுக ஜ்யோதி சிவராஜயோகி
நாதந்த வேதாந்த சித்தாந்ததேகி (ஆ)
ஈன ஜாதிமத பேத ரஹிதா
ஹ்ருதயாகர்ஷண முதமன மித்ரா
ஞானப்ரகாசா ஆத்ம விகாசா
நமஸ்தே நமஸ்தே ஜய ஸர்வேசா! (ஆ)

## 845. ப்ரேம ஸாதன்

பேஹாக்] [ஆதி

ப்ரேம ஸாதன்ஹி ஸாதன்—ஸர்வாத்ம
ப்ரேமஸாதன்ஹி ஸாதன்
சிவநாராயண குருசரணம் புஜ (ப்)
காம க்ரோத மதமச்சர நாசினி
கலிமலஹரணீ கைவல்யதாயினி
நாமரூபகுணபேதரஹித—ஸமயோக
ஞானப்ரகாசினி ஆனந்த போதினி (ப்)
நரசரீரதோ கர்ம விகார் ஹை
நான ஜீவன தர்ம விகார் ஹை
ஆத்மாதோ பரப்ரஹ்ம விகார் ஹை
அனந்த ப்ரேம்தோ
நிர் விகார் ஔர் ப்ராணதார் ஹை— (ப்)

## 846. லீன் ஹோனு

காபி] [ஆதி

லீன் ஹோனு லீன் ஹோனு சாஹியே
லீலாமயிகோ சிந்தன்மே
ஜோ ஜகதீஸ்வர்கீ ஜ்யோதி ஹமாரே
பீதர்ஹை ஔர் பாஹர்ஹை

ஜோ நரயந்த்ரகா யந்த்ரீஹோகயா
உன் கீ ஆனந்த சைதன்ய த்யான்மே (லீன்)
ஜோ ஈஸ்வர் யஹ் ஶரீரமேம்
ஸாஸ் லேதாஹை கருணுஸே
உன்கீ சுத்த சக்தி விகாஸ்மே (லீன்)

## 847. ஆவோ ஆவோ

காபி] [ஆதி

ஆவோ ஆவோ அமராத்மா—
பரமானந்தமேம் டூப் ஜாவோ !
ஹ்ருதய மந்திரமேம் ஆவோ—நித்ய
ப்ரணவ நாத்கோ ஸுனுவோ
முதமன மங்கள ஜனனீ—யஹ்
மூல மஹாமந்த்ரகாவோ
ஓம் ஜய ஓம்
ஓம் ஜ்யோதி ஓம்
ஓம் சிவ ஓம் ஓம் குஹ ஓம்
ஓம் ராம் ஓம் ச்யாம் ஓம் ப்ரேம் ஓம்
ஓம் சுத்த சக்தி ஜய ஸத்யஜ்யோதி ஓம் (ஆ)
மைத்ரீ கருணுமுதித உபேக்ஷா
ஸமதம தாரண சாந்தி திதீக்ஷா
ஜபதப த்யான யோகபலதாயீ
யஹீபரம கல்யாண்ஹை பாயீ (ஆ)

## 848. கேலா கேலா

மால்கோஸ்] [ஆதி

கேலா மன்கே கேலா ஹை
ஜாகோ துனியாவாலா
அகில ஜகது மாயா கேகேலா
ஆனு அகேலா ஜானு அகேலா
தினரவிசூரி ஜீவன ஹாரி
ஜனன மரணகே ஸூத்ரதாரி
அந்தகாரகுண த்வந்த துக்கமய
பஞ்ச பூத்கா பந்தே ஹானு



சஞ்சல வஞ்சித பிஞ்ஜர துனியா
தாமஸ ராஜஸ விக்ரிய பனியா
சோடோ சோடோ சலோ சலோரே
ஸாது சங்கமே மிலோ மிலோரே
போலோஸத்நாம் கரேரஸத்காம்
போலோ ஓம் சுத்தசக்தி சிவோஹம்!

## 849. ஜாகோ

ஜாகோ ஜாகோ உடோ உடோஜீ
ஜய பகவான் போலோ
உஷா கல்யாணீ ஆயீபாயீ
உதாரமன் கோலோ
த்ருகுணன்வித மாயா சக்கரமேம்
பஸ்கர் ஸோனுமத்
நீந்து குலாகர் சாந்த குணகர்
நாம பஜானுஸத்
யாது கரோஜீ அந்தரங்க சச்சி
தானந்தாத்மா தும்
அத்வை தாம்ருத ஸரஜிஸ விஹஸித
ஹம்ஸஸ் ஸோஹம் ப்ரம்
சோஹமோஹமய விஷய நித்ரமேம்
டூப் கயேஹோ பாய்
ஆனந்தாம்ருத ஸ்ரோத் மேம் தைர்கர்
ஆத்மராம் ஹோஜாய்.
துக்காத்மக விஷயாதி போகஸே
சுட்காராபானு—அதி
ஸூக்ஷ்ம ஹ்ருதயமேம் சுத்த சக்தி ஓம்
மஹாமந்த்ர பஜானு—

## 850. ஏகதாகீ பேரீ

ஏகதாகீ பேரீ பஜாதேஹுயே
ஆகே படேம்
ப்ரேம்ஸே ஸமஸ்த ஸம்ஸார் பர்
விஜய பாயேம்

சுத்த சக்திகீ ஸ்பூர்த்திஹி
விஜயப்ரத ஹை
ஜககீஸமஸ்த ஜீவராசி ஏகஹீஹை
ஸுஸ்வர யுக்த கீதகீபாந்தி
பஹ்னே வாலீ பயார்கீ பாந்தி
நதியோம்ஸே பூரித ஸமுத்ரகீ பாந்தி
ந்ருத்ய கரனேவாலேபக்தோங்கீபாந்தி
ஏக்தாமே லீன ஹோகர் ஆகே படேம்
நாராலகாயேம் ஸத்யமேவ ஜயதே
ஸத்யகீஹீ ஜீதஹோகீ

## 851. நி: ஸீம

நி: ஸீம வ்யோம சத்ரகீ சாயாமேம்
ஸூர்ய சந்த்ரகீ ப்ராக்ரிதிக் ஜ்யோதிமேம்
ஸமஸ்தஜீவகீ ப்ரியப்ராணதாயினீ வாயுமேம்
பக்ஷ பாதகீ சாயாதக் நஹீம்தேகீஹம்னே கஹீம்

உத்தர தக்ஷிண பூர்வ ஔர் பஶ்சிமஹை
வர்துலவ்யோமகீபரிதிகீ பாந்தி
மயூரகே பஹுவர்ண பங்கோங்கீ பாந்தி
மங்கல மயபேரீபஜாதேஹுயே ஆகேபடேம்
விஶால ஸம்ஸாரமேம் ஸுகமயஜீவனஸ்தாபித் கரேம்

## 852. மானவகீஹ்ருத்


மானவகீ ஹ்ருத்ஸ்திதமானவதாகோ பஹசானேம்
மன்கே விகாரோம்கோஉகாட் பேங்கேம்
ஸப்கே கல்யாண்கா காம் கரேம்
பயரஹித ஸ்வதந்த்ரதாகா யஶ் காயேம்

ஹிந்தூ முஸ்லிம் ஈஸாயீ பௌத்தஸப
ஹ்ருதய மேம் ஏகஹோ, ஜாதிமேம் ஏகஹோ
பந்தன–ரஹித அத்யாத்ம வீரோங்கீ
ஸேனாகீ பாந்தி ஶான்ஸே சல்கர்



ஸமயோககீ பேரீ பஜாதே ஆகே படேம்
ஜாதிரஹித ஜ்யோதிகீ சரண் லேகர் ஜியேம்
மர்த்ய லோகமேம் ஸ்வர்க ராஜகே
மானவ–ஸமாஜ்மேம் அமரஜீவன்கே
ப்ரத்யக்ஷ மேம் ஈஶ்வரீயப்ரேம்கே
தர்சன கர்கே கத்கத ஹ்ருதயஸே
ஆனந்தகீ பேரீபஜாதேஹுயே ஆகே படேம்
ப்ரஸாத் ஶாந்தி ஔர் சக்திமேம்
உன்னத ஹோகர் ஜியேம்

[ஒற்றுமை முரசொலித்து என்ற பாட்டு;
ஸாஹித்ய அகாடமி மொழி பெயர்ப்பு]



# 12. இன்பத் திருப்புகழ்

[இசைந்த ராகத்தில் தாளக்கட்டுடன் பாடுக]

இன்பத் திருப்புகழை யெல்லாரும் பாடுவோம்;
அன்புச் சிவநேச மாம்.

## 853. நடராஜ சிவம்

நடராஜ சிவம் நடராஜ பரம்
நடராஜ ஜயம்—எனஓது
சடமாய வினைத் தளை நீங்க வரும்
சகலா கமசா—தனமந்த்ரம்

இடர்செய் அசுரப் படைவீழ்ந் துபடச்
சுடரும் கனலைத்—தருமந்த்ரம்
உடனெப் பொழுதும் உயிருக் குயிராய்
உதவும் பதிசா—தனமந்த்ரம்

டடடா டுடுடு டகடுண் டுமெனத்
தகரா ககனத்—துடியாட
இடவான் வளிதீ இருநீர் உலகும்
இலகும் ப்ரணவப்—பரநாதம்

ஹடரா ஜதபோ தனரும் அறியார்
அறிவுக் கறிவாம்—அறிவாகித்
திடபக் திசெயச் சிவராஜ் யமருள்
திருநாம ஜபம்—நடராஜா

## 854. பரமாத்மா

பரந்த வானச் சுடர்வடி வாகிப்—பரமாகிப்
படர்ந்த ஞாலத் துயிர்வகை யாகி—இகமாகி
நிரந்தரம்ஒரு நிலையது வாகிப்—பலவாகி
நிலம் வளர்நிக மாகம வேதக்—கலையாகி



அரும்பு மலர்காய் கனியெனும் சரியா—திகளாகி
அறிந்த துரியா தீத சமாதியில்—அதுவாகி
விரும்பும் அன்பர் மனதள வாகி—விளையாடும்
வியன் பெறுந்தொழில் ஐந்துடை யாய்ஓம்—
பரமாத்மா.

## 855. பூத்த காலை

பூத்த காலைப் புன்னகை; புட்கள் பாடும் இன்னிசை
பொங்குசெங் கதிர்முகம்—எங்கு மின்பம்
மூத்த நீல வான்குடை முத் திரைக்கும் தென்கடல்
முந்துசெல்லும் காலஊர்—கோல மின்பம்

நீர்த்த மேக மின்னடம் நீள்வரை யருவி யாழ்
நீண்டலையும் காற்றிசை—நித்த மின்பம்
போர்த் தியற்கை யற்புதம் பொன்னழகு பொங்கிடும்
பூரணத்தைக் கூடலே—தூய இன்பாம்.

## 856. இன்பத் தமிழிசை

இன்பத் தமிழிசை குழலோசை
இடியொத் தடிமத் தளதாளம்
இருபக்கமுந் தொக்கு முழங்கிடக்—கடல்போலே

அன்புக் கரமலர் மலர்தூவி
அகநெக் குருகிய மிகுதொண்டர்
அமுதக் கிரணச்சுட ராடிட—அருளாலே

துன்பக் கவலைகள் கடிதோடத்
துரியத் திருவடி நிழல்காட்டித்
துணையைத்தரும் இணையற் றருவுரு—குருவாகி

அம்பொற் சபைவளர் அகஜோதி
அறிவுக் கதிர்விடு ஜகஜோதி
அகிலச்சுப மங்கள ஜோதியது—பரமாத்மா.

## 857. பொன்னும் மணியும்

பொன்னும் மணியும் அணியும்போல்
புலனும் மனமும் பொருளும்போல்
புனலுந் தரையும் பயிரும்போலது—சிவநேயம்
மின்னும் மினலும் முகிலும்போல்
மிளிர்வா னிலுடுக் கணமும்போல்
உன்னும் உயிரும் உடலும்போலது—ஒருசேர்க்கை
பன்னும் மொழியும் ஒலியும்போல்
பகலும் இரவும் பொழுதும்போல்
பசுவும் பதியின் கதிசேர் நிலையது—பரஞானம்
என்னுள் அதுவும் அதனுள்யான்
எனதென்பதுவும் அதனன்பே
இதமென் பதுவும் அதனின்பம்அது—பரமாத்மா.

## 858. எங்கும் சிவமயம்

எங்கும் சிவமயம் எங்கும் சிவனருள்
எங்கும் சிவபர—மானந்தம்
பொங்கும் கடலது பொன்செங் கதிரது
பொன்னின் சுடரது—பொதுவாகத்
தங்கும் நிலையது தகரக் குகையது
தந்தும் நிறைவது—கடல்போலே
இங்கின் னிசையது இதயத் துடியது
இறைமைப் பொருளது—பரமாத்மா.

## 859. மண்ணென்பது

மண்ணென்பது சிவ மந்திரமே
வானென்பது சிற் றம்பலமே
வாழ்வென்பது சிவ சாதனமே—இதை யறிவாயே
பெண்ணென்பது சிவ குண்டலியே
பேறென்பது பரி சுத்தநிலை
பேச்சென்பது பர நாதமதே—யிதை யறிவாயே



கண்ணென்பது சிவ ஞானஒளி
காதென்பது ஓங் காரஒலி
கலையென்பது மிடை பிங்கலையின்—சம நிலையாமே
எண்ணென்பது சிவ தத்துவமே
ஏழென்பது சிவ சக்திநிலை
எட்டென்பது மக துரியசிவம்—அது பரமாத்மா.

## 860. அகவடிவாகி

அகவடி வாகிச் சகவடி வாகி
அதுவிது வாகிப்—பொதுவாகி
இகபர மாகி இயலறி வாகி
எனதுயி ராகி—உயிர்ப்பாகி
மகிதல மாகி மனதள வாகி
மனமொழி யாகி—மதியாகி
சுககன மாகிச் சுடரொளி யாகிச்
சுயம்பர மாகும்—பரமாத்மா.

## 861. தகதகவென்ன

தகதக வென்னத் தணலும் கனலே
தடதட வென்னப் பொழியும் மழையே
சலசல வென்னத் தவழும் நதியே—சுதியேஓம்
அகர முதற்றுய்ப் புகலும் மொழியே
அகில கலைக்கும் உயிராம் அழகே
அருண நகைக்குள் வளரும் ஒளியே—வழியேஓம்
மகதுரி யத்திற் கனலும் சுகமே
மனது நிலைக்கப் புலரும் அருளே
வனமல ரைப்போல் வளரும் மணமே—குணமேஓம்
சகச சமாதிக் கிலகும் அறிவே
சடவுட லுக்குள் வளரும் உணர்வே
சகல வுயிர்க்குந் திகழும் சிவமே—பரமாத்மா.

## 862. கொஞ்சும் பண்

கொஞ்சும்பண் கிண்கிணி கஞ்சனம்
வெண்சங்கம் துந்துபி மத்தளம்
கும்கும்கும் கும்கு மெனப்புகழ்—பலபாடி
நெஞ்சங்கொண் டின்புறு கோயிலில்
என்செம்பொன் னம்பல வாணனை
அஞ்சுந்தந் தன்புசெ யும்சுக—மதுவாகி
நஞ்சுண்டண் டர்சுதை யுண்டிட
வன்றொண்டர் தொண்டுசெய் சிற்சுகன்
தஞ்சங்கொண் டென்னுள மாகிய—நடராஜன்
வஞ்சங்கொண் டின்ன லிழைத்திடும்
வன்புன்கண் முப்புர ரைப்பொடி
செஞ்செங்கண் பிஞ்ஞகன் சேவடி—பணிவேனே.

## 863. அருவெனலாமே

அருவென லாமே அரனென லாமே
அரியென லாமே—திருவாரும்
உருவென லாமே உலகென லாமே
உளமென லாமே - உபதேச
குருவென லாமே குணமென லாமே
குகனென லாமே—விளையாடும்
அருளென லாமே அறிவென லாமே
அழகென லாமே—பரமாத்மா.

## 864. அதுவிது

அதுவிது வெனுமல் அகமொ டலையாமல்
அரனை மறவாமல்—மனமேநீ
எதுபொரு ளெனுமல் இதயவெளி காணும்
இதுபொரு ளிதேயென்—றறிவாயே
பொதுநடன ஜோதி புனித சிவயோகி
புவன குருசாமி—ஸஹஸ்ரார
பதுமமலர் வாசன் பசுபதி சபேசன்
பகவதி சமேதன்—அருள்வானே.



## 865. இதய குகை

இதய குகைநடுவில் மனது லயமடைந்தே
இருந்த படியிருந்து—மகிழேனே
உதய நிலையறிந்து கவலை யறவொடுங்கி
ஒருமை யுறவுணரப்—பெறுவேனே
அதனி னுயரவரு துரிய மலைமுடியில்
அமிர்தசஞ் சீவிரசம்—பருகேனே
சுதியு மிசையுமென மவுன வெளிகலந்து
சுகமருளு மினிய—பரமாத்மா.

## 866. அஞ்ஞானத் திரை

அஞ்ஞா னத்திரை அழியா சைத்திரை
அகங்கா ரத்திரை—அவைநீங்கி
விஞ்ஞா னத்திரை மெய்யின் பத்திரை
வெண்ஞா னத்திரை—அதனுள்ளே
சுக்ஞா னத்தினில் சுடர்ஜோ திச்சிர
சுகஜோ திப்பரம்—பரஜோதி
எஞ்ஞா லத்திலு மெக்கா லத்திலும்
இலகிப் பரவுக—பரமாத்மா.

## 867. சாவே போ போ

சாவே போபோ பயமில்லை
சனியும் புதனும் சமமேதான்
சகமுந் தலையும் என்செய்யும்உயிர்—சிவமானல்
நாவால் நவில்வோம் சிவநாமம்
நனவால் அறிவோம் சிவபோகம்
நடையால் அறிவோம் சிவயோகம்ஏன்—பிறமோகம்?
பூவே காயே கனியேபோல்
பூந்தா தயரும் அளியேபோல்
புவியின் வாழ்வும் எனநன்றேநீ—யறிவாயே

நீவா மனமே மனையுள்ளே
நெஞ்சே யினிநீ அஞ்சாதே
நிலைபே றருள்வான் குருநாதன் அவன்—பரமாத்மா

## 868. அவமான காமமின்றி

அவமான காமமின்றி அகமாயச் சூதுமின்றி
அழிகாசின் மோக மின்றி—அலைவின்றிப்
புவியாசை நோயுமின்றிப் புகழாசைப் பேயுமின்றி
புனிதான்ம நேய மருள்—குருநாதா
தவயோக சாதனமும் பதிஞான போதனமும்
நவதிவ்ய ஜீவனமும்—அருள்வாயே
சிவராஜ்ய சித்திதரும் திருமந்த்ர சக்தியுடன்
செகமீது வாழ வருள்—நடராஜா
பவரோக வைத்தியனே பசுபாச மோசனனே
பணிந்துன்னை வேண்டு கிறேன்—பரமாத்மா.

## 869. தெய்வ நெறி

தெய்வநெறி யானதிருச் சைவநெறி வாழ்ந்திடவே
சிவசக்தி சாதனத்தை—யருள்வாயே
பொய்நெறிகள் போயொழியப் புலைகொலைசெய் தீதழியா
புவிகருணை யாட்சிபெற—வரந்தாராய்
நெய்தறியில் ஊடுருவ நெருங்குநெடும் பாவெனவே
நினைவுசெயல் உனதருளால்—விளையாடி
மெய்யறிவின் பதுகூடி மேலான நிலைநாடி
வெற்றிபெற வேயருளாய்—பரமாத்மா.

## 870. உண்டுறங்கி

உண்டு றங்கி ஊடிக் கூடி
ஊரி லோடிச் செல்வந் தேடிப்
பெண்டு மக்கள் சுற்றங் கொண்டே—யுறவாடி
கண்டு கேட்டுக் கற்ற தெல்லாம்
காம வாடை பட்டுக் கெட்டுக்
கண்ட கண்ட கட்டிற் சிக்கித்—தடுமாறி



மண்ட கந்தை ஆசை யேறி
மாய மான்வேட் டைகள் ஆடி
மானிட வாழ் வைச்சூ தாடித்—திரியாதே
பண்டு ஞான மோன சித்தர்
பாடிய சீர் பாதம் தேடிப்
பத்திசெய் யின்பத்தைத் தந்தாள்—பரமாத்மா.

## 871. கண்ணே

கண்ணே காணாய் கண்ணனைக்
காதே கேளாய் சிவகாதை
காலே செல்வாய் சிவன்கோயில்—மிக நலமாமே
பெண்ணே பொன்னே எனநெஞ்சே
பேயா யலையேல் உலகெல்லாம்
மண்ணே மண்ணே மனமேநீ—மதி மயங்காதே
பண்ணாய் கையே சிவசேவை
பகராய் நாவே சிவநாமம்
பணிவாய் சிரமே சிவபாதம்—அனு பவபோதம்
நண்ணாய் நல்லோர் திருக்கூட்டம்
நயவாய் சத்திக் கனலோட்டம்
எண்ணாய் எண்ணத் தகுமொன்றை—அது பரமாத்மா

## 872. புவனமளித்து

புவன மளித்துப் புலனுடல் போகம்
புசியென விட்டுப் பழவினை மாறப்
புனித முறுத்தும் தனியரு ளரசே—புகல்நீயே
பவபய மேகப் பரிவி னழைத்தே
பசுநிலை மாறப் பதிநிலை காட்டிப்
பரம சுகத்தைத் தருதொழி லாளா—எழிலாளா
அகர வுடுக்கால் இகபர மாக்கி
அபய கரத்தால் உலகை யளித்தே—
அனலி னழித்துப் பிறகு மறைத்தே—அருள்காட்டும்

சிவசிவ சுத்தச் சுடரொளி சரணம்
திருவடி காட்டும் கரமல ரபயம்
திசைவிரி வானத் திருவுரு வான—பரமாத்மா.

## 873. விண்ணய்

விண்ணய் வெளியாய் ஒளியாகி
விரிவா னுலகாய் உயிராகி
விதியாய் மதியாய்ப் பதியாகிமிக—விளையாடிப்
புண்ணர் பிறவித் துயர்போகப்
போகம் சிவபோ கமதாகப்
புதுவாழ் வுதரும் புனிதாஓம்சிவ—நடராஜா
எண்ணய் எண்ணுக் கினிதாகி
இதயத் தமுதக் கனியாகி
இரவும் பகலும் இலதாகிஅறி—வியல்பாகி
எண்ணெட் டுருவாய் அருவாகி
எங்கும் அருளாய்ப் பொருளாகி
இங்கென் னிதயப் பதியாளுய்ஓம்—பரமாத்மா.

## 874. புக்குத் தனுவில்

புக்குத் தனுவி லுயிர்க்குப் பரமசு
கத்தைத் தருதிரு—சிவகாந்தம்
சொற்குப் பொருளது புத்திக் கறிவது
சுத்தச் சுடரது—உருவாகித்
திக்குத் திசைசிலிர் தித்தித் தமிழிசை
சொக்கச் சிற்சபை—களிகூரத்
தக்குத் தகஜணு தத்தித் திமியென
நிர்த்தக் கலைவளர்—பரமாத்மா.

## 875. ஒரு பொருளாகி

ஒருபொரு ளாகிப் பலவாகி
உயிருயி ராக நடமாடும்
உலகுடை நாதன் அருளாலே—மனமேநீ



இருவினை பாசத் தளையின்றி
எனதுன தெனுமா ணவமின்றி
இகபர போகத் தினவின்றி—இயல்பாகி
அருவுரு வாகும் குருநாதன்
அவரவர் சமயப் பெருமானை
அவனவ ளதுவென் பதுவாகும்—பொதுவோனை
திருவரு ளதுதா ரகமாகக்
கருதிடி னுடனே சிவமாகும்
பதிநிலை யீவான் பதமீவான்ஓம்—பரமாத்மா

## 876. கல்லாலின் கீழ்

கல்லா லின்கீழ்க் குருவாகிக்
கல்விப் பயனின் உருவாகிக்
கண்ணுக் குள்ளே காண்பாளுய்க்—கதிரவனகிச்
சொல்லா நூலின் மொழியாகிச்
சொல்லுக் கினிய பொருளாகி
எல்லா மாயல் லதுமாகி–விண்ணியல்பாகி
செல்லா தெங்கும் செலவாகிச்
சின்முத் திரையே குறியாகித்
தில்லைப் பதியே பதியாகிப்–பசுபதியாகி
இல்லை இல்லை என்பார்க்கும்
இதயக் குகையில் உளதாகி
இங்கிங் கிங்கென் றறிவாகும்சுத்த–பரமாத்மா.

## 877. ஓம் சுத்த சக்தி

ஓம்சுத்த சக்தி ஓம்சத்ய ஜோதி
ஓம்சச்சி தானந்தம்–எனஓது
போமிடர் கவலை போம்பிணி துயரம்
பூரண சுகமாம்–புவிமீதே
ஆம்அற வினைகள் சாம்இருட் குலங்கள்
ஆனந்தம் பெறலாம்–அறிவோங்கி
நாம்சிவ மாவோம் வேம்அவ மெல்லாம்
நாடிய தருளும்–பரமாத்மா.

## 878. இயல்பாய்

இயல்பா யிதயத் ததுவாகி
எதுநா னதுநீ எனலாகி
இருநீ யதுவே சுகமாகும்-சுயராஜ்யம்
அயலே யிலதாம் அறிவாகி
அறிவை அறிவிப் பவனாகி
அமரும் அமுதப் பரமேசன்-ஜகதீசன்
மயல்வீ சுலகின் விவகாரம்
மனதைக் கவரா தெனதென்னும்
மமதை களைவார் குருவாக-வருவானே
வயலும் விதையும் விளைவும்போல்
மவுனத் தனிமை தனிலோங்கி
வளரும் தவசித் திகளெல்லாம்அருள்-பரமாத்மா

## 879. உள்ள மொன்றி

உள்ள மொன்றி வாருங்கள்
உண்டு வாழ்வில் இன்பமே
உண்மை யன்பு பேணுவீர்-உலகீரே
வெள்ள மாக ஞானத்தேன்
வீடு தோறும் ஓடுமே
விண்ணு மண்ணும் வீதியில்-விளையாடும்
பிள்ளை போல நெஞ்சமும்
பெற்ற தாயின் பிரியமும்
பெற்ற வர்க்கு நற்றுணை-அவனேதான்
துள்ளி வந் தணைந்திடும்
சுத்த சக்தி யானந்தம்
அள்ளி யள்ளி யீகுவான்-பரமாத்மா.

## 880. வந்தெத்தனை

வந்தெத்தனை மன்னர் புரந்தனர்
வாழ்ந்தெத்தனை மாந்தர் மடிந்தனர்
பிந்தெத்தனை பித்தர் பிதற்றினர்—சடவாதம்



கந்தத்தம தென்றுல கத்தினைச்
சண்டைப்படை கொண்டு செறுத்தவர்
முந்தெத்தனைவீரர் முடிந்தனர்—அடுபோரில்

விந்தைப்பொறி யேறி டடாம்என
விண்ணின்றணு குண்டெறி குண்டரின்
சிந்தைக்கொரு நிம்மதி யாவது—செயலாமோ ?

இந்தப்பழி பாதக மேலினி?
இறைவன்வழி இன்னுயிரே கிடும்
இன்பப்பணி செய்ய நலந்தரும்—பரமாத்மா.

## 881. அழகுத் திரு

அழகுத் திருவினில் அமிர்தச் சுவையினில்
அமரக் கவியினில்—உணர்வானன்
பழகத் துணைவனும் ஒழுகத் தருமமும்
படிகத் தெளிவுறு—மனமானன்
கழகப் புலவனும் கலையிற் பெரியனும்
கருணைக் கடலவன்—குழல்யாழின்
மழலைத் தமிழிசை எழிலைப் பொழிகதிர்
இதயத் தரசுசெய்—பரமாத்மா.

## 882. காற்றைக் கட்டி

காற்றைக் கட்டிக் குழியி லிருந்தென்
கனலைக் கட்டிப் பொன்னுடல் பெற்றென்
காலைக் கட்டிக் கடலி லிருந்தென்—அடயோகால்

ஆற்றைக் கட்டி அக்கரை சென்றென்
ஆளைக் கட்டி மாய மிழைத்தென்
ஆவிச் சித்துக ளெத்தனை செய்தென்—அரிதாமோ?

கூற்றைத் தப்பிக் கொண்டவ ருண்டோ?
கூட்டுக் கிளியை வென்றவ ருண்டோ?
குடிலில் என்றும் நின்றவ ருண்டோ—புவிமீதே

நேற்றைக் கதைகளை இன்று நவின்றென்?
சோற்றுச் சுவைகளை நாளை நினைந்தென்?
போற்றிச் சிவனருள் ஒன்று துணை அது—பரமாத்மா

## 883. எனதென தென்றே

எனதென தென்றே உளருதே
இறைவனை யென்றும் மறவாதே
கனதன மாயக் கண்ணியிலேமதி—மயங்காதே

சினவெறி காமத் தினவேறித்
தெறிபுய லென்னத் திரியாதே
தெளிவுறு சித்தத் தொளியே நல்—லறிவாமே

மனதுறு சாட்சியை மீருதே
மயலுறு வலையைக் கோராதே
மதுமத மாதைச் சேராதேமதி—மாருதே

அனவரதமும் ஓம் குருநாதன்
அருளுரு வத்துதி புரிவாயே
அபய மளித்துனைப் பாலிப்பான் அவன்—பரமாத்மா

## 884. கவிக்கின்பம்

கவிக்கின்பக் கலைக்கந்தக்
கலைக்கின்பக் கவின்செய்யும்
சொலைத்தந்து சொலுக்கின்பப்—பொருளானாய்

செவிக்கின்பத் திருச்சந்தப்
புகழ்ச்சொல்லத் தமிழ்த்தந்த
குகக்கந்தா திருச்செந்தில்—முருகோனே

புவித்தொந்த வினைப்பந்தம்
அனைத்துஞ்சிந் திடச்செய்த
சிவத்தந்தைத் தவத்தின்செந்—தணலானாய்

தவக்குன்றத் துதிக்குங்குன்
டலிக்கின்ப வுருத்தந்துன்
பணிக்கென்னைப் பணித்தருள்—பரமாத்மா.



## 885. மனப் பஞ்சம்

மனப்பஞ்சம் தினப்பஞ்சம்
மனைப்பஞ்சம் துணிப்பஞ்சம்
கலைப்பஞ்சம் தொழிற்பஞ்சம்—இயலாமே

வினைச்செல்வம் மனைச்செல்வம்
விசைச்செல்வம் இசைச்செல்வம்
விதிச்செல்வம் மதிச்செல்வந்—தருவாயே

எனக்கென்றும் உனக்கென்றும்
இதற்கென்றும் அதற்கென்றும்
இகற்கென்றும் புகற்கின்றி—இதமாக

நினக்கென்றன் அனைத்துந்தந்
திடப்பந்தந் தனைச்சிந்த
நினைத்தந்தா யெனைத்தந்த—பரமாத்மா.

## 886. வேதாந்தம்

வேதாந்தம் அது நானென்னும்
சித்தாந்தம் அது நீயென்னும்
நாதாந்தம்அது ஓம்என்னும்—பொருள் ஒன்றேகாண்

போதாந்தம் அது புகலென்னும்
புகலுகலாந்தம் அழகென்னும்
சுத்தாந்தம் பரஞ் சுடரென்னும்—மெய்யறிவின்பம்

கீதாந்தம் தாதா வென்னும்
கிளர்தாந் திரிகம் கனலென்னும்
மாதா போல்வந் தருளீயும்—ப்ரேமானந்தம்

யோகாந்தம் அது ஏகாந்தம்—சிவ
போகாந்தம் பரி பூர்ணாநந்தம்
மாகாந்தம் எனவே கவர்தூயது—பரமாத்மா.

## 887. சகசீவபரம்

சகசீவ பரஞ்சுட ரேகதி
சலியாத தியானமதேமதி
சகவாழ்வி னிசைக்கது வேசுதி—ஓங்காரம்

பகைஏதினி? ஏது படைத்திமிர்
படுபோர்க்கள மேதினி மேதினி
பலவாகிய ஒன்றை யுணர்ந்திடின்–பரிவாகி
இகமாகிய சக்தியின் சந்ததி
இவையேயவை யானவை யென்றிடில்
இகலேதுல கெங்கும் விளங்கிடின்–அருளாட்சி
அகமாயை யகன்றுயி ரன்பினில்
அறிவாகி யமைதி நிலாவுக
அகிலாண்ட சராசர நாயக–பரமாத்மா.

## 888. ஒன்றே வானும்

ஒன்றே வானும் ஒன்றே பூவும்
ஒன்றே உயிரும்– உலகெல்லாம்
ஒன்றே கதிரும் ஒன்றே கடலும்
ஒன்றே மழையும்—உணர்வாயே
ஒன்றே யான்மா ஒன்றே யுள்ளம்
ஒன்றே சுத்தச்—சிவசக்தி
ஒன்றே யுண்மை நன்றே கருதாய்
ஓம்என் றறிவாய்—பரமாத்மா.

## 889. ஐந்து பூதம்

ஐந்துபூதம் ஐந்தன் மாத்ரை
ஐம்பொறி புலன் களுடன்
கரணநான்கும் ஆன்ம தத்வம்—எனலாமே
உந்துகாலம் கலை நியதி
ஓதுவித்தை மாயை ராகம்
உணர்புருடன் வித்யா தத்வம்—இவைதாமே
முந்துதூய வித்தை சக்தி
ஈச்வரம் சதாக்ய சிவம்
இந்தஐந்தும் சுத்த தத்வம்—அறிவாயே
விந்துநாத பேத மான
விந்தைவிந்தை ஆருயிரின்
சிந்தைமேவும் சச்சித் தின்பம்—பரமாத்மா



## 890. நமச்சிவாய ஓம்

நமச்சிவாய ஓமென
நலஞ்செய் மந்தி ரத்தினை
சபஞ்செய் தூய நெஞ்சமே—அஞ்சலேனோ ?
எமன்செய்சூதும் என்செயும் ?
எதிர்பகையும் என்செயும் ?
இறைவனைச் சரண்புகுந்த—தொண்டர்தம்மை ?
சமத்வசுத்த நித்திய
சுதந்தர நிலையிலே
சதாநிலைத்த நெஞ்சமே—அஞ்சலேனோ ?
தமத்தையுண்ட சிற்கனல்
இயமலிங்க கங்கையாய்த்
தழைத்த தச்ச மில்லை ; உண்டு—பரமாத்மா.

## 891. இணைக்கு வேறு

இணைக்கு வேறென் றியம்ப வல்லார் எவரேயோ
இசைக்கு நீயே ஒருபொரு ளானாய்—அருளானாய்
உணர்ச்சி மேலிட் டுயிர்பொரு ளாவி உளமெல்லாம்
உருக்கி யன்பின் பெருக்கி னீந்தேன்—உடையானே
கணக்கி லாத வானுல கங்களைக் காப்பானே
கருத்தி லேகவி யாய்வளர் யோகக்—கனலோனே
இணக்கி யென்னை மணக்கு மன்புப் பெருமானே
எனக்கு நீயே இகபர மெல்லாம்—இறைவோனே.

## 892. வேலும் மயிலும்

வேலும் மயிலும் உடையானை
வீரத் தமிழர் படையானைக்
காலன் வெருவும் கனலானை நீ—நினைநெஞ்சே
பாலும் கனியும் இளநீரும்
பாகும் எனவே கவிநல்கும்
பரனை வரனை அரனை நீவழி—படுநெஞ்சே

காலும் கனலும் கடலும்செங்
கதிரும் மழையும் பயிரும்பொற்
கனியும் அருளும் பெருமானைக்கும்—பிடிநெஞ்சே

மேலும் நடுவும் இடைநிற்கும்
வெவ்வே றுயிரும் உடையானை
வீறும் திருவும் தருவானைச்சரண்—புகுநெஞ்சே.

## 893. குருவே சரணம்

குருவே சரணம் சரணம்
குகனே அகநா யகனே
குணமே பரிபூரணனேஓம்— ஜயபரஞ்ஜோதி

பொருளே பொருளின் பொருளே
புகையா ஒளியே வெளியே
புகலே கதியே புனிதாஓம்—ஜயசுத்தாத்மா

திருவா ருலகா லயமே
பலவாய் விளையா டுகிறாய்
செயலுக் கருள்வாய் செயமேஓம்—ஜகதாத்மா

அருவே அறிவுக் கறிவே
அகநா டகனே சுகனே
அருணச் சுடரே சரணம் ஓம்ஜய—பரமாத்மா

## 894. சோனை மாரி

சோனை மாரி போலவே
சொற் பெருக்கு வார்சிலர்
சொற்கள் மிஞ்சிக் கற்களாம்—சிலகாலே

யானை யேறி நானிலம்
ஆட்சி செய்வர் ஓர்சிலர்
ஆட்சி வீழ்ச்சி யாகிடும்—ஒருகாலே

கான மாரி யாடியே
காத லாடு வார்சிலர்
காத லூட லாகிவாடும்—சிலகாலே



ஈன வாழ்விங் கேனினி
என்று முள்ள உன்னருள்
ஞான வாரி வேண்டினேன்—பரமாத்மா.

## 895. கருக்கணக்கு

கருக்கணக் கொழியும்
கவலைகள் விலகும்
கருதிய தடையும்—பதிநேயம்

இருட்பிரி வினைகள்
இகல்செயும் இடர்கள்
இரிந்துமுன் னோடி—இலவாகும்

தெருட்பெரும் அறிவாய்த்
திருச்சபை நடஞ்செய்
சிவப்பரம் பொருளை—நினைநெஞ்சே

அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங் கருணை
எனப்பொலி வாகும்—பரமாத்மா.

## 896. சத்யசாந்தகன

சத்ய சாந்தகன ஜோதீ நமோ நம
ஸஹஜ நிஷ்டானு பூதா நமோ நம
ஸச்சி தானந்த ஸ்வரூபா நமோ நம—தவராஜா

நித்ய மங்களப்ர ஸன்ன நமோ நம
நிர்குண த்ருபுடி சூன்யா நமோ நம
நிர்வி கல்பசுக போகா நமோ நம—இதயேசா

சக்தி குண்டலி சமேதா நமோ நம
சகல சித்திபரி பூர்ண நமோ நம
சுத்த தத்வமஸி போதா நமோ நம—அருணேசா

பக்த சங்கபரி பாலா நமோ நம
பரம ஹம்ஸகுரு நாதா நமோ நம
பாஹி பாஹிபர மாத்மா நமோ நம—பகவானே.

## 897. பூரணானந்த வாரீ

பூர ணானந்த வாரீ சரண் சரண்
போத ஸத்குரு நாதா சரண் சரண்
பாரெ லாந்தொழும் பாதா சரண் சரண்—முனிராஜா

தீர ஞானப்ர காசா சரண் சரண்
திவ்ய ஜீவன நேசா சரண் சரண்
கோரு நல்வர மீவாய் சரண் சரண்—குருநாதா

துன்பம் போக்குந் துணைவா சரண் சரண்
சுத்த சக்தி யிறைவா சரண் சரண்
அன்பு செய்பவர்க் கன்பா சரண் சரண்—அருளாளா

இன்ப மேவடி வானாய் சரண் சரண்
எண்ணு நெஞ்சில் இனிப்பாய் சரண் சரண்
உன் பரம்என வாழும் வகையருள்—பரமாத்மா.

## 898. சுதி நிலை

சுதிநிலை யறியேன் சுரநிலை யறியேன்
லயநிலை யறியேன்—மனதாரத்
துதிநிலை யறியேன் தொடர்நிலை யறியேன்
சுடர்நிலை யறியேன்—தவயோகக்
கதியினை யறியேன் கரையறு முனது
கருணையை யறிவேன்—குருநாதா
பதிநிலை யினிலே மதிநிலை பெறவே
பணிநிலை யருளாய்—பரமாத்மா.

## 899. சாதிமா மதம்

சாதிமா மதந்தரும்
சண்டையின்றி என்றுமே
சத்தியத்தில் வாழவேண்டும்—உலகெல்லாம்

பேதவாத சூதுசெய்
பிரிவினைக ளின்றியே
பிரியமாக வாழவேண்டும்—உயிரெல்லாம்



சாதல் வேதலின்றியே
சாசுவத மாகிய
தத்துவத்தில் வாழவேண்டும்—சித்தமெல்லாம்

ஆதியந்த மற்றவா
ஆன்மநேய முற்றெலாம்
அன்புகொண்டு வாழவேண்டும்—பரமாத்மா,

## 900. ஆங்காரத் திமிர்

ஆங்காரத் திமிர் வாராமே
ஆசைப் புயலலை வீசாமே
அன்புற் றுயிருல கெங்கும் இன்புற—ஊதுசங்கே

நீங்காச் சித்துரு ஒன்றென்றே
நெஞ்சக் குகையினில் உண்டென்றே
நினைவார் அடைவார் என்றென் றேநீ—ஊதுசங்கே

தூங்காதே மனம் ஏங்காதே சுமை
தாங்காதே அருள் நீங்காதே
சுத்த சுதந்த்ர சமத்வ சன்மார்க்கத்தை—ஊதுசங்கே

ஓங்காரத் தொளி மயமாகி
உள்ளே தியானப் பொருளாகி
உலகாய் உயிராய் உலவும் அதுவென—ஊதுசங்கே

## 901. பெரிதினும் பெரிது

பெரிதினும் பெரிது சிறிதினும் சிறிது
பெயர்உரு பேதம்—இலதென்றும்
அரிதினும் அரிது புதிதினும் புதிது
அதுபழம் பொருளாம்—பரமாத்மா
பரிதியி னொளியும் பரவையின் விரிவும்
பசுநில வளமும்—அதனாலே
ஹரிஹர பிரமா திகளென நிலவும்
அருட்பெருஞ் ஜோதி—பரமாத்மா.

## 902. பொலிக புதுயுகம்

பொலிக பொலிக புதுயுகம்
புதிய வாழ்வு பொலிகவே
நலிகநலிக தீமை ; நன்மை—தழைத்தோங்க
விலக விலக திரைகளே
வெவ் விருள் விலகியே
விமலஜோதி சுத்தசக்தி—விளக்கோங்க
உலக மெல்லாம் சிற்சபை
உயிர்க ளெல்லாம் சின்மயம்
உடல்களெல்லாம் கோயிலே—உணர்வோமே
இலகு சச்சி தானந்தம்
இங்கு மங்கு மெங்குமே
பொங்கிப் பொங்கிப் பொலிகவே—பரமாத்மா.

## 903. உண்மைச் சுடர்

உண்மைச் சுடரது உள்ளத் தெளிவது
உண்டுண் டுண்டொரு—பரமாத்மா
வண்மைக் கடலது வானத் தமுதது
வண்டுண் டுண்டிசை மலர்த்தேன்போல்
கண்மைக் கழகது கனியிற் சுவையது
கலையிற் கவினது—கவிசொல்லும்
பண்ணுக் குயிரது—பன்மைக் கொருநிலை
பண்டின் றுண்டது—பரமாத்மா.

## 904. அண்டத்ததுவே

அண்டத் ததுவே பாரான்மா
அணுவும் மலையும்—அதனுக்கம்
பிண்டத் ததுவே சுத்தான்மா
பேச்சும் செயலும்—அதனுக்கம்
உண்டிச் சுவையும் மனமொத்த
பெண்டிற் சுகமும்—அதனுக்கம்
எண்டிக் கினிலும் அதனாட்சி
இதயப் பொருளப்—பரமாத்மா.



## 905. விழித்தெழு

விழித்தெழு மனமே விடிந்தது பொழுது
விலகிய திருளுறு—மருளாட்சி
அழைத்தது சாந்தம் அருணனைக் காணாய்
அழகினில் எழுந்ததிங்—கருளாட்சி
தழைத்தன சங்கம், சமரஸ வீணை
சத்தியக் குழலிசை—யதுகேளாய்
செழித்தது சுத்த சுதந்தர யோகம்
சீவனிற் பூத்தது—சிவசக்தி
விழித்தெழு மனமே வேதனை யினியேன்
விடிந்தது மங்கலத்—திருநாளே!

## 906. துள்ளித் துள்ளி

துள்ளித் துள்ளிப் பாயும் சோதி
வெள்ளந் தன்னில் ஆடியாடித்
தூயராவோம் வாரீர் ஆன்ம—நேயரே நீர்
மெள்ள மெள்ளப் பாச மூட்டும்
வெவ்வினை யழுக்கு நீங்க
விண்ணருளிற் கண்குளிர—மேவியாடீர்
அள்ளி யள்ளிக் கொள்ளு மட்டும்
அருவியாகப் பெருகி யோடும்
ஆனந்தந்தை யுண்ண வாரீர்—அன்பினாலே
தெள்ளத் தெள்ளத் தெளிந்த நெஞ்சில்
திவ்ய சுத்த சக்தி யுண்டு
வள்ளலுண்டு செல்வமுண்டு—பரமாத்மா.

## 907. நிரந்தர சுகம்

நிரந்தர சுகமே விரும்பிடின் இங்கே
நேர்மையாய் வாரீர்—உலகீரே
அறந்தனைப் புரிவீர் அன்பினை யணிவீர்
ஆசையை விடுவீர்—அழியாத

பரந்தனை யறிவீர் பவவினை யரிவீர்
பயந்தனை விடுவீர்—பரிவாலே
வரந்தரும் தூய வரதனிங் குள்ளான்
வழிதரும் உள்ளப்—பரமாத்மா!

## 908. குரங்குக் குணமே

குரங்குக் குணமே கொள்ளிக் கண்ணே
கோபப் புயலே—போபோபோ
சிரங்குக் கையும் சிக்குத் தலையும்
சேரும் சோம்பே—போபோபோ
கறங்குச் சுழலும் காமக் குறியும்
காட்டும் பேயே—போபோபோ
புறங்கூற் றும்பொய்க் கூற்றும் சொல்லும்
பொல்லாக் கூற்றே—போபோபோ
திறங்கொள் அறமுந் திருவுந் திகழும்
தெய்வப் பொலிவே—வாவாவா!

## 909. சுக்கிரன்

சுக்கிரன் சனிபுதன் குருவுடன் செவ்வாய்
சூரிய சந்திரர் நிலையாலே
சோதிடர் சொல்பய—னென்செய்யும்?

வக்கிர கிரகமென் வாழ்வை வருத்திட
வந்திடும் போதுன தருளாலே
மங்கல மேவரும்—இயல்பாலே

பக்தியும் தவமுடன் பாடலும் பணியும்
பரவிடும் அடியார் பழுதில்லார்
பயப்பட மாட்டார்—நமனுக்கும்

சக்தி துணையெனச் சபதப மாற்றிடும்
சாதுவைச் சனியும் ஏதுசெயும்?
தகவுறக் காப்பது—பரமாத்மா.



## 910. சூரியனுக்கு

சூரிய னுக்கிர வென்றாகும்
சோதிமுன் விட்டில்—என்றாகும்
சீரிய ரைச்சனி பகவானும்
செய்யது நல்கிக்—காப்பானே
கூரிய மதிமுன் விதியென்னும்
குளிர்மதி முன்மின்—மினியென்னும்
வீரிய பலமுடன் சிவயோக
வெற்றியு மருள்வான்—பரமாத்மா.

## 911 கருணைக் கடவுள்

கருணைக் கடவுளின் அடியேனைக்
கவியும் தவமும் உடையேனைக்
காப்பாற் றிடுசனி பகவானே—சுகமீந்தே

அருணக் கதிரென இருள்போக்கி
அசுரப் படைகளின் இடர்போக்கி
அசுபங்களை விலகப்புரிவாய் சனி—பகவானே

மரணப் பயமொழி சிவமந்த்ரம்
மனதிற் செபியென துயிர்வாழ்வு
வளர்சித்தி யடைந்திட நீதுணை—பகவானே

தருணத் தனிமழை யமுதேபோல்
பருவப் பயிர்தரு பலனேபோல்
தவசித்தி யடைந்திடச் செய்வோம்—பரமாத்மா.

## 912. மேலும் மேலும்

மேலும் மேலும் மேன்மேலும்
மெருகிட் டொளிரும் பொன்போல
வீறுற் றொளிருக தவயோகம்—விரைவாக
நாலும் நாலும் நாலாக
நானும் நீயும் ஒன்றாக
நமனும் இது கண்டுவணங்கிட—வரந்தாராய்

ஆலம் விதையின் மரமேபோல்
அணுவில் உலகம் முழுதாக்கி
ஆளும் பெருமான் சரணம்ஓம்அருட்–குருநாதா

பாலுந் தேனும் கற்கண்டும்
பாகும் போலக் கவிபாடிப்
பரவும் அடியேன் கதிநீயேஓம்–பரமாத்மா

## 913. ஆதி பசுபதி

ஆதி பசுபதி யாகி யழிவிலா
நீதி நெறிவளர்–பெருமாளே
ஆட லெனவுல கேழு மறிவிஞல்
ஆளும் அரசநின்–புகழ்போற்றி
பாத மலரிலெப் போதும் மனமுறை
யோக முனிவருள்–உறைவோனே
பாச வினையற மாசி லுனதிசை
பாட வரமருள்–பகவானே

வேத மறைகளும் ஓதி யுணர்கிலா
போத வடிவுடன்–பொலிவோனே
வீறு பொழியும்வி வேக முடனுனைத்
தேறும் வகையருள்–இறைவோனே
சாதி மதநிற பேத மறப்பரஞ்
சோதி மழைபொழி–முகில்வானே
தாக முடனுனைக் கூவு மடியவர்
ஆவி மகிழவா–பரமாத்மா.

## 914. அருளொளிர் அன்பு

அருளொளிர் அன்புக் குளத்தி லேஉயர்
பொருளுரை யன்பர்க் கணத்தி லேசிவ
திருவடி யின்பப் பணிக்கு ளேயெனை–நிதஞ்சேராய்

மருளளி துன்பப் பகைவ ரைஉன
திருவிழி சுட்டுப் பொசுக்க வேபர
குருவென நிற்கும் கருத்த னேஜய–பரமாத்மா.



## 915. பொருளுக்கொரு

பொருளுக் கொருபொருள் வடிவானீர்
புலனுக் கறிவரு விரிவானீர்
இருளுக் கிடர்தரு சுடரானீர்
இயல்பிற் றிரிபறு மியல்பானீர்
கருணைப் பொழிலிடை யடியேனேர்
களிசிற் சுகமென வளரேனே
அருளுக் கமுதளி கடலானீர்
அருணக் கிரிவளர் பரமாத்மா.

## 916. தினமெனது

தினமெனது மனமுருகிச் சிவபரம குருவெனவே
சித்தத்தில் வைத்துத் துதித்துத் துதித்துனது
திருவருளை வேண்டுமென
திருளகல இரவியென – வருவாயே

கனவினிலு நனவினிலு மெனதுமன முனதடியிற்
கட்டுண் டிருக்கவினை சுட்டுண் டறக்குமைய
கவலைதுயர் பிணிமடமை
வறுமையிடர் படவுனது–துணை தாராய்

சினமொழிக நசைபெருகு தினவொழிக வசையொழிக
சிக்கற்று மதிபொலிய, துக்கப்பந் தனைவிலக
சிறுமையறப் பகைவர்தரு
கொடுமையறக் கருணைபொழி–பகவானே

உனதுமன முனதுசெய லுனதுக்ருபை உனதுசரண்
ஓம்சுத்த சக்தியென நான் பக்தி செய்துநிதம்
உனதுலகி லுனதுபணி
புரியவுயிர் வாழவருள் — பரமாத்மா.

## 917. சுத்த சக்தி

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
ஸ்வதந்த்ரசக்தி ஓம்சிவம் ஸமத்வசக்தி ஓம்சிவம்
ஓம்சிவம் சிவோஹம் சிவமயம்

சத்யஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி ஸர்வசக்தி ஓம்சிவம் (ஓம்)

வேதசாஸ்த்ர ஸகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யகீர்த்தி விஜயசக்தி ஓம்சிவம் (ஓம்)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ரதந்த்ர வஸ்யசக்தி ஓம்சிவம் (ஓம்)

ஆயுரா ரோக்யதிவ்ய ஜீவசக்தி ஓம்சிவம்
ஆத்மசக்தி ஐக்யசக்தி அமரசக்தி ஓம்சிவம் (ஓம்)

சூர்யவீர்ய சுக்லஊர்த்வ ரேதசக்தி ஓம்சிவம்
சுந்தரமய மங்களகர சுகுணசக்தி ஓம்சிவம் (ஓம்)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோக சோகரகித தபோசக்தி ஓம்சிவம் (ஓம்)

பூதமாத்ர கரணேந்த்ரிய ப்ரக்ருதிசக்தி ஓம்சிவம்
புண்யகண்ய பூர்ணமகா புருஷசக்தி ஓம்சிவம் (ஓம்)

ஸ்தூலப்ராண மனவிக்ஞா னந்தசக்தி ஓம்சிவம்
சின்மயசிவ சன்மயபரஞ் ஜோதிசக்தி ஓம்சிவம் (ஓம்)

கர்மபக்தி ஞானராஜ யோகசித்தி ஓம்சிவம்
ஸஹஸ்ரார மஹாதுரிய ச்ருஷ்டிசக்தி ஓம்சிவம் (ஓம்)

ப்ரம்ம சக்தி விஷ்ணு சக்தி ருத்ரசக்தி ஓம் சிவம்
மஹேச சதா சிவகுஹபரஞ் சோதி சக்தி ஓம் சிவம்

துஷ்டஸத்ரு நாசசக்தி துர்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி ஆதிசக்தி ஓம்சிவம் (ஓம்)

கருணாரஸ பரிபூரண மாத்ருசக்தி ஓம்சிவம்
அருணகிரண அமலநிமல அம்ருதசக்தி ஓம்சிவம் (ஓம்)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நட ராஜசுத்த சக்திஓம் (ஓம்)



## 918. சுத்த சச்சிதானந்தம்

சுத்தசச்சி தானந்த
சுயம்ப்ரகாச ஜோதிஓம்
சத்திய சொரூபஓம்—குருநாதா

பக்திஞான கர்மயோக
சித்திதந்த முக்தனே
உத்தமரின் உள்ளமான—குருநாதா

பத்தனை பிள்ளையேனை
அத்தனாகி யாண்டனை
வித்தகா நின் சித்தமேயென்—செய்கையாமே

கைத்தலக் கனியெனக்
கருணையன்பு காட்டினை
மெய்த்தவக் கனலளித்த—பரமாத்மா.

## 919. இதய நடராஜன்

இதய நடராஜன் அகிலஜக தீசன்
எனதிதய வாசன்–வரநாதன்
அதிசய ப்ரபாவன் அதிம்ருது ஸ்பவாவன்
அபரிமித தீரன்- குருநாதன்
அதுலகன யோகி அமலசுக போகி
அனக குணசீல–னருளாளன்
புதுயுக விலாஸன் புவிபுகழு மீசன்
புனித தவராஜன்-பரமாத்மா.

## 920. வீடு தரும் ஆதி

வீடுதரும் ஆதியை ஆடுபரம் சோதியை
வீதியிலே தேடினேன்–சிலகாலம்
மீதுறுத்தி உச்சியில் சீறுகின்ற வாயுவை
மேனியைப்பொன் னாக்கினேன்–சிலகாலம்
ஏடுகற்ற வாதிலே மேடையின் புகழிலே
ஈடுபட் டுழன்றனன்–சிலகாலம்
ஈனமதி யெங்குமே போனபடி போயதை
என்முகம் திருப்பினேன்–சிலகாலம்

காடுகரை யெங்குமே நாடிசுத்தி செய்யவே
காயகற்பம் தேடினேன்-சிலகாலம்
கார்வரை முழையிலே கல்லுருவைப் போலவே
கால்மடித் தமர்ந்தனன்-சிலகாலம்
பாடிநிதம் ஆடவே நாடியுனைக் கூடவே
பாசவினை வாடவே-யருள்செய்தாய்
பாதநிழல் ஈந்தெனைக் கோதறுத்த சோதியே
பாவன ஹரிஹரா-பரமாத்மா.

## 921. வெல்க

வெல்க சிவம் வெல்க தவம்
வெல்க தவந்தரு-சிவஜோதி
செல்க துயர் சேர்க நலம்
தெய்வ வரந்தரு-சிவயோகம்
பல்க வளம் பாய்க சுகம்
பார்முழு தும்பர-மானந்தம்
மல்க நிறை மாய்க பகை
மங்கலம் பொங்குக-பரமாத்மா.

## 922. முருகவேளின்

முருகவேளின் அருளாலே
முனிவர் சொல்லின் கனிவாலே
முதிய ஞான ஒளியாலே-திருவோங்க

அருணவேத குகநாதம்
அகவுகின்ற குயிலே நின்
அமுதமான தமிழின்பம்-அனுபூதி

கருணைமேக மென நெஞ்சக்
கவலை தீரக் கர்ஜிக்கக்
களிமிகுந்த மயிலானேன்-புவிமீதே

ஒருமை கொண்டு மனமான்ம
உரிமை கொண்டு முன்னேற
உதய ஞாயிறெனவாராய்-பரமாத்மா



## 923. விண்ணின்

விண்ணின் சுடரும் வெளியின் வளியும்
வினையின் உடலும்-குகஜோதி
மண்ணின் வளனும் மலரின் மணமும்
மகிழும் பொழிலும்-குகஜோதி
உண்ணும் உணவும் உணரும் புலனும்
உருகும் உளமும்-குகஜோதி
எண்ணும் நினைவும் இயலும் தொழிலும்
எனையாண் டருளும்-குகஜோதி

## 924. பாடுங் குயிலும்

பாடுங்குயிலும் குகநாதம்
பயிலுங் கிளியும் குகநாதம்
ஆடும் மயிலும் அழகின் ஒயிலும்
அலைவாய் நடமும்-குகநாதம்
ஓடும் நதியும் உலவுங் காலும்
ஓதும் மறையும் குகநாதம்
காடும் மலையும் கவினும் வியனும்
கனவும் கவியும் குகநாதம்.

## 925. உகந்த சித்தசுத்தி

உகந்த சித்த சுத்தியிலே
ஒருமைகூடிப் பரஞானம்
உதயமாகி அதுவாகும்-உயிர்வாழ்வில்

அகந்தை வாடை வீசாதே
அசுர மாயம் பேசாதே
அமைதியின்ப மோங்குந்தண்-ணருளாலே

இகந்து மாயவிருளெல்லாம்
இடர் செய் பாசவினைமாறி
இதயமந்திரச் சோதி-புலனுமே

சகமுமின்றித் தனையின்றிச்
சலனமின்றிப் பரசாந்த
சகஜமான பூரணமே-பரமான்மா.

## 926. சிகரமான

சிகரமான சிவஜோதி
சித்விலாஸ சைதன்யம்
திகழுமின்பக் கனலான—முருகோனே
தகரவேத குகநாதம்
தகதகென்ன நடமாடித்
தணலுகின்ற பரநாத—வடிவோனே
உகரமான பாம்புவளர்
மகரமான மயில் மேலே
அகரமாக வீற்றிருக்கும்—அருளாளா
சகலவேத சாரமதாம்
ப்ரணவ மந்த்ரா ரூபமதாம்
பரம சுத்த சக்திமயப்—பரமாத்மா

## 927. அண்ட பகிரண்டம்

அண்டபகி ரண்டமும் அடங்குமுகம் ஒன்றே
அன்பமுதம் பொங்கிவரும் இன்பமுக மொன்றே
கண்டதுமென் கண்கருத்தை யுண்டமுகம் ஒன்றே
காணரிய காந்தமணி யானமுக மொன்றே
உண்டுபொரு ளென்றறிவை யூட்டுமுகம் ஒன்றே
உள்ளபொரு ளுள்ளபடி விள்ளுமுக மொன்றே
விண்டமல ரென்னநகை வீசுமுகம் ஒன்றே
வேதனைகள் மாறவருஞ் சோதிமுக மொன்றே
பண்டைவினை நீங்கவிழி பார்க்குமுகம் ஒன்றே
பந்தமற வந்தபர மாத்மமுக மொன்றே.

## 928. நீலமாமணி

நீல மாமணி வான்குடை நீழலில்
நிலவு கின்ற உலகியல் வாழ்க்கையை
நிமல னேநம தாடலுக் கீந்தனன்—அறிவோமே
கால மாமணித் தேரினி லேறியே
கண்கொ ளாப்பரு வங்களின் காட்சியைக்
கண்டு கண்டு கவலையில் லாதொரு—கலைசெய்வோம்



காலை யூற்றினி லாடி மகிழுவோம்
கனிக ளுண்டு கடும்பசி போக்குவோம்
கனக யாழினிற் காதலை மீட்டுவோம்—உயிரோனே
ஞால நாடக சாலை யிலேவளர்
நவர சங்களைக் கொண்டொரு சீரிய
ஞான காவிய மாக்கி மகிழுவோம்—பரமாத்மா.

## 929. அதுவோ

அதுவோ இதுவோ
என நீயலையேல்
அதுவும் இதுவும்—ஆன்மாவே
முதிதோ புதிதோ
என நீ முனையேல்
முதிதும் புதிதும்—உனதான்மா
பொதுவோ தனியோ
எனவும் புகலேல்
பொதுவுந் தனியும்—பொருளான்மா
எதுவும் எவையும்
எதிலும் அதுவே
இதயப் பொலிவாம்—பரமான்மா!

## 930. எந்தப் பெயர்

எந்தப் பெயர் வடிவினதாயினும்
எவ்வண்ணம தாயினு மிப்புவி
எங்காயினும் எப்பொழுதாயினும்—இயல்பாகி
அந்தப் பெயர் வடிவு நிறத்தினுக்
கப்பால்வழி தாப்பாதறிவருள்
அகரக்குகை தன்னில் வயங்கிடும்—அதுவான்மா
பந்தத் துயரில்லை குணந்தரு
தொந்தப் படரில்லை துனுக்கிலை
படிகத் தெளிவாகிய சுடரது—பொதுவாமே

சந்தைச் சமயப் பிரிவேனினி
சத்தச் சமரித்தனே யேனினி
சகசத்தனி யொன்றது நன்றது—பரமாத்மா

## 931. கடவுளுண்டு

கடவுளுண்ட தொன்று காண்
கருணையன் பதனியல்
கனிவு கொண்ட வுள்ளமே—உணர்வாகும்

இடமகன்ற வுலகெலாம்
இதனகன்ற கோயிலாம்
இதயமூல ஸ்தானமாம்—அறிவாயே

தடதடக்கு மழையிலே
சலசலக்கு நதியிலே
அலைமுழக்கு கடலிலே—அது பேசும்

படபடப் பிலாது நீ
பரிதிவானை யேபடி
பகருமுண்மை யாமது—பரமாத்மா

## 932. வாதுகளின்றி

வாதுகளின்றி மடவெறியின்றி
மதவெறியின்றி—மனதாரப்

சாது சந்யாசி சற்குருமாரைத்
தகுமுறை போற்றிப்—பணிசெய்வோம்

ஓது மறைக்குள் ஓமென ஒன்றும்
உயர் பொருளொன்றை—உளமாரச்

சோதி நடஞ்செய்—ஆதிமுதலைத்
துதி செய்வோம் அது—பரமாத்மா.



## 933. பிறந்ததும்

பிறந்தது முனது திருவருளாலே
வளர்ந்தது முனது கருணையினாலே
பெற்றது முனது முற்றருளின்பம்—முதல்வோனே

துறந்தது முனது திருவருளாணை
தூயவர் சங்கத் திருந்துனைப்பாடித்
துய்த்தது முனது மெய்த்தவயோகம்—குருநாதா

மறந்தது மென்னை உனைநினைந்திடவே
மணந்தது முனது மாசறு நேசம்
மகிழ்ந்தது முனது மலரடித்தொண்டில்-இறைவோனே

நிரந்தரமான வரந்தரு மெந்தாய்
நிலவுயர் ஞானக் கொழுந்தென நின்றே
சுரந்தனை பேரின்பச் சுவையமுதம்—பரமாத்மா.

## 934. ஊனார்

ஊனார் உயிரார் உளமார் மனமார்
உலகார் எனவே—நினைவாயே
நானார் அவனார் அவளார் அதுவார்
நானவான—ஒன்றோ
தேனார் சுவையார் தீம்பா லமுதார்
திகழும் மலரில்—மணமாரோ
கானற் றினிலோங் காரத் திசையார்
கருணைப் பெருமான்—பரமாத்மா,

## 935. படைத்திடும்

படைத்திடுந் தொழிலும்
காத்திடுந் தொழிலும்
பவவினை நீக்குந் தொழிலோடு

முடித்திடுந் தொழிலும்
மறைத்தருள் பணியும்
முறை முறைபுரியுந் தொழிலாளி...

கொடுத்ததை மடுப்பாய்
  எடுத்ததை மறப்பாய்
    குறைதவிர் அப்பன் குகராஜன்

அடைக்கலம் புகுவாய்
  அகநிறை வருளி
    அன்பரை யாள்வான்—பரமாத்மா

## 936. வேலைக்கடலை

வேலைக் கடலைப்—பொன்னுக்கி
    விழித்த வுலகை—வாழ்வாக்கி
காலைப் பரிதி—எழுந்திலகும்
    கலையைக்கற்றுத் தேர்வாயே
பாலைக் கொடுத்த—சிவசக்தி
    பரிவை எங்கும்—பாராயே
நாலைக் கொடுத்தே—நாமுய்ய
    நயந்தா னெங்கும்—பரமாத்மா.

## 937. சேர்த்தார்

சேர்த்தார் புதைத்தார்—மறந்தாரே
    செத்தார் எடுத்துச்—சென்ருரோ ?
ஆர்த்தார் அடங்கிப்—போனுரே
    ஆர்ப்பாட்டங்கள்—எங்கேயோ ?
பார்த்தார் பார்வை—யுள்ளாக்கிப்
    பார்க்கும் ஒன்றைப்—பரிவாலே
ஈர்த்துள் ளவரைக் கரை சேர்த்தான்
    இதயப்பெருமான்—பரமாத்மா !

## 938. அவரிவரென்றே

அவரிவ ரென்றே யலையாதே
    அவனியி னுறவை மதியாதே
எவருனக்காவார்—என்றென்றும்
    எதுவரு முனுடன்—இயம்பாயே



சிவமுரு காவென்—றிசைசும்மா
    திருவருளன்பே—துணைசெய்யும்
தவநெறி யிதுவே—தளராதே
    தருண தயாநிதி—பரமாத்மா.

## 939. வானஞ்சூழ்ந்த

வானஞ்சூழ்ந்த வுலகமே—எங்கள் வீடு
    மன்னுயிர்க்குலமெல்லாம்—எங்கள் சுற்றம்
கானினக் கனியெலாம்—எம்முணவாம்
    கறந்தபாலுங்—கன்னலும் பானமாமே
தேனின மலர்களைப்—போல வாழ்வு
    தீங்குயி லிசையிலே—எங்கள் பாட்டே
ஏனினிக் கவலையே—இயற்கை யுள்ளம்
    எங்குமொன் றறிகுவோம்—பரமாத்மா.

## 940. மங்கலம்

மங்கலங் குலுங்கி யெங்கும்
    அன்புமேவி யின்ப மாகி
      வான்வளம் பெருகி வாழ்க—பூமியெல்லாம்
சங்கடங்க ளின்றிச் சண்டை
    சச்சரவு மின்றி என்றும்
      சஞ்சலங்க ளின்றி வாழ்க—தேசமெல்லாம்
தங்கமான சுத்த யோக
    சங்கமாக ஞான தீரர்
      சாந்தமாக வாழ்க நீடு-தர்மமோங்க
சிங்கம்போல வீர நெஞ்சும்
    சித்தர்போலச் சக்தி வீறும்
      பொங்கிவாழ நன்கருள்செய்-பரமாத்மா.

# 13. வழிகாட்டிய நல்லார்

[கவியோகி, சுத்த சக்தி பரமாத்மனையே மஹா குருவாக உள்வணக்கம் செய்தார். அவனருளால் பல சாதுக்களை உள்ளும் புறமும் கண்டு ஆவிகலந்து தியானித்தார். உலக யோகிகள், சாது சந்யாசிகள், வீரர், புலவர் அனைவரையும் போற்ற வேண்டும். இவர்களெல்லாம் பரமாத்மாவின் அருள் பெற்றவர் என்றெண்ணி சுத்த பரமாத்மனையே தியானத்தால் ஒன்றி யின்புற வேண்டும் என்பது அவர் கொள்கை.]

## 941. சாது சங்கம்

கரகரப்ரியா] [ஆதி

ப: சாது சங்கத்தினை நாடு---சுத்த
சச்சிதானந்த பரமாத்மனைக் கூடு-- (சாது)

அ: வாது வழக்கிற்கு வாய்ப்பூட்டுப் போடு
வாசியடக்கிச் சிவநேசத்தைப் பாடு (சாது)

ச: ஏககுருவான இதயேசனை வணங்கு
எல்லா நல்லாருடனும் இனிதுநீ இணங்கு
சோக மோக குண தொந்த பந்தமில்லா
சுத்தானந்த சொரூப தீபமே வீடு-- (சாது)

## 942. எந்தாய் மீனுக்ஷி

கல்யாணி] [ஆதி

ப: எந்தாய் மீனுக்ஷியம்மை தந்த வரத்தினுலே
இந்தப்பிறவி உய்ததே--அருள் பெய்ததே (எ)

அ: சிந்தை குளிர நல்ல செந்தமிழ் பாடியே
வந்தனை செய்துசெய்தென் வாழ்வு சிறந்த தம்மா (எ)

ச: தெத்தெடுக்கப் புகுந்த செல்வன் குவித்த பொன்னைத்
தீண்டாதவ ளன்பையே வேண்டிப் புகலடைந்தேன்
அத்தருணமே சுத்த சக்திச் சுடராய் வந்தே
சுத்தானந்தமாக்கிய நித்திய கல்யாணியே (எ)



## 943. சதாசிவப்பிரம்மம்

காபி] [ஆதி

ப: சத்குரு சதாசிவ ப்ரம்மத்தைப் போலொரு
சாதுவுண்டோ வுலகில்--எங்கள் (சத்)

அ: நித்தியமௌனி--சத்திய ஞானி
சுத்தசுதந்தர சமரஸ ஜோதி (சத்)

ச: சகஜசமாதியிலே சஞ்சரித்த தீரன்
சகல வுயிர்களுக்கும் உபகாரன்
அகமுக குகையிலே சுகமுட னமர்ந்துசுத்
தானந்த மாகிய தானந்த மில்லாத (சத்)

## 944. பூரணனந்தப்ரம்மமே

ஸ்ரீ] [ரூபகம்

ப: பூரணனந்த ப்ரம்மமே--என்
புண்ணிய வசத்தினுலே
நண்ணிய திண்ணிய உருவே (பூர)

அ: ஆரணத்திலும் ஆகமத்திலும்
அமைந்த பொருளை அள்ளிக் கொடுத்த (பூர)

ச: இங்கேயிரு வென்றென் இதயத்தைத் தொட்டே
இராஜயோக சித்தி ஈந்தனை எட்டில்
தங்கத்திலே மணிவைத்த தென்றே சாது
சங்கத்திலே யிரென்றெங்கும் என்னை வழி
காட்டி நடத்தி சுத்தானந்தமாக்கினை
தீட்டியமாமணித் தீயெனுள் ஊக்கினை (பூர)

## 945. தாயுமானர்

காம்போதி] [ஆதி

ப: சேரவாரும் செகத்தீர் என்றழைத்தார்--ஞானத்
தேனருவியாய்ச் செழித்தார்--தாயுமானவர் (சேர)

அ: பாராலயத்திலே ஆருயிர் உய்திடப்
பராபரக் கண்ணியைப் பாடிய மகரிஷி (சேர)

ச: அதுவானல் அதுவாம் சுத்தானந்தக் களிப்பென
அன்புநிலைகாட்டி அறிவுநிலைக் கேற்றிப்
பொதுவான வேதாந்த சித்தாந்த சமரஸப்
பொருளினை மௌனமாய் அருளிய குருநாதன் (சேர)

## 946. ஞான சித்தர்

வசந்தா] [ரூபகம்

ப: நானுரென் றுணரவைத்த—ஞானசித்தனே (நா)

அ: தானுக வந்தன்புகாட்டித்
தடுத்தாண்ட தயாபரனே (நா)

ச: துன்பந்துன்பம் வாழ்வெனச் சாகத்
துணிந்த போதிலே
தூக்கி யருளை ஊக்கி யெனையா
ளாக்கிய தேவன்
அன்பினுலே இன்பத் தூயனுக வாழ்கிறேன்
அன்றும் இன்றும் என்றும் என்னுள்
நின்று நன்று நிலவுகின்ருன். (நா)

## 947. துக்காராம்

பேஹாக்] [ஆதி

ப: துக்காராம் ராமதாஸ்—மனப்
பக்குவ மிக்கவன் பாகவ தோத்தமன் (து)

அ: எக்காலமும் திவ்யநாம பஜனையிலே
எக்களித் தின்புறும் பக்தன் ஜீவன் முக்தன் (து)

ச: பாட்டுங் கதையுங் கலைஊட்டும் புலவர்களின்
கூட்டம் எனது பள்ளிக் கூடம் ஆகிவழி
காட்டும்; இசையறிவை நாட்டும் மனவிருளை
ஓட்டும் வைராக்கியத்தைத் தீட்டும்-திறமை கொண்ட ()

## 948. தியாகப்பிரமம்

சாவேரி] [சாபு

ப: ஸ்ரீராம சைதன்யமே—ஓம் நம
தியாகராஜ ப்ரம்மமே (ஸ்ரீ)



அ: பேரின்ப ரசந்தரும் தாரக கானத்தால்
பூரண வாழ்வையும் ஆராதனை செய்த (ஸ்ரீ)

ச: எல்லாம் ராமமயம் என்ருய்—உள்ளே
இருவிகாரங்களை வென்ருய்
பொல்லார் துயர்களைப் பொறுத்தாய்—மன்னர்
பொன்னையும் புகழையும் வெறுத்தாய்
சொல்லால் அற்புதங்களைச் செய்தாய்—நாம
சுகத்தில் மனேலயம் எய்தாய்
நல்லசங் கீதத்தின் உருவே—ஓம்நம!
நாதஸாம் ராஜ்யத்தின் குருவே—ஓம்நம
யோகராஜா—நாத-போகராஜா—பக்தி
ஏகராஜா—சர்வ த்யாகராஜா—ஜய— (ஸ்ரீ)

## 949. முத்துசுவாமி தீட்சிதர்

பைரவி] [ஆதி

ப: முத்துமுத் தாகவே முருகன் குகன் அருளால்
பக்தியிசை பொழிந்தார் முத்துசாமி தீட்சிதர் (மு)

அ: சித்த புருஷனை சிதம்பர யோகியால்
சக்தியின் வரம் பெற்ற சங்கீத சாகரர் (மு)

ச: சுத்த கீர்வாணமும்-ச்ருதிலய கமகமும்
சொருசாக மேவிய சுககன வாக்கேயர்
சத்திய கானத்தால் சகுணபூஜை செய்தே
சாக்ஷாத் காரமடைந்த தீக்ஷா குரு வாழ்க! (மு)

## 950. சாமா சாஸ்திரிகள்

ஆனந்தபைரவி] [ஆதி

ப: பங்காரு காமாக்ஷி பக்தன் மந்திர சித்தன்
பரதேவி மகிமையைப் பாடும்
வரப்ரஸாதி—சாமா சாஸ்திரி (பங்)

அ: சங்கீத வாணியருள் பொங்கும் வித்யாதரன்
தானதஹன ஜதிஸ்வர ஶ்ருதிலய நைபுண்யன் (பங்)

ச: செல்வரை நாடாத செல்வக் கலைமன்னன்
செருக்கரின் கருவத்தைச் செருக்கும் வித்பன்னன்
நல்லிசை வாணரெல்லாம் சொல்லும் புலவனும்
நாதசிகர ஜோதி பரத சாஸ்திர நிதி (பங்)

## 951. சிலேடைப்புலி பிச்சுவையர்

சங்கராபரணம்] [ஆதி

ப: அச்சமில்லாக் கவி பிச்சு வையர் தந்த
அருந்தமிழ் மறந்திடுமோ- (அ)

அ: பட்சமுடனே வெண்பா விருத்தங்களைப்பாட
பலேசபாஷென்றென்னைப் பயனுறத் தூண்டினன் (அ)

ச: கண்ணார யான் கண்ட காளமேகமவன்
கவிதைக் கலை வளரும் கற்பக மாயினன்
மண்ணுக்கும் விண்ணுக்கும் சிலேடை மயக்குவான்
மன்னன் பாஸ்கரசேதுபதி மகிழும் புலவன் (அ)

## 952. கவிகுஞ்ஜரி பாரதி

தோடி] [ஆதி

ப: காந்த புராணத்தைக் கவின்பெற யிசைத்தவன்
கவி குஞ்ஜரி பாரதி-வாழ்கவே (கா)

அ: தீந்தமி ழிசைத்திடத் தினந்தினந் தூண்டியென்
சிந்தை குளிர வந்த சந்தமிகு புலவன் (கா)

ச: அவமான சிந்தைகள் அற்றிடக் கற்றவன்
ஆண்டவ னருளுக்கே ஆளான நற்றவன்
சிவமுருகா ஷண்முகா செந்தில்வடி வேலா என்றே
ஜெபித்து நீறளித்தாலே ஜென்மப்பிணி விலகும் (கா)

## 953. ஆதி சங்கர பகவான்

காபி] [ஆதி

ப: ஆதிசங்கரரின் மேதைச் செயல்களெல்லாம்
அற்புதம் அற்புதமே—பகவான் (ஆ)

அ: வேத வேதாந்த ஜோதி விவேக சூடாமணி
கீதை யுபநிஷத் ப்ரம்ம சூத்திர நிதி (ஆ)



ச: அத்வைத ஒருமையால் அகிலாத்ம கோடியின்
ஐக்கியத்தை நாட்டினன்
ஆதித்யன் போலவே அறிவொளி வீசியே
அகவிருளை மாற்றினன்
தத்வமஸி மந்த்ர சித்தன் ஜீவன்முக்தன்
சச்சிதானந்தசிவ தட்சிணா மூர்த்தியே! (ஆ)

## 954. பகவான் நரசிம்ம பாரதிகள்

ஆனந்தபைரவி] [ஆதி

ப: பகவான் நரசிம்ம பாரதியை—ஞான
வாரிதியைப் பணிவோம்—ஜகத்குரு (பக)

அ: அகம் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரம்
அடைந்த வேதாந்த சித்தன்
அறிவுக் கடலவன் அன்பையென் சொல்லுவேன் (பக)

ச: நவநவமாகிய கவி பொழியுங் கொண்டல்
நாதவேதக் கலை நாலும் அறிந்தவன்
கவியோகி பாரதி என்றென்னை வாழ்த்திய
கருணைப் பெருமானவன்
அருணமுக விலாஸன் (பக)

## 955. அருளன்னை ஒளவையார்

குந்தலவராளி] [ஜம்பை

ஒளவை ஒளவை என்றதும் அமுதம் ஊறும் வாயிலே
செவ்வையான நல்லறச் செயல்களோங்கும் வாழ்விலே ()
பாலுந் தேனும் பாகும் போலப் பைந்தமிழ் செழித்திடும்
நாலும் நாலுங் கூடி யிந்த ஞால மொன்றி யின்புறும் (ஒள)
கணபதி யருளினாற் கலை வளர்த்த வித்தகி
குணநிதி கலாநிதி கொழுஞ் சுடர்த் தபோநிதி (ஒள)
கூழையுண்டு வாழிபாடிக் கோல்பிடித்து முன்சென்றே
ஏழை செல்வ ரென்பதின்றி எங்கு மன்பு மேவினாள் (ஒள)
சேர சோழ பாண்டியரும் சேவித் தேற்ற சித்தினி
பாரி வள்ளலும் வியந்த பண்பு கொண்ட வுத்தமி (ஒள)

பெரியரும் சிறியரும் பிரியமாக ஓதிடும்
அரியநல் வழியும் ஆத்திச் சூடியும் அருளினுள் (ஔ)
வள்ளுவர் முப்பாலுக்கும் வளஞ்செய் ஞானத் தேன்குறள்
உள்ளுறக் கலந்த தூய யோகத்தால் அளித்தனள் (ஔ)
ஒருமைகொண் டுலகெலாம் உவந்துவாழச் செய்திடும்
அருமருந் தளித்த சக்தி யன்னை வாழ்க வாழ்கவே!... ()

## 956. திருவள்ளுவர்

செஞ்சுருட்டி] [ஆதி

வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகை சொன்ன
வள்ளுவர் வாழியவே—எங்கள்
தெய்வப் புலவரின் திருக்குறள் வேதம்
திகழ்க வுலக மெல்லாம்
அன்பும் அறமும் அளாவிய பண்பினில்
ஆண் பெண்ணினம் வாழ்கவே
இன்பப் பொருளும் அருளும் விளங்கிட
எல்லாரும் வாழியவே!

## 957. காதொளிரும்

காம்போதி] [ஆதி

காதொளிருங் குண்டலமுங் கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியு மெல்லிடையில்
மேகலையுஞ் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாமரையும், பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி,
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்கு தமிழ் நீடு வாழ்க!
நால்வரிசை யமுதிருக்க, நம்மாழ்வார்
மொழியிருக்கச் சேக்கி ழாரின்
பால்வடிசெந் தமிழிருக்கக் கம்பச்சித்
திரமிருக்கப் பகலே போன்று



ஞாலத்தி லறம்விளக்கும் நாயனார்
குறளிருக்க, நமது நற்றாய்,
காலத்தை வென்றோங்குங் கற்பகம்போற்
கனிபெருகக் கண்டி லோமோ!

## 958. கம்பன்

கேதாரகௌளம்] [ஆதி

ப: மலையருவிபோலக் கலையருவி பொழிந்தான்
மாகவி மன்னன் கம்பனே—உலகுபோற்ற (மலை)

அ: சிலைபெறு வீரமும் சீதாராமன் கதையை
திகழும் அமரானந்தச் சித்திரமாகச் செய்தே (மலை)

ச: சொல்லமுதும் அழகு சொக்கும் பொருளமுதும்
சுவைக்க மனமினிக்கும் நவரசத் தேனமுதும்
நல்ல நடையுடனே வெல்லுந் தமிழிசையும்
நாட்டி எனக்கு வழிகாட்டிய குருமணி (மலை)

## 959. உளங்கவர் இளங்கோ

நவரோஜ்] [ஆதி

குமுதக் கடலின் கூத்தென்னக்
குழலும் யாழும் மத்தளமும்
திமுதமிட்டுத் திம்திமெனச்
சிலம்பு குலுங்க நடமாடும்
அமுதத் தமிழின் சுவையெல்லாம்
அள்ளித் தந்த கலையரசன்
எமது புகழின் இயல் வடிவாம்
இளங்கோ வாழ்க வாழியவே!

காதற்கினிய கோவலனும்
கற்புக்கினிய மாதவியும்
பாதக் கலையின் பண்பறிந்த
பழுதிலாத மாதவியும்
தீதற்றுலகில் அறம் வளர்த்த
சேர சோழ பாண்டியரும்
ஓதற் குரிய கலைவடிவில்
உலவுஞ் செல்வம் வாழியவே!

வீரப்புலவர் விருந்தாகும்
விரும்பும் அன்பர் மருந்தாகும்
பாரிற் சிறந்த கவியரசர்
பார்த்துவியக்கும் பாட்டாகும்
சூரத் தமிழர் புகழாகும்
சொல்லுக்குச்சொல் அமுதாகும்
சேரத் தமிழன் செய்துலவும்
சிலம்புச் செல்வம் வாழியவே!

## 960. மணிமேகலையமுதம்

[ரூபகம் சுரடி]

சொல்லின்பமும் பொருளின்பமும்
சொக்குந் தமிழமுதம்
வெல்லுங்கலை யின்பத்துடன்
விரவுங் கவி யின்பம்
புல்லுஞ்சுவை நல்கும் அருள்
பொலியும் உயிரமுதம்
மல்குங்கதை யமுதாவது
மணிமேகலை யமுதம்.

அணிமேலணி யணிசெய்தமிழ்
அன்னை தரும் அமுதம்
மணிமேகலை யமுதுண்டிட
வாரீர் வியனுலகீர்
பிணிமேவிய பிறவித்துயர்
பெயரும் அறிவுயரும்
பணிமேவிய உயிர்வாழ்வினிற்
பரவுந்திரு வருளே.

## 961. பூவகம் போற்றும் சீவகன் கதை

பூவகம் போற்றுகின்ற
புலவரின் சொல் விருந்து
பாவகப் பொரு ளுணர்ந்தோர்
பழமெனச் சுவை விருந்து



நாவகங் கொண்டோருக்கு
நாமகள் தரும் விருந்து
ஜீவகன் கவி விருந்தெம்,
ஜீவ நாடியின் மருந்தே!...

செந்தமிழ் அன்னை சூடும்
சீவிய மணியே! என்றும்
இந்தநல் உலகு போற்றும்
இலக்கிய மணியே! வாழ்வின்
பந்தனை அறுக்கும் ஞானப்
பரசுக மணியே! எங்கள்
சிந்தனைக் கமுதாம், தேவர்
திருத்திய மணியே போற்றி!

## 962. அருட்சோதி வள்ளலார்

தினைத்துணையும் பேதமின்றிச் சீவகா
ருண்யவழி சேர்ந்து வாழ
மனத்திருளை மாற்றியறி வானந்தத்
துரியமலை வளநாடேற்றி
நினைத்திடவு முடியாத நிலைக்குநம்மை
யழைத்தானை நேரிலோர்நாள்
அனைத்துலகும் அறிவானைத் தமிழரின்னும்
அறியானை அறிந்து வாழ்வாம்.

மருட்சமயவாதுகளும் மாமாலச்
சூதுகளும் மண்ணைக்கவ்வ
இருட்சாதி வேற்றுமைகள் இடர் செய்யும்
பிரிவினைகள் இரிந்து தேயப்
பொருட்செறிந்த மணிவாக்கும் பொதுநலஞ்செய்
புண்ணியமும் பூண்டெழுந்த
அருட்சோதி ராமலிங்கப் பெருமானின்
அடிமலர்கள் முடிமேல் வைப்பாம்.

## 963. சாமிநாதர்

காமாஸ்] [திஸ்ர ஏகம்

அகத்தியர் தருந் தமிழை அன்னைபோல் வளர்த்தனை
சகத்திலே உனைப்போலுண்டோ தாய்மொழிக் குழைத்தவர்
இகத்திலே தமிழ்த்தவம் இயற்றிச் சங்க நூல்களின்
சுகத்திலே குளித்தனை சுவாமிநாத வள்ளலே.

வாடுகின்ற சேய்க்குத்தாய் மருந்துதேடு மாறுபோல்,
வீடுவீடாய்ச் சென்று சென்று வேட்கைகொண்டு நீபழம்
ஏடுதேடித் தேடிநல் இலக்கியங்கள் ஈந்தனை
நீடு வாழி எந்தமிழ் நிலவவாழ் புலவனே.

புலமையைப் புகல்வனோ புலவருக் கிறைவனே
புலவருக்கு நீபுரிந்த புண்ணியம் புகழ்வனோ
இலகுமுன் ஒழுக்கமும் இறைவனன்புஞ் சொல்வனோ
அலகிலாப் புகழ்க்குரியை அப்பசாமி நாதனே.

## 964. வேதநாயகம் பிள்ளை

கல்யாணி] [ஆதி

ஆதிநாயகனைப் பாடும் அன்பு நாயகனே ஞானச்
சோதிநாயகனே செய்ய சொல்லி னயகனே ; நல்ல
நீதிநாயகனே சான்றோர் நேயனயகனே எங்கள்
வேதநாயகனே தெய்வ வித்தகப் புலவா போற்றி !

செந்தமிழ் வடித்துத் தந்த தேனிசை யமுதவாயா
சிந்தையி லின்பமூறத் தீந்தமி ழளித்த வள்ளால்
வந்ததை வழங்கி ஏழை மக்களின் வருத்தந் தீர்த்தாய்
எந்தையே யெளியேன் உன்னை என்சொல்லி ஏத்துகேனே,

## 965. ஆறுமுக நாவலர்

ஆரபி] [ஆதி

நாவலர் என்றபோதே நாவெனக்கினிக்கும் உள்ளம்
ஆவலாய்ப் பாலபாடம் அருளிய பொருளைக் காணும்
ஓவறத் தமிழினுக்கே. உயிர்த்துடிப் பானசைவக்
காவலன் கந்தவேளின் கனல்பெறு புலவன் வாழ்க !



கல்வியின் வரம்புகண்டோன் கடவுண்மாக் கலைகளெல்லாம்
வல்லவன் பிரமசாரி வானெனத் தமிழ் பொழிந்து
செல்வமுந் திருவும் பொங்கச் சிவநெறி செழிக்க வந்தான்
நல்லவர் போற்று நல்லூர் நாவலன் வாழ்க மாதோ !

## 966. வியாச பகவான்

அடாணா] [ஆதி

ப: வித்தகப் பெருமான் வியன்பெரு ஞானி
வேதவி யாசரே வணக்கம்—எம்
வித்தியா குருவே வணக்கம் (வித்)

அ: சத்திய வதிக்கும் பராசரருக்கும்
புத்திரனன புலவா வணக்கம்
புராண முனிவா வணக்கம்— (வித்)

ச: நான்மறை வகுத்தாய் பிரமசூத்திரம்
நான்கு பகுதியாய்த் தொகுத்தாய்
தேன்கவியான தெய்விக பாரதத்
திருக்கதையை மிக உருக்கமாய் அமைத்தாய்
மலை மலையாக உலகு வியக்கும்
கலைவளங் குவித்தாய் கல்விக் கடலே ! (வித்)

## 967. வால்மீகி முனிவர்

மணிரங்கு] [ஆதி

ப: வால் மீகி மாமுனியே—இந்த
வையம் வணங்குகின்ற வரகவியரசனே (வா)

அ: நால் வேத சாரத்தை ராமாயணமாக
நல்கினை ஒவ்வொரு நாளும் படித்துணர (வா)

ச: தெள்ளிய நடையழகும்—அதன்
தெய்வப் பொருளழகும்
உள்ளங் கவருகின்ற ஓம்ராம நாமம் போல்
ஓங்குக நின்புகழ் ஒளிருகவே—ஜய (வா)

## 968. காளிதாஸன் கவி விருந்து

ஹம்ஸாநந்தி] [ஆதி

ப: அருந்துவோம் கவிவிருந்தே—
அழகு சொட்டும் காளிதாசன்
அமுத கலச வாக்கினிலே (அரு)

அ: திருந்து புலவர் போற்றப் பொருந்தும் உவமையுடன்
தெய்வப் புலவன் வையமுய்யத்
தேடிவைத்த பாட்டினிலே (அரு)

ச: குக குமாரசம்பவம் ரகுவம்சம் மேகதூதம்
கொழுஞ்சுவைகள் பொங்கி எழுங்கலைச் சித்திரம்
சகமெல்லாம் கொண்டாடும் சகுந்தலை நாடகம்
தந்த சந்தக் குயில் சுத்தா
னந்தந் துள்ளிக் குதிக்க (அரு)

## 969. ஓமர், தாந்தே, ஷேக்ஸ்பியர்

தீரசங்கராபரணம்] [ஆதி

ப: ஓமர் தாந்தே ஷேக்ஸ்பியர் மில்தன்
ஒப்பில்லாத கவிகள் - நாம்
ஓதும் வரகவிகள்

அ: பூமியுள்ள மட்டும்-இவர் புகழ்
பொலியும் மேன்மேலும்— (ஓமர்)

ச: ஆழக் கருத்தும் நவரச நயமும்
அழகுக் கழகாம் அணியும்
வாழக நடையும் வன்னமொழியும்
மனதுக் கின்புறு மருந்தாம்
வாழ்வு மகிழ்வுறு விருந்தாம் (ஓமர்)

## 970. வரகவி தாகூர்

தேஷ்] [ஆதி

ப: வங்கக் கவியே தங்கக் கவியே
வாழ்க வரகவி தாகூரே (வ)

அ: பொங்கும் யாழும் குழலும் போலே
பொழியும் வாக்கின் அமுதே (வ)



ச: கொஞ்சுங் குயிலும் கிளியும் போலே
குதிக்கும் மயிலும் போலே
நெஞ்சை யள்ளும் செஞ்சொற் புலவா
நிலம்புகழ் கீதாஞ்ஜலியைத் தந்தாய்! (வ)

## 971. பாரதி நினைப்பு

புன்னுகவராளி] [ஜம்பை

உன்னை நினைக்கையிலே—எங்கள்
உள்ளத்திலே வீரவெள்ளம் பெருகுது
வன்னக் கவிக்குயிலே—ஹே பாரதி
வன்னக் கவிக்குயிலே—நல்ல
வான்மழைபோலவே தேன்கவி பொழிந்தாய்
அன்னை விடுதலைக்கே—பொங்கும்
ஆவேச பேரிகை ஆர்த்தனை வாழிய
தன்னை மறந்தோனே—பாரதத்
தாயான சக்தியைத் தஞ்சம் புகுந்தோனே!

வெற்றி முரசடிப்போம்—ஜய
வீர சுதந்தரத் தாயின் மணிக்கொடி
சுற்றி நடமிடுவோம்—வீர
துந்துமிமுழங்குவோம் வந்தே மாதரமென்றே
எற்றி யிடர்களெல்லாம்—இங்கே
எல்லாரும் ஓர்குலம் என்னும் சமயோகம்
பற்றிமுன்னேறிடுவோம்—இந்தப்
பாரினிலே பரிபூரணங் காணுவோம். (உன்)

## 972. வீரவிளக்கு ஐயர்

அடாணு

நீலக் குன்றென நிமிர்ந்த தோற்றம்
சீலத் தவமொளிர் சிங்கத் திருமுகம்
கம்பனும் குறளுங் கனிந்த பனிமொழி
ஓமரும் மில்தனும் காமுறுங் கனவு
வீரமுங் கலையும் விளைந்தநற் பண்பு
வந்தனைக் குரிய சிந்தனைச் சிற்பியே!

கானடா

வீரத் திருவுடையான்; வேதாந்த நாவுடையான்;
ஈரத் தமிழன் பினிதுடையான்—போரென்ருல்
விம்முகின்ற தோளுடையான் வேல்முருகன் பேருடையான்
நம்முடைய நண்பனென நாட்டு!

நீல மலைமேலே நிலவு நரசிங்கம்
போல வுலாவும் பொலிவுடையான்—காலமெலாம்
ஆர்த்த ஜயவீரன் அஞ்சா நிமிர்நடையான்
பார்த்தாலும் போமே பயம்.

கண்ணுன வள்ளுவனைக் கம்பக் கவியரசைப்
பண்ணுன ஆங்கிலத்திற் பாலித்தான்—விண்ணுரும்
வாவேசு ஐயரென வாய்மணக்கச் சொன்னுலும்
ஆவேசம் பொங்கும் அகம்.

தாய்நாடு வாழத் தமிழர் தழைத்தோங்க
ஓயாது பாடுபட்ட உத்தமனை—வாயாரப்
போற்றிப் புகழ்ந்து புதிய கலைவீரர்
ஆற்றுகவே அன்புப் பணி.

## 973. வீரச் சிதம்பரனுர்

தன்யாசி] [ஆதி

ப: சுதந்தர முரசம் சிதம்பரம் பிள்ளை
தூத்துக்குடி வீரன் (சுத)

அ: மதந்தரும் அன்னிய மாயத்தை ஓட்டிய
மந்திரவாதி மாபெருந் தியாகி (சுத)

ச: பாரதி பாட்டுக்குப் பல்லவி அவனே
பாலகங்காதரன் வலக்கரம் அவனே
கோரச் சிறையிற் செக்கிழுத்தவனே
கொடுமை தாங்கிக் கொடி பிடித்தானே
சுதேசிக் கப்பல் விட்டவன் அவனே
துணிந்த வீரம் அணிந்தவன் அவனே
சதா திருக்குறள் சாதனை புரிந்தான்
தமிழக மணிகளிலே மிகச் சிறந்தான். (சுத)



## 974. கனவு பலித்தது

பேஹாக்] [ஆதி

ப: கனவு பலித்ததம்மா—வீரக்
கவியோகிகள் கண்ட சமயோக சாதனைக் (க)

அ: அனவரதமும் உலகுய்திடத் தவம் செய்த
ஆனந்த முனிவரின் ஞானத்திலே யெழுந்த (க)

ச: இன்னலடிமை யிருளோடிப் போனதே
இந்தியா இந்தியர் சொந்தவீடானதே
அன்னையி னகத்திலே புன்னகை பூத்ததே
அலிக்கும் ஆண்மை வந்தே அறத்தினைக் காத்ததே ()

## 975. லோகமான்ய திலகர்

காமாஸ்] [ஆதி

ப: போற்றி போற்றி லோகமான்ய
திலக போற்றி போற்றியே (போ)

அ: ஆற்றலோங்க அச்சப்பேய் நடு நடுங்க வந்தனை (போ)

ச: அறத்துறைச் சுதந்தரம் பிறப்புரிமை என்றனை
அன்னை நாடு வாழவே அருந்தவம் புரிந்தனை
சிறைத்துயர் பொறுத்தனை தியாக வீரச் செம்மலே
செய்ய கீதையின் வழியில் வையமுய்யச் செய்தனை (போ)

## 976. அரவிந்த யோகி

கல்யாணி] [ஆதி

ப: வாழ்க ஸ்ரீ அரவிந்தர் வாழ்க சக்தி யன்னை
வாழ்கவே அருட்குலமே (வா)

அ: சூழ்க யோக விஞ்ஞானச் சுடரொளி யெங்குமே
சூரிய ஜோதியைப் போல்—என்றும் (வா)

ச: மானிடர் தெய்விக மாறுதலடையவே
மவுனத்தவம் புரிந்தான்
வானர சாட்சியை மண்மிசை வளர்க்கவே
வாணுளெல்லாம் முயன்ருன்
போனது கலியுகம் பூத்தது புதுயுகம்
புண்ணியம் பொலிந்ததுவே (வா)

## 977. அன்னை பெசண்டு

பிலகரி] [ஆதி

ப: அன்னை பெசண்டின் பொன்னுன உள்ளத்தின்
அன்பினை மறவோமே (அன்னை)

அ: மன்னுயிர்க் குலமிங்கே
மனமொன்றி இனமொன்றி
வாழப் பிரம்ம ஞானம் சூழ வழி வகுத்தாள் (அன்னை)

ச: அருட்பெரும் பிளாவட்ஸ்கி ஆசியில் வளர்ந்தாள்
அறிவுக் கடலாகி அருள் மழை பொழிந்தாள்
பொருட் சுவை யேறிய புத்தகங்களைக் கோத்தாள்
பொங்கும் வசந்தம்போல் எங்களைக் காத்தாள்
புத்தரின் சாந்தமும் கிறிஸ்துவின் தியாகமும்
சித்தரின் போகமும் கீதையின் யோகமும்
அத்யாத்ம ஞானமும் எத்திசையும் பரவ
அற்புதப் பணி செய்த ஆனந்த சக்தியாம் (அன்னை)

## 978. தயானந்த ஜோதி

பேஹாக்] [ஆதி

உத்தம ஆரிய பாரத ஜாதி
உய்ர்திட வந்த தயானந்த ஜோதி
சத்திய வேதத்தைச் சாற்றினன் யோகி—அதைச்
சாதனம் செய்வோம் சகோதர ராகி (உத்)

அந்தண உள்ளமும் ஆண்மையும் வீறும்,
ஆயிரந் தொழில்களும் ஆனந்தம் ஊறும்
பந்தமில்லாத சுதந்தரத் திருவும்
பழுதறு பொதுநலப் பண்புடன் பெருகி (உத்)

ஆரண ஞானமும் அருங்கலை யறிவும்
அரிய பிரமசர்ய விரத நிறைவும்,
பூரண சக்தியும் புலமையும் பொங்க,
புண்ணியத் தேவர்கள் பூமிசை இலங்க (உத்)



அன்னிய மாயத்தை அடியுடன் போக்கி,
அதர்மத்தை நீக்கிநல் அன்பினை ஊக்கி,
உன்னத உள்ளத்தில் ஒற்றுமை கூட்டி,
உலகினில் ஒருகுல உண்மையை நாட்டி (உத்)

பாரினில் வறுமையும் மடமையும் இன்றியே,
பயம்பிணி துயரின்றி நயமுடன் ஒன்றியே,
வீரர்களாய்ப் பர சூரர்களாய், ஆத்ம
தீரர்களாய் நரதேவர்களாய் எங்கள் (உத்)

## 979. பரமஹம்ஸ குருவே

ஆரபி] [ஆதி

ப: பரம ஹம்ஸகுருவே—மஹாகாளி
வரம்பெற்ற ஞான தருவே—ராமக்ருஷ்ண (பர)

அ: பிரம ஞானத்தைச் சிறு பிள்ளைகளும் அறியப்
பேசி விவேகவொளி வீசிய தேசிகனே (பர)

ச: ஆறுகள் சேரும் அலைகடலாம் கடவுள்
ஆதித்தியன்போல் அபேதமென் றுரைத்தாய்
வேறுபாடில்லாத வேத வேதாந்த சக்தி
விமரிசையாய் விளங்கும் அமரதீபமே ஜய ஜய (பர)

## 980. விவேகானந்தர்

தோடி] [ஆதி

ப: வேதாந்த கேசரியே விவேகானந்தா
வேதாந்த கேஸரியே... (வே)

அ: ஜோதிஸ்வரூபா குண தீதா ஞானப்ரபோதா

ச: வீரா—மாயையைவென்ற தீரா பயத்தைக்கொன்ற
சூரா—உலகிற்குப காரா—கருணைக் கடலே......
பாரத—தேசத்தின் சீரோங்கிடவே தெய்வத்
தாரக மாக வந்த பூரணனே வணக்கம் (வே)

அத்தா—பரமபரி சுத்தா—ஸ்ரீராமக்ருஷ்ண
பக்தா—நித்தியஜீவன் முக்தா—முனிவர்க்கரசே...
தத்வ மஸிஓம் என்னும் அத்வைத தீபமேற்றி
வைத்தாய்-உலகுபோற்றும்-சித்தர் சிங்கமே-ஜய (வே)

## 981. ஆப்ரஹாம்லிங்கன்

செஞ்சுருட்டி] [ஆதி

ப: மக்களே மக்களால் மக்களை ஆண்டிடும்
மர்மத்தைக் கண்டவனே—ஆப்ரஹாம்லிங்கன் (ம)

அ: தக்கமே தாவியான மிக்க எளியவனே
சாதிநிற சமய பேதமில்லாதவனே (ம)

ச: வெள்ளை கறுப்பென்ற கள்ளை யினியுண்டோ
வெற்றடிமை யுண்டோ? சுட்டுடல் மாயினும்
உள்ளத்தி லெங்குமே உயிர்த் துடிப்பாகிய
வள்ளலே வாழ்கநின் மனமெங்கும் சூழ்கவே (ம)

## 982. புக்கர் வாஷிங்டன்

மாண்டு] [ஜம்பை

மிக்க எளிய நீக்ரோ வாழ்க—புக்கர் வாஷிங்டன்
பக்குவமாய்ப் படித்தான் பணிநலமே அடுத்தான்
இன்னலெல்லாம் பொறுத்தான்
இடர்களெல்லாம் வென்றான்

தன்னவர் முன்னேற டஸ்கிகீயைக் கண்டான்
கைவிரல்கள் போலே கருத்திலொன்றி மக்கள்
கருணைகொண்டு வாழுங் கலைவளர்த்த தீரன் (மிக்)

## 983. எமர்ஸன், விட்மன், தோரோ

காபி] [ஆதி

எமர்ஸர் விட்மன் தோரோ—இவர்
இதயம் அறிந்தார் யாரோ—அறியின்
இனியும் வருவது போரோ—இவர்
எவ்வகையும் பெரியாரே—
அமெரிக்காவின் சுடர்கள்—பாரத
அறிவைப்பெற்ற முனிவர்
சமயோகத்தின் கதிர்கள்—ஆத்ம
சக்திப் புதல்வர் வாழ்க!



## 984. அப்துல் பஹாய்

பேஹாக்] [ஆதி

ப: அப்துல் பஹாய் வாழ்கவே—நீ
அன்பால் அனைவருக்கும் இன்பவழி வகுத்தாய் (அ)

அ: சித்தாந்த வேதாந்த சீலரும் வியந்திடும்
சிறந்த ஒருமை அறந்தனைப் பாலித்தாய் (அ)

ச: மல்லாடும் உலகினர் மனமயக்கந் தீரும்
மாசற்ற சுத்தான்ம நேசத்தை யூக்கினை
அல்லா ஒருவனே எல்லார் உளமுமவன்
ஆலயமென்றனை ஞாலத்தை வென்றனை (அ)

## 985. சாது சுந்தர சிங்

காபி] [ஜம்பை

ப: ஆதிகிறிஸ்து வுண்மைகண்ட சாது சுந்தரசிங்
ஆண்டவன் அருளைவேண்டி அன்பு செய்தனன் ()

அ: மேதினியில் விண்ணரசு மேவ நோற்றனன்
மின்னனைய பொன்னொளிரும் மேனி பெற்றனன் „

ச: காதலாகிக் கசிந்துருகுங் கடவுளார்வமும்
கனிவினால் உளத்தையள்ளுங் காந்தச் சொற்களும்
சாதல் வேதல் நோதலெல்லாம் சகிக்கு நெஞ்சமும்
சமரஸ வொருமையும் சகத்தின்முன் விளக்கினான்.

## 986. எத்தனையோ

கல்யாணி] [ஆதி

ப: எத்தனையோ மஹான்கள்—இறைவனருளாலே
இனியவழி காட்டினார் அனைவர்க்கும் வந்தனம் (எ)

அ: சுத்த சுதந்தர சித்த புருஷர்கள்
சோரும்போ தென்னான்ம வேரில்நீர் வார்த்தனர் (எ)

ச: எல்லாக் குருமார்க்கும் இதயங்கலந்த நன்றி
எவரெவரைப் பார்த்தாலும் இறைவன் வடிவமென்றே
நல்லாரைப் போற்றி நலஞ் செய்தவருள்ளே
வல்லான் சுத்தசக்தி நாதனை வணங்குவேன் (எ)

## 987. மஹாத்மா காந்தி

மோகனம்] [ஆதி

ப: உலகினும் பெரியவனே—மஹாத்மா காந்தி
உயிரினும் அரியவனே—மஹாத்மனே (உல)

அ: கலக மில்லாமல் ஒரு குலமெனப் புவி வாழக்
கருணைக் கடலாய் வந்தாய் மரண பயமும் வென்றாய் „

ச: கத்தியில் லாமல் ஆத்ம சக்திக் கனலினால்
களிநகைப் பொறுமையால் கடுந்தவ விரதத்தால்,
சத்தியாக் கிரக மெனும், சமயசஞ் ஜீவியால்,
தந்தனை சுதந்தரம் இந்தியத் தந்தையே (உல)

அறவலி கொண்டு நீ மறவலியை வென்றாய்;
அன்புப் பொதுநலத்தால் அமரனாய் நின்றாய்;
இறவும் உனக் குண்டோ இதயக் கோயிலில் வைத்தே
எல்லாரும் கும்பிடும் ஏழைப்பங் காளனே. (உல)

## 988. கஸ்தூரிபாய் காந்தி

பீம்ப்ளாஸ்] [தேசாதி

ப: பத்தினி கஸ்தூரி பாய்—எங்கள்
பாரத தேவியின் உத்தம புத்திரி (பத்)

அ: சத்யாக் கிரஹமெனும் சக்தி நமக்களித்த
சாந்த குரு மஹாத்மா காந்தியின் உயிரான (பத்)

ச: கீதையின் வடிவாக கிறிஸ்துவைப் போன்றருள்
கிரணம் பரவும் மஹான்
மேதினியில் அசுர வேகந்தணிய அன்பு
விரதம் கடைப்பிடித்தோன்
போதி சத்துவனை புத்தனைப் போன்றவன்,
பூமியி லேபெரியோன்
பொறுமை மிகு காந்தியின் அருமைத் துணைவியாகப்
பெருமை சிறந்த நல்ல உரிமைப் பணிபுரிந்த (பத்)



## 989. சபாஷ் சுபாஷ்

தீரசங்கராபரணம்] [ஜம்பை

சபாஷ் என உலகெலாம் ஜனம் வியந்து போற்றிடும்
சுபாஷ் சந்திர போஸினைத் துதிக்க வீரந் துள்ளுமே!
ஜெயஹிந்தென்னும் மந்திரத்தைச்
சிங்கம்போலக் கர்ஜித்தே
பயந்தனை ஒழித்தனன்
படைநடத்திப் போர்செய்தான் (ச)

ஒன்றுபட்ட உள்ளமும் உறுதியான செய்கையும்
வென்றி மிக்க வீரமும் விடுதலை யளித்தவே (ச)

ஆத்திரப் புயல்களால் அசைந் தகங் குலைந்திடான்
தீத்திரளைப் போலவே திகழும் சக்தி வீரனே (ச)
அல்லல் வந்த போதிலும் அரும்பசி வருத்தினும்
புல்லைத் தின்றும் போர் செயும் புலிகளைப் படைத்தவன்.

## 990. சிவானந்தர்

காம்போதி] [ஜம்பை

வாழ்க சிவானந்த வள்ளல் வரமுனி
வாழிய வாழியவே!
சூழ்க நல்யோக வேதாந்தச் சுடரொளி
தொல்புவி எங்கெங்குமே
மோன மலைவளர் முத்திரை கங்கையின்
முழக்கத்தைக் கேளுமினே!
ஞான குருபர னமவன் ஆனந்த
நர்த்தனங் காணுமினே!
இருந்த இடத்தில் இருந்து வேதாகம
விருந்தை இனி தளித்தான்.
அருந்தி யுலகெல்லாம் அன்புடன் வந்தவன்
அடிதொழு தேத்திடுமே!
மின்னென வேகம் விளங்கும் பேனாவினால்
மேதினியைப் புரக்கும்
மன்னவன் எங்கள் மஹாகுரு பாதம்
வணங்கித் துதித்திடுவோம்

வெள்ளங் கரந்தமின் சாரத்தைப்போலிந்த
மேனியிலே துடிக்கும்,
உள்ளங் கடந்த கடவுளைக் கூடி
உலகினில் இன்புறுவோம்.

## 991. ஸ்ரீ ராமதாஸ்

பாகேஸ்ரீ] [ஆதி

ப: ஜயஜய ஸத்குரு ராம்தாஸ்—ஓம்
ஸ்ரீராம் ஜயராம் எனவுயிர் யோகி (ஜய)
அ: பயமிரு ளச்சம் பந்தனை சிந்திப்
பக்தர்க ளுய்யச் சக்தியளித்தான் (ஜய)
ச: வீரசிவாஜிக்கு வெற்றியளித்தான்
வேததர்மம் வளர் போதமளித்தான்
பாரதநாட்டுக்குப் பாவன மளித்தான்
பகவான் பரம சுகவான் ஹனுமான் (ஜய)

## 992. சாயிராம்

பேஹாக்] [ஆதி

தாயுமானவன் சத்தியத் தந்தையு மானான்
சேயுமாயினன் செவ்விய தோழனுமானான்
ஆயுமன்பருக் கனைத்துமாம் அமரசுத் தான்மா
சாயிராம் எனும் சத்குரு நாதனைப் பணிவாம்.

யானுளேன் பயமேதென அபயமீந் திடுவான்
ஊனுயிர்களின் இடர்களை உடனுடன் களைவான்
தேனும் பாலும்போ லினியவன் சீரடிப் பெருமான்
மோன மாயினேன் அவனரு ளுண்டநாள் முதலே.

## 993. உபாசனி பாபா

உலகத் துன்பம் பொறுத்தான்
உண்மைப் பெண்மைக் குழைத்தான்
கலகப் பேய்களை எதிர்த்தான்
கன்னியர் நிலையம் அமைத்தான்



சக்திக்கதிர் வீசொளியே
சகோரி உபாசனி பாபா
சித்தன் ஜீவன் முக்தன்—வாழ்க
சீரிய அவதூதன்.

## 994. மேஹர் பாபா

காபி] [ஆதி

வானென மௌனி—வாழியவே
வரமிகு மேஹர் பாபா
ஞானப்ர காசன் ஞாலத்துநேசன்
நானிறை யென்பான் வாழியவே!
உலகெலாம் போற்றும் உத்தமச் சித்தன்
நலமெலாந் திரண்ட நற்குணச் செம்மல்.
உருவுகொண் டொளிரும் உபநிஷத்தனையான்
குருவென நல்லோர் கும்பிடுந் தூயன்
மலையினுமிக்க மாண்புடையோகி
அலைகடல்போலே அறிவு மிகுந்தோன் (வா)

* * *

எளிமையான தோற்றமும்
இயற்கையான மோனமும்
தெளிவுகொண்ட சிந்தையும்
தீயைப்போன்ற தூய்மையும்
ஒளிமிகுந்த கண்களும்
உள்ளங் கவரும் பார்வையும்
களிமிகுந்த முறுவலும்
கவர்ந்த நெஞ்சு மீளுமோ. (வா)

* * *

அதுவேதானும் அறிவு துலங்கப்
பொதுநோக்குடனே பொலியும் புனிதன்
மேஹர்பாபா வாழ்கவே! (வா)

## 995. தெய்வசிகாமணியே

தெய்வ சிகாமணியே தீந்தமிழ்க் கற்பகமே
செய்யபழ நூல்சொன்ன தேன்வாயா—வையத்தில்
ஏடுபல நானும் எழுதிக் குவித்தது நீ
பாடுபா டென்ற பரிசு.

கன்னித் தமிழமுதைக் கம்பர் சமாதியிலே
உன்னிப் புடனளித்த வுத்தமனே—மின்னுடலம்
வெட்டுண் டிறந்தாயோ வித்தகனே என்னுளுனை
இட்டுண்டு வாழ்ந்தாய் இனிது.

## 996. சேஷாத்திரி சித்தன்

சிந்துபைரவி] [ஆதி

திருவண்ணாமலைச் சித்தன்—அவன்
தேகத்தை மறந்த பித்தன்
அரிய பெரிய தவயோகி—பர
மானந்த சுத்த விவேகி.

உருவைக்கண்டால் மண்ணே—நாம்
உள்ளே கண்டால் விண்ணே
குரு சேஷாத்திரிநாதன் —மனக்
குறைதீர் ஞானவிநோதன்

மேலே மேலே போபோ—நீ
மேன்மை பெறுவாய் என்றே
நாலே வார்த்தை சொன்னான்—அதன்
நன்மை கண்டேன் பின்னால்.

இங்கே குகை யிரு என்பான்
இதயந் தன்னைத் தொடுவான்
பொங்கும் வேதக் கவிகள்—அவன்
பொழிவான் அழியாப் புகழோன்.



## 997. பகவான் ரமணர்

காபி] [ஆதி


ப: பகவான் ரமணரைப் பார்த்தாலே போதுமே
பரம ஞானம் வருமே (பக)
அ: சுகமான வுள்ளக் குகையிலிருந்தவன்
சகவிசித்திரமான சலனப்படம் காண்பான் (பக)
ச: நானார் என்கிற ஆத்மவிசாரத்தால்
நாலுவேத சாரம் அறிந்தான்
தானேதானாகி தன்னில் அனைத்துமாய்,
தழைத்தான் அழைத்தான் பழுத்த விவேகி (பக)
எதுவே உள்ளத்திற் பொதுநடம் புரிவதோ
எதுவே உலகுயிர் என்ன விரிந்ததோ
அதுவே மகரிஷி அதுவே மகாத்துமா
அற்புதம் அதுவே அமராத்மா ஓம் (பக)

## 998. மட்டையுரித்தே

நவரோஜ்] [ஆதி

மட்டையுரித்தே நாரை யெடுத்தே மருவோட்டைப்
பட்டென்றுடைத்துப் பருப்புடனிளனீர் பெறுமாபோல்
சட்டை வெளுத்துச் சக்தியெழுப்பித் தனலாக்கித்
துட்ட மனத்தின் துள்ளலொடுக்கித் துரியான்ம

நிட்டையிருத்திப் பற்றறு பற்றிற் பதிவாகி
சுட்ட பசும்பொன் சோதி துலக்கிச் சுடர் சோம
வட்ட நறுந்தேன்வாரியருந்தும் வரமீந்தே
எட்டு நிலைக்கும் இன்ப மளித்தான்—பரமாத்மா!



# 14. இராகமாலிகை

## 999. பொன்னிளங்காலை

பொன்னிளங் காலையின் புன்னகைச் சொக்கிலே
பூம்பருவ வட்டத்திலே
பூரித்த நறுமணக் காற்றிலே யாற்றிலே
பொங்கு மோங்காரத்திலே

இன்னமுது சொட்டும் இயற்கை வனத்திலே
இனமலர் மணத்திருவிலே
இளவேனி லழகிலே பழகான்ம நேயம்
இலக்கியச் சுவையானதே

கன்னலுந் தேன்பாகு கனிரசக் கட்டியும்
கறந்த பாலமுது மெனவே
கருத்தில் இனித்திடும் கவிதை யெல்லா மினிய
காதலன் மணவிருந்தே.

என்னையா னறியாத காலத்தில் உள்ளிருந்
தின்பங் கொடுத்த பெருமான்
எல்லாம் அவன் பெருமை
எல்லாமவன தருமை எல்லா மவனதுரிமையே.

## 1000. அஞ்சிடும் போதிலே

அஞ்சிடும் போதிலே யானுளேன் என்றுளே
அபயங்கொடுத்த பெருமான்
ஆருத்துயர் தரும் போரிகற் காட்டிலே
அன்பாக வந்த துணைவன்

துஞ்சிடும் போதுமென் னெஞ்சிலுயிராகத்
துடித்து நடமாடு மெம்மான்
சுத்தான்ம நேயனு யொத்திந்த வுடலிலே
சுருசுருப்பா யிருப்போன்



எஞ்சாமி உஞ்சாமி என்மதம துன்மதம்
எனவாத மிடுமுலகிலே
எவரெவருமறியாமல் இதயக் குகைக்குளே
இங்கிதம தாய்மறைந்தோன்

தஞ்சமென நம்பித் தமைக் கொடுத்தோர்க்குத்
தனைக்கொடுக்கும் சக்திமான்
தத்வமஸி மந்திரச் சித்தனவனருளிலே
தனியனேன் வாழ்வதாமே.

## 1001. கண்ணுளே

கண்ணுளே காண்கின்ற கண்ணனைத் தவிரயான்
காண்பதற் கெதுவுமில்லை
காதிலே கேட்கின்ற ஓமொலியினைத்தவிரக்
கதை வேறு கேட்பதில்லை

எண்ணுளே எண்ணுவோனியாவனோ அவனன்றி
எண்ணவோ ரெண்ணுமில்லை
இதயத்துடிப்பிலே நடமாடு மவனன்றி
இயற்றுவினை யாதுமில்லை

மண்ணுளே நண்பனென்றுண்டென்னி லவனென்
மனச் சாட்சியின் சாட்சியே
மதித்துத் துதிக்கவோர் மாதேவனுண்டெனின்
மதிக்குட் பதிப் புலவனே

பண்ணுளே பண்பாடு மிக்கதொரு கலையும்
பராபரன் அருளினிமையே
பாராலயத்திலே பார்ப்பதெல்லாம் சுத்த
பரமாத்ம சக்தி மயமே!

## 1002. தனுகரண

தனுகரண புவன போகங்களைத் தந்தனை
தந்தையே யிந்த வுலகில்
தாளாண்மை யுடனரிய வேளாண்மை செய்துனது
தயவிலே வாழ வேண்டும்

அனுதினமு மெனதியல் பாகுமொரு தொழிலினை
அன்புறப் புரிய வேண்டும்
ஆசையா ணவமாதி மாசின்றி யுனதுதிரு
வருளையே நாடவேண்டும்
பனுவ லெல்லாமுனது பத்தியமு தூற்றருவி
பாய்ந்துவிளை வேற வேண்டும்
பலவான வுலகிலே நிலவான்ம நேயம்
பதிந்துனைப் பார்க்க வேண்டும்
இனுமென் வினைப்பிறவி நீளாமலித்துடன்
இரண்டற வுனைக்கலந்தே
இயல்பான இன்பத்தில் இயல்பா யிருந்திடும்
இயல்பான நிலை யருளுவாய்.

## 1003. கல்லும் புல்லும்

கல்லும் புல்லுங் கசிந்துருகக்
கன்னித் தமிழில் இசைபாடிச்
சொல்லும் செயலும் ஒன்றான
தூய தொண்ட ருடன் கூடி
அல்லும் பகலும் உனக்கேயான்
ஆளாய் வாழ்ந்த தறிவாயே
எல்லையற்ற சுத்த சக்தி
இறைவா என்னுள் நிறைவாயே.

## 1004. படிப்பெலாம்

படிப்பெலாம் படித்து மென்னே
பாட்டெலாம் பாடி யென்னே
நடிப்பெலாம் நடித்து மென்னே
நாடெலாம் புகழ்ந்து மென்னே
துடிப்பெலாந் துடித்து மென்னே
துடிப்பிலா தமைதி கொண்டுன்
பிடிப்பிலே வாழும் இன்பப்
பேறெனக் கருளுவாயே!



## 1005. பம்பரவுலக

பம்பர வுலக மாயப் பாழ்சிறைக் கூடந் தன்னில்
என்பர மாவதென்னே என்செயக் கடவேன் ஏழை
உன்பர மென்றுன்னிச்சை உய்த்தவாறியங்குகின்றேன்
அம்பரக் கூத்தா உன்றன் அன்பென தாவியாமே.

## 1006. உடலெலாம்

உடலெலாம் உள்ளமாகி உள்ளெலாம் உணர்ச்சியாகிக்
கடல்மடை திறந்ததென்னக் காதலின் கண்ணீர்வார
நடனசிற் சபையிலாடு நாதனே சரண மென்றால்
இடமகல் கருணைவள்ளால் ஏழைபா லிரங்கிடாயோ?

## 1007. உற்றவர்

உற்றவர் பெற்றா ரிந்த வுலகிலுன் னருளே யன்றிப்
பற்றுமற் றறியாப் பண்பு பதிந்திட வேண்டுகின்றேன்
வெற்றுரை யின்றி நின்னை வீறுடன்கூடி யிங்கே
முற்றறி வின்ப மோங்க முதல்வநீ யருளுவாயே!

## 1008. ஜீவநாத

ஜீவநாத யாழிலே செழித்தெழுந்த ஓமொலி
நாவிலூறி யானந்த நடனஞ்செய் தருள்வளர்
பாவிலூறிப் பாரெலாம் பரவியன்பு பொங்கிடத்
தேவதேவ னேதினந் தினந்திருவருள் செய்வாய்!

## 1009. எவ்வினத்தர்

எவ்வினத்தர் எம்மதத்தர் எந்த நாட்டு மாந்தரும்
ஒவ்வுயிர்த் துடிப்புடன் உனைக் கலந்து வாழவே
இவ்வுயிர்த் துடிப்பிலே எழுந்தகீத மார்த்தனன்
அவ்விசைப் பயன்களுன் னருள் விளங்குமின்பமே!

## 1010. பேச்செலாம்

பேச்செலாந் திருப்புகழ் பிறந்து வாழுயிருடை
மூச்செலாந் திருப்பணி முயற்சியோக சாதனம்
ஏச்சிலாத நாளெலாம் இசைத்துனை வணங்கினேன்
மீச்சிகர ஜோதியாய் விளங்கு சுத்த சக்தியே.

## 1011. வானமாய்

வானமாய் விரிந்தனை மழையெனப் பொழிந்தனை
ஞானமாய் நிலவினையிஞ் ஞாலமாய் விரிந்தனை
தானமாய்த் தழைத்தனை தருமமாய்ச் செழித்தனை
மோனமாயென் னுள்வளர் முழுமுதற் கடவுளே.

## 1012. எடுப்பதும்

எடுப்பதும் பிடிப்பதும் இருவினைப் பயன்களைக்
கொடுப்பதும் குரங்கெனக் குதித்திடும் மனத்தினைத்
தடுப்பதும் தவத்திலே தனித்தெனை விடுப்பதும்
உடுக்கடித் துளத்திலாடும் உன்செயலென்னப்பனே.

## 1013. பயிர்கள்

பயிர்கள் வாடும் போதிலே பரிந்து வான் பொழிந்தனை
உயிர்கள் வாடும் போதிலின்ப வூற்றெனப் பெருகினை
துயர்களைத் துடைத்தருளும் சுத்த சக்தி ஜோதியே
அயர்விலாது தொண்டு செய்யும்
அற்புதமென் சொல்வனே!

## 1014. வானணுக்கள்

வானணுக்கள் ஆட ஆட வட்டமிட்டு வானொளிர்
மீனணுக்கள் ஆட ஆட வீசுகாலும் ஆடவே
ஊனணுக்கள் ஆடவே உயிரணுக்கள் ஆடவே
நானெனவுளத்திலாடு நாத ஜோதி வாழ்கவே!

## 1015. தத்துவங்கள்

தத்துவங்கள் ஆடவே சலித்து மாயை யாடவே
முத்தொழில்கள் முக்குணங்கள் முன்னிலையில் ஆடவே
சித்த மாடச் சுத்தமான ஜீவனுடை ஜீவனுள்
அத்தனுடைப் பாடினேன் அவனருள் விளங்கவே!

சுத்தானந்த பாரதி

ஓம் சுத்த சக்தி

# சுத்தானந்த கீர்த்தனுஞ்ஜலி

## பாட்டு முதற் குறிப்பு


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அகவடிவாகி | 359 |
| அச்சுப்போட்ட புத்தகம் | 275 |
| அஞ்சலாமோ நெஞ்சே | 26 |
| அஞ்ச வருவதும் | 238 |
| அஞ்சாது முன்செல் | 248 |
| அஞ்சிடும் போதிலே | 418 |
| அஞ்ஞானத்திரை | 361 |
| அடக்கியாள | 165 |
| அடடா | 215 |
| அடைக்கலம் புகுமனமே | 87 |
| அடைந்தேன் | 224 |
| அணுவெடி | 167 |
| அண்டத்ததுவே | 376 |
| அண்டபகிரண்டம் | 386 |
| அதிசயமகு | 347 |
| அது நீ | 173 |
| அதுல சக்தி | 346 |
| அதுவிது | 360 |
| அதுவோ | 387 |
| அத்தா அருளில்லையோ | 57 |
| அத்தாட்சி | 151 |
| அந்த நாள் இனிவருமோ | 28 |
| அந்தரங்கத்திலே | 295 |
| அந்தரங்கத்திலேவந்து | 149 |
| அந்தரங்கமெல்லாம் | 56 |
| அந்திவேளை | 212 |
| அபயக் கரத்தை | 25 |
| அபயம் அளித்தென்னை | 36 |
| அபராதங்கள் | 133 |
| அப்துல் பஹாய் | 411 |
| அப்பாஉன்னைநம்பினேன் | 72 |
| அப்பா உன் புகழை | 291 |
| அப்பாவுன் பொன்னடி | 9 |
| அமரானந்த வாரியே | 56 |
| அமுதம் | 129 |
| அம்மா உன்னையே | 126 |
| அம்மா பரதேவி | 122 |
| அரசே உன் | 289 |
| அரட்டொன்று போட்டு | 69 |
| அரவிந்த யோகி | 407 |
| அருட்சோதி வள்ளலார் | 401 |
| அருணேதயமானதே | 213 |
| அருணேதயம் வருமோ! | 60 |
| அவியைப் போலும் | 5 |
| அருவெனலாமே | 360 |
| அருளன்னை ஔவையார் | 397 |
| அருளே உலகம் | 176 |
| அருளொளிர் அன்பு | 380 |
| அருள் புரிவாய் | 4 |
| அலங்காரம் போதுமடீ | 17 |
| அலையாதே | 80 |
| அலையாமற் பாருமையா | 14 |
| அல்லி மலர்ந்தது | 212 |
| அல்லும் பகலும் | 65 |
| அவதாரம் | 337 |
| அவமான காமமின்றி | 362 |
| அவரிவரென்றே | 390 |
| அவனன்றி | 289 |
| அவனே வைஷ்ணவனும் | 131 |
| அழகா | 159 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| அழகுத்திரு | 367 |
| அறியாதார் வம்பு | 254 |
| அறியாயோ? | 177 |
| அறிவாகிய | 286 |
| அறிவாகிய பயிர் | 296 |
| அற்புதச் சிற்பி | 293 |
| அற்புதமாகிய | 143 |
| அற்புத மாயாவி | 2 |
| அன்பார | 144 |
| அன்பான உள்ளத்தில் | 303 |
| அன்பிருந்தாலே | 24 |
| அன்பிலே ஆழ்வார்கள் | 150 |
| அன்புக்கே | 199 |
| அன்பு செய்திடும் | 281 |
| அன்புச் சிகாமணியே | 47 |
| அன்பு நிலை | 228 |
| அன்பு மாலை | 259 |
| அன்பு வரந்தருவாய் | 78 |
| அன்பு வலையினிலே | 92 |
| அன்புள்ள கற்பகமே | 106 |
| அன்புள்ள ராதா | 299 |
| அன்பே ஆருயிரே | 261 |
| அன்பே ஆனந்தமாம் | 149 |
| அன்பே உன்னை | 252 |
| அன்னை அன்னை... | 122 |
| அன்னை பெசண்டு | 408 |
| அஷ்ட சித்தி | 196 |
| ஆங்காரத் திமிர் | 375 |
| ஆசார விவகாரம் | 148 |
| ஆசீர்வாதம் தருவாய் | 120 |
| ஆசை கொண்டேன் | 6 |
| ஆசையலைகள் | 278 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஆசை யிதுவே | 193 |
| ஆசையைத் தீர்ப்பாய் | 64 |
| ஆடுகிருன் | 161 |
| ஆட்டிவைப்பாய் | 178 |
| ஆண்டருள் | 163 |
| ஆண்டாளே | 150 |
| ஆதாரமான | 206 |
| ஆதி சங்கர பகவான் | 396 |
| ஆதி பசுபதி | 380 |
| ஆதியான | 217 |
| ஆத்ம சக்தி | 225 |
| ஆத்ம ஸமானமே | 132 |
| ஆத்ம தரிசனம் | 23 |
| ஆத்ம விசாரம் | 294 |
| ஆத்மா ராமா | 145 |
| ஆப்ரஹாம் லிங்கன் | 409 |
| ஆராய்ந்து பார் | 164 |
| ஆராய்ந்து பாராய் | 172 |
| ஆருமில்லேன் | 101 |
| ஆரோவந்தென்னை | 86 |
| ஆர் அறிவார் | 235 |
| ஆர்வகுத்தாரே? | 231 |
| ஆர்வமாய் | 82 |
| ஆவலாக | 243 |
| ஆவோ ஆவோ | 352 |
| ஆளவேண்டும் என்ருல் | 205 |
| ஆறுதல் அளிக்கும் | 214 |
| ஆறுதல் கூற | 251 |
| ஆறுமுகநாவலர் | 402 |
| ஆனந்தக் கண்ணீர் | 42 |
| ஆனந்த சுதந்தரமே | 183 |
| ஆனந்தத் தேன் | 191 |





| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஆனந்தத் தோழர் | 239 |
| ஆனந்த நடனம் | 107 |
| ஆனந்தமாகிய கீதம் | 123 |
| ஆனந்தமான | 198 |
| ஆனந்தமே | 26 |
| ஆனந்தம் | 339 |
| ஆனந்தம், ஆனந்தம் | 200 |
| ஆனந்தயோகி | 351 |
| ஆனந்த வாழ்க்கை | 199 |
| ஆன்ம நேயம் | 211 |
| ஆன்ம நேயம் | 225 |
| ஆன்மப் பொது | 240 |
| இகபரசுகமெல்லாம் | 277 |
| இஹபரசுக | 343 |
| இடியிலும் புயலிலும் | 301 |
| இணைக்கு வேறு | 371 |
| இதயக் கடலில் | 41 |
| இதயக் கதவைத் திற | 171 |
| இதய குகை | 361 |
| இதய நடராஜன் | 383 |
| இதய வீணை | 15 |
| இதயவெளி | 8 |
| இது உனக்குத்... | 293 |
| இது தகுமோ? | 136 |
| இது போதும் | 290 |
| இதுவென்ன? | 291 |
| இதுவே | 232 |
| இதுவே சுக நிலை | 183 |
| இதுவே துறவறமே | 176 |
| இதுவோ விதி? | 153 |
| இந்த அகம்பாவம் | 210 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| இந்த தருமமே | 247 |
| இந்த வாழ்வு | 273 |
| இந்து தர்மம் | 226 |
| இயல்பாய் | 366 |
| இயற்கையுள்ளே | 212 |
| இரண்டும் | 235 |
| இரத்தினங்கி | 306 |
| இரவும் பகலும் | 32 |
| இருக்கிறேன் | 180 |
| இல்லற வாழ்வினிலும் | 188 |
| இல்லையென்பான்... | 10 |
| இவனரோ சகியே? | 86 |
| இறப்பதில்லை | 257 |
| இன்பத் தமிழிசை | 357 |
| இன்பத்தை | 262 |
| இன்பத்தை என்ன | 288 |
| இன்பமயம் | 187 |
| இன்பமொருபக்கம் | 292 |
| இன்பவழி யிதுவே | 169 |
| இன்பவாரி தன்னிலே | 102 |
| இன்ப வாழ்வு தருவாய் | 263 |
| இன்னமும் | 191 |
| இன்னமும் மனம் | 286 |
| இன்னலை நினையாதே | 286 |
| இன்றும் வரவில்லையே | 20 |
| இன்னும் சுதந்திரம் | 152 |
| இன்னும் வரவில்லையே | 90 |
| இஷ்டப்படி | 151 |
| ஈசனே சக்தி விலாச | 53 |
| ஈந்தேன் | 256 |
| உகந்த சித்த சுத்தி | 385 |
| உடலெலாம் | 421 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| உண்டு பிழைக்க | 190 |
| உண்டுறங்கி | 362 |
| உண்டென நம்பிடுவாய் | 165 |
| உண்மைச் சுடர் | 376 |
| உதய சுந்தரி | 118 |
| உபதேசம் செய் | 32 |
| உபாசனி பாபா | 414 |
| உயிருள்ள கடவுள் | 168 |
| உய்யும் வழி யிதுவே | 305 |
| உருகிடுவாய் | 85 |
| உலகக் கோவில் | 237 |
| உலகம் | 273 |
| உலகம் இலகும் தெய்வம் | 166 |
| உலக சமயம் | 331 |
| உலகம் சுற்றி | 234 |
| உளங்கவர் இளங்கோ | 399 |
| உள்ளங்கை நெல்லி | 217 |
| உள்ளக் கதவை | 197 |
| உள்ளது | 182 |
| உள்ளந் துடிக்குதடா | 216 |
| உள்ளமொன்றி | 366 |
| உள்ளம் உருகி | 143 |
| உள்ளம் சிலிர்க்குதே | 134 |
| உறுதி தாராயோ | 168 |
| உற்றவர் | 421 |
| உனக்குச் சமானமாய் | 25 |
| உனது கருணை | 104 |
| உனது பதம் | 105 |
| உனையே காதலித்தேன் | 29 |
| உன்பாத... | 48 |
| உன்னத ஞானம் | 269 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| உன்னதமாகிய | 167 |
| உன்னத யோகிகள் | 241 |
| உன்னத வாழ்க்கை | 265 |
| உன்னை | 242 |
| உன்னைக் காட்டுவார் | 253 |
| உன்னைத் தெளிந் | 79 |
| உன்னைப் போலவே | 222 |
| உன்னை மறந்து | 138 |
| உன்னுயிர் | 184 |
| ஊருக்குப் பாரமாய் | 74 |
| ஊனார் | 389 |
| ஊனுங்கரைந்து | 193 |
| எக்கட வெதுகேவுரா | 336 |
| எக்காலமும் | 192 |
| எங்கள் கவலை | 146 |
| எங்கும் சிவமயம் | 358 |
| எங்கும் நிறைந்த | 34 |
| எங்கே காண்பேனோ | 147 |
| எடுப்பதும் | 422 |
| எட்டி நிற்பதும் | 12 |
| எண் சாண் உடம்பு | 62 |
| எண்ணி எண்ணி | 23 |
| எண்ணி எண்ணியன்பு | 42 |
| எத்தனை ஆபத்து | 230 |
| எத்தனை ஆபத்து | 304 |
| எத்தனை இன்பங்கள் | 116 |
| எத்தனை கற்றாலும் | 283 |
| எத்தனை கோணலடி | 73 |
| எத்தனை கோணலடி | 171 |
| எத்தனையோ | 300 |
| எத்தனையோ | 411 |
| எந்தப் பெயர் | 387 |





| பாட்டு | பக்கம் |
|---|---|
| எந்தாய்மீனாக்ஷி | 392 |
| எந்தாய் வாழ்கவே! | 111 |
| எப்படி என்ற | 242 |
| எப்படிக் கூடுவேன் | 63 |
| எப்படிப் பாடினரோ | 6 |
| எப்படியானறிவேன்? | 62 |
| எப்படியுன் மனம் | 1 |
| எப்படியுன் மனம் | 246 |
| எப்போதும் பிரியாமல் | 289 |
| எப்போது வருவாயோ | 15 |
| எப்போது விடுதலையோ | 32 |
| எமர்ஸன், விட்மன், | 410 |
| எம்மதம் சம்மதம் | 248 |
| எல்லா மதம் | 238 |
| எல்லாம் சிவமயம் | 52 |
| எல்லாம் சிவன் செயல் | 21 |
| எல்லாம் நீயே அம்மா | 96 |
| எல்லாம் வல்ல இறைவா | 263 |
| எல்லாரும் வாருங்கள் | 237 |
| எல்லாரும் வாழட்டுமே | 262 |
| எல்லார்க்கும் ... | 49 |
| எவ்வினத்தர் | 421 |
| எழுக எழுக | 82 |
| எழுந்தருள் | 120 |
| எழுந்திரு நிஜமனிதா | 67 |
| எனக்கருள் புரிந்திட | 22 |
| எனக்கென்ன மனக் கவலை | 96 |
| எனதெனதென்றே | 368 |
| என் பாட்டு | 195 |
| என் பிழைகள் | 225 |
| என்ன கவலை | 160 |
| என்ன குறை | 253 |
| என்ன செய்வாயோ | 299 |
| என்ன நான்செய்குவேன் | 140 |
| என்முகம் பார் ஐயனே | 61 |
| என்னுயிர்க்குயிராகி | 17 |
| என்னை எடுத்தாளையா | 179 |
| என்னைக் கைவிடுவாயோ? | 59 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஏகதாகீ பேரீ | 353 |
| ஏகாந்தத்தில் | 159 |
| ஏதுக்கிந்தப் பிறவி | 280 |
| ஏதுக்குக் கவலை | 46 |
| ஏமாற்றம் | 195 |
| ஏழுமலை | 133 |
| ஏழுமாமலை | 224 |
| ஏழையின் உபசாரம் | 254 |
| ஏனிப்பராமுகமோ | 38 |
| ஏனோ? | 139 |
| ஏனோ தாமதித்தாய் | 58 |
| ஏன் பிறந்தாய் மனனே? | 175 |
| ஐக்கியம் | 233 |
| ஐக்கிய ஜோதி | 230 |
| ஐந்து கோச | 224 |
| ஐந்து பூதம் | 370 |
| ஐயா, யானொரு வீர... | 75 |
| ஒருகணமாயினும் | 137 |
| ஒரு துணை | 102 |
| ஒருமை கொண்ட | 247 |
| ஒருவனுக்கே | 287 |
| ஒருவா என் இறைவா | 51 |
| ஒரு பொருளாகி | 364 |
| ஒற்றுமை வருமா | 284 |
| ஒன்றுகூடுமோ? | 232 |
| ஒன்றும் கவலையில்லை | 105 |
| ஒன்றே பரம் பொருள் | 74 |
| ஒன்றே வானும் | 370 |
| ஓகோ ஜகதீசனே | 252 |
| ஓங்கார சத்ய ஜோதி | 49 |
| ஓங்கார மண்டபத்தில் | 103 |
| ஓங்காரமான பொருளே | 3 |
| ஓங்காரமான பொருளே | 264 |
| ஓங்குக செஞ்சுடரே | 101 |
| ஓடி வாடா முருகா | 91 |
| ஓட்டிய குரங்கினை | 211 |
| ஓமர், தாந்தே, ஷேக்ஸ் | 404 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஓம் கணபதி | 306 |
| ஓம் சமரஸமான | 265 |
| ஓம் சச்சிதானந்தமே | 49 |
| ஓம் சிவம் | 24 |
| ஓம் சிவ ஷண்முகா ஓம் | 88 |
| ஓம் சுத்த சக்தி | 365 |
| ஓம் சுத்த சாந்தயோகியே | 38 |
| ஓம் பரமாத்மா | 257 |
| ஓம் பராசக்தி | 128 |
| ஓம் ஜ்யோதி | 336 |
| ஓம் ஸ்ரீம் | 334 |
| ஓயாத வினைச் சுழல் | 295 |
| ஓரறிவு | 177 |
| ஓரிடம் தாராயோ? | 75 |
| ஓர் கணம் | 40 |
| ஓர் சிறந்த தவராஜ | 199 |
| ஹடகாம்பரி | 312 |
| ஹரஹர சம்போ | 64 |
| ஹரஹர சிவ ஹரி | 7 |
| ஹரிகாம்போதி | 315 |
| ஹரி ஸ்மரணை | 155 |
| ஹனும தோடி | 308 |
| ஹாரதி | 344 |
| ஹேமாவதி | 326 |
| ஸரஸாங்கி | 315 |
| ஸார்வபௌமிக் | 350 |
| ஸாலகம் | 318 |
| ஸுந்தர ரூபமு | 347 |
| ஸேனாவதி | 308 |
| ஸ்வதந்த்ர பாரத | 342 |
| ஸ்வர்ணாங்கி | 322 |
| ஷட்வித மார்க்கிணி | 321 |
| ஷண்முகப்ரியா | 325 |
| ஜகதம்பா | 119 |
| ஜங்காரச்ருதி | 4 |
| ஜங்கார த்வனி | 312 |
| ஜயஜயஜயஹே | 113 |
| ஜலார்ணவம் | 319 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஜாகோ | 353 |
| ஜாலம் ஏனப்பா? | 154 |
| ஜால வராளி | 319 |
| ஜீவ சேவை | 280 |
| ஜீவ நாத | 421 |
| ஜீவப் படகை ஓட்டும் | 36 |
| ஜீவ முரளியிலே | 45 |
| ஜீவனுக்குள் | 192 |
| ஜீவன் முக்தி | 83 |
| ஜீவாதாரம் | 36 |
| ஜெகவிகாரமாய | 345 |
| ஜெயஜெய சுத்த சக்தி | 109 |
| ஜோதி ஞான | 97 |
| ஜோதி ஸ்வரூபிணி | 329 |
| ஸ்ரீரங்கராஜா | 134 |
| ஸ்ரீராம தாஸ் | 414 |
| ஸ்ரீராம் ஜயராம் | 136 |
| கடவுளுண்டு | 388 |
| கடவுளும் ஒன்றே | 271 |
| கடவுளைக் காணுமினே | 214 |
| கடைத்தேறவேண்டும் | 61 |
| கட்டியணைத்து | 235 |
| கணவனென்று | 276 |
| கண்டவர் | 130 |
| கண்டாயோ | 158 |
| கண்டார் மனம் | 124 |
| கண்டாலே | 149 |
| கண்டு கண்டு | 282 |
| கண்டு கொண்டேன் | 147 |
| கண்டுபிடித்தேனம்மா | 260 |
| கண்டுன்னை | 302 |
| கண்ணயராமல் | 241 |
| கண்ணனே என் ... | 141 |
| கண்ணா | 135 |
| கண்ணா கருணா | 154 |
| கண்ணாரக் கண்டு | 16 |
| கண்ணாரக் காணும் | 184 |
| கண்ணாரக் காண்பது | 63 |





| பாட்டு | பக்கம் |
|---|---|
| கண்ணாலே | 27 |
| கண்ணான | 180 |
| கண்ணுளே | 419 |
| கண்ணுள்ளே | 40 |
| கண்ணுள்ளபோதே | 178 |
| கண்ணெடுத்தாகிலும் | 13 |
| கண்ணே | 363 |
| கண்ணே என்... | 140 |
| கதிதருங் கடவுளை | 174 |
| கமல வாணி | 115 |
| கமலப்ரியா | 324 |
| கம்பன் | 399 |
| கயிலாச சிவ | 7 |
| கரஹரப்ரியா | 313 |
| கருக் கணக்கு | 373 |
| கருணாகரனை... | 77 |
| கருணாகரனே | 18 |
| கருணைக் கடவுள் | 379 |
| கருணை செய்வாய் | 3 |
| கருணைப் பெருமானே | 267 |
| கருணையுள்ளம் | 266 |
| கருணை வள்ளலே | 332 |
| கரையேற்றிடு | 104 |
| கலகமின்றி | 218 |
| கலக்கந் தவிர்த்து | 127 |
| கலிகாலம் | 145 |
| கலைவரம் | 101 |
| கலையென்ன கலையே | 157 |
| கலைவிழி | 221 |
| கல்லாலின் கீழ் | 365 |
| கல்லும் புல்லும் | 420 |
| கல்லோ உனது நெஞ்சம் | 58 |
| கல்வியால் | 276 |
| கவலை நீங்க | 63 |
| கவலைப் படாதே மனமே | 172 |
| கவலைப் படுவதேனோ | 190 |
| கவனமாய் | 296 |
| கவாம்போதி | 320 |
| கவிகுஞ்ஜரபாரதி | 396 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| கவிக்கின்பம் | 368 |
| கவிதையைப் போலே | 250 |
| கள்ளரைப் பிடித்திடு... | 207 |
| கனகாங்கி | 306 |
| கனராதா | 337 |
| கனவிலாகிலும் வந்து | 57 |
| கனவு பலித்தது | 407 |
| கனிமதுரகீதம் | 160 |
| கஸ்தூரிபாய் காந்தி | 412 |
| காங்கேயபூஷணி | 317 |
| காடுமலையெல்லாம் | 13 |
| காணிக்கை | 269 |
| காண்பதெந்நாளோ | 30 |
| காதலாகி | 270 |
| காதலாகி வந்தோம் | 146 |
| காதலாகினேன் | 132 |
| காதலைக் கொள்ளை... | 259 |
| காதொளிரும் | 398 |
| காத்திடவேண்டும் | 285 |
| காத்திருக்கின்றேன்... | 31 |
| காத்திருக்கின்றேன் என் | 60 |
| காத்திருப்பாய் | 298 |
| காந்தாமணி | 327 |
| காபாடவே | 342 |
| காப்பாற்ற நேரமிதே | 290 |
| காமதேனுகா | 309 |
| காமமே நரகம் | 188 |
| காமவர்த்தினி | 323 |
| காமாக்ஷீ | 112 |
| காமித பலதாயகா | 338 |
| காயகப்ரியா | 310 |
| காரணம் கேட்டுவாடீ | 17 |
| காரிருள் | 245 |
| காலடித்துகள்பெரு | 60 |
| காலனை உதைத்தவன் | 91 |
| காலனை உதைத்தவனே | 54 |
| காவாய் ஜகதீசனே | 55 |
| காவாயோ? | 176 |
| காளிதாஸன் | 404 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| காற்றைக்கட்டி | 367 | சக்தியை வணங்கிடு... | 108 |
| கானமூர்த்தி | 307 | சக்தி விசாலாட்சி | 125 |
| கிரிதரகோபாலனே | 141 | சக்ரவாகம் | 311 |
| கிரிதர நாதா | 139 | சங்கீதாஞ்ஜலி | 85 |
| கீரவாணி | 313 | சச்சிதானந்த ஸ்வரூபனே | 54 |
| குடியிருப்பாய் மனமே | 97 | சஞ்சலந் தீர்த்திடுவாய் | 78 |
| குண்டு வெடித்தது | 230 | சதாசிவப்பிரம்மம் | 393 |
| குப்த சக்தி | 345 | சதாமௌனி | 70 |
| கும்பாபிஷேகம் | 171 | சதானந்தத் தாண்டவம் | 198 |
| குரங்குக் குணமே | 378 | சத்திய ஜோதியை | 170 |
| குருநாதன் | 173 | சத்தியத்திற்கு | 227 |
| குருவருள் | 283 | சத்ய சாந்தகன | 373 |
| குருவாயூரப்பனே | 304 | சத்தியம் வெல்லும் | 117 |
| குருவே சரணம் | 372 | சந்தேகம் ஏன்? | 41 |
| குழலோசை | 129 | சபாஷ் சுபாஷ் | 413 |
| குற்றத்தையே | 287 | சமரஸக் கடலே | 81 |
| குன்று நவநிதியே | 94 | சமநிலையில் | 279 |
| குன்று தோறும் | 90 | சமய சஞ்ஜீவி | 234 |
| கூடி வாழுவோம் | 147 | சம்மதி | 42 |
| கூடி வாழுவோம் குவ | 227 | சரணம் பரஞ்சுடரே | 250 |
| கேலா கேலா | 352 | சலநாடா | 318 |
| கைவிடாதே | 66 | சனிதசை | 244 |
| கொக்கறு கோவே | 93 | சன்மார்க்கம் | 202 |
| கொஞ்சும் பண் | 360 | சன்மார்க்க சாதனமே | 209 |
| கொட்ட மடங்கி | 170 | சாதனம் செய் | 163 |
| கொண்டி சொன்னதார் | 13 | சாதனம் செய்ய | 163 |
| கோகிலப்ரியா | 309 | சாதிமாமதம் | 374 |
| கோசலம் | 331 | சாது சங்கம் | 392 |
| கோயில் உலகெல்லாம் | 109 | சாது சுந்தரசிங் | 411 |
| கோவிந்தராஜப்... | 131 | சாத்விக ஜீவனம் | 348 |
| கௌரி சிவமே | 219 | சாந்தமாக உன் | 9 |
| கௌரீ மனோஹரி | 314 | சாந்தமாய் | 129 |
| சகசீவபரம் | 369 | சாமா சாஸ்திரிகள் | 395 |
| சகல பாக்யமும் | 117 | சாமிநாதர் | 402 |
| சகலகலாவாணியே | 3 | சாயிராம் | 414 |
| சகஜ நிஷ்டையிலே | 69 | சாரதா தேவியே | 108 |
| சகஜமான நிலையில் | 206 | சாரதாம்பா சரணம் | 335 |
| சக்திக் கனல் | 121 | சாருகேசி | 315 |





| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| சாவே போ போ | 361 | சுத்த சக்தி | 382 |
| சிகரமான | 386 | சுத்த சச்சிதானந்தம் | 383 |
| சிங்கம் | 151 | சுத்த தத்வமஸி | 177 |
| சிதம்பரம் என | 10 | சுத்த யோகிகள் | 284 |
| சித்தமலையாமல் | 216 | சுத்த ஸ்வரூபம் | 197 |
| சித்தம் இரங்கி | 50 | சுந்தராங்கனை | 155 |
| சித்தம் எப்படியோ? | 281 | சுத்தானந்தச் சுடரே | 14 |
| சித்தாந்தம் இதுவே | 77 | சுபபந்துவராளி | 321 |
| சித்த நிம்மதி | 251 | சும்மா இருக்கின்ற | 256 |
| சித்தவுறுதி | 20 | சூட்சுமஞ் சொல் | 46 |
| சித்ராம்பரி | 329 | சூரிய காந்தம் | 312 |
| சிந்த ஜேஷி | 346 | சூரியனுக்கு | 379 |
| சிந்தித்தன்பு | 204 | சூலினி | 318 |
| சிந்தையில் | 87 | செபலே | 297 |
| சிம்மேந்திரமத்யமம் | 326 | செய்யவேண்டும் | 285 |
| சியாமளாங்கி | 325 | செல்வநிறைவு | 283 |
| சிரஞ்ஜீவியா | 52 | சேர்த்தார் | 390 |
| சிரிக்கத்தான் | 205 | சேவகம் | 252 |
| சிரிப்புத்தான் | 73 | சேஷாத்ரிநாதன் | 416 |
| சிலேடைப்புலி | 396 | சொல்லடி பசுங்கிளியே | 293 |
| சிவகாமிகள் | 24 | சொல்லத் தரமா? | 208 |
| சிவசக்தி தாயே | 117 | சொல்லிச் சொல்லி | 242 |
| சிவசக்தி ஜயகாளி | 113 | சொல்லோவியம் | 256 |
| சிவசிவ என நினை | 50 | சோனைமாரி | 372 |
| சிவானந்தர் | 413 | ச்யாமஸுந்தராங்க | 339 |
| சிற்றம்பலத்துரை | 66 | ஞாலமெல்லாம் | 75 |
| சீர் பெருக | 221 | ஞானசித்தர் | 394 |
| சுகமான நிலை | 288 | ஞானப்பால் | 11 |
| சுகமே | 294 | ஞானஜ்யோதி | 342 |
| சுகம் எது சொல்? | 71 | தகதகவென்ன | 359 |
| சுகவழி | 76 | தகுதியான | 261 |
| சுக்கிரன் | 378 | தஞ்சம் தஞ்சம் | 65 |
| சுசரித்ரம் | 329 | தடதடவென | 116 |
| சுதந்தரம் தாரும் | 19 | தத்துவங்கள் | 422 |
| சுதந்தர வரம் | 154 | தத்வமஸி | 236 |
| சுதி நிலை | 374 | தந்திரம் | 179 |
| சுத்த பரமாத்மன் | 67 | தந்தேன் | 200 |
| சுத்த சக்தி ஜய | 122 | தயக்கமேன்? | 218 |
| சுத்த சக்தி ஓம் | 303 | தயானந்த ஜோதி | 408 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| தரிசனம் செய்திடுவோம் | 106 |
| தரிசனம் தரவேண்டும் | 143 |
| தர்மவதி | 326 |
| தவளாம்பரி | 323 |
| தனுகரண | 419 |
| தன்னந்தனியாய் | 244 |
| தன்னையறிந்தால் | 255 |
| தா, நினது கருணை | 95 |
| தாகந்தணித் தருள்வாய் | 55 |
| தாகந்தணித்திடுவாய் | 268 |
| தாதுவர்த்தினி | 330 |
| தாயுமானர் | 393 |
| தாயே சரணம் | 113 |
| தாயே சிவகாமி | 115 |
| தாயே...தயைபுரிவாய் | 123 |
| தாரக வாக்யமு | 349 |
| தான ரூபி | 308 |
| தியாகப் பிரமம் | 394 |
| தியாகம் கீதாசாரமே | 76 |
| தியானத்தில் | 81 |
| தியான பூஜை | 274 |
| தியானமொன்றே | 248 |
| திருத்தலாகாதோ? | 246 |
| திருவள்ளுவர் | 398 |
| தில்லைக்கு வழி | 34 |
| தில்லை நடராஜனே | 35 |
| திவலை | 186 |
| திவ்யமணி | 322 |
| தினமிருவேளை | 190 |
| தினமெனது | 381 |
| தீரசங்கராபரணம் | 316 |
| தீராதவினை | 161 |
| தீனதயாபரனே | 46 |
| தீன ரக்ஷகா | 152 |
| துக்காராம் | 394 |
| துஞ்சும் போதும் | 12 |
| துடிக்குதையனே | 298 |
| துள்ளித்துள்ளி | 377 |
| தூக்கிய திருவடி | 7 |
| தூண்டுசுடர் | 222 |
| தெய்வசிகாமணியே | 416 |
| தெய்வநெறி | 362 |
| தெள்ளத் தெளிந்திடும் | 175 |
| தேகந்தன்னில் | 194 |
| தேடிடு நன்மனமே | 259 |
| தேடி வந்து | 278 |
| தேடு மனமே | 131 |
| தேவஜீவனம் | 82 |
| தேனைச் சேர்க்கும் | 186 |
| தேனும் பாலும் | 202 |
| தொல்லை தீர்க்க | 139 |
| நஞ்சையுண்ட கண்டனே | 53 |
| நடபைரவி | 313 |
| நடராஜா சரணம் | 5 |
| நடராஜ சிவம் | 356 |
| நமச்சிவாய ஓம் | 371 |
| நமாமி ஓம் | 334 |
| நம்ப வேண்டும் | 218 |
| நம்பிக்கை | 285 |
| நம்பித்தான் | 11 |
| நம்பியனுதினம் | 138 |
| நம்பியிரு ஆத்ம | 81 |
| நம்பியிரு | 144 |
| நம்பினபேர்களை | 91 |
| நலமோங்கி வாழ்க! | 44 |
| நல்லதென்னினும் | 332 |
| நல்லவரம் | 124 |
| நல்ல வார்த்தையே | 281 |
| நல்லோரைக் காப்ப... | 294 |
| நவநீதம் | 319 |
| நாகா நந்தினி | 316 |
| நாசிகாபூஷணி | 330 |
| நாடகப்ரியா | 309 |
| நாணம் | 155 |
| நாணம் ஏனடி | 300 |
| நாத்திகர் | 153 |





| பாட்டு | பக்கம் |
|---|---|
| நாம நாராயணி | 323 |
| நாராயணி சரணம் | 126 |
| நாராயண ஹரி | 137 |
| நாளாக நாளாக | 304 |
| நானாகிய | 215 |
| நானுனைக் கண்டு | 223 |
| நானெனும் | 174 |
| நானெனும் ஆணவம் | 209 |
| நான் உனக்கு | 279 |
| நித்தியம் | 137 |
| நிந்திக்கலாமோ | 184 |
| நிம்மதியாக | 207 |
| நிரந்தர சுகம் | 377 |
| நிர்விஷயனாய் | 54 |
| நிலையம் ஒன்று | 80 |
| நில்லாதே போ பகையே | 47 |
| நினைவாய் | 220 |
| நினைவிருக்கும்போதே | 156 |
| நின்னு | 349 |
| நி:ஸீம | 354 |
| நீகே நிவேதனமு | 340 |
| நீடூழி வாழ்க! | 333 |
| நீதிமதி | 327 |
| நீந்திக் கரைசேர | 181 |
| நீயல்லால் | 182 |
| நீயின்றி நானில்லை | 19 |
| நீயின்றி யார் | 98 |
| நீயே எனது | 18 |
| நீலமாமணி | 386 |
| நீவே கதி | 343 |
| நீ ஸேவ பாக்யமு | 344 |
| நூவே நா ஜீவுடு | 340 |
| நெற்றிக்கண் | 38 |
| பகவான் நரசிம்ம பாரதி | 397 |
| பகவான் ரமணர் | 417 |
| பக்த சிகாமணி | 160 |
| பக்த ரக்ஷணி | 126 |
| பக்தி பரவசத்தால் | 50 |
| பக்தி மின்சாரம் | 11 |
| பக்தியுடன் | 156 |
| பசுபதியைத்துதி | 52 |
| பஞ்சகோசாதீதனை | 181 |
| படித்த மூளை | 39 |
| படிப்பெலாம் | 420 |
| படைத்திடும் | 389 |
| பட்டது போதும் | 210 |
| பண்டிகை | 220 |
| பண்ணுடன் | 37 |
| பந்த தொந்தம் | 167 |
| பந்தம் விட்டாலே | 71 |
| பம்பரவுலக | 421 |
| பயங்கர | 231 |
| பயப்படா திருமனமே | 120 |
| பயமில்லை | 94 |
| பயமேதினி | 159 |
| பயிர்கள் | 422 |
| பரமக்ருபாகர | 337 |
| பரமசச்சிதானந்த | 216 |
| பரம சுகானந்த | 142 |
| பரம சுத்த | 192 |
| பரம பிதா | 228 |
| பரமயோகி | 178 |
| பரமனைச் சிந்தை | 33 |
| பரம ஹம்ஸ குருவே | 409 |
| பரமானந்தம் பெருகி | 84 |
| பரமேசனை | 25 |
| பரம்பொருளே | 1 |
| பரதேவீ ஜய | 117 |
| பரதேவி | 344 |
| பரந்தவானச் | 356 |
| பரவச நடம் | 142 |
| பரிந்து | 245 |
| பரிபக்குவம் | 57 |
| பரிபூரணம் அருள் | 71 |
| பரிபூரணானந்த | 39 |
| பரிபூரணானந்தமே | 9 |
| பரிபூர்ண சுதந்தரம் | 110 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| பலுகவே சிலக | 346 | புது வாழ்க்கை | 219 |
| பல்லாண்டு | 121 | புத்தியிது | 253 |
| பவப்ரியா | 321 | புவனமளித்து | |
| பவரோக | 219 | புன்னகைப்பது | 51 |
| பழநியப்பன் | 89 | பூத்த காலை | 357 |
| பள்ளிக்கூடம் | 250 | பூரண ஞானி | 174 |
| பஜனைசெய் | 297 | பூரண யோக | 125 |
| பாடுங் குயிலும் | 385 | பூரணனே | 16 |
| பாடுபட்டு | 185 | பூரணானந்தப்ரம்மமே | 393 |
| பாடுவேனே | 299 | பூரணானந்தவாரீ | 374 |
| பாதமே துணை | 48 | பூவகம் போற்றும் | 400 |
| பாதம் பணிந்தேனே | 109 | பெண்ணாசை மறந்து | 14 |
| பாரத சக்தி | 128 | பெண்மையே | 221 |
| பாரத சக்தி | 223 | பெரிதினும் பெரிது | 375 |
| பாரதி நினைப்பு | 405 | பேசாது பேசிடும் | 249 |
| பாராது பார்த்திரு | 303 | பேச்செலாம் | 421 |
| பாரமெல்லாம் வைத் | 30 | பேத மத வாத | 249 |
| பாரமெல்லாம் பரஞ் | 144 | பேரிகை கேட்டு | 302 |
| பாராலயத்தில் | 161 | பொது நலம் | 213 |
| பாரிலுன் துணை | 100 | பொருளுக்கொரு | 381 |
| பாலகோபாலனே | 136 | பொலிக புதுயுகம் | 376 |
| பாலூறும் | 282 | பொன் பரவுங்காலை | 267 |
| பாவனி | 320 | பொன்னான திருமுகத்தை | 40 |
| பாஹி, பாஹி பதித | 142 | பொன்னிளங்காலை | 418 |
| பாஹி, பாஹி பவஹாரி | 335 | பொன்னும் மணியும் | 35ం |
| பித்தனைப் போல | 152 | பொன்னொளிர் மேனி | 6 |
| பித்துப் பிடித்ததடீ | 98 | போதும் போதும் | 43 |
| பிரிந்தினி வாழ்வேனோ? | 29 | போ, போ, ஜகன்மாயை | 69 |
| பிரியமாய் | 127 | போர்புரி | 181 |
| பிருந்தாவனம் | 135 | ப்ரேமனு | 347 |
| பிறந்ததும் | 389 | ப்ரேம ஸாதன் | 351 |
| புக்கர் வாஷிங்டன் | 410 | ப்ரேமானந்தம் | 336 |
| புக்குத்தனுவில் | 364 | மங்கலம் | 391 |
| புண்ணிய வழி | 183 | மங்களகர | 206 |
| புண்ய பூமி | 341 | மங்கள நாமம் | 6 |
| புதிய யோகம் | 189 | மங்களமாய் வாழ்க | 43 |
| புதியவுலகும் | 245 | மங்கள விளக்கு | 27 |
| புதுமையுமில்லை | | மடங்கட்டி | 209 |





| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| மட்டையுரித்தே | 417 | மானவதி | 307 |
| மணமலர் | 182 | மானிடப் பிறவி | 276 |
| மணமாலை | 240 | மின்னலாய் நடம் | 260 |
| மணிமேகலை யமுதம் | 400 | முத்துசுவாமி தீட்சிதர் | 395 |
| மண்ணென்பது | 358 | முருகவேளின் | 384 |
| மயங்காதே | 67 | முருகனை நினை | 89 |
| மருந்தொன்று | 37 | முருகன் என்றதுமே | 88 |
| மலயமாருதம் | 287 | முன்னிலும் முன்னவன் | 35 |
| மலையுபதேசத்தின் | 241 | முன்னும் கவலையில்லை | 166 |
| மறந்தாயோ உலகே | 72 | மெய்யனே | 251 |
| மறவாதருள் | 227 | மேக கர்ஜனை | 158 |
| மறவாமல் இரு | 87 | மேச கல்யாணி | 328 |
| மறவேன் | 22 | மேதினியின் | 270 |
| மனசுலோன | 340 | மேலும் மேலும் | 379 |
| மனச்சாட்சி | 211 | மேஹர் பாபா | 415 |
| மனத் தாகத்தை | 223 | மையல் கொண்டு | 208 |
| மனத்திரை | 28 | மோகனமுகம் | 277 |
| மனப்பஞ்சம் | 369 | மோகன முரளி | 146 |
| மனப்பொருத்தம் | 214 | மோகனவலை | 21 |
| மனமடங்கி | 196 | மோன நிசியினிலே | 8 |
| மனமுருகி | 33 | மோன மயமான | 291 |
| மனிதராய்ப் பிறந்தவர் | 164 | மோஹன | 338 |
| மனிதரெல்லாம் | 255 | யாகப்ரியா | 316 |
| மனிதர் கட்டும் | 272 | யாரும் இல்லையோ? | 20 |
| மன்னித்துக்கொள் | 290 | யார் செய்த சூது? | 30 |
| மன்னித்து மறந்திடு | 59 | யோக சமாஜம் | 236 |
| மஹாத்மா காந்தி | 412 | யோகியை | 68 |
| மாடலேனி | 345 | ரகுப்ரியா | 320 |
| மாதங்கி சரணம் | 115 | ரசிகப்ரியா | 331 |
| மாதம் மும்மாரி | 220 | ராகவர்த்தினி | 317 |
| மாமாய உலகு | 207 | ராமப்ரியா | 324 |
| மாயாமாளவகௌளம் | 311 | ராரா ஆத்மாராமா | 339 |
| மார ரஞ்ஜனி | 314 | ராவே மாயம்மா | 341 |
| மாறிப் பிறக்க | 187 | ரிஷபப்ரியா | 327 |
| மாறிப் போன | 272 | ரூபாவதி | 310 |
| மான வாழ்க்கை | 15 | லதாங்கி | 328 |
| மானஸ சிவபூஜை | 45 | | |
| மானவகீ ஹ்ருத் | 354 | | |

லின்ஹோனு 351
லோகமான்யதிலகர் 407
வகுளாபரணம் 311
வஞ்சமில்லாதுன்னை 255
வஞ்சனை பண்ணாதே 297
வடக்கும் தெற்கும் 233
வட்ட வானம் 244
வண்டு மொய்த்த 275
வந்த விந்தை 301
வந்திருந்து 298
வந்து வந்து 95
வந்தெத்தனை 366
வந்தேமாதரம் 110
வரகவி தாகூர் 404
வரமருள்வாய் 19
வரம் 119
வரம் வேண்டினேன் 194
வருணப்ரியா 314
வருந்தருணம் 34
வருவது சொன்னேன் 217
வருவாய் பரதேவதையே 99
வருவானே வனக்குயிலே 28
வழிகாட்டி நடத்தினன் 130
வனமாலீ 158
வனஸ்பதி 307
வா, கலாபமயில்மேல் 85
வாகதீஸ்வரி 317
வாசஸ்பதி 328
வாதுகளின்றி 388
வாது செய்வதேன்? 68
வாயைத் திறந்து 204
வாராது காரும் 296
வாராதோ கருணை 133
வாரி வாரி வழங்கும் 332
வால்மீகி முனிவர் 403
வாவென்று 261
வாழலாம் 185
வாழுவோம் 165
வாழ்க சுயம்ப்ரகாசம் 83
வாழ்க, வாழ்க, வாழ்கவே 2
வாழ்க்கை 194
வாழ்வு நலம் 111
வானஞ் சூழந்த 391
வானணுக்கள் 422
வானமாய் 422
விச்வாம்மித்ரி 324
விடமாட்டேன் 292
விடுதலை 243
விட்டவழி 70
விண்ணாய் 364
விண்ணின் 385
விதியென்று நீ 282
விபரீதம் 203
வியாச பகவான் 403
விவேகானந்தர் 409
விழித்தெழு 377
விளையாடலே உலகம் 205
வினைப்பிறவி 228
வீடுதரும் ஆதி 383
வீரசக்திப வானி 222
வீரச் சிதம்பரனார் 406
வீர வடிவேல் 92
வீர வரந்தருவாய் 94
வீர விளக்கு ஐயர் 405
வீரவுறுதி தருவாய் 107
வெல்க 384
வெளிமயக்கு 148
வெற்றிமேல் வெற்றி 93
வேண செல்வம் 257
வேதநாயகம்பிள்ளை 402
வேதாந்தம் 369
வேலும் மயிலும் 371
வேலைக் கடலை 390
வேலை தந்தாலே 302
வேறென்றும் 233
வேற்றுமை 249
வைத்தபடியே 21
வையகமெல்லாம் 262
வையமெல்லாம் 238
வைராக்ய நிலை 157
வைராக்கியம் 79

* * *

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியாரின்

தவயோகத்திற் கனிந்த அற்புத நூல்கள்!

1. கீதா யோகம்: மூல சுலோகமும் தமிழிலேயே உள்ளது. கண்ணன் உள்ளத்தைக் காட்டுவது; உங்கள் வாழ்விற்கு ஒளிதரும் அரிய பெரிய நூல். ரூ. 2—50
2. ஆத்ம சோதனை: யோகியின் அரிய அனுபவங்கள்; பல மகான்களுடன் பழகிய நிகழ்ச்சிகள்; உயர்ந்த இலக்கிய சிருஷ்டி. ... 4—00
3. ஆத்ம நாதம் (அருளிற் பூத்த பாடல்கள்) ... 3—00
4. திருக்குறளின்பம் ... 3—50
5. உலகப் பாட்டு ... 1—50
6. சிங்க நாதம் ... 1—00
7. ஸ்ரீ ரமணானுபவ கீதம் ... 0—50
8. ஊமையன் சண்டை ... 1—50
9. மணப்புயல் ... 1—50
10. சுத்தானந்த கீர்த்தனாஞ்சலி (1045) ... 5—00
11. யோகசித்தி (மூலம்) ... 0—40
12. சுத்த சக்தி உபாசனை ... 0—75
13. பாட்டாளி பாட்டு ... 1—50
14. அருட்சோதி இராமலிங்கம் ... 1—25
15. Integral Yoga ... 1—25
16. Voice of Tayumanar ... 2—00
17. The Gospel of Perfect Life ... 4—00
18. Silent Splendour ... 2—00
19. Yogi Shuddhananda Bharati (A Study) ... 4—00
20. Pilgrim Soul (in press) ... 5—00

---

**சுத்தானந்த நூலகம்**

"யோக சமாஜம்"

அடையாறு :: சென்னை-20

சுத்தானந்தா அச்சகம், அடையாறு, சென்னை-20.